மாணிக்கவாசகர்

வரலாறுங் காலமும்

(இரண்டாம் பகுதி)

★

மறைமலையடிகள்

★

கழக வெளியீடு

மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்

[இரண்டாம் பகுதி]

மறைமலையடிகள்

பதிப்புரை

இந்நூல் மறைமலையடிகளாரின் "மாணிக்க வாசகர் வரலாறுங் காலமும்" என்ற அரும் பெரும் நூலின் இரண்டாம் பகுதியாகும்.

இந்நூலின் முதற் பகுதியின்கண் ஆசிரியரவர்களால் எழுதப்பட்டுள்ள விரிந்த ஆங்கில முன்னுரையும், தமிழ் முன்னுரையும் சேர்ந்துள்ளன. தெளிவான பொருளடக்கமும் உள்ளுறையும் அப்பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 'மாணிக்கவாசகர் வரலாறு' ௧ முதல் ௧௭ தலைப்புகளும் 'மாணிக்கவாசகர் காலம்' ௧ முதல் ௧௪ தலைப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்விரண்டாம் பகுதியில் ௧௫ முதல் ௨௮ தலைப்புகளும் பின்னிணைப்பாக இரண்டு பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சிக்கு அரண் செய்யும் அப்பர் அருட்பாடல் ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

௧௫. மாணிக்கவாசகரும் நம்மாழ்வாரும்

இனிப், பிறந்ஞான்றே எல்லாம் ஓதாதுணர்ந்த துறவியாகிப் புளியமரத்தின் (புளியாழ்வார்) அடியிலே தவத்திலமர்ந்து, உலகம் உய்தல்வேண்டித் 'திருவாய் மொழி'யினை அருளிச்செய்த நம்மாழ்வார், பிறந்தபின் தாய்தந்தையரால் வளர்க்கப்பட்டு ஆசிரியனால் அறிவுறுக்கப்பட்ட பன்னூற்பொருளும் பல்லாண்டு ஓதியுணர்ந்து அரசர்க்கு அமைச்சராயிருந்த மாணிக்கவாசகர் இயற்றிய 'திருவாசகத்'தைப் பார்த்துத் தமது 'திருவாய் மொழி'யை இயற்றியருளினாரென்றல் பொருந்தாது; மற்றுத் 'திருவாய்மொழி'யைப் பார்த்தே மாணிக்கவாசகர் 'திருவாசகம்' இயற்றினாரென்று கோடலே பொருத்த முடைத்து என்பதுபடத் 'தமிழ்வரலாறு' உடையார் எழுதிய பகுதி ஆராயற் பாற்று.

நம்மாழ்வார் தாயின் கருப்பையைவிட்டு இங்நிலத்தின் கட் பிறந்த நாள்முதற் பாலுண்ணாதவராகி, அழுதலுஞ் சிரித்தலுமின்றி வறிதே கிடப்பப், பெற்றோர் அக்குழவியின் நிலைகண்டு கலங்கித், திருக்குருகூரிலுள்ள திருமால் கோயிலிற் கொண்டுபோய், அங்குநின்ற புளியமரத்தின் அடியிலே கிடத்த, அவர் பதினாறாண்டளவும் ஏதொரு செயலுமின்றித் தவமிருந்து, பின்னர்த் தம்பால் வந்த மதுரகவியாழ்வார் பொருட்டுத் 'திருவிருத்தம்', 'திருவாசிரியம்', 'பெரிய திருவந்தாதி', 'திருவாய்மொழி' முதலியவற்றை அருளிச்செய்தார் என அவர்க்குப் பன்னூறாண்டு பின்வந்த வைணவமதப் புலவர்கள் எழுதி வைத்திருக்கின்றனர். நம்மாழ்வார் பிறந்தபொழுதே பாலும் உண்ணாது பிறிதேதொரு செயலுமில்லாது பதினாறாண்டு அளவும் தவத்திலிருந்தமைக்கு மெய்ச்சான்றுகளும், அவர் எல்லாம் ஓதாதுணர்ந்து பாடினமைக்கு மெய்யடையாளங்களும் உளவாயின், அவரைக் கடவுட் டன்மை யுடையராகவும், அவர் அருளிய பாடல்களை

உண்மை யறிவுரைகளாகவுங் கோடலில் இழுக்கொன்று மில்லை. ஏனெனில், இறைவனது முழுமுதற் றன்மையைச் சிற்றறிவுடைய மக்களுக்கு அறிவித்தற் பொருட்டுப், பேரறிவுடைய பெரியார் எந்நாட்டிலும் எவ்வினத்திலும் எம்மதத்திலும் பிறத்தல் உண்டு. ஆனாலும, இங்கே யாம் ஆராய்தற்கு எடுத்துக்கொண்ட நம்மாழ்வார் பிறந்த நாள்தொட்டே எல்லாம் ஓதாதுணருங் கடவுட்டன்மை உடையவர்தாமா என்பதற்கு ஏற்ற சான்றுகள் காணின் அன்றி, அவரை அவ்வாறுகொண்டு, அவருரையினை மெய்யெனத் தழீஇ யொழுகல் உலகிற்குப் பெரிதுந் தீங்கு பயப்பதொன்ரும. அவரைப் பற்றிப் பின்னுள்ளோர் எழுதிவைத்த இக் கதை ஒன்றனையே கொண்டு அவரை அங்ஙனங் கடவுட்டன்மை யுடையராகக் கருதுதல் வழுவாம்; என்னை? ஒருவர்பால் அளவுகடந்த பற்று வைத்தோர் அவரைக் கடவுளாக உயர்த்துப் பேசுதலும, ஒருவர்பாற் பெரும்பகைமைகொண்டோர் அவரை இழிந்த விலங்கினுங் கடைப்பட்டவராக இழித்துப் பேசுதலுங் கண்டாமாகலின், ஒருவர்பாற் பற்று வைத்தோரும் பகைமை கொண்டோருங் கூறும் மெய்யல்லா உரைகளை மெய்யென நம்பி அவரை உயர்ந்தாரென்றேனும் இழிந்தாரென்றேனும் முடிவுகட்டல் நிடுவுநிலை யுடையார்க்கு இசையாதாகலின் என்க. அற்றேல், நம்மாழ்வாரின் உண்மைத் தன்மைகள்; தெளிதற்குச் சான்ருகற்பாலன யாவையெனிற்; சான்றுகள் புறச்சான்றும் அகச்சான்றும் என இருபாலனவாம்; அவற்றுட் 'புறச்சான்று' என்பன பற்றும் பகைமையும் இல்லா நடுநிலையாளர் கூறும் மெய்யுரைகள்: இம் மெய்யுரைகளோடு ஒக்கும் வழியும் உண்மையொடு மாறுபடா வழியும் பற்றுடையோரும் பகைமையுடையோருங் கூறுவனவுந் தழுவற்பாலனவே யாகும். இனி, 'அகச்சான்று' என்பன, ஓர் ஆசிரியன் தான் இயற்றிய நூல்களில் தன் குறிப்பின்றியே தன் வரலாற்றினையும், தன் இயற்கையினையுங் கூறிவைப்ப, அவைதாம் அறிவுடையோரால் ஆராய்ந்தெடுக்கப்பட்டு அவ் வாசிரியன் வரலாறுந் தன்மையுந் துணிதற்குச்

சான்ருய் நிற்பனவாகும். இவ் விருவகைச் சான்றுகளுள் நம்மாழ்வார் வரலாறு துணிதற்கு, மேலே காட்டியபடி அவர்பாற் பற்றுள்ளோர் எழுதிவைத்த கதையைத் தவிர வேறு பொதுவான புறச்சான்று ஏதுங் காண்கிலேம். இனி, அவரியற்றிய *'திருவாய்மொழி' முதலியவற்றில், அவர் பிறந்தபொழுதே பாலுண்ணுது தவத்திலிருந்து எல்லாம் ஓதாதுணர்ந்தமைக்குக் குறிப்பு ஏதேனும் உளதோ வெனின் அதனையுங் காண்கிலேம். மற்றை மக்களைப்போலவே, தாமும் யாக்கைவழி யுழன்று நோயானும் இருவினைகளானும் வருந்தும் ஒருயிராகவே தம்மைப் பல்காலுங் குறிக்கின்ருர். "முந்நீர்ஞாலம்" என்னும் பதிகத்தில், "ஆக்கையின் வழியுழல்வேன், வெந்நாள் நோய் வீய வினைகளை வேரறப் பாய்ந்து, எந்நாள் யான் உன்னை இனிவந்து கூடுவெனே," "பன்மா மாயப் பல்பிறவியிற் படிகின்ற யான், தொன்மா வல்வினைத் தொடர்களை முதலரிந்து, நின்மா தாள்சேர்ந்து நிற்ப தெஞ்ஞான்றுகொலோ" என்றற் ருெடக்கத்து அவர் மொழிகள் அவரைப் பொதுமக்களுள் ஒருவராகவே வைத்து உரைப்பக் காண்கின்றேம். இம் மக்கட்டன்மையின் வேருக அவருக்குக் கடவுட்டன்மையும் உண்டென்பதற்கு ஏதொரு சான்றும் அவரியற்றிய பாடல்களினுங் காணுமையின், அகச்சான்றும் இன்ருய். புறச்சான்று அகச்சான்று இரண்டுமில்லா இக்கதையை அவர்பால் மிகுதியும் பற்றுவைத்த ஒரு வைணவப் புலவர், நம்மாழ்வாரைச் சைவசமயாசிரியராகிய திருஞானசம்பந்தரினும் மேம்பட்டவராகக் கூறவிழைந்து அங்ஙனம் ஒரு பொய்க்கதை கட்டிவிட்டாரென்க. யாங்ஙனமெனின், திருஞானசம்பந்தர் மூன்ருண்டுள்ள சிறுகுழவியாயிருந்த காலத்து இறைவனும் இறைவியும் அவரெதிரே தோன்றி, அவருக்குத் தமது அருட்பாலை ஊட்ட, அஃதுண்ட அவர் எல்லாம் வல்ல ஆசிரியராய் எல்லாம் ஓதாதுணர்ந்து அருள்துளும்புஞ் செந்தமிழ்த் திருப்பாட்டுகளைச் சென்றசென்ற திருக்கோயில்கடோறும் அருளிச்செய்தா ரென்னும் வரலாற்றுக்கு எதிராக, அவரினும் மிக்கதொரு மேன்மையை

நம்மாழ்வாருக்குக் கூறல்வேண்டியே அவ் வைணவப் புலவர் 'நம்மாழ்வார் பிறந்த ஞான்றுதொட்டே பாலுமுண்ணாது தவத்திலிருந்து திருவாய்மொழி அருளிச்செய்தார்' என்று கதை கட்டினாராதல் வேண்டும். திருஞானசம்பந்தர் பாலுண்டு பாடினரென்றால், நம்மாழ்வார் பாலுமுண்ணாது பாடினரென்பது கழிபெருமேன்மையாமென அப் புலவர் நினைத்தார்போலும்!

அற்றேல், திருஞானசம்பந்தர் சிறுமகவாயிருந்த காலத்து அம்மையப்பரால் நேரே அருட்பால் ஊட்டப் பெற்றமைக்கு அகச்சான்று அவரருளிச்செய்த செந்தமிழ்ப் பாக்களுள் உளதோவெனின்; 'மாணிக்கவாசகர் வரலாறு' ககூக, ககூஉ-ஆம் பக்கங்களில்,

"போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்."

என்று திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய பாடலினை எடுத்துக் காட்டி அவ்வியல்பினை விரித்து விளக்கியிருக்கின்றேம். மேலும், திருஞானசம்பந்தப் பெருமான் 'திருநனிபள்ளி'யிலுள்ள சிவபிரானை வணங்குதற்குச் சென்றபோது, அவர் தம் தந்தையாரது பிடரிமேல் இருந்தபடியாய்த் திருப்பதிகங் கட்டளையிட் டருளினரென்பது அப் பதிகத்தின் ஈற்றில்,

"ஞானமுனிவன்
இடுபறையொன்ற அத்தர் பியல்[1]மேல்
இருந்து இசையா லுரைத்த பனுவல்."

என்று அருளிச்செய்த வாற்றாற் பெறப்படும். தந்தையின் பிடரிமேல் அமர்ந்திருக்கத்தக்க குழந்தை மூன்று முதல் ஐந்தாண்டிற்கு மேற்பட்டிருத்தல் ஆகாமையால்,

---

1. 'அத்தர் பியல்' என்பது 'அப்பனது பிடரி' எனப்பொருள் படுவதாகும்; 'பியல்' பிடரி எனப் பொருடருதல், "பியல் ஊகமும்" என்ற 'பெருங்கதை' (க, ௩அ, அஎ)யுட் போந்தவாற்றானும் அதன் குறிப்புரையானும் உணர்க.

திருஞானசம்பந்தர் இத் திருப்பதிகத்தை அருளிச்செய்த காலத்துச் சிறுமதலையாயிருந்தா ரென்பது இனிது துணியப்படுமன்றோ? இன்னும், மதுரையிற் கூன்பாண்டியன் மனைவி மங்கையர்க்கரசியாரால் அழைக்கப்பட்டு அங்குச் சென்றகாலத்தும் திருஞானசம்பந்தர் சிறுபிள்ளையாகவே யிருந்தாரென்பது, அவரைச் சமணர்கள் பழித்துப் பேசிய போது அவர் அருளிச்செய்த,

"மானின் நேர்விழி மாத ராய்வழு திக்கு மாபெருந் தேவிகேள்
பானல் வாய்ஒரு பாலன் ஈங்கிவன் என்று நீபரிவு எய்திடேல்
யானை மாமலை யாதியாய இடங்க ளிற்பல அல்லல்சேர்
ஈனர் கட்கௌளி யேன்அ லேன்திரு வால வாய்அரன் நிற்கவே.'

என்னுந் திருப்பாட்டின்கண் அப் பெருமான் தன்னைப் 'பால் பருகுதலால் மணங்கமழா நின்ற வாயினையுடைய ஒரு சிறு குழந்தை' என்று குறிப்பிடுதல் காண்க. மதுரைக்குச் சென்றபோதே அவர் சிறு பிள்ளையாயிருந் தமை தெளியப்படுதலின், இறைவனையும் இறைவியையும் அவர் நேரே கண்டு அவர்தம்மால் அருட்பால் ஊட்டப் பட்ட ஞான்று, மூன்றாண்டுடைய மிகச் சிறு மகவாய் அவர் இருந்தமை சிறிதும் ஐயமின்றித் துணியற்பால தாகும். இவ்வாறு திருஞானசம்பந்தர் சிறு மதலையா யிருந்தபோதே கடவுளைத் தமது கட்புலனால் நேரே கண்டு அருள்பெற்றுச், செயற்கரும் புதுமைகளெல்லாம் அக் கடவுள் அருளாற் செய்து, உலகிற்கு முழுமுதற் கடவுளின் உண்மையினையும் அக்கடவுளின் அருட்பெருந்தன்மை யினையுந் தெருட்டினமைக்கே அகச்சான்று புறச்சான்று கள் காணப்படுதலின், அவர் மூவாண்டிற் கடவுளைக் கண்டு பாடினமையே உண்மை நிகழ்ச்சியாதல் காண்க. இவரைப்போல் நம்மாழ்வாரும் சிறு மகவாயிருந்த ஞான்றே கடவுளைக் கண்டு பாடினமைக்கு அவரது 'திருவாய் மொழி'ப் பாட்டுகளில் ஏதொரு சான்றுங் காணப் படாமையின், நம்மாழ்வாரைப்பற்றிய கதை பின்வந்த வைணவப் புலவராற் புதிதாய்க் கட்டிவைக்கப்பட்ட பொய்க்கதையேயாதல் 'உள்ளங்கை நெல்லிக்கனி'போற்

சிறிது ஆராய்ந்து காண்பார்க்கும் இனிது விளங்காநிற்கும்.

அதுவேயுமன்றி, நம்மாழ்வார் பிறந்த ஞான்று தொட்டே பாலும் உண்ணாது பதினாறுண்டளவும் தவத்திலிருந்தா ரென்பது சிறிதும் நம்பற்பாலதன்று. அவர் பத்துத் திங்கள் அன்னையின் கருப்பையிற் றங்கிப் பிறந்தா ரென்றமையால், அவர் எம்மனோரைப்போலவே ஊனுங் குருதியும் நிறைந்த உடம்பு உடையரென்பது பெறப்படும். படவே, ஊன் உடம்புடைய எம்மனோரெல்லாம் உணவின்றி உயிர்வாழ்தல் ஒருவாற்றானும் ஏலாமையால், நம்மாழ்வாரும் ஏதேனும் உணவு கொண்டே உயிர்வாழ்ந்தாராதலுந் தானே பெறப்படும். இவ்வுண்மைக்கு மாறாக நம்மாழ்வார் பிறந்தநாட் டொட்டே பாலுமுண்ணாது தவங்கிடந்தா ரென்றலினும் பெரும்புளுகுரை பிறிதுண்டோ நடுநிலையுடையீர் கூறுமின்! இப் புளுகுரையை நடுநின்று ஆராய்வாரெவரும், இக் கதை நெறிதிறம்பிய மதப்பற்றுடைய வைணவரால் நம்மாழ்வாரைத் திருஞானசம்பந்தரினும் மேற்பட்டவராக ஆக்கிவிடுதற் பொருட்டுக் கட்டப்பட்ட பொய்க்கதையே யாதலைக் கண்டுகொள்வர்.

இனி, மாணிக்கவாசகப்பெருமான் தமது இளமைக் காலத்தே எல்லாக் கலைகளையும் ஓதியுணர்ந்து வளர்ந்தமை உண்மையே யாயினும், அவர் அதுபற்றிக் கடவுட்டன்மை யுடையரல்லர் என்று கூறிய 'தமிழ் வரலாறு' உடையாரது உரை உண்மையறியா வெளிற்றுரையேயாம். மாணிக்கவாசகர் தாம் கடவுளை நேரே கண்டமையும், அவர்க்குத் தாம் அடிமையானமையும்,

"திகழாநின்ற திருமேனி காட்டி
என்னைப் பணிகொண்டாய்," (குழைத்தபத்து, ௧0)

என்று தாமே அருளிச்செய்தவாற்றாற் குறிப்பிட்டிருக்கின்றார். அவ்வியல்பெல்லாம் 'மாணிக்கவாசகர் வரலாறு ௧உஅ-ஆம் பக்கம் முதல் ௧௩௫-ஆம் பக்கம் வரையில் விரித்து விளக்கிக்காட்டி யிருக்கின்றேமாதலால், அவற்

றையே ஈண்டு மீளவும் எடுத்து விரித்திலம். கடவுளை நேரே காண்டல் எளிதன்று. உலகத்தில் மக்களாய்ப் பிறந்தார் படும்பாடெல்லாங் கட்புலனாகக் கடவுளைக் கட்புலனாற் கண்டு உண்மை தெளிந்து, பிறவியறுத்து, அவன் றிருவடியைத் தலைக்கூடுதலையே பொருளாய்க் கொண்டு நிற்கின்றன. அத்துணைப் பெறற்கரும் பொருளாகிய கடவுளை நேரே காணப்பெற்று அவன் றிருவடிக்கு ஆளானாரிலுங் கடவுட்டன்மையுடையார் பிறர் உளரோ புகலுமின்! கடவுளைக் கண்டவர்க்கே கடவுட்டன்மையுளதாமன்றி, அவரைக் காணாதவர்க்கு அஃது உளதாதல் யாங்ஙனம் உரைமின்! கடவுளை நேரே கண்டு அவன் றிருவருளை நேரே பெற்ற மாணிக்கவாசகரும் திருஞானசம்பந்தரும் அக் கடவுளைப்பற்றிக் கூறும் மெய்ம்மொழிகள் நமக்கெளியவாய் அருகிருப்ப, அவற்றைக் கைக்கொண்டு பிறவிப் பயன்பெறுமற், கடவுளைக் காணாதாரையும் அவர் கூறும் மயக்கவுரைகளையும் நம்பிக் கடவுள் அல்லாத மக்களைக் கடவுளெனத் துணிந்தும், கடவுளைக் காணாதாரைக் குரவரென இறுகப்பற்றி அவர்மேற் பொய்க்கதைகளை ஏற்றியும், சைவம் வைணவம் என்று வழக்காடியும் ஐயகோ மக்கள் தம் பிறவிப்பயனை இழந்து வாழா மடிகின்றனரே! அதுகிடக்க.

இனி, நம்மாழ்வார் இயற்றிய பாடல்களையே நன்காராய்ந்து பார்ப்பின் அவர் ஓதாதுணர்ந்தவரல்லரென்பதூஉம், அவர் முழுமுதற் கடவுளைக் கண்டறியாமையின் கடவுட்பொருள் இதுதான் என்று துணியமாட்டாது பெரிதும் இடர்ப்பட்டு மயங்கினரென்பதூஉம், அதனால் அவர் கடவுட் டன்மையுடையரல்லரென்பதூஉம் இனிது புலப்படும். நம்மாழ்வார் தமது இளமைக்காலந்தொட்டே பற்பல நூல்களையும பன்னாளும் ஓதியுணர்ந்தவரென்பதற்குரிய அடையாளங்கள் அவர்தம் பாட்டுக்களிலேயே காணப்படுகின்றன. அவற்றுட் சில காட்டுதும்:—

"அங்கமெலாங் குறைந்துஅழுகு தொழுநோயாராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்

கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவு ளாரே."

என்று திருநாவுக்கரசு நாயனர் அருளிச்செய்த கருத்தை எடுத்துக்,

"குலந்தாங்கு சாதிகள் நாலிலுங் கீழ்இழிந்து எத்தனை
நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற்கு ஆள்என்றுஉள்
கலந்தார் அடியார் தம்அடி யார்எம் மடிகளே."

என்று நம்மாழ்வார் பாடினமை காண்க.

"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேஎந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள் !
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே."

என்னுஞ் செய்யுளை முதலாகக்கொண்டு சுந்தரமூர்த்தி நாயனர் அருளிய பதிகப்பொருளை எடுத்துக்கொண்டு,

"என்னாவ தெத்தனை நாளைக்குப் போதும் புலவீர்காள் !
மன்னா மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும்பொருள்
மின்னார் மணிமுடி விண்ணவர் தாதையைப் பாடினல்
தன்னாக வேகொண்டு சன்மம்செய் யாமையுங் கொள்ளுமே."

என்று நம்மாழ்வாரும் ஒரு பதிகம் பாடினமை காண்க.

"அறுசுவையுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓர்இடத்துக் கூழ்எனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று."

"யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேறுகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள."

என்னும் நாலடியார் செய்யுட்பொருளை யெடுத்து,

"உய்ம்மின் திறைகொணர்ந் தென்றுல காண்டவர் இம்மையே
தம்மின் சுவைமட வாரைப் பிறர்கொள்ளத் தாம்விட்டு
வெம்மி னொளிவெயிற் கானகம் போய்க்குமை[1] தின்பர்கள்."

என்று நம்மாழ்வார் பாடியிருக்கின்றனர்.

"கரைபொரு திரங்குங் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே யுரைசெல
மலர்தலை யுலகம் ஆண்டுகழிந் தோரே." (உ௩ரு-உ௩எ)

என மதுரைக் காஞ்சியிலும்,

"தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை இழிதரு நீத்தஞ்சால் அருவிக்
கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று
வடுவாழ் எக்கர் மணலினும் பலரே." (ருரு௩-ருருசு)

என மலைபடுகடாத்திலும் போந்த சொற்பொருள்களை எடுத்துக்கொண்டு,

"நினைப்பான் புகில்கடல் எக்கலில் நுண்மண லிற்பலர்
எனைத்தோர் உகங்களும் இவ்வுல காண்டு கழிந்தவர்."

என்று நம்மாழ்வார் பாடினர்.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள." (கக0க)

என்னுந் திருக்குறளின் சொற்பொருளை யெடுத்துக்,

---

1. 'குமை' என்னுஞ்சொற் குழைவுப் பொருட்டாகலின், அஃதிங்கே 'கூழ்' எனப்பொருள் தந்தது.

"கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலும் ஐங்கருவி
கண்டஇன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்."

என்று நம்மாழ்வார் பாடுதல் காண்க.

"அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ."

என்னும் திருநாவுக்கரசு நாயனார் திருப்பாட்டைப் பார்த்துச்,

"சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும்
மேலாத் தாய்தந்தையும் அவரேயினி யாவரே."

என ஐந்தாம்பத்தின் முதற்பதிகத்தில் நம்மாழ்வார் ஓது கின்றனர்.

"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்." (௧௧௪௭)

என்னும் திருக்குறளின் சொற்பொருள்களைக் கிடந்த படியே யெடுத்து,

"ஊரவர் கௌவை எருவிட் டன்னைசொல் நீர்ப்படுத்து."

என்று நம்மாழ்வார் பாடுதல் காண்க.

இன்னுந் 'திருவாசகத்தைப்' பயின்று அதிலுள்ள சொற்பொருள்களையும், திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருப்பதிகங்களில் மிகப் பழகி அவற்றின் சொற் பொருள்களோடு இசைகளையுந் தழுவி நம்மாழ்வார் பாடி யிருக்குஞ் செய்யுட்களையும் எடுத்துக் காட்டப்புகின் இது மிக விரியும். அதுவேயுமன்றித், 'தமிழ் வரலாறுடையார்' திருவாசகத்தைப்பார்த்து நம்மாழ்வார் பாடினாரல்லர் என வழக்கிடுதலால், வழக்கிலுள்ள அதனை எடுத்துக்காட்டு தற்கு அமர்ந்திலம் என்க.

முன்னர் எடுத்துக்காட்டிய பழந்தமிழ்ச் சான்றோர் செய்யுட் சொற்பொருள்களை நம்மாழ்வார் தாமியற்றுஞ்

செய்யுட்களிற் றழுவிக் கூறுகின்றுழிச், 'சண்டாளர்,' 'மனிசர்,' 'சன்மம்,' 'எக்கல்,' 'உகம்' என்னும் பிற்காலத்து மக்களின் கொச்சைத் தமிழ்ச்சொற்களை எடுத்து வழங்கக் காண்டலானும், இன்னோரன்ன சொற்கள் தேவார திருவாசகங்களினும், அவற்றிற்கு முற்பட்ட தமிழிலக்கியங் களினுங் காணப்படாமையானும், நம்மாழ்வார் திருவாய் மொழி பாடியகாலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டிலாதல் அதற்கும் சிறிது பின்னுதல் கொள்ளப்படும். இன்னும், 'பவித்திரன்,' 'சாதுவாய்,' 'கருமபலன்,' 'சன்மசன்மாந் தரம்,' 'விரோதம்,' 'காலசக்கரம்,' 'கலியுகம்,' 'கிதயுகம்,' 'விசாதி' (வியாதி), 'கீர்த்தித்து,' 'வைட்டணவர்,' 'முக்கியம்,' 'சுண்டாயம்,' 'விபரீதம்,' 'தன்மபாவம்,' 'வெளுமை,' 'அரவிந்தலோசந,' 'கருமகதி,' 'மூர்ச்சிக்கும்,' 'சராசரம்,' 'சாரதி,' 'விசித்திரம்,' 'விடமம்,' 'கரசரணம்,' 'துப்பரவு,' 'அன்னவசம்,' 'அநுராகம்,' 'சம்மதித்து,' 'மதுரபோகம்,' 'பிராக்கள்,' 'இன்றிக்கே' முதலான வடசொற்கள் சொற்றொடர்களும், சில தமிழ்ச்சொற்களும் பிற்காலத்தனவே யல்லாமல், கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டன அல்ல. இவை தம்மைப் பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தமிழ்நூல்களிற் காண்டலியலாது. நம்மாழ்வார் நல்ல செந்தமிழ்நடையிற் பாடிக்கொண்டு செல்லுதற்கு இடையிடையே இச் சொற்கள் சொற்றொடர்களைப் புகுத்தி விடுகின்றாராகலினுலும், திருமால் பெயர்களுள்ளும் முற் காலத்து வழங்காத வடமொழிப் பெயர்களை இவர் மிகுதியா யெடுத்து வழங்குதலினுலும் வடசொற்களும் வைணவக் குறியீடுகளும் தமிழில் மிக்கு விரவத் தொடங்கிய கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னரேதான் இவர் இருந்தாராகற்பாலர். வைணவ ஆசிரியரான ஆழ்வார் களின் காலங்களை நடுநிலை வழாது நின்று ஆய்ந்து உரைத்த திருச் சீனிவாச ஐயங்கார் அவர்களும், நம் மாழ்வார் காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டின்கட் படுவதாமெனவே வலியுறுத்தார்.[1]

---

1. See his 'Tamil Studies,' pp. 324-338.

மேற்காட்டியவாற்றல் நம்மாழ்வார் தமக்கு முன்னிருந்த பழந்தமிழ் நூல்களையும் சைவத் திருமுறைகளையும் நன்கு ஓதியுணர்ந்த புலவராதலோடு தமது காலத்துப் பரவிய தமிழ் வடமொழி வழக்குகளையுந் தழுவித் 'திருவாய்மொழி' பாடியவராவரென்பதுந் தெற்றென விளங்குதல் காண்க. எனவே, இவர் ஓதாதுணர்ந்தவர் என்று பின்னுள்ள வைணவப்புலவர் எழுதி வைத்தது வெறுங் கட்டுக்கதையே யல்லாமற் பிறிதில்லை. திருஞான சம்பந்தப் பெருமான் ஓதாதுணர்ந்து பாடினவர் என்பதற்கு அடையாளம் என்னையெனிற், பழைய தமிழ்நூல்களின் சொற்றொடர்களுங் கருத்துப் பொருள்களும் அவர் அருளிய பாட்டுக்களிற் காணப்படாமையேயா மென்பது. மேலும், திருஞானசம்பந்தர் திருக்கோயில்கட்குச் சென்றுழி அவ்வப்போது நினைந்தவளவானே திருப்பதிகங்கள் வெவ்வேருய் அருளிச் செய்திருக்கின்றார். நம்மாழ்வாரோ தாம் இயற்றிய 'திருவாய்மொழி' ஆயிரம் பாட்டுக்களையும், ஒருபாட்டின் ஈற்றுச்சொல் அதற்கடுத்த பாட்டின் முதற் சொல்லாக வரும் 'அந்தாதித் தொடை'யின்கட் படுத்து இயற்றியிருக்கின்றார். மேலும், 'திருவாய்மொழி' ஆயிரம் செய்யுட்களில் முதற் பத்துச்செய்யுட்கள் பாடும்போதே, அவர் அதனை ஆயிரஞ் செய்யுட்களால் ஆக்கவேண்டு மென்னுங் கருத்துக்கொண் டிருந்தாரென்பது,

> "பரனடிமேற் குருகூர்ச் சடகோபன் சொல்
> நிரல்நிறை ஆயிரத்து இவைபத்தும் வீடே."

என்று அவர் கூறினமையாற் பெறப்படும். பெறப்படவே, இவர் திருமால் கோயில்கடோறுஞ் சென்று, சென்றவளவானே அன்பினல் அகங்குழைந்து ஆங்காங்கு இறைவனைக் கதுமெனப் பாடினாரல்ல ரென்பதூஉம், தேவார திருவாசகங்களுக்கு எதிராகத் திருமாலுக்கும் செந்தமிழ் வழுத்துரைச் செய்யுட்கள் இருத்தல் வேண்டு மெனபதே கொண்டு அவை தம்மைப் பாடினாரென்பதூஉம், 'தேவாரப்'பதிகங்கள் ஒன்றற்கொன்று தொடர்பின்றி அவ்வத் திருக்கோயில்களில் நினைந்தவளவானே

தனித்தனியே பாடப்பட்டமையால் அவற்றுட் பல பதிகங்கள் அழிந்து போனமை கண்டு, அங்ஙனமே தாம் திருமால் மேற் பாடுஞ் செய்யுட்களும் அழிந்துபோகவிடாமல் அவை தம்மை ஒருதொடர்பு படுத்துதற் பொருட்டே அவற்றை 'அந்தாதித் தொடை'யின்பாற் படுத்துப் பாடினாராதல் வேண்டுமென்பதூஉம், ஆகவே நம்மாழ்வார் வைணவ சமயத்தின்பாற் பற்றுடைய ஒரு சிறந்த தமிழ்ப்புலவரே யல்லாமல் இவர் இறைவனை நேரே கண்டு அவன்பால் அன்பு மீதூரப்பெற்று அவனருளைப் பெறுவான்வேண்டி நினைந்த நினைந்த போழ்தெல்லாம் நெஞ்சம் நெக்குருகிப் பாடினாரல்ல ரென்பதூஉம், அதனால் அவர்பால் ஏதொரு கடவுட்டன்மையுங் காணப்பட்டில தென்பதூஉம் தெற்றென விளங்காநிற்கும்.

அற்றேல், மாணிக்கவாசகரும் 'திருச்சதகம்' நூறு செய்யுட்களையும், 'நீத்தல் விண்ணப்பம்' ஐம்பது செய்யுட்களையும் 'அந்தாதித்தொடை' யின்பாற் படுத்துப் பாடியவா றென்னையெனின்; 'திருச்சதகம்' திருப்பெருந்துறையிலும், 'நீத்தல் விண்ணப்பம்' திருவுத்தர கோசமங்கையிலும் அடிகளால் அருளிச் செய்யப்பட்டனவாகலின், அவற்றுள் முதல் நூறு ஒரு தொகுதியாகவும், பின் ஐம்பதும் மற்றொரு தொகுதியாகவும் தனித்தனியே பாடப்பட் டிருத்தலானும், 'திருவாசகத்'தின்கண் உள்ள ஏனைத் திருப்பதிகங்களும் ஒன்றற்கொன்று தொடர்பின்றித் தனித்தனியே பாடப்பட்டிருத்தலானும், அவை நம்மாழ்வார் பாட்டுக்களைப்போற் செயற்கையாய் ஒரு தொடர்புபட நில்லாமல் தனித்தனியே நினைந்த நினைந்தவழிப் பேரன்பின் பெருக்கால் இயற்கையாய்ப் பாடப்பட்டன வாகுமென்று தெளிக.

இனி, இவையெல்லாம் ஒருபுறம் நிற்க. நம்மாழ்வார் கடவுளை நேரே காணும் பெரும்பேறு பெற்றிலராயினும், முழுமுதற் கடவுளிலக்கணம் இதுதான் என்று ஆராய்ந்துணரும் அறிவு மதுகையும், அதனால் அம் முழுமுதற் கடவுள் ஒன்றனையே வழுத்தும் மன ஒருமைப்பாடு மாயினும் உடையரோவெனின்; அவை தாமும் அவர் உடைய

ரல்லரென்பது காட்டுவாம். உலகிற்கு முழுமுதற் கடவுள் ஒருவனே உளன் என்று காட்டாமல், நான்முகன் திருமால் உருத்திரன் எனக் கடவுளர் மூவர் உளர் எனக்கூறி, அம் மூவரில் ஒவ்வொருகால் ஒவ்வொருவரை உயர்த்தி ஏனை யரைத் தாழ்த்தி, இந் நாவலந் தீவின்கண் உள்ள பொது மக்கள் அம் மூவரில் ஒவ்வொருவரைப் பற்றிக் கொண்டு வழக்காடிப் போர்புரியவுந், தாம் அப் பொதுமக்களின் வேருய் நிலவுலகக் கடவுளரென அவர் தம்மாற் பாராட்டப் படவும் சூழ்ச்சி செய்து ஆரியப்பார்ப்பனர் கட்டிவிட்ட புராணப் பொய்க்கதைகளையே உண்மையென நம்பி நம் மாழ்வார்,

"பெரிய அப்பனைப் பிரம னப்பனை உருத்திர னப்பனை."
(அ-ஆம் பத்து, க, கக)

எனவும்,

"தானும் சிவனும் பிரமனும் ஆகிப் பணைத்த தனிமுதலே."
(அ-ஆம் பத்து, அ, ௪)

எனவும் கடவுளர் மூவர் என்றும், அம் மூவரிற் றிருமாலே சிறந்த கடவுள் என்றுங் கூறுகின்ருர். உலகிற்கு முழு முதற் கடவுள் ஒருவரேயுளர் அல்லாமல், மூவர் உளராதல் யாங்ஙனம்? படைத்தற்றொழிலை நிகழ்த்துதற்கு ஒரு கடவுளும், காத்தற்றொழிலை நிகழ்த்துதற்கு மற்றொரு கடவுளும், அழித்தற்றொழிலை நிகழ்த்துதற்கு வேறொரு கடவுளுமாகக் கடவுளர் மூவர் உளராயிற், படைத்தற் றொழிலைச் செய்வோன் காத்தல் அழித்தல்களைச் செய்ய மாட்டுவான் அல்லனெனவும், அங்ஙனமே காத்தல் அழித் தல்களைச் செய்வோரும் தத்தந் தொழிலையன்றிப் பிற தொழில்களைச் செய்யமாட்டுவா ரல்லரெனவுங் கொள்ளப் பட்டு, அவரெல்லாம் வரம்பிலாற்றலுடைய முழுமுதற் கடவுளாகா ரென்பது தானே பெறப்படும். அற்றன்று, திருமாலே தமக்குரிய காத்தற்றொழிலோடு ஏனையிரண்டு தொழில்களையும் புரிவரெனின்; நன்று சொன்னுய், திரு மாலே முத்தொழிலும் புரிபவராயிற், படைத்தல் அழித்தல்

களுக்கு வேறிரு கடவுளரைக் கொண்டது எற்றுக்கு? அதுவேயுமன்றி, நாரணன் நான்முகன் அரன் என்னும் மூவரையுமே உள்ளத்து இருத்திப் பற்றறுத்தல் வேண்டு மென்பது போதர நம்மாழ்வார்,

"ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரன்என்னும் இவரை
ஒன்றநும் மனத்துவைத்து உள்ளிநும் இருபசை யறுத்து."
(க, ௩, எ)

என்று கூறியதென்னை? ஒன்றென்றுவது பலவென்றுவது அறிதற்கரிதான வடிவுடையது யாது? அஃது இம் மூவரின் வேறு? ஒன்று? வேறுயின், அஃது அம் மூவரின் மேற்பட்ட முழுமுதற் கடவுளாதல் வேண்டும். மற்று அஃது அம் மூவரோடு ஒன்றுபட்ட பொருளாயின், ஓர் அறிவுப் பொருள் மூவேறு அறிவுப் பொருளாகப் பகுக்கப்படுதல் யாங்ஙனம்? அறிவில்லாத பருப்பொருள்களே ஒன்று பலவாகப் பகுக்கப்படுதலைக் காண்டும். அவற்றைப் போலவே அறிவுப்பொருளும ஒன்று பலவாகப் பகுக்கப்படுதலை யாண்டாயினுங் கண்டார் உளரோ? அல்லதூஉம், ஒன்றெனவாதல் பலவெனவாதல் அறிதற்கரிய பொருள், பின் மூன்றுயதைமட்டும் அறிவது யாங்ஙனங் கூடும்? அற்றன்று, ஒன்றெனப் பலவென அறிதற்கரிய முழுமுதற் கடவுள் யாண்டும் ஊடுருவி நிறைந்து எவற்றினும் மேற்பட்டதாய் நிற்க, அதனுள் நான்முகன் திருமால் உருத்திரன் என்னும் மூவரும் தனித்தனி நிற்பரெனின், "யானும் அறியேன் அவளும் பொய்சொல்லாள்" என்றபடி இம் மூவரும் முதல்வர் அல்லர், இம் மூவரின் வேறுய் எல்லாம் வல்லதாய் நிற்கும் முழுமுதற் கடவுள் பிறிது ஒன்று உண்டென்பது, நம்மாழ்வார் வாய்மொழியினுலேயே பெறப்படு கின்றதன்றே? அவ்வாறு மூவரின் வேறுய் முழுமுதற் கடவுள் ஒன்றுண்டென்பதனை உடன்பட்ட நம்மாழ்வார் பின்னர் அதனை மறந்து, அம் மூவரில் ஒருவராய திருமாலையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு,

"தானோர் உருவே தனிவித்தாய்த்
தன்னில் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய்த்
தானோர் பெருநீர் தன்னுள்ளே
தோற்றி அதனுட் கண்வளரும்
வானோர் பெருமான் மாமாயன்
வைகுந் தன்எம் பெருமானே." (க, ரு, ச)

என்று இசைத்தது முன்னொடுபின் பெரிதும் முரணுறு தலைச் சிறிதாராய்ச்சியுடையரும் நன்கறிவர்.

இவ்வாறு முன்னொடுபின் முரண உரைநிகழ்த்திய நம்மாழ்வார், முழுமுதற் கடவுள் நிலையிற் றாம் உயர்த்து வைத்த தம் திருமாலையே இறுகப்பற்றி, அவரது வழிபாட்டளவிலாவது உறைத்து நின்றனரோவென்றால் அதுவும் இன்று. சிவபிரானே முழுமுதற் கடவுள் என்பதை, மூன்றும் ஆண்டில் அப் பிரானை நேரே கண்டு அவனருட்பால் உண்டு வளர்ந்த திருஞானசம்பந்தப் பிள்ளையார் தாம் சமணர் சாக்கியரோடு இட்ட வழக்குகளில் நன்கு நிலை நாட்டியிருக்கின்றனராகலின், அதனை நன்கு உணர்ந்த நம்மாழ்வார், தாம் சிவபிரான் வழிபாட்டைக் கைவிட்டால் தமக்கு இம்மையிற் பெருந்துன்பமும் மறுமையில் நிரயமும் வாய்க்குங்கொலென அஞ்சியே திருவாய்மொழியில்,

"அரிஅயன் அரன்என்னும் இவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின்." (க, ரு, சு)

எனவும்,

"கடிகமழ் கொன்றைச் சடையனே யென்னும்." (எ, உ, க0)

எனவும்,

"பூத்தண் துழாய் முடியாய்புனை
கொன்றையஞ் செஞ்சடையாய்." (எ, சு, ரு)

எனவும்,

"என்மலைமகள் கூறன் றன்னை ......எயில்மூன் றெரித்த
வென்றுபுலன் துரந்த விசும்பாளியைக் காணேனோ."
(எ, சு, எ)

எனவும்,

"மாயோனை முக்கணம்மானை நான்முகனை அமர்ந்தேனே."
(அ, ச, கo)

எனவும்,

"முனியே நான்முகனே முக்கண் அப்பா." (கo, கo, க)

என்வும் முக்கட் பெருமானையும் இடை யிடையே வழுத்திக் கொண்டு சென்று, இறுதியில்,

"அவாவறச் சூழ்அரியை அயனை அரனை அலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்."
(கo, கo, கக)

என்று சிவபிரான் திருப்பெயராலேயே முடித்துக் கூறி யிருக்கின்றார். புராண கதைகளை நம்பிக் கடவுளர் மூவர் உளர் என்றும், அவருட்டிருமாலே முதல்வராவர் என்றுங் கொண்டு நம்மாழ்வார் பெரிதுமயங்கி யிடர்ப்பட்டனராயி னும், திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு மூன்றாண்டிலே தோன்றி யருள்செய்து, முதல்வனில்லை யெனப் பாழ்ங் கொள்கை பேசிய சமண சாக்கியரை அவர் வாயிலாக அடக்கித் திருத்தி யருள்புரிந்த சிவபிரான் முழுமுதற் கடவுளா யன்றிப் பிறிதாதல் செல்லாதெனை வரவரத் தெளிந்து துணிவு கொண்டே நம்மாழ்வார் 'அரன்' என் னுந் திருப்பெயரை முடிந்த நிலையாகவைத்துச் சொல்லித் தமது 'திருவாய்மொழி'யை முடித்தாராகல் வேண்டுமென் பது நடுவுநின்றுராய்வார்க்கு விளங்காதொழியாது. எனவே, நம்மாழ்வார் முழுமுதற்கடவுள் நிலையைத் தாமாகவே முழுதுணர்ந்து அதன்கண் மட்டும் உறைத்து நின்றவர் அல்லரென்பதூஉம், அதனால் அவர் திருஞான சம்பந்தப் பெருமானையாதல் மாணிக்கவாசகப் பெருமானை யாதல் ஒத்த கடவுட்டன்மையுடைய ரல்லரென்பதூஉம் நன்கு போதரும்.

மேலும், உலகிற்கு முதலாய் நிற்குங் கடவுள் அப்பனாகிய தானும் தன்னோடு பிரிப்பின்றி நிற்கும் அம்மையும் ஆய் ஒன்றும் இரண்டுமல்லா இரண்டற்ற நிலையில் ஆண் பெண் உருவாய்த், தீயும் நீரும் ஒப்பச், சிவப்பு நீலநிறங்களோடு கூடி நின்று, உலகத்தைப் படைத்துக்காத்து அழிக்கும் உண்மையினை 'மாணிக்கவாசகர் வரலாறு' கூஉ-ஆம் பக்கம் முதல் கூஎ-ஆம் பக்கம் வரையில் வைத்து இனிது விளக்கிக் காட்டியிருக்கின்றேம், ஈண்டும் சிறிது விளக்குவேம். உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களுந் தீயின் கூற்றிலும் நீரின் கூற்றிலும் அடங்கும். தீயும் நீரும் ஒன்றியைந்து நிற்குங்காறும் படைத்தல் காத்தல்கள் நிகழும்; தீ மிகுந்தவிடத்து நீரை உரிஞ்சி எல்லாப் பொருள்களையும் அழித்துவிடும். எனவே, படைத்தல் காத்தல்களைச் செய்வது தீயும் நீரும் சேர்ந்த சேர்க்கையேயாதலும், அழித்தலைச் செய்வது தீ நீரிற் பிரிந்து மிகுதலேயாதலும் தெற்றென விளங்கும். விளங்கவே படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிற்கும் ஏதுவாவன தீயும் நீரும் என்னும் பொருள்கள் இரண்டேயல்லாமல் மூன்றல்லாமையும் புலனும். இத் தீயும் நீரும் அறிவில்லாப் பொருள்களாதலால் அவற்றை இயக்குதற்கு அறிவுடைய முதல்கள் இரண்டு இன்றியமையாது வேண்டப்படும். தீயினுள் விளங்கும் அறிவுடைப்பொருளே சிவம் என்றும், நீரினுள் விளங்கும் அறிவுடைப்பொருளே அம்மையென்றும் அறிவுநூல்கள் நுவலாநிற்கும். இவ்வாறு இவற்றுள் விளங்குதல்பற்றியே தீயின்நிறமான சிவப்புவடிவு சிவபிராற்கும், நீரின் நிறமான நீலவடிவு அம்மைக்கும் உரியனவாகச் சொல்லப்பட்டன. இது குறித்தே இருக்குவேதத்துள்ளும் "த்வம் அக்நே ருத்ரோ" (அக்கினி, நீ உருத்திரனாய் இருக்கின்றனை)[1] என்னும் உரையும் எழுந்தது. 'உரு'வென்னுஞ் சொல்லுக்குச் 'சிவப்புநிறம்,' 'வெப்பம்,' 'அச்சம்', என்னும் பொருள்கள் உண்மை, "உருவப் பல்பூத் தூஉய்,"[2] "வெயில் உருப்புற்ற வெம்

1. இருக்கு, உ, க, சு. 2. திருமுருகாற்றுப்படை, உசக.

பரல்,"[1] "உருஉட் காகும்"[2] என்னும் பழைய தமிழ்நூற் சொற்றொடர்களாற் புலப்படுதலிற், செம்மை நிறத்தையுஞ் சினத்தையும் அச்சத்தையுந் தோற்றுவிக்கும் அழிப்புக் காலத்துச் சிவபெருமாற்கு 'உருத்திரன்' என்னுந் தமிழ்ச் சொல்லைப் பண்டை இருக்குவேதகாலத் தமிழர்கள் பெயராக அமைத்து வழங்குவாராயினர். எனவே, படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலை யும் செய்வோர் அப்பனும் அம்மையுமாய்ப் பிரிவறநிற்கும் முதல்வர் இருவரேயல்லாமல், மூவர் அல்லர். இவ்வுண்மை அம்மையப்பரது விளக்கத்திற்கு இடனாய்நிற்கும் தீ நீரின் றொழில்களானுந் தெளியப்படும். தீ தனித்து எரியுங் கால் ஏதொருபொருளும் அதன்முன் நிற்கலாற்றாது அழிந்துபடும். மற்று அது நீரொடு கலந்து தனது வெம்மை குறைந்து ஓர் அளவில் நிற்குங்கால், அது பல செயற்கருந் தொழில்களெல்லாம் செய்யவல்லதாகும். தீயும் நீரும் ஒருங்கு கலத்தலாற்றோன்றும் நீராவி பல வகைப் பொறிகளையும் இயக்கிப் பலவேறு வியத்தகு தொழில்களெல்லாம் செய்தலை இஞ்ஞான்று உலகம் எங் கணுங் காண்கின்றேம் அல்லேமோ? தீயின் சேர்க்கை யின்றி நீர் உறைந்து பனிக்கட்டியாயவிடத்தும், நீரின் சேர்க்கையின்றித் தீயே மிக்கெழுந்து எல்லாவற்றையும் எரிக்குமிடத்தும் உலகின்கண் ஏதேனும் நடைபெறுமா? நடைபெறாதன்றே. உலகினும் உலகத்தில் இயங்கும் உயிர்களின் உடம்புகளினும் தீயும் நீருங் கலந்துநிற்க வேண்டுமளவுக்குக் கலந்து நிற்றலினாற்றான் உலகுயிர் களின் தோற்றமும் அவற்றின் நிலைபேறுங் காணப்படு கின்றன. ஆகவே, அம்மையப்பரது சேர்க்கையே படைப் புக்குங் காப்புக்கும் ஏதுவாகு மல்லது, நான்முகனுந் திரு மாலுந் தனித்தனியே அவைதமக்கு ஏதுவாகார் என்க.

அல்லதூஉம், உண்மையான் நுணுகி நோக்குமிடத் துப் படைப்பும் அழிப்பும் எனத் தொழில்கள் இரண்டே உளவல்லது, காப்பு என்பதொரு தனித்தொழில் தனியே

1. சிறுபாணாற்றுப்படை, அ. 2. தொல். உரியியல், ச.

நடைபெறுவதன்று 'படைப்பு' என்பது யாதெனை ஆராயுங்கால் ஐம்பொறிகளுக்கும் புலனாகா நுண்டுகள்கள் ஒருங்கு சேர்க்கப்பட்டு அவ் வைம்பொறிகட்கும் புலனாகும் வடிவுடையவாமாறு ஆக்குவதேயாம். 'அழிப்பு' என்பது அங்ஙனந் திரட்டி வடிவாக்கப்பட்ட துகள்கள் வேறுவேறாகப் பிரிந்துபோமாறு பிரித்து விடுவதேயாம். நம்முடம்பினும் உலகத்தினும் இவ்விருவகைத் தொழில்களும் இடையறாது நடைபெறுகின்றன. நமதுடம்பு எண்ணிறந்த நுண்டுகள்களால் ஆக்கப்பட்டிருக்கின்றது. இத் துகள்கள் ஒவ்வோர் இமைப்பொழுதும் புதிய புதியவாய் நமதுடம்பின்கட் சேர்க்கப்பட்டு வராநிற்பப், பழைய துகள்கள் அங்ஙனமே ஒவ்வொரு நொடியும் பிரிந்து பிரிந்து நமதுடம்பைவிட்டு அகன்றுபோகின்றன. இவ்வாறு புதிய துகள்கள் புதிய புதியவாய்த் திரட்டப்பட்டு நமதுடம்பின்கட் சேர்க்கப்பட்டு வருங்காறும் நமதுடம்பு இங்கு நிலைபெறும். மற்றுப் புதிய துகள்கள் அங்ஙனம் ஒவ்வொரு நொடியும் சேர்க்கப்படாமல் நின்றுபோகப், பழைய துகள்கள் ஓர் உடம்பினின்றுங் கழிந்துகொண்டே போமாயின், அவ்வுடம்பு விரைவில் அழிந்துபோகும். இம் முறையால் ஆழ்ந்து நோக்குமிடத்துப் புதிய துகள்கள் இடையறாது படைக்கப்பட்டு வருதலே உடம்பு நிலைபெறுதற்கு ஏதுவாதல் விளங்கும். எனவே, இடையறாத படைப்புத் தொழிலே காத்தற்றொழிலாகுமல்லாற், காத்தற்றொழிலென வேறொன்று தனியே யுண்மை ஒருவாற்றானும் பெறப்படமாட்டாது. அதனாற் காத்தற் றொழிலுக்குத் திருமாலென ஒரு தெய்வம் தனியே வேண்டுமெனக் கொண்டாரது கோட்பாடு சிறிதும் பொருந்தாது. படைத்தற்றொழிலைச் செய்யும் அம்மையே காத்தற்றொழிலையுஞ் செய்பவளாவாள். மேலும், காத்தற்றொழிலைத் தனியே செய்யும் தெய்வம் ஒன்று உளதெனக் கொள்ளினும், வேறொருவராற் படைக்கப்பட்டதனையே அது காக்க வேண்டுதலானும், படைக்குந் தெய்வம் படைத்தற்றொழிலைச் செய்யாதாயிற் காக்குந்தெய்வங் காத்தற்றொழிலைச் செய்யமாட்டாமையானும், எவற்றையும் அழிக்குந்தெய்வம்

ஒன்று உளதெனக் கோடல் வைணவர்க்கும் உடன்பாடாக லின் அவ் வழித்தற்றொழிலைச் செய்யுந் தெய்வத்தின் முற் காக்குந் தெய்வந் தன்றொழிலை எக்காலும் நடத்தல் இயலாமையானும், அன்றிக் காக்குந் தெய்வத்தின் முன் அழிக்குந் தெய்வத்தின் வலி செல்லாதெனின் அழித்தற றொழிலே எக்காலும் நடைபெறுதாகல் வேண்டும், மற்று அஃது உலகின்கட் கண்கூடாய் நிகழக் காண்டு மாகலின் அழித்தற் றெய்வத்தின்முன் காத்தற் றெய்வத்தின் வலி நிற்க லாற்றாமையானும் அங்ஙனங் காத்தற் றொழிலுக்கெனத் தனியேகொண்ட தெய்வம் முதன்மையும் ஆற்றலும் இல்லாதாய் ஒழிதல்வேண்டும். அவ்வாறொழியவே, திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொள்ளுங் கோள் ஒருவாற்றானும் ஒவ்வாதென்க. இவ் வாற்றால் அழித்தற்றொழிலைச் செய்யும் உருத்திரனே எல்லா ஆற்றலும்வாய்ந்த முழுமுதற் கடவுளாவன் என்று தெளிக. இவ்வுண்மை தெரித்தற்கே சிவஞானசித்தி யாரிலும்,

"இறுதியாங் காலந் தன்னில் ஒருவனே இருவ ருந்தம்
உறுதியின் நின்ற ரென்னின் இறுதிதான் உண்டா காதாம்
அறுதியில் அரனே எல்லாம் அழித்தலால் அவனால் இன்னும்
பெறுதும்நாம் ஆக்க நோக்கம் பேரதி கரணத்தாலே."

என்னுந் திருப்பாட்டும் எழுந்தது. எல்லாம்வல்லோனாய் எல்லாவற்றையும் அழிக்கும் முதல்வனொருவனே, எல்லாம் அழிந்தொழிந்த இறுதிக்காலத்தில் எஞ்சிநிற்பவனாகலின், திரும்பப் படைப்பு நிகழவேண்டியக்கால் அஃது எஞ்சி நிற்கும் அவ்வுருத்திரன்மாட் டிருந்தே தோன்றுமென் பதும் பெற்றாம். பெறவே, படைப்பும் அழிப்பும் அவற் றிடையே நிகழும் காப்பும் என்னும் முத்தொழிற்கும் உரிய முதல்வன் உருத்திரன் ஒருவனே யாதலுந் தானே பெறப்படும். இவ்வுண்மையெல்லாம் 'சிவஞானபோதம்,' 'சிவஞானசித்தி' என்னும் அறிவு நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் நன்கு விரித்துரைக்கப்பட் டிருத்தலின், அவற்றையே ஈண்டு மீளவிரித்தல் வேண்டா.

இனி, மேலே காட்டியவாற்ருல் முழுமுதற் கடவுள் அப்பனும் அம்மையுமாய் நிற்குமியல்பும், அதுவே முத் தொழில்களைப் புரியுமாறும் இனிது தெளியக்கிடந்தமை யின், அம் முழுமுதற்கடவுளை நேரே காணும் பெறற்கரும் பேறுபெற்ற மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலான அருட்டிருவாளர்களெல்லாம் அம் முழுமுதற்கடவுளைப், புராணகதைகளுட் சொல்லப்பட்ட நான்முகன் திருமால் காலஉருத்திரன் என்னும் மூவர்க்கும் மேற்பட்ட அம்மையப்பராகவே வைத்து ஓதி வழுத்து வரல்லது, அம் மூவரில் ஒருவராகக்கொண்டு வழுத்து தற்கு ஒருசிறிதும் ஒருப்படுவாரல்லர். இது,

> "மூவரும் முப்பத்துமூவரும் மற்ருழிந்த
> தேவருங் காணச் சிவபெருமான்."

என்றற்ருெடக்கத்து அவர்தம் அருளுரைகளால் நன்கு தெளியப்படும். இவ்வுண்மையினை "மாணிக்கவாசகர் வரலாறு" க00-ஆம் பக்கம்முதல் க0க-ஆம் பக்கம் வரை யிலும் எடுத்துக் காட்டியிருக்கின்றேம். அங்ஙனமே திரு ஞானசம்பந்தப் பிள்ளையார்,

> "முத்தியாய் மூவரின் முதல்வனுய் நின்றவன்."
>
> (திருமழபாடி)

எனவும்,

> "மூவரிலும் முதலாய்•நடுவாய மூர்த்தியை."
>
> (திருப்பாச்சிலாச்சிராமம்)

எனவும், திருநாவுக்கரசு நாயனுர்,

> "முந்தையார் முந்தியுள்ளார் மூவர்க்கு முதல்வரானுர்."
>
> (திருவிடைமருதூர்)

எனவும்,

> "மூவுருவின் முதலுருவாய் இருநான்கான
> மூர்த்தியே யென்று முப்பத்துமூவர்
> தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
> செம்பவளத் திருமேனிச் சிவனே." (பொது)

எனவும்,

"சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றேம்." (பொது)

எனவும், சுந்தரமூர்த்தி நாயனர்,

"மூந்தி யாகிய மூவரின் மிக்க
மூர்த்தி யைமுதல் காண்பரி யானை."
(திருவாழ்கொளிபுத்தூர்)

எனவும் அருளிச்செய்தமை காண்க. எனவே, சைவசமய ஆசிரியர்களாற் 'சிவன்,' 'உருத்திரன்' என்னும் பெயர்களால் வைத்து வணங்கப்பட்டது முழுமுதற் கடவுளேயல்லாமற், புராணகதைகளுட் சொல்லப்பட்ட மூவரில் ஒருவரான காலஉருத்திரர் அன்று.

இனிச், சைவசமயாசிரியர்க்கு முன்னிருந்த சைவ சமயச் சான்றேர்களால் வணங்கப்பட்டு வந்ததூஉம் முழுமுதற் கடவுளே யென்பதற்கு, அம் முழுமுதலுக்குப் பேரிலக்கணமாயுள்ள பிறவாமை இறவாமையாகிய தன்மைகளே சிவபிராற்கு உரியனவாகப் பழைய நூல்களுள் ஓதப்படுதலே சான்றும். "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்" என்று 'சிலப்பதிகாரத்'திலும்[1] போந்தமை காண்க. சிவபிரான் முழுமுதற் கடவுளாதல் பற்றியே பண்டைநாளிலிருந்த தமிழ்ச் சான்றேர்கள் முதலிற் சிவபெருமான் திருக்கோயிலேயும், அதன்பின்னர் ஏனைத் தெய்வங்களின் கோயில்களையும் வைத்து வழிபட்டு வந்தனர். இஃது,

"ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றேனும்,
கடல்வளர் புரிவளை புரையு மேனி
அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்,
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்,
மணிமயில் உயரிய மாறு வென்றிப்

1. இந்திரவிழவூரெடுத்த காதை, கசுக.

> பிணிமுக வூர்தி ஒண்செய் யோனும்என
> ஞாலங் காக்குங் கால முன்பிற்
> றோலா நல்லிசை நால்வ ருள்ளும்."[1]

என்று 'புறநானூற்'றிற் சிவபெருமான் முதற்கண்வைத்து ஓதப்பட்டமை காண்க. இவ்வாறே 'சிலப்பதிகாரத்'திலும்,[2] 'மணிமேகலையி'லும்[3] சிவபிரானும் அவன் றிருக்கோயிலும் ஏனை எல்லாத் தெய்வங்களுக்கும் அவர்தங் கோயில்கட்கும் முன்வைத்து உரைக்கப்படுதலும் உணரற்பாற்று.

எனவே, பிறந்திறப்பனவெல்லாம் சிற்றறிவுடைய உயிர்களாதலும், அவ் வுயிர்கட்குப் பலவேறு உடம்புகளைத் தந்து அவை தம்மைப் பிறவிவட்டத்தில்வைத்துச் சுழற்றி அவற்றிற்கு அறிவுவளரச் செய்யும் முதல்வன் பிறப்பு இறப்புக்கள் இல்லாத் தூய பேரறிவினனாதலும் பண்டைச் செந்தமிழ் நூலாசிரியர் மெய்யுரைகளால் இனிது விளங்காநிற்கின்றன. அப் பண்டையோர் மெய்ம்மரபின் வழிவந்த சைவசமயாசிரியர்களும் பிறப்பு இறப்பு இல்லாத் தனிப்பெருங் கடவுளையே 'சிவன்,' 'உருத்திரன்' எனவைத்து வழிபட்டனர் என்பதற்குப், பிறப்பு இறப்பு இல்லாத் தனி முதன்மையே அப் பெருமானுக்குரியதாக அவர் அடுத்தடுத்து எடுத்துக் கூறுதலே சான்றாம். மாணிக்கவாசகப் பெருமான்,

> "யாவர்க்குந் தந்தைதாய் தம்பிரான் தனக்கு அஃதிலான்."
> (திருச்சதகம், சஎ)

எனவும்,

> "துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
> தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ,
> இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்."
> (பிடித்தபத்து, க0)

எனவும், திருஞானசம்பந்தப்பெருமான்,

---

1. புறநானூறு, ருசு. 2. ஊர்காண் காதை, எ.
3. விழாவறை காதை, ருச.

"பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ்ப்
பிழையாத வண்ணம்." (பொது)

எனவும்,

"தந்தை யாரொடு தாயிலர் தம்மையே." (பொது)

எனவும், திருநாவுக்கரசு நாயனார்,

"பிறப்பிலார் இறப்பிலார் பிணியொன் றில்லார்."
(திருப்பந்தணைநல்லூர்)

எனவும்,

"மூவான் இளகான் முழுவுல கோடுமண் விண்ணுமற்றும்
ஆவான்." (பொது)

எனவும்,

"பெரியான் பெரியார் பிறப்பறுப் பான்என்றுந் தன்பிறப்பை
அரியான் அடிநிழற் கீழதன்றே என்றன் ஆருயிரே."
(பொது)

எனவும்,

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்தன் என்றுஅரி யோடு பிரமனுந்
துத்தியஞ்செய நின்றநற் சோதியே." (பொது)

எனவும்,

"நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே." (பொது)

எனவும், சுந்தரமூர்த்தி நாயனார்,

"ஆரும் அளவறியாத ஆதியும் அந்தமும்
ஊரும் ஒன்றில்லை." (பொது)

எனவும் அருளிச் செய்தல் காண்க.

இங்ஙனம் பண்டைநாள் தொட்டுப் பின்றைநாள் வரையில் வழிவழி வந்த சைவசமயச் சான்றோர்களெல்லாம் பிறப்பிறப் பில்லா முழுமுதற் கடவுளையே 'சிவம்' என வைத்து, அதனையன்றிப், புராணங்கள் கூறிய மூவரையாதல் மற்றுப் பிற தெய்வங்களையாதல் மறந்தும் வணங்காராக, நம்மாழ்வாரோ பிறப்பு இறப்புக்களுட்பட்ட நான்முகன் திருமால் இந்திரன் முதலான தெய்வங்களையும், திருமாலினுந் தாழ்ந்தவர்களாய் இம் மண்ணுலகத்திற் பிறந்து மாண்ட கண்ணன் இராமன் முதலாயினோரையும் பெரிதுயர்த்து ஒரு வரைதுறையின்றி வணங்குகின்றனர்.

"வாங்குநீர் மலருலகில்
நிற்பனவுந் திரிவனவும்
ஆங்குயிர்கள் பிறப்புஇறப்புப்
பிணிமூப்பால் தகர்ப்புண்ணும்."
(திருவாய்மொழி, ௪, ௯, ௩)

எனவும்,

"நோயேமூப்பு இறப்பிறப்புப்
பிணியேயென் றிவையொழியக்
கூயேகொள் ளடியேனைக்
கொடுவுலகங் காட்டேலே." (௪, ௯, ௭)

எனவுங் கூறித் தாம் பிறப்பு இறப்புத் துன்பங்களினின் றுங் கரையேறுதலை வேண்டும் நம்மாழ்வார்,

"மீனாய் ஆமையு மாய்நர சிங்கமு மாய்க்குறளாய்க்
கானார் ஏனமு மாய்க்கற்கி யாம்இன்னுங் கார்வண்ணனே."
(௩, ௧, ௧0)

என்றும்,

"மனப்பரிப்போடு அழுக்கு மானிடசாதியில் தான்பிறந்து
தனக்கு வேண்டுருக் கொண்டு." (௬, ௪, ௭)

என்றும் தாமே தங்கடவுளின் பல்பிறவிகளை யுடன்பட்டு மொழிதலும், தம் பிறவியொழித்தற்குப் பிறவியொழியாத பிறன் ஒருவனை வேண்டுதலும் நினைந்து பார்க்கும்வழி,

அவர் முழுமுதற் கடவுளியல்பினைச் சிறிதாயினும் உணர்ந்து பார்க்கும் ஆராய்ச்சியறிவுடைய ரல்லரென்பது துணியப்படுமன்றோ? இப் பெற்றியினரான நம்மாழ்வாரைக் கடவுட் டன்மையுடைய ரெனவும், எல்லாம்வல்ல முதல்வனை நேரே கண்டு அவனை வணங்கி வாழ்த்துதலிலேயே ஒன்றுபட்டு உறைத்துநின்ற மாணிக்கவாசகப் பெருமானைக் கடவுட்டன்மை யிலரெனவும் தலைதடுமாறி மயக்கவுரை நிகழ்த்திய 'தமிழ் வரலாறுடையாரது' பிழைபாட்டுரையினும் மிக்கதொரு பிழையினை யாண்டுங் காணேம்.

இன்னும், நல்வினை தீவினையின் பயனுய் அறியாமை நீக்கத்தின் பொருட்டு உயிர்கட்குவரும் பல்பிறவிகளும் அவற்றுல் வரும் பாவங்களும் எல்லாம்வல்ல இறைவனுக்கு இல்லாமை பற்றியே அவனை அறிவுநூல்கள் "அறவாழி அந்தணன்"[1] அல்லது 'புண்ணியன்' என்று புகலாநிற்கும். இப் 'புண்ணியன்' என்னுஞ்சொற் சிவபிரானுக்கே உரித்தாய் வழங்கப்பட்டமை,

"போதலர் சோலைப் பெருந்துறை எம் புண்ணியன்"

என்று மாணிக்கவாசகப் பெருமானும்,

"மருந்து வானவர் தானவர்க் கின்சுவை
புரிந்த புன்சடைப் புண்ணியன் கண்ணுதல்."
(திருவெறும்பியூர், ௩)

என்றும்,

"புரித்தானைப் புண்ணியனைப் புனிதன் றன்னை."
(திருப்பூந்துருத்தி)

என்றும்,

"நாக்கொண்டு பரவும் மடியார்வினை
போக்கவல்ல புரிசடைப் புண்ணியன்." (திருவலஞ்சுழி, எ)

என்றும்,

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்." (பொது)

என்றும்,

“ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூதநாயகன் புண்ணிய மூர்த்தியே.”

என்றும் திருநாவுக்கரசு நாயனாரும் அருளிச்செய்தவாற்றானும், வைணவ சமயத்தாழ்வார்களுள் முதல்வரான பொய்கையாழ்வார்,

“பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங் கத்தால் திரிவரேனும் ஒருவன்
ஒருவனங்கத் தென்றும் உளன்.”

என்று அருளிச்செய்தமையானும் அறியப்படும். அப்பர் அடுத்தடுத்து வழங்கிய ‘புரிசடைப் புண்ணியன்’ என்னுஞ் சொற்றொடரைப் பொய்கையாழ்வார் அங்ஙனமே தாமும் எடுத்து வழங்குதலை உற்று நோக்குங்கால், சிவபிரானைப் புண்ணியன் என்று கொண்ட அப்பரது கருத்தைப் பொய்கையாழ்வார் முற்றுந் தழுவினமை புலப்படும். இவ்வாற்றாற் பொய்கையாழ்வார் அப்பருக்குப் பின் கி. பி. ஏழாம் நூற்றாண்டி லிருந்தவராதலும் தெற்றென விளங்கும்.

௧௧. சைவசமயச்சான்றோர், பொய்கையாழ்வார் கருத்தொருமை

இனிப், பொய்கையாழ்வார் தாம் அருளிச்செய்த ‘முதற் றிருவந்தாதி’யின் ஈற்றிற் “பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்” என்னுஞ் செய்யுளை அமைத்த படியை ஆராயும் வழி, அவரும் பார்ப்பனர் கட்டிவிட்ட புராண கதைகளினால் இடையிடையே பெரிதும் ஈர்ப்புண்டு நான்முகன் திருமால் உருத்திரன் எனக் கடவுளர் மூவர் உளரெனவும் அம் மூவருள்ளும் திருமாலே முதல்வரெனவுங் கொண்டு நெடுநாள் மயங்கி இடர்ப்பட்டனரேனும், பின்னர்த் தாம்செய்த நல்வினைப் பயத்தால் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளின் திருவுருவினைத் தாம் நேரே கட்புலனாற் காணும் பெறற்கரும் பேறு பெற்று, அத் திருவுரு

ஒருபாற் சிவந்த நிறத்தினையுடைய சிவவடிவாயும் மற்றொரு பால் நீலநிறத்தினையுடைய மால்வடிவாயும் இருக்கக்கண்டு, அதுவே இறைவற்கு உண்மை வடிவாமெனத் தெளிந்து, அச் செய்யுளை அந் நூலின் இறுதியில் முடிந்த முடிபாக வைத்து அருளிச் செய்தாராகல் வேண்டுமென்பது புலனாகா நிற்கும். திருக்கோவலூரில் ஓர் இடைகழியில் தாம் இறைவன் றிருவுருவினை நேரே கண்டமையினைப் பொய்கையாழ்வார் "நீயுந் திருமகளும் நின்றாயால்" என்று தாமே குறிப்பிட்டு அருளிச் செய்திருக்கின்றனராகலின், அது மறுக்கலாகா உண்மையே யாமென்க. அங்ஙனம் ஈருருவும் ஒருருவாய் நின்ற இறைவனை நேரே கண்ட துணிவினாற்றான் அவர் தாங்கண்ட அவ் வுருவின் ஒரு பக்கத்தின் பெயர் 'அரன்' மற்றொரு பக்கத்தின் பெயர் 'நாரணன்' ஆம் என்றும், ஒரு பக்கத்தின் ஊர்தி எருது மற்றொரு பக்கத்தின் ஊர்தி எருவையாம் என்றும், இருகூறும் உரைத்தநூல் 'மறை' யாகும் என்றும், அவ்விரண்டுள் ஒன்று அமர்ந்திருப்பது மலை மற்றொன் றமர்ந்திருப்பது கடல் ஆம் என்றும், ஒன்று காத்தற் றொழிலைச் செய்வது மற்றொன்று அழித்தற் றொழிலைச் செய்வதாம் என்றும், ஒன்றன் திருக்கையிலுள்ளது முத்தலைவேல் மற்றொன் றன் கையிலுள்ளது ஆழியாம் என்றும், ஒன்றன்நிறம் நெருப்பின் செந்நிறம் மற்றொன்றன் நிறம்நீலமாம் என்றும் தெளிவுற விளக்கி,

> "அரன்நா ரணன்நாமம் ஆன்விடைபுள் ஊர்தி
> உரைநூல் மறைஉறையுங் கோயில்—வரைநீர்
> கருமம் அழிப்புஅளிப்புக் கையதுவேல் நேமி
> உருவம்எரி கார்மேனி ஒன்று."[1]

என்று அருளிச் செய்தார். இங்ஙனமே பின்னும், அவர்,

> "ஏற்றான்புள் ளூர்ந்தான் எயில்எரித்தான் மார்பிடந்தான்
> நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
> மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
> கங்கையான் நீள்கழலான் காப்பு."

1. முதல் திருவந்தாதி, ரு.

என்று வற்புறுத்தருளிச் செய்தலுங் காண்க. இவ்வாறு முழுமுதற் கடவுளின் திருவுரு ஒருபாற் செம்மை நிறத்தினையுடைய சிவமாயும் மற்றொருபால் நீல நிறத்தினையுடைய திருமாலாயும் அமைந்து நிற்குமென்பது அவ்விறைவனுருவை நேரே ஒருகாலன்றிப் பலகாலுங் கண்ட திருஞானசம்பந்தப் பெருமான்,

"மாதொருபாலும் மால்ஒரு பாலும் மகிழ்கின்ற
நாதன்."
(திருப்பிரமபுரம், எய்யாவென்றி என்னும் பதிகம், உ)

என்றும்,

"ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறனார்." (திருத்தென் குடித்திட்டை, சு)

என்றும் அருளிச்செய்யுமாற்றானும் நன்குணரப்படும். இதனோடு ஒப்பவே திருநாவுக்கரசு அடிகளும்,

"குடமாடி இடமாகக் கொண்டான் கண்டாய்."
(திருக்கோடிகா)

என்றும்,

"அரியலாற் றேவியில்லை யையன் ஐயாற னார்க்கே."
(திருவையாறு)

என்றும்,

"பாகம் மாலை மகிழ்ந்தனர்." (திருவையாறு)

என்றும்,

"மால்ஒரு பாகமாக மகிழ்ந்தநெய்த் தானத்தாரே."
(திருநெய்த்தானம்)

என்றும்,

"மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார்போலும்."
(திருவிடைமருதூர்)

என்றும்,

"மாலை இடப்பாகத்தே மருவக் கொண்டார்." (பொது)

என்றும் பலகால் அருளிச்செய்திருத்தலும், பேயாழ்வார்,

" தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவுஞ் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து."

என்று அருளிச்செய்தமையுங் கருத்திற் பதிக்கற்பாலன வாகும்.

இவ்வாறே பண்டைத் தமிழ்ச் சான்றோரும், நீல மேனியினையுடைய அம்மையை இடப்பக்கத்தே ஒருகூற் றிற்கொண்ட சிவபிரானே முழுமுதற்கடவுளென தெளிய வுணர்ந்து வழிபட்டமை,

" நீலமேனி வாலிழை பாகத்
தொருவன திருதாள் நிழற்கீழ்
மூவகையுலகும் முகிழ்த்தன முறையே."[1]

என்பதனாலும்,

" ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்ன மேனி அவ்வான்
இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று
எரிஅகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே."[2]

என்பதனாலும்,

" பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்."[3]

என்பதனாலும், செவ்விதின் உணர்ந்துகொள்க.

---

1. ஐங்குறுநூறு, கடவுள் வாழ்த்து.
2. அகநானூறு, கடவுள் வாழ்த்து.
3. புறநானூறு, கடவுள் வாழ்த்து.

அற்றேல்,

"நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே."

என்று நாராயணர் பலர் உளரெனவும், அவரெல்லாம் பிறந்திறக்கு நீரரெனவுங் கூறிய சைவசமய ஆசிரியரே, பிறந்திறவா முதல்வனின் ஒருகூறு திருமால் என்று மொழிதல், முன்னொடுபின் முரணும் பிறவெனின்; அற்றன்று, இறைவனில் ஒருகூறாய் நிற்குந் திருமால் பிறப் பிறப்பு இல்லா உலகன்னையாம் முதல்வியே யல்லாமற் பல பிறவி யெடுத்துழலும் நாராயணர் அல்லர். இவ் வுண்மை,

"முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே."[1]

என்னும் பரிபாடற் பாட்டின் அடிகளானும் உணரப்படும். திருமாலின்மேற் பாடப்பட்ட பரிபாடற் பாட்டுகள், கிறித்து பிறப்பதற்கு இருநூறாண்டுகட்கு முன்னரே இயற்றப் பட்டனவாகும் என்பதற்கு, அப்பாட்டுக்களுள் யாண்டும் கண்ணனாவது இராமனாவது குறிப்பிடப்படாமையே சான்றாம். பிற்றைஞான்றை வைணவ சமயத்தாரால் திருமாலின் விழுமிய பிறப்பினராய்க் கொள்ளப்பட்டுப் பெரிது வணங்கப்படுங் கண்ணனும் இராமனும் அப்பாடல் களுட் சிறிதுங் குறிப்பிடப்படாமையை ஆராயுங்கால், அவ் விருவரைப்பற்றிய கதைகள் இத் தென்றமிழ்நாட்டிற் பரவுதற்கு முன்னரே திருமால் பிறப்பு இறப்பு இல்லா முதல்வராகப் பண்டைத் தமிழ்ச்சான்றோராற் பரவப்பட்டு வந்தமை புலனாம். வடக்கிருந்துவந்த ஆரியப்பார்ப்பனர் தாங்கொணர்ந்த 'மாபாரத' 'இராமாயணக்' கதைகளால் கண்ணன் இராமன் என்னும் இருவரையுந் தெய்வங்க ளாக்கி அவரைத் திருமாலோடு ஒன்றுபடுத்திய பின்னரே தான், அக் கண்ணன் இராமன் என்பார்க்குரிய பிறப்பு இறப்புக்கள் திருமாலுக்கும் உரியனவாக ஏற்றப்பட்டன.

1. பரிபாடல், ௩, எக-எஉ.

அதற்கு முன்னெல்லாம் தமிழ்ச்சான்றோர்கள் சிவபிரானை யுந் திருமாலையும் ஒன்றாகவே வைத்து வழிபட்டு வந்தார்கள்; 'சைவம்', 'வைணவம்' என்ற இருவகைச் சமயப் பகுப்பு அக்காலத்தில் இத் தமிழ்நாட்டின்கண் இருந்ததே இல்லை; கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பழைய செந்தமிழ்ப் பாட்டுக்களில் எங்குஞ் 'சைவம்', 'வைணவம்' என்னுஞ் சொற்கள் சிறிதுங் காணப்படா. வடக்கிருந்துவந்த ஆரியப்பார்ப்பனர், தமிழ் நன்மக்களுள் இருந்த ஒற்றுமையைக் குலைத்து, அவர் தம்மை வேறு பிரித்து, அவர் தமக்கெல்லாந் தாமே மேலாக நிற்றல் வேண்டியே, திருமாலை யுயர்த்திப் புராண கதைகளைப் படைத்து 'வைணவம்' என்னும் ஒரு மதத்தையும் தனியே யுண்டாக்கினர். மற்றை மக்களைப்போலவே பிறந்து பலவகைத் துன்பங்களில் உழன்று இறந்துபட்ட கண்ணன் இராமன் முதலாயினாரைத் 'திருமாலின் அவதாரங்கள்' எனப் புகன்று, அவர்களை அத் திருமாலினும் மிக்கவராக வைத்து வழிபடும் ஆரியரது புன்செயலைக் கண்டவளவானே, எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளைப் பிறப்பு இறப்புக்களிற் கிடந்து உழலும் மக்களுக்கு ஒப்பாகவைத்துச் சொல்லுதலிற் சிறிதுங் கருத்து உடன்படுதல் இல்லாத தமிழ்ச்சான்றோர்கள் தமது மேம்படுகொள்கை, புதிது தோன்றிய 'வைணவ' மதத்தின் முற்றும் வேறுதலைப் பொருள்ளெனப் புலப்படுத்தல் வேண்டியே தாம் முழுமுதற் கடவுளுக்குப் பெயராய் இட்டு வழங்கிய 'சிவம்' என்னும் பெயராற் 'சைவம்' என்னும் ஒருகுறியீட்டை யுண்டாக்கி அதனைத் தமது கோட்பாட்டிற்குப் பொருந்திய பெயராய்த் தாமும் வழங்கலாயினர். பண்டைத் தமிழ் மக்களால் ஒரே தெய்வமாக வைத்து வணங்கப்பட்டு வந்த 'அம்மையப்பரே' பின்னர் இருவேறு தெய்வங்களாகப் பிரிந்ததும், அவ்விரண்டுள் 'திருமால்' தமது பண்டை முழுமுதற்றன்மை யிழந்து கண்ணன் இராமன் என்பாரினுந் தாழ்ந்த நிலைமையை யடைந்ததும், அதனால் முன்னர் ஓர் இனத்தினராயிருந்த தமிழ்நன்மக்கள் பின்னர்ச் 'சைவர்', 'வைணவர்' என இருவேறு பகுப்பினராய்ப் பிரிந்து வேறு

பட்டதும் ஆகிய இவையெல்லாம், ஆரியப் பார்ப்பனரில் ஒரு கூட்டத்தார் கி. பி. முதல் நூற்றுண்டில் 'மாபாரதக் கதை'யினையும், மற்றொரு கூட்டத்தார் கி. பி. ஆறும் நூற்றுண்டில் 'இராமாயணக் கதை'யினையும் இத் தென்றமிழ் நாட்டிற்கொணர்ந்து அவைதம்மை மிகப் பரப்பிய காலம் முதல் முறையே நிகழ்ந்து வளர்ந்தனவாகும். கண்ணனி லும் திருமால் இழிந்தோராகத் தாழ்த்தப்பட்டமைக்கு நம்மாழ்வார்,

> " திருமால் நான்முகன் செஞ்சடையான் என்று இவர்களெம்
> பெருமான் தன்மையை யார் அறிகிற்பார்."[1]

என்று கூறுதலே சான்றும். வடக்கிருந்து வந்த ஆரியப் பார்ப்பனர் இந்திரன், வருணன், மித்திரன் முதலான சிறு தெய்வங்களுக்கு உயிர்க்கொலை வேள்விகள் வேட்டு அவரை வணங்கும் நீரரேயல்லாமல், முழுமுதற் கடவுளை யும் அதனை வழிபடும் அன்பின் முறைகளையும் ஒரு தினை யளவுதானும் அறிந்தவர் அல்லர். மக்களைத் தெய்வங்க ளாக வணங்குதலே அவ்வாரியர்க்கு மிக்க விருப்பத் தினையும் மகிழ்ச்சியினையுந் தருவதல்லது, முழுமுதற் கடவுள் வணக்கம் அவர்க்குச் சிறிதும் உவப்பினைத் தருவ தன்று; அதனல் அவர் அதனை எட்டிக்காயினுங் கைப்ப தாக நினைந்து இகழாநிற்பர். இப் பெற்றியினராகிய அவ் வாரியர் இத் தென்றமிழ் நாடு புகுந்ததும், தமிழ்ச் சான் ரேர் அறிவானும் நாகரிகத்தானும் தம்மினும் மிகச் சிறந் தோராய் விளங்கி முழுமுதற்கடவுளை அம்மையப்பராக வைத்து வணங்கும் விழுமிய முறையினைக் காண்டலும், பல சிறுதெய்வ வணக்கத்திலும் வெறியாட்டு வேள்வி யிலும் பழகிய தமதறிவுக்கு அஃது எட்டாமையால், தாம் புனைந்து கட்டிக்கொணர்ந்த மாபாரத இராமாயணக்கதை களின் உதவிகொண்டு உருக்கமான அக் கதைகளிற் சொல்லப்பட்ட கண்ணனையும் இராமனையும் உயர்பெருந் தெய்வங்களாக்கி, உயர்ந்த கல்வியறிவும் பகுத்துணர்ச்சி யும் இல்லாத் தமிழ்ப் பொதுமக்கள் அக் கதைகளை மெய்

---

1. திருவாய்மொழி, அ-ஆம் பத்து, ரு, க.

யென நம்பி மனங்கரைந்து அவ்விருவரையுமே திருமாலின் அவதாரமென மயங்கிக்கொண்டு வழிபடுமாறும், முழு முதற்கடவுளாகிய சிவபெருமானையும் அவனோடு இரண்டறக் கலந்துநிற்கும் அம்மையாகிய திருமாலையும் வணங்கும் வணக்கத்தைக் கைவிடுமாறும் செய்து விட்டனர். இதுகண்ட தமிழ்ச் சான்றோர்கள் எளிய கதைகள் எழுதும் முகத்தாற் 'சிவம்' என்பது பிறப்பு இறப்பு இல்லா முழுமுதற்கடவுளே யாதலைத் தாமும் தமிழ்ப்பொதுமக்கட்குத் தேற்றும்பொருட்டுச், சிவபெருமானுக்குச் சிறந்த அடியவர்களான அரசர்கள் செய்த ஆண்மைச் செயல்களைச் சிவபிரானே செய்தனவாகக் கதைகள் புனைந்து 'சைவபுராணம்,' 'கந்தபுராணம்' முதலிய பல புராணங்களையும் இயற்றி வழங்கவிட்டார்கள்; சிவபிரான் கோயில்களை நிறைய எடுப்பித்து, அவற்றின்கட் சிறந்த பல திருவிழாக்களும் நடைபெறுமாறு செய்தார்கள்; அக் கோயில்கள் அமைக்கும் முறைகளையும் அவற்றின்கண் வழிபாடு ஆற்றும் முறைகளையும் விரித்துப், பழைய நாளிலிருந்த தமிழ் ஆகம நூல்களின் பெயராற் 'காமிகம்,' 'வாதுளம்' முதலான நூல்களையும் வடமொழியில் எழுதிவைத்தார்கள். இவ்வளவும் தமிழ்ச் சான்றோர்கள் செய்து வைத்தமையினாலேதான், கண்ணனும் இராமனும் பெரிது வணங்கப்படும் இந்நாளிலுங்கூட முழுமுதற்கடவுளாகிய சிவபிரானை வணங்கும் வணக்கமும் இன்னும் இடையிடையே காணப்படுகின்றது. இங்ஙனம் அவர்கள் செய்துவையாவிட்டால் கண்ணன் இராமன் முதலியோரையும், ஏனைச் சிறுதெய்வங்களையும் வணங்கும் வணக்கமே இத் தென்றமிழ் நாட்டிலும் முழுதும் பரவி யிருக்கும்.

இங்ஙனமாகக் 'கந்தபுராணம்' முதலான சைவ புராணங்களை ஆன்றோர்கள் எழுதிவைத்தது, 'பாரதம்,' 'இராமாயணம்' முதலான கதைகளைக் கேட்டு மக்களைத் தெய்வமாக மயங்கி வழிபடும் பொதுமக்களை அத்தகைய கதைகளின் வாயிலாகவே மெல்லெனத் திருப்பி முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் வழிபாட்டில் நிறுத்திக்

கொள்ளும் பொருட்டுச் செய்த ஒரு சூழ்ச்சியேயாகும். இச் சைவபுராணங்களெல்லாம் இறைவனுடைய நுண்ணிய இயல்புகளை உணரமாட்டாத பருப்பொரு ளறிவினர்க்கு அவற்றைத் தெருட்டும்பொருட்டு அவைதம்மை உண்மையில் நிகழ்ந்த கதைகள்போல் வைத்து உணர்த்த எழுந்தனவாகும். எல்லாம்வல்ல இறைவனுயர்வைப் புலப்படுத்துதற்கு ஒரு கருவியாக எழுதப்பட்ட இச் சைவ புராணங்களே, உண்மையறிவில்லாரால் அவனது உயர்வைக் குறைக்குங் கருவியாகவுங் கொண்டுவந்து விடப் பட்டன. யாங்ஙனமெனிற் சிறிது காட்டுதும்:

உயிர்களைப் பொதிந்து வருத்தும் ஆணவம் மாயை வினை என்னும் மும்மலங்களும் இறைவனது அருள் நெருப்பால் எரிக்கப்படுதலையே, பொதுமக்கள் எளிதில் உணர்ந்துகொள்ளும் பொருட்டு, வானத்திற் பறந்து செல்லும் மூன்று தீய அரக்கர் தம் பட்டினங்கள் இறைவனது நெற்றிக்கண் நெருப்பால் எரிந்தனவாக வைத்து ஒரு புராணகதை எழுதப்பட்டது. இதுவே இக்கதையின் கருத்தாதல்,

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்,
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார்அறி வாரே"[1]

என்று திருமூலநாயனார் அருளிச்செய்தமையால் அறியப் படும். இவ்வுண்மைப் பொருளறியாத சைவரிற் பருப் பொருளறிவினர், சிவபிரானே தேவர் சமைத்த தேரின் மேல் அமர்ந்து அவ்வரக்கரின் அப்பட்டினங்கண்மேல் வில்லுங் கணையும் ஏந்திச்சென்று அவற்றை எரித்தான் என்று உரைப்பர்; அதுகேட்ட மற்றைச் சமயத்தார் 'எங்கும் நிறைந்த நும் கடவுள ஒரு தேர்மேல் ஏறி, ஓரிடத்திருந்து பிறிதோரிடத்திற்குச் செல்வது எப்படி? எவற்றையும் நினைந்த அளவிலே ஆக்கவும் அழிக்கவும்

1. திருமந்திரம், நஉக.

வல்லவன் நுங்கடவுளாயின் அவன் வில்லுங்கணையும் ஏந்தி அவ்வரக்கர்மேற் போர்புரியச் சென்றது எற்றுக்கு? மக்களைப்போல அவனுக்கு வில்லுங் கணையுந் தேருங்கூட வேண்டுமோ? அவ்வரக்கரின் அப்பட்டினங்கள் மூன்றும் பருப்பொருள்க ளாகையால் அவை நிலத்தின்மேல் இருக்கத்தக்கனவே யல்லாமல் வானத்திற் பறப்பது யாங்ஙனம்?" என்று இன்னோரன்ன கேள்விகளைக் கேட்ப ராயின், அவற்றிற்கெல்லாம் அச் சைவர் விடைகூற இயலாமல் விழிக்கின்றனர்.

இன்னும், எல்லா உலகங்களின் படைப்புக்கும் ஏதுவாயிருக்கின்ற புள்ளிவடிவினதாகிய விந்துவும் வரி வடிவினதாகிய நாதமுஞ் சேர்ந்த சேர்க்கையே ஓங்கார மாகும். இந்த ஓங்காரத்தில் விளங்கும் முதல்வன் படைப் புக்கு முந்திய தோற்றமுடையனாய், விந்துநாதச் சேர்க்கை யாற் பிறந்த முதலோசையில் முனைந்துநிற்பவனாகலின், அவன் விந்துநாதங்களை இயக்கிநிற்கும் அம்மையப்பருக்கு மூத்தபிள்ளை போல்வனாதலைத் தெரித்தற்கே, ஓகாரம் போன்ற முகவடிவினையுடைய யானையி னுருவினை மேற் கொண்டு அம்மையப்பர் சேர்ந்த சேர்க்கையினின்றும் யானைமுகக் கடவுள் தோன்றினா ரென்னும் ஒரு புராண கதை வரைந்துவைக்கப்பட்டது. இக் கதையின் உண்மை இதுவாதலை உணராத சைவரிற் சிற்றறிவினர், திருக் கைலாயத்தின் சுவரிலே வரைந்திருந்த யானையின் உரு வினைக்கண்டு சிவபிரான் காமங் காழ்ப்பேற அதுகண்ட பிராட்டி தான் பெட்டையானையின் வடிவினை எய்தலும், பெருமான் களிற்றியானையின் உருவுகொண்டு அதனொடு புணர்ந்தனனாக யானைமுகத்தினையுடைய மூத்தபிள்ளையார் தோன்றினார்; இந்நிகழ்ச்சி உண்மையேயாகுமென நம்பி உரை நிகழ்த்துவர். இவ்வுரையினைக் கேட்ட மற்றைச் சமயத்தவர் 'நுங்கடவுள் மக்கள் தேவரினும் இழிந்த யானை யின் உருவையெடுத்துப் புணர்ச்சிசெய்ய விழைந்த அத் துணை இழிந்த காமம் உடையரோ!' எனவும், 'தன் முகத்தை அழகிய தேவவடிமாகத் திருத்திக்கொள்ள

மாட்டாமல், மக்களினும் தாழ்ந்த யானையின் முகவடிவமாகவே அமர்ந்திருந்த பிள்ளையார், யானையினுஞ் சிறந்த மக்களைத் திருத்துவது எங்ஙனம்?'' எனவும் வினவி நகையாடா நிற்பர். இவ்வாறே முருகக்கடவுளின் பிறப்பைக் கூறுங் கதைகளும், அவர் சூரபன்மனோடு எதிர்த்துப் போராடினரெனக் கூறுங் கதைகளும், சிவபிரானையும் அம்மையையும் பற்றியெழுந்த ஏனைக் கதைகளும் எல்லாம் உண்மையில் நிகழ்ந்தன அல்ல; அக் கதைகளெல்லாம் சைவசித்தாந்த நுண்பொருள்களை யுள்ளடக்கிப் பருப்பொருளறிவினரைத் தெருட்டுதற் பொருட்டுப் புனைந்து வைக்கப்பட்டனவாகும். மாணிக்கவாசகப் பெருமானை யுள்ளிட்ட சைவசமய ஆசிரியன்மார் இன்னோரன்ன கதைகளைத் தழுவிச் சிவபிரானைப் பாடினமை, அக் கதைகளுட் கிடந்த நுண்பொருளை நோக்கியே யல்லாமல், அவை உண்மையில் நிகழ்ந்தவை என்னுங் கருத்துப் பற்றி யன்று. அந் நுண்பொருளெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகுமென அஞ்சி விடுத்தாம்.

இவ்வாறெல்லாம் சிவபுராண கதைகள் பெருகலானது, வடக்கேயிருந்து வந்த ஆரியப்பார்ப்பனர் பாரத இராமாயண கதைகளை இத் தென்றமிழ்நாட்டிற் கொணர்ந்து பரப்பிக், கண்ணனையும் இராமனையும் உயர் பெருந் தெய்வங்களாக்கப் புகுந்த காலந்தொட்டு நிகழ்ந்ததாகும். இக் கதைகள், தம்மை ஆக்கியோர் கருதிய பயனைத் தந்திலவாயினும், சிவபிரான் பிறப்பு இறப்பு இல்லாத் தனிமுதல்வனாய், ஏனையோர் வணங்குந் தெய்வங்கள் எல்லாவற்றிற்கும் மேலான முழுமுதற் கடவுளே யாவன் என்பதனை நாட்டுதலில் ஒருமுகப்பட்டு நிற்கின்றன. இப் புராண கதைகளுள் யாண்டும் சிவபிரான் ஒரு தாயின் கருப்பையுட் டங்கிப் பிறந்து வளர்ந்து இறந்தான் எனக் கூறப்படாமையே பெரிதுங் கருத்திற் பதிக்கற்பாலதாம் விழுமிய உண்மையாகும். சிவபிரானோடு இரண்டறக் கலந்துநிற்கும் அம்மையாகிய திருமாலும், அவனைப் போலவே பிறப்பு இறப்புத் தன்மைகள் சிறிதும் இல்லா

தவள் ஆவள். திருமால் பத்துப் பிறவிகள் எடுத்தன ரென்றலும், அப் பிறவிகளில் பல அல்லல்களுழந்து பின்னர் இறந்தனரென்றலும் போல்வனவாகிய கதைகளெல்லாம் வடக்கிருந்து வந்த ஆரியப்பார்ப்பனர் கட்டிவிட்டவைகளாகும். அக் கதைகளிற் கூறப்படுவோர், உண்மையிலே திருமாலின் அவதாரங்கள் அல்லர்; அவருட் சிலர் அறிவு ஆற்றல்களில் ஏனை மக்களைவிடச் சிறிது உயர்ந்தவரும், மற்றுஞ் சிலர் கதைபுனைந்த ஆரியக் குருமாரால் உள்ளவர்போல் வைத்துக் கட்டிச் சொல்லப்பட்டவரும் ஆவர்; இத்தகைய இவர்கட்கும் முழுமுதற் பொருளாகிய திருமாலுக்கும் ஏதொரு தொடர்பும் இல்லையென்பது கடைப்பிடிக்க.

அற்றேற், பண்டையோர் வணங்கிய திருமால் ஆண் வடிவினரேயாக அவரைப் பெண்பாலாக ஓதுதல் என்னையெனின்; உலகத்திலுள்ள ஆற்றல்களெல்லாம் வெப்ப தட்பங்கள் என்னும் இருவகை யியக்கங்களினும், அமைப்புகளெல்லாம் ஆண் பெண் என்னும் இருவகை வடிவுகளினும், வண்ணங்களெல்லாஞ் சிவப்பு நீலம் என்னும் இருவகை நிறங்களினும் அடங்குமாற்றை முன்னரே விளக்கிக் காட்டினும்.[1] அவ்வாற்றால் தீ வடிவு ஆண்டன்மையின் பாலதாய்ச் சிவந்த நிறத்தினதாதலும், நீர்வடிவு பெண்டன்மையின் பாலதாய் நீலநிறத்தினதாதலும், ஆண்டே விளங்கிக் கிடந்தன. ஆகவே, நீலநிறத்தினையுடைய திருமால் பெண்டன்மை வாய்ந்த தெய்வமேயாக வேண்டுமல்லாமல், ஆண் டெய்வமாதல் செல்லாது. 'நாராயணன்' என்னுஞ் சொல்லும் நீர்க்கடவுள் என்னும் பொருளையே தரக் காண்டலானும், நாராயணன் மோகினி யென்னும்[1] பெண் வடிவு கொண்டு சிவபிரானைக் கூடி ஐயனாரை ஈன்றனன் எனக் கூறும் புராண கதையின் கருத்துத் திருமாலைப் பெண் டெய்வமாகக் கொள்ளுதலையே நோக்கி நிற்றலானும், நாராயணன் ஆண் டெய்வமாயின் 'நாராயணி' என்னும் பெண்பாற் பெயர் அவற்கு மனைவியாகிய திரு

1. மாணிக்கவாசகர் வரலாறு, பக்கம், கூசு.

மகளை யுணர்த்த வேண்டுமாகவும் அஃது அங்ஙனம் அவளை யுணர்த்தாது சிவபிரான் காதலியாகிய அம்மை யையே யுணர்த்துதலானும், திருமால் தன் புதல்வனாகிய நான்முகனைத் திருமகள்பாற் பெற்றான் என உரையாது தானே தனது கொப்பூழினின்றுந் தோற்றுவித்தானென அவன்றன் சிறப்புக்களை விரிக்கும் புராணங்களெல்லாம் ஓதுதலானும் திருமால் பெண் டெய்வமேயாதல் திண்ண மென்க.

அற்றேற், பண்டை நல்லாசிரியர்கள் திருமாலை ஆண் வடிவாகவும் வைத்துரைத்தது என்னையெனின்; பழை தாகிய காலத்தே அனல்வடிவின னாகிய சிவபிரானைக் காணும் பேறு வாய்ந்த அடியார்கள் அப்ப னுருவினைத் தெளியக் கண்டாற் போல, அவனுள்ளடங்கிச் செவ்வனே புலப்படாது நீலநிறத்தின் அளவாய்த் தோன்றிய அம்மை யி னுருவினை அங்ஙனந் தெளியக் காணப்பெறாமையின் அந் நீலவுருவினையும் ஆண் வடிவின தாகவே கருதினாராதல் வேண்டும். இவ்வுண்மை தீக் கொழுந்தினை உற்று நோக்குமாற்றானும் நன்குணரலாம். பெருவிளக்கத்தோடுந் திகழும் தீக்கொழுந்தின்கட் செந்நிறத்ததாகிய அதன் வடிவு நமக்குச் செவ்வனே புலனாதல்போல, அத் தீக் கொழுந்தின்கண் அடங்கித்தோன்றும் நீரின் நீலவடிவு அத்துணை எளிதிற் புலனாகாமற் காணப்படுமாறும் ஆராய்ந்துணரற் பாற்று. எனவே, அப்பனது வடிவு ஒளியினைத் தருந் தீ வடிவிற்றாகலின் அதனைக் காணப் பெறும் அடியார் அவனது ஆண் டன்மையினை எளிதில் உணரப்பெறுவ ரென்பதூஉம், அப்பனுள் அடங்கி நிற்கும் அம்மையின் வடிவு நீர்வடிவிற்றாய்ச் சிறு நீலநிறத்ததாக லின் அவள் தானாகவே முனைத்துத் தோன்றித் தனது பெண்மை வடிவினைப் புலப்படுத்தினலல்லால் அவளது அவ்வடிவினை எளிதினுணர்தல் அடியார்க்கு ஏலாதா மென்பதூஉம் இனிது பெறப்படும்.

அப்பனுருவினைத் தெளியக் கண்டாற்போல, அம்மை யுருவினைத் தெளியக் காணப்பெறாது அதனையும் ஆண்

வடிவிற்றாகவே பிழைபட வைத்துப் பண்டையோர் வழி பாடு ஆற்றிவராநிற்ப, அவர்க்குப் பின் அவரினுந் தூய உள்ளுணர்வின் மிக்கோராய் வந்தோர் அப்பனோடு அம்மையும் முனைத்துத் தோன்றி அருள்செய்யப் பெற்ற பெறற்கருந் தவமுடையராகலின், அவர் நீலவுருவிற்றென்றியருள்புரிந்த தெய்வம் பெண்வடிவிற்றாம் உண்மையுணர்ந்து அதனை அவ்வடிவிற்றாகவே வைத்து வழுத்துதலும் பரவுதலுஞ் செய்வாராயினர். இவ்வாறு அத் தெய்வத்தின் உண்மையுணர்ந்த பின்னும், தமக்கு முன்னிருந்த பண்டையோர் அந் நீலவுருவினை ஆண் வடிவினதாக வைத்தது பிழையென அறிந்தாராயினும், அவ் வழிபாட்டில் உறைத்து நின்றார்க்கு மனப்புழுக்கம் உண்டாகாமைப் பொருட்டு அவர் கொண்டவாறே திருமாலைத் தாமும் ஆண்வடிவினராகக் கொண்டு, அங்ஙனங் கொள்ளினுந் திருமால் அம்மையின் வேறல்லாமையைப் புலப்படுத்துதற்கு அம்மை திருமாலின் தங்கையாவள் எனவும், இருவரும் நீலநிறத்தினரேயாவரெனவும் பகர்ந்து அவ் விருவரையும் ஒப்பவைத்துச் சிவபிரானோடுகூட்டி வணங்கி வரலாயினர். இவ்வுண்மை தெரித்தற் பொருட்டே திருஞானசம்பந்தப் பெருமானும்,

> "மாதொருபாலும் மால்ஒருபாலும் மகிழ்கின்ற
> நாதன்."

என்று அருளிச்செய்தமையினை முன்னும் எடுத்துக் காட்டினும்.

இனி, ஆண்வடிவினை உயர்வாகவும், பெண்வடிவினை இழிவாகவுந் தமது அறியாமையால் நினைக்கப் புக்க மாந்தர்களின் காலந்தொட்டுத், திருமாலை ஆண் வடிவில் வைத்து வழிபட்டு வந்தோர் பின்னர் அவரைப் பெண் வடிவினராகக் கோடற்கு மனம் ஒருப்படாராய்ச், சிவ பிராற்கு உமைப்பிராட்டி யிருத்தலோ டொப்பத், திருமாற்கும் ஒரு பிராட்டியைச் சேர்க்க விழைந்து 'திருமகள்' என்னும் ஒரு பெண் டெய்வத்தைப் புதிது படைத்து அவ

ரொடு பொருத்தி, அவ்வாற்றாற் சைவ சமயத்துக்கு எதிராக வைணவ சமயத்துக்கும் ஆண் பெண் வடிவின தாகிய ஒரு தெய்வத்தை நிலைநாட்டினர். இவ்வாறெல்லாம் பண்டைத் தமிழரின் ஒரே தெய்வக் கொள்கை இரு வேறு வகையினதாய்ப் பிரிந்து, வடக்கிருந்து வந்து குடியேறிய ஆரியரின் புராண கதைக் கலப்பால், நாளேற நாளேற ஒன்றற்கொன்று பெரிதும் மாறுபட்டுப் பகைமை யுடையனவாயின. அங்ஙனமாயினும், தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் கொண்ட ஒரு முழுமுதற் கொள்கையே தமிழ்மக்கட்கு உரியதொன்றாகலானும், அதுவே 'சைவசமயம்' என்னும் பெயராற் பிற்காலத்து வழங்கப் பட்டு வருதலானும், எச்சமயத்தார்க்கும் ஒரு முதல்வனே அவரவர் தகுதிக்கேற்ப அருள்புரிந்து வருகின்றனன் என்பது சைவசமயக் கோட்பாடாகலானும், இக் கோட்பாட்டினைக் கொண்ட தமிழ்ச் சைவர்கள் பிறசமயத் தெய்வங்களையும் பழியாமல் அவைகளையும் இன்றுகாறும் வணங்கிவரா நிற்கின்றார். நாகூர்த் துலுக்கர் கோவிலிலும், வேளாண்காணிக் கத்தோலிக் கிறித்துவர் மாதா கோவிலிலும், திருப்பதி, சீரங்கம், காஞ்சிபுரம் முதலான இடங்களிலுள்ள திருமால் கோவில்களிலுஞ் சென்று வணங்கும் பெருந்தொகையினர் சைவசமயத்தவராகவே யிருத்தலும், மற்றைச் சமயத் தெய்வங்களின் பெயரைச் சைவர்கள் தமக்கும் பெயராக வழங்கிக் கொள்ளுதல்போல ஏனைச் சமயத்தவர் அங்ஙனம் மற்றைச் சமயத் தெய்வங்களின் பெயரைத் தாமெடுத்து வழங்காதிருத்தலும் ஓர்ந்து நோக்குங்காற் சைவசமயத்தவர்கள் மட்டுமே ஒரு முழுமுதற் கடவுளை எங்கும் வணங்கி எச் சமயத்துமாட்டும் பகை பாராட்டாத இயற்கை யுடையவரென்பது நன்கு புலனும். ஆரியரது கலப்பு நேர்தற்குமுன் பிறப்பு இறப்பு இல்லா முழுமுதற்கடவுளை அகக்கண் புறக்கண் இரண்டும் ஒத்துக்கண்டு வழிபட்ட தமிழ்ச் சான்றோர்கள், அஃது ஒருபாற் "சிவன் எனும் நாமந் தனக்கே யுரிய செம்மேனி எம்மானு"ம், மற்றொருபால் "மணிதிகழ் உருவின் மாயோன்" அல்லது "நீலமேனி வாலிழை"யாயும் நிற்கும்

உண்மை யியல்பினைத் தெளியவுணர்ந்து அதனையே வழுத்துதலும் பரவுதலுஞ் செய்துபோந்தனர். ஆரியக் கலப்பு நேர்ந்த பிற்காலத்திலும் இறைவனது திருவருட் பேரொளி நிரம்பப்பெற்ற மாணிக்கவாசகப் பெருமான், திருமூலநாயனர், திருஞானசம்பந்தப் பிள்ளையார் முதலான சைவசமய ஆசிரியர்களும் முழுமுதற்கடவுளை நேரே காணுந் தவத்திருவுடையராய் அதனைப் பிறப்பு இறப் பில்லா அம்மையப்பராகவே வைத்துப் பரசினர். திரு ஞானசம்பந்தப் பிள்ளையாரை அடுத்துத் தோன்றிய பொய்கை பேய் என்னும் ஆழ்வார் இருவரும் சிலகாலமெல் லாம் ஆரியப்பார்ப்பனர் கட்டிவிட்ட புராண கதைகளில் மயங்கி யிடர்ப்பட்டனராயினும், தமக்கு இறைவன் திருவரு ளுருவைக் காணும் பெரும்பேறு வாய்த்தபின் "இரண்டுரு வும் ஒன்றாய் இசைந்த" அம் முழுமுதற் கடவுளையே வணங்கி வாழ்த்தினர். மற்று, நம்மாழ்வாரோ இறைவ னுருவை நேரே காணப்பெறாமையின் தம் வாழ்நாள் எல்லையளவும் புராணகதைகளுட் போந்த மூவரையே தெய்வமென நம்பி இடர்ப்பட்டுப், பாடித், திருஞானசம் பந்தப்பெருமானுக்கு அருள்செய்த தெய்வம் முழுமுதற் கடவுளா யன்றிப் பிறிதாதல் செல்லாதென்னும் அச்சத் தால் "அரனை அலற்றி வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்" என முடிவிற் கூறி ஆறுதல் எய்தினர். உண்மையிலே தெய்வத்தன்மையுடைய பொய்கையாழ்வார் பேயாழ்வா ருக்குத் தெய்வத்தன்மை உரையாமல், தெய்வத் தன்மை யுங் கடவுளுணர்ச்சியுஞ் சிறிதும் இலரான நம்மாழ்வாரைப், பின்னுள்ளோர் கட்டிவிட்ட கதையின்கண் ஆராயாமற் சிக்குண்டு, தெய்வத்தன்மை யுடையரெனக் கிளந்த போலி யுரையினளவில் அமையாது, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளால் நேரே அருள்செய்யப்பெற்ற தெய்வத் திரு வாளரான மாணிக்கவாசகப்பெருமானிலும் அவர் சிறந்தா ரெனப் புரையுரை நிகழ்த்திய 'தமிழ்வரலாறுடையாரது' கூற்றினும் பெரியதோர் அறியாமையுடையது பிறிதுண்டு கொல்!

கஎ. நாச்சியார் பெரியாழ்வார் முதலியவர்களைப்பற்றிய ஆராய்ச்சி

இனிச், 'சூடிக்கொடுத்த நாச்சியா'ரும் பிறந்தநாட்டொட்டே ஓதாதுணர்ந்தவரெனக்கொண்டு, அவ் வம்மையாரும் 'திருவாசகத்'தைப் பார்த்துக் 'குயிற்பத்து' முதலியன பாடினாரென்றல் அமையாது, மற்று அவ் வம்மையார் கண்ணபிரான்மேற் பாடிய 'குயிற்பத்தை'ப் பார்த்தே மாணிக்கவாசகர் 'குயிற்பத்து' முதலியன பாடியிருத்தல் வேண்டுமென்பதுபடத் 'தமிழ் வரலாறுடையார்' கூறுவதுஞ் சிறிது ஆராயற்பாற்று. சூடிக்கொடுத்த நாச்சியார் தெய்வத்தன்மை யுடையரென இவர் எதனைக்கொண்டு துணிந்தாரென்பது இவரது உரையின்கட் காணப்படவில்லை; ஒரு பூந்தோட்டத்தில் மண்ணைக் கிளறுகையில் நிலத்தின்கண் இருந்து பெரியாழ்வார் என்பவராற் கண்டெடுத்து வளர்க்கப்பட்டார் இவ் வம்மையார் என்று பின்னுள்ள வைணவப் புலவர் எழுதிவைத்திருக்குங் கதையை மெய்யென நம்பியே 'தமிழ் வரலாறுடையார்' இவரைத் தெய்வத்தன்மை யுடையராகக் கருதினாராதல் வேண்டும். எத்துணைச் சிறந்த பெரியாரும் மக்கள் யாக்கை எடுக்கும்பொழுது, இறைவன் வகுத்த நெறிப்படியே தாய் தந்தையர் சேர்க்கையாற் றாயின் கருப்பையிற் புகுந்து ஊனுடம்பு திருந்திப் பின் நிலத்திற் பிறக்கின்றனர். வைணவர் தாம் தெய்வமாக வழிபடுங் கண்ணனும் இராமனுங்கூட அந் நெறிப்படியே தேவகி கோசலை என்னும் மாதர்களின் கருப்பையிற் றங்கியே பிறந்தனர். அவ்வாறிருக்கச் சூடிக்கொடுத்த நாச்சியார்மட்டும் நிலத்தின் கீழிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டாரென்றல் எத்துணைப் பொய்யான உரை! கருப்பையிற் பிறத்தல் குற்றமாமென அங்ஙனம் பிறந்தனராயிற், குற்றமாக அவ்வாறு பிறந்த கண்ணன் இராமன் என்பாரினும் அவ்வம்மையார் உயர்ந்தாராகல் வேண்டுமன்றோ? அங்ஙனம் அவரினும் உயர்ந்தவராயின் அவர் கண்ணன் இராமன்மேற் கனிவு

கொண்டு பாடியதென்னை? இவர் முழுமுதற் கடவுளியல் பினை யுணர்ந்து எங்காயினும் பாடியிருக்கின்றனரோ வெனின் அதுவுமில்லை. அங்ஙனமிருக்க இவரைத் தெய்வத்தன்மையுடைய ரென்றுகோடல் எவ்வகைச் சான்று பற்றி? இம் மாநிலத்து மக்களுள் ஒருவனாய்ப் பிறந்த கண்ணனையே உயர்பெருந் தெய்வமாகக் கருதி இவர் பாடியிருக்கின்றனரேயல்லாமல், பிறப்பு இறப்புக்களில்லாத் திருமாலைப் பாடவில்லையே. கண்ணனையும், அக் கண்ணனுக்கு முதல்வரான திருமாலையுங்கூட வணங்காமல், எல்லாம்வல்ல சிவபிரானையே முழுமுதற் கடவுளாக வழிபட்டு, அப்பிரானால் நேரே அருள்செய்யப்பெற்ற மாணிக்கவாசகப் பெருமான் இச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்னும் ஆண்டாளின் பாடல்களைப் பார்த்துப் பாடினாரென்னும் 'தமிழ் வரலாறுடையாரது' பிறழ்ச்சியுரையினும் மிக்கதொரு பிறழ்ச்சியுரை பிறிதில்லை.

இனிக், கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தமிழ் நூல்களிற் காணப்படாத 'நந்தகோபன் குமரன்,' 'கிரிசைகள்,' 'பற்பநாபன்,' 'செகுடு' (செவிடு), 'கும்பகரணன்,' 'குள்ளக்குளிர,' 'மருகள்,' 'பஞ்சசயனம்,' 'அபிமாநபங்கம்,' 'காரியம்,' 'அருத்தித்து,' 'பாஞ்சசன்னியம்,' 'சம்மானம்,' 'சங்கற்பித்து,' 'சிரமப்பட்டோம்,' 'உரோடம்' (ரோஷம்), 'மசுமை,' 'இருடீகேசன்,' 'சிரீதரன்,' 'சரற்கால சந்திரன்,' 'மதுசூதன்,' 'அன்னவசம்,' 'இந்திரகோபம்,' 'கண்ணாலம்' (கல்யாணம்), 'சிசுபாலன்,' 'இங்குத்தை,' 'கோவர்த்தநன்,' 'விநதைசிறுவன்,' 'தேநுகன்,' 'விருந்தாவனம்' முதலான வடசொற்கள் சொற்றொடர்களுங் கொச்சைத் தமிழ்ச்சொற்களும் ஆண்டாளின் பாடல்களிற் காணப்படுதலானும், 'காப்புநாண் கட்டல்,' 'பொரிமுகந்து அட்டல்' முதலாகப் பிற்காலத்து நடைபெறுந் திருமணச் சடங்குகளை ஆண்டாள் ஒன்றன்பின் ஒன்றாய் முறையாகக் கூறுமாறுபோலப் பழைய தமிழ் நூல்கள் வேறெவையுங் கூறக் காணாமையானும், இத்தகைய பின்றைச் சொல்வழக்குகளும் பொருள் வழக்கு

களும் ஒரு சிறிதாயினும் மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த 'திருவாசகந் திருக்கோவையாரின்கட்' காணப்படாமல் அவற்றின்கட் காணப்படுவனவெல்லாம் பழைய சொல்வழக்குகளும் பொருள் வழக்குகளுமாகவே இருப்பக் காண்டலானும் சூடிக்கொடுத்த நாச்சியார் இயற்றிய பாட்டுகள் கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதா மென்றலும், அவற்றைப் பார்த்து மாணிக்க வாசகப் பெருமான் 'திருவாசகம்' பாடினா ரென்றலும் தினைத்துணையும் பொருந்தா. சூடிக்கொடுத்த நாச்சியாருடைய செய்யுட்களிற்போலவே, அவர்தம் தந்தையாரான பெரியாழ்வார் இயற்றிய செய்யுட்களிலும் பின்றைக்காலக் கொச்சைத் தமிழ்ச்சொற்கள் சொற்றொடர்களும் வடசொற்கள் சொற்றொடர்களும் இடையிடையே விரவிக்கிடத்தலின் அவ்விருவரும் அவை விரவத்துவங்கிய கி. பி. பத்தாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்தவராதல் திண்ணமாம்.[1] ஆழ்வார்கள் காலங்களை நடுநின்று நன்காராய்ந்த திருச் சீநிவாச ஐயங்காரவர்களும் பெரியாழ்வாரது காலம் கி. பி. அசo-க்கும் கூகரு-க்கும் இடைப்பட்டதாதல் வேண்டுமெனவே யுரைத்தல் காண்க.[2]

இனித், தொண்டரடிப்பொடியாழ்வார் பாடிய 'திருப்பள்ளியெழுச்சி'யைப் பார்த்தே மாணிக்கவாசகர் 'திருப்பள்ளியெழுச்சி' பாடினாராதல் வேண்டுமென்பதுபடக் கிளந்த 'தமிழ் வரலாறுடையா'ரது கூற்றுஞ் சிறிது ஆராயறபாற்று. தொண்டரடிப் பொடியாழ்வார் 'திருப்பள்ளியெழுச்சி' பாடிய பின்றைக் காலத்திற் புராணகதைகளும், அவற்றிற் சொல்லப்பட்ட தேவர்கள் முனிவர்களின் பெயர்களும் இத் தென்றமிழ்நாட்டில் மிகுந்து பரவலாயின வென்பதூஉம், மாணிக்கவாசகப் பெருமான் 'திருப்பள்ளியெழுச்சி' அருளிச்செய்த பண்டைநாளில்

1. "His style is modern and contains large admixture of colloquial and provincial words and many Sanscrit *tadbavas.*" Mr. M. Srinivasa Aiyangar's Tamil Studies' p. 321.

2. Ibid. 323.

அவை அத்துணை மிகுதியாய் இங்கே பரவவில்லை யென்ப தூஉம் அவ்விரண்டனையும் நடுவுநின்று ஒப்பிட்டு நோக்கும் அறிஞரெவருந் நன்குணர்ந்துகொள்வர். ஈண்டும் அவ் வியல்பினைச் சிறிது ஒப்பிட்டுக் காட்டுதும். தொண்ட ரடிப்பொடியாழ்வார் இயற்றிய திருப்பள்ளியெழுச்சியில்,

"வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா
எம்பெரு மான்படி மக்கலங் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ
தோன்றினன் இரவியுந் துலங்கொளி பரப்பி
அம்பர தலத்திநின் றகல்கின்ற திருள்போய்
அரங்கத்தம் மாபள்ளி எழுந்தரு ளாயே."

என்றும்,

"ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமிக்
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தரு வரவர் கங்குலுள் எல்லாம்
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்
ஆதலி லவர்க்குநா ளோலக்கம் அருள
அரங்கத்தம் மாபள்ளி எழுந்தரு ளாயே."

என்றும் போந்த செய்யுட்களையும், இவற்றின் கருத்தோடு ஒருபுடையொத்த,

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே."

"பூதங்கடோ றும்நின் றாயெனின் அல்லாற்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லாற்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே."

என்னுந் திருவாசகச் செய்யுட்களையும் ஒப்பிட்டு நோக்குக. தொண்டரடிப்பொடியாழ்வா ருடைய செய்யுட்களில், 'தும்புரு நாரதர்,' கின்னரர்,' 'கெருடர்,' 'கந்தருவர்,' 'சாரணர்,' 'இயக்கர்,' 'சித்தர்' முதலிய வடமொழித் தேவர் முனிவர் பெயர்கள் ஒரு தொடர்ப்படக் கூறப்படுதல் போலத் 'திருவாசகத்'தும் அதற்கு முந்திய தமிழ்நூல் களிலுங் கூறப்படாமை காண்க. 'நாரதர்' என்னும் முனிவர் பெயர் 'சிலப்பதிகாரத்'திற் காணப்படினுந் 'தும்புரு' என அடையடுத்த அப் பெயரும், 'கின்னரர்' என்னும் பெயரும் பழைய நூல்களுள்ளுந் திருவாசகத்துங் காணப்படா. சாரணர், இயக்கர், சித்தர் முதலான ஏனைப் பெயர்கள் சிலப்பதிகாரம் முதலியவற்றுள் அருகி ஒரோ விடங்களிற் காணப்படினும், இவ்வாழ்வார்தம் பாட்டுக் களினும் ஏனைப் பிற்காலத்தார் பாட்டுக்களினுங் காணப் படுமாறுபோல, அவை அங்ஙனம் பெருவரவினவாய் அவற்றின்கண் ஒரு சேரக் காணப்படா. மேலும், விடியற் காலையிற் கோயிற்கதவந் தாழ்நீக்கித் திறக்கும்பொழுது புகர்நிறமுள்ள ஆவினையுங் கண்ணாடியினையுந் திருமாலுரு வத்தின் எதிரே கொண்டு செல்லும் பிற்காலத்து வழக்கம் மேலெடுத்துக் காட்டிய இவ்வாழ்வாரது முதற்பாட்டிற் சொல்லப்பட்டாற்போற் பழைய நூல்களில் எங்குங் காணப் படுகின்றிலது. இவ்வாழ்வார் 'திருப்பள்ளியெழுச்சி' நான் காஞ்செய்யுளில் "மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதம், ஆட்டிய அடுதிறல் அயோத்தி எம்மரசே" என்று பாடி யிருக்கின்றார்; இதன்கண் ஓசைமுழக்கம் உடைய 'அவபி

ரதம்' என்னும் வடசொல்லும், அச் சொல்லாற் குறிக்கப் படும் 'வேள்விமுடிவிற் செய்யும் நீராட்டும்' இவ்வாழ்வார் இருந்த காலத்திற் புகுந்தனவேயல்லாமல் இவர்க்கு முற் பட்ட சைவவைணவத் தமிழ்நூல்களிற் காணப்படா. இன்னும் இவர் "காம்பறத்தலை சிரைத்தலைத்"[1] தமது 'திருமாலை'யுட் கூறுகின்றார். தமிழ்நாட்டில் மயிர்முடி களைதல் முன்னரே யுண்டேனும், அதனைச் 'சிரைத்தல்' என்னுஞ் சொல்லாற் கூறல் பிற்காலத்து வழக்கேயாம். அதுவேயுமன்றி, 'அச்சுதன்,' 'பிராயம்,' 'மனிசர்,' 'கத்திர பந்து,' கெருடவாகனன்,' 'முற்கலன்,' 'ஊனகாரகர்,' 'மருதர்,' 'வசுக்கள்,' 'குமரதண்டம்' முதலான பிற்காலத் துப் புகுந்த வடசொற்களையுந் தம்முடைய செய்யுட்களில் இடையிடையே விரவவைத்தனர். இன்னோரன்ன சொற் களுஞ் சொற்றொடர்களுந் 'தேவார திருவாசகங்'களி னுதல், பொய்கை பேய் பூதம் என்னும் முதலாழ்வார் பாடல்களினுதல் காணப்படாமையின், தொண்டரடிப் பொடியாழ்வார் தேவார திருவாசக காலத்திற்கு மிகவும் பிற்பட்டவராதலை நுணுகிய தமிழ் நூலாராய்ச்சி வல்லார் எளிதிற் கண்டுகொள்வர். மேலும், இவ்வாழ்வார் திரு மாலைப் 'பித்தன்'[2] என்று ஓரிடத்துக் கூறினர். சிவபிரா னைப் 'பித்தன்' என்று நுவலுதற்கேற்ற அருள்விளை யாட்டுகள் அவன் உடைமைபற்றிச் சைவசமய ஆசிரியர் களை அப் பெருமானைப் 'பித்தன்' என்று அடுத்தடுத் தழைத்துப் பாடாநிற்பர். 'பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே" என்னுந் திருவாசகத் திருப்பாட்டும், "பித்தாபிறைசூடீ" என்னுஞ் சுந்தரமூர்த்தி நாயனர் திருப்பாட்டும் பிறவுமே அதற்குச் சான்றாம். முதலாழ்வார்களுள் எவரும் திருமாலை அங்ஙனம் 'பித்தன்' என்றுரைப்பக் கண்டிலம். சிவபிரானுக்குப் 'பித்தன்' என்னும் பெயர் மிகப் பரவி வழங்கலானது சுந்தரமூர்த்தி நாயனர் காலந்தொட்டேயாம். ஆகலான், அச் சொல் லைத் தாம் வணங்கிய திருமாலுக்கும் சைவசமய ஆசிரியர்

1. திருமாலை, கஅ. 2. திருமாலை, ச.

போற் கூற விழைந்தே அவர்கட்குப் பின்னிருந்த இவ்வாழ்வார் அதனைத் தமது பாட்டில் இயைத்தாரென்பது இவ்வாராய்ச்சி வல்லார்க்கு நன்கு விளங்காநிற்கும். அது வல்லாமலும், இவ்வாழ்வார் திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்களையும் நன்கு பயின்று அவற்றைப்போற் பாட விழைந்தமை,

"வென்றிலேன் புலன்கள் ஐந்தும்
வென்றவர் வளாகந் தன்னுட்
சென்றிலேன் ஆத லாலே
செந்நெறி யதற்குஞ் சேயேன்
நின்றுளே துளும்பு கின்றேன்
நீசனேன் ஈச னேயோ
இன்றுளேன் நாளை யில்லேன்
என்செய்வான் தோன்றி னேனே."[1]

என்னுந் திருநாவுக்கரசு நாயனார் திருநேரிசையோ டொப்ப இவ்வாழ்வார்,

"போதெல்லாம் போது கொண்டுன்
பொன்னடி புனைய மாட்டேன்
தீதிலா மொழிகள் கொண்டுன்
திருக்குணம் செப்ப மாட்டேன்
காதலால் நெஞ்சம் அன்பு
கலந்திலேன் அதுதன் னாலே
ஏதிலேன் அரங்கர்க் கல்லேன்
என்செய்வான் தோன்றி னேனே."

என்று பாடிய பாடலால் இனிது விளங்கும். இவ்வாழ்வார் சிவபிரானை யாண்டும் இகழ்ந்து பேசாமையானும்,

"புலையற மாகிநின்ற புத்தொடு சமணம் எல்லாங்
கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்ப ரோதாம்."

என்று இவர் புத்தர் சமணரைப் பழித்துப் பேசியவாறு போலச் சைவசமயத்தவரைப் பழித்துப் பேசாமையானும்,

1. பொது.

சைவசமய உயர்வும் சைவசமயாசிரியரது தெய்வத் தன்மையும் மிக்கு விளங்கிய காலத்தை ஒட்டி இவ் வாழ்வார் இருந்தவராதல் வேண்டுமென்பது பெறப்படும். எனவே, கி. பி. எட்டாம் நூற்றுண்டின் இறுதியில் அல்லது ஒன்பதாம் நூற்றுண்டின் துவக்கத்திலிருந்த சுந்தரமூர்த்தி நாயனுர்க்குப் பின்னே, அஃதாவது பத்தாம் நூற்றுண்டின் துவக்கத்தே தொண்டரடிப் பொடியாழ்வார் இருந்தமை தேற்றமாம். ஆகவே, திருவாசக காலத்திற்கும் தேவார காலத்திற்கும் பிற்பட்டவராகிய இவ் வாழ்வாரே திருவாசகத்திற் போந்த 'திருப்பள்ளியெழுச்சி'யைப் பார்த்துத் தாமும் திருவரங்கப் பெருமாள்மேல் ஒரு திருப்பள்ளியெழுச்சி பாடினுரேயல்லாமல், இவரைப் பார்த்து மாணிக்க வாசகர் பாடினுரல்லரென்பது கடைப்பிடிக்க.

இனித், திருமங்கை யாழ்வாருடைய செய்யுட்களும் பிற்காலத்துக் கோயிற் குறிப்புகள் சொற்கள் கதைகள் விரவப் பெற்றனவாயிருத்தலானும், தேவார திருவாசகங்களின் அமைப்பையே பெரிதொட்டிச் செய்யப்பட்டனவாயிருத்தலானும், அவற்றுள்ளுஞ் சுந்தரமூர்த்தி நாயனுர் தம் திருப்பதிக இசைகளோடொப்ப அமைக்கப்பட்டன பலவாயிருத்தலானும், முதலாழ்வார் மூவர்போலாது திருமங்கை யாழ்வார்தம் பாக்கள் சிவபிரானைப் பலகாலும் இழித்துப் பாடுதலானும் இவர் தம் பாக்களும் இவரும் சைவ சமயாசிரியர் எல்லார்க்கும் பின்னே, அஃதாவது சுந்தரமூர்த்தி நாயனுரது காலத்துக்கு ஒரு நூற்றுண்டிற்குப் பின்னே, வைணவ சமயம் சைவ சமயத்திற்கு முற்றும் மாருய் விலகிக் கிளர்ச்சி பெற்ற கி. பி. பத்தாம் நூற்றுண்டின் முற்பகுதியி லிருந்தமை தேற்றமாம். யாங்ஙனமெனிற் காட்டுதும்: முதலாழ்வார் பாடல்களில் வடநாட்டுத் திருமால் கோயில்களுள் எதுவுங் கூறப்படாதிருக்கத், திருமங்கையாழ்வார் பாடல்களிலோ 'பிரிதி,' 'வதரி,' 'வதரியாச்சிரமம்,' 'சாளக்கிராமம்,' 'நைமிசாரணியம்' முதலான வடநாட்டுத் திருமால் கோயில்களும் பெரிதெடுத்துப் பாடப்பட்டிருக்கின்றன. தென்னுட்டுத் திருமால் கோயில்

களும் இவ் வாழ்வார் பாடல்களிலும் சடகோப ஆழ்வார் பாடல்களிலும் மிகுதியாய்க் காணப்படுமாறுபோல் ஏனை யாழ்வார்தம் பாடல்களிற் காணப்படுகின்றில. இதனால், இவ் வாழ்வார் இருவர் காலத்திலும் வைணவமதம் பெரி தும் கிளர்ச்சிபெற்று நின்றமையும், திருமால் கோயில்கள் ஆங்காங்குப் பெருகிவிட்டமையும் இனிது புலனும். முத லாழ்வார் பாடல்களிற் குறிப்பிடப்பட்ட திருமால் கோயில் கள் 'திருவேங்கடம்,' 'திருக்கடிகை,' 'திருவிண்ணகர்,' 'திருவெஃகா,' 'திருக்கோவலூர்,' 'திருவரங்கம்,' 'திருத் தண்கால்,' 'திருக்கோட்டியூர்,' 'திருமாலிருஞ்சோலைமலை,' 'திருத்தஞ்சை,' 'திருமலை,' 'திருக்குடந்தை,' 'திருப் பாடகம்,' 'அத்தியூர்,' 'திருவல்லிக்கேணி,' 'திருநீர்மலை,' 'திருக்கச்சி,' திருவேளுக்கை,' 'திருவனந்தை,' 'அட்டபுய கரம்' முதலியவைகளே யாம். இவ் விருபதுக்கு மேற் பட்ட திருமால்கோயில் வேறேதும் முதலாழ்வார் மூவர் பாடல்களிற் காணப்படுதலின்று. மற்றுத் திருமங்கை யாழ்வார் பாடல்களிலோ இவ் விருபதில் பத்தொன்பதும் இவற்றிற்கு மேல் இன்னும் அறுபத்தாறு திருமால் கோயில்களுங் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அற்றன்று, முதலாழ்வார் பாட்டுக்களில் திருமால் கோயில்கள் எல் லாம் எடுத்துரைக்கப்படாமை பற்றி, அவை அக்காலத்து மிகுதியாய் இல்லையென்றல் யாங்ஙனம்? முதலாழ்வார் மூவரும் தொண்டை நாட்டவர்களாதலின், அவர் ஆந் நாட்டைவிட்டுச் சோழநாடு பாண்டிநாடு சேரநாடுகளுக்குச் சென்றிலர், அதனால் அவர்கள் ஆங்காங்குள்ள திருமால் கோயில்களைப் பாடிற்றிலரென்னுமோ வெனின்; என்னும், சோழநாட்டின்கண் உள்ள 'திருக்குடந்தை,' 'திருவரங்கம்,' 'தஞ்சை' என்பன பூதம் பேயாழ்வார் பாடல்களிலும், பாண்டி நாட்டின்கண் ணுள்ள 'திருமாலிருஞ் சோலைமலை,' 'திருக்கோட்டியூர்,' 'திருத்தண்காலூர்' என்பனவும், சேர நாட்டின்கண் உள்ள 'திருவனந்தை' என்பதும் அங்ஙனமே அவ் விருவர்தம் பாக்களிலும் பாடப்பட் டிருத்தலின் அவர்களுட் பூதத்தாழ்வார் பேயாழ்வார் இருவரும் தொண்டை நாட்டிற்குப் புறம்பே சென்றிலரென்றல்

பொருந்தாது. அங்ஙன மன்று, அவர்கள் தொண்டை நாட்டில் இருந்தபடியாகவே ஏனை நாடுகளிலுள்ள அத் திருக்கோயில்களையும் பாடினார்களெனக் கொள்ளாமோ வெனின்; அற்றேல், அந் நாடுகளிலுள்ள ஏனைப் பெரும் பாலனவற்றை விட்டு அவற்றுட் சிலவற்றை மட்டுமே அவர்களுள் இருவர் பாடியதும் ஏனைப் பொய்கையார் அச் சில தாமும் பாடாமையும் என்னையென்பார்க்கு விடை கூறுதல் ஆகாமையானும், அவர்கள் பாடிய அச் சில திருக்கோயில்களைத் தவிர வேறுபல இருந்தனவென்ப தற்கு வேறொரு சான்றும் இல்லாமையானும், முதலாழ் வார் மூவர்காலத்தும் இருந்த திருமால் திருக்கோயில்கள் அவர்களுடைய பாக்களிற் குறிப்பிடப்பட்ட அச் சிலவே தவிரப் பிற இருந்திலவென்பது தேற்றமாம் என்க.

மற்று, மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த 'திருவாசகம்,' 'திருக்கோவையா'ரிற் குறிப்பிடப்பட்ட சிவ பிரான் திருக்கோயிலுள்ள திருப்பதிகள் ஐம்பத்து நான்கு; அப்பர் திருஞானசம்பந்தர் சுந்தரர் என்னும் மூவரும் அருளிச்செய்த தேவாரங்களிற் குறிப்பிடப்பட்ட சிவபிரான் திருக்கோயிற் பதிகள் இருநூற்று எழுபத்து நான்கு. ஆகவே, மாணிக்கவாசகப் பெருமான் வயங்கிய கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலேயே இத் தமிழ்நாடெங்கணும் சிவ பிரான் திருக்கோயில்களே மிகுந்திருந்தமையும், கி. பி. ஆறு, ஏழு, எட்டாம் நூற்றாண்டில் திகழ்ந்த அப்பர் சம்பந்தர் சுந்தரர் என்னும் ஆசிரியர் காலங்களில் இன்னும் மிகுதியாய் அவை பெருகியிருந்தமையும் நன்கு துணியப் படும். சுந்தரமூர்த்தி நாயனார் காலம் வரையில், திருமாலும் சிவபிரானோடு சேர்த்துச் சைவர்களாலேயே வழிபாடு செய்யப்பட்டு வந்தமையின், திருமாலுக்கென்று வேறு தனிக்கோயில்கள கட்டப்படாமற், சிவபிரான் திருக்கோயில் களினுள்ளேயே திருமாலின் திருவுருவமும் வைத்து வழி பாடு செய்யப்பட்டு வந்தது. பின்னர்ச் சிவபிரானை விட்டுத் திருமாலை மட்டும் வழிபடுவார் தொகை பெருகப்பெருகத், திருமாலுக் கென்றே தனிக் கோயில்களும் அமைக்கப்பட்டு

அவற்றின் தொகையும் பெருகலாயிற்று. பழைய காலத்தில் அமைக்கப்பட்ட திருமால் கோயில்களில் திருமாலின் திருவுருவோடு சிவபிரான் திருவுருவும் ஒருங்கு வைத்து வழிபாடு ஆற்றப் பட்டமைக்குத்,

"தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவுஞ் சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணுந் தோன்றுமால்—சூழுந்
திரண்டருவி பாயுந் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்ருய் இசைந்து."

என்று பேயாழ்வார் அருளிச் செய்திருத்தலே சான்றுதல் காண்க. இது கொண்டு பேயாழ்வார் காலத்தில் திருவேங்கடமலையின்மேல் சிவபிரானுந் திருமாலும் ஒருங்கு வைத்து வணங்கப்பட்டமை இனிது புலனுகின்றதன்ரே? திருவரங்கத்திற் பிள்ளையார் திருவுருவம் இருத்தலும், இவ்வாறே 'திருக்கோட்டியூர்,' 'திருக்குறுங்குடி' முதலிய பழைய திருமால் கோயில்களினுட் சிவபிரான் கோயிலும், ஏனைப் பழைய திருமால் கோயில்களில் வில்வ மரங்களும் வில்வ இலைகளைத் தூவி இறைவனை வழிபடுதலும் வேறு சில சிவ அடையாளங்களுங் காணப்படுதலானும், இங்ஙனமே 'தில்லையம்பலம்,' 'திருவண்ணுமலை' முதலான சிவபிரான் றிருக்கோயில்களிலும் திருமால் கோயில்கள் உள்ளடங்கி யிருத்தலானும் பண்டைக்காலத் தமிழ்மக்கள் இவ்விரண்டு திருவுருவினையும் ஒரே கோயிலின்கண் ஒருங்குவைத்து வழிபாடு செய்து போந்தமை நன்கு விளங்கும். ஆகவே, திருமாலுக்கென்று தனிக்கோயில்கள் பெருகலானமை முதலாழ்வார் மூவர் காலத்திற்குப் பின்னரேயா மென்பது திண்ணமென்க.

அற்றேற், பொய்கை பேய் பூதம் என்னும் ஆழ்வார் மூவரும் ஒரே காலத்தினராகலான் அம்மூவரும் ஒன்று கூடியே திருமால் கோயில்கடோறுஞ் சென்றனர் என்று தொன்றுதொட்டு வைணவர்கள் வழங்கிவராநிற்ப, அம்மூவருட் பொய்கையார் சோழநாட்டின் கண்ணதான 'திருவரங்கம்' ஒன்றை மட்டும் பாடித் தொண்டைநாடு அல்

லாத மற்றை நாடுகளிலுள்ள திருப்பதிகளைப் பாடாமை யும், தொண்டை நாட்டுள்ளுந் 'திருவெஃகா,' 'திருவிண் ணகர்,' 'திருக்கோவலூர்,' 'திருவேங்கடம்' என்னும் நான் கைத் தவிர ஏனையவற்றை அவர் பாடாமையும், ஏனை யிருவர் ஏனை நாடுகளிலுமுள்ள திருப்பதிகளைப் பாடுதலும் என்னையெனிற், கூறுதும்: பொய்கையாழ்வார் கச்சித் திருவெஃகா என்னுந் திருப்பதியிற் பிறந்தருளினவர். அவர் தொண்டை நாட்டிலுள்ள மேற்கூறிய நான்கு திருக் கோயில்கட்கும் நேரே சென்று அங்குள்ள இறைவனைப் பாடினாரென்பதற்கு வேண்டும் அடையாளங்கள் அவர் அருளிய அச் செய்யுட்களிலேயே இருக்கின்றன. ஆனாற் சோழநாட்டின் கண்ணதாகிய 'திருவரங்கத்'தை அவர் குறிப்பிடுகையில் அத் திருப்பதிக்குத் தாம் செல்லாமல் தாம் தொண்டைநாட்டில் இருந்தபடியாகவே அதனைப் பாடியருளினார் என்பதற்குரிய அடையாளம் அவரது செய்யுளிற் காணப்படுகின்றது. யாங்ஙனமெனின்,

"அன்று,
கருவரங்கத் துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை."[1]

என்று அவர் அத் திருப்பதியைக் குறிப்பிட்டுத் தாம் திரு வரங்கப் பெருமாள் எழுந்தருளிய திசையைக் கண்டதாகப் புகன்றனரேயன்றித், தாம் அங்குச்சென்று அப் பெரு மானை நேரே கண்டு தொழுததாக உரைத்திலாமையான் என்பது. மற்று அவர் 'திருவேங்கடத்'தைப் பாடிய வழி,

"வகையறு நுண்கேள்வி வாய்வார்கள் நாளும்
புகைவிளக்கும் பூம்புனலும் ஏந்தித்—திசைதிசையின்
வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே."[2]

என அத் திருக்கோயிலில் வழிபாடு செய்வார் வழிபடு முறைகளைத் தாம் நேரே கண்டமைக்கு அறிகுறியாகச் 'செய்யும்' என்னும் நிகழ்கால வினைச்சொற் பெய்துரைத்த லும், அங்ஙனமே பெருமாள் 'திருவேங்கடத்'தில் நின்ற

---

1. முதல் திருவந்தாதி, சு. 2. முதல் திருவந்தாதி, நஎ.

திருக்கோலத்தோடும் 'திருவிண்ணக'ரில் இருந்த திருக்கோலத்தோடும் 'திருவெஃகா'விற் கிடந்த திருக்கோலத்தோடும் 'திருக்கோவலூ'ரில் நடந்த திருக்கோலத்தோடும் எழுந்தருளுமாற்றினைத் தாம் நேரே கண்டு,

"வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவற் பொன்னகரும்—நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றாற் கெடுமாம் இடர்."

என்று அருளிச் செய்தலும் நுணுகி நோக்கவல்லார்க்குப் பொய்கையாழ்வார் தொண்டை நாட்டைவிட்டு ஏனை நாடுகளுக்குச் சென்றிலரென்பது தெற்றென விளங்காநிற்கும். ஆகவே, பேய் பூதம் என்னும் மற்றை ஆழ்வார் இருவரோடுங் கூடிப் பொய்கையாழ்வார் திருமால் திருப்பதிகடோறுஞ் சென்றாரெனக் கூறும் வைணவருரை பொருந்தாமை கண்டுகொள்க. இவ்வாற்றாற், பொய்கையாழ்வார் பாடிய 'விண்ணகர்' என்பது அவர் பிறந்தருளிய 'திருவெஃகா'விற்கு அணித்தாய்க் கச்சியிலுள்ள 'பரமேச்சுர விண்ணகரமே' யல்லாமற், சோழநாட்டின்கண் திருக்குடந்தைக்கு அருகிலுள்ள திருவிண்ணகரும் அன்று, 'வைகுந்த விண்ணகரம்,' 'அரிமேய விண்ணகரம்,' 'காழிச்சீராம விண்ணகரம்,' 'நந்திபுர விண்ணகரம்' முதலியனவும் அன்று. என்னை? சோழநாட்டின்கண் உள்ள இவ்வைந்து விண்ணகரங்களுள் 'திருவிண்ணகர்' பிற்காலத்து ஆழ்வார்களான திருமங்கையாழ்வார் சடகோப ஆழ்வார் என்னும் இருவரானும், ஏனை நான்கும் திருமங்கையாழ்வார் ஒருவரானுமேயன்றி ஏனையாழ்வார்களாற் பாடப்படாமையின் இவ்வைந்தும் முதலாழ்வார் மூவர் காலத்திற்கும் பிற்பட்டெழுந்தனவேயாதல் பெறப்படும். பொய்கை பேய் என்னும் ஆழ்வார் இருவரும் பாடிய விண்ணகரம் கச்சியிலுள்ள 'பரமேச்சுர விண்ணகரமே'யாமென்பதற்கு அவ்விருவரும் அதனை அதற்கு அருகிலுள்ள 'திருவெஃகா'வோடு உடன்சேர்த்து "வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும்" எனவும், "விண்ணகரம் வெஃகா

விரிதிரைநீர் வேங்கடம்"[1] எனவும் அருளிச்செய்தலே சான்றாம். அதுவேயுமன்றிப், பொய்கையாழ்வார் தாம் பிறந்த தொண்டை நாட்டைவிட்டு வேறு நாடுகளுக்குச் சென்றிலரென்பது மேற்காட்டினமாகலானும், அவர் காலத்தில் அப் பெயர்கொண்ட திருப்பதிகள் பிற உளவாயிருப்பினும் அவைதம்மை அவர் பாடியிராரென்பதற்கு, அவர் ஏனை நாட்டுத் திருப்பதிகளைப் பாடாமையே சான்றுமென்பது. இனிப், பேய் பூதம் என்னும் ஆழ்வார் இருவருமோ ஏனை நாடுகளிலுள்ள ஏனைத் திருமால்கோயில்கட்குஞ்சென்று அவைதம்மைப் பாடினமை மேலெடுத்துக் காட்டினமாகலின், அவ்விருவரானும் ஏனைப் பொய்கையாரானும் பாடப்பெற்ற திருமால் திருப்பதிகள் இருபதைத் தவிர வேறுபல அம்மூவர் காலத்தில் இருந்திலவென்பது தேற்றமாம். மற்றுத், திருமங்கையாழ்வாரோ இவ் விருபதுக்குமேல் அறுபத்தாறு வேறு திருமால் திருப்பதிகளைப் பாடியிருக்கின்றாராகலின், வைணவ சமயம் பெரிதுங் கிளர்ச்சிபெற்றுத் திருமால் கோயில்கள் இந் நாவலந் தீவெங்கும் அமைக்கப்பட்ட கி. பி. ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் இவ் வாழ்வாரும் இதே ஏதுவினாற் சடகோப ஆழ்வாரும் இருந்தமை இனிது துணியப்படுமென்க.

இனிப், பெரியாழ்வார் ஆண்டாள் நம்மாழ்வார் முதலியோர் இயற்றிய செய்யுட்களிற் கொச்சைத் தமிழ்ச்சொற்களும் புதிதுபுகுந்த பிறசொற்களும் வடசொற்களும் காணப்படும் அவ்வளவு திருமங்கையாழ்வார் பாக்களில் அவை காணப்படாவாயினும், 'மனிசப்பிறவி,' 'வாநரம்,' 'நரநாரணன்' முதலான புதிது புகுந்த சொற்களும், இராமாயணத்திற் போந்த 'பரதன்,' 'சத்துருக்கன்,' 'இலக்குமன்,' 'மைதிலி,' 'கரன்,' 'கவந்தன்,' 'விராதன்,' 'தயரதன்' முதலான பெயர்களும், 'தேநுகன்,' 'பூதனை' முதலான ஏனைப் பெயர்களுந் தடையின்றி விரவக்காண்டலின், இவர் அப் பெரியாழ்வார் முதலிய மூவர்க்கும் சிறிது முன்னே இருந்தாராதல் வேண்டும்.

---

1. பேயாழ்வார் மூன்றாந் திருவந்தாதி, ௬உ.

கரு. திருமங்கையாழ்வார் காலம்

இனி, முதலாழ்வார் மூவர் தம் பாடல்களிற் கண்ணன் வாமநன் வராகன் நரசிங்கன் முதலான திருமால் வடிவினர் மேற் பாடப்பட்டனவே மிகப் பலவாயும், இராமன்மேற் பாடப்பட்டன மிகச் சிலவாயும் இருப்பத், திருமங்கை யாழ்வார் பாடல்களிலோ இராமன்மேற் பாடப்பட்டனவும் இராமன் கதை கூறுவனவும் சாலப்பலவாயிருக்கின்றன. அதனால், இராமாயண கதை இத் தென்றமிழ் நாட்டில் மிக்குப் பரவிய காலத்தேதான் இவ் வாழ்வார் இருந்தமை தேற்றமாம். இராமாயண கதை கி. பி. முதல் நூற்றாண் டுக்கு முற்பட்ட பழந்தமிழ்ப் பாடல்களில் ஒரு சிறிதுங் காணப்படாமையும், கி. பி. முதல் நூற்றாண்டின் துவக் கத்திலிருந்தே அது தமிழ்நாட்டிலுள்ளார்க்குச் சிறிது சிறிதாகத் தெரியலானமையும் மேலே விளக்கிப் போந் தாம். தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டிலும் வடநாட்டி லும் மிகவும் பரவியிருந்தது சைவசமயக் கொள்கையே யாம். வடநாட்டில் இடையே தோன்றிய பௌத்த சமண மதங்கள் தொடக்கத்திற் சைவசமயத்திற்கு மாறாக நில்லா விடினும் நாளேற நாளேறத் தாம் தனித்து நிற்கும் ஆற்றல்பெற்ற வளவானே அதனொடு பெரிதும் மாறு பட்டு, அதனைத் தழுவினார்க்குப் பெரிதுந் தீங்கிழைப்பன வாயின. அக்காலங்களில் வைணவ மதம் வடநாட்டிற் றனிநின்று பரவி நில்லாமையாற், பாரத இராமாயண கதைகள் பௌத்தசமண மதங்களுக்கு எதிரே தலைதூக்கி நின்று அங்கும் பரவினவல்ல. அஞ்ஞான்று அரசுவீற் றிருந்த பௌத்த சமணமதங்களோடு எதிர்நிற்கலாற்றாத ஆரியப்பார்ப்பனர் வடநாடு துறந்து தமிழ்நாடு புகுந்து இங்கு நிற்க நிலைக்களம் பெற்ற பின்னரேதான் தாம் தம் முடன் கொணர்ந்த பாரத இராமாயண கதைகளைத் தமக்கு உயர்வுண்டாம் வகையிலும், தமிழ் நாட்டவர் மனங்களைத் தம்மாட்டு ஈர்க்கும் வகையிலும் வரவரப் பெருக்கியெழுதலாயினர். மாபாரதமானது முதலில் எண்

ணுயிரத்து எண்ணூறு சுலோகங்கள் மட்டும் உடையதாயிருந்ததென்பதும், அதன்பிற் சில நூற்றுண்டுகள் கழித்து அஃது இருபத்துநாலாயிரஞ் சுலோகங்கள் உடையதாக முன்னையிலும் மும்மடங்கு பெருக்கி யெழுதப்பட்டதென்பதும், அதன்பிற் சில நூற்றுண்டுகள் செல்ல நூறுயிரஞ் சுலோகங்களுடையதாக முதலிலிருந்ததற்குப் பன்னிரண்டு மடங்கு பெருக்கி எழுதப்பட்டதென்பதும் அதன் றொடக்கத்திலுள்ள 'ஆதிபருவத்'திலேயே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.[1] முதலிற் சுருக்கமாயிருந்த பாரதகதை கிறித்து பிறப்பதற்குப் பத்து நூற்றுண்டுகளுக்கு முன்னரே இருந்ததொன்றுகும்; அதன்பின் அஅ00 சுலோகங்களுடையதாகச் செய்யப்பட்டது கி. மு ஐந்தாம் நூற்றுண்டிலும், பின்னர் உ0000 சுலோகங்களுடையதாகச் செய்யப்பட்டது கி. பி. மூன்றும் நூற்றுண்டிலும், பின்னும் நூறுயிரஞ் சுலோகங்களுடையதாக ஆக்கப்பட்டது கிறித்துவுக்குப் பின் நான்காம் நூற்றுண்டிலுமாக வர வரப் பெருக்கி யெழுதப்பட்டனவாகுமென வடமொழி வல்ல ஆசிரியர் மாக்டனல் உயர்ந்த பல சான்றுகள் காட்டி நன்கு விளக்கியிருக்கின்றுர்.[2] விஷ்ணுவின் பல் பிறப்புக்களையும், கண்ணன்றன் ஆண்மைச் செயல்களையும் விரித்துக்கூறும் 'ஹரிவம்சம்' என்னும் நூல் பதினுயிரஞ் சுலோகங்கள் உடையதாகச்செய்து பாரதத்தின் இறுதியிற் சேர்க்கப்பட்டதுங் கி. பி. நான்காம் நூற்றுண்டிலேயா மென்பதூஉம் அவராற் காட்டப்பட்டது. இதற்கு முற்பட்ட பாரதக்கதையிற் கண்ணனது குழவிக்காலத்து ஆண்மைச் செயல்களும் பிறவும் ஒரு சிறிதுங் கூறப்படாமையுங் கருத்திற் பதிக்கற்பாற்று. எனவே, கண்ணன் திருமாலின் பிறப்பாகக் கொள்ளப்பட்டதும், அவனுக்கு அரிய பெரிய ஆண்மைச் செயல்களை ஏற்றிக் கூறியதும் எல்லாம் கி. மு. மூன்றும் நூற்றுண்டிலிருந்து பார்ப்பனர்

---

1. வியாசபாரதம், ஆதிபருவம், சுலோகங்கள், அக, க0க, க0ரு.

2. See Prof. A. A. Macdonell's 'A History of Sanscrit Literature,' pp. 282—288.

களாற் புனைந்து சேர்க்கப்பட்டனவாகும். இவ்வாறு தமது உயர்வினை நிறுத்தல் வேண்டியும், ஏனை மக்கள் எல்லாரையுந் தங்கீழ் அடக்கி வைத்தல் வேண்டியுமே பார்ப்பனப் புலவர்கள் காலங்கடோறும் பாரதக்கதை யைப் பெருக்கி யெழுதிவரலாயினர். இவ்வுண்மையும் மேற்காட்டிய ஆங்கில ஆசிரியரால் நன்கெடுத்துக் காட்டப்பட்டது.[1]

இங்ஙனமே, வான்மீகிமுனிவர் இயற்றியதாகச் சொல் லப்படும் இராமாயண கதையும் முன்னுள்முதல் இந்நாள் வரையும் இடையிடையே பார்ப்பனர்களாற் பெருக்கி எழுதப்பட்டு வந்ததொன்றாகும். இவ்வாறு பற்பல காலங் களிலிருந்த பற்பலர் தாம்தாம் வேண்டியவைகளை எழுதி யெழுதி இடையிடையே சேர்த்துவந்தமையால், இதன்கட் கூறப்படுஞ் செய்திகள் ஒன்றோடொன்று பெரிதும் மாறு பட்டுக் கிடக்கின்றன. அவற்றுட் சில ஈண்டெடுத்துக் காட்டுதும்; விரிவஞ்சி அம் மாறுபாடுகள் முற்றும் எடுத் துக்காட்டிலம். கிட்கிந்தா காண்டத்திற் சுக்கிரீவன் முத லில் தனக்கு இராக்கதர்களின் இருப்பிடமும் அவர்களின் வலிமை குடும்பம் முதலியவைகளைப் பற்றிய குறிப்புஞ் சிறிதுந் தெரியாவென்று கூறினமை நுவலப்பட்டிருக்கின் றது; ஆனல் அதன் பிற்பகுதியிலோ இந் நிலவுலகத்தி லுள்ள இடங்களைப் பற்றிய வரலாறும், இலங்கை இரா வணனுக்கு உரியதாதலும அவன் தான்விடுத்த தூதுவர் களுக்கு விரிவாக அறிவித்தமை தெரித்துரைக்கப்பட்டிருக் கின்றது. இதுகொண்டு முற்பகுதியை யெழுதியவர் தென் ஞட்டுக்கு வராமல் வடக்கின்கண்ணே இருந்தவராதலும், பிற்பகுதியை யெழுதிச் சேர்த்தவர் இத்தென்ஞட்டின் கண் வந்து குடியேறி இவ்விடங்களை நன்குணர்ந்தவராதலும் தாமே நன்கு விளங்கும். வான்மீகி இராமாயணத்திற்கு இருநூறுண்டு முற்பட்டதாகிய 'தசரத ஜாதகத்'திலும், தன் றந்தையின் கட்டளையால் அரசு துறந்து சென்ற இராமன் இமயமலைச்சாரலிற் சென்று வைகிப் பன்னீரி

1. Ibid, p. 286.

யாண்டு கழித்து வந்து தனதரசைக் கைக்கொண்டான் என்னும் அவ்வளவே சொல்லப்பட்டிருக்கின்றதல்லாமல், அவன் தென்னாடு நோக்கிச் சென்றானெனவாதல், தன் மனைவியைக் கவர்ந்துசென்ற இராவணனொடு பொருது அவனை மடித்து அவளை மீட்டுவந்தானெனவாதல் ஒரு சிறிதுங் கூறப்படாமையால், இவையெல்லாந் தென்னாடு போந்த பார்ப்பனரால் பின்னர் எழுதிச் சேர்க்கப்பட்டனவா மென்பதை மேலும் எடுத்துக்காட்டினும் (௩௬௮ ஆம் பக்கம்). இருக்கு வேதத்தில் மழையைப் பெய்விப்பவனாக வணங்கப்படும் இந்திரனாகிய இராமனுக்கும், அம் மழைவளத்தைப் பெறூஉம் உழவுசாலாகிய சீதைக்கும் உள்ள தொடர்பினையே பின்னர் ஒரு கதையாகப் புனைந்து கட்டினர் என்பதனையும் மேலே விளக்கினும் (௩௬௫-ஆம் பக்கம்). மற்று, இக் கதையை அவ் விருக்குவேத நிகழ்ச்சியோடு தொடர்புடைய புனைந்துரை நாடக வழக்காகக் கொள்ளாது, 'இராமன்,' 'சீதை' எனப் பெயரிய அரசனும் அரசியும் உண்மையிலிருந்தவரே யாவரெனக் கொளினும் அவ்விருவருந் தென்னாடு போந்தமைக்கும், இராவணன் என்போனால் துன்புற்று மீண்டமைக்கும் மிகப் பழைய வடநூல் தமிழ்நூல்களிற் றினையளவு சான்று தானும் இல்லையென்க.

இன்னும், இப்போதுள்ள வான்மீகி இராமாயணத்தில் 'மந்தரை' என்பாள் 'கைகேயி'க்குச் சொல்லுமிடத்தில் 'இராமனுக்கு மனைவிமார் பலர் இருந்தமையினைக்' குறிப்பிட்டிருக்கின்றாள். ஆனால், 'இரகுவம்சம்' என்னும் நூலெழுதிய காளிதாசரோ அவனுக்குச் சீதையை மட்டுமே மனைவியாக உரை நிகழ்த்துகின்றார். இவ்வாற்றால், தசரதன் இராமன் பரதன் என்பார்க்கு மனைவிமார் பலருளரெனக் கிளந்த செய்யுட்கள் பிறரால் வரைந்து சேர்க்கப்பட்டமை புலனாம்.

இன்னும், அகலிகையென்பாள் இந்திரனொடு மருவினமை பற்றிக் கௌதமராற் கல்லாக உருமாறிக் கிடக்கும்படி சினந்துரைக்கப்பட்டாள் என்றுதல், பின்னர் இராம

னது அடித்துகள் பட்டவளவானே தனது பழைய வுருவினைப்பெற்று நின்றாள் என்றுதல் ஏதும் வான்மீகி இராமாயணம் பகரவில்லை. அவள் இழைத்த அக் குற்றத்திற்காகக் கௌதமர் அவளை நோக்கி: "இவ்வாசிரமத்துள்ளார் எவர் கண்ணிலும் படாமல், காற்றையன்றி வேறேது உணவும் எடாமல், திருநீற்றிற் கிடந்தபடியாய், நீ செய்த குற்றத்தை நினைந்து வருந்தித் தவம்புரியக் கடவை!" என்று சினந்துரைத்தன ரெனவும், அவ்வுரைப்படியே அவள் திருநீற்றிற்கிடந்து தவமியற்றி, இராமன் தனது ஆசிரமத்துக்கு வந்த ஞான்று அத் தவம் முடிவு பெற்றமையின், வந்த அவனை வரவேற்க, அவன் தன் மனைவியோடும் தம்பியோடும் அவ் வகலிகையின் அடிகளில் வீழ்ந்து வணங்கினன் எனவும் வான்மீகி இராமாயணம் புகலாநிற்கின்றது;[1] ஆனால், பின்வந்த காளிதாசரை யுள்ளிட்ட புலவரோ அவள் கல்லாகச் சமைக்கப் பட்டுக் கிடந்து இராமன் றிருவடிபடுதலும் பழைய உருப் பெற்று எழுந்தாள் என உண்மையைப் பிழைப்பக் கூறினர்.

இன்னும், வான்மீகி இராமாயணத்தின் முதற்கண்ணதாகிய பாலகாண்டத் துவக்கத்தில் நாரதர் இராமனது வரலாற்றினைக் கூறிமுடிக்கின்றுழி, அவன் இறந்தபின் பிரமலோகஞ் செல்வான் என்று புகனறனரே யன்றி, விட்ணுலோகஞ் செல்வான் என்று புகன்றிலர். இராமன் உண்மையிலே திருமாலின் பிறப்பா யிருந்தானேல், இறந்தபின் அவன் விட்ணுலோகஞ் செல்வானென்று விளம்புதல் வேண்டும். மற்று, அவ்வா றுரையாமையால் நாரதர் அவனை விட்ணுவின் பிறப்பென்று கொள்ளாமல், மக்கட் பிறப்பினருள் ஒருவன் எனவே கொண்டனரென்பது புலனும். ஆனல், இதன் இறுதிக்கண் உள்ள 'உத்தரகாண்டத்'திலோ நான்முகக் கடவுள் இராமனை அவனது முடிவுநாளில் தனது திருமாலுடம்பிற் புகும்படி வேண்டிக்கொண்டாரென முன்

1. பாலகாண்டம், சஅ, சக.

னதனோடு மாறுபட்டதொரு கதை காணப்படுகின்றது. பாலகாண்டத்தின் முதலில் இராமன் வரலாற்றினை எடுத்துரைக்கும் நாரதர் அவனைத் திருமாலின் அவதாரமென்று அதன்கட் சிறிதும் உரையாதிருக்க, உத்தர காண்டம் அதனோடு முரணி அவனைத் திருமாலின் பிறப்பாகக் கூறுதலானும், இங்ஙனமே பால காண்டத்தின் கரு-ஆம் இயலும் தேவர்கள் திருமாலை அடைந்து 'இராவணனைக் கொல்லும் பொருட்டு இராமனாகப் பிறந்தருளுக' என்க் குறையிரந்தார்களென முன்னதனோடு முரணக் கூறுதலானும், இராமன் திருமாலின் பிறப்பாயின் அவன்றன் மனைவி சீதை இலக்குமியின் பிறப்பாக வேண்டுமாகவும் அவளை அங்ஙனம் உரையாது அவள் தனது முற்பிறவியிற் 'குசத்துவசன்' புதல்வியாகிய 'வேதவதி'யாயிருந்தனள் என்று இதன் யுத்தகாண்டம், கூ0-ஆம் இயல் உரை தருதலானும் பாலகாண்டத்தின் இடையிடையே பல பகுதிகளும் உத்தரகாண்டமும் பின்வந்தோரால் நாளடைவே எழுதி எழுதிச் சேர்க்கப்பட்டமை தெற்றென விளங்காநிற்கும்.

மேலும், இராவணனுக்குப் பத்துத் தலைகளும் இருபது தோள்களும் இருந்தன என்பது பழைய இராமாயணப் பகுதிகளிற் பெறப்படவில்லை. இலங்கையிற் சீதையைத் தேடச் சென்ற அநுமான் இராவணனது அரண்மனையுட்புக்குச் செல்கின்றுழி இராவணன் பருத்த தலையுங் கழுத்தும் உடையனாய்[1] கட்டிலின்மேல் உறங்குதலைக் கண்டான் என்னும் அவ்வளவே சொல்லப்பட்டிருக்கின்றது. இராவணன் போர்க்களத்தில் வந்து நின்றக்காலும் ஒற்றைத் தலையும் இரண்டு கண்களும் உடையனாகவே இருந்தமை குறிக்கப்பட்டிருக்கின்றது. போர்க்களத்தில் இராமன் இராவணனைக் கண்டு உரைகூறினமை சொல்கின்ற விடத்தும், அவன் மக்களெல்லாரையும் போல் ஒரே தலையுடையனா யிருந்தனனெனவே சொல்லப்

1. "நீலஜீமூதஸங்காசோ மஹாபுஜ சிரோதர:" வான்மீகி இராமாயணம்.

பட்டிருக்கின்ருன். இன்னும், போர்க்களத்தில் இராவணன் உயிரிழந்துவிழ அவன்றன் மனைவிமார் அவன்பாற்போந்து புலம்புதலைப் புகல்கின்ற விடத்தும் அவன் ஒற்றைத் தலையும் இரண்டு கைகளும் உடையனுயிருந்த தன்மையே நுவலப்பட்டிருக்கின்றது. ஆகவே, இராவணனுக்குப் பத்துத் தலைகளும் இருபது கைகளுங் கற்பித்துக் கூறிய கதை பின்னரெழுதிச் சேர்க்கப்பட்டதாதல் தெள்ளிதின் விளங்கும். இராமாயண கதை தென்னுட்டிற் சிறிது தெரியத் துவங்கிய கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட தமிழ்ப்பெருங் காப்பியங்களிலுந் தமிழ்ப் பாட்டுகளிலுங்கூட இராவணன் குறிக்கப்படும் இடங்களும் கபிலரது குறிஞ்சிக் கலிப்பாட்டு ஒன்றிற் றவிர வேறு யாண்டும் அவன் பத்துத் தலையுடையனு யிருந்தனனென்பது சொல்லப் படாமையின், முதலில் இராமாயண கதையை ஆக்கியோர் அவனை ஏனை மக்களைப் போன்ற வடிவுடையனுகவே வைத்துக் கதை புனைந்தாரென்பதூஉம், கி மு. இரண்டாவது நூற்றாண்டிற்குப் பின் அக்கதையைப் பெருக்கி வரைந்தோரே அவனுக்குப் பத்துத் தலையும் இருபதுகையும் ஏற்றிவிட்டன ரென்பதூஉம் இனிது புலனும். எனவே, கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்த கபிலர், கி. பி. மூன்றும் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்த மாணிக்கவாசகப் பெருமான் முதலியோர் காலந் தொட்டுத் தான் பத்துத்தலை இராவணன் கதை தமிழ் நாட்டிற் றெரிந்து வரலாயிற்றென் றுணர்ந்துகொள்க. இவ்வாறு 'வான்மீகி இராமாயணத்'தின்கட் காலங்கடோறும் பிற்பின் வந்தோரால் எழுதி யெழுதிச் சேர்க்கப்பட்டவைகள் பற்பல. இங்ஙனமாகப் பல்லோரும் தாந்தாம் வேண்டியவைகளை யெல்லாம் படைத்துப் படைத்து அதன்கட் சேர்த்து வந்தமையினுலேதான், அதன்கட் சொல்லப்படுஞ் செய்திகள் ஒன்ருெடொன்று பெரிதும் மாறுகோளுற்று நிற்கின்றன. இதன்கட் காணப்படும் மாறுபாடுகளிற் பெரும்பாலனவற்றை, வடநூலாராய்ச்சியில் நிகரற்று வயங்கிய மியூர் என்னும் ஆங்கில ஆசிரியர் தாம் பெரிதாராய்ந்து தொகுத் தெழுதிய 'வடநூல் மூலங்

கள்’ என்னும் நூலின் நான்காம் புத்தகத்தில் நன்கெடுத்துக் காட்டினார்;[1] இங்ஙனம் எடுத்துக் காட்டிய இவ்விரிந்த ஆராய்ச்சி யுரையிலேயே இராமன் திருமாலின் பிறப்பாகாமையும் அவர் மெய்ச்சான்றுகள் பல கொண்டு நன்கு நிலைபெறுத்தி யிருக்கின்றார். நம் இந்திய நாட்டு அறிஞரான வைத்தியா என்பவரும் தாம் எழுதிய ‘இராமாயண ஆராய்ச்சி’யில் இம் மாறுபாடுகளை எடுத்துக் காட்டி யிருக்கின்றார்.[2] இன்னும், இப்போது பம்பாயிற் பதிப்பிடப் பட்டிருக்கும் வான்மீகி இராமாயணப் புத்தகத்தையும், வங்காளத்திற் பதிப்பிடப்பட்டிருக்கும் வான்மீகி இராமாயணப் புத்தகத்தையும் சிறிது ஒப்பிட்டு நோக்குவார்க்கும் இம் மாறுபாடுகளும் புதிய சேர்க்கைகளும் எளிதின் விளங்காநிற்கும். முன்னையதில் ஐந்நூற்று ஐம்பத்தேழு இயல்களும் பத்தொன்பதாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்று மூன்று சுலோகங்களும் இருக்கப், பின்னையதில் அறுநூற்றைம்பது இயல்களும இருபத்து நாலாயிரத்து ஐந்நூற்று இருபத்தெட்டுச் சுலோகங்களுங் காணப்படுகின்றன; ஆனால், ‘உத்தரகாண்டம்’ இதிற் காணப்படவில்லை. இவ் வேறுபாட்டோடு, ஒன்றிற் கூறப்படுஞ் செய்திகள் மற்றொன்றிற் காணப்படாமலும், இரண்டிலுங் காணப்படுவனவுங் கூட ஒன்றில் ஒருவாறாயும் மற்றொன்றில் மற்றொரு வாறாயுந் திரிபெய்திக் கிடக்கின்றன. வடமொழி முதல் நூலாகிய வான்மீகி இராமாயணமே இப்பெற்றிப்பட்ட பிறழ்ச்சிகள உடையதாயின், இதன் தமிழ் மொழி பெயர்ப்பாய இஞ்ஞான்றுலவுங் கம்பர் இராமாயணத்தின் பிறழ்ச்சிகள் எத்துணையவாம் என்பதனை யாம் உணர்த்துதல் வேண்டா. வடமொழி மூலத்தின் இரு வேறு பதிப்பையுங், கம்பர் இராமாயணத்தையும் ஒருங்கு வைத்து ஒப்பிட்டு நோக்குவார்க்கே இவ் வுண்மைகள் புலனும்.

1. Dr. John Muir's Original Sanscrit Texts, Vol. IV, pp. 441-491.

2. The Riddle of the Ramayana, by C. V. Vaidya, M. A., LL B.

அற்றேற், பத்துத் தலையும் இருபது கையுமுடைய இராவணனிருந்ததும், அவன் கைலாயமலையை வேரோடு பெயர்த்தெடுத்தபோது அதன் குவட்டின்மீதெழுந்தருளியிருந்த சிவபெருமான் தமது திருவடிப் பெருவிரல் ஒன்றனால் அம் மலையை யழுத்தி அவன்றன் இருபது தோள்களையும் அம் மலைக்கீழ் அடர்த்து நெரித்ததும், பின்னர் அவன் அப் பெருமானை அழுது குறையிரப்ப இரங்கி அவற்கு வாளும் நாளும் ஈந்தருளிக் காத்ததும் ஆகிய இவை எல்லாம், ஓதாதுணர்ந்த திருஞானசம்பந்தப் பெருமானை யுளளிட்ட சைவசமய ஆசிரியன்மார் உண்மையெனக் கொண்டு பதிகங்கடோறும் அவற்றை ஓதுதல் என்னையெனிற், கூறுதும்: சைவசமய ஆசிரியர் சிவபெருமான் ஒருவனையே குழைந்து குழைந்து உருகிப் பாடுங் கடப்பாடு மேற்கொண்டவர்; தமக்கு முன்னும் தங்காலத்தும் வழங்கிய கதைகளுள் மெய்யாவன இவை, பொய்யாவன இவையென்று ஆராயப் புகுந்தவர் அல்லர்; தமதுள்ளம் உருகுமாற்றுற் சிவபிரான்றன் அருட்செயல்களையும் அருளாண்மைகளையும் எடுத்துரைக்கும் நீரர்; தாங்கண்ட கதைகளுட் சிவபிரான்றன் முழுமுதலாற்றலை எளிதின் எடுத்துக் காட்டுவது எத்தகையதா யிருப்பினும் அதனைத் தாமும் எடுத்தெடுத்துப் பாடி அகங்கரையா நிற்பர். இப் பெற்றியினரான அவர் இராவணன் கதையை யெடுத்தாண்டது, இறைவனது மலையைப் பெயர்த்தெடுக்கும் அத்துணைப் பேராற்றல் வாய்ந்தவனென்று சொல்லப்பட்ட அவனையும் இறைவன் தனது திருவடிப் பெருவிரல் நுதியால் அழுத்தி நெரித்தனன் என்பதனால் இறைவனது அளப்பில் ஆற்றலும், பின்னர் அவன் தனது சிறுமையும் இறைவனது எல்லாம்வல்ல பெருமையும் உணர்ந்து நெஞ்சம் நெக்குடைந்து இறைவனைத் தொழுதவளவானே அவன் அவற்கு இரங்கி வாளும் நாளும் ஈந்தருளினன் என்பதனால் இறைவனது பேரருட்டன்மையும் எல்லார்க்கும் அஃது எளிதின் விளக்குதல் பற்றியேயாம். மேலும், இராவணனைக் கொன்றதைப் பேராண்மையாகக் கருதி அதனால் இராமனை எல்லாம்வல்ல கடவுளாகக் கொண்டு

வழிபாடு செய்வாரான ஆரியப்பார்ப்பனரது அறியாமை பாற்றி, அவனைத் தமது காற்பெருவிரல் நுனியால் ஊன்றி நெரித்த சிவபிரானே முழுமுதற் கடவுளாதல் தேற்றி அக் காலத்திருந்த சைவசமயச் சானறோர்கள் அக் கதையைத் தாமும் படைத்து வழங்கினர். என்னை? 'நஞ்சை நஞ்சாற் கொல்லுக! முள்ளை முள்ளாற் களைக!' என்னும் ஆன்றோர் வழக்குப் பற்றித் தீது பயப்பதான ஒரு பொய்யை நன்மை பயப்பதான மற்றொரு பொய்யால் மாற்றுதல் மேலோர் நிறுத்திய ஒழுகலாறாகலான் என்க. இத் தென்னாட்டிலாதல் இலங்கையிலாதல் பத்துத்தலையும் இருபதுதோளும உடைய இராவணன் என்பானோர் அரக்கன் இருந்தது மில்லை; வடக்கிருந்து இராமன் என்பான் இங்கு வந்தது மில்லை; அவன்றன் மனைவி சீதை யென்பாளை இராவணன் சிறைபிடித்துச் சென்றதுமில்லை; இராமன் குரங்குகளைப் படைதிரட்டிச் சென்று அவனொடு பொருது அவளை மீட்டு வந்ததுமில்லை; இங்ஙனமாகவும், இல்லாத இவைகளை யெல்லாம் புனைந்துகட்டி இம் முகத்தால் இராமனைத் தெய்வமாக்கி, அவனையே இங்குள்ள அறிவில்லா மக்கள் வணங்குமாறு செய்து, எல்லா வுலகங்களையும் எல்லா வுயிர்களையுந் தோற்றுவித்துக் காத்து அருள்புரியும் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவத்தை அம் மக்கள் வணங்காவாறு மாயம்புரிந்த ஆரியர்தம் தீச்செய லையும் அவர் புனைந்த பொய்க்கதையின் உரத்தையுந் தொலைத்தல் வேண்டியே, அவன் திருக்கைலாய மலையைப் பெயர்த்தெடுத்ததும், அஃதுணர்ந்து இறைவன் தனது காற் பெருவிரல் நுனியால் அவனை அம் மலைக்கீழ் அடர்த் ததும் ஆகிய பிறிதொரு கதையைச் சைவசமயச் சான்றோர் தாமும் புனைந்துகட்டி, அவ்வாயிலால் இராவணனொடு படைகூட்டிச் சென்று பலநாட் போர்புரிந்த இராமன் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய மக்களுள் ஒருவனே யாதலும், அத்துணை வலிமைமிக்க இராவணனைத் தமது திருவடிப் பெருவிரல் நுனையால் ஒரு நொடியில் அழுத்தி நெரித்த சிவபிரானே எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளா தலுந் தெளியவைத்தார். பத்துத்தலையும் இருபது கையும்

உடைய இராவணன் என்பானோர் அரக்கன் இருந்தான் எனல் உலக இயற்கைக்கு முற்றும் மாறான பொய்க் கதையேயாதல்போல, அவன் திருக்கைலாய மலையைப் பெயர்த்தெடுத்தா னென்பதும் ஒரு பொய்க்கதையே யாயினும், எல்லாம்வல்ல இறைவனை வழிபட்டு மக்கள் பேரின்பத்தையடைய வொட்டாது தடைசெய்து, பிறப்பு இறப்புக்களிற் பட்டுழன்ற ஓராண்மகனாகிய இராமனையே வணங்கி அம மக்கள் தமது பிறவிப் பெரும்பயனை இழக்கு மாறு செய்யும் இராம இராவணப் பொய்க்கதையின் இழிந்த நோக்கம் போலாது, சைவசமயச் சான்றோர் கட்டிய பிற்கதை இராம இராவணரின் சிறுமையும் சிவபிரான்றன் முழுமுதற் பெருமையுந் தெரித்து மக்களை அப்பெருமான் றிருவருட்பேற்றிற்கு உரியராக்கும் உயர்ந்த நோக்கம் உடைமையால், இது பெரிதும் பயன்படுத லுடைத்தாம் : இத்துணைப் பெரும்பயன் றருதல் பற்றியே இக் கதையை மாணிக்கவாசகர் திருஞானசம்பந்தர் முத லான சைவசமய ஆசிரியன்மார் தாம் அருளிய திருப்பதி கங்களில் எடுத்து வழங்கினரல்லது, உலகவியற்கை மக்க ளியற்கைக்கு முற்றும் ஒவ்வாத அக் கதைகளைப் பேரறி வாளரான அவர்கள் உண்மையென நம்பி அங்ஙனஞ் செய்தார் அல்லர். இங்ஙனமே அவர்கள் எடுத்தாண்ட கதைகளெல்லாம், எல்லாம்வல்ல முதல்வன்றன் அளவில் அறிவாற்றல்களையும், அவன் தன் மெய்யன்பர்க்கு உவந்து செய்யும் அருள்வழக்கங்களையும் நன்கு புலப்படுக்குந் திறத்தவாகலின், அவற்றை அந் நுண்பொருள்பற்றித் தழுவிக்கொள்வதல்லாமல், உலக நடையோடு ஒவ்வா அவற்றின் பருப்பொருள ஒன்றேகொண்டு அவற்றைத் தழுவுதல் எட்டுணையும் ஆகாது. எனவே, இன்னோரன்ன கதைகளை எடுத்தாளுதல் கொண்டு திருஞானசம்பந்தப் பெருமான் முதலான அறிவின் எல்லைகண்ட ஆசிரியர், சிற்றறிவினரும் நம்புதற்காகாத அப் பருப்பொருட் பொய்ந் நிகழ்ச்சிகளை மெய்யெனத் துணிந்து தழீஇயினரென அவர் தம் உண்மைக் கருத் துணராது அவர்மேல் அந் நம்பிக் கையினை யேற்றல் ஏதமாமென்க. மேலும், இராவணன்

என்பான் பத்துத்தலையும் இருபதுகையும் உடையனுயிருந் தனனென்பது 'வான்மீகி இராமாயணத்'தின் பழைய பகுதிகளிற் சொல்லப்படாமையை மேலெடுத்துக் காட்டின மாகலானும், இராவணன் திருக்கைலாய மலையைப் பெயர்த் தெடுத்த கதை கூறும் 'உத்தரகாண்டம்' வங்காளத்திற் பதித்த வான்மீகி இராமாயணத்தின்கட் காணப்படாமை யானும் இவையெல்லாம் பிற்காலத்து வந்தோரால் எழுதிச் சேர்க்கப்பட்டமை தெற்றென விளங்குதலின், இவ் வியல்புகளை யெல்லாம் ஆராயாது சைவசமய ஆசிரியர் இவைதம்மை உண்மையென நம்பிக் கூறினு ரென்னுங் குற்றம் அவர்க்கு உண்டாமாதலால், அவர் அவற்றை ஆராய்ந்து அவற்றை உண்மையெனக் கண்டு கூறினுரென்றல் சிறிதும் ஆகாது; மற்றுத், தங்காலத்து வழங்கிய அக் கதைகள் சிவபிரான்றன் முழுமுதற்றன்மை அறிவுறுக்கும் அந் நுட்பமேபற்றி அவர் அவைதம்மை யெடுத்தாண்டனர் என்று கோடலே வாய்ப்புடைத்தா மென விடுக்க.

அற்றேல், முன்னை மிகப் பழைய நூல்களிற் காணப் படாத இராம இராவணகதை பின்னைப் பழைய நூல்கள் முதற் காணப்படலாயினது யாங்ஙனமெனிற் காட்டுதும்: இராம இராவணகதை தென்னுட்டிலேதான் வரவரப் பெருக்கி எழுதப்பட்ட தொன்றுகும்; வைத்தியா என்ப வருந் தமது கருத்து இதுவே யாதலை அறிவித்திருக் கின்றுர்.[1] அங்ஙனமாயினும், தென்னுட்டின்கட் போந்து குடியேறிய ஆரியப்பார்ப்பனர் அவ்வாறு ஒருகதை படைத்துச் சேர்த்தற்குமுன், அக் கதைக்கு முதலாய் அதனோடு ஒப்பதொன்றைத் தாம் கண்டன்றோ அதனை அங்ஙனம் படைத்துச் சேர்த்தல் வேண்டுமெனின்; அஃதொக்கும், இராம இராவண கதைக்கு முதலாய் அதனை யொப்பதொன்று இத் தென்னுட்டின்கண் வழங் கியது உண்மையேயாம். மற்று, அஃது யாதோவெனின், அதுவே முருகக்கடவுள் இலங்கையை ஆண்ட சூரன்

1. The Riddle of the Ramayana, p. 183.

என்னும் அரக்கனை வென்றமை கூறுங் கதையாகும். மிகப் பழைய தமிழ்ப்பாட்டுக்களும் விரவியிருக்கும் பரிபாடல் என்னும் பழைய தமிழ்நூலில் கடுவன் இளஎயினனார் என்னும் நல்லிசைப் புலவர் திருமால்மேற் பாடிய இரண்டு பாடல்களும் முருகக்கடவுள்மேற் பாடிய ஒருபாடலுங் காணப்படுகின்றன. இவ் விருகடவுளரையும் அவர்கடம் அருள் ஆண்மைச் செயல்களையும் இவர் மிக்க அன்போடுங் குழைந்துருகிப் பாடியிருக்கின்றார். இவர் திருமான்மேற் பாடியிருக்கும் மூன்றும் நான்காம் பரிபாடல்களில் இராம இராவண கதை ஒரு தினைத்துணையாயினும் எடுத்துக் குறிக்கப்படாமை நுண்ணிய ஆராய்ச்சியறிவுடையார் எல்லாரானும் பெரிதுங் கருத்திற் பதிக்கற்பால தொன்றும். இவர்தாம் அதனை மொழிந்திலராயினும், இரண்டாம் பரிபாடல் பதின்மூன்றும் பரிபாடல் பதினைந்தாம் பரிபாடல்களை முறையே திருமான்மேற் பாடிய கீரந்தையார், நல்லெழினியார், இளம்பெருவழுதியார் முதலான நல்லிசைப் புலவராதல் அவ்விராம இராவணகதையைக் குறித்து ஏதேனும் மொழிந்ததுண்டோ வென்றால் அதுவும் ஓர் எட்டுணையுங் காணேம். பிற்காலத்துவந்த ஆழ்வார்களெல்லாரும் இராமனைத் திருமாலின் பிறப்பாகக்கொண்டு அவன் இராவணனைச் செற்ற ஆண்மையைப் பலவாற்றானும் வியந்து பாடிஇருக்க, இவ் வாழ்வார்கட்குப் பன்னெடுங் காலம் முற்பட்டிருந்த கடுவனிளவெயினனார் முதலானு பழந்தமிழ்ச் சான்றோர்கள் தாம் திருமாலை வழுத்திப் பாடிய பரிபாடற் செய்யுட்களில் இராமனையாதல் அவன் இராவணனைச் செற்றமையாதல் ஒருசிறிதுங் குறியாமை சாலவும் புதுமையாய்க் காணப்படுகின்றதன்றோ? திருமாலைப் பராவிய பரிபாடற் செய்யுட்களையும், பிற்காலத்தவரான ஆழ்வார் பாடல்களையும் புடைபடவைத்து அளந்து காணவல்ல நடுநிலையாளர்க்கு, இராம இராவண கதை பரிபாடலிற் காணப்படாமை ஆழ்ந்ததோர் ஆராய்ச்சி யுணர்வினைத் தோற்றுவித்து, அங்ஙனமொரு கதை அக் காலத்திற் றென்னாட்டில் வழங்காமையினையும், அது பிற்காலத்தில் இங்குவந்து குடியேறிய ஆரியப்பார்ப்

னராற் புனைந்துகட்டப்பட்டமையினையும் பொள்ளெனப் புலப்படுக்கும்.

இவ்வாறாக, இராம இராவணகதை திருமான்மேற் பாடப்பட்ட மிகப் பழைய பரிபாடற் செய்யுட்களிலும் ஓர் அணுத்துணையுங் காணப்படாதாக, முருகப்பிரான் சூர்மாவினைச் செற்ற கதையோ அக் கடுவனிளவெயினனார் முதலான சான்றோர் இயற்றிய பரிபாடற் செய்யுட்களிற் பலவிடத்தும் விளக்கமாகச் சொல்லப்பட் டிருக்கின்றது. ஐந்தாம் பரிபாடலிற்,

"பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்குச்
சேயுயர் பிணிமுகம் ஊர்ந்து அமர்உழக்கித்
தீயழல் துவைப்பத் திரியவிட் டெறிந்து
நோயுடை நுடங்குசூர் மாமுதல் தடிந்து
வென்றியின் மக்களுள் ஒருமையொடு பெயரிய
கொன்றுணல் அஞ்சாக் கொடுவினைக் கொஃறகை
மாய அவுணர் மருங்கறத் தபுத்தவேல்
நாவலந் தண்பொழில் வடபொழில் ஆயிடைக்
குருகொடு பெயர்பெற்ற மால்வரை யுடைத்து
மலையாற்றுப் படுத்த மூவிரு கயந்தலை."

என்று முருகப்பிரான் கடன்மேற் சென்று சூரபன்மனைக் கொன்று, அவன்றன் கிளைஞராகிய அவுணரை மடித்த வீரலாற்றினை ஆசிரியர் கடுவனிளவெயினனார் விளங்கக் கூறினமை காண்க. இங்ஙனமே பதினான்காம் பரிபாடலில்,

"சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே."

என ஆசிரியர் கேசவனாரும், பதினெட்டாம் பரிபாடலில்,

"போரெதிர்ந் தேற்றார் மதந் தபக்
காரெதிர்ந் தேற்ற கமஞ்சூல் எழிலிபோல்
நீர்நிரந் தேற்ற நிலந்தாங்கு அழுவத்துச்
சூர்நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய்."

என ஆசிரியர் குன்றம் பூதனாரும், பத்தொன்பதாம் பரி பாடலில்,

"எவ்வத் தொவ்வா மாமுதல் தடிந்து
தெவ்வுக் குன்றத்துத் திருந்துவேல் அழுத்தி
அவ்வரை யுடைத்தோய்."

என ஆசிரியர் நப்பண்ணனாரும், இருபத்தொன்றாம் பரிபாடலில்,

"கொள்ளாத் தெவ்வர் கொள்மா முதல்தடிந்து
புள்ளொடு பெயரிய பொருப்புப்புடை திறந்தவேல்."

என ஆசிரியர் நல்லச்சுதனாரும் முருகக்கடவுள் சூரனைச் செற்ற வரலாறு கூறாநிற்பர். இங்ஙனமே, அகநானூறு (ருகூ), புறநானூறு (உரு), பதிற்றுப்பத்து (கக), திருமுருகாற்றுப்படை (ருகூ-கூக), சிலப்பதிகாரம் (கூ, சகூ-ருக; உரு, கஅஅ-கஎ௦) முதலிய பழைய தமிழ் நூல்களிற் கூறப்படும் இவ் வரலாற்றுப் பகுதிகளை ஈண்டெடுத்துக் காட்டலுறின் இது மிக விரியுமென அஞ்சி இத்துணையின் நிறுத்தினும். இவ்வாற்றால், தென்கடற்கண் ஒரு தீவில் தலைமைபெற்றிருந்தோனை சூர் என்னுங் கொடியோன் ஒருவனையும் அவனைச் சார்ந்த கிளைஞராகிய அரக்கரையுந் தொலைத்தற் பொருட்டு முருகப்பிரான் அவர்மேற் சென்று அவரையெல்லாம் மடித்த வரலாறு இத் தென்றமிழ் நாட்டின்கட் பண்டைநாளிலே மிக்கு வழங்கினமை நன்குபுலனும். இவ் வரலாறு இங்கு வழங்கிய பண்டைநாளில், இராம இராவணகதை இந்நாட்டவர்க்கு எள்ளளவுந் தெரியாது; ஏனெனிற், பிற்காலத்தில் திருமாலைப் பாடிப் பரவினவர்களெல்லாரும் இராமனைத் திருமாலின் விழுமிய பிறப்பாகக் கொண்டு அவன் இராவணனைக் கொன்ற வெற்றித் திறத்தை வியந்தெடுத்துப் பல்காலும் விளம்பினாற்போலத், திருமாலைப்பாடிய பழைய பரிபாடல் ஆசிரியருள் ஒருவராயினும் ஓர் அணுத்துணையேனும் அவ்விராம இராவண கதையைக் குறியாமையின் என்பது. இராமாயணகதை தென்னாட்டில் வழங்காத பண்டைநாளில் முருகக்கடவுள் சூர்மாவினைச் செற்றவரலாறு அதன்கண் மிக்கு வழங்கினமையானும், ஆரியப்பார்ப்பனர் தென்னாடு புகுதாத காலத்தே வடநாட்டின்கட் பயின்ற 'தசரத ஜாதகத்'தில்

இராமன் தெற்குநோக்கி வந்தானெனவாதல் அவன் இராவணனைக் கொன்றானெனவாதல் ஏதொன்றுஞ் சொல்லப்படாமையானும், ஆரியப் பார்ப்பனர் தமிழ் நாட்டிற் குடியேறியபின், இங்குப் பெருகிவழங்கிய 'முருகப் பிரான் சூரனை அட்ட வரலாற்றினைக்' கண்டு அது தமிழ் மக்கட்குரிய சைவசமய மேன்மையை இனிது புலப்படுக்குந் திறன் உணர்ந்து மனம்பொறாது, ஆரியராகிய தமக்கும் அத்தகையதோர் உயர்வினை நிலைபெறுத்திக்கொள்வான் விழைந்து, அவ் வரலாற்றினோடு ஒப்ப, 'இராமன் என்பான் ஒருவனும் தெற்கே போந்து இலங்கையில் அரசுவீற்றிருந்த இராவணனைக் கொன்று தேவர்களைக் காத்தான்' எனவும், 'அங்ஙனம் ஆண்மைச்செயல் புரிந்த இராமன் என்பான், இராவணனைத் தலைக்கொண்ட அரக்கர் குழாத்தினை அழிக்குமாறு நான்முகன் உருத்திரன் முதலான தேவர்களெல்லாரும் ஒருங்கு வேண்டியதற்கு இசைந்து இந் நிலவுலகின்மிசைப் பிறந்த திருமாலே ஆவன்' எனவும புதுவதாக ஒரு கதைகட்டி, அதன் வாயிலால் ஆரியப் பார்ப்பனராகிய தமதுயர்வினையும், தாம் வழிபடு தெய்வமாக்கொண்ட இராமனதுயர்வினையும் நிலைநிறுத்தி வரலாயினரென்னும் உண்மை நன்கு பெறப்படாநிற்கும். எனவே, முருகன் சூர்மாவினைச் செற்றவரலாறு, இராமாயணகதை இங்குத் தெரியத்துவங்கிய கி. பி. முதல் நூற்றாண்டுக்கு முற்றொட்டே வழங்கிய மிகப் பழைய வரலாறாகலின், இங்குப்போந்த ஆரியப்பார்ப்பனர் அது தன்னையே மாற்றி 'இராமாயணம்' மென்னும் பெயரால் மற்றொன்று படைத்துவிட்டனரேயல்லாமல், இராமாயணகதை உண்மையாக நிகழ்ந்ததொன் றென்பது துணிபொருளாமென்க. கந்தபுராண கதையினையும், இராமாயண கதையினையும் புடைபடவைத்து ஒற்றி ஒப்பிட்டுக் காணவல்ல நடுநிலையாளர்க்கு, இராமாயணகதை, கந்தபுராண கதையைப் பார்த்துப் பின்னர்ச் செய்யப்பட்டதொரு பொய்க்கதையே யாதல் தெற்றெனவிளங்காநிற்கும்.

அவ்வாறு 'இராமாயண கதை' பொய்யேயாயின் ஆகுக, 'கந்தபுராண கதை' மட்டும் மெய்யேயாதல் யாங்

ஙனம்? மனமொழி மெய்களுக்கு எட்டாத இறைவன் ஆறுமுகங்களும் பன்னிருகைகளும் உடைய முருகக்கடவுளாக இமயமலைக்கட் புல்லடர்ந்த ஒரு பொய்கையிலே இம் மண்ணுலகிற் பிறந்தருளினனென்றலும், அவன் தேவர்களைக் காத்தற்பொருட்டு அவர்கட்கு ஓவாது இடுக்கண் புரிந்துவந்த இலங்கை மன்னனாகிய சூரன்மேற் படையெடுத்துச் சென்று, அவனொடு நேர்நின்று பொருது அவனைச் செற்றனனென்றலும், பிறவும் நம்புதற்கு உரிய அல்லவாகலான் எனிற், கூறுதும்: தென்கடற் கண்ணதொரு தீவில் அரசுபுரிந்த சூரன் என்பானொடு பொருது அவனை மடித்த முருகன் என்பான் உண்மையிலே முருகக் கடவுள் அல்லன்; முழுமுதற் கடவுளாகிய சிவபிரானது கட்டிளமைக் கோலமே 'முருகன்' எனப்படுவதாகும். 'முருகு' என்னுஞ்சொல் இளமை என்னும் பொருட்டாதலைத் 'திவாகரத்'திற் காண்க. இறைவனை இங்ஙனம் இளமைக்கோலத்தின் வைத்து வழிபட்டு, அவன்றன் அருளைப்பெற்று அவன் பெயர்பூண்டவனான அரசன் ஒருவனே தென்கடல் நோக்கிப்பெயர்ந்து அதன்கண் ஒரு தீவில் அரசாண்ட சூரனைச் செற்றவனாவன். "சிவனடியாரைச் சிவனெனப் பேணுக" என்று சைவசமயம் அறிவுறுத்தலின், முருகப்பிரான்றன் அடியவனும் அவன் பெயர் பூண்டவனும் ஆன வடநாட்டு மன்னன் ஒருவனை முருகப்பிரானாகவும், அவன் ஆற்றிய ஆண்மைத்தொழிலை முருகப்பிரானே செய்ததொன்றாகவும் பண்டைநாளிருந்த சான்றோர் கொள்வாராயினர். உமையம்மையே தடாதகைப் பிராட்டியாகவும், இறைவனே சுந்தரபாண்டியனாகவும் போந்து மதுரையிற் செங்கோல் ஓச்சினர் என்றாற்போல் வருங் கதைகளும் இப் பெற்றியனவேயாம்; தடாதகையும் சுந்தரபாண்டியனும் அம்மையப்பரருளை முற்றப்பெற்ற அரசியும் அரசனுமேயாவரென்பது அப் புராணகதையின் உண்மைப்பொருள். தக்கன் வேள்வியைத் தகர்த்த வீரபத்திரரும், தாருகாவனத்து இருடிகளின் செருக்கையழித்த பிட்சாடனரும் அங்ஙனமே எல்லாம்வல்ல சிவபிரான் அருளை முழுதும் பெற்றுக் கிளர்ந்துநின்ற விடலை

மறவரேயாவரெனவும், அவரால் தகர்ப்புண்டழிந்த அவ் வேள்விகள், சிவபிரானை வணங்காமல் ஊனையும் சோமப் பூண்டின் சாறாகிய கள்ளையும் அருந்துதல் விரும்பி இந்திரன் வருணன் மித்திரன் போன்ற சிறு தேவர்களை நோக்கி அக் காலத்திருந்த ஆரியர் வேட்ட வெறியாட்டு வேள்விகளேயா மெனவும் உணர்ந்து கொள்க. இவ்வா றெல்லாம் சிவனடியார்களான அரசர்களும் விடலை மறவர் களும் அருந்தவத்தோர்களும் ஆற்றிய செயற்கருஞ் செயல் களைச் சிவபிரான் செயல்களாகவும், அச் செயல்கள் செய் தோரைச் சிவமூர்த்தங்களாகவும், வைத்துப் புனைந்துரை வகையாற் புராணகதைகள் வரையப்பட்டமையின், இச் சிவமூர்த்தங்களையும் இவற்றிற்கு அப்பாற்பட்ட முழுமுதற் சிவத்தையும் பகுத்துணர்ந்துகொள்ள மாட்டாத பருப் பொருளறிவினர் இச் சிவமூர்த்தங்களையே சிவமெனக் கொண்டு விடுவரென அஞ்சியே, முழுமுதற் சிவத்தின் உண்மையியல்பு (சொரூப இலக்கணம்) தேற்றுவான் எழுந்த சைவசித்தாந்த நூல்களாகிய 'திருமந்திரம்,' 'சிவ ஞானபோதம்' முதலாயின, 'புராணங்களுட் கூறப்படுஞ் சிவமூர்த்தங்களெல்லாம் முப்பத்தாறு மாயாதத்துவங் களுள் நிற்கும் மூவகை யான்மாக்களின் பாலனவேயாம்' என்றும், 'இம் முப்பத்தாறு தத்துவங்கட்கும் அத் தத்து வங்களுள் வைகும் மூர்த்திகட்கும் அப்பாற்பட்ட முழு முதற்பொருளே உண்மைச் சிவமாம்' என்றும் இவை தம் மின் வேற்றுமை தெரித்தோதுவவாயின வென்க. எனவே, சிவபுராணங்களுட் கூறப்படும் அரும்பெருஞ் செயல்களைப் புரிந்த சிவமூர்த்தங்க ளெல்லாம் சிவபிரானருளை நிரம்பப் பெற்று மாயா தத்துவங்களின் வைகி அவனது ஆணை வழிநின்று அச் செயல்களைப் புரிந்த புனித உயிர்களே யல்லாமல், அவரெல்லாம் மாயா தத்துவங் கடந்த முழு முதற் சிவமாதல் செல்லாமை சைவசித்தாந்த நுண் பொருள் பற்றிக் கடைப்பிடித் துணர்ந்து கொள்க.

அஃதொக்கும்; முழுமுதற் சிவத்தின் வேறாகாத முருகப் பிரானே நேரிற்போந்து சூர்மாவொடு பொருதான்

என்றுரைத்தலாற் படும் இழுக்கு என்னையெனின்; ஐந்தாம் பரிபாடலில் முருகவேள் பிறப்பைக் கூறுகின்றுழி, இந்திரன் வேண்டுகோளுக்கு இசைந்து இறைவன் உமை கொண்ட கருவைப் பல துண்டங்களாகப் பிளந்து கழிக்க, அவ்வாறு கழிந்த அக் கருத்துண்டங்களின் விழுப்பம் உணர்ந்த முனிவர்கள் எழுவரும் அவற்றை ஏற்றுப்போய் வேள்வித் தீக்கட் பெய்து, பின்னர் அவற்றை அதன்க ணின்றும் எடுத்துத் தம் மனைவியர் கைக்கொடுப்ப, அவருள் அருந்ததி ஒழியப் பிறர் அறுவரும் அவற்றைத் தம் கருப்பையிற் செறித்துச் சூன்முதிர்ந்து இமயச்சுனை யிற் றாமரைப் பாயலிலே பயந்தாராக, அக் குழவிக ளாறும் வளர்ந்து, தமமை வந்தெதிர்த்த இந்திரனைப் பொருது தொலைக்குங்கால் ஆறு திருவுருவும் ஒருருவாயின வென்று அதன் ஆசிரியர் கடுவனிளவெயினனார் அவ் வரலாறு தெரித்தோதுதல் காண்க. பிற்காலத்தில் வட மொழிக்கண் எழுதப்பட்ட கந்தபுராணம் புகலும் முருகன் பிறப்பு வரலாறு, பழைய பரிபாடல் வரலாற்றினைத் திரித்து உரைத்தலின், அஃது உண்மையெனக் கொள்ளற் பாற்றன்று. ஆசிரியர் நக்கீரனார், இப் பரிபாடல் வரலாற் றினையே தழுவிக் கூறினாரென்பது 'திருமுருகாற்றுப்படை' யுரையில் உரைகாரர் நச்சினார்க்கினியர் வரைந்த உரைப் பகுதியானும் நன்கு தெளியப்படும். மண்ணுலகிற் பிறக் கும் யாக்கையின் கரு எம்மனோரைப்போல் தசை என்பு நரம்பு குருதி முதலியவற்றால் ஆக்கப்படுவதே யல்லாமற் 'கந்தபுராணம்' நுவலுமாறு போல், வெறுந் தீப்பொறி யால் ஆக்கப்படுவதன்று. வடநாட்டு மன்னன் ஒருவ னுக்குப் பிறந்து முருகன் பெயர்பெற்ற குழவி மக்கள் யாக்கையுடையதாகலின், அக் காலத்து வழங்கிய வரலாறு அதனை ஊனுடம்பு கொண்டதெனவே குறித்தது; கடுவ னிளவெயினனாரும் அம் முருகனைத் தெய்வமாக் கொண் டாராயினும் அவ்வுண்மை பிழையாமல் அவன் மக்கள் யாக்கை யுடையனென்னுந் தன்மை தோன்றவே மொழிந் திட்டார். ஆனால், பிற்காலத்தில் வடமொழிக் கந்த புராணம் இயற்றினவரோ அவனை முருகக்கடவுளாகக்

கொண்டபின் அவனை மக்கள் யாக்கை யுடையனெனக் கூறுதற்கு ஒருப்படாராய்ச் 'சிவபிரான் றன் ஆறு திருமுகங்களில் மிளிரும் நெற்றிக் கண்கள் ஆறினின்றுந் தோன்றிய ஆறு கனற்பொறிகளே ஆறு திருமுகங்களை யுடைய முருகக்கடவுள் ஆயின' என்று அவ் வுண்மையைப் பிறழ்த்திக் கூறினர். இன்னோரன்ன பிழைபாடுகள் மக்களைத் தெய்வமாகக் கருதுதலால் நேர்வனவாகும்.

இனிக், கடுவனிளவெயினனார் என்னும் நல்லிசைப் புலவரோ தங்காலத்து வழங்கிய வரலாற்றினைச் சிறிதுந் திரிபுபடுத்தாமல் உள்ளதை உள்ளபடியே எடுத்து உரைத்தலானும், அவருரைக்கும் அவ் வரலாற்றினால் 'முருகவேள்' எனப் பெயர் பெற்றோன் ஊனுடம்பு வாய்ந்தோனென்பதே பெறப்படுதலானும், நினைந்தவற்றை நினைந்தவளவே முடிக்கவல்ல இறைவன் ஊன் உடம்பு மேற்கொண்டானென்றல் அவனது இறைமைத் தன்மைக்கு இழுக்காதலோடு 'இறைவன் என்பான் வினைக்கீடாகப் படைக்கப் படும் ஊனுடம்பிற் பிறத்தலும் அதனை விட்டு இறத்தலும் இல்லான்' என்று வற்புறுத்துரைக்கும் சைவ சித்தாந்தக் கோட்பாட்டிற்கு அது சிறிதும் இசையாமையானும், சூர்மாவினை அடுதற்கு வந்த அம் முருகவேள் மக்கள் யாக்கையிற் பிறந்த ஓர் அரசிளைஞனேயன்றி எல்லாம்வல்ல முருகக்கடவுள் அல்லன் என்பது திண்ணமாம் என்க. எம்மனோர்க்கு இருப்பிடமான இம் மண்ணுலகத்தினும், எமதூனக் கண்கட்குப் புலனும் எண்ணிறந்த வான்மீனுலகங்களினும், எமது கட்புலனுக்கும் எட்டாத ஏனை எண்ணிறந்த உலகங்களினும் அளவிடப் படாத உயிர்களை ஒவ்வொரு நொடிப் பொழுதுந் தோற்றியும் அழித்தும் வரும் எல்லா ஆற்றலும் வாய்ந்த முதல்வனான முருகப்பிரான், மக்களுள் ஒருவனாகிய சூரன் என்பானை அழித்தற்கு உருவுகொண்டு படைதிரட்டியும் வருதல் வேண்டுமோ? அவன் நினைந்தவளவானே அச் சூரன் சாம்பராய்ப் போதல் திண்ணமன்றோ? ஆதலால், அவனைத் தொலைத்தற் பொருட்டு

வடக்கிருந்து படைதிரட்டி வந்த முருகன் என்பான் முருகக் கடவுளை வழிபடும் ஓர் அடியவனேயன்றி அவனே அம் முருகக் கடவுள் ஆகானென்று கடைப்பிடிக்க.

அற்றேற், பரிபாடல் கூறும் முருகன் பிறப்பினுக்கு வழிவிடுமாறு யாங்ஙனமெனின்; இந்திரன் எனப் பெயர் பூண்ட ஆரிய அரசன் ஒருவன், சிவபிரான் பெயர்பூண்ட தமிழ்மன்னன் ஆற்றல் மிக்கவனாய் இருத்தல் ஓர்ந்து, அத் தமிழ்மன்னன் கால்வழியற்றுப் போதலுக்கு ஒரு சூழ்ச்சி செய்து, அவன் றனக்குப் பிறந்த ஆண்மகவை அவனே வெட்டிச் சிதைக்குமாறு புரிந்துவிட, அத் தமிழ் மன்னனால் தனது உடம்பில் ஆறு இடங்களில் வெட்டுப் பட்டு ஒரு மலைச்சுனையில் எறிந்துவிடப்பட்ட அம்மகவு தமிழ் முனிவர்கள் அறுவராற் கண்டெடுக்கப்பட்டு, அம் முனிவரரின் மனைவியர் அறுவரால் வளர்க்கப்பட்டு வளர்ந்து பெரியனாகித், தனக்குக் கேடுசூழ்ந்த இந்திரனாகிய அவ்வாரிய அரசனை வலிதொலைத்துப், பின்னர்த் தன் றந்தையினால் ஏற்றுக் கொள்ளவும் பட்டுத், தனது அரசைக் கைக்கொண்டு, அதன்பிற் றெற்குநோக்கிப் போந்து சூர்மாவினை வென்றமையே அக்கதையின் மெய்ப் பொருளாமென்க. இங்ஙனம் அல்லாக்கால், ஒவ்வோர் உடம்பிலும் ஒவ்வோர் உயிர் உடையனவாய் வளர்ந்த பிள்ளைகள் அறுவரும் ஒட்டி ஒரே உயிருடைய ஒரு பிள்ளையாய் ஆறுமுகங்களும் பன்னிரு கைகளுமுடைய முருகவேள் ஆதல் யாங்ஙனம்? ஒவ்வோர் உயிரும் எஞ்ஞான்றும் அழிவு படாதுள்ள ஒவ்வொரு தனிமுதலேயா மென்றும், ஓர் உயிர் மற்றோர் உயிராக மாறுதல் எஞ்ஞான்றும் எவ்விடத்தும் இல்லையென்றும், ஓர் உயிர் எடுக்கும் உடம்பு அது தனக்குள்ள வினைக் கீடாக வருவதாய் அது தனக்கே யுரியதாவதல்லது அது மற்றோர் உயிர்க்கு உரியதாதல் செல்லா தென்றும் வலியுறுத்திச் சொல்லுஞ் சைவசித்தாந்த உண்மையை நுணுகி யாராய வல்லார்க்கு, அறுவேறு யாக்கைகள் உடைய அறுவேறு பிள்ளைகள ஒன்றுகூடி ஆறுமுகங்களும் பன்னிருகைகளுமுடைய ஒரு

முருகவேள் ஆயினவென்னும் வரலாறு அவ்வரசனின் மிகுந்த ஆற்றலைக் குறிக்கும் ஒரு புனைந்துரைவகையே யல்லாமல் இயற்கைக்கு மாறுரும். அஃது இயற்கை யுண்மையுரை யாகாமை நன்கு விளங்கும். இம் மண்ணுலகத்தின் நில அடுக்குகளை அகழ்ந்து மக்கள் முதல்முதல் உண்டான காலத்தை நிலநூல் வல்லார் கண்டறிந்திருக்கின்றார்கள்; அக்காலம் முதல் இக்காலம் வரையில் அவர்களால் அகழ்ந் தெடுக்கப்பட்ட மக்களின் எற்புடம்புகள் எல்லாம், இஞ்ஞான்றுள்ள மக்கள் உடம்பின் அமைப்பைப்போல் ஒற்றைத் தலையும் இரட்டைக் கைகளும் உடையனவாய் இருக்கக் காண்டுமேயல்லாமல், அவற்றுள் ஒன்றேனும் ஒன்றுக்கு மேற்பட்ட தலையும் இரண்டுக்கு மேற்பட்ட கையும் உடையதாயிருத்தலைக் கண்டோமில்லை. மேலும், உடப்புநூல் வல்லார் ஓருடம்பில் ஒன்றுக்கு மேற்பட்ட தலையும் இரண்டுக்கு மேற்பட்ட கையும் இருத்தல் இயலாதென்பதை நன்கு விளக்கிக்காட்டியிருக்கின்றனர். ஆகவே, இயற்கையில் எஞ்ஞான்றுங் காணப்படாத ஆறு முகமும் பன்னிரண்டு கையும் முருகவேளுக்குக் கூறல் அவன்றன் பேரறிவினையும் பேராற்றலினையுங் காட்டும் ஒரு புனைந்துரை வகையே யல்லாமல் உண்மையன்றெனத் தெளிக.

இவ்வாறு முருகக் கடவுளை வழிபட்டு அவன்றன் அருளைப் பெற்ற முருகவேள் என்னும் வடநாட்டு அரசன், ஆரிய மன்னர்க்கும் முனிவர்க்கும் பெரும் பகைவனுய்த் தென்கடற் கண்ணே அரசு புரிந்த 'சூர்மா' என்னும் அரக்க அரசன்மேற் படையெடுத்துவந்து அவனை வென்றமையே பண்டுதொட்டு நிகழும் உண்மை வரலாறும். முதலில் முருகவேளுக்குப் பெருந் தீது செய்த இந்திரன் என்னும் ஆரிய அரசன், அம் முருகன் பேரறிவும் பேராற்றலும் வாய்ந்தவனுய் இருத்தலை உணர்ந்தபின், அவனை அடி வணங்கி அவனைத் தனக்கும் தன்னவர்க்கும் உதவியாக அமைத்துக்கொண்டமை வியப்பன்று. ஏனெனில், அறிவாற்றல் நாகரிகங்களிற் சிறந்த தமிழர்களைப் பண்டு

தொட்டு ஆரியர்கள் தம்வழிப்படுத்தி வருதல் இத்தகைய கீழறுத்தல்களினாலேயாம். தமிழர்களைத் தாம் எதிர்த்து அழிக்கும் முயற்சி பயன்படாதெனக் கண்டால், உடனே அவர்க்கு அடிமைகளாய் அவர்க்குப் பணிந்தொழுகுவார்போற் காட்டி, அவருள் மிக்காரொரு பக்கத்தாரைத் தமக்கு உதவியாக்கி, அவரைக் கொண்டே அவருள் மற்றொரு பக்கத்தாரை யழித்துக் கெடுத்தல் அவ்வாரியர் இன்றுகாறுங் கைக்கொண்டு போதரும் படிற்றொழுக்க முறையாம். ஆரியர் தம்மை உயர்த்தித் தேவர் எனவும், ஏனைத் தமிழரைத் தாழ்த்தித் 'தாசர்,' 'தஸ்யூக்கள்,' 'அசுரர்,' எனவும் பேசாநிற்பர். அவர்கள் தாம் செய்துபோந்த வெறியாட்டு வேள்விகளுக்குத் தமிழ் மக்களும் தமிழ அரசர்களும் இசைந்து வராமை கண்டே அவர்களை அங்ஙனம் வெறுப்பதும் இகழ்வதுஞ் செய்வாராயினர். தமிழ் மன்னர்களிற் சிலர் ஆரியருடைய வெறியாட்டு வேள்விகளை அழித்துவந்தமை பற்றியே, அத்தமிழ் மன்னர்களில் வேறு சிலரை அவர்க்குப் பகைவராய்த் தூண்டிவிட்டு, அவர்களுள்ளேயே ஒருவரோடொருவர் போர்புரிந்து மடியுமாறு செய்து வந்தனர். உயிர்களிடத்து அருளிரக்கமுடைய எவர்க்குத்தாம் ஆரியர்தம் உயிர்க்கொலை வேள்விகள் அருவருப்பினை விளைவியா! பண்டு தொட்டே தமிழ்மக்களுட் சிறந்தார் "கொலைகடிந்தும் புலவுநீக்கியும்" வாழ்பவராகலின், அவர்கள் ஆரியர் வேட்டு வந்த புலைத்தொழில் வேள்விகளை வெறுத்தல் இயல்பேயாம். இதனாலன்றோ தமிழ் நாட்டிற் குடியேறிய ஆரியப்பார்ப்பனர் வேள்விவேட்டலை இஞ்ஞான்று அறவே யொழித்துத், தமிழர் கைக்கொண்ட புலாலுண்ணாச் சைவநோன்பினைத் தாமுந் தழீஇ அவராற் பாராட்டப்படுவாராயினர்! இவ்வியல்பினராம் ஆரியர் வடநாட்டுத் தமிழ்வேந்தனாகிய முருகவேளைத் தம்மவர்க்குப் படைத்தலைவனாய் அமர்த்திக்கொண்டுபோந்து, தென்கடற்கண் இலங்கையில் அரசுபுரிந்த சூரனை எதிர்த்து அவனை அவனால் மடிவித்தது அவர்தம் இயற்கைக்கு ஒத்ததேயாம் என்க.

இனி, இங்ஙனஞ் சூரனை மாய்த்த முருகவேள் சைவ சமயத்தவனாய்த் தமிழர்க்குரிய சிவபிரானையே வழிபட்டுச் சைவசமயக் கோட்பாட்டினை எங்கும் பரப்புவனாகலின், அவன் கொண்டவெற்றி தமிழ்மென்மக்களால் மிகவும் பாராட்டப்பட்டுத் தமிழகம் எங்கும் வியந்து பேசப்படுவதாயிற்று; அம் முருகவேளும் முருகக்கடவுளேயெனத் தமிழ்நாடெங்கணும் வைத்து வணங்கப்படுவானாயினன். இவ்வாறு, முருகன் சூர்மாவினைச் செற்ற வரலாறு தமிழர்க்கு ஓர் ஆக்கமாய் அவரால் பெரிதுங் கொண்டாடப்பட்டு வருதலைக், கி. மு. முதல் நூற்றாண்டின் துவக்கத்தில் இத்தென்னாடு புகுந்து குடியேறிய, ஆரியப் பார்ப்பனர் கண்டு, அவ் வரலாற்றினைத் தமது உயர்ச்சிக்கு இசைந்ததாம்படி திரிக்க விழைந்து, இலங்கையை ஆண்ட சூரன் என்னுந் தமிழ்மன்னனை இராவணனாகவும், அவனைப் பொருது மடித்த முருகனை இராமனாகவும் மாற்றி, அதனோடு பெரும்பாலும் ஒப்பவே இராமாயண கதையை வரவரப் பெருக்கி யெழுதலாயினர். இவ்வாறு அவ் வரலாற்றினை முதலிற் றிரித்து இராமாயணகதையை ஆக்கிய 'வான்மீகி' என்னும் வடமொழிப் புலவர், முருகனால் அடப்பட்ட சூரன் ஒற்றைத்தலையும் இரட்டைக் கைகளும் உடையனாகவே இருந்தமையின், அவனை இராவணப்பெயர் கொடுத்துத் தாம் மாற்றிய வழியும் அவனை ஏனை மக்களைப்போல் ஒற்றைத் தலையும் இரட்டைக் கைகளும் உடையனாகவே வைத்துக் கூறினர். அவ் வான்மீகிக்குப்பின் இராமாயண கதையை பெருக்கி யெழுதப் புகுந்த ஆரியப்பார்ப்பனர், சூரனைக் கொன்ற முருகனிலும் இராவணனைக் கொன்ற இராமனைச் சிறந்தோன் ஆக்குதற்குக் கருதி, ஒற்றைத் தலையும் இரட்டைக் கைகளும் உடைய சூரனைக் கொல்லுதற்கு ஆறு தலையும் பன்னிரு கையுங் கொண்டுவந்தது ஆண்மையன்று; பத்துத் தலையும் இருபது கையும் உடைய இராவணனைக் கொல்லுதற்கு ஒற்றைத்தலையும் இரட்டைக் கையும் உடைய இராமனாய் வந்ததே ஆண்மையாம் என்பது போதர, ஆராய்ச்சியுணர்வில்லாத புல்லறிவினரை

மயக்கி, அவர் முருகக்கடவுள் வழிபாட்டைக் கைவிட்டு, இராமனைத் தெய்வமாகக் கைப்பற்றுதல் வேண்டி, இராவணனுக்குப் பத்துத் தலைகளும் இருபது கைகளும் உள வென்று கதைகட்டி, அதனை இராமாயணத்துள் நுழைப் பாராயினர். இவர் இங்ஙனஞ் செய்து இராமனைத் தெய்வ மாக்குதல்கண்ட சைவசமயச் சான்றோர்கள், மக்களுள் ஒருவனாகிய அவனைத் தெய்வமாக்கி முழுமுதற் கடவுளா கிய சிவத்தை வணங்கவொட்டாமற் செய்யும் ஆரியரது தீச்செயலை யொழித்துச், சிவமே எல்லாம்வல்ல தென்ப தனைக் காட்டக், 'கயிலைமலையைப் பெயர்த்த அப் பத்துத் தலை இராவணனின் இருபது கைகளையும் சிவபிரான் தமது காற்பெருவிரல் நுனியால் அம் மலைக்கீழ் அடர்த்து நெரித்தார்' என்னும் பிறிதொரு கதையினைப் படைத்து, அதனை அவ்விராமாயணத்தின் 'உத்தரகாண்டக்'கதை ஆக்கி, அவ்வாற்றால் இராமனது சிறுமையும் சிவபிரா னது பெருமையுந் தெளியவைத்தனர்.

அற்றேல், வான்மீகி கூறாத பத்துத்தலையும் இருபது கையும் இராவணனுக்கு உளவாகக் கதைபுனைந்தோர் அவர்க்குப் பின்வந்த பின்னையோரேயென உரைப்பிற், பழைய தமிழ்க் கலிப்பாக்களின் தொகைநூலாகிய 'கலித் தொகை'யில்

"இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிபொலி தடக்கையிற் கீழ்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன்போல."

என்று [1]பத்துத்தலை யிராவணன், சிவபிரான் அமர்ந்த திருக்கைலாய மலையைப் பெயர்க்க முயன்ற கதை எடுத் துரைக்கப்பட்டமை என்னையெனின்; அக் கதை கூறும் அப் பாட்டுள்ள குறிஞ்சிக் கலியை இயற்றியவர் கபிலர் என்னும் நல்லிசைப் புலவரே யாவரென்பது,

1. குறிஞ்சிக்கலி, உ.

"பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்
மருத னிளநாகன் மருதம்—அருஞ்சோழன்
நல்லுத்திரன் முல்லை, நல்லந்துவன் நெய்தல்,
கல்விவலார் கண்ட கலி."

என்னும் பழைய வெண்பாவால் அறியப்படும். இக் கபிலர், 'இருங்கோவேள்' என்னும் சிற்றரசனொருவனுக்கு நண்பர் என்பது, பாரி என்னும் வள்ளலின் மகளிரை அவன் மணந்து கொள்ளுமாறு அவர் அவனை வேண்டி யும் வருந்தியும் பாடிய பாடல்களால் நன்கு விளங்கும்.[1] இவ் விருங்கோவேள் என்னுங் குறுநிலமன்னன், தலை யாலங்கானத்திற் பாண்டியன் நெடுஞ்செழியனொடு போர் செய்து அவனாற் கொல்லப்பட்டான். இவன் அக் காலத் திருந்த சேரசோழ பாண்டியர்கட்குப் பெரும்பகைவனாயிருந் தமையின், இவனுக்குப் பின்வந்த இவன் சுற்றத்தாரை யெல்லாம் கரிகாற்சோழன் தொலைத்தான் என்பது "இருங்கோவேள் மருங்குசாய" என்பதனால்[2] விளங்காநிற் கும். எனவே, இருங்கோவேள் என்பான் சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கு முற்பட்டோனாதலும், அதனால் அவ் விருங்கோவேளைப் பாடிய கபிலரும் கரிகாற் சோழனுக்கு முன்னிருந்தோராதலும் பெறப்படும். 'மணிமேகலை,' 'சிலப் பதிகாரம்' எழுதப்பட்ட காலத்திற் காவிரிப்பூம்பட்டினத் தில் அரசுபுரிந்த சோழன் 'கிள்ளிவளவன்' என்பான் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்தவனென்பதை மேலே உசகூ-ஆம் பக்கத்தில் விளக்கிக்காட்டினோம். இக் கிள்ளி வளவன், சோழன் கரிகாற் பெருவளத்தானுக்குப் பேரனாகலின், இவனுக்கு இரண்டு தலைமுறை முற்பட்ட கரிகாலன் கி. பி. முதல் நூற்றாண்டின் இடையிலாதல் இறுதியிலாதல் இருந்தானாகற் பாலன். ஆகவே, கரிகால னுக்கும் முற்பட்ட இருங்கோவேள் காலத்தவரான கபிலர் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பாதியில் இருந்தமை தெளியப்படும்.

மேலும், 'பரணர்' என்னும் நல்லிசைப் புலவர், கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்த சேரன் செங்

1. புறநானூறு, உ0க, உ0உ. 2. பட்டினப்பாலை, உஅஉ.

குட்டுவனையும்,[1] அவன்றந்தை 'குடக்கோநெடுஞ் சேரலாதனையும்,[2] காரிகாற் பெருவளத்தான் றந்தை 'உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியையும்[3] பாடியிருத்தலால் இவர் கி. பி. முதல் நூற்றாண்டின் இடையிலிருந்து இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில், அதாவது சிறிதேறக்குறையத் தொண்ணூறாண்டுக்குமேல் உயிர் வாழ்ந்தாராதல் வேண்டும். இன்றும் நூறாண்டுக்குமேல் உயிர் வாழ்வார் பலரை யாம் பார்த்திருக்கின்றேம். நூறாண்டுக்கு மேல் நூற்றெண்பதாண்டு வரையில் உயிர் வாழ்வார் பலரின் உண்மை வரலாறுகளை ஆங்கிலமொழிவல்லார் ஒருவர் விரித்து விளக்கி ஒருநூல் எழுதியிருக்கின்றார். இவர்க்கு முன்னரே ஆங்கிலமொழியில் நல்லிசைப் புலவராய் வயங்கிய ஷெல்லி என்பார் சைவ வுணவின் மேன்மையை இனிது விளக்கி எழுதிய தமது உரைநூலில் "முதிய பார் என்னும் புலவர் நூற்று ஐம்பத்திரண்டு ஆண்டும், மேரிபாட்டன் என்னும் அம்மை நூற்றுமுப்பத்தாறு ஆண்டும், 'அர்சீனியஸ்,' 'ரோம்பால்ட்' என்னும் இருவர் நூற்றிருபது ஆண்டும், 'எபிபேனியஸ்' என்னும் முனிவர் நூற்றுப்பதினைந்து ஆண்டும், 'அந்தோனி' என்னும் முனிவர் நூற்றைந்து ஆண்டும், இவ்விந்திய நாட்டை அரசு புரிந்த துலுக்கவேந்தனாகிய 'அவுரங்கசீப்' என்பான் நூறாண்டும், இன்னும் பலர் நூறாண்டுக்கு மேலும் உயிர் வாழ்ந்த குறிப்புகளை" விளக்கமாக எடுத்துக்காட்டியிருக்கின்றார்.[4] பழைய நாளிலிருந்த அருந்தமிழ்ப் புலவர்கள் சேரசோழ பாண்டிய மன்னர்களாலும், பாரி, பேகன் முதலிய வள்ளல்களாலும், ஏனைச் செல்வர்களாலும் நன்கு போற்றப்பட்டு, எல்லாச் செல்வவளனு முடையராய்க் கவலையின்றிக் கல்விப் பயிற்சியிலேயே காலங் கழித்தமையின் அவர்கள் அங்ஙனம் நீண்டகாலம் உயிர் வாழ்ந்தமை வாய்வதேயாம்.

---

1. பதிற்றுப்பத்து, ஐந்தாம்பத்தின் பதிகம்.
2. புறநானூறு, கூரு. 3. புறநானூறு, ச.
4. 'A Vindication of Natural Diet' by the poet P. B. Shelley.

இவ்வாறு நீண்டகாலம் இனிது உயிர்வாழ்ந்த பரணர் என்னும் நல்லிசைப் புலவரும், இவர்க்கு விழுமிய நண்பரான கபிலர் என்னும் நல்லிசைப் புலவரும், 'வையாவிக் கோப் பெரும் பேகனை'யும் அவன்றன் மனைவியையும் ஒருமைப் படுத்தல் வேண்டிப் புறநானூற்றிற் சுவை துளும்பும் பல பாட்டுக்கள் பாடியிருத்தலாற்,[1] கபிலரும் பரணரும் ஒருகாலத்தவ ரென்பது தெற்றெனப் புலப்படும். அங்ஙனமாயினும், வையாவிக்கோப் பெரும்பேகன் காலத்திற் கபிலர் ஆண்டில் மிக முதிர்ந்தோராயும், பரணர் ஆண்டில் இளைஞராயும் இருந்தாராதல் வேண்டும். ஏனென்றாற், கபிலர்க்கு மிகச் சிறந்த நண்பனாகிய 'கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை' என்னுஞ் சேரவேந்தன் வென்றியிற் சிறந்து விளங்கிய காலத்திற் கபிலர் உயிரோடிருந்திலரே என அவ்வரசன் அவரை நினைந்து வருந்திய வருத்தத்தைப், 'பொருந்தில் இளங்கீரனார்,'

> "செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
> வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
> இன்றுஉள னாயின் நன்றுமன் என்றநின்
> ஆடுகொள் வரிசைக் கொப்ப."

என்று அவனை நோக்கிப் பாடியவாற்றால் தெளியப்படுதலின் என்க. இனி, இச் சேரவேந்தனாகிய 'யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை' என்பான், 'செல்வக்கடுங் கோவாழியாதனுக்கு' இளையமகன் ஆவன் என்பதூஉம், செல்வக்கடுங்கோவாழியாதன்மேற் 'பதிற்றுப்பத்தி'லுள்ள ஏழாம்பத்தைப் பாடிய கபிலர், இவனுக்கு மக்களாம் உரிமை பெற்ற 'தகடூரெறிந்த பெருஞ்சேர லிரும்பொறை,' 'யானைக் கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை' என்பவரையாதல், இவர்க்குப் பின் அரசுபுரிந்த 'குடக்கோநெடுஞ்சேரலாதனை' யாதல், 'சேரன்செங்குட்டுவனை'யாதல், மற்றுச் 'சோழன் கரிகாற் பெருவளத்தான்,' 'நெடுமுடிக்கிள்ளி' யென்பவரையாதல் பாடிற்றின்மையின், அவர் இவர்கட்கு முன்னும்

---

1. ௧௪௩-௧௪௭.

மாந்தரஞ் சேரலிரும்பொறையின் இளமைக் காலத்தும் இருந்தவராவ ரென்பதூஉம் யாம் இற்றைக்கு இருபஃது யாண்டுக்கு முன் 'ஞானசாகர' மூன்றும் பதுமத்தின் ஆறும் இதழில் வெளியிட்ட 'திருக்குறளாராய்ச்சி' ஆசிரியர்காலம் என்பதன்கண் நன்கெடுத்து விளக்கிக் காட்டினேம். அஞ்ஞான்று யாம் அந்நூல் எழுதியபோது, சேரன் செங்குட்டுவன் காலத்தவனான இலங்கைக் 'கயவாகு' மன்னன் காலம் கி. பி. ககங முதல் கஉரு வரையிலென்று வரலாற்று நூலாசிரியர்களாற் கொள்ளப்பட்டிருந்தது. அதனுற் செங்குட்டுவன் காலத்தைக் கீழ்வரையாக நிறுத்திக் கணக்குச் செய்துகொண்டு மேலேறிச், 'செல்வக்கடுங்கோ' கிறித்து பிறப்பதற்குமுன் நகூ-ஆம் ஆண்டில் அரசு கட்டில் ஏறினன் எனவும், அவன் காலத்தவரான கபிலர் கி. மு. முதல் நூற்றுண்டின் பிற்பாதியிலிருந்தார் எனவும் நிறுவினேம். ஆனல், இஞ்ஞான்று தோன்றிய வரலாற்று நூற்புலவர் கயவாகுமன்னன் காலத்தைத் திரும்பவும் நன்காராய்ந்து பார்த்து அவன் கி. பி. கஎக முதல் ககூங வரையிற் செங்கோல் ஓச்சினன் எனத் துணிந்துரைத்தலின், முன் செய்த காலக்கணக்குக்கு இப்போது செய்திருக்குங் காலக்கணக்கு ருஅ ஆண்டுகள் கீழ் இறங்கி விட்டது. அதனுற் செல்வக்கடுங்கோவின் அரசு கி. பி. உஉ-ஆம் ஆண்டிலிருந்து துவங்கியதென்று கொள்ள வேண்டியிருத்தலின் அவன் காலத்தவரான கபிலரும் கி. பி. முதல் நூற்றுண்டின் முற்பாதியிலிருந்தா ரென்பதே இனிக் கொள்ளற்பாற்று.

இவ்வாறு கி. பி. முதல் நூற்றுண்டின் முற்பாதியிலிருந்த கபிலர், இராவணன் நொடித்தான் மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற கதை கூறியது ஒரு வியப்பு அன்று. ஏனெனிற் கி. பி. முதல் நூற்றுண்டுக்கு முன்னரேயே அக் கதை படைத்தெழுதப்பட்ட இராமாயணம் உத்தரகாண்டம் வழங்கினமை மேலே (நகூஅ-ஆம் பக்கத்தில்) விளக்கிக் காட்டினுமாகலினென்பது. இக் கதையும், கிறித்து பிறப்பதற்கு முற்பட்ட ஆண்டுகளில் இயற்றப்

பட்ட பழந்தமிழ்ப் பாடல்களில் யாண்டுங் காணப்படாமையின் அஃது அக் காலத்தில் இத் தமிழ் நாட்டவர்க்குத் தெரியாத தொன்றென்பதூஉம், தெலுங்காணத்தில்வந்து குடியேறிய ஆரியர் கட்டிய இராம இராவண கதைக்கு எதிராக ஆங்கிருந்த பழைய சைவ நன்மக்களே சிவபிரான் றன் முழுமுதற் றன்மையைப் புலப்படுத்துதற் பொருட்டு அக் கதையைப் படைத்து வைத்தாரென்பதூஉம் எமது மேற்கோளாகலிற்[1] கபிலரது குறிஞ்சிக் கலியில் அக்கதை காணப்படுதல் கொண்டு எமதுரை வழுவாதலில்லை யென்று கடைப்பிடிக்க. கபிலர் வடக்கிருந்துபோந்து தமிழ் நாட்டிற் குடியேறிய ஆரியப் பார்ப்பன இனத்தைச் சேர்ந்தவராகக் காணப்படுதலின், அவர் அக் கதையினை உணர்ந்தமை பொருத்தமேயாம். மற்றுத், தமிழ்நாட்டில் கி. பி. முதல் நூற்றுண்டின்கண் இருந்த தமிழ் நல்லிசைப் புலவர் எவரும் அக் கதையினைக் கூறுமையே ஈண்டுக் கருதற்பாற்று.

இங்ஙனமாகக், கி. பி. முதல் நூற்றுண்டுமுதல் தமிழ் நாட்டவர்க்குச் சிறிது சிறிதாகத் தெரியத்துவங்கிய இராம இராவண கதை பின்னர் அவரிடையே மிக்கு வழங்கலானதும், அம் முகத்தால் இராமன் திருமாலின் தெய்வப்பிறப்பாகக் கொள்ளப்பட்டு அவரோடொப்பத் தெய்வமாக வைத்து வணங்கப்படலானதும் எல்லாம் கி.பி. ஏழாம் நூற்றுண்டிற்கும் எட்டாம் நூற்றுண்டிற்கும் பின்னர் வரவரப் பெருகி நிகழ்ந்தனவாகும். இவ்வுண்மை பழைய திருக்கோயிற் சுவர்களிற் செதுக்கப்பட்டிருக்கும் பழைய கதைக் குறிப்புகளைக் கொண்டும் நன்கு தெளியப்படும். கற் செதுக்கு உருக்களுள் மிகப் பழையவாக இஞ்ஞான்று ஆராய்ந்து தெளியப்பட்டவை, 'திருக்கடன்மல்லை' எனப் பழைய நூல்களிற் பெயர் கூறப்படும் 'மகாபலிபுரத்'தின் கண் உள்ள கற்பாறைக் கோயில்களில் அமைக்கப்பட்டிருப்பனவேயாம். இவ்வூரின்கண் உள்ள கற்பாறைகளைக்

1. 'மாணிக்கவாசகர் காலம்' ௨0௩, சகக-ஆம் பக்கங்களிற் காண்க.

குடைந்து வியக்கத்தக்க கோயில்களையும் அக்கோயிற் சுவர்களிற் பல உருக்களையும் ஆக்குவித்தோன் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடையில் நிகரற்ற வென்றிவேந்தனாய் விளங்கிய 'முதலாம் நரசிம்மவர்ம பல்லவமல்லனே'யாவன். இவ் வேந்தனது படைக்குத்தான் சிறுத்தொண்ட நாயனார் தலைவராயிருந்தனர்; திருஞானசம்பந்தப் பெருமானும் இவ் வேந்தன் காலத்திலேதான் திகழ்ந்தனர்; இம் மன்னர் பிரானின் தந்தையான 'மகேந்திரவர்ம பல்லவ அரசனே' முதலிற் சமண மதந் தழுவினவனாயிருந்து, திருநாவுக்கரசு நாயனாரைக் கல்லிற் பிணைத்துக் கடலில் வீழ்த்திப், பின்னர் அவர் அக் கல்லையே புணையாகக் கொண்டு சிவபிரான்றிருவருளாற் கரையேறினதைத் தான் நேரே கண்டு சிவபிரான் றிருவருளை வியந்து அச் சமண மதம்விட்டுச் சைவசமயந் தழுவினோன் ஆவன். மகேந்திரவர்மன் மகாபலிபுரத்திற் றுவங்கிய திருக் கோயிற் றிருப்பணிகளையே அவன்மகன் நரசிம்மவர்மன் முற்றுவித்து, 'மாமல்லன்' என்னுந் தன் பெயரால் அவ் வூரை 'மாமல்லபுரம்' எனவும் வழங்குவித்தான்.[1] இவ் வாறு இவ் வேந்தர் இருவராலும் இவர்க்குப் பின்வந்த அரசர் சிலராலும் அமைக்கப்பட்டு இன்றுகாறும் வயங்கும் இத் திருக்கோயில்களும் இவற்றின்கட் செதுக்கப்பட்டிருக் கும் உருக்களும் உலகம் எங்கணும் உள்ள கற்றோர் எல்லா ரும் வந்துகண்டு 'இவற்றை யொப்பதொரு நுண்ணிய அழகிய உண்மையொடு பிறழாத கற்றச்சுவேலை யாண்டுங் கண்டிலேம்!' என்று சொல்லிச்சொல்லி வியக்குந் தன்மை யவாய் மிளிர்கின்றன. இங்ஙனங் காண்பாரெல்லாம் புதுமை! புதுமை! என்று வியக்கும் இத் திருக்கோயிற் சுவர்களிலுங் கற்பாறைகளிலுஞ் செதுக்கப்பட்டிருக்கும் உருக்களுங்கூட முற்றும் பாரத கதை நிகழ்ச்சிகளைக் காட்டுவனவாயும், பிற சிவபுராண கதை நிகழ்ச்சிகளைக் காட்டுவனவாயும் இருக்கின்றனவே யல்லாமல், 'இராம இராவண கதை நிகழ்ச்சி'யை ஒரு சிறிதாயினுங் காட்டு

1. Dr. G. T. Dubreuil's The Pallavas, p. 41.

னவாயில்லை. கண்ணனுடைய விளையாடல்களைப் பல வகையானுஞ் சுவைபெறக்காட்டும் இக் கற்றச்சு வேலையில் 'இராம இராவண கதை' ஓர் எட்டுணையாயினுங் காட்டப் படாமை பெரிதும் ஆராயற் பாற்றன்றோ? இக் கற்றச்சு உருக்களிலுங் கோயில்களிலுஞ் சிவபிரான் திருமால் என் னும் இருவர் தம் அருள் நிகழ்ச்சிகளும் ஒருங்குவைத்துக் காட்டப்பட் டிருப்பினும், முதன்மையான இடங்களிலுங் கருவறைகளிலுஞ் சிவலிங்க வடிவங்களுஞ் சிவபிரான்றன் றிருவுருவங்களும் அமைக்கப்பட் டிருத்தலால், இவற்றை அமைப்பித்த காலத்திற் சிவபிரானே முழுமுதற் கடவு ளாக வணங்கப்பட்டமையும், அங்ஙனமாயினுந் திருமா லும் சிவபிரானுக்கு அடுத்த நிலையில் வைத்துத் தொழப் பட்டமையுந் தெளிதிற் புலனும். இவ்வாறு இருவர் தம் அருள் நிகழ்ச்சிகளும் இனிது காட்டப்பட் டிருக்கும் இக் கற்செதுக்குகளில் 'இராம இராவண கதை' ஒரு தினைத் துணையுங் காட்டப்படாமையால், நரசிம்மவருமபல்லவ வேந்தன் செங்கோல் ஓச்சிய கி. பி. ஏழாம் நூற்றுண்டின் முற்பாதியில் 'வான்மீகி ராமாயணமும்' அதிற் சொல்லப் பட்ட கதையும் இத் தமிழ்நாட்டின்கட் பரவினவல்ல வென்பது நன்கு பெறப்படும்.

இனி, முதலாழ்வார் மூவருட் பூதத்தாழ்வார் 'மகா பலிபுரம்' என்னுந் 'திருக்கடன் மல்லை'யிற் பிறந்தவரென் பது "கடன் மல்லைப்பூதத்தார்"[1] என்னும் பாயிரச் செய்யு ளால் விளங்கா நிற்கும். இன்னும் இவ் வாழ்வாரே,

> "மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே
> ஏவல்ல எந்தைக் கிடம்."[2]

என்று கூறுதலின், 'மாமல்லன்' எனப் பெயரிய நரசிங்க வரும வேந்தன் தன் பெயரால் இந் நகரத்தை ஆக்கியபின் பூதத்தாழ்வார் இருந்தமை புலனும். எனவே, நரசிம்ம வருமனது இறுதிக் காலமாகிய கி. பி. சுசு0-க்கும் பூதத்

1. இரண்டாந்திருவந்தாதி முதல்.
2. இரண்டாந்திருவந்தாதி, எ0.

தாழ்வாரது காலம் பிற்பட்டதாதல் தெளியப்படும். இனி, இவர் அவ்வரசற்கு எத்தனை காலம் பிற்பட்டவர் என்பதனைத் துணிதற்குங் கருவிகள் வாய்த்துள. முதலாம் நரசிம்ம வருமனுக்கு மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் ஆவன்: இவனுக்கு மகன் முதலாம் பரமேசுரவர்மன் ஆவன்; இவனுக்கு மகன் இரண்டாம் நரசிம்மவருமன் ஆவன்; இவ்விரண்டாம் நரசிம்ம வருமனுக்கு மகன் இரண்டாம் பரமேசுரவர்மன் ஆவன். இவ் விரண்டாம் பரமேசுரவர்மனே காஞ்சிபுரத்திலுள்ள 'வைகுண்டப்பெருமாள் கோயிலை' அமைப்பித்தோன் ஆவன்; அவனால் அமைப்பிக்கப்பட்டது பற்றியே அக் கோயில் 'பரமேச்சுரவிண்ணகரம்' எனப் பெயர் பெறுவதாயிற்று.[1] இம் மன்னன் கி. பி. எகரு-இல் இருந்தமை அவன் வெட்டுவித்த கல் வெட்டு ஒன்றினாற் புலப்படுதலின், இவன் அமைப்பித்த 'விண்ணகரத்'தைத் தம்முடைய செய்யுட்களிற் குறிப்பிட்ட பொய்கையாழ்வார்,[2] பேயாழ்வார்[3] என்னும் இருவரும், அவரோ டொருகாலத்தினரான பூதத்தாழ்வாரும் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இடையில் இருந்தமை தேற்றமாம். முதலாழ்வார் பாடிய 'திருவிண்ணகரம்' கச்சியிலுள்ளதேயல்லாமற் பிறவல்லவென்பதூஉம் மேலே சகூச, சகூரு-ஆம் பக்கங்களில் விளக்கிக்காட்டினும். அற்றேல், முதலாழ்வார்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் ஈற்றிலிருந்தவரென மேலே கூறிவைத்து, ஈண்டு அவர் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இடையில் இருந்தவராவரெனக் கூறுதல் என்னையெனின்; இரண்டாம் பரமேசுரவர்மன் கி. பி. எகரு-இல் உயிரோடிருந்தானென்பது புலனாதலின், அதற்குமுன் அவனது அரசாட்சி துவங்கிய காலம் ஏழாம் நூற்றாண்டின் ஈற்றிலிருக்கலாமாகலானும், முதலாழ்வார் மூவரும் அம் மன்னவன் காலத்தும் இருந்தாரெனக் கொள்ளுதலுங் கூடுமாகலானும் மேலே அங்ஙனம்

1. The Pallavas by Dr. G. T. Dubreuil, p. 46.
2. முதல் திருவந்தாதி, எள.
3. மூன்றாந் திருவந்தாதி, கூஉ.

உரைத்தாம். எங்ஙனமாயினும் முதலாழ்வார் மூவரும் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதிக்கு முன்னும், எட்டாம் நூற்றாண்டின் நடுவுக்குப் பின்னும் இருந்திலரென்பதே முடிந்த பொருளாமெனக் கடைப்பிடிக்க.

கக. பழைய வடநூல்களில் சிவபெருமானின் முழுமுதன்மை

இனி, இம் முதலாழ்வார் மூவருந் தாந் திருமான்மேற் பாடிய பாடல்களில் இரண்டுமூன் றிடங்களிற்றவிர வேறெங்கும் இராமஇராவண கதையைக் குறியாமையானும், கண்ணபிரானையும், நரசிங்கன் வாமனன் முதலான ஏனை வடிவங்களையுமே மிகுத்துப் பாடுதலானும் இம்மூவர் காலத்துங்கூட இராம இராவணகதை தமிழ்நாட்டு வைணவர் குழுவிற் பரவி வழங்காமை நன்கு துணியப் படும். எனவே, இராமனைப் பெரிதுபாடி, இராமாயண கந்தக் குறிப்புகளைத் தம்முடைய பாடல்களிற் பலகாலும் பலவிடத்தும் பலவாறு எடுத்து விரித்த திருமங்கை யாழ்வார், குலசேகர ஆழ்வார் முதலிய பிறரும் அவரோ டொருங்கிருந்தோரும் எல்லாம் கி. பி. எட்டாம் நூற் றாண்டிற்குப்பின் னிருந்தோராதல் திண்ணமாம் என்க.

அற்றேல், முதலாழ்வார் மூவர்க்குப்பின் எத்துணை காலங்கழித்துத் திருமங்கையாழ்வார் இருந்தனரெனின்; அதனையும் ஒருசிறிது விளக்கிக்காட்டுதும். மேலே குறித்த இரண்டாம் பரமேசுரவர்மனுக்குப்பின் தொண்டை மண்டி லத்தில் அரசுபுரிந்தோன் 'நந்திப்போத்தவர்மன்' என்னும் இரண்டாம் நந்திவர்ம பல்லவமல்லனே யாவன்; இவனது சுஉ-ஆம் ஆட்சிக்காலத்தில் 'திருவல்லம்' சிவபிரான் திருக்கோயிலிற் செதுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றினால்[1] இவன் அறுபத்திரண்டு ஆண்டுகள் அரசுபுரிந்தானாதல் வேண்டுமென அறிகின்றேம். இவன் கி. பி. எகஎ-முதல் எஎகூ-வரையில் அரசு வீற்றிருந்தானென்று வரலாற்று

1. The inscription of Tiruvallam, no. 76 of 1889.

நூலாசிரியர் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.[1] வடக்கே விந்தியமலையின் தென்பாலுள்ள தக்கண நாட்டை அரசாண்ட சாளுக்கிய அரசர்கள், தமிழ்நாட்டில் தொண்டை மண்டிலத்தை அரசாண்ட பல்லவ அரசர்களோடு பகைத்து அவர்களைத் தங்கீழ்ப்படுத்தப் பலகால் முயன்றும் அது நிறைவேறிற்றில்லை. இரண்டாம் புலிகேசன் என்னும் சிறந்த சாளுக்கிய வேந்தனுங்கூட அம் முயற்சியில் வெற்றிபெறாமல், முதலாம் நரசிம்மவருமன் படைத்தலைவரான சிறுத்தொண்ட நாயனாரால் தோல்வியுற்று மடிந்தான். ஆனால், அச் சாளுக்கியவேந்தன் வழியில் வந்தோனான இரண்டாம் விக்கிரமாதித்தனே, கி. பி. ௭௪௧-இற் காஞ்சியின்மேற் படையெடுத்துவந்து 'நந்திப் போத்த வர்மன்' என்னும் நந்திவர்ம பல்லவமல்லனை வென்றான்.[2] இந் நந்திப்போத்தவர்மனுக்குப் பின், இவன் மகன் 'தந்திவர்மன்' அரசுபுரிந்த காலத்தும், வடக்கேயிருந்த 'ராஷ்ட்ரகூட' மன்னனான மூன்றாங்கோவிந்தன் என்பான் கி. பி. ௮0௩-இல் காஞ்சிமேற்படையெடுத்துவந்து தந்திவர்மனை வென்றான்.[3] இவ்வாறு இப்பல்லவ அரசர் இருவருந் தக்கணத்திலிருந்துவந்த சாளுக்கிய இராட்டிரகூட மன்னர்களால் தோல்வியுற்றமையின், இவர்களது பல்லவ அரசு பெரிதும் நிலைகுலைந்து நின்றது; அதனால், இவர்க்கு அடங்கித் திறைசெலுத்திவந்த தொண்டை நாட்டுக் குறுநிலமன்னர்கள் இவர்க்குத் திறை கொடாதொழிந்தனர். சிவபெருமானிடத்து மிக்க அன்பு உடையவரும், சிவபிரானுக்குத் திருக்கோயிற் றிருப்பணி செய்தவருமான இப் பல்லவ வேந்தர் இருவரும் வடக்கிருந்து வந்த மன்னர்களால் தோல்வியுற்றுத், தமக்கு அடங்கிய மன்னருந் தமக்கு அடங்காராய்நிற்கப், பல்லவ ஆட்சியானது நிலைகுலைந்து வருந்துதல் கண்டே, அவ் வேந்தர்

---

1. Dr. Dubreuil's The Pallavas, p. 66.

2. Dr. R. G. Bhandarkar's Early History of Dekkan, Ist edition, p. 44

3. Ibid, p. 50.

பால் அன்புமிக்க சைவசமயாசிரியரான 'சுந்தரமூர்த்தி நாயனார்,'

"மண்ணுலகங் காவல் பூண்ட,
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ்செய்யும்,
பெருமையார் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றே."[1]

என்று அவர்பொருட்டு இறைவனை வேண்டிப் பாடியருளினார். இரண்டாம் நந்திவர்ம பல்லவ வேந்தன் சிவபெருமான்மாட்டு மிக்க அன்பு வைத்தவனென்பது, திருக்கச்சியிலுள்ள 'முக்தீசுவரம்' என்னும் சிவபிரான் கோயில் அவனால் அமைக்கப் பட்டமையாலும், அக்கோயிற் சுவரில் அவன் செதுக்குவித்திருக்குங் கல்வெட்டினாலுந் துணியப்படும்.[2] இவன் மகன் தந்திவர்ம பல்லவனும் அங்ஙனமே சிவபிரான்பால் மிக்க அன்புடையோனென்பது, திருச்சிராப்பள்ளிக் கோட்டத்திலுள்ள 'ஆலம்பாக்கத்'தில் அவன் எடுப்பித்த திருக்கோயிற் பெருமான் 'தந்திலிங்கம்' எனப் பெயர்கொண்டு விளங்குதலே சான்றாம். சுந்தரமூர்த்தி நாயனார் தாம் அருளிச்செய்த மேற்காட்டிய பாட்டில் 'பல்லவற்கு' என ஒருமை வாய்பாட்டால் ஓதாமற் "பல்லவர்க்கு" எனப் பன்மைவாய்பாட்டால் ஓதித் தந்தையும் மகனும் ஆம் அப் பல்லவ வேந்தர் இருவரையுங் குறிப்பிடுதலானும், "மறுக்கஞ் செய்யும்" என நிகழ்கால வினைச்சொற்பெய்து உரைத்தலானும் அவர், இரண்டாம் நந்திவர்மனது இறுதிக்காலம் முதல், அவன்றன் மைந்தன் தந்திவர்மனது காலத்தின் முற்பகுதிவரையில் இருந்தாரென்று கொள்ளற்பாற்று; அஃதாவது: சுந்தரமூர்த்திநாயனாரது காலம் கி. பி. எசுo-முதல் அகo-வரையிலாமென்று துணியலாம். இவ்வாறு இந்நாயனாரிருந்தது ஐம்பதாண்டெனத் துணியப்படுத

1. கோயிற்பதிகம், சு.

2. See 'South Indian Shrines' by Mr. P. V. Jagadisa Ayyar, pp. 86, 95.

லாலும், இவர் 'முப்பத்தெண்ணுயிரந் திருப்பதிகங்கள்' அருளிச்செய்தா ரெனத் 'திருமுறை கண்டபுராணங்' கூறுதலின் இத்துணைப் பெருந் தொகையினவாகிய திருப்பதிகங்களைப் பற்பல திருக்கோயில்கடோறுஞ் சென்று அருளிச் செய்தற்குக் குறைந்தன முப்பத்தைந் தாண்டுகளாயினும் வேண்டுமாதலாலும் இவர் தமது பதினாறும் ஆண்டுமுதல் இறைவன் திருவருள் பெற்றுப் பாடத் துவங்கியிருந்தாலும் இவர் ஐம்பதாண்டு வரையில் உயிர் வாழ்ந்தாராகல் வேண்டும்; அதனால், இவர் பதினெட்டாண்டு மட்டுமே உயிர் வாழ்ந்தாரெனக் கூறும் ஒரு விடுதிப்பாட்டின் கூற்றுப் பொய்க் கூற்றாதல் பெற்றாம். அது நிற்க.

இனித், திருமங்கையாழ்வார் தாம் பாடிய 'அட்டபுயகரப்' பதிகத்திலும், 'பரமேசுரவிண்ணகரப்' பதிகத்திலும் உயர்த்துக் குறிப்பிட்ட பல்லவவேந்தன் எவன் என்பது ஆராயற்பாற்று.

> "தென்னவனை முனையிற் செருவில் திறல்
> வாட்டிய திண்சிலை யோன்
> பார்மன்னு பல்லவர்கோன்."

எனவும்,

> "வில்லவன் நென்மெலியில் வெருவச்
> செருவேல் வலங்கைப்பிடித்த
> படைத்திறற் பல்லவர்கோன் பணிந்த
> பரமேச்சுர விண்ணகரம் அதுவே."

எனவும் இவர் உரைக்குமாற்றால், இவராற் குறிப்பிடப் பட்ட பல்லவவேந்தன் தன் காலத்திருந்த பாண்டியனை யும் சேரனையும் போரில் வென்று நிகரற்ற மன்னர் கோனய் விளங்கினவ னென்பது நன்குபெறப்படும். திருமங்கை யாழ்வார், முதலாழ்வார் மூவர்க்கும் பின்னிருந்தோராதல் எல்லார்க்கும் ஒப்ப முடிந்தமையானும், அம் முதலாழ்வார் மூவரும் கச்சியிலுள்ள 'திருவிண்ணகரை' ஆக்குவித்த

இரண்டாம் பரமேசுவர பல்லவ வேந்தனுக்குப் பிற்பட்டோ ராதலை மேற்காட்டினமாகலானும், திருமங்கையாழ்வா ரால் குறிப்பிடப்பட்டோன் அவ்விரண்டாம் பரமேசுர வர்மனுக்குப் பிற்பட்ட பல்லவவேந்தருள் ஒருவனேயாதல் வேண்டும். மேற்காட்டியபடி, இரண்டாம் பரமேசுரனுக்குப் பின் அரசுபுரிந்த இரண்டாம் நந்திப்போத்தரசனும், அவன் மகன் தந்திவர்மனும் வடக்கிருந்து வந்த சாளுக்கிய இராட்டிரகூட அரசர்களால் தோல்வியுற்று வலிகுன்றி யிருந்தனராகலின், அவ்விருவரும் பாண்டிய சேர அரசர்க ளொடு பொருது அவர் தம்மை வென்றுரென்பது பெறப் படமாட்டாது. ஆனல், இரண்டாம் நந்திப்போத்த வர்ம னுக்குப் பேரனும், தந்திவர்மன் மகனும் ஆகிய மூன்றும் நந்திவர்ம பல்லவனே அங்ஙனம் பாண்டிய சேர அரசர் களைப் போரில் வென்று நிகரற்ற வேந்தனய் விளங்கின னென்பது அவனைப்பற்றிய கல்வெட்டுகளானும், அவன் மேற் பாடப்பட்டிருக்கும் 'நந்திக்கலம்பகத்'தானும் நன்கு விளங்கா நிற்கின்றது. இவன் திருமாலினிடத்து மிக்க அன்புடையனென்பதும், இவன் திருக்குடந்தைக்கு அருகில் உள்ள 'நந்திபுரவிண்ணகரம்' என்னும் திருமால் கோயிலை ஆக்கினனென்பதும் கல்வெட்டுகளிற் புலனு கின்றன. கல்வெட்டுகளினுல் அறியப்படும் முதலாம் வர குணபாண்டியன், இந் நந்திவர்மனது தலைநகராகிய திருக் கச்சிமேற் படையெடுத்துவந்தபோது, இவன் அவனைத் தெள்ளாற்றைக் கடந்து வராதபடி தடுத்துப் போர்புரிந்து வென்று துரத்தினமையால் இவனுக்குத் 'தெள்ளாற் றெறிந்த நந்தி' என்னுஞ் சிறப்புப்பெயரும் வழங்குவ தாயிற்று. இவன் தனது தலைநகராகிய காஞ்சியில் தன் முன்னேரால் அமைக்கப்பட்ட 'பரமேச்சுர விண்ணகரம்' என்னுந் திருமால் திருக்கோயிலுக்குப் பல சிறப்புக்களுஞ் செய்து திருமால் திருவடிக்கண் மெய்யன்புடையனய் ஒழுகி வந்தமை பற்றியே, திருமங்கையாழ்வார் தாம் இயற்றிய 'பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில்' இவன்றன் அன் பினையும் வெற்றித்திறங்களையும் வியந்து பாடினர். ஆயி னும், திருமங்கையாழ்வார் இம் மூன்றும் நந்திவர்மன்

காலத்தவர் அல்லர்; அவனுக்கும் பிற்பட்ட காலத்தே தான் இருந்தவராவர்; யாங்ஙனமெனின், 'நந்திபுர விண்ணகரப் பதிகத்தில்,'

"நந்திபணி செய்தநகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணுமனமே."

எனவும், பரமேச்சுர விண்ணகரப் பதிகத்திற்,

"பல்லவன் மல்லையர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே."

எனவும், 'செய்த,' 'பணிந்த' என்னும் இறந்தகால வினைச் சொற்களைப் பெய்து, அவ் வேந்தன் தமது காலத்திற்கு முன்னிருந்தோனென்பதை விளங்கவைத்தமையால் திருமங்கையாழ்வாரது காலம், மூன்றும் நந்திவர்மனது இறுதிக் காலமாகிய கி. பி. அ௫௪-ஆம் ஆண்டுக்கும் பிற்பட்டதென்பது பெற்றாம்.

அற்றேல், 'தெள்ளாற்றெறிந்த நந்திவர்ம'னுக்கும் அவரது காலம் எவ்வளவு பிற்பட்டதெனின், அதனையும் ஒரு சிறிது காட்டுதும்: திருமங்கையாழ்வார் தாம் பாடிய 'அட்டபுயகரப் பதிகத்தின்' இறுதிச்செய்யுளில்,

"மன்னவன் தொண்டையர்கோன்
வணங்கும் நீண்முடி மாலை வைரமேகன்
தன்வலி தன்புகழ் சூழ்ந்தகச்சி
அட்டபுயகரத்து ஆதிதன்னை."

என்று தமது காலத்து அரசுபுரிந்த 'வைரமேகன்' என்னும் பல்லவ அரசனைக் குறிப்பிட்டிருக்கின்றார். இச் செய்யுளிற்போந்த இவ் விரண்டடிகட்குத், தமிழறிவு நன்கு வாய்ப்பப் பெறாதார் தமக்குத் தோன்றியவாறெல்லாம் பொருளுரைத்து இழுக்கினர். இவற்றிற்கு நேர் பொருள் 'அரசனும், தொண்டையரென்னும் பல்லவர்க்குத் தலைவனும் ஆயவன் வணங்காநின்ற நீண்ட முடியினையுடைய திருமாலை, வைரமேகன் என்னும் அவ்வரசனுடைய வலிமையும் புகழும் சூழ்ந்த காஞ்சி நகரின்கண்

அட்டபுயகரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய முதல்வனை' என்பதேயாம்; முதலிற் பொதுவாகப் 'பல்லவர்கோன்' என்று சொல்லப்பட்ட அரசனே பின்னடியில் அவனுக்குரிய சிறப்புப்பெயரால் 'வைரமேகன்' என்று குறிக்கப்பட்டான்; இவ்வாறு அன்பின் மிகுதியால் ஒருவரை முதலிற் பொதுவாகவும் பின்னர்ச் சிறப்பாகவும் வைத்து வேறு வேறு வினைகொடுத்து ஓதுதல் தமிழ் வழக்கேயா மென்பது, "ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க் கிளவி"[1] என்னுஞ் சூத்திரத்திற்குச் சேனவரையர் உரைத்தவுரையான் உணர்க. பிறரும் "முனிவன் வந்தான், அகத்தியன் வந்தான்" என எடுத்துக்காட்டுப. எனவே, மேற்செய்யுளில் திருமங்கையாழ்வார் "தொண்டையர்கோன் வணங்கும்" என்றதும், "வைரமேகன் தன் வலி தன் புகழ்சூழ்ந்த" என்றதும் ஓர் அரசன் மேலனவேயாம். முதலடியில் உள்ள 'மாலை' என்பதற்குப் 'பூமாலை' என்று பொருளுரைத்து இடர்ப்பட்டாரும் உளர்; அச்சொல் இறைவனாகிய 'திருமாலை'யே யுணர்த்திப், பின்னடியிலுள்ள 'ஆதிதன்னை' என்பதனோடு ஒத்து நிற்றலை யுணரவல்லார்க்கு அதற்குப் பூமாலையென்று பொருள் கொண்டாருரை போலியுரையாதல் நன்கு விளங்கும்.

இனி, இச் செய்யுளிற் குறிப்பிடப்பட்ட 'வைரமேகன்' என்னும் பல்லவமன்னன் தமது காலத்து இருந்தமை பற்றியே திருமங்கையாழ்வார் 'வணங்கும்' என நிகழ்கால வினைச்சொல்லால் அவனது வணக்கத்தைத் தெரித்தோதினார். இவ் வைரமேகன் என்பான் மூன்றாம் நந்திவர்மனுக்குத் தந்தையான தந்திவர்மனாயிருக்கலாம் என்று 'வெங்கையர்' என்னுங் கல்வெட்டு ஆராய்ச்சிக்காரர் முதலில் ஐயுற்றுக் கூறினரேனும், பின்னர்க் கிடைத்த கல்வெட்டுக்களைக் கொண்டு அப் பெயர்பூண்ட பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனுக்குப் பின் இருந்தவனே யென்று அவரே கூறுதலானும், திருவொற்றியூர் 'ஆதி

1. Dr. G. T. Dubreuil's The Pallavas, p. 79.
2. தொல்காப்பியம், சொல், சஉ.

புரீசுரர் திருக்கோயி'லிற் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றைக்கொண்டு,[1] 'அபராஜித பல்லவவேந்தன்' மகன் 'வைரமேகன்' ஆவன் என்பது காட்டப்பட்டிருத்தலானும், அபராஜித வேந்தன் வென்றிவேந்தனுய் விளங்கிய கி. பி. அ௮0-இல்[2] அவன்றன் மகன் 'வைரமேகனும்' திருமங்கை யாழ்வாரும் இருந்தமை நன்கு துணியப்படும். தந்திவர்ம னுக்கு வைரமேகன் என்னும் பெயர் இல்லாமையின் அவனை அவ்வாறு முதலிற் கொண்டது வழுவெனத் தள் ளப்படலாயிற்று. ஆகவே, திருமங்கையாழ்வார் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் இறுதியிலிருந்தவ ரென யாம் மேலே யுரைத்தது நிலைபெறல் காண்க.

இனி, ஆயிரங் கைகளுடைய வாணன் என்னும் அசுர னுெடு பொருது அவனைக் கண்ணன் அழித்த கதையைத், திருமங்கையாழ்வார் திருமாலுக்கு ஒரு பெருஞ் சிறப்பாக எடுத்துரைக்கின்ருராகலின் அஃது ஒரு சிறிது ஆராயற் பாற்று. 'வாணன்' என்பான் தன் மகள் 'உழையின்' பொருட்டுச் சிறைவைத்த 'அநிருத்தன்' கண்ணபிரானுக் குப் பேரனுகலின், அவனை விடுவித்தற்பொருட்டுக் கண் ணன் வாணனது 'சோ' வென்னும் நகர்மேற் படையெடுத் துச்சென்று அவனுெடு பொருதமை 'சிலப்பதிகாரம்'[3] 'மணிமேகலை'[4] முதலான பழைய தமிழ்க்காப்பியங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது; அக் கதை உண்மையா யிருக்கலாம். ஆனல், அவ் வாணனுக்கு ஆயிரந்தோள்கள் உளவாகப் பின்னுள்ளோர் கட்டிவிட்டகதை அப் பழைய நூல்களுள் யாண்டுங் காணப்படாமையின், அது வைணவர்கள் புதிதாகப் புனைந்து பாரதத்தினுட் பின்னர் நுழைத்த பொய்யுரையேயாம். உலக நன்மையின் பொருட் டாகவாதல் தன்னடியவர் நன்மையின் பொருட்டாக வாதல் ஒருவர் ஓர் அரிய செயலைச் செய்தனராயின் அதனை உயர்த்துப் புகழ்தல் ஒக்கும். மற்றுக் கண்ணனே

1. No. 158 of 1912. 2. The Pallavas, p. 84.
3. கடலாடுகாதை, ௫௪-௫௫.
4. மலர்வனம்புக்க காதை, ௧௨௩-௧௨௪.

தன் பேரன் பொருட்டாக வாணனை எதிர்த்தனன்; அது திருமாலுக்குச் சிறப்பாதலும், அதனைப் புகழ்ந்து பேசுதலும் யாங்ஙனம் பொருந்தும்? அஃதெவ்வாறுயினும் ஆகுக. இனி, அங்ஙனங் கண்ணன் அவ் வாணன்மேற் படையெடுத்துச் சென்றபோது, அவ் வாணனது நகரைக் காத்துநின்ற சிவபிரானும், அவர் தம் மகன் முருகவேளும் கண்ணனோடு எதிர்த்துப் போர்புரிந்து அவன்முன் நிற்கலாற்றது தோற்றோடினர் என்னும் ஒரு பெரும் புளுகுரையைப் புதிது படைத்து அதனை வைணவர்கள் அப் பாரதக் கதையினுள் நுழைத்திருக்கின்றனர். இப் பெரும் புளுகு, வைணவ மதம் சைவத்தின் வேருய்ப் பிரிந்து தனியே கிளர்ச்சிபெற்ற திருமங்கையாழ்வாரது காலத்தே தான் படைக்கப்பட்டுப் பாரதக்கதையினுள் நுழைக்கப் பட்டதாதல் வேண்டும். ஏனென்றுற், கண்ணன் வாணனெடு புரிந்தபோரிற் சிவபிரான் வாணனுக்குத் துணையாய் வந்தெதிர்த்தாரென்பது 'சிலப்பதிகாரம்' முதலிய பழைய நூல்களுள் யாண்டுஞ் சொல்லப்படவில்லை. வைணவ சமயத்திற்கு முதலாழ்வார்களான மூவருட் 'பேயாழ்வா'ருங் கூட,

"நின்றெதி ராய நிரைமணித்தேர் வாணன்தோள்
ஒன்றியஈ ரைஞ்ஞூ றுடன்துணிய—வென்றிலங்கும்
ஆர்படுவான் நேமி அரவணையான்." (அO)

எனவும்,

"மகனொருவர்க் கல்லாத மாமேனி மாயன்
மகனும் அவன்மகன்றன் காதல்—மகனைச்
சிறைசெய்த வாணன்றோள் செற்றுன்." (கூஉ)

எனவும் அருளிச்செய்திருக்கின்றனரே யல்லாமல், அப் போரின்கட் சிவபிரான் வந்தெதிர்த்துத் தோற்றோடினர் என ஓர் அணுத் துணையாயினும் மொழிந்தனர் அல்லர். வாணன் போரிற் சிவபிரானது தொடர்பு முதலாழ்வார் பாடல்களினும் ஏனைப் பழைய நூல்களினும் ஏதுமே காணப்படாதாகத், திருமங்கையாழ்வாரோ,

"வள்ளி கொழுநன் முதலாய மக்களோடு முக்கணான்
வெள்கியோட விறல்வாணன் வியன்தோள் வனத்தைத்
துணித் துகந்தான்." (எ, சு)

என்றாற்போலப் பல விடங்களில் அதனைத் தொடுத்துச் சொல்லிச் சிவபிரானை இகழ்கின்றார்.

ஆயினும், இவர், திருமழிசை யாழ்வாரைப்போல் வரை கடந்து சிவத்தை இகழ்ந்து பேசிற்றிலர். வாணன் போரிற் சிவபிரானைத் தொடர்பு படுத்தித் திருமழிசை யாழ்வார் இகழ்ந்துரைப்பனவற்றிற் சில காட்டுதும்:

"மோடியோடி லச்சையாய சாபம்எய்தி முக்கணான்
கூடுசேனை மக்களோடு கொண்டுமண்டி வெஞ்சமத்து
ஓடவாணன் ஆயிரங் கரம்கழித்த ஆதிமால்."

"இண்டவாணன் ஈரைஞ்ஞூறு தோள்களைத் துணித்தநாள்
முண்டநீறன் மக்கள்வெப்பு மோடியங்கி யோடிட."
(திருச்சந்த விருத்தம், ருந, எக)

"அவரிவரென் றில்லை அனங்கவேள் தாதைக்கு
எவரும் எதிரில்லை கண்டீர்—உவரிக்
கடல்நஞ்சம் உண்டான் கடனென்று வாணற்கு
உடனின்று தோற்றான் ஒருங்கு."
(நான்முகன் திருவந்தாதி, ருசு)

இவையேயன்றி இவர் சிவபிரானை இகழ்ந்துபாடியவை இன்னும் பல. மேலும், இவர் சமணர் புத்தர்களோடு சைவரையும் உடன் சேர்த்து,

"அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார்."

என மிகவும் பழித்துப் பேசுதலின் இவர் சைவசமயத்தவரைப் பெரிதும் பகைத்தவரென்பது புலனாம். இப் பெற்றியினரான இத் திருமழிசை யாழ்வார் சைவசமய ஆசிரியன்மார்காலத் திருந்தனராயின் அவர்க்கும் இவர்க்கும் வழக்கு நேராதிராது. மற்று, அவர்க்கும் இவர்க்கும்

வழக்கு நேர்ந்தமைக்கு இவர்தம் பாடல்களிலாதல், தேவாரப் பாடல்களிலாதல் ஏதொரு குறிப்புங் காணப் படாமையானும், தேவாரப்பதிகங்கள் ஒவ்வொன்றிலும் திருமால் சிவபிரான் திருவடியைத் தேடியறியாக் குறை பாடு சொல்லப்படுதலின் தேவாரகாலத்தில் வைணவ மதம் கிளர்ந்து நில்லாமை யறியப்படுதலானும், பௌத்த சமணர்களோடு வழக்காடி அம் மதங்களைத் தொலைத்த வர்கள் சைவ ஆசிரியரென்பதற்கே சான்றுகள் காணப் படுதலல்லாமல், வைணவ ஆழ்வார்கள் அவர்களோடு அங்ஙனம் வழக்கிட்டமைக்குத் தினைத்தனைக் குறிப்பும் யாண்டுங் காணப்படாமையானும், பௌத்த சமணமதங்க ளொடுங்கிச் சைவசமயம் பெரிதுங் கிளர்ந்து ஓங்கிப் பொலிந்த காலத்தில், அதனைச் சார்ந்து வைணவமதம் மெல்ல மெல்லக் கிளர அப்போது முதலாழ்வார்களும், அவர்க்குப்பின் அது பின்னுங் கிளர்ந்து தனிநின்ற காலத்தே திருமங்கையாழ்வார், குலசேகரர், தொண்டரடிப் பொடி முதலியோரும், அதற்கும்பின் அது சைவத்திற்கு முற்றும் மாறாய் விலகி அதனைப் பகைத்த காலத்தே 'திரு மழிசை,' 'சடகோபர்' என்பாரும் இருந்தமை தேற்றமாம்.

மேலும், திருமழிசை யாழ்வார் தம் பாடல்களிற் காணப்படும் 'பற்பநாபன்,' 'லச்சை,' 'கரன்,' 'முரன்,' 'அனந்தசயனன்,' 'புண்டரீகபாத புண்ணிய கீர்த்தி,' 'ஆகுலம்,' 'தேநுகன்,' 'பத்தியானபாசநம்,' 'பவுண்டிரன்,' 'மாலிமான்,' 'சுமாலி,' 'முகுந்தன்,' 'அச்சுதனனந்த கீர்த்தி,' 'சுவேதன்,' 'விசாதி,' 'காகுத்தன்,' 'மதுசூதன்,' 'சிரீதரன்,' 'சீரணன்,' 'குணபரன்' முதலான வடசொற் கள் சொற்றொடர்களும், கீழோர் தமக்குள் வழங்கும் 'வாலாட்டுதல்' என்னும் தமிழ் ஏச்சு உரையும், முதலாழ் வார் பாடல்களிலாதல், அவர்க்கு முற்பட்டோர் பாடல்களி லாதல் காணப்படாமையானும், இன்னோரன்ன வெல்லாம் பத்தாம் நூற்றாண்டு முதலிருந்த ஏனையாழ்வார்களின் பாட்டுகளின் மட்டுமே காணப்படுதலானும் திருமழிசை யாழ்வார் கி. பி. பத்தாம் நூற்றாண்டின்கண் இருந்தா

ரென்பதே தேற்றமாம் என்க. அற்றேல், மேற்காட்டிய வடசொற்களிற் சில 'திவாகரம்' முதலான பழைய நிகண்டு நூல்களிற் காணப்படுதலின், அவை பத்தாம் நூற்றாண்டிற் புதிது புகுந்தவையென்றல் யாங்ஙனமெனின்; 'திவாகரம்' முதலிய நிகண்டு நூலாசிரியர் தமக்கு முன்னும் தங்காலத்தும் வழங்கிய தமிழ்ச்சொற்கள் குறியீடுகள் முதலியவற்றைத் தொகுத்து நூல் எழுதுகின்ற காலத்து, வடமொழியிலுள்ள நிகண்டு நூல்களையும் பார்த்து அவற்றின்கண் உள்ள சொற்கள் குறியீடுகளையும் உடன் எடுத்துச் சேர்த்து அவற்றை ஆக்கினாராகலின், நிகண்டு நூல்களிற் காணப்படும் வடசொற்கள் குறியீடுகளெல்லாம் பழைய தமிழ்நூல்களில் வழங்கின அல்லவென்க. நிகண்டு நூல்கள் தமிழ்ச்சொல் வழக்கிற்கே மேற்கோளாகுமல்லாமல், வடசொல் வழக்கிற்கு மேற்கோளாகாவென்று உணர்ந்துகொள்க. ஒரு வடசொல் தமிழின்கட் புகுந்து வழங்கின காலத்தைத் தெளிதற்கு நிகண்டுகள் அல்லாத ஏனைத் தமிழ்நூல்களே ஆராயற்பாலனவென்க. இவ்வாறு வைணவமதம் சைவசமயத்துக்குப் பெரிதும் மாறாய்நின்று சிவபிரானை இகழ்ந்துபேசும் அளவின் நில்லாது, சிவபிரானடியவர்கள் அருளிச்செய்த அருந்தமிழ்ப் பாக்கள் நிறைந்து சிவவுருவாய்த் திகழும் செந்தமிழ் மொழியினையும் பாழாக்குதற்கு மடிகட்டி நின்று வடசொற்கள் சொற்றொடர்கள் கதைகள் முதலியவற்றை ஒரு வரைதுறையின்றித் தமிழின்கட் புகுத்தத் தொடங்கிய காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டு துவங்கியேயாம். வைணவப் புலவர்களால் இங்ஙனந் தமிழ்மொழி பாழாக்கப்பட்டு வருகின்றமைக்கு, ஆழ்வார்களின் பாடல்களுக்கு உரையெழுதிய புலவர்கள் அவ் வுரையில் வரைதுறையின்றி வடசொற்சொற்றொடர்களை இணைத்து அழகில்லா அவ் வுரைநடைக்கு 'மணிப்ரவாளம்' என ஒரு பெரும்பெயர் சூட்டிவிட்டமையும், இன்றுகாறும் வைணவப் புலவர்களாயிருப்போர் தமிழில் வடமொழிக் கலப்பு மிக வைத்து எழுதுதலுமே சான்றாகும். இன்னுஞ் சைவசமயம் ஒன்றுமே செந்தமிழ்மொழிக்கும் அது வழங்கும் மக்கட்

கும் பேருரிமையாம் என்பதும், அது நன்கு கண்டே வடக்கிருந்து வந்த பௌத்தர், சமணர், வைணவர் முதலான பிறமதத்தவர் தத்தங் காலங்களில் ஏராளமான வடசொற்களைப் புகுத்திய தமிழில் தத்தஞ் சமயநூல்களை எழுதிச் சைவசமயத்தைக் கீழறுத்து வரலாயினரென்பதும், பிற்காலத்துச் சைவர்களும் அவர் வழிப்பட்டு இடையிடையே வடசொற்களையும் வடமொழி வழக்குகளையுந் தாமெழுதிய தமிழ்நூல்களிற் சிறுபான்மை தழுவி வரைந்தனராயினும் ஏனைப் பௌத்தர் சமணர் வைணவர் முதலான அவரைப்போல் அதனை அத்துணைக் கெடாமல் அதனை இன்றுகாறும் அழகு பெறவே காத்து வழங்கிவருகின்றன ரென்பதற்குச் 'சிவஞானமுனிவர்,' 'இராமலிங்க சுவாமிகள்,' 'சபாபதிநாவலர்,' 'ஆறுமுகநாவலர்' முதலான செந்தமிழ் வாணரின் செய்யுளுரை நூல்களே சான்றுமென்பதும் மறவாமற் கருத்திற் பதிக்கற்பாலன. இவ் வடமொழி தென்மொழிக் கலப்பினை ஆராய்ந்த மட்டில் நடுநிலை திறம்பாத சீநிவாச ஐயங்காரும், "தமிழ்ச்செய்யுளில் சைவர்கள் தமக்கு உரிய அருள் நூல்கள், வைணவர்கட்கு உரியவற்றினும் ஏறக்குறைய மும்மடங்கு மிகவுள. சம்பந்தருடைய பதிகங்கள் மட்டுமே, பன்னிராழ்வார்களும் ஒருங்கு சேர்ந்து செய்தபாடல்களின் அளவு உள்ளன; இவையெல்லாம், தென்னாட்டின்கண் உள்ள தமிழர்க்குட் சைவசமயமே மிக்கு வழங்கினமையே மெய்ப்படுத்தா நிற்கும்"[1] என்றும், "தேவாரப்பதிகங்கள் தமிழ்ச் சைவர்களால் தொகுக்கப்பட்ட பெருந்தொகை நூலாயிருந்தும், தமிழ்நாட்டின்கண் உள்ள ஸ்மார்த்தப் பார்ப்பனரால் அவை அவ்வளவு நன்கு மதிக்கப்படுவதில்லை.

---

1. "It may be remarked here that the sacred literature of the Saivas in Tamil poetry was nearly thrice that of the Vaishnavas, the hymns of Sambandar alone being nearly as voluminous as all the works of the twelve *Alvars* put together. All these prove the greater popularity of Sivaism among the Tamil people of South India." 'Tamil Studies,' p. 218.

சைவக்கொள்கையானது ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்ட சடங்குகளை மிகவும் பொருட்படுத்தவில்லை; சிவபிரானிடத்துத் தனியன்புவைத்து ஒழுகுதலையே தனக்கு ஓர் அடிப்படையாய்க்கொண்டு, அது சாதிவேற்றுமையின்றி எல்லா இனத்தவரையும் தன்னகத்தே தழுவிக்கொண்டது. சைவக்கோட்பாட்டின் இப் பொதுநிலையானது சாதிப் பற்றுவாய்ந்த பார்ப்பனருக்குப் பிடியாமையால் இஃது அவர்க்குள் மிக்கு வழங்கிற்றிலது. பெரிது ஒத்த இயற்கையவான இவ் விருவகைத் தமிழ் நூல்கட்கு உள்ள மதிப்புவேற்றுமையால், சிவபிரானையே வழிபடுவாரான தமிழர் பெரும்பாலார் தமக்குள் வைணவமதத்தைப் பரப்புதற்கு முன்னிருந்த வைணவ ஆசிரியர் மிகவுங் கவலையெடுத்தனர்."[1] என்றும் இவ்வுண்மையை மறையாமல் நன்கெடுத்துக் காட்டினர். இவ்வாற்றால், 'பௌத்தம்,' 'சமணம்,' 'மாயாவாதம்,' 'வைணவம்' முதலிய மதங்கள் தமிழ்நாட்டவர்க்குப் புறம்பாதலும், அதுபற்றியே அவை பொதுநூலாகிய 'சூடாமணிநிகண்டு'ள்ளும் 'புறச்சமயம்' என வைத்து ஓதப்படுதலுங்[2] கண்டுகொள்க.

இங்ஙனமாகத் தமிழ்மொழியில் வைணவர் வடசொற்களைப் பெரிது புகுத்தவும், சைவசமயத்தையும் சிவபிரானையும் பெரிது இகழவும் துவங்கியகாலம், தமிழ்ச்சங்கப்

---

1. "The Devera hymns which constitute a more voluminous collection of the non-Brahman Saivas are not so much valued by the Smartha Brahmans of the Tamil districts. 'The Saiva creed.........does not appear to have paid much attention to Sastric karma, but taking unsullied devotion to Siva as its basis, it received info its fold all classes of people without any distinction of caste. This catholicity of the Saiva faith rendered it not very popular with the orthodox Brahmans.' This dispari y in the estimation of the two Tamil works of exactly similar nature was probably due to the anxiety of the early Acharyas to make the religion of Vishnu more popular among the Dravidians, most of whom were followers of Siva." Ibid, p. 292.

2. கஉ-ஆந்தொகுதி, ௯௧.

புலவர்களின் இறுதிக்கால வெல்லையாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென்றாதல், சைவசமயாசிரியர் தோன்றிப் பௌத்த சமணமதங்களின் குறும்பை யடக்கித் திகழ்ந்த கி. பி. மூன்றாம் நூற்றாண்டுமுதல் ஒன்பதாம் நூற்றாண்டின் துவக்கம்வரையிற் சென்ற காலத்தின் இடைப்பட்டதென்றாதல் கொள்ளுதற்கு ஏதொரு சான்றும் இல்லாமையின், அக்காலம் சைவ சமயாசிரியர் நால்வரிற் பின்னிருந்தோரான சுந்தரமூர்த்தி நாயனார்க்கும் பிற்பட்ட கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் ஈறு அல்லது பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுதல் நிகழலாயிற்றென்பதே தேற்றமாம். ஆகவே, கண்ணன் வாணனொடு புரிந்த 'போரிற் சிவபிரானும் முருகவேளும் வந்தெதிர்த்துத் தோற்றோடினர் என்னும் பெரும்புளுகுரை திருமங்கையாழ்வாரது காலம்முதற் படைக்கப்பட்டுப் பாரதத்தின் இடையே செருகப்பட்டதாதல் தெற்றென விளங்காநிற்கும்.

அற்றேல், அக் கதை பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ்நூல்களிற் காணப்படாமையின் அஃது அந் நூற்றாண்டிற்குமுன் தென்றமிழ்நாட்டின்கண் வழங்கிற்றிலது என்பது மட்டுந்தான் பெறப்படுமே யல்லாமல், அது வடநாட்டினும் பழைய வடநூல்களினும் வழங்கியதில்லையென்றல் பெறப்படாதாலெனின்; தமிழ்நாட்டினும் பழைய தமிழ் நூல்களினும் மட்டுமேயன்றி, வடநாட்டினும் பழைய வடநூல்களினுங்கூடச் சிவபிரானை இகழ்ந்துரைக்கும் இகழ்ச்சியுரை ஒரு சிறிதுங் காணப்படாதென்பதூஉம், அவற்றுள் எங்குஞ் சிவபிரானது முழுமுதற்றன்மையும் அவனே பிறப்பு இறப்பில்லாத் தனித்தலைமைப் பெருங் கடவுளாதலும் வலியுறுத்துரைக்கப்பட் டிருக்கின்றன வென்பதூஉம், விஷ்ணு முதலிய ஏனைத் தேவர்களெல்லாம் பிறப்பு இறப்புக்கள் உடையராகலின் அவர் எல்லாம் முழுமுதற் கடவுளாகார் என அந் நூல்களே நன்கெடுத்துக் காட்டுகின்றனவென்பதூஉம் ஈண்டு ஒருசிறிது விளக்குதும்.

வடமொழியிற் பழைய நூல்களென்று அம் மொழி நூல்களை நன்காராய்ந்து உணர்ந்த மாப்பெரும் புலவோர் கொண்டவை பின்வருவனவேயாகும்: புராணங்களுள் மிகப் பழமையானவை 'மற்சபுராணம்,' 'வாயுபுராணம்' என்பவைகளே யாம்; இவைகள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே இருந்தனவென்பதற்குத் தக்கசான்றுகள் உள.[1] சிவபிரான்றன் முழுமுதற் றன்மைகளையே இவையிரண்டும் விரித்துரைக்கின்றன; மற்சபுராணத்திற் சிவபிரான் முப்புரங்களையுங் காமவேளையும் நெற்றிக்கண்ணால் எரித்தமையும், கார்த்திகேயன் பிறப்பும், தாரகாசுரனை அழித்தமையும் பிறவுமாகிய வரலாறுகள் சொல்லப்படுகின்றன. வாயுபுராணத்திற் றக்கன்வேள்வி அழிப்புண்டமையும், யோகஞ்செய்தலால் வருஞ் சிறந்தபயனும், யோகிகள் சிவபிரான் திருவருட்பேற்றினை யடைதலும், சிவபுரத்தின் மாட்சிகளும் விரித்துரைக்கப்படுகின்றன. இவற்றிற்குப்பின் இவற்றை யடுத்துத் தோன்றிய 'அக்நிபுராணம்,' 'இலிங்கபுராணம்,' 'ஸ்கந்தபுராணம்,' 'வாமநபுராணம்,' கூர்மபுராணம்,' 'தேவிபாகவதம்,' 'பிரமாண்டபுராணம், 'மார்க்கண்டேயபுராணம்,' 'பவிஷ்யோத்தரபுராணம்' முதலியனவும் சிவபிரான்றன் முழுமுதற் றன்மைகளையும் உமைப்பிராட்டியின் மாட்சிகளையுமே எடுத்துப் புகலுகின்றன. இவையல்லாத 'விஷ்ணுபுராணம்,' 'பிரமபுராணம்,' 'பத்மபுராணம்,' 'விஷ்ணுபாகவதம்,' 'நாரதபுராணம்,' 'பிரமவைவர்த்தபுராணம்,' 'வராகபுராணம்,' 'கருடபுராணம்' முதலியனவெல்லாம் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் துவக்கம்முதல் இயற்றப்பட்டனவாகும். வைணவ புராணங்களில் முற்பட்டதாகிய 'விஷ்ணுபுராணமே' கி. பி. ௧0௪௫-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதாகும் என்று அதனை நன்கு ஆய்ந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஆங்கில ஆசிரியர் உவில்சன் என்பவர் இனிது விளக்கிக்காட்டியிருக்கின்றாராகலின்,[2] ஏனை வைணவ புராணங்களெல்லாம்

---

1. See V. A. Smith's 'The Early History of India,' pp. 21-23.
2. See H. H. Wilson's Puranas, p. 120.

வைணவம் சைவசமயத்திற்கு முற்றும் மாறாய்த் தோன்றி அதனைப் பழிக்கத் துவங்கியபின் வைணவப் புலவோராற் புதியவாய்ப் புனைந்து கட்டப்பட்டனவேயாதல் தெள்ளிதிற் புலனும். மேற்காட்டிய வைணவபுராணங்களுட் 'பத்ம புராணம்' இற்றைக்கு முந்நூறாண்டுகளுக்கு முன்னும், 'வைணவபாகவதம்' தேவகிரி அரசன் மகாதேவற்கும் அவற்குப்பின் வந்த இராமதேவற்கும் அமைச்சனான ஹேமாத்திரியின் அவையிலிருந்த போபதேவரால் அறுநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னும், 'நாரதபுராணம்' இருநூறாண்டுகளுக்கு முன்னும், 'பிரமவைவர்த்தபுராணம்' நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னும், 'வராகபுராணம்' அறுநூறாண்டுகளுக்கு முன்னும், 'கருடபுராணம்' தொளாயிர ஆண்டுகளுக்கு முன்னும் இயற்றப்பட்டன வாகத் தெரிகின்றன. திருமங்கையாழ்வார் இருந்த கி. பி. பத்தாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே இப் புராணங்கள் புனைந்துவைக்கப்பட்டன. பழைய பதினெண் புராணங்களிற் சேர்ந்த சிலவற்றின் பெயர்களையே வைத்து இப் புராணங்களை வைணவர்கள் புனைந்து கட்டிவிட்டமையால், ஆராய்ந்து பார்க்கும் அறிவுமதுகை யில்லாதார் இவ் வைணவ புராணங்களைப் பழைய பதினெண் புராணங்களிற் சேர்ந்தனவாகப் பிறழக்கொண்டு மயங்கிப் பெரிதும் இடர்ப்படுவர். உண்மையான் நோக்குவாரெல்லாம் இவை கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் பழமையைப் பலவாறு திரித்துப் புதுப்பொய் பல புகுத்திச் செய்யப்பட்டன வாதலை நன்கு உணராநிற்பர்.[1] இவ் வைணவ புராணங்களுக்கு முற்பட்டனவாக மேலெடுத்துக் காட்டிய மற்சம், வாயு, அங்கி, இலிங்கம், காந்தம், வாமநம், கூர்மம், தேவி பாகவதம், பிரமாண்டம், மார்க்கண்டேயம், பவிடியோத்தரம் முதலியனவெல்லாம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையில் ஆக்கப்பட்ட பழைய காலத்துப் புராணங்களாய்ச் சிவபிரான் அருட்டிறங்களையும் அம்மையின் அருட்செயல்களையும் எடுத்துரைத்து

1. See H. H. Wilson's Puranas and R. C. Dutt's A History of Civlisation in Ancient India, vol. II, pp. 203-211.

அவரே முழுமுதற் கடவுளாதலை வலியுறுத்துகின்றன. இவை தம்முள் விஷ்ணுவை முதற்கடவுளாக உயர்த்திச் சிவத்தை இழிக்கும் பகுதி ஓர் எட்டுணையுங் காணப்பட மாட்டாது. அதனாற், சைவசமயாசிரியர் காலத்தும், அவர்க்கு முன்னே கி. பி. முதல் நூற்றாண்டு வரையிற் சென்ற காலத்தும் சிவபிரானும் அம்மையுமே எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாக வணங்கப்பட்டமை தெற்றென விளங்கா நிற்கும்.

இனிப் புராணங்களுக்கு முற்பட்ட பழமையுடையது 'வான்மீகி இராமாயணம்' ஆகும். இந் நூலின் பழைய பகுதிகளில் இராமன் திருமாலின் பிறப்பாகக் கொள்ளப் படவில்லை யென்பதூஉம், அவன் ஆண்மையிற் சிறந்த ஓர் அரசனாகவே வைத்து உரைக்கப்பட்டன னென்பதூஉம், மேலே (சசுகூ-ஆம் பக்கம்) விளக்கிக்காட்டினும். ஆனால், இவ் விராமாயணத்திலேயே பல இடங்களிலுந் தேவர்கள் சிவபிரானையும் உமைப்பிராட்டியையும் வழிபட்டுப் பேறு பெற்ற வரலாறுகள் பல சொல்லப்படுகின்றன. இதன் 'பாலகாண்டம்,' ௩எ-ஆம் இயலில், தேவர்கள் அனைவருஞ் சென்று சிவபிரானையும் அம்மையையும் வழிபட்டுக் கார்த்தி கேயனை (முருகவேளை)ப் பெற்று, அவனைத் தம் படைத் தலைவனாக அமைத்துக்கொண்டமை நுவலப்பட் டிருக் கின்றது. அதன் சஉ-ஆம் இயலிற், பகீரதன் வானுலகத்தி னிருந்த கங்கையை மண்ணுலகத்திற்குக் கொணரும் பொருட்டு நான்முகனை வேண்டிப் பெருந்தவம் புரிந்த காலை யில், அக் கடவுள் அவன் முற்றோன்றிக் கங்கையின் ஆற் றலைத் தாங்கி அதனை நிலத்து உய்க்கவல்லான் சிவபிரான் ஒருவனே யாதலால் அப்பெருமானை நோக்கி அதுவேண் டித் தவம்புரியக் கடவாய் என ஏவி மறைந்தமையும், சச-ஆம் இயலில் அங்ஙனமே அவன் சிவபிரானை நோக்கிக் கடுந்தவம்புரிய அப்பெருமான் அவனது தவத்திற்கு இரங்கி அவன் வேண்டியபடியே கங்கையைத் தனது சடைக் கட் டாங்கி நிலத்து உய்த்தமையும் நுவலப் பட்டிருக் கின்றன. இஃது இங்ஙனமாகவும், பிற்காலத்தில் வந்த

வைணவப் புலவர் சிவபிரானை இழித்தற்பொருட்டு விஷ்ணுவின் அடிகளிலிருந்து விழுந்த கங்கையைச் சிவபிரான் சடையிற் றாங்கினார் என இராமாயணத்திற் காணப்படாத ஒரு புனைகுரையைப் புதிது படைத்துத் தாம் புனைந்த புராணங்களில் நுழைப்பாராயினர். விஷ்ணுவே தம் அடிகளிற் கங்கையைத் தாங்கிவிட வல்லுநராயின், நான்முகக் கடவுள் அவரை நோக்கியே தவம்புரியுமாறு பகீரதனை ஏவியிருக்கலாமன்றோ? மற்று, நான்முகன் அது தாங்குதற்குவல்லார் சிவபிரானே என மொழிந்ததும், அம்மொழிப்படியே பகீரதன் சிவபிரானை நோக்கித் தவம்புரிந்து தன்குறை முடித்ததும் பண்டுதொட்டு உலகம் அறிந்த உண்மைகளாகலின், இவற்றைத் தம் புனைகுரையால் மறைக்க முயலும் பிற்காலத்து வைணவர் தம் புல்லிய முயற்சி சிறிதும் நிறைவேறாது. ஆகவே, திருமழிசையாழ்வார்,

> "குறைகொண்டு நான்முகன் குண்டிகை நீர்பெய்து
> மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்திக்—கறைகொண்ட
> கண்டத்தான் சென்னிமேல் ஏறக் கழுவினான்
> அண்டத்தான் சேவடியை ஆங்கு.''
>
> (நான்முகன் றிருவந்தாதி, கூ)

எனப் புகன்ற இழிப்புரை பொய்யுரையாதலோடு, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை இகழ்ந்த பெருந் தீவினைப் படுகுழியிலும் அவ் வாழ்வாரை வீழ்த்துதல் காண்க. அஃதொக்கும், அவ்வாழ்வார் விஷ்ணு பாதத்திலிருந்து கங்கை கீழ் இழிந்தாள் எனக் கதைகட்டிச் சொல்லுதற்குத்தான் யாங்ஙனம் இடம்பெற்றார் எனின்; இருக்குவேதகாலத்தில் 'விஷ்ணு' என்னுஞ்சொல் பகலவனுக்கே ஒரு பெயராக வழங்கிற்று;[1] பகலவன் செல்லும்வழி வான் வெளியே யாகலின், அவ் வான்வெளி 'விஷ்ணுபாதம்' எனப் பெயர்பெறுவதாயிற்று; 'பதம்' 'பாதம்' என்னும் வடசொற்கள் 'அடி' அல்லது 'அடிச்சுவடு தோய்ந்த

1. See Dr. A. A. Macdonell's 'A History of Sanscrit Literature,' p. 80.

இடம்' எனப் பொருள்தரும். நிலத்தின்கண் உள்ள நீர் ஆவியாக மாறி மேல்எழுந்து வானத்தின்கண் வைகுதலாற் கங்கை வானுலகத்தின்கண் உளள் என ஆன்றோர் உருவகப்படுத்திக் கூறினர். வான்வெளி 'விஷ்ணுபாதம்' எனவும், வானத்தினின்று மழையாக இறங்கும் நீர் கங்கை எனவும், பெயர் பெற்றமையால், இயற்கையில் நிகழும் இந் நிகழ்ச்சியைக் கொண்டு 'விஷ்ணுவின் அடியிலிருந்து கங்கை கீழ் இழிந்தாள்' எனக் கதைகட்டி அம்முகத்தால், அக் கங்கை நீரைச் சடையில் ஏற்ற சிவபிரானை அவ்வாழ் வார் பழித்துரைத்து மகிழ்ந்தார். இங்ஙனமே பகலவன் காலைப்பொழுதில் வான்வெளியின் ஒருகூற்றையும், நண் பகற்பொழுதில் அதன் நடுக்கூற்றையும், மாலைப்பொழுதில் அதன் மற்றொரு கூற்றையுங் கடந்து செல்லுதலாகிய இயற்கை நிகழ்ச்சியையே 'விஷ்ணு மூவடியால் உலகினை அளந்ததாக' உருவகப்படுத்தி முன்னோர் கூறினர். இவ் விஷ்ணு வென்னுஞ் சொல் பகலவனை உணர்த்துதல் அறியாத வைணவர், அவனை ஒரு தனித்தெய்வமாகக் கொண்டு, அவன் மாவலிபாற் குறள்வடிவிற் சென்று மூவடிமண் இரந்து மூவுலகினையும் அளந்தான் என மற்றொருகதையுங் கட்டிவிட்டனர். இவ்வாறே ஆராய்ச்சி யறிவு வாயாத வைணவரும் சைவருங் கட்டிவிட்ட கதை கள் அளப்பில; என்றாலும், இத்தகைய கதைகளை எல்லை யின்றிப் படைத்து முழுமுதற் கடவுளை வழிபடவொட்டா மல் நம்போன்ற மக்களையே தெய்வமாக வழிபடுமாறு வைணவர்கள் செய்தாற்போலச், சைவர்கள் செய்திடாமை நமதுள்ளத்திற்கு ஓர் ஆறுதலைத் தருகின்றது. சைவர்கள் எத்தனை கதைகளைப் படைத்தனராயினும், பிறப்பு இறப்பு இல்லா ஒரு முழுமுதற் பொருளாகிய சிவத்தை வழிபடுதலி னின்றும் அவர் சிறிதும் பிறழ்ந்திலாமையே பெரிதும் பாராட்டற்பாலதொன்றாம். அதுகிடக்க.

இன்னும், அப் பாலகாண்டம், சரு—ஆம் இயலில், தேவர்களுந் தைத்தியரும் சாவாமருந்தாகிய அமிர்தம் பெறும் பொருட்டு ஒருங்குகூடிச் சென்று திருப்பாற்

கடலைக் கடைய, அதன்கண் வாசுகி உகுத்த நஞ்சு பெருகி அங்கே குழுமிய தேவர்கள்முதல் அனைவரையும் அழிக்கப் புக்கமை கண்டு, அவர்களெல்லாரும் பெரிதும் நடுக்குற்றுச் சிவபிரானை அடைக்கலம் புகுந்து "எல்லாம்வல்ல பெருமானே, எம்மைப் பாதுகாத்தருள்க, எம்மைப் பாதுகாத் தருள்க!" என்று குறையிரந்தமையும், அங்ஙனமே விஷ்ணுவும் சிவபிரானை நோக்கித் "தேவரீரே, எல்லாத் தேவர் கட்கும் முன்உள்ளீர், நீரே எல்லாத்தேவருள்ளும் சிறந்த தலைவராயினீர், ஆதலால், எல்லார்க்கும் வருவதில் முதற் பங்கு தேவரீரையே சாரற்பாலதாகலிற், பெருமானே, முதற்கண் வந்ததாகிய இந் நஞ்சினைப் பருகியருளுக"[1] என வேண்டினமையும், அவ் விருதிறத்தார் கலக்கத்தை யுங்கண்டு இரங்கிச் சிவபிரான் அந் நஞ்சினையே அமிர்த மாகப் பருகி அதனாற்றான் ஏதுந் துன்புறாது தேவர்துயர் களைந்தருளினமையும் நன்கெடுத்துச் சொல்லப்பட் டிருக் கின்றன.

இன்னும், அதன் ௬௬-ஆம் இயலில், தக்கன் வேட்ட வேள்விக்கட் கூடிய தேவர்களெல்லாருந் தம்மைப் பெரியராகக் க்ருதி இறுமாந்து, முதலிற் சிவபிரானுக்குச் சேர்ப்பிக்கற்பாலதாகிய அவியுணவினைச் சேர்ப்பியாதுவிட, அவர்களது இறுமாப்பை ஒழித்துத் தனது முதற்கடவுட் டன்மை காட்டி அவர்க்கு நல்லறிவு கொளுத்தல்வேண்டிச் சிவபிரான் அவர்களைத் தலையறுத்தும், உடலங்களைப் பிளந்தும் உறுப்புக்களை வெட்டியும் ஓட்டித் தானே வெற்றி முதல்வனாய்த் திகழ்ந்துநிற்பப், பின்னர் அத் தேவர்கள் எல்லாரும் நல்லறிவு பெற்றுத் தமது சிறுமை யும் எல்லாம் வல்ல அப் பெருமானின் பெருமையும் உணர்ந்து அவனை வழுத்த, அவன் அவர்க்கிரங்கி மீண் டும் அவர்தம் உடலங்களையும் பழுதுபட்ட உறுப்புக்களை

---

1. விஷ்ணு சிவபிரானை வேண்டிய இவ்வுரை வடமொழியிற் பின் வருமாறு உளது: "தைவதைர் மத்யமாநேது யத்பூர்வம் ஸமுபஸ்திதம், தத்த்வதீயம் ஸுரச்ரேஷ்ட ஸுராநாம் அக்ரதோ ஹியத், அக்ரபூஜாம் இஹ ஸ்தித்வா க்ருஹாணேதம் விஷம் ப்ரபோ'. ௨௩-௨௪.

யுஞ் சீர்திருத்திக் கொடுத்தருளினமையும் நன்கு விளக்கி நுவலப்பட் டிருக்கின்றது.

இனி, வான்மீகி இராமாயணத்திற்குப் பன்னெடுங் காலம் முற்பட்டனவாகிய மாபாரதப் பழம் பகுதிகளிலுஞ் சிவபிரான்றன் முழுமுதற் றன்மையும், அவன் தன்னை வேண்டிக் குறையிரந்த அடியார்க்கு அக்குறை முடித்தமை யும் பலவிடங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. இப் பகுதி களிலுங்கூட இடையிடையே விஷ்ணுவையுங் கண்ணனை யும் உயர்த்து உரைக்குங் கதைகள் சிலவற்றை வைண வர்கள் நுழைத்தனராயினும், அவர் நுழைத்த அக் கதைகள் பாரதத்திற்கும் மிக முற்பட்ட பிராமணங்களினும் வேத நூல்களினுங் காணப்படாமையானும், மற்றுச் சிவ பிரான்றன் இறைமைத் தன்மையை நாட்டுங் கதைகளே மிகப்பழைய அந் நூல்களினெல்லாங் காணப்படுதலானும் விஷ்ணுவையுங் கண்ணன் இராமனையும் உயர்த்த முனைந்த கதைகள் பிற்காலத்துப் போந்த வைணவர்களாற் புதிது புனைந்து புகுத்தப்பட்டனவாதல் தேற்றமாம். இம் மாபார தத்துட் சிவபிரான்றன் தனித்தலைமைத் தன்மையை நாட்டும் பகுதிகளுட் சில எண்டெடுத்துக்காட்டுதும்:

பகைவராற் பெரிது காக்கப்படுஞ் சயத்திரதனைக் கோறல் ஏலாமைகண்டு நெஞ்சங் கலங்கிய அருச்சுனனைக் கண்ணன் தேற்றிச் சிவபிரான்மாட்டுப் பாசுபதம் பெறுக வென அவனை ஏவி, அவனுந் தானுமாக நுண்ணுடம்பில் திருக்கைலாயஞ் சென்று அப் பெருமானை வணங்கி வாழ்த்தி அது பெற்று மீண்டமை துரோணபருவத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ் விருவரும் இறைவனை வழுத்துகையிற் "சிவபிரான் எல்லாப் பொருள்கட்கும் உயிராவன், எவற்றையும் படைப்பவன் எவற்றிலும் ஊடுருவி நிற்கும் முதல்வன்" (விச்வாத்மனே விச்வஸ்ருஜே விச்வம் ஆவ்ருத்ய திஷ்டதே) என்று பரவினர்.

அநுசாசனபருவத்திற், கண்ணன் சிவனடியாரான உபமந்யுமுனிவர்க்குச் சீடனாகி அவர் அறிவுறுத்த

மொழிப்படியே, ஒரு திங்கள் கனிகளையே அயின்றும் நான்கு திங்கள் நீரையே அருந்தியும் ஒற்றைக் கால்மேல் நின்று இரண்டு கைகளையும் உயரவெடுத்துந் தவம்புரியச் சிவபிரானும் அம்மையும் அவற்கெதிரே தோன்றினரென வும், அப்போது இந்திரனும் விஷ்ணுவும் பிரமனும் ரதந்தர சாமத்தைப் பாடிக்கொண்டு சிவபிரானைத் தொழுதபடியே அவரோடு உடன்வந்தனரெனவும், அக் காட்சியினைக் கண்ட கண்ணன் சிவபிரான்றன் இறைமைத் தன்மை களைப் பலவாறு எடுத்துரைத்து வணங்கி அப்பனிடத்து எட்டு வரங்களையும் அம்மையிடத்து எட்டுவரங்களையும் பெற்றனனெனவுஞ் சொல்லப்பட்டமை காண்க (௬௭அ-௧௦௲௪).

சாந்திபருவத்திற் பரசுராமன் கந்தமாதன மலைமேற் சிவபிரானை வழிபட்டு அவர்பால் மழுப்படைபெற்றுச் சிறந் தமை சொல்லப் பட்டிருக்கின்றது (௧௭௪அ).

சௌப்திக பருவத்திற் சிவபிரான் பரசுராமனை நோக் கிக் கூறுகின்றுழிக், கண்ணன் சிவபிரானை வழிபட்டமை நுவலப்பட்டிருக்கின்றது (௲௧௨).

கர்ணபருவத்தில் (௲௲-௲௫-ஆம் இயல்), முப்புரங் களில் உள்ள அசுரர்களாற் பெரிதும் இடுக்கண்உற்ற தேவர்கள் நான்முகனைத் தலைவனாய்க்கொண்டு சென்று, சிவபெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவர்தம் இறைமைத் தன்மைகளைப் பலவாறு பாடி வழுத்தித் தங் குறையைத் தீர்த்தருளுமாறு வேண்ட, அவரும் அதற்கிசைந்து அவ்வசுரர்களின் பட்டினங்களைப் பொடி படுத்தினமை புகலப்பட்டிருக்கின்றது. அவர் அங்ஙனம் அம் முப்புரங்கண்மேற் சென்ற காலத்துத், தேவர்கள் தமது அறியாமையால் தாமும் அவர்க்கு உதவிசெய்யக் கூடுமென்று கருதி அவர்க்குப் பல போர்க்கருவிகளாய் அமைந்துழி, விஷ்ணுவும் சோமனும் அக்நியும் என்பார் அவர் ஏந்திய வில்லின் நாணுங் கணையுமாய் அமர்ந்தன ராகச் சொல்லப்பட்டிருக்கின்றனர்.

இன்னும், வனபர்வந் தீர்த்த யாத்திரைச் சருக்கத்திற் கலிங்கதேயத்திலோடும் வைதரணி யாற்றங்கரையிலுள்ள திரிபிஷ்டவத்திற் சிவபிரான் வணங்கப்படுதலும், இராமோபாக்கியானத்தில் தக்கணத்தின் மேற்கரையிலுள்ள கோகர்ணத்திற் பிரமன் முதலான எல்லாத் தேவர்களும் சிவபெருமானை வழிபட்டமையுங் கூறப்பட்டிருக்கின்றன.

இன்னும், அநுசாசனபருவத்தில் உதிட்டிரன், கண்ணனை நோக்கித் தனக்குச் சிவபிரான்றன் முழுமுதற்றன்மைகளை எடுத்துரைக்குமாறு வேண்ட, அவனும் அதற்கு இசைந்து, "சிவபிரானே நிலையியற்பொருள் இயங்கியற்பொருள் எல்லாவற்றையும் படைத்திருக்கின்றான்; ஓ அரசனே! சிவபிரானுக்கு மேற்பட்டது ஏதுமேயில்லை; இம் மூன்றுலகங்களினெல்லாம் அவனே மிகச்சிறந்தோன்; இம் மூன்றுலகங்களினும் அவனையொப்பார் எவரும் இன்மையின், அப் பெரிய தெய்வத்தின்முன் ஏதும் எதிர்நிற்கவல்லதன்று" என நெடுகச் சொல்லிக்கொண்டே சென்று, சிவபிரானுக்கு மாறுகச் செய்த தக்கன் வேள்வியிற் பிருகுவின் தாடியைப் பறித்தும், பகனுடைய கண்களைக் குத்தியும், பூஷனுடைய பற்களைத் தகர்த்தும், மற்றத் தேவர்களையும் இவ்வாறே ஒறுத்தும், பின்னர் அவரெல்லாம் நடுங்கி வேண்ட அவர்கட்கு அருள்செய்தும் சிவபிரான் தனது முழுமுதற்றன்மை தெளிவித்த வரலாற்றை அவன் மொழிந்தமை குறிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் இவ்வாறே சிவபிரான்றன் இறைமைத்தன்மைகளை யுரைக்கும் மாபாரதப் பகுதிகளையெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டலுறின் இது மிக விரியும்.

இங்ஙனமாக மாபாரதம் எங்கும் சிவபிரான் ஒருவனே முழுமுதற் கடவுளாதலும், ஏனை நான்முகன் திருமால் முதலிய தேவர்களுங் கண்ணனும் அப் பெருமானை வணங்கி வழிபட்டுப் பல நலங்களைப் பெறுவாராதலுந் தெளித்துரைக்கப்பட்டமையினை நடுநின்று ஆராய்ந்து கண்டலாசன் என்னும் ஆங்கில ஆசிரியர் இதிகாசங்கள் இயற்றப்

பட்ட பழைய காலத்தில் விஷ்ணுவின் வணக்கம் இவ் விந்தியநாட்டில் எங்கும் இருந்ததில்லையென்றும், அக் காலத்திற் சிவபிரான் வணக்கமே இந்நாடெங்கும் நிரம்பப் பரவியிருந்ததென்றும் அரியபெரிய மேற்கோள்கள் பற்பல காட்டி விரித்தெழுதி யிருக்கின்றார்.[1] இவ்வாறு விஷ்ணு முதலிய எல்லாத் தேவர்களும் சிவபிரான்முன் எதிர் நிற்க லாற்றாதவர்களாய் அவனே முழுமுதற் கடவுளாதல் உணர்ந்து அவனை வழிபட்டுப் பெறற்கரிய பேறுகளெல் லாம் பெற்றிருக்க, விஷ்ணுவினது ஒருமிகச் சிறிய கூறாகச் சொல்லப்படுங் கண்ணன்,[2] வாணனுக்காகப் பரிந்துவந்து ஏற்ற சிவபிரானைத் தோற்றோடச் செய்தனனென்னுங் கதை முழுப்பொய்யாய்ப் பின்வந்த வைணவராற் புனைந்து கட்டிப் பாரதத்தின்கண் நுழைக்கப்பட்ட தொன்றாதல் தெற்றெனப் புலனாகின்றதன்றோ? சிவபிரான் அத்துணை எளியராய் வாணனது கோட்டையைக் காத்து நின்றனராயின், கண்ணனும் அருச்சுனனும் பாசுபதம் வேண்டித் திருக்கைலாயஞ் செல்ல வேண்டுவதென்னை? வாணனது கோட்டையிற் சென்றே அவர்பால் அதனைப் பெற்றிருக்க லாமன்றோ? அத்துணைதான் ஏன்? சிவபிரானைத் தோற்றோடச்செய்ய வல்லனாயிற் கண்ணன்தானே அப் பாசுபதத்தினும் மேம்பட்டதொரு படையினை அருச்சுன னுக்கு வழங்கியிருக்கலாமன்றோ? சிவபிரான் அமர்ந் திருக்கும் அறிவொளி வடிவினதான திருக்கைலாயத்தை இப் பருவுடம்புகொண்டு சேறல் இயலாதென்பதனை நன் குணர்ந்தன்றோ கண்ணனும் அருச்சுனனும் நுண்ணுடம்பு கொண்டு அங்கே சென்றனர். ஆதலாற், சிவபிரான் வாணன் கோட்டையில் அத்துணையெளியராக நின்று காத் தனரென்பதூஉம், அவரைக் கண்ணன் தோற்றோடச் செய் தனனென்பதூஉம் பின்வந்தோர் புனைந்த முழுப்பொய்

1. See Lassen's Indian Antiquities, vol. I. second edition, pp. 675, 685, 756, 861, 708, 871, 922.

2. விஷ்ணுவின் கரிய மயிர் ஒன்று கண்ணனாகவும், வெளிய மயிர் ஒன்று பலராமனாகவும் பிறந்தனவென்று விஷ்ணுபுராணமும் (ரு, க, ரு அ), மகாபாரதம் ஆதிபருவமும் (எ௲0சு) புகலுகின்றன.

யாதல் நன்கு விளங்கும். கண்ணனே பல இடங்களிற் சிவபிரான்றன் முழுமுதற்றன்மைகளை விரித்தோதினமையும், அவன் அப் பெருமானைக் காண்டற்குப் பெருந்தவம் புரிந்தமையும் பலகாலும் எடுத்துரைக்கும் மாபாரதப் போக்குக்கு இக் கதை முற்றும் முரணாய் இருத்தலின் இது முழுப்புரட்டாதலும், பேயாழ்வார் இக் கதையினைக் கூறக் காணாமையின் இஃதவர் காலத்தில் இல்லாமல் அவர்க்குப் பின்வந்த திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார் காலம்முதற் கட்டி வழங்கலானமையும் திண்ணமாய் விளங்குமென்க.

அற்றேல் அஃதாக, மாபாரதத்திற் சிவபிரான்றன் முழுமுதற் றன்மைகளை விரிக்குங் கதைகள் மட்டும் மிகப் பழையனவாதல் எற்றாற் பெறுதுமெனின், அதுவும் ஒரு சிறிது காட்டுதும்: மாபாரதத்திற்கு முற்பட்டதும் உபநிடதங்களில் மிகப் பழையதுமான கேநோபநிடதமானது, முப்புரங்களை அழித்தபின்னர் அவற்றை அழித்த வெற்றி தத்தமக்கே உரித்தாகுமெனத் தேவர்கள் ஒவ்வொருவருந் தாந்தாமே நினைந்து இறுமாந்தமையும், அவர்கள் அவ்வாறு பிழைபட நினைந்து அடைந்த இறுமாப்பினையொழித்து அவர்கட்கு நல்லறிவு தெருட்டுவான் கருதிச் சிவபிரானே அத்தேவர்களால் முன்அறியப்படாத ஓர் இயக்கவடிவந் தாங்கி அவர்களெதிரிற் றோன்றி அவர்கள் முன்னே ஒரு துரும்பைக் கிள்ளியிட, அவனை இன்னனென்று அறிவான் புகுந்த தேவர் ஒவ்வொருவரும் அவன் கட்டளையிட்டவாறே அத் துரும்பை அசைக்க முயன்றும் அஃதவர்களாற் சிறிதும் இயலாமையின் அவர்கள் அஞ்சியோடிப்போக, இறுதியில் அவனைக் காண்பான்புக்க இந்திரனுக்குமுன் அவ்வியக்கன் கட்புலனாகாமல் மறைந்துவிட, அதனாற் பெரிது வருந்திச் சிறுமையுற்று நின்ற அவ் விந்திரனுக்குமுன் வானத்தின்கண் உமைப்பிராட்டியார் தோன்றி அவ்விறைவனியல்பு எல்லாத் தேவர்கட்கும் மேற்பட்டதாதலை அறிவுறுத்தி மறைந்தமையும் தெளிவாகச் சொல்லப்பட்டிருத்தல் காண்க. முப்புரங்களை அழித்த வெற்றி எல்லாம்வல்ல

சிவபிரானுக்கே உரித்தாதல் எல்லா நூல்கட்கும் ஒப்ப முடிந்த தொன்றாகவும், இயக்கன்வடிவிற் புலப்பட்டுத் தோன்றி மறைந்த இறைவன் இயல்பை அறிவுறுத்து தற்கு அருள்கனிந்து வந்த இறைவி உமைப்பிராட்டியா ராகலின் அங்ஙனம் இயக்கனாய் வந்தோன் அவள் காதற் கொழுநனாகிய சிவபிரானேயாதல் எளிதிற் பெறப்படா நிற்கவும், இவ்வுண்மையையுள்ளவாறே எடுத்துரைக்கும் நடுவுநிலைமையின்றிக், கேநோபநிடதத்திற்கு இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகட்குமுன் உரையெழுதின மாதாவாசாரி யாரும், அறுநூறு ஆண்டுகட்குமுன் உரையெழுதின இராமாநுஜாசாரியாரும் ஆகிய வைணவப் புலவர்கள் அங் ஙனம் இயக்கவடிவத்தில் வந்தோன் நாராயணனே எனப் பழைய நூற்கருத்துகட்கெல்லாம் முற்றும் மாறாக உரை யுரைத்தார்; அங்ஙனம் இயக்கவடிவிற் றோன்றினோன் நாராயணனேயாயின், தேவர்களெல்லாரும் அவனை முதல்வனாய்க் கொண்டன்றோ முப்புரங்களை அழித்திருத் தல் வேண்டும், பழைய வடநூல்களுள் எதுவும் அவ்வாறு உரைப்பக் காணாமையானும், நாராயணனே இயக்கவடிவிற் போந்து மறைந்தது உண்மையாயின் அவனை யறிவுறுத்து தற்கு அவன்றன் காதற்கிழத்தியாகிய திருமகளன்றோ வரற்பாலள், மற்று அவள் அங்ஙனம் வரக்காணாமையா னும் அவ் வியக்கவடிவிற்போந்து தேவர்களின் செருக்கை யடக்கினோன் சிவபிரானேயாதல் ஒருதலை.

இதனோடொப்பவே, மாபாரதத்திற் கண்ணன உதிட் டிரனுக்குச் சிவபிரானது அறிதற்கரிய இறைமைத் தன் மைகளை விரித்துரைக்கும் மற்றொரு பகுதியும் 'கேநோப நிடதத்'திற் போந்த இயக்கன் சிவபிரானேயாதலை நிலை நிறுத்தும் ஒரு பெருஞ்சான்றாம். 'சிவபெருமான் முப்புரங் களை நீறாக்கிய பின்னர் ஐந்து குடுமியோடு கூடிய ஒரு சிறு மகவாய் உமைப்பிராட்டியாரின் மடிமீது அமர்ந்திருந் தனன். அப்போது தேவர்கள் எல்லாரும் 'இவன் யார்? இவன் யார்?' என்று தம்முளே வினவியும், அவனை யறிந் திலர். அதனால் இந்திரன் பொறாமையுற்றுத் தனது

குலிசப்படையால் அக் குழவியை எறியப்புக, அஃது அப் படையினைத் தடைசெய்து, அவன் கை வழங்கமாட்டாமல் தடிபோல் மரத்துநிற்கப் பண்ணிற்று. அந் நிகழ்ச்சியைக் கண்டு தேவர்களெல்லாரும் வெருவி, நான்முகன்பாற் சென்று நிகழ்ந்தவற்றை யறிவிப்ப, அவன் தனது அறிவுக்கண்ணாற் கண்டு அம்மகவு எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபிரானுதலை உணர்ந்து, அப் பெருமானை வழுத்தினன்; அதன்பிற் றேவர்களெல்லாரும் உமை காதலனை வணங்கினர்; இந்திரனும் எப்போதும்போலத் தனது கை வழங்கப்பெற்றான்' என்று இதனை இன்னும் விரிவாகக் கண்ணனே மொழிந்தமை அநுசாசனபருவம், எசருஅ-ஆம் செய்யுளிலிருந்து சொல்லப்பட்டிருக்கின்றது. இத் தன்மையவான மிகப் பழைய வடநூற்சான்றுகளுக் கெல்லாம மாறாக இயக்க வடிவில் வந்த இறைவனை நாராயணன் என்றதூஉம், உண்மை பிறழ்ந்துரைக்குந் தமதுரைக்குச் சான்றாகத் தாமே புதிது புனைந்த பொய்க் கதைக் கூளங்களாகிய புராணங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டியதூஉம் இராமாநுஜர் மாத்துவர் என்னும் உரைகாரருக்குப் பெரிதும் ஏதமாமென்க.

இனி, உபநிடதங்களினும் மிகப் பழமையாவன 'பிராமணங்கள்' ஆகும். இவற்றுள்ளும் மிகப் பழையது ஐதரேயபிராமணம். இதன் மூன்றும் இயல், முப்பத்துமூன்று முப்பத்துநான்காம் பகுதிகளிற் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது: பிரஜாபதி தன் மகளைத் தானே புணர்ந்தமை கண்ட தேவர்கள் வருந்திப் "பிரஜாபதி முன் அறியப்படாத ஒரு செய்கையைச் செய்கின்றான்" என்று கூறி, அவனை ஒறுத்தற்கு ஒருவனைத்தேடினார்கள். தமக்குள் அவனை ஒறுக்கத்தக்க ஆற்றல் உடையார் எவரும் இல்லாமையின், அஞ்சத்தக்க உருத்திரனை நாடி அவனை ஒறுக்குமாறு வேண்ட, உடனே உருத்திரன் அதற்கு இயைந்து தனது மூவிலைவேலாற் பிரஜாபதியைக் குத்தி ஒறுத்தான். அதன்பிற் றேவர்கள் சிவபிரானை இருக்குவேதவுரையால் வழுத்தி வணங்கினர்.

இருக்குவேதத்தைச் சேர்ந்த மற்றொரு பிராமண மாகிய கௌஷீதகியின் ஆறும் இயல் முதல் ஒன்பது செய்யுட்கள் வரையிற் சிவபிரான்றன் பெயர்களாகிய பவன், சர்வன், பசுபதி, உக்ரதேவன், மகாதேவன், உருத்திரன், ஈசானன், அசனி முதலியவற்றால் அவனே முழுமுதற் கடவுளாதல் காட்டப்பட்டது. இப் பெயர்களைக்கொண்டே சிவபிரான் வாஜசநேயசம்ஹிதை (௩௬, அ, கூ)யிலும், மைத்திராயணீ சம்ஹிதை (உ, கூ, க) யிலும், அதர்வ வேதத்திலும் (கரு, ரு) வழுத்தப்படுதல் காண்க. இவ்வுண்மைகளை யெல்லாம் நடுநிலைதிறம்பாமல் ஆராய்ந்துபார்த்த ஐரோப்பிய ஆசிரியர்கள் பிராமணங்கள் உண்டான மிகப் பழைய காலத்திற் சிவபிரான் ஒருவனே முழுமுதற்கடவுளாக வைத்து வணங்கப்பட்டனன் என்று மெய்யுரை கூறினர்.[1] இங்ஙனமே, 'சாங்காயன பிராமணத்'திலும், சுக்லயஜுர் வேதத்தைச் சேர்ந்த 'சதபதபிராமணத்'திலும், (உ, கூ, உ, கூ) சிவபிரானும் அம்பிகையும் ஒருங்கு வைத்து முழுமுதற் கடவுளாக வணங்கப்படுதல் காண்க.

பிராமணங்கள் ஆக்கப்பட்ட பண்டை நாளில் விஷ்ணு ஒரு சிறந்த தெய்வமாகக் கருதப்படவில்லை. பிராமணங்களுட் காலத்தாற் பிற்பட்டதாகிய சதபதபிராமணத்திலே தான் முதன் முதல் விஷ்ணுவுக்கு ஓர் உயர்ச்சியுண்டானமையும், அதனால் விஷ்ணு இறுமாப்படைந்து தன்னை ஏனைத் தேவர்களினின்றும் வேறு பிரித்துக் கொண்டு சென்று நாணேற்றிய தன் வில்லின் முனைமேற் றன் மோவாயை வைத்தபடியாய்ச் செருக்குற்று நிற்பத், தேவர்கள் எறும்புகளை ஏவி அவனது வில்லின் நாணைக் கடித்து அறுக்கும்படி செய்ய, உடனே அவ்வில் கடுவிசையோடும் நிமிர்ந்து விஷ்ணுவின் தலையை அறுத்துக் கொண்டு சென்றமையும் சொல்லப்பட்டிருத்தல் காண்க.[2] விஷ்ணு இங்ஙனந் தலையறுப்புண்ட செய்தியைக் கூறும் சதபத

1. See 'Rigveda Brahmanas' translated by Dr. A. B. Keith, pp. 25-26.

2. சதபத பிராமணம், கச, க, க, க-கரு.

பிராமணமே, உருத்திரப்பிரான் விடுத்த கணையாற் பகன் கண் இழந்ததும், பூஷன் பல்லுதிர்ந்ததும், இவற்றைக் கண்ட தேவர்களெல்லாரும் நடுக்கம் எய்திச் சிவபிரானுக்குச் சேர்ப்பிக்கற்பாலதாகிய அவியுணவினைச் சேர்ப்பித்து வணங்கினதும் பலவிடங்களினும் எடுத்துக் கூறுகின்றது.[1] பிராமணங்களை நன்கு ஆராய்ந்து அவற்றின் உண்மையை அளந்தறிந்த ஆங்கில ஆசிரியரான கீத் என்பவர், "ஐதரேயத்திற் சிவபெருமானே தனது உருத்திர வடிவிற் பெரிய தெய்வம்; அங்ஙனமே சதபதத்திலும், வாஜசநேயசம்ஹிதையின் பிற்பகுதிகளிலும், அதர்வ வேதப் பகுதிகளிலும் அவரே முதற்பெருந் தெய்வம்."[2] என்று ஐதரேய ஆரணியகத்தின் முகவுரையிலும் இம் மெய்ம்மையை முடித்துக் கூறுதலுங் கருத்திற் பதிக்கற்பாற்று. சுக்லயஜுர்வேதத்தின் கண்ணதாய்த் தலைசிறந்து விளங்கும் சதருத்ரீயம் முற்றிலும் சிவபெருமான் ஒருவனே எல்லாத் தேவர்கட்கும் முதல்வனாய், எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் எல்லா இரக்கமும் எல்லா இன்பமும் ஒருங்குடைய முழுமுதற் கடவுளாய் வைத்து வழுத்தப் படுதல் பெரிதும் நினைவுகூரற் பாலதொன்றும்.

இனி, வடமொழி நூல்கள் எல்லாவற்றுள்ளும் மிகப் பழையதாகிய இருக்குவேதத்தின் முதன் மண்டிலம், ௪௩-ஆம் பதிகம் உருத்திரன் ஒருவனே அறிவிலும் வரங்களை மிக வழங்குதலிலும் ஆற்றலிலுஞ் சிறந்தோன் என்றும், எல்லா உயிர்களின் நோய்த் துன்பத்தை நீக்குவோன் என்றும், அவனே பாட்டுகட்கும் வேள்விகட்குந் தலைவன் என்றும், அவன் கதிரவன் ஒளியைப்போலவும் பொன்னைப் போலவும் விளங்குவோன் என்றும், கடவுளர் எல்லார்க்கும் அவனே தலைவன் (ச்ரேஷ்டோ தேவாநாம்), எல்லாத்

---

1. சதபத பிராமணம், க, எ, ௪, ௫-௬; க, எ, ௩, க-கO.

2. "Aufrecht has proved that even the Aitareya Siva is the great god in his form of Rudra, just as he is in the Satapatha, the later books of the Vajasaneyi samhita, and portions of the Atharvaveda"—The Aitareya Aranyaka, by Dr. A. B. Keith, p. 33.

தேவரினும் அவனே ஈகையிற் சிறந்தோன் என்றும், எல்லாவுயிர்கட்கும் நலங்களை அருள்வோன் அவனே என்றும் வலியுறுத்திக் கூறுதல் காண்க; அங்ஙனமே அதன் ௧௧௪-ஆம் பதிகமும் சிவபிரான் ஒருவனே முழுமுதற் கடவுளாதலைத் தேற்றுவதோடு, அவன் சடைமுடியுடையோனாய், உருத்திரகணங்களுக்குத் தலைவனாய், அருளிரக்க ஈகையில் மிக்கோனாய், வேள்விப் பயனை நிறைவேற்றுவோனாய், ஞானியாய் (அறிவோனாய்), உயர்ந்த மருந்துகளைக் கையில் வைத்திருப்போனாய், இறப்பிலியாய்த் திகழுமாற்றை வகுத்துரைக்கின்றது; இரண்டாம் மண்டிலத்து ௩௩-ஆம் பதிகமும் அங்ஙனமே சிவபிரான் தேவர்கள் எல்லாரினும் மிகச் சிறந்தோனாதல் தெரிப்பதுடன், அவனே வலிமையின் மிக்கார் எல்லாரினும் வலிமையிற் சிறந்தோனாவன் எனவும், அவனே சாந்தனாய் (அமைதி மிக்கவனாய்) அடியார்க்கு எளியனும் எனவும், ஏனைத்தேவர்களாற் போதருந் தீமைகளையெல்லாந் துடைப்பவனும் எனவும், அவனைவிட ஆற்றலின் மிக்கது எதுவும் இன்றெனவும், புகழ்மிக்கோனாய் என்றும் இளையோனாய்த் தன் தேர்மீது அமர்ந்து முப்புரங்களை அழித்தக்காற் பெரிதும் அஞ்சத்தக்கோனாய்க் கிளர்ந்தனன் எனவும் அறிவுறுத்துகின்றது; அதன் ஐந்தாம் மண்டிலத்து ௫௨-ஆம் பதிகம் உருத்திரனே மருத்துக்களுக்குத் தந்தையாவன், அவன்றன் காதற்கிழத்தியாகிய பிரிசிநி என்னும் உமைப்பிராட்டியே அவர்கட்குத் தாய் ஆகுவள் என்கின்றது; அதன் ஆறும் மண்டிலத்தில் ௧௬-ஆம் பதிகமானது உக்கிரனாகிய சிவபிரான் மூன்று பட்டினங்களைப் பொடி செய்தான் என நுவல்கின்றது; அதன் ௪௯-ஆம் பதிகம் உருத்திரனே உலகிற்கு முதற்கடவுள் (புவநஸ்யபிதரம்) என்கின்றது; அதன் ஏழாம் மண்டிலத்து ௪௬-ஆம் பதிகம் உருத்திரன் தன்வயத்தனாய் நிற்பவனேயன்றி (ஸ்வதாவ்நே)ப் பிறரைச் சார்ந்து பிறர் துணையை நாடி நிற்பவன் அல்லன் என்கின்றது; பத்தாம் மண்டிலத்து ௬௬-ஆம் பதிகம் உருத்திரன் தன்னைச் சூழ்ந்த அடியரான உருத்திரர் என்னுந் தேவகூட்டத்தோடும் போந்து அடியார்க்கு

எளியனாய் அருள் வழங்குவோன் என்கின்றது; அதன் ௧௩௬-ஆம் பதிகமானது, சடைமுடியோனான (கேசி) சிவபிரான் தீ மண்டிலம் நீர்மண்டிலம் இம்மை மறுமையுலகங்கள் எல்லாவற்றையுந் தாங்குவோன் என்பதூஉம், அவன் வெறுவெளியாய்ச் (சிற்றம்பலமாய்) நோக்கப்படுவோன், அவனே ஒளிவடிவினன் (கேசிஇதம்ஜ்யோதிர்) என்பதூஉம், அவன் முனிவர்க்கெல்லாம் முனிவன் (தக்ஷிணாமூர்த்தி) ஆவன் என்பதூஉம், அவன்தன் உருத்திர கணத்திலுள்ள ஒருவரால் நஞ்சினை வருவித்து அதனைப் பருகினன் (கேசிவிஷஸ்ய பாத்ரேணயத் ருத்ரேணாபிபத் ஸஹ) என்பதூஉம் தெரித்துரைத்தல் காண்க. இவ்வாறு பண்டை வடநூலாகிய இருக்குவேதத்தி னுள்ளேயே சிவபிரான் ஒருவனே முழுமுதற் கடவுளாதலும், அவனே முப்புரங்களை அழித்ததும், அவனே 'விஷபானம்' (நஞ்சைப் பருகுதல்) செய்ததுந் தெளித்தோதப் பட்டமையானும், இருக்கு வேதத்திற்குப் பின்வந்த அதர்வவேதமும், பிராமணங்கள் உபநிடதங்களும் அவனையே முதற்பெருங் கடவுளாய் வைத்துத், 'திரிபுரசங்காரம்,' 'விஷபானம்' முதலான அரும்பெரு நிகழ்ச்சிகளை அவன் மேலனவாகவே உரைத்தலானும், இவ்வாறே விஷ்ணுவை அப் பழைய நூல்கள் முழுமுதற் கடவுள் நிலையில் வைத்தாதல் மேற்குறித்த 'திரிபுரசங்காரம்' முதலிய அரும்பெரு நிகழ்ச்சிகளை விஷ்ணுவின் மேலனவாக வைத்தாதல் யாண்டும் உரைப்பக் காணாமையானும், இப் பழைய நூல்களின் கருத்துக்கு முழுதும் ஒத்தே இவற்றிற்குப் பின்வந்த 'மாபாரதம்,' 'இராமாயணம்,' 'புராணங்கள்' எல்லாம் சிவபிரானையே முழுமுதற் கடவுளாக நிறுத்தி ஓதுதலானும், இம் மாபாரதம் முதலான பின்நூல்களிற் சிவபிரான்றன் முதன்மைத் தன்மைகள் கூறும் பகுதிகளே பழமையான உண்மைப் பகுதிகளாமெனவும், அவற்றுக்கு மாறாக விஷ்ணுவையும் அவன்றன் அவதாரங்களாகக் கண்ணன் இராமன் முதலாயினாரையும் உயர்த்திச் சிவபிரானை இகழ்ந் துரைக்கும் பகுதிகளெல்லாம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுமுதற் றோன்றிய வைணவப் புலவர்கள் பொய்யாகப் புனைந்து

கட்டி அப் பின்னூல்களின்கண் இடையிடையே நுழைத் தனவாகு மெனவும் பகுத்துணர்ந்து தெளிக. இதுகாறும் ஆராய்ந்து காட்டப்பட்ட வடமொழி வேதங்கள், பிராமணங் கள், உபநிடதங்கள், மாபாரதம், வான்மீகி இராமாயணம், மற்சபுராணம், வாயுபுராணம், இலிங்கபுராணம், தேவீபாக வதம் முதலாக ஒன்றினொன்றுயர்ந்த பழைய வடநூல் களில் எங்குங் காணப்படாத பொய்க்கதைகளும், விஷ்ணு வையும் அவர்தம் அவதாரங்களையும் உயர்த்துக்கூறிச் சிவபிரானை இகழ்ந்துரைக்கும் உரைகளும் மலிந்த விஷ்ணுபுராணம், பாத்மோத்தரம், வைணவபாகவதம், பிரமாண்ட புராணம், இராமோபநிஷதம், நாராயணோப நிஷ தம், ஆத்மோபநிஷதம், ஆங்கிரஸஉபநிஷதம், மகோபநிஷ தம், பைங்களோபநிஷதம் முதலாயினவும் மற்றும் இவை போல்வனவும் மதச்சண்டை விளைத்து இந் நாட்டுமக்க ளின் ஒற்றுமை குலைத்தற்காகக் கி. பி. ஒன்பதாம் நூற் றுண்டிற்குப்பின் வந்த வைணவப்புலவர்களாற் புதிய வாய்க் கட்டப்பட்டனவாதலால், அவைதம்மை நம்பி அறிவுடையோர் முழுமுதற் கடவுளாகிய சிவபிரானது வணக்கத்தைக் கைவிடார். பகுத்தறிவில்லாப் பொய்ப் பற்றுடைய புல்லறிவினரே மிகப் பிற்பட்ட காலத்தெழுந்த இப் பொய்ந்நூல்களை நம்பி, எல்லாம் வல்ல இறைவனை வழிபடாமற், பிறப்பு இறப்புக்களிற் கிடந்து உழலும் நம் மோன்ற மக்களைத் தெய்வங்களாக வணங்கித் தம் பிறவிப் பயனை இழப்பரென விடுக்க. ஆதலாற், கண்ணன் வாண னொடு புரிந்தபோரிற் சிவபிரான் வந்தெதிர்த்துத் தோற் றோடினன் என்னுங் கதை, அவ் வாணன் போரைக் குறிப் பிட்ட பேயாழ்வாராற் கூறப்படாமையானும், சிவபிரான் றன் முழுமுதற் றன்மையை அடுத்தடுத்துப் பல்காலும் எடுத்துநாட்டும் 'மாபாரதக்' கருத்துக்கு அப் பெருமானைப் பெரிதும் இழிபுபடுத்தும் அக் கதை பெரிதும் முரணுமாக லானும், அவ்வாறு பழைய நூல்களுள் எதுவும் சிவ பிரானை இழித்துரைப்பக் காணமையின் அக் கதை அவை யெல்லாவற்றுக்கும் முற்றும் மாறுமாகலானும், அது கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டுமுதல் வந்த பொய்ப்

பற்றுள்ள வைணவராற் புதிது படைக்கப்பட்டுத் திருமங்கை, திருமழிசை, சடகோபர் முதலியோரான் மட்டும் எடுத்தாளப்பட்ட தொன்றாகுமென்று கடைப் பிடித் துணர்ந்துகொள்க.

மேலும், திருமங்கை யாழ்வாரே சிவபிரான் முப்புரம் எரித்த வரலாற்றினை மெய்யெனத் தழுவிப்,

"புரம்எரி செய்த சிவன்." (உ, ௩, க)

எனவும்,

"திரிபுரம் மூன்றெரித்தானும்." (அ, கஉ)

எனவும்,

"தழல்நிறவண்ணன் நண்ணார் நகரம்விழ
நனிமலை சிலைவளைவு செய்தங்கு
அழல்நிற அம்பது ஆனவனே." (சு, க, ௩)

எனவும்,

"புரங்கள் மூன்றுமோர் மாத்திரைப்போதில்
பொங்கெரிக்கு இரை கண்டவன்." (க0, உ, கூ)

எனவும் ஓதினார்; இங்ஙனம் ஓதுகின்றுழி, ஏனை எல்லாத் தேவர்களும் சிவபிரானுக்கு ஒரோவொரு கருவியாய் அமைந்தாற்போலத் திருமாலும் அவரது வில்லில் ஓர் அம்பாக அமைந்தனர் எனக் கூறியவாற்றாற் சிவபிரானே எல்லாவற்றையும் இயக்கும் முழுமுதற் கடவுளாதலும், திருமாலும் மற்றைத் தேவர்களும் அவன் இயக்கினால் இயங்கும் உயிர்களாதலும் திருமங்கையாழ்வார்க்கும் உடம்பாடாதல் பெற்றாம். இன்னும், தாம் சாவாமைப் பொருட்டு அமிர்தம் எடுப்பான் வேண்டிக் கடைந்த பாற் கடலுட்பிறந்த நஞ்சால் தேவர்களெல்லாரும் படுசாம்பராய் வெந்து அவியாமைப் பொருட்டுச் சிவபிரான் தானே அந் நஞ்சினைப் பருகிய வரலாற்றினையும் திருமங்கையாழ்வார் உண்மையென உடம்பட்டு,

"அண்ணல்செய் தலைகடல் கடைந்ததனுள்
கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே." (௬, ௧, ௨)

என்று கூறுமாற்றால், தேவர்க ளெல்லாருந் தாஞ் சாவாமைப் பொருட்டு அமிர்தம் வேண்டினாராகச் சிவபிரானோ எல்லாரையும் நீறாக்கும் நஞ்சினை யுண்டும் இறவாதிருந்தனன்; அதனால் அவனே முழுமுதற் கடவுளாதல் அவர்க்கும் உடம்பாடாயிற்று. இன்னும், தக்கன் ஆற்றிய வேள்வியில் திருமாலையுள்ளிட்ட தேவர்களெல்லாரும் சிவபிரானை நீக்கி அவ் வேள்விக்கண் அவியுணவுபெற்ற இறுமாப்பினை ஒழித்தற்பொருட்டு இறைவன் அவ் வேள்வி நிலையினைக் குலைத்த வரலாற்றினையுந் திருமங்கையாழ்வார்,

"தக்கன்வேள்வி தகர்த்த தலைவன்." (௫, ௨, ௬)

என்று கூறுமாற்றால், எல்லாம் வல்ல இறைவனை சிவபிரானைவிட்டுச் செய்யும் நல்வினைகளுந் தீவினைகளாம் என்பதனை அவர் தாமும் உடம்பட்டாராயிற்று. இவ்வாறு இருக்குவேதம்முதற் றிருமங்கையாழ்வாரது 'பெரிய திருமொழி' இறுதியாகவுள்ள எல்லா நூல்களானுஞ் சிவபிரானே முழுமுதற்கடவு ளென்பது துணியப்படுதலின், மக்கட் கூட்டத்தவரில் ஒருவனாய்த் தேவகியின் கருப்பையிற் றங்கிப் பிறந்து, ஜராசந்தனுக்கு அஞ்சித் தான் முன்னிருந்த மதுரையை விட்டுப்போய்த் துவாரகையைத் தனக்குத் தலைநகராக்கிக்கொண்டு,[1] பின்னர் ஒரு வேட்டுவன் ஏவிய கணையால் இறந்துபட்ட கண்ணனுக்குச் சிவபிரான் தோற்றோடினா னென்னுங் கதையினும் முழுப் புரட்டும் பொய்யுமாவது பிறிதில்லையென விடுக்க.

இங்ஙனமாக வைணவமதம் பெரிதுங் கிளர்ச்சி பெற்ற கி. பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த திருமங்கையாழ்வார் அக்காலத்து வைணவப்புலவர்கள் வடமொழியில் தமக்கு வேண்டியபடி யெல்லாங் கட்டிவிட்ட கதைகளை மெய்யென நம்பினராயினும், சைவசமய ஆசிரியர்கள் அருளிச்செய்த தேவார திருவாசகங்களையும்

1. மகாபாரதம், சபாபர்வம், ௬௨௬.

வடமொழியிலுள்ள வேதங்கள் பிராமணங்கள் பழைய உபநிடதங்கள் இதிகாசங்கள் புராணங்கள் முதலியவற்றையும் அவர் நன்கு ஓதியுணர்ந்த புலவராய்க் காணப்படுதலின், சிவபிரான் இறைமைத் தன்மையை நாட்டும் பழைய வரலாறுகளையும் மேற்காட்டியவாறு இடையிடையே தம் பாட்டுகளிற் களங்கமின்றி எடுத்து மொழிந்திடுகின்றார். அதுவேயுமன்றிச், சிவபிரானுந் திருமாலும் பிரிவின்றி ஒரு வடிவினராய்த் திகழ்கின்றனர் எனவும் பலவிடத்துங் கூறுகின்றார். அவற்றுட் சில வருமாறு :

"பிணங்கள்இடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு
இணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்." (௨, ௬, ௧)

"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து." (௩, ௪, ௧)

"அலர்மகட்கும் அரற்கும்
கூறாகக் கொடுத்தருளுந் திருவுடம்பன்." (௩, ௧, ௮)

"வானார்மதி பொதியும்சடை மழுவாளியொடு ஒருபால்
தானாகிய தலைவன்." (௭, ௧, ௪)

"வாசவார் குழலாள் மலைமங்கைதன்
பங்கனைப் பங்கில்வைத்து உகந்தான் றன்னை." (௭, ௧௦, ௩)

"கண்ணுதல் கூடிய அருத்தனை." (பாதியனை, ௭, ௧௦, ௭)

"மழுவியல் படையுடை யவன்இடம் மழைமுகில்
தழுவிய உருவினர்." (௮, ௭, ௬)

"அக்கும் புலியினதளும் உடையா ரவர்ஒருவர்
பக்கம் நிற்க நின்ற பண்பர்." (௧, ௬, ௧)

"ஏறும் ஏறியிலங்கும் ஒண்மழுப்பற்றும்
ஈசற்கு இசைந்து உடம்பிலோர்
கூறுதான் கொடுத்தான்." (௧, ௧௦, ௪)

"குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்
பங்கத்தாய்." (திருநெடுந்தாண்டகம், ௧)

இவ்வாறு திருமங்கையாழ்வார் பாடியிருப்பவைகளை உற்று நோக்கும்போது, வலப்பால் அப்பனாகிய சிவபிரானும்

இடப்பால் அம்மையாகிய திருமாலுங் கலந்த முழுமுதற் கடவு ளியல்பினை அவர் நன்கு உணர்ந்தவராகவே காணப் படுகின்ருர். மேலும், தமிழ்ச்சுவை கெழுமித் துலங்கும் **பெரியதிருமடல்** என்னுஞ் சிறந்த பாவினைத் திருமங்கை யாழ்வார் பாடிய தமது இறுதிக் காலத்திற் சிவபிரான் றன் முழுமுதற்றன்மை தெளியப்பெற்று அவர்மீது அன் பினுல் அகங்கரைந்தார் என்பதற்கு,

"மன்னு மலையரையன் பொற்பாவை வாணிலா
மின்னு மணிமுறுவற் செவ்வாய் உமையென்னும்
அன்ன நடைய அணங்கு நுடங்கிடைசேர்
பொன்னுடம்பு வாடப் புலனைந்தும் நொந்தகலத்
தன்னுடைய கூழைச் சடாபாரந் தான்தரித்துஆங்கு
அன்ன அருந்தவத்தின் ஊடுபோய் ஆயிரந்தோள்
மன்னு கரதலங்கள் மட்டித்து மாதிரங்கள்
மின்னி எரிவீச மேலெடுத்த சூழ்கழற்கால்
பொன்னுலகம் ஏழுங் கடந்துஉம்பர் மேற்சிலும்ப
மன்னு குலவரையும் மாருதமுந் தாரகையும்
தன்னி னுடனே சுழலச் சுழன்ருடும்
கொன்னவிலும் மூவிலைவேற் கூத்தன் பொடியாடி
அன்னவன் றன் பொன்னகலம் சென்ருங்கு அணைந்திலளோ."

என்று அவர் சிவபிரான்றன் அருட்டிருக்கூத்தை வியந்து பாடியிருத்தலே சான்ரும்.

இனி, மேற்காட்டிய வாணன்போரிற் சிவபெருமானைத் தொடர்புபடுத்திய கதை வைணவராற் புதிது படைக்கப் பட்டதாதல் போலவே, பரசுராமனைத் திருமாலின் அவ தாரமெனக்கொண்டு, அவன் அரசர் கூட்டத்தினை இரு பத்தொருமுறை அழித்தான் என்னுங் கதையுங் கி. பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்ருண்டிற்குப்பின் பார்ப் பனராற் பொய்யாகப் புதிது கட்டப்பட்டதொன்ருகும். ஏனெனில், மாபாரதத்திற் பரசுராமனைப்பற்றிக் கூறும் பகுதிகளில் ஓரிடத்தாயினும் அவன் திருமாலின் அவ தாரம் என்பது குறிப்பாலாயினும் வெளிப்படையாலாயி

னுங் கூறப்படவில்லை.[1] அதுவேயுமன்றி, மாபாரதம், ௧௭௮ முதல் ௧௮௦-ஆம் இயல்வரையிற், கிருதவீரிய அரசன்பால் அளவிறந்த பொற்குவைபெற்ற பிருகுமுனிவர் குடும்பத்தினர், அவ்வரசனுக்குப்பின் அவன் வழிவந்த மன்னர் பொருளின்றி வறுமைப்பட்டு அப் பிருகுகுடியினர் பாற்சென்று தமக்குச் சிறிது பொருளுதவி செய்யும்படி வேண்ட, அவர்கள் அப்பொருளிற் பெருந்திரளை நிலத்தின்கீழ் மறைத்துவைத்தும், எஞ்சிய சிலவற்றைத் தமக்கு உறவினரான பார்ப்பனரிடங் கொடுத்தும் அம் மன்னர்களை ஏமாற்ற, அம்மன்னருள் ஒருவர் நிலத்தின்கீழ்ப் புதைத்துவைத்த அப்பொருட்டிரளில் ஒருகூறு கண்டெடுக்க, ஏனை மன்னர்கள் அம் முனிவர்களின் படிற்றொழுக்கத்தைக் கண்டு சினந்து அவர்களைக் கொன்று வீழ்த்த, அம் முனிவரரின் மனைவியருள் ஒருத்திக்குப் பிறந்த 'ஔர்வன்' என்பான் அம் மன்னர்களை வேரோடு அழிக்க முனைந்தும் அஃதியலாதான செய்தியைப் பராசரர்க்கு அவர்தம் பாட்டனார் எடுத்துக்கூறுகின்றுழிப், பரசுராமனைப் பற்றியாதல் அவன் இருபத்தொரு தலைமுறை அரசரை யழித்தமைபற்றியாதல் சிறிதும் உரையாமையால், அவனையும் அவன் அரசரை யழித்தமையுங் கூறும் பகுதிகளை, வேளாள அரசர்மேற் பகைகொண்ட பார்ப்பனர்கள் அவர்களை அச்சுறுத்தும் பொருட்டுப் புதியவாய்ப் படைத்து அவற்றை மாபாரதத்தின் பிற்பகுதிகளில் நுழைத்து விட்டாரென்று தெளிக.[2]

மேலே, 'திவாகரம்' என்னும் தமிழ் நிகண்டு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தொன்றென்று காட்டினேமாயினும், அதன் முதற்கண்ணதாகிய 'தெய்வப்பெயர்த்தொகுதி'யையும், அதன் இறுதிக்கண்ணதாகிய 'பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த்தொகுதி'யையும் ஆராய ஆராய அது கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்கு

1. See Dr. John Muir's 'Original Sanscrit Texts,' vol. I, p. 457, foot note 242.

2. Ibid. p. 447.

முற்பட்டதன்று என்பது புலனாகா நிற்கின்றது. பிற்பட்ட காலத்தனவாகிய பிருகற்பதி, காத்தியாயன, பராசரஸ் மிருதிகளையும்,[1] அங்ஙனமே பிற்பட்டனவாகிய பிரமம், நாரதீயம், வாமநம், வராகம், பாகவதம், வைணவம், பிரமவைவர்த்தம் முதலிய புராணங்களையுங் குறிப்பிட்டு, வடமொழித் தெய்வங்கள் சொற்கள் சொற்றொடர்கள் வழக்குகள் முதலியவற்றை மிகுதியாய்த் தழுவிக்கூறுத லின், 'திவாகரநிகண்டைக்' கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகக் கொள்ளுதற்கு இடன்இல்லை. அதனால், அதன்கட் சொல்லப்பட்ட திருமாலின் பத்து அவதாரங் களைக் கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டனவாகக் கொள்ளுதற்கும் இடனில்லையென்று உணர்க. பரசு ராமரைத் திருமாலின் அவதாரமாகக் கட்டிவிட்ட கதை கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதல்லாமையி னாலேதான், அந்நூற்றாண்டிற்கு முற்பட்டிருந்த பொய்கை பேய் பூதம் என்னும் முதலாழ்வார் மூவரும் தம் பாடல் களில் எங்கும் பரசுராமரை எட்டுணையேனுங் குறிப்பிட் டிலர். தேவாரப் பாடல்களினுந் திருவாசகத்தினுங்கூடப் பரசுராமனைப் பற்றிய குறிப்பு ஒரு சிறிதுங் காணப்பட வில்லை. இவற்றுக்கு முற்பட்ட சங்கத்தமிழ் இலக்கியங் களிலுங் கண்ணன் பலராமனைக்குறிப்பிடும் பாட்டுக்களையே காண்கின்றனமன்றிப், பரசுராமனைக் குறிப்பிடும் பாட்டு ஒன்றையாயினுங் காண்கின்றேம் இல்லை. இவ்வாற்றாற், பரசுராமனைத் திருமாலின் பிறப்பாகக்கொண்ட காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் துவக்கத்திலும், பின்னர்க் கண்ணன் இராமனைப்போல அவனையும் ஒரு தெய்வமாக

---

1. யாக்கிய வல்கியஸ்மிருதி கி பி. மூன்றாம் நூற்றாண்டிலும், பிருகற்பதிஸ்மிருதி கி.பி. ஏழாம் நூற்றாண்டிலும், பராசரஸ்மிருதி ஏழாம்நூற்றாண்டிற்குப் பின்னும் இயற்றப்பட்டனவாகும்; See Introduction, p. 110, to 'The Lows of Manu', English translation by Dr. G. Buhler; Dr. B. K. Sarkar's Hindu Sociology, Bk. II, Part I, pp. 9, 10; R. C. Dutt's Ancient India, Vol. II, pp. 196-202.

வைத்து வணங்கத் துவங்கிய காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதி முதலும் நிகழ்ந்தனவாதல் வேண்டும். இங்ஙனமே, கற்கியவதாரம் என்பதொன்றும் முதலாழ்வார் பாடல்களினுதல், அவர்கட்கும் முன்னிருந்தோர் பாட்டுக்களினுதல் தினைத்துணையுங் காணப்படாமையின், கற்கியவதாரம் என்பதொன்று கொள்ளப்பட்டதும், அதுவும் வணங்கப்படலாயினதும் கி. பி. பத்தாம் நூற்றாண்டு முதல் நிகழ்ந்த தாகுமென் றுணர்ந்துகொள்க. கொள்ளவே,

"வென்றி மாமழு வேந்திமுன் மண்மிசை
மன்னரை மூவெழுகாற்
கொன்ற தேவநின் குரைகழல் தொழுவதோர்
வகையெனக் கருள்புரியே." (ரு, உ, க)

எனப் பரசுராமனையும்,

" வையங் காக்குங் கடும்பரிமேற்
கற்கியை நான்கண்டு கொண்டேன்." (உ, ரு, உ)

எனக் கற்கியவதாரத்தையும் ஒருகாலன்றிப் பலகாலும் பாடிவழுத்திய திருமங்கையாழ்வார் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலன்றி அதற்குமுன் இருந்தவராதல் பெறப்படமாட்டாதென்க. ஆழ்வார்கள் பாடிய நாலாயிரம் பாட்டுக்களையும் யாம் கருத்தூன்றி ஆராய்ந்து பார்த்த அளவிற், பரசுராமனையுங் கற்கியையுந் திருமாலின் அவதாரங்களாகக்கொண்டு வணங்கிப் பாடிய பாட்டுகள் திருமங்கையாழ்வார் பாடல்களிலும் பெரியாழ்வார் சடகோப ஆழ்வார் பாடல்களிலும் மட்டுமே காணப்படுகின்றன. பெரியாழ்வார்,

" மூவுருவில் இராமனைக் கண்ணனைக்
கற்கியாய் முடிப்பான்." (ச, க, க)

எனப் பலராமன் பரசுராமன் இராமன் என்னும் மூவரையுங் கற்கியையுங் குறிப்பிட்டனர். சடகோபர்,

"நின்றிலங்கு முடியினாய் இருபத்தோர்கால் அரசுகளைகட்ட
வென்றிநீண் மழுவா." (சு, உ, கo)

எனப் பரசுராமனையும்,

"மீனா யாமையுமாய் நரசிங்கமுமாய்க் குறளாய்க்
கான்ஓர் ஏனமுமாய்க் கற்கியாம் இன்னங்கார்வண்ணனே."
(ரு, க, கo)

எனக் கற்கியையுங் குறிப்பிட்டார். குலசேகர ஆழ்வார்,

"முன்னொருநாள் மழுவாளி சிலைவாங்கி
அவன் தவத்தை முற்றும் செற்றாய்." (கூ, கூ)

எனப் பரசுராமனைக் குறிப்பிட்டனரேனும், அவனைத் திருமாலின் பிறப்பாகவுங் கொண்டிலர், அவனை வணங்கியும் பாடிற்றிலர்; இராமன், பரசுராமனது வில்லினை வாங்கிக்கொண்டு அவனது தவத்தை அழித்தமை மட்டுமே வான்மீகியிராமாயணத்தில் உள்ளவாறே எடுத்து மொழிந்திடுகின்றார்; இவ்வாற்றாற், குலசேகரப்பெருமாள் காலத்திற் பரசுராமன் திருமாலின் அவதாரமாக வைத்து வணங்கப்படவில்லையென்பதூஉம், ஆகவே அவனைத் திருமாலின் பிறப்பாகக்கொண்டு வழுத்திய திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், சடகோப ஆழ்வார் முதலிய மூவர்க்குங் குலசேகர ஆழ்வார் முற்பட்டவராவரென்பதூஉம் உணரற்பாலனவாமென்க.

உo. பன்னீராழ்வார்களின் காலவரையறை

திருமங்கையாழ்வார் காலத்தை ஆராய்ந்த ஆராய்ச்சியின் முடிபாக ஆழ்வார்கள் இருந்த காலவெல்லைகள் ஐயுறவுக்கு இடனின்றிப் பின்வருமாறு வரையறுக்கப்படும்; பொய்கை, பேய், பூதம் என்னும் முதலாழ்வார் மூவரும், சைவசமயாசிரியரிற் பிற்காலத்தவரான சுந்தரமூர்த்தி நாயனார்க்கு முன்னும், திருஞானசம்பந்தப் பெருமானுக்குப் பின்னும் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்தோராவர்; இம் மூவருட் பொய்கையாழ்வாரும்

பேயாழ்வாரும் ஒருகாலத்தினரென்பதும் பூதத்தாழ்வார் அவ்விருவர்க்கும் சிறிது பிற்பட்டவரென்பதும் அறியற்பாலன. பொய்கையாழ்வாரும் பேயாழ்வாரும் சிவபெருமானை யிகழாமையோடு, சிவத்தையுந் திருமாலையும் ஒருருவினராக வைத்து வழிபட்டிருக்கின்றனர். பூதத்தாழ்வாரோ அவ்விருவரையும் அங்ஙனம் ஒருருவிற்கொண்டு வணங்காமையோடு, கஉ, கஎ, சுஙு, சுகூ-ஆம் பாட்டுக்களிற் சிவபிரானை இகழ்ந்தும் பாடியிருக்கின்றார்; இதனால், இவ்வாழ்வார் காலத்தில் வைணவம் சைவத்தின் வேறாய்ப் பிரிந்து சிறிது தலையெடுக்கலாயிற்றென்பது புலனாம். என்றாலும், பூதத்தாழ்வார் இருந்த கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இராமாயணகதையும், நடுவரையில் இராமனைப் பெரிது வணங்கும் வணக்கமும், பரசுராமன் கற்கி என்பாரைத் திருமாலின் பிறப்பாகவைத்து வழிபடுதலும் உண்டாகவில்லை.

இனி, இம் முதலாழ்வார் மூவர்க்குப்பின் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிற் சுந்தரமூர்த்திநாயனார் திருக்கைலை சென்ற சில ஆண்டுகளுக்குப்பின் குலசேகர ஆழ்வார் இருந்தாராகற்பாலார். இவர் சேரர்குடியைச் சேர்ந்த ஒரு சிற்றரசர்; கொங்குநாட்டிலுள்ள கொல்லிக் கூற்றத்தையும், 'கோழி' எனப்படுவதாகிய உறையூரையும் ஆண்டவரென்பது,

> "கொல்லிகாவலன் மாலடிமுடிமேற்
> கோலமாங் குலசேகரன்." (எ, கக)

எனவும்,

> "கோழியர்கோன் குடைக் குலசேகரன்." (கூ, கக)

எனவும் இவர் தம்மைத்தாம் பாடிய பதிகங்களின் ஈற்றிற் சொல்லிக்கொள்ளுமாற்றால் விளங்காநிற்கும். இவர் தம்முடைய பாட்டுக்களில் இராமனை மிகுத்துப் பாடுதலோடு, இராமாயணகதையையுந் தமது பத்தாந்திருமொழியிற் சுருக்கமாக முழுதுமெடுத்துக் கூறியிருக்கின்றார். இராமன் நாடுதுறந்து காடுஏக அதனைப் பொறாது தசரதன் புலம்

பியதாக இவர் பாடியிருக்கும் ஒன்பதாந் திருமொழி கற்பார் உள்ளத்தைக் கரைக்குந் தகையதாயிருக்கின்றது. இவர் இராமனிடத்து அளவுகடந்த அன்புடையரென்பது இவர்தம் பாடல்களால் நன்கறியக் கிடத்தலின், முதன் முதல் இவரது முயற்சியினாலேயே இராமாயணகதை இத் தென்றமிழ்நாட்டிற் பரவ, இராமனும் திருமாலின் அவதாரமாய்த் தெய்வமாக வைத்து வணங்கப்படுவானாயினன் என்க. இவரது காலத்தில், 'நுதம்,' 'தும்புரு,' 'நாரதன்,' 'நரகநந்தகன்,' 'உருப்பசி,' 'மேநகை,' 'தாமோதரன்,' 'இராகவன்,' 'மனிசர்,' முதலான வடசொற்களும், 'தயரதன்,' 'மைதிலி,' 'பரதன்,' 'தாசரதீ,' 'அயோத்தி,' 'சீராமா,' 'காகுத்தன்,' 'கைகேசி,' 'கௌசலை,' 'கேகயர்,' 'சுமந்திரன்,' 'சுமத்திரை,' 'தாடகை,' 'குகன்,' 'விராதை,' 'கரன்,' ,தூடணன்,' 'வைதேகி,' 'இலக்குமன்' முதலான இராமாயணகதைப் பெயர்களும் இவர்தம் பாடல்களிற் புகுந்து, அவ் வழியே தமிழிலும் வழங்கலாயின. இவர் சிவபெருமானை மிக இகழ்ந்திலரேனும், இந்திரன் பிரமன் முதலான தேவர்களோடு ஒப்பவே அவரை வைத்திருக்கின்றார். அதனால் இவரது காலத்தில் இராமாயண வழி வந்த புதிய வைணவம் கிளர்ச்சிபெற்றுப் பரவலானமை புலனாம். பரசுராமனாவது கற்கியாவது திருமாலின் அவதாரங்களாக வைத்து இவரால் வழுத்தப்படாமையால், இவ் விருவகை யவதாரங்களும் இவரது காலத்துங்கூட வைணவத்தில் நுழையவில்லையென்க.

இனிக், குலசேகரப்பெருமாள் தாம் இயற்றிய "தேட்டருந்திறல்" என்னும் பதிகத்தின் இரண்டாஞ்செய்யுளில், "ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்குந் தொண்டரடிப் பொடி," எனத் திருவரங்கப் பெருமாள்கோயிலில் திருத்தொண்டு செய்துகொண்டிருந்த தொண்டரடிப்பொடியாழ்வாரைக் குறிப்பிட்டிருத்தலிற், குலசேகர ஆழ்வாரும் தொண்டரடிப்பொடி யாழ்வாரும் ஒரேகாலத்தினரென்பது பெற்றாம். தொண்டரடிப்பொடியாழ்வார் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் நடுவிலிருந்து பத்தாம் நூற்றாண்டின்

துவக்கம்வரையில் இருந்தாராகற்பாலார். இவர் "புலையற மாகின்ற புத்தொடு சமணமெல்லாம்" என்று இறந்த காலச்சொல்லாற் கூறுதலிற் புத்த சமணமதங்களின் வலி சைவசமய ஆசிரியரால் ஒடுங்கியபின் இவர் இருந்தமை பெறப்படும். இவர் பாடிய 'திருப்பள்ளி யெழுச்சி,' புத்த சமயங் கிளர்ச்சிபெற்ற கி. பி. மூன்றும் நூற்றுண்டிலிருந்த மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த 'திருப்பள்ளி யெழுச்சி'யைப் பார்த்தே பாடப்பட்டதாகு மென்பதூஉம், இவர் திருநாவுக்கரசு நாயனுர் அருளிச்செய்த தேவாரப் பாக்களையும் நன்கு பயின்று அவற்றைப்போற் சில பாடினு ரென்பதூஉம் சருச-ஆம் பக்கம்முதல் சருகூ-ஆம் பக்கம் ஈருகவைத்து விளக்கிக் காட்டியிருக்கின்றேம். தொண்ட ரடிப்பொடியாழ்வார் சிவபெருமானை யாண்டும் இகழ்ந் திலர்.

இனித், திருமழிசையாழ்வார் பாடல்களிற் புதிது புகுந்த வடசொற்களேயன்றி, இழிசினர் வழங்குஞ் சொற் களும் ஏச்சுரைகளுஞ் சிவபிரானைப் பழித்தலும் நிரம்பி யிருத்தலின் இவர் கி. பி. பத்தாம் நூற்றுண்டின் துவக் கத்தில் இருந்தாராவர். இதனை ௫௦அ-ஆம் பக்கம்முதல் ௫௧௦-ஆம் பக்கம் வரையில் முன்னரே விளக்கிப்போந் தாம். திருப்பாணுழ்வாரும் கி பி. பத்தாம் நூற்றுண்டின் துவக்கத்திலிருந்தவராகவே காணப்படுகின்றுர். இப் பத்தாம் நூற்றுண்டின் துவக்கத்திலிருந்த திருமழிசை யாழ்வார் திருப்பாண் ஆழ்வார் பாடல்களினுங்கூடப் பரசு ராமன், கற்கி என்பவர்மேற் பாடப்பட்ட செய்யுட்கள் காணப்படுகின்றில.

இனித், திருமங்கையாழ்வாரது சிறப்புக்காலம் கி. பி. பத்தாம் நூற்றுண்டின் துவக்கத்தை யடுத்துவந்த தொன் றாகும் என்பதனைப் பலவாற்றுனும் ஆராய்ந்து முன்னரே விளக்கினும். தென்னுடு வடநாடுகளில் உள்ள திருமால் திருப்பதிகடோறுஞ் சென்று ஆங்காங்கு இவர் திருப்பதி கங்கள் பாடியிருத்தலாலும், இவருடைய பாட்டுகளே ஏனை யாழ்வார்களின் பாட்டுகளைவிட மிகுதியாயிருத்தலாலும்

இவர் நீண்டகாலம் உயிரோடிருந்தவராகக் காணப்படு கின்றார். இவர் திருவரங்கப்பெருமாள் கோயிற்குச் சென்ற போது, தொண்டரடிப்பொடி யாழ்வார் அங்கே திருத் தொண்டு செய்துகொண்டிருத்தலைக் கண்டு அவரை வணங்கிச்சென்றார் என்று வைணவப்புலவர்கள் கூறும் உரை உண்மையாக இருக்கலாம். இவர் தொண்டரடிப் பொடியைக் கண்ட நாளில் அவர் ஆண்டில் மிக முதிய ராயும், இவர் இளையராயும் இருந்தாராகல் வேண்டும். இவர் இராமாயண கதைவழிப் புகுந்த வடசொற்களையும் பெயர்களையும் தம்முடைய செய்யுட்களில் மிக எடுத் தாண்டனராயினும், தமதுகாலத்தில் வழங்கத் துவங்கிய கொச்சைத் தமிழ்ச்சொற்கள் தம்முடைய பாடல்களில் விரவ இடங்கொடுத்திலர். 'மனிசர்,' 'பொங்கத்தம் பொங்கோ' முதலான இழிசினர் வழக்குச்சொற்கள் சில, செந்தமிழ் வளந்துறுமி விளங்கும் இவர்தஞ் செய்யுட்களி னும் ஒரோவழி நுழைந்துவிட்டமையினை உற்றுநோக்குங் கால், இவர் ஆண்டில் முதிர்ந்தகாலத்திற் கொச்சைத் தமிழ்ச்சொற்கள் மிக வழங்கலாயினவென்பது புலனும். இவர் சிவபெருமானை ஒரோவழி இகழ்ந்துரைப்பினும், பொய்கையாழ்வார் பேயாழ்வாரைப்போல் வரவர மெய் யறிவு விளங்கப்பெற்றுச், சிவமுந் திருமாலும் ஓருருவின ராய் விளங்குமாற்றைப் பலகாற் பாடியிருத்தலை மேலே எடுத்துக்காட்டினும்.

இனிப், பெரியாழ்வாரும் அவர்தம் புதல்வியார் சூடிக் கொடுத்த நாச்சியாரும் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்தாராதலை மேலே சருடு, சருசஉ-ஆம் பக்கங்களில் விளக்கிக் காட்டினும். இவர்களுடைய பாடல் களில் வடசொற்களுங் கொச்சைத் தமிழ்ச்சொற்களும் ஏராளமாய் விரவின. திருமங்கையாழ்வார்தம் பாட்டுக் களிற்போலப் பெரியாழ்வார்தம் பாட்டுக்களிலும் பரசுராம னுங் கற்கியுந் திருமாலின் பிறப்புக்களாகக்கொண்டு வழுத்தப்படுதலின், அவரும் இவரும் இவர்தம் புதல்வி யாரு மெல்லாம் சிறிதேறக்குறைய ஒரேகாலத்தி லிருந்

தவராவர் எனலாம். பெரியாழ்வார் சிவபெருமானை ஒரோ வழி இழித்துப்பேசுவர். இவர் தம் புதல்வியார் சூடிக் கொடுத்த நாச்சியாரோ மாயோன்மேல் வைத்த பெருங் காதலால் அவனை யன்றிப் பிறிதொன்றனை நினைக்க மாட்டாராயினர்; இது காதலிற் சிறந்த பெண்பாலார்க்கு இயற்கையாதலை இறையனாரகப் பொருளில் "தானே யவளே" என்னுஞ் சூத்திரத்திற்கு ஆசிரியர் நக்கீரனார் உரைத்த விழுமிய உரையிற்காண்க; ஆதலால், இப் பெண்மணியார் சிவபிரானை நினைந்து இகழ்தற்கு இடம் பெற்றிலரென்க. இவர் 'திருவாசகத்'தைப் பயின்றவரென்பதற்குத் திரு மொழியில் இவர் பாடிய,

"வானிடை வாழும்அவ் வானவர்க்கு மறையவர்
வேள்வியில் வகுத்தஅவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து கடப்பதும்
மோப்பதுஞ் செய்வதொப்ப
ஊனிடை யாழிசங் குத்தமர்க்கென் றுன்னித்
தெழுந்தஎன் தடமுலைகள்
மானிட வர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்
லேன்கண்டாய் மன்மதனே." (ரு)

என்னுஞ் செய்யுளைத், திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த,

"உங்கையிற் பிள்ளை யுனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போங்கேள்
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லாது எப்பணியுஞ் செய்யற்க
கங்குல்பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கு இப்பரிசே எமக்குஎங்கோன் நல்குதியேல்
எங்குஎழில்என் ஞாயிறுஎமக்குஏலோ ரெம்பாவாய்." (கக)

என்னுந் 'திருவெம்பாவைச்' செய்யுளோடு ஒப்பிட்டு நோக்குக. நாச்சியாரின் செய்யுள் நடையானது பிற்காலத்தார் செய்யுள் நடையை யொத்திருத்தலும், அடிகளின் செய்யுள்

நடையோ பண்டையோர்தம் செய்யுள் நடையை ஒத்திருந்தலும், தமிழறிவு மிக்கார்க்குத்தெற்றென விளங்காநிற்கும். இன்னும் இங்ஙனமே நாச்சியார் பாடிய குயிற்பத்தில் உள்ள,

"சார்ங்கம் வளைய வலிக்குந் தடக்கைச்
சதுரன் பொருத்தம் உடையன்
நாங்கள் எம்மிலிருந் தொட்டிய கச்சங்கம்
நானும் அவனும் அறிதும்
தேங்கனி மாம்பொழிற் செந்தளிர் கோதுஞ்
சிறுகுயி லேதிருமாலை
ஆங்கு விரைந்துஒல்லை கூகிற்றி யாகில்
அவனைநான் செய்வன காணே." (அ)

என்னுஞ் செய்யுளோடு, அடிகள் அருளிச்செய்த,

"தேன்பழச் சோலை பயிலுஞ்
சிறுகுயி லேஇது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து
மனிதரை யாட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென்
உணர்வது ஆய வொருத்தன்
மான்பழித் தாண்டமென் நோக்கி
மணாளனை நீவரக் கூவாய்." (ச)

என்னுஞ் செய்யுளை ஒப்பிட்டு நோக்குக. முன்னையது பின்னைநாட் டமிழ் நடையும், பின்னையது சுவைமுதிர்ந்த முன்னைநாட் செந்தமிழ் நடையும் வாய்ந்து தம்மிலே வேற்றுமை காட்டி நிற்றல் காண்க. இவ்வாற்றால், 'திருவாசகம்' காலத்தால் மிக முற்பட்ட செந்தமிழ்வளங் கெழுமியதாதலும், நாச்சியார் 'திருமொழி' வடசொற் கொச்சைத் தமிழ்ச்சொல் விரவிப் பிற்பட்டகாலத் தமிழ்நடையினதாதலும் செந்தமிழறிவு வாய்த்தார்க்கெல்லாம் எளிதின் விளங்காநிற்கும். இவரும் இவர் தந்தையார் பெரியாழ்வாரும் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து அதன் நடுக்காலம் வரையில் இருந்தாராகல் வேண்டும்.

இனி, நம்மாழ்வார் என்னும் சடகோபர் மேற்காட்டிய ஆழ்வார்கள் எல்லார்க்கும் பிற்பட்டவராய்க் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் ஈற்றில் இருந்தவராவர். இஃது எற்றாற் பெறுதுமெனின், இவர்க்கு முந்திய ஆழ்வார்கள் பாடலிற் காணப்படாத கொச்சைத் தமிழ்ச்சொற்களும், வடசொற்றிரிபுகளும், இலக்கண வழுவான தமிழ்ச்சொற்களும் இவர்தம் பாடல்களில் மிகப் புகுந்திருத்தலால் இவர் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் ஈற்றிலாதல், அல்லததற்குச் சிறிது பின்னேயாதல் இருந்தாராகல் வேண்டுமென சுகஅ-ஆம் பக்கத்தில் விளக்கிக் காட்டினும். இவர்பாடல்களிற் காணப்படும் 'கீர்த்தித்து,' 'சுண்டாயம்,' 'வெளுமை,' 'சம்மதித்து,' 'பிராக்கள்'' 'இன்றிக்கே' முதலான சொற்கள் மேலே காட்டிய ஆழ்வார் எவர் பாடலினுங் காணப்படா. இச்சொற்களுள்ளும் இறுதிக் கண்ணதாகிய 'இன்றிக்கே' (ரு, உ, கக) என்னும் இலக்கண வழுவான சொல், நாலாயிரப் பிரப்பந்தச் செய்யுட்களுக்கு வடசொற் கலந்த உரையெழுதிய பெரியவாச்சான் பிள்ளை, 'குருபரம்பராப்பிரபாவம்' எழுதிய பின்பழகிய பெருமான்ஜீயர் முதலாயினார் உரைகளில் மட்டுமே காணப்படுகின்றது. அதனால், நம்மாழ்வார் இவ் வுரைகாரர்களின் காலத்தை யடுத்துச் சிறிது முன்னே யிருந்தாராதல் வேண்டும். சடகோபர் காலத்து வைணவர் குழுவிலேதான் 'பிராக்கள்,' 'இன்றிக்கே' முதலான வழுச்சொற்கள் வழங்கத் துவங்கினவாதல் வேண்டும். ஏனெனிற், கொச்சைத் தமிழ்ச்சொற்களை ஏராளமாய்த் தம் செய்யுட்களிற் புகுத்திப் பாடிய பெரியாழ்வாரும் அவர்தம் புதல்வியார் சூடிக்கொடுத்த நாச்சியாரும், சடகோபர் காலத்திலாதல் அல்லதவர்க்குப் பின்னராதல் இருந்தனராயின், இச் சொற்களைத் தாமும் தம் பாடல்களில் எடுத்தாளாது இரராகலினென்க. எனவே, நம்மாழ்வார் மேலே காட்டிய ஆழ்வார்கள் எல்லார்க்கும் பின்னிருந்தவரென்பதே திண்ணமாம். வைணவ மதம் பெரிதுங் கிளர்ச்சி பெற்றதும், அதனால் திருமால் கோயில்கள் ஆங்காங்கு அமைக்கப்படலானதும், வைணவர்கள் சிவபெருமானை மிக இழித்துப் பேசலானது மெல்

லாம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் ஈற்றிலிருந்து நிகழ்ந் தமையினாலேதான், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ் வார், பெரியாழ்வார், நம்மாழ்வார் முதலியோர்தம் பாடல் கள் பெற்ற திருமால் திருக்கோயில்கள் பலவாயும், ஏனை யாழ்வார்களின் பாடல்கள் பெற்ற திருமால் திருக்கோயில் கள் சிலவாயுங் காணப்படுகின்றன. எனவே, இவ் வாழ் வார்கள் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் ஈற்றிலிருந்து பதினோராம் நூற்றாண்டின் துவக்கம் வரையில் இருந்தமை மறுக்கப்படாத உண்மை யாமென்றுணர்க.

இனிப், பொய்கையாழ்வார் ஏனையாழ்வார்கட் கெல் லாம் முற்பட்டவ ரென்பது எல்லார்க்கும் உடம்பாடாக லானும், சைவசமயாசிரியரும் பிறருமெல்லாம் 'விருத்தப் பாட்டு' களினாலேயே சிவபிரானை மிகுதியாய்ப் பாடி யிருக்கப், பொய்கையார் பழைய தமிழ்யாப்பாகிய 'வெண் பாவி'னாலேயே திருமாலைப் பாடியிருத்தலானும், இவர் சங்கத்தமிழ் நூல்களுட் சேர்ந்த 'களவழி,' 'இன்னிலை' என்னும் நூல்களை வெண்பாவில் இயற்றிய பொய்கை யாரே யாவரென ஒருசாராரும், சோழன் கோச்செங்கணா னொடு பொருதுசேரமான்கணைக்காலிரும்பொறை தோற்று அவனாற் சிறையிடப்பட்டவழிக் களவழி என்னும் நூலைப் பாடி அச் சேரமானைச் சிறைவிடுவித்த பொய்கையார் என் னும் நல்லிசைப் புலவருங் கடைச்சங்க காலத்தவரேயாயி னும் அவர் 'இன்னிலை' பாடிய பொய்கையாரின் வேறே யாவ ரெனப் பிறிதொரு சாராரும், பொய்கையாழ்வார் கடைச்சங்க காலத்திருந்த பொய்கையார் அல்லரென மற்றையொரு சாராரும் புகலாநிற்பர். இம் முத்திறத்தார் கோட்பாடுகளுள் உண்மையாவதூஉம் ஆகாததூஉம் ஆராய்ந்துகாட்டுதல் இன்றியமையாததா யிருத்தலின், அவற்றையும் சிறிது ஈண்டு ஆராய்வாம். வெண்பா யாப் பினாற் பாடியிருத்தல் ஒன்றேகொண்டு பொய்கையாழ்வா ரைச் சங்ககாலத்தவரென்றல் அமையாது. பழந்தமிழ்ப் பாக்களாகிய அகவல், கலி, வஞ்சி என்பன வரவர வழக்கு வீழ்ந்தாற்போல, வெண்பா இன்றுகாறும் வழக்கு வீழ்ந்த

தின்று. அகவற்பா இசையோடு கலந்து விட்டுவிட்டு ஓதுதற்கு இசையாதாய் உரைநடைபோல ஓர் ஓசையாய் நீண்டு செல்லுதலிற், பல்வகை இசைகளுடன் விட்டுவிட்டு இனிமையாய் ஓதுதற்கு இசைந்த விருத்தப்பாட்டுத் தோன்றிப் பெரிது வழங்கப் புகுந்த காலந்தொட்டு அது வரவர வழக்கு வீழ்ந்தது. கலிப்பாட்டோ எல்லாரும் ஓது தற்கு ஆகாப் பல்வகை இசைதழுவித் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், கொச்சகம், அராகம், அம் போதரங்கம் முதற் பல உறுப்புக்களையுடைத்தா யிருந் தமையின், அதுவும் வழக்கு வீழ்ந்தது. வஞ்சிப் பாட்டோ கடைச் சங்கத்தார் காலத்திலேயே பயி லாது வீழ்ந்தது. மற்று, வெண்பா யாப்போ விருத்தப் பாட்டுப்போல இடைவிட்டு விட்டு இசையோடு ஓது தற்கு எளிதாய் நிற்றலின், அஃது இன்றுகாறும் வழக்கு வீழாது வழங்கா நிற்கின்றது; கி. பி. ஒன்பதாம் நூற் ருண்டின் ஈற்றிற் செய்யப்பட்டதாகிய பாரதவெண்பாவும், கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டின் இடையில் இயற்றப் பட்ட நளவெண்பாவும், பன்னிரண்டு முதற் பதினெட்டாம் நூற்ருண்டு வரையில் வெண்பா யாப்பில் இயற்றப்பட்டு வந்த 'மூதுரை,' 'சிவஞானபோதம்,' 'விஞவெண்பா,' 'சிவ சிவவெண்பா,' 'சோமேசர் முதுமொழி வெண்பா' முத லான அறநூல்கள் அறிவுநூல்களுமே அதற்குச் சான் ரும். ஆதலால், வெண்பா யாப்பில் திருமாலைப் பாடி யிருத்தல் ஒன்றேகொண்டு பொய்கையாழ்வாரைக் கடைச் சங்க காலத்தவராக வைத்துரைத்தல் பொருந்தாதென விடுக்க.

மேலும், பொய்கை பேய் பூதம் என்னும் முதலாழ் வார் மூவரின் வெண்பாயாப்பின் இயல்பினையும், சங்க காலத்துப் பொய்கையார் இயற்றிய 'களவழி' 'இன்னிலை' என்னும் நூல்களிலுள்ள வெண்பாயாப்பின் இயல்பினை யும் புடைபடவைத்து ஆராய்ந்து பார்ப்பின், ஆழ்வார் களது வெண்பாயாப்புப் பிற்பட்ட கால அமைப்பினையும், 'களவழி,' 'இன்னிலை'யின் வெண்பா யாப்பு முற்பட்டகால

அமைப்பினையும் பெற்றிருத்தல் இனிது விளங்காநிற்கும். யாங்ஙனமெனிற் காட்டுதும்; 'களவழி'யில் வடசொற்க ளெனக் காணப்படுவன: முரசம், பூ(நிலம்), பவளம், குஞ்சரம், கும்பம், கார்த்திகை, மதி, திசை, மதம், கேடகம், உவமன், தாலம் எனப் பன்னிரண்டாகும். இவற்றுள் முரசம், குஞ்சரம், திசை, உவமன் என் பன மிகப் பழைய தொல்காப்பியத்திற் காணப்படுதலின், இவை தமிழிலிருந்தே வடமொழிக்கட் சென்று வழங் கினவா யிருக்கலாமேனும், இப்போது இவற்றையும், பவளம், மதி முதலியவற்றையும் வட சொல்லெனவே கொள்வார் உளராகலின் இவற்றையும் வட சொல் லெனவே வைத்து எண்ணினும். ஆகவே, களவழி நாற் பத்தொரு செய்யுட்களிலுங் காணப்படும் வடசொற்கள் மொத்தம் பன்னிரண்டேயாம். இனி, 'இன்னிலை'யில் வட சொற்களெனக் காணப்படுவனவும், பித்தர், நரகு, சீலன், முனிவன், புவி, காமம், கணம், மாரன், அன்னம், குணம், வீரர், குரவர் எனப் பன்னிரண்டேயாம். இவற்றுள், முனிவன், காமம், அன்னம், குரவர் என்னுஞ் சொற்கள் தமிழிலிருந்து வடமொழிக்கட் சென்று வழங்கினவா யிருக்கலாமேனும், அவற்றையும் வடசொற்களெனவே இஞ்ஞான்றுள்ளார் கூறுதலின் அந் நான்கையும் உடன் சேர்த்து எண்ணினும். ஆகவே, இன்னிலை நாற்பத்தைந்து செய்யுட்களினும் விரவின வடசொற்களும் மொத்தம் பன்னிரண்டேயாம். இவ்வாற்றாற், களவழி, இன்னிலை என்னும் நூல்கள் ஆக்கப்பட்டகாலத்தில் தமிழ்மொழிக் கண் வடசொற்கள் மிகச் சிறிதே கலந்தமையும், அங் ஙனங் கலந்த அச் சில வடசொற்கடாமுந் தமிழ்ச்சொற்க ளோடு ஒத்த மெல்லோசை யுடைமையும் நன்கு புலனும்.

இனிப், பொய்கையாழ்வார் இயற்றிய 'முதற்றிருவந் தாதி' நூறு செய்யுட்களிலும் விரவிய வடசொற்களோ மொத்தம் அறுபத்துமூன்று; அவை: அங்கம், அசுரர், அந்தரம், அமரர், அயன், அரன், அரி, ஆதி, இரணியன், உத்தமன், கங்கை, கஞ்சன், கணம், கதி, கருமம், குணம்,

கேசவன், சரண், சார்ங்கம், சிங்காசனம், சிந்தியாது, சிந்தை, சிரம், சுராசுரர், சோதி, ஞானம், தந்திரம், தரணி, தருமன், தனம், தாமம், திசை, தூபம், நமன், நமோநாரண, நரகு, நாமம், நாரணன், நிசாசரர், நியமம், நீதி, நேமி, படம், பலி, பாதம், பாரசி, பாவம், புண்ணியம், புந்தி, புவி, பூதம், பூமி, போகம், மதம், மந்திரம், மரகதம், மாருதம், மாவலி, மூர்த்தி, வந்திப்பார், வரம், வராகம், விடம் என்பனவாகும். இவற்றுட் பெரும்பாலன கடைச்சங்க காலத்து நல்லிசைப் புலவர் இயற்றிய செய்யுட்களிற் காணப்படாமையோடு, திருமான்மேற் பாடிய பரிபாடற் செய்யுட்களில் அவை கலத்தற்கு உரியனவாயிருந்தும், அவற்றின் கண்ணும் அவை கலந்தில. கடைச்சங்ககாலத்து இறுதியில், அஃதாவது கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் ஈற்றில் ஆக்கப் பட்ட 'சிலப்பதிகாரம்,' 'மணிமேகலை' என்பவற்றுள் முன்னையினும் சிறிதுகூட வடசொற்கள் கலந்தனவேனும் அவற்றின்கண்ணும், பொய்கையாழ்வாரது அந்தாதியிற் காணப்படும் வடசொற்களிற் பல காணப்படுகின்றில. ஆகவே, கடைச்சங்ககாலத்துப் பொய்கையா ரியற்றிய 'களவழி,' 'இன்னிலை' என்பவற்றின் வடசொற்கலப்பு மிகச் சிறிதாயும், பொய்கையாழ்வா ரியற்றிய 'அந்தாதி'யில் அஃது அதனளவிற்கு மிகப் பெரிதாயும், அங்ஙனங் கலந்த அவ்வடசொற்கடாமுங் கடைச்சங்க நூல்களில் வழங்கா தனவாயும் இருத்தலின், இப் பெயர்பூண்ட இருவரது வெண்பாயாப்பும் வெவ்வேறு காலத்தில் இயற்றப்பட்டன வாதல் வெள்ளிடைமலைபோல் விளங்காநிற்கும். எனவே, களவழி, இன்னிலை என்னும் நூல்களையியற்றிய பொய்கை யார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவராவ ரென்பதூஉம், 'முதற்றிருவந்தாதி' பாடிய பொய்கையாழ் வார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவராவ ரென்பதூஉந் தாமே பெறப்படும்.

இனிக், களவழி, இன்னிலை என்னும் நூல்களிலுள்ள வெண்பாயாப்பின் இலக்கணத்தையும், பொய்கையாழ்வா ரது அந்தாதியிலுள்ள வெண்பாயாப்பின் இலக்கணத்தை

யும் ஒப்பிட்டு நோக்கும்வழி, முன்னைய இரண்டும் அவ்விலக்கணத்தில் ஒத்து நிற்றலும், பின்னையது அதனின் வேறாய் நிற்றலும் புலனும். யாங்ஙனமெனிற் காட்டுதும்: ஆசிரியர் தொல்காப்பியனார், வெண்பாயாப்பிற்கு அடிவரையறை செய்கின்றுழி,

"நெடு வெண்பாட்டு முந்நால் அடித்தே
குறு வெண்பாட்டிற்கு அளவு எழுசீரே."[1]

என்னுஞ் சூத்திரத்தால் 'நெடுவெண்பாப்' பன்னீரடியின் மிக்கு வராதெனவும், குறுவெண்பா எழுசீரான் இயன்ற இரண்டடியிற் குறைந்து வராதெனவும் வரையறுத்துரைத்தார். உரைப்பவே, நெடுவெண்பாவின் பன்னீரடியிற் பாதியாவது 'அளவியல்வெண்பா' எனப் பெயர்பெறுதலும், அது நாலடிச் சிறுமையும் ஆறடிப்பெருமையும் பெற்றுவருதலும், குறுவெண்பா மூன்றடியின் மிக்கு வராமையும் ஆன்றோர் இலக்கியத்தான் உணரக் கிடக்குமென அச் சூத்திரத்திற்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் உரையுரைத்தார். எனவே, தொல்காப்பிய இலக்கணம்பற்றி எழுந்த கடைச்சங்கத்தார் நூல்களின் வெண்பாக்களும் இவ் விலக்கணமேபற்றி ஆக்கப்பட்டனவென்பதூஉம் பெறப்படும். அற்றேல், மேற்காட்டிய 'களவழி,' 'இன்னிலை' என்னும் நூல்கள் அவ் விலக்கணம்பற்றி வந்தனவோவெனிற் காட்டுதும்.

'களவழி'யில் "நாண்ஞாயிறுற்ற செருவிற்கு" என்பதும், "ஞாட்பினுள் எஞ்சிய" என்பதும், "யானைமேல் யானை" என்பதும், "கழுமிய ஞாட்பினுள்" என்பதும், "ஓவாக்கணை பாய" என்பதும், "பருமஇனமா" என்பதும், "ஆர்ப்பெழுந்த" என்பதும், "இணைவேல்" என்பதும், "ஒற்றிவயவர்" என்பதும், "திண்டோண் மறவர்" என்பதும், "எவ்வாயும் ஓடி" என்பதும், "பொய்கை யுடைந்து" என்பதும், "இணரிய ஞாட்பினுள்" என்பதும், "செவ்வரைச்சென்னி" என்பதும், "ஓஒஉவமன்"

1. தொல்காப்பியம், செய்யுளியல், கடுஅ.

என்பதும், "வேனிறத்திங்க" என்பதும் ஐந்தடிகளான் வந்த அளவியல் வெண்பாவாகும்; "நாஞற்றிசையும்" என்பதும், "இருநிலஞ்சேர்ந்த" என்பதும் ஆறடிகளான் வந்த அளவியல் வெண்பாவாகும்; இங்ஙனம் ஐந்தடியான் வந்தன பதினாறும், ஆறடியான் வந்தன இரண்டும்போக எஞ்சிய இருபத்துமூன்றும் நான்கடியான்வந்த அளவியல் வெண்பாக்க ளாகும்; இந் நான்கடியான் வந்தவற்றுள் ளும் இரண்டாம் அடியில் தனிச்சொல்லின்றி, நான்கடியும் ஓர் எதுகைப்பட நின்றவை ௯, ௬, ௯௦, ௯௬ என்னும் நான்குமாகும்; ஏனைப் பத்தொன்பது வெண்பாக்களும் இரண்டாம் அடியிற் றனிச்சொற்பெற்று இருவேறு எதுகைகளானும், மூவேறு எதுகைகளானும் வந்தன வாகும்.

இனி, 'இன்னிலை'யுள்ளுங் "காமம்வீழ் இன்பக் கடலாமே" என்பதும், "ஒன்றுண்டே" என்பதும் ஐந்தடியான்வந்த அளவியல்வெண்பாக்க ளாகும்; "கடன் முகந்து" என்பதும், "தோற்றேரேவெல்வர்" என்பதும், "பேராப்பெருநிலன்" என்பதும் மூன்றடியான் வந்த குறு வெண்பாக்களாகும். இவ்வாறு ஐந்தடியான் வந்தன இரண்டும், மூன்றடியான் வந்தன மூன்றும்போக, எஞ்சிய நாற்பதும் நான்கடியான் வந்த அளவியல் வெண்பாக்க ளாகும். இந்நான்கடியான் வந்தவற்றுள்ளும், இரண்டாம் அடியில் தனிச்சொல்லின்றி நான்கடியும் ஓர் எதுகைப்பட நின்றவை ௨, ௧௨, ௧௬, ௧௮, ௨௯, ௯௫, ௯௬, ௯௬, ௪௪ என்னும் ஒன்பதும் ஆகும்; இரண்டாம் அடியில் தனிச் சொல் எதுகையும் பெற்று நான்கடியும் ஓரெதுகைப்பட நின்றனவுஞ் சிலஉள, அவை : ௪௦, ௪௧ என்னும் இரண்டு மாகும்; ஏனை இருபத்தொன்பதும் இரண்டாம் அடியில் தனிச்சொற்பெற்று முதலிரண்டடியின் முதற்சீரும் இரண்டாம் அடியின் தனிச்சொல்லும் ஓரெதுகையாயும், ஏனையிரண்டடிகளின் முதற்சீர் மற்றோர் எதுகையாயும் வந்தன வாகும். இவ் 'இன்னிலை' நூல் வெண்பாவின் யாப்பமைதிகளையுங், 'களவழி' நூல் வெண்பாவின் யாப்பமைதிகளை

யுங் கருத்தூன்றி ஒத்துநோக்கவல்லார்க்கு, அவை பெரிதும் ஒற்றுமையுடையனவாய், ஆசிரியர் தொல்காப்பியனூர் வகுத்த வெண்பா இலக்கணத்துள் அடங்கிச், சங்க காலத்து ஏனைச் சான்ருேர் அருளிய **நான்மணிக்கடிகை, ஆசாரக்கோவை** முதலியவற்ருேடு ஒப்புமை யுடையனவாய் நிற்றல் தெற்றென விளங்காநிற்கும். சங்ககாலத்துச் சான்ருேர் ஒருநூல் யாக்குமிடத்து, அந்நூற்பாக்கள் ஓர் ஓசைப்பட ஒரேவகையாய் நடப்பின் அஃது ஓதுவார்க்குங் கேட்பார்க்கும் ஓசையின்பம் பயவாதாகலின், அந்நூற்பாக்களைப் பலவேறு வகையான் யாத்து ஓசையின்பம் பலபடியான் மாறிமாறி வந்து முதிரவைப்பர். இவர் இவ்வாறு ஓசையின்பம் முதிர்விக்கும் வகைகளை **முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை** என்பவற்றிற்கு யாம் எழுதிய ஆராய்ச்சியுரைகளில் விரித்து விளக்கியிருக்கின்றேம். களவழி, இன்னிலை என்பவற்றை ஆக்கிய ஆசிரியரும் ஏனைத் தொல்லாசிரியரோடு ஒப்ப, ஐந்தடி, ஆறடியான்வந்த அளவியல்வெண்பாக்களையும், மூன்றடியான்வந்த குறுவெண்பாக்களையும், ஓர் எதுகைப்படவந்த அளவியல் வெண்பாக்களையும், ஏனை ஈரெதுகைப்பட வந்த அளவியல் வெண்பாக்களின் இடையிடையே மடுத்து, அப் பாக்களின் ஓசை பலவாறு மாறிமாறி நடக்குமாற்ருன் ஓசை இன்பம் மேன்மேன் முதிர்ந்து திகழுமாறு வைத்தமை காண்க.

இனித், திருமான்மேல் முதற்றிருவந்தாதி பாடிய பொய்கையாழ்வாரும், களவழி இன்னிலை பாடிய பொய்கையாரும் ஒருவரேயாயின், மேலே காட்டிய களவழி, இன்னிலை என்பவற்றின் வெண்பாயாப்பமைதிகள் ஒரு சிலவாயினும் பொய்கையாழ்வாரது திருவந்தாதியிற் காணப்படுதல் வேண்டுமன்ருே? ஆழ்வாரது திருவந்தாதியில் உள்ள வெண்பாக்கள் நூறும் நான்கடியான் அமைந்தவை; 'களவழி,' 'இன்னிலை'யின் இடையிடையே காணப்படும் ஐந்தடி ஆறடியான் வந்த அளவியல் வெண்பாக்களைப்போன்றது ஒன்ருயினும் ஆழ்வாரது திருவந்தாதியிற் காணப்படுகின்றிலது. 'இன்னிலை'யில் மூன்றடியான்

அமைக்கப்பட்ட குறுவெண்பாக்களும் உள; அத்தகைய குறுவெண்பாட்டு ஒன்றுயினும் பொய்கையாழ்வாரது திருவந்தாதியில் உளதோவெனின், அதுவும் இன்று. இனி, நாலடி வெண்பாக்களிலும், இரண்டாம் அடியின் ஈற்றில் தனிச்சொல்லின்றி நான்கடியும் ஓர் எதுகைப்பட வந்தவை பல 'களவழி'யிலும், 'இன்னிலை'யிலும் இடையிடையே விரவி நின்றாற்போல, ஆழ்வாரது திருவந்தாதியிலும் அப் பெற்றியன சிலவேனும் உளவோவெனின், அவைதம்முள் ஒன்றுதானும் அதன்கண் மருந்துக்கும் அகப்படுகின்றிலது. பொய்கையாழ்வாரது திருவந்தாதியிலுள்ள வெண்பாப்பாட்டுகள் முற்றும், பிற்காலத்தார் செய்த 'யாப்பருங்கலம்,' 'யாப்பருங்கலக்காரிகை' முதலான செய்யுளிலக்கணங்களிற் சொல்லப்பட்ட **நேரிசைவெண்பா** இலக்கணம் ஒன்றேயுடையவாய் ஒரோசைப்பட நடக்கும் இயல்பினவாயிருக்கின்றன. பொய்கையாழ்வாரேயன்றி, அவரோடு ஒரு காலத்தினரான **பேயாழ்வார்** பாடிய மூன்றாந் திருவந்தாதிச் செய்யுட்கள் நூறும், **பூதத்தாழ்வார்** பாடிய இரண்டாந் திருவந்தாதிச் செய்யுட்கள் நூறும் அங்ஙனமே முதலிரண்டடியின் முதற்சீரும் இரண்டாம் அடியின் இறுதிச் சீரும் ஓரெதுகையாய்ப், பின் இரண்டடியின் முதற்சீர்கள் வேறோர் எதுகைப்படநிற்க வரும் நேரிசைவெண்பா இலக்கணம் ஒன்றேயுடையவாயிருக்கின்றன. மேலே காட்டியவாறு, கடைச்சங்ககாலத்துச் சான்றோர் இயற்றிய வெண்பா நூல்களிற் காணப்படும் பலவேறுவகையான வெண்பாயாப்பின் அமைதிகள், இம் முதலாழ்வார் மூவரும் இயற்றிய வெண்பா அந்தாதிகளிற் சிறிதுங் காணப்படுகின்றில.

அதுவேயுமன்றிக், 'களவழி,' 'இன்னிலை' என்னும் சங்ககாலத்துப் பொய்கையாரின் நூல்களிற், பன்னிரண்டு பன்னிரண்டு மெல்லோசை வடசொற்களே முறையே சிறுவரவினவாய் விரவிக் காணப்படாநிற்கப், பொய்கையாழ்வாரது முதற்றிருவந்தாதியில் வல்லோசை வாய்ந்த வடசொற்களும், கடைச்சங்கச் சான்றோர் இலக்கியங்களிற்

காணப்படாத வடசொற்களும் ஆக அறுபத்துமூன்று விரவியிருத்தலை மேலே யெடுத்துக்காட்டினும்; பொய்கை யாழ்வாரது அந்தாதியிற் போலவே பேயாழ்வாரது திருவந்தாதியில் அறுபத்தாறு வடசொற்களும், பூதத்தாழ்வாரது திருவந்தாதியில் அறுபத்தெட்டு வடசொற்களுங் கலந்து காணப்படுகின்றன. சங்ககாலத்துப் பொய்கையார் நூல்களாகிய 'களவழி,' 'இன்னிலை' என்னும் இரண்டிலும் பன்னிரண்டு பன்னிரண்டு வடசொற்களே கலந்திருத்தலையும், கி. பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்த பொய்கை பேய் பூதம் என்னும் ஆழ்வார் மூவர் பாடல்களிலும் அறுபத்துமூன்று முதல் அறுபத்தெட்டுவரையிலுள்ள வடசொற்கள் கலந்திருத்தலையும் உற்றுநோக்க வல்ல நுண்ணறிவாளர், அவ்வடசொற் கலப்புவேறுபாடு அவ்வவர் இருந்த காலவேறுபாட்டினையும் இனிது விளக்கிக் காட்டுமென நன்குணர்ந்து கொள்வரென்க.

இன்னும், 'இன்னிலை' பாடிய பொய்கையார், ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய இலக்கணத்தின்வழி நூல் செய்தவர் என்பதற்கு, அவர் அந்நூலின்கட் சில வெண்பாக்களில் ஐஞ்சீரடியும் வரத்தொடுத்தமையே சான்றும். 'இன்னிலை' அறத்துப்பால் ஏழாஞ் செய்யுளில் "நாம்மீட்டு, ஒறுக்கொணு ஞாங்கர் அடிப்பட்ட சீம்பால்" எனவும், பொருட்பால் ஒன்பதாஞ் செய்யுளில் "யாம் வெறுக்கை இன்றி அறைமயாராம் அஃதிலார் மைஆவின்" எனவும், இன்பப்பால் ஐந்தாஞ் செய்யுளில், "அழுக்குடம்புச் சிழ்நீரான் யாத்தசிர் மெல்லியலை யாண" எனவும் ஐஞ்சீரடிகள் வந்தமைகாண்க. இங்ஙனம் வெண்பாவினுள் ஐஞ்சீரடியும் ஒரோவழி அருகிவரப்பெறு மென்பது,

"வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீரடியும் உளவென மொழிப."

எனத் தொல்காப்பியத்துச் செய்யுளியல், ௬௩-ஆம் சூத்திரத்தானும், அதற்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியருங் கூறிய உரையானும் பெறப்படும். யாப்பருங்கலக்காரிகை யாசிரியரும் அதன் உரைகாரரும், "அருகிக் கலியோடு

அகவல் மருங்கின் ஐஞ்சீரடியும், வருதற்கு உரித்தென்பர்" என்னுங் காரிகையில் (ஒழிபியல், ௫) வெண்பாவினுள் ஐஞ்சீரடி வருதலாகாதென அதனை விலக்கினர். எனவே, யாப்பருங்கலக்காரிகை எழுதப்பட்ட பிற்காலத்தில் 'வெண்பாவினுள் ஐஞ்சீரடி விரவிவரும் வழக்கு' வீழ்ந்துபட்டமை புலனும். முதலாழ்வார் மூவரும் இயற்றிய மூந்நூறு வெண்பாக்களில் ஒன்றிலாயினும் ஐஞ்சீரடி வாராமையாலும், இவ்வாழ்வார்கள் இருந்த கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்னரே கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகிய 'புறப்பொருள் வெண்பாமாலை'யுள்ளும் ஐஞ்சீரடி விரவிய வெண்பாக் காணப்படாமையாலும், 'இன்னிலை' வெண்பாக்களுள் அஃது விரவக்காண்டலானும், கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டுப் பொய்கையார் 'இன்னிலை' இயற்றிய காலத்தே ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறியாங்கு வெண்பாவினுள் ஐஞ்சீரடி விரவும் வழக்கு இருந்ததென்பதூஉம், பொய்கையாழ்வார் திருவந்தாதி பாடியகாலத்துக்கு முன்னேரேயே அஃதாவது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே அவ்வழக்கு வீழ்ந்துபட்டதென்பதூஉம் அறியற்பாலன. ஆகவே, 'இன்னிலை' பாடிய பொய்கையாரும், திருவந்தாதி பாடிய பொய்கையாழ்வாரும் எழுநூறு ஆண்டுகள் இடையிட்ட வெவ்வேறு காலத்தவராவரெனவும் பகுத்துணர்ந்து கொள்க.

இனி, இஞ்ஞான்று 'இன்னிலை'யை அச்சிற் பதிப்பித்து அதற்கு உரையும் எழுதியுதவிய உதவியாளர், 'களவழி,' 'இன்னிலை,' 'பொய்கையாழ்வார் முதற்றிருவந்தாதி' முதலிய மூன்றையும் பற்றிக் கூறியவைகளை யாம் ஆராய்ந்து பார்க்க, அவை பொருந்தாதனவாய்க் காணப்பட்டமையின், அவர்தம் கூற்றுக்களையும் ஆராய்ந்து உண்மை இதுவெனக் காட்டுவாம்: 'முதற்றிருவந்தாதிச்' செய்யுட்களிற் சில மிக அரியவெண்பா இலக்கணங்களுக்கு இடனுயிருக்கின்றனவென அவ்வின்னிலைப் பதிப்புரைகாரர் கூறினர்; ஆனல், அவ் வரியவெண்பா இலக்கணங்கள் இவையென்பது அவர் எடுத்துக் காட்டிற்றிலர். மற்றுப்,

பலவேறு வகைப்பட்ட அமைதிகள் வாய்ந்த வெண்பாக்கள் 'களவழி,' 'இன்னிலை' என்பவற்றிற் காணப்படுமாறு போலப், பொய்கையாழ்வா ரியற்றிய திருவந்தாதியில் அவற்றுள் ஒரு சிலதாமுங் காணப்படாமையை மேலே விளக்கிக் காட்டினே மாதலால், அவர் கூற்றுக் கொள்ளற்பாலதன்றென விடுக்க.

இனி, முதற்றிருவந்தாதிச் செய்யுட்களில் 'நன்பு,' 'புலரி,' 'குரா,' 'திருவன்,' 'மரிதல்,' 'ஏலும்' என்னும் அருஞ்சொற்கள் காணப்படுமாறு போலக், 'களவழி'யில் அத்தகைய அருஞ்சொற்கள் காணப்படுகின்றில எனவும், முதற் றிருவந்தாதிச் செய்யுட்கள் இனியனவாயும் 'களவழிச்' செய்யுட்கள் இன்னாதனவாயும் இருக்கின்றனவெனவும அப் பதிப்புரைகாரர் கூறிய கூற்று எமக்குப் பெரிதும் வியப்பினைத் தோற்றுவியா நின்றது. அவர் அருஞ்சொற்களென மேலே கூறிய ஆறும் பொய்கையாழ்வாரது முதற் றிருவந்தாதியில் உளவோ என யாம் ஆராய்ந்து பார்க்க, 'ஏலும்' என்னும் ஒரு சொல்லைத் தவிர, ஏனை ஐந்தும் அவர்தம் செய்யுட்களிற் காணப்படுகின்றில. 'ஏலும்' என்னும் அவ்வொருசொற் றனும் 'ஏனும்' என்பதன் திரிபாக எல்லா ஆழ்வார்களானும் புதுவதாக எடுத்தாளப்படுவது ஏனை ஐந்து சொற்களில் 'நன்பு' என்பது நலம் என்னும் பொருளிற் பூதத்தாழ்வார் பாடிய இரண்டாந் திருவந்தாதி முதற் செய்யுளிலும், 'புலரி' என்பது விடியற்காலம் என்னும் பொருளிலும் 'குரா' என்பது குராமரம் என்னும் பொருளிலும் அதன் முப்பத்தோராஞ் செய்யுளிலும், 'திருவன்' என்பது செல்வன் என்னும் பொருளில் அதன் எண்பத்துநான்காஞ் செய்யுளிலும், 'மரிய' என்பது 'தெரியுங்கால்' என்பதற்கு வேறு பாடமாய் வேறோர் ஏட்டுச் சுவடியிற் காணப்பட்டுச் 'சாவ' என்னும் பொருளிற் பேயாழ்வார் இயற்றிய 'மூன்றாந் திருவந்தாதியின்' ஐம்பத்தைந்தாஞ் செய்யுளிலுங் காணப்படுவதாயிருக்க, இச்சொற்களெல்லாம் பொய்கையாழ்வாரது முதற் றிருவந்தாதியில் உளவென அப் பதிப்புரைகாரர் பிறழ்ச்சியுரை நிகழ்த்தினமை எமக்குப் பெரியதோர் இறும்பூதினை விளைப்

பதாயிற்று. அருஞ்சொற்களென அவர் கொண்டவை தாமும் பொய்கையாழ்வார் பாட்டுக்களில் இல்லாமையால், அதுபற்றி அவ் வாழ்வாரது பழமையை நாட்டப்புக்க அப் பதிப்புரைகாரரது கோட்பாடும் நுறுங்கி இல்லையாயிற்று.

இனிக், 'களவழி'யில் அருஞ்சொற்கள் இல்லையென்றதும், அதன் செய்யுட்கள் இனிமையில்லாதன வென்றதும் பிழைபாட்டுரையாம். 'களவழி'யில் அருஞ்சொற்கள் பற்பல உள; அவற்றுட் சில வருமாறு: துப்பு, கெழூஉம், தப்பியார், ஞாட்பு, போர்ப்பு, குக்கில், சிரல், உரறி, ஆறுது, குரீஇ, உயங்கும், மைந்து, கடாஅய், நூற, பருமம், சாறு (விழவு), நளிந்த, திமில், எருவை, திரவு, இங்க. இவை போலும் அருஞ்சொற்கள் இன்னும் பலஉள; இவையெல்லாம் 'புறநானூறு,' 'அகநானூறு,' 'கலித்தொகை' முதலான சான்றோரிலக்கியங்களிற் பயில்வனவாகும். இன்னோரன்னவை அருஞ்சொற்களாயிருக்க, இவைதம்மை அங்ஙனங் கொள்ளாத அப் பதிப்புரைகாரரது கோள் வழுக்கோளாமென்க. அற்றன்று, கற்றார்க்கும் எளிதிற் பொருள் விளங்காத சொற்களே அருஞ்சொற்களென யாம் கோடுமெனின்; தேவார திருவாசகங்களினும் பிற்காலத்து ஆழ்வார்கள் பாடல்களினுங்கூடக் கற்றார்க்கு எளிதிற் பொருள் விளங்காத சொற்கள் பற்பல உள; அசும்பு, அண்ணிக்கும், அவிதா, அள்ளூறு, ஆதம், இறவு, உண்டை, உந்தீபற, உவலை, தட்டுளுப்பு, ஏசறவு, ஏலோர், ஏழில், தழுத்த, கலதி, கிழியீடு, கிறி, கீறு, குதுகுதுப்பு, குலா, சச்சை, சட்டோ, சழக்கு, சிறவு, செடி (தீமை), தழி, திறவு, தெள்ளேணம், நாங்கூழ், பட்டி, பப்பு, பளகு, பனவன், புனிதம், பேழ்கணித்தல், பொத்தை, மாழை, வம்பனேன், வயனம், விதுவிதுப்பு, விளாக்கைத்து, என்னுஞ் சொற்கள் 'திருவாசகத்'திற் காணப்படுகின்றன; சங்க இலக்கியங்களிற் பயின்றார்க்கும் இச் சொற்களுக்குப் பொருள் கண்டுதெளிதல் எளிதாகாது; இங்ஙனமே, 'திருச்சிற்றம்பலக் கோவை' யாரினும் அரிதுணர் பொருளனவாஞ் சொற்கள் பலப் பல உள. தேவாரப்பாக்களில் உள்ள பொருள் பொள்

ளெனப் புலப்படாச் சொற்களேயும் எண்டெடுத்துக்காட்ட லுறின் இது மிக விரியும். கற்ருர்க்கும் எளிதிற் பொரு ளுணரலாகாச் சொற்கள் மிகுந்திருத்தல் கொண்டு, கி. பி. மூன்ரும் நூற்ருண்டிற் பாடப்பட்ட 'திருவாசகத்'தையும், கி. பி. ஆறு, ஏழு, ஒன்பதாம் நூற்ருண்டுகளிற் பாடப் பட்ட தேவாரப்பாக்களேயும் கி. பி. இரண்டாம் நூற்ருண் டிற்கு முற்பட்ட சங்ககாலத்தில் இயற்றப்பட்டனவென்று கோடல் ஒக்குமோ? கல்வியறிவு சிறிதுடையார்க்கு அருஞ் சொல்லெனத் தோன்றுபவை, அவரின் மிக்க கல்வியும் நுண்ணறிவும் உடையார்க்கு அருஞ்சொல் லெனத் தோன்ரு; அவை எளிதிற் பொருள் விளங்குவனவாகவே யிருக்கும். ஆகையால், தமக்கு அருஞ்சொல்லெனத் தோன்றுவது கொண்டு ஒருவர் ஒருநூலின் சொல்வழக்கை நன்காராய்ந்து பாராது அந் நூலைப் பழையதென்ருதல் புதியதென்ருதல் முடிபு கட்டுதல் பெரிதும் இழுக்குடைத் தாம். அதுவேயுமன்றி, 'இன்னிலேப்' பதிப்புரைகாரர் அருஞ் சொற்களென எடுத்துக் காட்டிய நன்பு, புலரி முதலிய ஆறுசொற்களும் அரிதுணர் பொருளனவாகாமை அவற் றிற்கு யாம் மேலே குறித்த பொருள்களானும் இனிது விளங்கும். மேலும், இச் சொற்கள் பூதத்தாழ்வார் பாடல் களில் உள்ளனவே யன்றிப் பொய்கையாழ்வார் பாடல் களில் உள்ளனவும் அல்லவென்பதூஉம் நினைவிற்பதிக்கற் பாற்று.

இனிக், 'களவழிச்' செய்யுட்கள் இனிமையில்லாதன என்ற அப் பதிப்புரைகாரர் எவ்வாற்ருல் அவை இனிமை யில்லாதனவாயின என்பது காட்டிற்றிலர். அவை சொற் சுவை இல்லாதனவா? அன்றிப் பொருட்சுவையில்லா தனவா? சொற் சுவையில்லாதன என்று கொண்டா ரெனின்,

"ஓழுக்குங் குருதி யுழக்கித் தளர்வார்
இழுக்குங் களிற்றுக்கோடு ஊன்றி எழுவர்
மழைக்குரல் மாமுரசின் மல்குநீர் நாடன்
பிழைத்தாரை அட்ட களத்து." (களவழி, ௩)

என்பது போன்ற செய்யுட்களைச் சொற்சுவை இல்லாதன வென்று தமிழறிஞர் கூற ஒருப்படுவரோ மொழிமின்! மற்று அவை பொருட்சுவை இல்லாதனவெனக் கொண்டா ரெனிற், 'காவிரிநாடனாகிய கோச்செங்கண்ணான் கழுமலம் என்னும் ஊரின்மேற் படையெடுத்துச் சென்று, அங்கே தன்னை வந்தெதிர்த்த மாற்றாரொடு பொருது அவரைத் தொலைத்து, அவ் வூரினைக் கைப்பற்றிக் கொண்ட நாளில், அவன் போர்புரிந்த களத்திற் குதிரைகளால் உதையுண்டு காம்புமேலாகக் கிடந்த பகைவருடைய குடைகளானவை, வயலில் மேயச்சென்ற மாடுகளால் உதையுண்டு தண்டு மேலாய்க் கிடந்த காளான்களை ஒத்திருந்தன' என்று அப் போர்க்களத்தைப் புனைந்துரைக்கும்,

> "ஓ ஓ உவமன் உறழ்வின்றி ஒத்ததே
> காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
> மாஉதைப்ப மாற்றார் குடையெல்லாங் கீழ்மேலாய்
> ஆஉதை காளாம்பி போன்ற புனல்நாடன்
> மேவாரை அட்ட களத்து." (களவழி, ௩சு)

என்னுஞ் செய்யுளையும் இதனோடு ஒத்தவற்றையும் பாக்க ளின் பொருட்சுவை தேர்ந்த புலவோர் பொருட்சுவை இல்லாதன வென்று உரைக்கத் துணிவரோ கூறு மின்கள் !

அற்றன்று, பொய்கையாழ்வார்தம் செய்யுட்கள் கடவுள்மேற் பாடப்பட்டிருத்தலின், அவையே இனிமை யுடையன, மற்றுக் 'களவழிச்' செய்யுட்களோ போர்க் களத்தின்மேற் பாடப்பட்டிருத்தலின் அவை இன்னா தனவேயாமென்று கோடலே எமது கருத்தாமாலெனின்; நன்று சொன்னீர், கடவுளின்மேல் நெஞ்சுருகிப்பாடும் பாக்கள் இனிமையிற் சிறந்துநிற்றல் போலவே, கடவுள் உயிர்கள்மேல் வைத்த பேரிரக்கத்தால் அவைகட்குப் புல்முதல் மக்கள் ஈறான உடம்புகளையும், அவ் வுடம்புகள் இருந்து உலவுதற்கு இவ்வுலகத்திற் பலவேறு இடங்களை யும், அவை ஐம்புலன்களாலும் நுகருதற்குப் பலவகைப்

பண்டங்களையும் மக்களெவரானும் படைக்க இயலாத அத்துணைத் திறமையோடும் அழகோடும் படைத்துக் கொடுத்திருத்தலின், அவனது அப் படைப்பின் திறங்களையும், அப் படைப்பின்கண் மக்களுடைய செயல்களால் நிகழும் நிகழ்ச்சி வேறுபாடுகளையும் எடுத்துப்பாடுதல் கடவுளைப் பாடுதலோடொப்ப இன்பம் பயப்பனவேயாம். அங்ஙனம் அல்லாக்கால் 'அகப்பொருள்,' 'புறப்பொருள்' பற்றியெழுந்த சங்கப்பாட்டுகளும், 'சிலப்பதிகாரம்,' 'மணிமேகலை' போன்ற பெரும்பொருட்டொடர்நிலைச் செய்யுட்களும் சான்றோரால் அத்துணை விழுமியவாய்ப் பாராட்டப்படாவன்றே. ஆதலால், இறைவனைப் பாடும் பாட்டுக்களே யன்றி, இறைவனது படைப்பினையும் அப் படைப்பில் நிகழும் நிகழ்ச்சிகளையும் புனைந்துரைக்கும் பாக்களும் நல்லிசைப் புலவர்களால் ஆக்கப்படின் அவற்றோடொப்ப இனிமை மிக்கனவாயே திகழுமென உணர்ந்துகொள்க. அற்றாயினுங், 'களவழிச்' செய்யுட்கள போர்க்களத்தில் நிகழ்ந்த கொடிய நிகழ்ச்சிகளைக் கூறுதலின், அவை இன்னாதனவேயாமெனிற்; குருதியொழுகக், குடரும் நிணமும் மூளையுஞ் சிதற, நெஞ்சம் போழப்பட்டுங் கழுத்து அறுபட்டுங் கைகால் முறிபட்டுங் கிடப்ப, இறைவனருளால் அரிதிற்கிடைத்த மக்கள் யாக்கையை மக்கள் தாமே ஒருவரோடொருவர் பொருது அழிக்குங் கொடுமை, போர்க்களு நிகழ்ச்சிகளை எடுத்துப் பாடும் பாட்டுக்களானன்றி, மற்றையோர்க்கு வேறொருவாற்றானும் புலப்படமாட்டாது. மற்று, அப் போர்க்களப் பாட்டுக்களைக் கேட்டவளவானே அவர் அப் போர்த்தொழிலின் கொடுமை தேர்ந்து, உள்ளம் இளகி அத்துணைத் தீய தொழில் என்றும் நிகழாதிருத்தலை வேண்டுவர். நல்லிசைப் புலவராகிய பொய்கையார் 'களவழி' பாடிய நோக்கமுங், கோச்செங்கண்ணான் தான் செய்த போரினால் விளைந்த கொடுமையை நன்குணர்ந்து, இனி அதனை மேற்கொள்ளாதிருத்தற்பொருட்டும், அவனது போரினால் முன்னரே தன் படைகளையிழந்து உள்ளம் நிலைகலங்கிநிற்குஞ் 'சேரமான் கணைக்காலிரும்பொறை' யென்னும் புகழோங்கிய சிறந்த

மன்னனை மீண்டுஞ் சிறையிலடைத்து வருத்துதலினும் மிக்க கொடுமை பிறிதில்லையென்பதனை அப் போர்க்களக் கொடுமை பாடிய பாட்டின்வழிப் புகுந்துணர்ந்து அவனைச் சிறையினின்றும் அவன் விடுதலை செய்தற்பொருட்டுமே யாம். பொய்கையார் பாடிய 'களவழி' நூலாற் போரின் கொடுமை தெரிந்த பின்னர்த்தான், சோழன் கோச்செங் கண்ணன், போர்செய்து பிறர்மண் வெளவுதலை அறவே கைவிட்டுச், சிவபெருமானுக்குத் திருவடித்தொண்டனாகி, அப் பெருமானுக்கு ஆங்காங்குத் திருக்கோயில்கள் கட்டு வித்து, அத் திருத்தொண்டிலேயே இன்புற்றிருந்தா னாதல் வேண்டும். இன்னும், இறைவனால் வகுக்கப்பட்ட அழகிய அமைதிமிக்க இயற்கையமைப்பில், மக்கள் தமது கொடுஞ்செயலால் உண்டாக்குங் கொடிய போர்க்கள நிகழ்ச்சிகளை எடுத்துப் பாடுவான் புகுந்த ஆசிரியர் பொய் கையார், அக் கொடியவற்றின் தோற்றக் கொடுமை யைத் தணிவுசெய்தற் பொருட்டும், தாம் பாடுஞ் செய்யுட் களைப் பயில்வாரது நினைவு அக் கொடுநிகழ்ச்சிகளின் வழியே ஈர்ப்புண்டுபோகாமல் அவற்றினின்றும் பிரிந்து இறைவன் அமைத்த அழகிய இயற்கைத் தோற்றங்களிற் சென்று பதிந்து அவற்றை வியந்து இன்புற்று நிற்றற் பொருட்டும், தாம் பாடும் அப் போர்க்கள நிகழ்ச்சிகள் பெரும்பாலனவற்றிற்கு இயற்கைத் தோற்றங்கள் பல வற்றை உவமையாக எடுத்துக்காட்டிச் செல்லுதல் பெரிதும் பாராட்டற்பால தொன்றும். போர்க்களத்திற் குடைகள் காம்பு மேலாகக் கிடத்தலுக்குத் தண்டு மேலாகக் கிடக்குங் காளான்களை உவமைகூறிய பாட்டை மேலே எடுத்துக்காட்டினும்; இங்ஙனமே ஏனைச் செய்யுட் களிற் பெரும்பாலனவும் இயற்கைத்தோற்ற உவமை காட்டுதல் காண்க. இவ்வாறு பெருங்காப்பியங்களுள்ளும் அடுத்தடுத்துக் காணப்படாத இயற்கைத்தோற்ற உவமைகளை, நாற்பத்தொரு செய்யுட்களான் அமைந்த இச் சிறிய 'களவழி' நூலின்கண் அதனாசிரியர் பொய் கையார் அடுத்தடுத்துக் காட்டிச் செல்லுதலின் கருத்தை நுனித்துக் காணவல்ல அறிவுமதுகையுடையார், அங்

ஙனம் அவ் வாசிரியர் செய்தது, தமது நூலைப் பயில் வார்க்கு அவர்தம் நினைவு தாங்காட்டும் அப் போர்க்களக் கொடுங் காட்சிகளிலேயே கிடந்துவிடாது, அவற்றைக் கடந்துசென்று இறைவன் வகுத்த இயற்கைத்தோற்ற அழகிற் படிதல் வேண்டியேயாமென உணர்ந்துகொள்வர். இத்துணை நுண்ணுணர்வுகொண்டு உருவத்திற் சிறிதாகிய இக்களவழிநூல் யாக்கப்பட்டமையாலன்றோ, திருக்குறள், நாலடியார் முதலான விழுமிய நூல்களோடு இதுவும் ஒன்றாகச் சேர்த்துப் பதினெண் கீழ்க்கணக்கினுள் வைத்து ஆன்றோரால் பாராட்டப்படுவதாயிற்று. இங்ஙன மாக நுண்மையும் இனிமையும் முதிர்ந்து திகழுங் 'கள வழிப்' பாட்டுகளை இன்னதனவென்று கூறிய அப் பதிப் புரைகாரரது உரை வழுக்குரையேயாமென விடுக்க.

இனிப், பொய்கையாழ்வார் பாடிய முதற்றிருவந் தாதிச் செய்யுட்களெல்லாம் பிறப்பு இறப்பு இல்லா முழுமுதற் கடவுண்மேற் பாடப்பட்டனவும் அல்ல. சிவபெருமானையுந் திருமாலையும் இவர் ஒன்றுபடுத்தி அருளிச்செய்திருக்கும் ரு, உஅ, எச, கூஅ-ஆஞ் செய்யுட் களும், அங்ஙனமே திருமாலைமட்டும் மனம் உருகிப் பாடியிருக்கும் வேறுசில செய்யுட்களுந் தவிர ஏனைய வெல்லாங் கண்ணன், வாமனன், நரசிங்கன், வராகன் முதலியோர்மேற் பாடப்பட்டனவாகும். பிறப்பு இறப்பு இல்லாத் தனிமுதற் கடவுளைமட்டும் வழிபடுவோரான சான்றோர்க்குப், பிறப்பு இறப்பிற் கிடந்துழல்வாரான மக்களையும் அவரிற் றாழ்ந்த விலங்குகளையும் பாடும் இப் பாட்டுக்கள் அருவருப்பினையும் வருத்தத்தினையும் விளை வியாதிரா. மக்களை மக்களாகவும் தெய்வத்தைத் தெய்வ மாகவும் வைத்து மயக்கவுணர்வுக்கு இடனின்றிப் பாடுதல் குற்றம் அன்று; மற்று, மக்களைத் தெய்வமாகவும், தெய் வத்தை மக்களாகவும் பிறழ்த்திவைத்து மயங்கப்பாடு தலே பெரிதுங் குற்றமாவதாம். 'திருமால்' என்பது பிறப்பு இறப்பு இல்லா எல்லாம்வல்ல இறைவியாகிய உமைப்பிராட்டியே யல்லாற் பிறிதன்றென்பதனை முன்

னரே விளக்கிக்காட்டினமாதலால், திருமாலைமட்டும் வணங்குதல் குற்றம் அன்று. மற்றுக், கண்ணன், வாமனன், முதலான மக்களைத் தெய்வமாக வைத்தும், முழுமுதற் பொருளாகிய திருமாலைப் பிறப்பு இறப்புக்களுட் படுத்தும் பாடியதே குற்றமாம். ஆகவே, பொய்கை யாழ்வார் திருமாலையுஞ் சிவபிரானையும் விடுத்து, ஏனை மக்களுள்ளுஞ் சிற்றுயிர்களுள்ளும் படுவாரான கண்ணன், வாமனன், நரசிங்கன், வராகன், இராமன் முதலியோரைத் திருமாலாக வைத்துப் பாடியதும், உலகிற்கு முழுமுதற் கடவுள் அம்மையப்பரும் அல்லது மாலுஞ் சிவமுமாம் ஒருவரேயாக அவரைவிடுத்து, "முதல்ாவார் மூவரே" எனப் புராணகதையை நம்பிக் கடவுளை மூவரெனக் கூறிய தும் மெய்யறிவினருக்கு இன்னாதனவாகவே காணப்படும். சைவசமயாசிரியருள் எவரும் இங்ஙனம் வைணவ ஆழ்வார் களைப்போல் யாண்டும் மயங்கிப் பாடிற்றிலர்; அவர்க ளெல்லாரும் பிறப்பிறப்பில்லாத் தனித்தலைமைக் கடவு ளாகிய அம்மையப்பர் ஒருவரையே, மூவர்க்கும் முப்பத்து மூவர்க்கும் மற்றொழிந்த தேவர்க்கும் மேற்பட்டவராக வைத்துப் பாடியிருக்கின்றனரென்பதை மேலே பலகாலும் வற்புறுத்திப் போந்தாம். பொய்கையாழ்வாரும் பேயாழ் வாரும் இடையிடையே புராண கதைகளான் மயக்குற்றுத், திருமால் அல்லாதவற்றையுந் திருமாலாகக்கொண்டு பாடிப் பிழைபட்டனராயினும், இடையிடையே அம்மயக்கந் தீர்ந்து மெய்யுணர்வு தெளிந்து சிவபிரானுந் திருமாலு மாய்க் கூடிய முழுமுதற் கடவுளின் ஒருருவினையுந் திரு மாலையுங் குழைந்துருகிப் பாடியிருக்கின்றனராகலின் அவ் விருவரும் எம்மனோரால் பெரிது பாராட்டப்படுந் தகைய ரேயா மென்க.

இனி, 'இன்னிலை' பாடிய பொய்கையாரும், 'முதற்றிரு வந்தாதி' பாடிய பொய்கையாழ்வாரும் ஒருவரேயென நாட்டுதற்கு அப் பதிப்புரைகாரர் வேறுசில குறிப்புகள் காட்டினர்; அவைதம்மையும் ஆராய்வாம்: 'இன்னிலை'ச் செய்யுட்கள் சிலவற்றிற் குற்றியலுகரத்தின்பின் வந்த

உயிர்கள் உடம்படு மெய் பெற்றிருத்தல்போல, முதற்றிருவந்தாதிச் செய்யுட்கள் சிலவற்றிலுங் குற்றியலுகரத்தின் பின்வந்த உயிர்கள் உடம்படுமெய் பெற்றிருக்கின்றன வென்று அவை இரண்டற்கும் ஒற்றுமை காட்டினர். இது பெரிதும் பிழைபாடான ஒற்றுமையே யாகும்; ஏனெனிற், குற்றியலுகரத்தின்முன் வரும் உயிர், அக் குற்றியலுகரங்கெட நின்றமெய்யின்மேல் ஏறிவருதலே செய்யுள் வழக்கிலும் உலகவழக்கிலும் இயற்கையாகக் காணப்படுவதொன்றும். 'எழுந்து இருந்தான்,' 'மருந்து உண்டான்,' "நாகு இள வரி வண்டு உண்டு" என்றற் றொடக்கத்தன இருவகை வழக்கிலும் 'எழுந்திருந்தான்,' 'மருந்துண்டான்,' "நாகிளவரிவண்டுண்டு" என்றுதான் எல்லாராலுஞ் சொல்லப்படுமேயல்லாமல், 'எழுந்து விருந் தான்,' 'மருந்துவுண்டான்,' "நாகுவிளவரிவண்டுவுண்டு" என உடம்படுமெய் புணர்த்துச் சொல்லப்படா. சொற்களைச் சொல்லுங்காற் குற்றியலுகர ஈற்று உகரங்கெட நின்ற மெய்ம்மேல் வந்த உயிரேறி முடிதலே எங்கும் இயற்கை யாகக் காணப்படுதலின், அவ் வியற்கையையே ஆசிரியர் தொல்காப்பியனாரை உள்ளிட்ட இலக்கண ஆசிரியர் இலக்கணமாகக் கூறுநிற்பர். குற்றியலுகரத்தின் முன் வரும் உயிர் உடம்படுமெய் பெறுமெனத் தொல்காப்பியனார் யாண்டுங் கூறிற்றிலர். அதனாற், குற்றியலுகரத்தின் முன் வரும் உயிர் உடம்படுமெய் பெறவைத்தல் இயற்கைக்கும் இலக்கணத்திற்கும் மாறான பிழையேயல்லாமற் பிறி தன்று; பிழையேயாயினும் வெண்பாவினும் பிற பாக்களி னும் முறையே தளையுஞ் சீருங் கெடாமைப்பொருட்டு அவ் வியற்கைக்கு மாறாக அருகி ஒரோவொருகாற் குற்றிய லுகரத்தின்முன்வந்த வுயிர்க்கு உடம்படுமெய் கொடுத்து நல்லிசைப் புலவர் செய்யுள் யாத்தலும் உண்டு; இது பிழையேயாயினுஞ் செய்யுள் யாத்தல் வருத்தமான செய லாதல்பற்றி அதனை ஆன்றோர் விலக்காதுகொள்வர். எனினுங், குற்றியலுகரத்தின்முன் வரும் உயிர் உடம்படு மெய் பெறுதல் இயற்கைக்கும் இலக்கணத்திற்கும் மாறாய் இன்னா ஓசைத்தாயிருத்தலின், தொல்காப்பியனார் காலத்

திற்கு முன்னும் அவர்க்குப்பின் இடைச்சங்க கடைச்சங்கச் சான்றோர் செய்யுட்களினுங், கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட 'சிலப்பதிகாரம்,' 'மணிமேகலை' என்பவற்றினுங்கூட அங்ஙனங் குற்றியலுகரத்தின்முன் வரும் உயிர் உடம்படுமெய் பெற்றுமுடிதலை யாண்டுங் கண்டிலேம். மற்று, மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசகத்திலோ, அடித்தடித் தக்காரம் என வரற்பாலது சீர்கெடாமைப்பொருட்டு "அடித்தடித்து வக்காரம்" (அற்புதப்பத்து, ங) என ஓரிடத்தில் மட்டுங் குற்றியலுகரத்தின் முன்வந்த உயிர் உடம்படுமெய் பெற்று முடிந்தது. எனவே, பண்டை இலக்கண ஆசிரியராகிய தொல்காப்பியனார் செய்த இலக்கணத்திற்கும், அவர்க்குப் பின் வந்த ஏனைச் சான்றோர் செய்த இலக்கியங்கட்கும் முரணாகப், பாக்களிற் சீர் தளை கெடாமைப்பொருட்டுச் சொற்களையுஞ் சொற்புணர்ச்சிகளையும் ஒரோவழிப் பிழைபட அமைத்தல், திருவாதவூரடிகள் இருந்த கி.பி. மூன்றாம் நூற்றாண்டுமுதல் நிகழ்ந்ததாகல் வேண்டும். இவ்வாறு பண்டைச் சான்றோர் இலக்கண இலக்கியங்கட்கு முரணான பல மாறுதல்கள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டுமுதல் இத் தென்றமிழ் நாட்டின்கண் நிகழலானமை வேறோராற்றானும் பெறுதும். என்னை? தொல்காப்பியத்துஞ், சங்க இலக்கியங்களிலும் ஒரு சிறிதுங் காணப்படாத 'கட்டளைக் கலித்துறை,' 'விருத்தம்' என்னும் பாவகைகளும், புதிய புதிய வடசொற்களும் பாரத ராமாயண புராண கதைகளும், பல்சமயக் கோட்பாடுகளும், பிறவும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து இயற்றப்பட்ட தமிழ் நூல்களின் மட்டுமே காணக்கிடத்தலினென்பது. இங்ஙனமாக முன்னோர் நூல்களிற் காணப்படாதனவும், அவற்றோடு ஒரோவழி மாறுவனவுமாகிய பல நிகழ்ச்சிகளின் இடையே, 'குற்றியலுகரத்தின்முன் வரும் உயிர் உடம்படுமெய் பெறும்' புதுவழக்கும் ஒரோவொருகால் விரவலாயிற்று. ஆகவே, "உண்மை மாலீர்த்து விருள்கடிந்து" என சக-ஆஞ் செய்யுளிலும், "ஐயுணர்வான் ஆய்ந்து வறஞ்சார்பா" என சச-ஆஞ் செய்யுளிலுங் குற்றியலுகரத்தின்முன் வந்த உயிர்க்கு

உடம்படுமெய் புணர்த்து ஓதிய 'இன்னிலை' என்னும் நூலும் அதனாசிரியர் பொய்கையாரும், திருவாதவூரடிகள் இருந்த கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்குச் சிறிது முன்னே இருந்தமை தெற்றென விளங்கா நிற்கும். 'களவழி' நூலில், முன்னோர் வழக்குக்கு முரணான இப்பெற்றியது ஏதுவுங் காணப்படாமையிற், களவழியும் அதனை யாக்கிய பொய்கையாருங் கடைச்சங்ககாலத்தில் அஃதாவது கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னே இருந்தமையுந் தானே பெறப்படா நிற்கும். இவ்வாற்றாற் 'களவழி' யியற்றிய பொய்கையார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னும், 'இன்னிலை' இயற்றிய பொய்கையார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் ஈற்றிலும் இருந்தமை பெறப் படுதலின் அவ்விருவரும் வேறு வேறுவரென்பது கடைப் பிடிக்க. இன்னிலை யியற்றிய பொய்கையார் முன்னோர் வழக்கொடு மாறுபட்டது இஃதொன்றின்மட்டுமே யல்லா மல், ஏனைப் பா அமைப்பு முதலியவற்றின் அல்லாமை யின் இவரைக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் ஈறு அல்லது மூன்றும் நூற்றாண்டின் துவக்கத்திற்குப்பின் கீழ் இறக்குதல் இயலாதென்பதூஉங் கருத்திற் பதிக்கற் பாற்று.

'இன்னிலை' இயற்றிய பொய்கையார் கி. பி. இரண் டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவரல்ல ரென்பது மற்றுமோ ராற்றானும் பெறுதும். போர்க்களத்தில் வந்து நின்ற அருச்சுனனுக்கு, அவன் தேரிற் பாகனாய் அமர்ந்த கண் ணன் 'பகவற்கீதை நூல்' செவியறிவுறுத்தின னென்னும் மாபாரதக்கதையை 'இன்னிலை'யின் முதற்செய்யுள் குறிப் பிடுகின்றது. பாரதப்போரை மட்டுங் குறிப்பிட்ட பழந் தமிழ்ப்பாட்டுக் கி. மு. மூவாயிர ஆண்டுகட்கு முன்னரே உளதேனும், மாபாரதக் கதைகளையாதல், கண்ணன் என்னும் பெயராற் கண்ணனது வணக்கத்தையாதல் குறிப்பிட்ட பழந்தமிழ்ப்பாட்டுக் கிறித்து பிறப்பதற்கு முற்பட்டகாலத்தில் ஒன்றுமேயில்லை. மாபாரதக்கதை தமிழ்நாட்டார்க்குத் தெரியத்துவங்கியதும், அது தமிழின்

கண் மொழிபெயர்க்கப்படலானதும், அதன்வழியே கண்ண னும் திருமாலின் வடிவான ஒரு தெய்வமாக வைத்து ஈண்டுள்ளாரால் பெரிது வணங்கப்படலானதும் எல்லாங் கி. பி. முதல் நூற்றாண்டுமுதல் நிகழலாயினவென்பதை முன்னரே (௪௪௧, ௪௪௨-ஆம் பக்கங்களில்) விளக்கிப்போந் தாம். ஆகையாற், கண்ணன் அருச்சுனற்குக் கீதைநூல் அறிவுறுத்தியதாகக் கூறும் மாபாரதக் கதையைத் தமது 'இன்னிலை' முதற்செய்யுளில் எடுத்து மொழிந்த அதன் ஆசிரியர் பொய்கையார் கி. பி. முதல் நூற்றாண்டிற்கும் பின் னிருந்தோரேயாதல் வேண்டும். 'பகவற்கீதை' என்னும் நூல் மாபாரதத்தில் எழுதி இடை நுழைக்கப்பட்டது கி. மு. முதல் நூற்றாண்டிற்குமுற் சென்றதெனல் ஆகாமை யானும்,[1] அது தானுந் தமிழ்நாட்டார்க்குத் தெரியலானது கி. பி. முதல் நூற்றாண்டிற்கு முன்னென்றல் இயையாமை யானும, அதனைக் குறிப்பிட்ட 'இன்னிலை' ஆசிரியர் பொய்கையார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின்கட் பட்டவ ரென்பதே தேற்றமாம் என்க.

இனி, 'முதற்றிருவந்தாதி' பாடிய பொய்கையாழ்வார், 'இன்னிலை' பாடிய பொய்கையாரைப்போல், தமது கூறு-ஆஞ்செய்யுளிற் குற்றியலுகரத்தின்முன் வந்த உயிர்க்கு உடம்படு மெய் புணர்த்தோதினு ரென்றதும் பிழைபாடாம். என்னை ? "நமோநாரணு வென்ன" என வேறு திருத்த மான பாடமே வைணவப் புலவர்களால் ஒப்புக்கொண்டு பதிப்பிக்கப்பட் டிருத்தலின்.[2] "என்று" என்னும் பிழை யான பாடத்திற்கு வேருக "என்ன" என்னுந் திருத்த மான பாடம் உளதாகலிற், பிழையான பாடம் இவ் வொன் றைக்கொண்டு பொய்கையாழ்வாரையும், 'இன்னிலை' பாடிய பொய்கையாரையும் ஒன்று படுத்த முனைந்த இன்னிலைப் பதிப்புரைகாரர் கருத்து நிரம்புமாறில்லையென

1. See 'Gita and Gospel' by Dr. J. N. Farquhar.

2. 1903 இல் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் திரு. உ. வே. கோபாலாசாரியாரால் பதிப்பிக்கப்பட்ட 'நாலாயிரப்பிரபந்தப்' படியைப் பார்க்க.

விடுக்க. பிழையான பாடத்தையே உறுதியாக்கொண்டு, அவ் விருவரையும் ஒன்றுபடுத்தலாமெனினுங், குற்றிய லுகரத்தின்முன் வந்த உயிர்க்கு உடம்படுமெய் புணர்த்து ஓதிய திருவாதவூரடிகளும் உளராகலின், இப் புதிய புணர்ப்புப் பொய்கையார்க்கும் பொய்கையாழ்வார்க்குமே உரித்தென்றலும் பொருந்தாதென ஓர்க.

இனி, 'இன்னிலை'யின் ௨௭-ஆஞ் செய்யுள் "மகவு" என முற்றியலுகர ஈற்றான் முடிதல்போலப், பொய்கையாழ்வார் அருளிச் செய்த 'முதற்றிருவந்தாதி'யின் ௧௨, ௫௩, ௬௭-ஆஞ் செய்யுட்களும் முற்றியலுகர ஈற்றான் முடிதலின், அவ் விருநூல்களையும் ஆக்கிய பொய்கையார் ஒருவரே யாவரென இன்னிலைப் பதிப்புரைகாரர் கூறினர். இவர் கூறியபடியுளவா என்று 'முதற்றிருவந்தாதி'யை யாம் எடுத்து உற்றுநோக்க, அதன்கட் ௧௨-ஆஞ் செய்யுளின் ஈற்றில் "இயல்பு" எனக் குற்றியலுகர ஈறு வந்திருக்கக் கண்டாமே யன்றி, அவர் கூறியபடி முற்றியலுகர ஈறு வரக் கண்டிலேம். உண்மை யிவ்வாறாக, அதனை அப் பதிப் புரைகாரர் புரட்டிக் கூறியது என்னையோ! ஆனால், ௫௩-ஆஞ் செய்யுள் "கரவு" எனவும், ௬௭-ஆஞ் செய்யுள் "உணர்வு" எனவும் அவர் உரைத்தவாறே முற்றியலுகர ஈறுகளாலே தாம் முடிந்திருக்கின்றன. இங்ஙனம் வெண்பா யாப்புக்கள் முற்றியலுகர வீற்றான் முடிதல், 'இன்னிலை,' 'முதற்றிருவந்தாதி' என்னும் இவ் விருநூல்களிலன்றி, வேறு வெண்பா நூல்களிற் காணப்படாதாயினன்றே, அவற்றின் ஆசிரியரை ஒருவராகக் கூறுதல் ஒருவாற்றாற் கூடினுங் கூடாநிற்கும்? மற்று, வெண்பா யாப்புக்கள் ஒரோவழி முற்றியலுகர ஈற்றான் முடிதலும் உண்டென்பது,

"கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு." (௧௧௭)

எனத் திருக்குறளிலும்,

"திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடிற் பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்

தண்ணார மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு."

என முத்தொள்ளாயிரத்திலும் அவ்வாறு முடிந்த செய்யுட்களால் நன்கறியக் கிடத்தலின், அதனை இன்னிலை, முதற்றிருவந்தாதி என்னும் இரண்டுக்குமே வரைசெய்தலும், அங்ஙனம் வரைசெய்த பிழைபாட்டால் வெவ்வேறு காலத்தினரான இன்னிலைப் பொய்கையாரையும் பொய்கையாழ்வாரையும் ஒருவ ரென்றலும் போலி யாராய்ச்சியாமென மறுக்க.

இனி, அப் பதிப்புரைகாரர் 'இன்னிலைச்' செய்யுட்கள் சிலவற்றிற்கும், 'முதற்றிருவந்தாதிச்' செய்யுட்கள் சிலவற்றிற்குங் காட்டிய பொருளொற்றுமையும் பொருந்தாதாயிருத்தலின், அப் பிழைபாட்டினையும் ஈண்டெடுத்துக் காட்டுதும். 'இன்னிலை'யின் நாற்பதாஞ் செய்யுளாகிய,

"முப்பாலை வீழ்வார் விலங்கார் செறும்பாலை
முப்பான் மயக்கேழ் பிறப்பாகி—எப்பாலும்
மெய்ப்பொருள் தேறார் வெளியோரார் யாண்டைக்கும்
பொய்ப்பாலை யுய்வாயாப் போந்து."

என்பது 'காமவெகுளி மயக்கங்கட்கு இடனாகிய பொருள்களை விரும்புவோர் துன்புறுத்தும் பிறவியை ஒழியாராய், முக்குற்றங்களது மயக்கத்துக்கு ஏதுவாகிய எழுபிறப்பிற் பட்டுப், பொய்ப் பகுதியாம் பொருள்களேதாம் எவ்விடத்தும் பிழைத்தற்கு வாயிலாகும் எனக் கருதி வந்து, எவ்விடத்தும் மெய்ப்பொருளைத் தெளியாராகலின் அவ்வியல்பினர் அருள்வெளியை உணரார்' எனப்பொருள் படுகின்றது. இனி அவர்காட்டிய முதற்றிருவந்தாதி ஏழாஞ் செய்யுளாகிய,

"திசையுந் திசையுறு தெய்வமுந் தெய்வத்
திசையுங் கருமங்க ளெல்லாம்—அசைவில்சீர்க்
கண்ணன் நெடுமால் கடல்கடைந்த காரோத
வண்ணன் படைத்த மயக்கு."

என்பதோ "திசைகளும் திசைகளின் நிற்குந் தெய்வங்களும், அத் தெய்வங்களால் இசைவிக்கப்படுஞ் செயல்களும் எல்லாம் மாயோன் தனது மாயையின் வன்மையால் ஆக்கிய மயக்கப் பொருள்கள் ஆகும்' எனப் பொருள் தருகின்றது. முன்னையது, உலகத்துப் பொருள்களிற் பற்றுவைத்தவர்க்குப் பிறவி யொழியாமையும் முதற் பொருளை யுணரும் மெய்யுணர்வு வாயாமையும் அறிவுறுத்தாநிற்கப், பின்னையதோ காட்சிப் புலனாவன வெல்லாம் மாயோன் படைத்த மாயை என்று மட்டும் உணர்த்தாநிற்கின்றது. இருவேறு புலவராற் செய்யப்பட்டுப் பொருளொற்றுமை சிறிதுமில்லாத இவ் விருவேறு செய்யுட்களின் றன்மை கல்வியறிவு சிறிதுடையார்க்கும் இனிது விளங்கிக் கிடப்பவும், இவ்விரண்டும் ஒருவராற் செய்யப்பட்டுப் பொருளொற்றுமை யுடையவாயின என்ற 'இன்னிலைப்' பதிப்புரைகாரரது உரை பெரியதொரு மயக்குரையேயாம்; 'மயக்கு' என்னுஞ்சொற் காணக்கிடக்குந் தமிழ்ச் செய்யுட்களை யெல்லாம் அவர் 'பொய்கையார் செய்யுட்கள்' எனக் கூறத் துணிவர்போலும்! இனி, 'இன்னிலை'யின் பத்தாஞ் செய்யுளாகிய,

> "இடிப்பதென் றெண்ணி இறைவனைக் காயார்
> முடிப்பர் உயிரெனினும் முன்னோர்—கடிப்பவே
> கன்றமர்ந்து தீம்பால் கலுழுமே நீண்மோத்தை
> ஒன்ற உணராதார் ஊங்கு."

என்பது 'இடியிடித்து அச்சுறுத்துதல் பற்றித் தலைசிறந்த மழைமுகிலை எவரும் வெகுளார்; தீயோர் தமது உயிர்க்கு இறுதி பயப்பரெனினும் நல்லோர் அவர்க்குத் தீங்குசெய்ய நினையார், கன்று தனது முலையைக் கடித்தவிடத்தும் ஆ அதற்கு மனம் உவந்து தித்திப்பான பாலைச் சுரக்கும், அதுபோலத் தமக்கு இன்னா செய்தார்க்குந் தாம் இனியவே செய்தலைப் பொருந்த உணராதாரினும் ஆட்டுக் கிடாய்களே சிறந்தன' எனப் பொருள்படும். இதனோடு பொருள் ஒற்றுமையுடையதென அவர் காட்டிய முதற் றிருவந்தாதியின் முப்பதாஞ் செய்யுளாகிய,

"தெளிதாக உள்ளத்தைச் செந்நிறீஇ ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை—எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்டுழாயான் அடிக்கே
போய்நாடிக் கொள்ளும் புரிந்து."

என்பதோ 'தெள்ளிதாகத் தமது மனத்தைச் செவ்விதின் நிறுத்தி, மெய்யுணர்வு கொண்டு முப்பொருளியல்பினை எளிதாக நன்குணரவல்லாரது நினைவு, தனது தாயை நாடிச்செல்லுங் கன்றைப்போல் எளிதாகத் திருமாலின் திருவடிகளை விரும்பிப்போய்த் தேடிக்கொள்ளும்' எனப் பொருள் தரும். இவ் விரண்டுள் முன்னையது 'தமக்குத் தீதுசெய்வார்க்குந் தாம் தீது நினையாது நன்மையே செய்யும் நல்லாரது இயல்பினை' உணர்த்தாநிற்கப், பின்னையதோ 'மெய்யுணர்வு வாய்ந்தாரது நினைவு திருமாலின் திருவடிகளை எளிதிற் சென்று தலைக்கூடுமாற்றை' அறிவுறுத்துகின்றது. இவையிரண்டிற்கும் ஏதொரு பொருளொற்றுமையுங் காணப்படாதாகவும், அதனை யுளது போல் மயங்கியுரைத்த அப் பதிப்புரைகாரருரை கொள்ளற்பால தன்றென விடுக்க. கன்றும் ஆவும் அவ் விரு செய்யுட்களினும் உவமையாகக் கூறப்படுதலின், அவ்வுவமையையே அவற்றிற்கு ஓர் ஒற்றுமையாக்கொள்ளுதல் ஆகாதோவெனின்; அவ்வுவமை,

"பல்ஆவுள் உய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை." (க0க)

என நாலடியாரினும் போதரக் காண்டலின், அதனையும் பொய்கையாரே இயற்றினரென்று உரைத்தல் வேண்டும்; மற்று அவ்வாறுரைத்தல் பெரியதொரு தலைதடுமாற்றமாய் முடியுமாகலின், அங்ஙனங் கோடல் ஆகாதென மறுக்க.

மேலும், ஐம்புலன்களை அடக்கி உடற்குவருந் துன்பம் பொறுத்துத் தவம்புரிவார் வீட்டுலகத்திற் செல்வரென்பது அறிவுநூல்கள் எல்லாம் புகலும் ஒரு பொதுவுரையாகும். இப்பொதுவுரை 'இன்னிலை' சஉ-ஆஞ்

செய்யுளிலும், 'முதற்றிருவந்தாதி'யின் ௫௦-ஆஞ் செய்யுளிலுஞ் சிறிது ஒத்துக்காணப்படுதல் கொண்டு அவை யிரண்டனையும் ஒருவரே யியற்றினரென்றல் பெரியதொரு மாறுகோள் உரையாம். இச் செய்யுட்களை நன்கு ஒப்பிட்டுக் காண்பார்க்கு 'இன்னிலைச்' செய்யுட்கள் பொதுப் பட நிற்றலும், 'முதற்றிருவந்தாதிச்' செய்யுட்கள் திருமால் மேலனவாய் நிற்றலும் எளிதுணரக்கிடக்குமாகலின், அந் நூல்களை யியற்றிய ஆசிரியர் இருவரும் வெவ்வேறு காலத்தவரென்பதே தேற்றமாம் என்க.

இனி, "ஒன்றுண்டே" என்னும் 'இன்னிலைச்' செய்யுள் 'உயிர்கள் உண்டு; அவை உடம்பைப் பற்றுக்கோடாகக் கொண்டு வினைகளைச்செய்யும்; மெய்யுணர்வு பிறந்தவழி இருவினைகளை அறுத்து உடற்பற்றுவிட்டு வீடுபேறெய் தும்' எனக் கூறி முடிக்கின்றது. இச் செய்யுட்பொருளை 'இன்னிலைப்' பதிப்புரைகாரர் "விஷ்ணுமதசித்தாந்தம்" என்கின்றார். உலகத்தின்கண் உள்ள அறிவுடையா ரெல் லாருந் தொன்றுதொட்டுப் பொதுப்பட வழங்கிவராநின்ற இக் கோட்பாட்டை அப் பதிப்புரைகாரர் வைணவமதத் திற்கே உரித்தாக்கிய தென்னை? ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகிய திருமந்திரம் என்னுஞ் சைவ சித்தாந்த நூல்,

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி." (௧௫௯)

எனவும்,

"பசுப்பல கோடி பிரமன் முதலாப்
பசுக்களைக் கட்டிய பாசம்மூன் றுண்டு
பசுத்தன்மை நீக்கிஅப் பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே." (௨௩௩௭)

எனவும் அக் கோட்பாட்டை நன்கெடுத்து மொழிதலின், அது பழைய தமிழர் கோட்பாடாகிய 'சைவசித்தாந்தமே' யாதல் பெறுதும். திருமந்திரத்தைப்போல், அத்துணைப் பழமையாகிய வைணவ சித்தாந்தநூல் ஏதேனும் உளதா?

ஒன்றும் இல்லையே; அங்ஙனமிருக்க, அக் கோட்பாடு வைணவமதத்திற்கே உரியதெனத் தமக்குத் தோன்றிய வாறு பேசுதல் அப் பதிப்புரைகாரர்க்கு ஏதமாமென அறிக. இவ்வாற்றால் 'இன்னிலை' இயற்றிய பொய்கை யாரை வைணவரென்றலும் ஆகாதென உணர்ந்து கொள்க.

அற்றேல், 'இன்னிலை' பாடிய பொய்கையார் அதன் ஒன்று, மூன்று, இருபத்திரண்டாஞ் செய்யுட்களில் மாயோனை உயர்த்துச் சொல்லிய தென்னையெனின்; முதற்றிருவந்தாதி பாடிய பொய்கையாழ்வாரைப்போல், 'இன்னிலை' பாடிய பொய்கையாருந் திருமால் திருவடிக்கண் மெய்யன்புடையவரேயாவர்; அதுகொண்டு அவ் விருவரை யும் ஒருவரெனக் கூறுதல் ஆகாது. அவ்விருவரும் வேறு வேருவர் என்பதனை நாட்டுதற்குரிய சிறந்த ஏதுக்கள் பலவும் மேலெடுத்துக்காட்டினமாதலால், அவர்தம் பெய ரொற்றுமையும் அவர் தமக்குள்ள திருமால் திருவடி நேயமும் ஆகிய சில பொது ஏதுக்கள்கொண்டு அவ் விரு வரையும் ஒருவராகத் துணிதல் பழுதுடைத்தாம். மேலும், 'இன்னிலைச்' செய்யுட்களிலுள்ள சொல்லமைப்புச் சொற் றொடரமைப்புகள் பொருட்டெளிவின்றிக் கருகலாய் நிற்ற லும், 'முதற்றிருவந்தாதி'யின் அவ் வமைப்புகள் பொருட் டெளிவுடையவாய் விளங்கி நிற்றலும், அவ் விரண்டு நூல் களிலுமிருந்து மேலெடுத்துக்காட்டிய சிற்சில செய்யுட்களை ஒப்பிட்டுக் காண்பார்க்கும் நன்கு புலனுமாகலின், அங்ஙனந் தன்மையால் மாறுபட்ட அவ்விருவேறு நூல்களையும் இயற்றினோர் இருவேறு பொய்கையாரே யாவரென்க. மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் முதலான பெயர் களைப் பூண்டோர் பற்பலர் இஞ்ஞான்றுங் காணப்படுதல் போலவே, ஒரே பெயர் பூண்டோர் பற்பலர் பற்பலகாலங் களில் முன்னாளிலும் இருந்தனரென்பதூஉம் பெரிதும் நினைவிற் பதிக்கற்பாலதொன்றாம். நக்கீரர், கபிலர், ஒளவையார் என்னும் பெயர்களைப் பூண்ட பற்பலர் பற்பல காலங்களில் இருந்தனர். இவ்வுண்மையை நினைந்து

பாராமல் வரலாற்று நூல்கள் எழுதுவோர் முன்னொடுபின் முரணான பலசெய்திகளைத் தம்முடைய நூல்களுள் எழுதிச் சேர்த்தலால் அவர் விளைத்தனவும் விளைக்கின்றனவும் ஆகிய குழப்பங்கள் மிரம்பப் பல. இதுகாறும் விளக்கிய மூவேறு பொய்கையாரே யன்றி, யாப்பருங்கலவிருத்தி யுரையிலும் பாட்டியன் மரபிலும் எடுத்துக்காட்டப்படும் மற்றொரு பொய்கையாரும் உளர்; இங்ஙனமே, 'பேயார்,' 'பூதத்தார்' எனப் பெயர்பூண்ட முன்னோர் பிறருமுளரென்பது அவ் வுரையுட் பெறப்படுதல் காண்க.

இனி, "விருந்தே தானும்" என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திர உரையில் உரைகாரர் பேராசிரியர் "விருந்து தானும் புதிதாகத் தொகுக்கப்படுந் தொடர் நிலைமேற்று. அது 'முத்தொள்ளாயிர'மும் பொய்கையார் முதலாயினோர் செய்த 'அந்தாதிச்' செய்யுளும் என வுணர்க" என்றெழுதியதே கொண்டு அவ்வுரைகாரர் பொய்கையாழ்வாரைக் கடைச்சங்க காலத்தவராகக் கொண்டனரென ஒருசாரார் கூறுநிற்பர். ஆசிரியர் தொல் காப்பியனார் தங்காலத்து வழங்காமற் பிற்காலத்திற் புதிது புகும் நூல்வகைகள் செய்யுள்வகைகள் உளவாயின் அவை தம்மையும் விலக்காது தழுவிக்கொள்க என்றற்கு இச் சூத்திரம் அருளிச்செய்தார்; ஒரு செய்யுளின் ஈறு அதனை யடுத்த செய்யுட்கு முதலாக வரத் தொடுத்துப் பாடும் 'அந்தாதிச் செய்யுள்' தொல்காப்பியனார் காலந்தொட்டுக் கடைச்சங்கத் திறுதியாக வந்த சான்றோர் எவரானும் பாடப்படாமையின், அவ்வந்தாதிச் செய்யுள் கடைச்சங்க காலத்துக்குப்பின் வந்த சான்றோரால் புதிது செய்யப் பட்டனவாமென்பது புலப்பட உரைகாரர் பேராசிரியர் "புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்ற தென்னையெனின், புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது; அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த 'அந்தாதிச்' செய்யுளும்" என உரை கூறினார்; இவ் வுரைப்பொருளாற் 'பொய்கையாழ்வார் இயற்றிய முதற்றிருவந்தாதி' கடைச்

சங்கத்தார் காலத்திற்குப்பின் புதிதாகச் செய்யப்பட்ட தொன் றென்பதே வெள்ளிடை மலைபோல் விளங்கிக் கிடப்பவும், அவரது கருத்துக்கு முற்றும் மாறுகப், பொய்கையாழ்வாரை அவர் கடைச்சங்ககாலத்தவராகக் கொண்டாரெனத் தலைதடுமாறி யுரைத்தாருரை நகையாடி விடுக்கற்பாலதாமன்றி மற்றென்னை? பேராசிரியர்க்குப்பின் தொல்காப்பியத்திற்கு உரைகண்ட நச்சினார்க்கினியரும் "பின்னுள்ளார் பாட்டியன்மரபிற் கூறிய கலம்பகச் செய்யுள்"[1] எனவும், "இக் காலத்தார் கூறும் அந்தாதிச் சொற்றொடர்"[2] எனவும் விளங்கக் கூறுதலின், அவரும் பொய்கையாழ்வார் பாடிய முதற்றிருவந்தாதியைப் பிற் காலத்ததெனவே கொண்டாரென்பது புலனும். தொல் காப்பியத்திற்கு முதலில் உரைகண்டவரான இளம்பூரணர், பொய்கையார் திருவந்தாதியைப் பேராசிரியர் குறித்தாற் போற்றும் சிறிதுங் குறித்திலாமையின், அவர் பொய்கை யாழ்வார்க்கு முற்பட்டவராவ ரென்பதூஉம் அறியற் பாற்று. பொய்கையாழ்வார் கடைச்சங்க காலத்தவராயின், அச் சங்ககாலத்திற்குப் பின்னெழுந்த 'சிலப்பதிகாரம்,' 'மணிமேகலை' என்பவற்றையும், அவற்றிற்கும் பிற்பட்ட 'புறப்பொருள் வெண்பாமாலை'யையுந் தம்முரையுள் எடுத் தாண்ட இளம்பூரணர் பொய்கையாழ்வாரது முதற்றிரு வந்தாதியையும் எடுத்தாளாது இரார். ஆகவே, பொய்கை யாழ்வாரது அந்தாதிச் செய்யுளை "விருந்தே தானும்" என் னுஞ் சூத்திரவுரையிற் குறிப்பிட்ட பேராசிரியர், அவர்க் குப்பின் கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றுண்டில் இருந்தோராதலும், அதனை அச் சூத்திரவுரையிற் குறிப் பிடாத இளம்பூரணர் கி. பி. ஆறு அல்லது ஏழாம் நூற் றுண்டிலிருந்தோராதலும் ஈண்டே யறியற்பாலனவாம். அற்றுயின், யாப்பருங்கலக்காரிகை உரைப்பகுதிகள் சில, "அடிநிமிர் கிளவி ஈரா றுகும்" என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திர இளம்பூரணவுரையெனப் பதிப்பிடப்

---

1. தொல்காப்பியம், செய்யுளியல், ௨௩௬, நச்சினார்க்கினியம்.
2. தொல்காப்பியம், செய்யுளியல், ௨௪0, நச்சினார்க்கினியம்.

பட்டதனுட் காணப்படுதல் என்னையெனின்; இளம்பூரணர் தொல்காப்பிய எழுத்துச் சொற்பொருள் என்னும் மூன்று ஓத்துக்களுக்குந் தாம் எழுதிய உரையுள் வேறு யாண்டுஞ் 'சூளாமணி,' 'சிந்தாமணிச்' செய்யுட்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுதலைக் காணேமாகலிற், செய்யுளியலில் இரண்டோரிடத்து மட்டும் அவர் அவற்றின் செய்யுட்களை எடுத்துக்காட்டினு ரென்றல் பெரிதும் ஐயுறற்பாலதொன் றும். மேலுந், தொல்காப்பியனாராற், கூறப்படாமற், பின் வந்த 'யாப்பருங்கலக்காரிகை'க்காரரால் வகுத்துரைக்கப் பட்ட 'விருத்தப்பா' வகைகள் இவ் வுரையுள் ஆண்டிருந்த வாறே வருவித்து உரைக்கப்படுதலானும, இளம்பூரணருக் குப் பின்வந்த பேராசிரியர் அவ் விருத்தப்பாவகைகளைத் தமதுரையுள் அவ்வாறு வருவித்துரைப்பக் காணுமை யானும், அவ் வுரைப்பகுதிகள் இளம்பூரணர் வரைந்தன ஆகாவெனவும், அவை யாப்பருங்கலக்காரிகை யுரையி லிருந்து பிறரால் எடுத்துச் சேர்க்கப்பட்டனவா மெனவும், இவ் வேற்றுமையுணராது அவற்றை இளம்பூரணருரை யெனப் பதிப்பித்திட்டது அதனைப் பதிப்பிட்டவரது தவறுமெனவும் பகுந்தறிந்து கொள்க. கொள்ளவே, தொல்காப்பிய முதலுரைகாரரான இளம்பூரணர் 'சூளா மணி,' 'சிந்தாமணி' நூல்களின் காலத்துக்குப் பிற்பட்டவ ரல்ல ரென்பதூஉம், அவர் அவற்றிற்கு முற்பட்ட கி. பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றுண்டில் இருந்தோராவரென் பதூஉங் கடைப்பிடித்துணரற்பாலவாம். எனவே, இளம் பூரணர் காலத்தில் இல்லாததூஉம், பேராசிரியர் காலத் துள்ளதாய் அவராற் பிற்காலத்ததென்று கொள்ளப் பட்டதூஉமான பொய்கையாழ்வாரது முதற்றிருவந்தாதி கி. பி. எட்டாம் நூற்றுண்டிற்கு முற்பட்டதாதல் செல்லாமையுந் தானே விளங்கும் என்பது.

அற்றேற், 'கைலைபாதி காளத்திபாதி அந்தாதி' என்பதொரு நூல் நக்கீரனாரால் அருளிச்செய்யப்பட்ட தென வழங்கக் காண்டுமாகலின், அந்தாதிச்செய்யுள் பிற்காலத்ததென்றல் யாங்ஙனமெனின்; 'நக்கீரனார்'

என்னும் பெயர்கொண்ட புலவோர் பலர் பற்பலகாலத் திருந்தனரென முன்னரே கூறினமாகலிற், 'கைலைபாதி காளத்திபாதி அந்தாதி' பாடிய நக்கீரர் கடைச்சங்க காலத்தவர் அல்லரென ஓர்க. பதினோராந்திருமுறையில் 'திருமுருகாற்றுப்படை' நீங்கலாகக் 'கைலைபாதி காளத்தி பாதி அந்தாதி' முதலிய நூல்களை இயற்றிய நக்கீரரும், அங்ஙனமே மூத்த நாயனார், கண்ணப்பதேவர், சிவபிரான் முதலாயினார்மேல் நூல்களியற்றிய கபிலர், பரணர், கல்லாடர், காரைக்காற் பேயம்மையாருமெல்லாங் கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கும் ஆறும் நூற்றாண்டிற்கும் இடையிலிருந்தோ ராவர். "கொங்குதேர் வாழ்க்கை" என்னுஞ் செய்யுளுக்குக் குற்றங்கூறிய நக்கீரர், கடைச் சங்ககாலத்திற்குப் பின் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் மதுரையில் இருந்ததாகிய மற்றையொரு தமிழ்ச்சங்கத்திற் சமண்புலவர் பலரோடிருந்து தமிழாராய்ந்தவர் ஆவர். இவ் வரலாற்றினைப் பின்னே விளக்கிக்காட்டுதும். இவ் வாற்றால் அந்தாதிச் செய்யுள் கி. பி. இரண்டாம் நூற் ருண்டிற்கு முற்பட்டது அன்றென்பதூஉந் தெளியக் கிடந்தவாறுணர்க.

அற்றாயின், பொய்கையாழ்வார்க்கு முன்னிருந்த நக்கீரரது 'கைலைபாதி காளத்திபாதி யந்தாதி,' பேயம்மை யாரது 'அற்புதத் திருவந்தாதி' முதலியவற்றை எடுத் துக்காட்டாது, அவர்க்கெல்லாம் பின்னர் இருந்த பொய்கையாழ்வாரது முதற்றிருவந்தாதியை மட்டும் பேராசிரியர் தமதுரையுள் எடுத்துக்காட்டியதென்னை யெனின்; பேராசிரியர் வைணவமதம் பெரிதுங் கிளர்ச்சி பெற்றுநின்ற கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற் ருண்டில் இருந்தவராகலின், அக் காலத்தில் எங்கும் மிக்கு வழங்கிய பொய்கையாழ்வாரது முதற்றிருவந்தாதியைப் பிற்காலத்தவர் புதிது ஆக்கிய அந்தாதிச் செய்யுள் முதலியவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் குறித்திட்டா ரென்க. என்றிதுகாறும் ஆராய்ந்துகாட்டியதுகொண்டு, 'இன்னிலை' இயற்றிய பொய்கையார் கி. பி. இரண்டாம்

நூற்றாண்டிலும், 'முதற்றிருவந்தாதி' பாடிய பொய்கை யாழ்வார் கி. பி. எட்டாம் நூற்றாண்டிலும் இருந்தோ ராவரென்பது முடிக்கப்பட்டமை காண்க.

இனிக், 'களவழி' பாடிய பொய்கையாரோ, 'இன்னிலை' பாடிய பொய்கையார்க்கும் முன்னே கி பி. முதல் நூற் றாண்டிலிருந்தோராவர். அஃது யாங்ஙனமெனின், அதனை யுஞ் சிறிது விளக்கிக் காட்டுதும்: இப் பொய்கையார் 'சேரமான் கோக்கோதை மார்பன்' காலத்தவரென்பது அவர் பாடிய "கோதைமார்பிற் கோதையானும்" என் னும் புறப்பாட்டால் (சஅ) நன்கு விளங்கும். பழையன் மாறன் என்போன் "மாடமலி மறுகிற் கூடல்" நகரிற் கிள்ளிவளவனைப் போரிற் றொலைத்தமை கண்டு, இக் கோக்கோதைமார்பன் பெரிதும் உவந்த வரலாற்றினை நக்கீரனார் அகநானூற்றில் (ங௨சசு) எடுத்துப் பாடியிருக்கின் றனர். இன்னும், இவர் 'பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனை' "ஏற்றுவலன் உயரிய" என்னும் புறப்பாட்டில் (ருசு) முன்னிலைப் படுத்துப் பாடி யிருத்தல்கொண்டு அவ் வரசனும் இவரும் ஒரு காலத்தின ரென்பதுந் துணியப்படும். இவ்வரசனையே இடைக்காடனார் என்னும் நல்லிசைப்புலவரும் "ஆனுவீகை" என்னும் புறப்பாட்டில் (சஉ) முன்னிலைப்படுத்துப் பாடியிருத்தலால் அவரும் இப் பாண்டியன் காலத்தவரென்பது புலப்படும். இவ் விடைக்காடனாருங் கபிலருந் தோழர் என்பது "பின்ன மில் கபிலன் தோழன் பெயரிடைக் காடனென்போன்" (நம்பியார் திருவிளையாடல், உ௦, க) என்பதனுல். அறியப் படும். இவ்வாற்றால் நக்கீரனாரும் இடைக்காடனாரும் ஒரு காலத்தவரென்பது பெறப்படுதலானும், 'அகநானூற்'றில் (எஅ) நக்கீரனார் 'கபிலரைப்' புகழ்ந்து பாடியிருத்தலோடு அதன் கசக-ஆஞ் செய்யுளிற் 'சோழன் கரிகாற்பெருவளத் தான்'றன் இளமைக் காலத்துச் செய்தியைக் கூறுதலா னும் கபிலர், இடைக்காடனார், நக்கீரனார், 'களவழி' பாடிய பொய்கையார் என்னும் இந் நல்லிசைப் புலவர்களெல் லாருஞ் சிறிதேறக்குறைய ஒரு காலத்தினரென்பது

பெறப்படும். அற்றாயினுங், கபிலர் 'சோழன் கரிகாற் பெருவளத்தான்' காலத்தில் இருந்திலரென்பதனை மேலே ௪௬௩-ஆம் பக்கத்தில் விளக்கிக்காட்டினமாதலானும், நக்கீரனார் அச் சோழவேந்தனது இளமைக்காலத்தில் இருந்தமை புலனாதலானும் கபிலர் ஆண்டின் மிக முதியரா யிருந்தபொழுது, நக்கீரனாரும் பொய்கையாரும் நடுத்தர ஆண்டினராயிருந்து, நக்கீரனார் சோழன் கரிகாற்பெரு வளத்தான் காலம்வரையிலும், பொய்கையார் அவனுக்குப் பின்வந்த சோழன் செங்கணான் காலம் வரையிலும் இருந் தாராகற்பாலர். எனவே, 'களவழி' பாடிய பொய்கையார் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பாதியிலிருந்தவராக ௪௬௨-ஆம் பக்கத்திற் காட்டப்பட்ட கபிலரது முதுமைக் காலந்தொட்டு, அவர்க்குப்பின் அந் நூற்றாண்டின் இறுதி வரையிலிருந்தமை கண்டுகொள்க.

இனி, ஆழ்வார்கள் எல்லாரும் தேவார திருவாசகங் களை நன்கு பயின்றவர்களென்பதற்குச் சான்றாக, அப்பர் ஞானசம்பந்தர் அருளிச்செய்த தேவாரப்பாக்களிலுள்ள "பொன்திகழ் மேனியன்," "புரிசடைப் புண்ணியன்" முதலான சில சொற்றொடர்களைப் பொய்கையாழ்வார் எடுத்தாண்டமையினையும், தொண்டரடிப் பொடியாழ்வார் 'திருவாசகத்'தின்கண் உள்ள திருப்பள்ளியெழுச்சி யையும், திருநாவுக்கரசு நாயனாரின் திருநேரிசையையும் பயின்று அவற்றோடொப்பப் பாடிய வாற்றினையும், சூடிக் கொடுத்த நாச்சியார் திருவாசகத்தின் 'குயிற்பத்தைப்' பயின்று. அதனோடொப்பத் தாம் ஒன்று பாடிய வகை யினையும் முறையே ௭௬௬, ௭௫௫-௭௫௮, ௫௭௫-ஆம் பக்கங்களில் விளக்கிக் காட்டினோம். இன்னுந் திருஞான சம்பந்தப் பெருமானும் சுந்தரமூர்த்தி நாயனாருந் தாம் அருளிச்செய்த திருப்பதிகங்களின் இறுதிச் செய்யுட்க டோறும் தம் பெயருந் தம் ஊர்ப் பெயருங் கூறித், தாம் சிவபிரான்மேற் பாடிய அப் பதிகங்களை அன்புடன் ஓது வார் இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றுச் சிவபிரான் திருவடியை அடைகுவர் எனப் பயன் உரைத்து வாழ்த்து

மாறு போலவே, பெரியாழ்வாரும், அவர்தம் மகள் நாச்சியாரும், குலசேகரப் பெருமாளும், மதுரகவியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வாருந் தாம்பாடிய பதிகங்களின் இறுதிப்பாட்டுக்கடோறுந் தம் பெயருந் தம் ஊர்ப் பெயர் முதலியனவும் உரைத்துத் தம்முடைய பதிகங்களைப் பயில்வாரும் அங்ஙனமே இம்மை மறுமைப் பயன்களை யெய்தித் திருமால் திருவடியைச் சேர்குவர் என வாழ்த்துதல் காண்க. அற்றன்று, இவ் வாழ்வார்கள் பாடிய அம் முறையைப் பார்த்தே சைவசமயாசிரியர் அங்ஙனம் வாழ்த்துரை கூறினார் என்னுமோவெனின்; என்னும், என்னை? ஆழ்வார்களுள் முதலாழ்வார் மூவரும் மாணிக்கவாசகர், அப்பர், திருஞானசம்பந்தர்க்குப் பின்னும், ஏனையாழ்வார்கள் சுந்தரர்க்குப் பின்னும் இருந்தோராதலை மேலே பலவாற்றானும் ஆராய்ந்து விளக்கி நிறுவினமாகலின் என்பது. இனிச், சைவசமயாசிரியரும் வைணவ ஆழ்வாரும் ஒருவர் மற்றொருவர் பாட்டுக்களைப் பாராமலே அங்ஙனம் பாடினாரெனல் ஆகாதோவெனின்; அதுவும் ஆகாது; ஒன்றற்கொன்று பெரிது விலகிக் கிடக்கும் நாடுகளில் ஒருவரையொருவர் அறியக்கூடாவாறு அவர் தனித்தனியே இருந்தனராயின், அவர் ஒருவரையொருவர் பின்பற்றாது பாடினாரெனலாம். வைணவ ஆழ்வார்கள் ஐரோப்பா தேயத்திலும் சைவ ஆசிரியர் தமிழ் நாட்டிலும் இருந்து ஒருவரையொருவர் அறியக்கூடாத நிலைமையினராய் வைகி அப் பதிகங்களை அருளிச்செய்தனரென்று கொள்வார் எவரும் இன்மையினானும், அவரெல்லாரும் ஒன்றற்கொன்று மிக அணித்தாயுள்ள இத் தென்றமிழ்நாட்டின் ஊர்களுள்ளேயே வைகியிருந்து இந் நாட்டவர் வழங்கிய செந்தமிழ் மொழியிலேயே தத்தம் பதிகங்களை அருளிச் செய்தாரென்பது எவரும் நன்குணர்ந்ததே யாகலானும், அவருட் பிற்காலத் திருந்தவர் முற்காலத்திருந்தார் செய்யுண் முறைகளைப் பாராமலும் பின்பற்றாமலும் பாடினாரெனல் உலகியலறிவு வாய்க்கப்பெறுதார் கூறும் பொருத்தமில் உரையேயாம். மேலுஞ், சிவபிரான் வழிபாடும், திருமால் வழிபாடும் இத் தென்றமிழ்

நாடெங்கும் பண்டுதொட்டு நடைபெற்றுத் தமிழ்மக்கட்குப் பொதுவாய்ப் பெரிது பரவியிருத்தலின், அவ் விருவகை வழிபாடுகளையும் வலியுறுத்தி அக் கடவுளர்மேற் பாடிய சான்றோர் பாட்டுகள் இந் நாடெங்குமுள்ளாராற் பாராட்டப் பட்டு எவர்க்குந் தெரிந்தனவாய்ப் பரவி வழங்குவனவே யல்லாமல், எவர்க்குந் தெரியாமல் அரிதுணர் மறைபொருளாய் ஒரு மூலையில் இருப்பன அல்ல. ஆகவே, சைவசமய ஆசிரியர்கள் காலத்தால் முற்பட்டவராகலின் அவர்கள் அருளிச்செய்த தேவார திருவாசகப் பாடல்கள் இத் தமிழ் நாடெங்கும் பரம்பி வழங்கினவாய் எவர்க்குந் தெரிந்தனவாயே யிருப்பவாகலான், பின் வந்த ஆழ்வார்கள் அவற்றை நன்கு பயின்று, அவற்றைப் போல் தாமுந் திருமால்மேற் பாடவிழைந்து அவ்வாறே செய்தது இயற்கையேயாம். ஆதலால், அவ் விருபாலாரும் ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே பாடினாரென்றலும் ஒருசிறிதும் ஒவ்வாதெனவிடுக்க.

இனித், திருமங்கையாழ்வார் தேவார திருவாசகங்களை நன்கு பயின்றவரென்பதற்குச் சில குறிப்புகள் ஈண்டுக் காட்டுகின்றாம். திருவாசகத்தில்,

"நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்."
(திருத்தோணோக்கம், ௩)

எனவும், அப்பர் தேவாரத்தில்,

"இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய்எரியுங் காற்று மாகி." (பொது)

எனவும் வருமாறுபோற், சம்பந்தர் சுந்தரர் தேவாரங்களிலும் வரும் பாடல்கள் பலப்பல. இவற்றோடொப்பவே திருமங்கை யாழ்வார்,

"பாரும் நீர்எரி காற்றினோ டாகாசமும்
இவையாயி னான்." (௧, அ, எ)

எனப் பாடினமை காண்க.

திருவாசகத்தில்,

"ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றும்இலார்க்கு ஆயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ."
(திருத்தெள்ளேணம், க)

எனவும், தேவாரத்திற்,

"பிறப்பில் பெருமானை." (கோயில், உ)

எனவும் அடுத்தடுத்துவருஞ் சொற்றொடர்களைத் திருமங்கை யாழ்வார்,

"பேரும் ஆயிரம் பேசநின்ற பிறப்பிலி." (க, அ, எ)

எனத் தஞ்செய்யுளுள் எடுத்தாளுதல் காண்க. 'பிறப்பிலி' என்னும் பெயர் சிவபெருமான் ஒருவற்கே பொருந்துவதன்றிப், பத்துப் பிறவிகளுடையரென வைணவரே ஒப்புக்கொண்ட திருமாலுக்குப் பொருந்தாதாகவும், சைவசமய ஆசிரியர் கூறுமாறுபோல் தாமுந் தங்கடவுளுக்குக் கூற விழைந்து திருமங்கையாழ்வார் 'பிறப்பிலி' எனும் அப் பெயரைத் திருமாலுக்கும் ஏற்றிப் பாடினர். வைணவ ஆசிரியராகிய வில்லிபுத்தூராழ்வார்,

"பிறப்பிலி இறப்பிலி பிறங்க லரசன்றன்
மகளார் நாதன்." (மாபாரதம்)

என அச் சொற்றொடரைச் சிவபெருமாற்கே உரித்தாக்கிக் கூறுதலும் உற்றுநோக்கற் பாற்று.

இன்னும், அப்பர்,

"திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்." (பொது)

என்றருளிச் செய்தாற் போலவே, திருமங்கையார்,

"திருநாமம் எட்டெழுத்துஞ் சொல்லிநின்று." (க, அ, கூ)

என்று ஓதுதல் காண்க.

இனிச், சுந்தரமூர்த்திகள் "பொன்னார் மேனியனே" என்னும் பதிகத்தில்,

"எம்மான் எம்மனையென் றனக்கெட்டனைச் சார்வாகார்
இம்மா யப்பிறவி பிறந்தேயிறந் தெய்த்தொழிந்தேன்
மைம்மாம் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அம்மான் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே."

என்றருளிச் செய்த செய்யுளின் இசையையும் பொருளையுந் தழுவித் திருமங்கையார்,

"தாயே தந்தையென்றுந்
தாரமேகிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன்
உன்னைக்காண்பதோர் ஆசையினால்
வேயேய் பூம்பொழில்சூழ்
விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன்
நல்கியாளென்னைக் கொண்டருளே." (க, கூ, க)

எனப் பாடினமை காண்க.

இன்னும் தேவார திருவாசகங்களுள் அடுத்தடுத்துக் காணப்படும் "பந்தணைவிரலி" (அப்பர், திருவாவடு துறை, க0; திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி, அ) என்னுஞ் சொற்றொடரைத் திருமங்கையார்,

"பந்தணை மெல்விரலாள் பாவைதன் காரணத்தால்." (உ,உ,ச)

என எடுத்தாண்டமை காண்க.

இனி, அப்பர் "குரவைகோத்தவனும்" (பொது) என்றும், "குடமாடி" (திருக்கோடிகா) என்றுங் கண்ணனுக்கு வழங்கிய பெயர்களைத், திருமங்கையார்,

"குரவை முன்னே கோத்தானைக்
குடமாடு கூத்தன் றன்னை." (உ, ரு, ச)

என்று தமது செய்யுளில் எடுத்தாண்டமை காண்க.

"மீளாஅடிமை உமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தான் மிகவாடி

ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.''

என்றருளியபடியே திருமங்கையாரும்,

"ஆசை வழுவா தேத்தும் எமக்கிங் கிழுக்காய்த் தடியோர்க்குத்
தேசம் அறிய உமக்கே யாளாய்த் திரிகின் றேமுக்குக்
காசின் ஒளியில் திகழும் வண்ணங் காட்டீர் எம்பெருமான்
வாசி வல்லீர் இந்த ளூரீர் வாழ்ந்து போமீரே.'' (௪, ௧, ௪)

என்று பாடியிருத்தல் கண்டுகொள்க. இனி,

"அளவறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு
அடியவர்க்கு எளியான்.'' (திருச்சதகம், ௩௫)

என்று திருவாசகத்தும், தேவாரத்தும் அடுத்தடுத்து வருதலைப்பார்த்துத், திருமங்கையாழ்வாரும்,

"வானவர் தமக்குச் சேயனாய் அடியேற்
கணியனாய் வந்து.'' (௫, ௭, ௧)

என்று ஓதுதல் காண்க.

இன்னுஞ் சுந்தரமூர்த்தி நாயனார்,

"அந்த ணாளன் உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்றமர் நலியின்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே.''
(திருப்புன்கூர்)

என்றருளிச்செய்த செய்யுள் ஓசையினையுஞ் சொற்பொருள் களையுந் தழுவித் திருமங்கையாழ்வார்,

"நஞ்சு சேர்வதோர் வெஞ்சின அரவம்
வெருவி வந்துநின் சரணெனச் சரணாய்
நெஞ்சிற் கொண்டுநின் அஞ்சிறைப் பறவைக்
கடைக்க லங்கொடுத் தருள்செய்த தறிந்து

வெஞ்சொ லாளர்கள் நமன்றமர் கடியர்
  கொடிய செய்வன உளஅதற் கடியேன்
அஞ்சி வந்துநின் அடியிணை அடைந்தேன்
  அணிபொ ழிற்றிரு அரங்கத்தம் மானே." (ரு, அ, ச)

எனப் பாடினமை காண்க.

இனித், திருநாவுக்கரசு நாயனார்,

"பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ இகழவேண்டா
முத்தனே முதல்வாதில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாஉன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே."

(கோயில்) என்றருளிச்செய்த திருநேரிசைப் பதிகத்தின் இசையையுஞ் சொல்நடையையும் ஒப்பவே திருமங்கையாரும்,

"கையிலங் காழிசங்கன் கருமுகில் திருநிறத்தன்
பொய்யிலன் மெய்யன்தன் தாள் அடைவரேல் அடிமையாக்குஞ்
செய்யலர் கமலம்ஓங்கு செறிபொழில் தென்திருப்பேர்
பையர வணையான்நாமம் பரவிநான் உய்ந்தவாறே." (ரு, க, க)

என்று பாடினமை ஓர்க.

இன்னும்,

"என்தாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்."
(திருவாசகம், திருக்கோத்தும்பி, அ)

என்று மாணிக்கவாசகர் அருளிச்செய்ததைப் பார்த்து,

"எந்தாதை தாதையப்பால் எழுவர் பழவடிமை." (எ, உ, சு)

என்றும்,

"எந்தையை எந்தை தந்தை தம்மானை." (எ, ந, ந)

என்றும், திருவாசகத்தில்,

"எனக்கு எய்ப்பில் வைப்பே." (நீத்தல் விண்ணப்பம், நக)

எனப்போந்த சொற்றொடரை யெடுத்து,

"எனக்கு எய்ப்பினில் வைப்பினை." (எ, ௧0, ௪)

என்றுந் திருமங்கையாழ்வார் பாடுதல் காண்க.

இனித் திருநாவுக்கரசு நாயனார் திருக்கழிப்பாலைப் பதிகத்தில்,

" வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே
என்கின் றாளாற்
சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு வெண்ணீற்றன்
என்கின் றாளால்
அனபவள மேகலையோடு அப்பாலைக் கப்பாலன்
என்கின் றாளாற்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச் சேர்வானைக்
கண்டாள் கொல்லோ."

என்றருளிச்செய்த செய்யுட்பொருளையும் இசையையும் பார்த்து, அவற்றோடொப்பவே திருமங்கையாழ்வார்,

" சிலையிலங்கு பொன்னாழி திண்படைதண்டு ஒண்சங்கம்
என்கின்றாளால்
மலையிலங்கு தோள்நான்கே மற்றவனுக்கு எற்றேகாண்
என்கின்றாளால்
முலையிலங்கு பூம்பயலை முன்போட அன்போடி
யிருக்கின்றாளால்,
கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத் தம்மானைக்
கண்டாள் கொல்லோ."

என்று பாடியிருத்தல் கண்டுகொள்க. இங்ஙனமே இவர் திருவாசகத்திற் போந்த 'கோத்தும்பி' முதலியவைகளைப் பார்த்தும், அப்பர் சுந்தரர் தேவாரப்பதிகங்களைப் பார்த்தும் பாடியவை இன்னும் பற்பல; அவையெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டலுறின் இஃது அளவின்றி விரியு மென அஞ்சி, அவைதம்மை இத்துணையின் நிறுத்து கின்றாம். இதுகாறும் எடுத்துக்காட்டிய இவையே மதச் செருக்கில்லாத மெய்யறிவினரைத் தெருட்டுதற்குப் போதி யனவாதலால், இவை கொண்டு திருமங்கையாழ்வார், சைவசமயாசிரியர் நால்வர்க்கும் பின்னே இருந்தமை

தெற்றெனத் துணிந்து கொள்ளப்படும். இங்ஙனஞ் சுந்தரமூர்த்தி நாயனார்க்கும் ஒரு நூற்றாண்டு பின்னேயிருந்த திருமங்கையாழ்வார், தமக்கு இருநூற்றைம்பதாண்டு முற்பட்டிருந்த திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்டு அவரொடு வழக்கிட்டாரென வைணவர் கட்டிவிட்ட கதைக்கு ஏதொரு சான்றும் எங்கும் இன்மையின், அக்கதை மதச்செருக்காற் றோன்றிய பெரும் புளுகுரையாமென்று தேர்ந்துகொள்க. தாம் வைணவசமயத்திற் குரியவராயிருந்தும் நடுவுநிலை பிறழமாட்டாமையிற் சீநிவாச ஐயங்கார் அவர்கள் தம் சமயத்தவர் கட்டிவிட்ட பெரும் பொய்க்கதைகளைக் கண்டு பெரிதும் அருவருப்புற்று "வைணவ ஆழ்வார்களைப்பற்றி உண்மையுள்ளதும் நம்பிக்கைக்கு இடமானதும் ஆன குறைந்தது ஒரு வரலாறுவது இருந்ததாயின், இத்தகைய கட்டுரை ஒன்று எழுதுதற்கு ஏதும் கட்டாயம் நேர்ந்திராது."[1] என்று தாம் ஒரு நூல் எழுதவேண்டிற்றனமைக்கு ஏதுக்கூறினார். பின்னும் அவர் "எமது கருத்திற்குப்பட்டமட்டிற் பெரிய புராணத்திற் சொல்லப்பட்ட உண்மை வரலாறுகளிற் சில பல ஒப்பிட்டுக் காணின் மிகவும் நம்பத்தக்கனவா யிருக்கின்றன; ஏனெனிற், சைவர்கள் தம்முடைய நாயன்மார் இருந்த காலங்களைப் பொய்யாக நீட்டிச் சொல்லவில்லை"[2] என்று கூறியதூஉங் கருத்திற் பதிக்கற்பாற்று. மேலும், மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகத்தைப் பயின்றே சூடிக்கொடுத்த நாச்சியார் தம்முடைய பதிகங்களைப் பாடினாரெனவும் இவர் உண்மையை நடுநிலை திறம்பாமல் எடுத்துக்கூறினார்.[3] இங்ஙனமாகத் தேவார திரு

1. "No necessity for an essay of this kind should have occurred, had there been at least one reliable and faithful biography of the Vaishnava saints" p. 296, 'Tamil Studies.'

2. "In our opinion some of the historical accounts given in the Periya-purana are comparatively more trustworthy, as the Saivas do not assign fabulous ages to their Nayanars" p. 298, Tamil Studies, by Mr. M. Srinivasa Aiyangar, M. A.

3. Ibid, p. 324.

வாசகங்களை நன்கு பயின்றே ஆழ்வார்களெல்லாரும் நாலாயிரப் பிரபந்தப்பதிகங்களைப் பாடினரென்னும் முடிபு இதுகாறும் யாம் விரித்து விளக்கிய ஆராய்ச்சியால் நன்கு விளங்குவதோடு, வைணவரில் நன்கு கற்று நடுநிலை வழுவாது நிற்பார்க்கும் உடன்பாடா யிருத்தலின், இவ் வுண்மைக்கு முற்றும் மாறுகத் 'திருவாதவூரடிகள் ஆழ்வார்கள் பாடிய நாலாயிரப்பிரபந்தத்தைப் பார்த்தே திருவாசகம் பாடினுர்' எனத் 'தமிழ்வரலாறுடையார்' உரைத்தது பெரும்புரட்டுப் பொய்யுரையாமென உணர்ந்து கொள்க. மேலும், வைணவப்புலவர்கள் கட்டிவைத் திருக்குங் கதைகள் பெரும்புளுகு மலிந்தனவா யிருத் தலின், அவற்றிற்குத் த்க்க அகச்சான்று புறச்சான்றுகள் காணப்படினன்றி அவற்றைப் பற்றுக்கோடாகக்கொண்டு உண்மை ஆராயப்புகுதல் அவ் வுண்மைக்கு மாறுன பொய்ப்பொருளில் வழுக்கிவிடும் என்பதும் இஞ்ஞான்றை வைணவப் பெரியார்க்கே உடன்பாடா யிருப்பவும், அஃ துணராது அப் பொய்க்கதைகளை உண்மையாக நம்பி அவர்தம் வரலாறு சொல்லப்புகுந்த 'தமிழ் வரலாறுடை யார்' அவ்வாற்றுல் வழுக்கி வீழ்ந்து புரைப்பட்டது பெரிதும் இரங்கற்பால தொன்றுமென விடுக்க.

உக. மாணிக்கவாசகர் குறித்த கடைச்சங்க காலம்

இனி, மாணிக்கவாசகர் காலத்தை ஆராய்ந்தாருள் ஒருசாரார், அடிகள் தாம் அருளிய திருச்சிற்றம்பலக்கோவை யார் இருபதாஞ் செய்யுளில்,

"உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழின்துறை."

என்று தமிழாராய்ந்த மதுரைச் சங்கத்தைக் குறிப்பிட் டிருத்தலின், அவர் அம் மதுரைத் தமிழ்ச்சங்கம் இருந்த கி. பி. எட்டாம் நூற்றுண்டிற்குப் பின்னே இருந்தோ ராவரென உரைத்தார். இஞ்ஞான்று செய்யப்படுங்

கல்வெட்டு ஆராய்ச்சியானும் நூலாராய்ச்சியானும் கி. பி. ஆரும் நூற்ருண்டிலும் ஏழாம் நூற்ருண்டின் இடையிலும் இருந்தவராக ஐயுறவுக்கு இடனின்றித் துணியப்பட்ட திருநாவுக்கரசு நாயனுரும் திருஞானசம்பந்தமூர்த்திகளும் தாம் அருளிச்செய்த திருப்பதிகங்களில்,

"நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினேன்காண்."
(திருப்புத்தூர், ௩)

எனவும்,

"புகலி ஞானசம்பந்தன் உரைசெய்
சங்கமலி செந்தமிழ்கள்." (திருத்தேவூர்)
"அற்றன்றி யந்தண் மதுரைத்தொகையாக்கினுனும்."
(பொது)

எனவும் மதுரைத் தமிழ்ச்சங்கந் தமக்கு முன்னிருந்த தனைத் தெளிவுறக் குறிப்பிட்டிருத்தல் கொண்டு, அது கி. பி. ஆரும் நூற்ருண்டிற்கு முன்னரே யிருந்தமை தெளியப்படுதலின், அஃது எட்டாம் நூற்ருண்டில் இருந்ததென உரைத்தாருரை பெரியதொரு தலைதடுமாற்றவுரையாம். ஆகவே, அப் பிழைபாட்டுரை கொண்டு மாணிக்கவாசகர் ஒன்பதாம் நூற்ருண்டிலிருந்தாரென்றதூஉம் பெரிதும் பிழைபடுவதாமென மறுக்க.

இனிச், 'சேரன் செங்குட்டுவன்' என்னுந் தமிழ் நூலை ஆக்கியோரும், 'தென்னிந்திய சைனமத ஆராய்ச்சிகள்'[1] என்னும் ஆங்கிலநூலை ஆக்கியோரும் மதுரைத் தமிழ்ச் சங்கம் கி. பி. ஐந்தாம் நூற்ருண்டிற்கு முற்பட்டதாகாது எனக் கூறினுராகலின், அச் சங்கத்தைக் குறிப்பிட்ட மாணிக்கவாசகர் கி. பி. மூன்ரும் நூற்ருண்டில் இருந்தாரெனல் பொருந்தாதாம் பிறவெனின்; அவ்விருவர் தங் கூற்றுக்களும் உண்மைக்கு மாருதலை விளக்கிக் காட்டும் முகத்தால், அடிகள் குறிப்பிட்ட மதுரைத் தமிழ்ச்சங்கம் கி. பி. மூன்ரும் நூற்ருண்டிற்கு முற்பட்டிருந்தமை தெளி

1. Studies In South Indian Jainism.

வுறுத்துதும். கி. பி. சஎ0-ஆம் ஆண்டின் வஜ்ரநந்தி என்பவரால் ஒரு தமிழ்ச்சங்கம் தென்மதுரையில் நிலை பெறுத்தப்பட்டதெனத் 'திகம்பர தரிசனம்' என்னுஞ் சமண் நூல் கூறும் வரலாற்றினை அவ்விருவருந் தாம் இயற்றிய நூல்களில் எடுத்துக்காட்டி அதனை உண்மையெனத் தழுவியிருக்கின்றனர்.[1] அங்ஙனம் ஒரு தமிழ்ச் சங்கம் நிலைபெறுத்தவேண்டிற்றானது என்னையென நுனித்து ஆராயின், அதற்கு முன்னிருந்த கடைச்சங்கம் அழிந்துபட்டுத் தமிழாராய்ச்சியுந் தமிழ் வளர்ச்சியும் நிலை குலைந்து போனமையினாலேயா மென்பது புலப்படும். அற்றேல், முன்னிருந்த கடைச்சங்கம் அவ்வாறழிந்து படவுந் தமிழ் நிலைதடுமாறவும் நேர்ந்த இடுக்கண்கள் யாவையோவெனிற் கூறுதும். கண்ணகி கொழுநன் கோவலனை, அஞ்ஞான்று மதுரையில் அரசுபுரிந்த 'ஆரியப்படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்' என்னும் மன்னன் ஆராயாது கொலைசெய்வித்துத் தான் செய்த அப்பிழையினைக் கண்ணகி எடுத்துக்காட்டிய வழிப் பெரிதும் ஏங்கி அரியணையில் இருந்தபடியே உயிர் துறந்தான்; அதுகண்டு அவன்றன் மனைவியும் உயிர்துறந் தாள். கண்ணகியோ தன் கணவனையிழந்த துயரமும் அரசன் தன் கணவனை நடுவின்றிக் கொன்றதனால் உண்டாய பெருஞ்சினமும் பொருளாய்த் தன் கொங்கை களுள் ஒன்றைத் திருகி மதுரைமேல் எறிய, அந் நகரந் தீப்பற்றிக்கொண்டது. நகரத்தில் உள்ளார் பலமுகமாய் உயிர்பிழைத்தோடினர். அப்போது ஆங்கிருந்த கடைச் சங்கப் புலவர்களும் அங்ஙனமே அந் நகரத்தைவிட்டுப் பலவாறுய்ப் பிரிந்துபோயினர். அச் சங்கப்புலவருள் ஒருவரான மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரும் அங்கிருக்க மாட்டாமல், அப்போது மலைநாட்டை அரசுபுரிந்த சேரன் செங்குட்டுவனை யடைந்து, துறவுபூண்ட நல்லிசைப்புலவரும் செங்குட்டுவன் தம்பியுமாய இளங்கோவடிகளோடு அள

1. 'சேரன் செங்குட்டுவன்,' பக்கம் கஎ0. Studies In South Indian Jainism, p. 52.

வளாவியிருந்தனர். பாண்டிநாடோ அரசனை யிழந்தமை யினாலும், தன் தலைநகர் தீப்பற்றி எரியுண்டமையினாலும், "மழைவறங்கூர்ந்து வறுமையெய்தி, வெப்புநோயுங் குருவுந் தொடரப்"[1] பெரிது வருந்திற்று. கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன் பின்னர் அரசுக்குவந்தான்; வந்தும் அரசியல் ஒழுங்குபெறவில்லை. இதற்கு முன் னெல்லாம் பேராற்றலுடையராய் விளங்கிய பாண்டிய அரசரது வலிமையும் இப்போது மங்குவதாயிற்று. கவலையாற் பெரிது நைந்து வெற்றிவேற் செழியனும் இறந்துபட, அவற்குப்பின் 'உக்கிரப் பெருவழுதி' என்பான் அரசுக்கு வந்தான். பாண்டிய அரசில் நேர்ந்த இக் குழப் பங்களையெல்லாம் நேரே கண்டவரான சாத்தனாரும் இளங்கோவடிகளும் சிலப்பதிகார மணிமேகலைகளில் அவற்றை நன்கெடுத்துக் கூறுதல் காண்க.

இவ் 'உக்கிரப்பெருவழுதி'யுங், 'கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி'யும் வெவ்வேறு பாண்டி மன்னராவரென்பது பகுத்துணர்ந்துகொள்ளல் வேண்டும். உக்கிரப்பெருவழுதி 'மணிமேகலை' ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனார்க்குப் பின்னே கி. பி. மூன்றும் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்தோனாவன். கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியோ திருக்குறள் அரங்கேறிய காலத் திற் கூலவாணிகன் சாத்தனாரோடு அதனை ஒருங்கிருந்து கேட்டு அதற்குச் சிறப்புப்பாயிரமுஞ் சொன்னோன் ஆவன். திருக்குறள் அரங்கேறிய ஞான்று கபிலர், இடைக்காடனார் முதலான நல்லிசைப்புலவர் ஆண்டில் மிக முதியராயும், பரணர், கூலவாணிகன் சாத்தனார் முதலான நல்லிசைப்புலவர் ஆண்டின் மிக இளைஞராயும் இருந்தாரெனல் ஆராய்ச்சியாற் புலனாதலின், திருக்குறள் அரங்கேறிய காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் பிற்பாதி யிலிருத்தல் வேண்டுமென உணர்ந்துகொள்க; ஆகவே, கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்தோனாவ னென்பதூஉம் கருத்திற்

---

1. சிலப்பதிகாரம், உரைபெறுகட்டுரை.

பதிக்கற்பாற்று. கி. பி. மூன்றும் நூற்றுண்டிலிருந்த உக்கிரப்பெருவழுதி பாண்டிய அரசு நிலைகுலைந்த காலத்தில் இருந்தவனுதலின், அவன் வலிமையிற் சிறந்த 'வேங்கைமார்பன்' என்னுங் குறுநிலமன்னனை வென்று அவனது கானப்பேரெயிலைக் கைக்கொண்டானென்பது சிறிதும் பொருந்தாது. அதுவேயுமன்றிக், கி. பி. முதல் நூற்றுண்டின் இறுதிவரையி லிருந்தவராகப் புலப்படும் ஔவையாராற் பாடப்பட்டோன் 'கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியே'யாகல் வேண்டுமெல்லாமற், கி. பி. மூன்றும் நூற்றுண்டிலிருந்த உக்கிரப்பெருவழுதியாகாமையும் உணரற்பாற்று. இவ்வாற்றுற் கி. பி. முதல் நூற்றுண்டின் பிற்பாதியிலிருந்து, சேரன் செங்குட்டுவனது காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் பிற்பாதிவரையிலிருந்த பரணருங் கூலவாணிகன் சாத்தனுரும் நீண்டகாலம் அஃதாவது தொண்ணூறு அல்லது நூறுண்டுக்கு மேல் உயிர்வாழ்ந்தாராதல்வேண்டும்; இது முன்னும் சகூக, சகூஉ-ஆம் பக்கங்களில் விளக்கிக்காட்டினும். அது நிற்க. காலத்தால் வேறுபட்ட இவ்விருவேறு உக்கிரப்பெருவழுதிகளையும் ஒருவரேயென இஞ்ஞான்றைப் புலவர்கள் மயங்கிக்கொண்டமையால் நேர்ந்த குழப்பங்களும் பிழைபாடுகளும் பல. அதுகிடக்க.

இனிக், கி. பி. மூன்றும் நூற்றுண்டின் துவக்கத்திலிருந்த உக்கிரப்பெருவழுதி தனக்குமுன் நிலைகுலைந்த தமிழ்ச்சங்கத்தை மீண்டும் ஒருங்குகூட்டி நிலைபெறுத்த முயன்றிருக்கலாம்; ஆனுல், அம்முயற்சி கைகூடிற்றில்லையாதல்வேண்டும். கோவலனைக் கொல்வித்த காலந்தொட்டுப் பாண்டியரது அரசிற் பல குழப்பங்களும் இடர்ப்பாடுகளும் அடுத்தடுத்து நேர்ந்தன. தமிழ்நாட்டுக்குப் புறம்பே வடக்கிருந்த வடுகக்கருநாடர் பாண்டிநாட்டைக் கைப்பற்றுதற்கு இதற்குமுன் முயன்றும் அஞ்ஞான்றெல்லாம் பாண்டிவேந்தர் மிகவும் வலியராயிருந்தமையின் அஃதவர்க்குக் கைகூடிற்றில்லை. ஆனுற் கி. பி. மூன்றும் நூற்றுண்டு துவங்கிப் பாண்டியரது ஆற்றல் குறைந்

தலைமையிற் சோழமன்னரது துணைபெற்று வடுகக்கரு நாடர் பாண்டிய அரசர்மேற் படையெடுத்து வந்த வரலாறு களை மேலே உ௯௨-ஆம் பக்கம் முதல் உ௭௨-ஆம் பக்கம் வரையில் வைத்து நன்கு விளக்கிக் காட்டி யிருக்கின்றேம். உக்கிரப் பெருவழுதிக்குப் பின் அரசுக்கு வந்த வரகுண பாண்டியன் சிவபிரான் திருவடிக்கண் மெய்யன்புடைய வனே யன்றிப், பேராண்மையில் மிக்கோன் அல்லன்; அதனால் அவன் தன்மேற் படையெடுத்துவந்த சோழனை இறைவனருளால் துரத்தினமையும், அங்ஙனமே அவ் வரகுணன் மகன் அரசுக்குவந்த ஞான்றும் வடுகக்கரு நாடர் அவன்மேற் படையெடுத்துவர அவனும் போர்த் திறம் இல்லானாகலின் இறைவனருளால் அவர் தம்மைத் துரத்தினமையும், அவனுக்குப் பின் அரசுக்குவந்த வர குணன் பேரன் காலத்தில் மீண்டும் அவ் வடுகக்கருநாடர் படையெடுத்து வந்து அவனைக் கொன்று பாண்டிய அரசைக் கைப்பற்றிக்கொண்டமையும் ஆங்கே விளக்கிப் போந்தாம். அவைகொண்டு கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் அதன்முடிவு வரையில் அரசுபுரிந்த பாண்டி மன்னர் களின் அரசு செவ்வனே நடைபெறாமையினாலும், அயன் மன்னரால் கலக்குறுத்தப் பட்டமையினாலும் அந் நூற் றாண்டிலிருந்த பாண்டிமன்னர், தமக்கு முன்னே கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் நிலைகுலைந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தை மீண்டுங் கூட்டி நிலைநிறுத்த மாட்டாராயினர். மற்றுக் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிற் பாண்டிநாட்டிற் புகுந்து, பாண்டியனரசை வெளவிய வடுகக்கருநாடரோ தமிழ்மொழிக்கு உரியரல்ல ராகலின், அவரும் நிலைகுலைந்த தமிழ்ச்சங்கத்தைப் பெயர்த்தும் உருப்படுத்திவைத்தாரல்லர்; மேலும், அக் கருநட அரசர் சமண்மதத்தினராகலிற் பாண்டிநாட்டி லிருந்த சிவபிரான் திருக்கோயில்களில் வழிபாடு நடக்க வொட்டாமல் அவற்றை அடைப்பித்துவிட்டன ரெனக் கல்லாடநூல் கூறுவதூஉம் நினைவிற் பதிக்கற்பாற்று. இக் கருநடரது ஆட்சிக் காலந்தொட்டுத்தான் சமண்மதந் தமிழ்நாட்டில் மிக்குப் பரவலாயிற்று. திருஞானசம்பந்தர்

காலத்தில், அஃதாவது கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியில் இருந்த கூன்பாண்டியன் முதலிற் சமண்மதத்தினனாயிருந்து பின்னர்த் திருஞானசம்பந்தப் பெருமானாற் சைவ சமயத்திற்குத் திருப்பப்பட்ட வரலாற்றினை உற்று நோக்குவார்க்குக் கி. பி. நான்காம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து ஏழாம் நூற்றாண்டின் நடுவரையிற் சமண் மதம் பாண்டிநாட்டில் மிக்குப் பரவியிருந்தமை புலனாம். இவ்வாறு வடுகக் கருநாடராகிய களப்பிரரால் பாண்டியரரசு சிலகாலங் கவர்ந்துகொள்ளப்பட்டமை வேள்விக்குடிப் பட்டயத்தாலும் புலனாதலிற், 'கல்லாடம்,' 'பெரிய புராணம்,' 'நம்பியார் திருவிளையாடல்' என்னும் பழைய தமிழ்நூல்கள் மூன்றானும் நுவலப்பட்ட இக் கருநடரது பாண்டிநாட்டு ஆட்சி சிறிதும் ஐயுறற்பாலதன்றென்க.

இனி, இக் கருநடரது ஆட்சி மதுரையில் நிலைபெற்ற காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டுமுதல் ஐந்தாம் நூற்றாண்டின் ஈறுவரையிலாதல் வேண்டும். ஏனெனின், வேள்விக்குடிப் பட்டயத்திற் சொல்லப்பட்ட 'கடுங்கோன்' என்பவனைத் தலைக்கொண்டு தொடங்கிய புதுப்பாண்டியமரபு ஆறாம்நூற்றாண்டின் நடுவிலிருந்து மதுரையில் அரசாளலான செய்தி அப் பட்டயத்தால் அறியக்கிடத்தலானும், அப் பாண்டிமரபு தொடங்குதற்கு முன் மதுரையை வெளவிய கருநடரது ஆட்சி கால்வழியற்று மாய்ந்துபோக அப்போது பாண்டிய அரசர் மரபில் எவரும் இன்மையின் மூர்த்திநாயனார் என்பவர் மதுரை மாநகர்க்கு அரசராக அந் நகரினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி கல்லாடம் ருஎ-ஆஞ் செய்யுளில் நுவலப்படுதலானும், அம் மூர்த்திநாயனாரது அரசு கடுங்கோனுக்கு முன் ஆறாம்நூற்றாண்டின் முற்பாதியில் நடைபெற்றதாகல் வேண்டுமாதலானும் என்பது. மேலும், 'வஜ்ரநந்தி' என்னுஞ் சமண்முனிவர் கி. பி சஎ௦-ஆம் ஆண்டில் மதுரையின் கண்ணே ஒரு தமிழ்ச்சங்கம் நிலைபெறுவித்தா ரென்னும் வரலாற்றின் உண்மையை நோக்குங்கால், சமண் மதத்தவனாகிய கருநட அரசனது ஆட்சி மதுரையில் அப்

பொழுது நிலைபெற்றிருந்தமையும் சமண்மதத்தினர் கூட்டம் அங்கு மிக்கிருந்தமையும் நன்குபுலனும். தம்மதத்தினர் தொகைப் பெருக்கமும், தமது முயற்சி பயன்படுதற்குத் தம் அரசனது உதவியும் இருந்தாலன்றிச், சைவர்கள் மிகுந்துள்ள அந் நகரில் ஒரு சமண்முனிவர் அங்ஙனம் ஒரு தமிழ்க்கழகம் நிலைநிறுத்தல் இயலாதாகலின், அவ் வைந்தாம் நூற்றாண்டின் பிற்பாதி முடிய மதுரையிற் கருநட அரசரது ஆட்சியிருந்தமை தேற்றமாம். அற்றாயினும், கி. பி. நான்காம் நூற்றாண்டின் றொடக்கத்திலேயே கருநட அரசரது ஆட்சி மதுரையில் நிலைபெற் றிருப்பவும், அப் போதே அத்தகையதொரு தமிழ்ச்சங்கம் அங்கு ஏற்படுத்தப்படாமல், ஏறக்குறைய அவரது ஆட்சியின் முடிவுக்காலமாகிய ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அஃது ஏற்படுத்தப்பட்ட வாறென்னையெனின்; மதக்கோட்பாட்டிற் சமணராயும் பேசும் மொழியில் வடுகராயும் உள்ள இவ் வேற்றுநாட்டரசர், சைவ சமயத்தவராய்ப் பண்டு தொட்டுச் செந்தமிழ் வழங்குவார் நிறைந்த பாண்டி நாட்டுட் புகுந்து அங்கு வழிவழி ஆண்ட பாண்டியரரசை வெளவித் தமதரசை நிலைபெறுத்தல் வேண்டினராயின், தம் அரசர்பால் நேயம் நிரம்பவைத்த தமிழ்க்குடிகட்கும் அப் புதிய கருநட அரசர்க்கும் எத்துணைப் போராட்டம் எவ்வளவு காலம் நிகழ்ந்திருத்தல் வேண்டும்! இப் போராட்டங்களெல்லாந் தணிந்து அப் புதிய அரசரும், இப் பழைய தமிழ்க்குடிகளும் ஒருமைப்படுதற்கும், அவருடன் போந்து குடியேறிய சமண்மதத்தவரும் இங்கிருந்த சைவரும் ஒருங்குகூடித் தமக்குள்ள வேறுபாடுகளை நிரவிக் கொள்ளுதற்கும் ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகள் சென்றிருக்கவேண்டுமாகலின், வஜ்ரநந்தி என்பார் வகுத்த தமிழ்ச்சங்கம் அவ்வாறு அக் கருநட அரசரது ஆட்சிக்கால முடிவைநோக்கி எழுவதாயிற்றென்க. மேலும், அவ்வரசர் தமிழுக்குந் தமிழ்க்கொள்கைக்கும் புறம்பானவராகலின், அவர் பாண்டிநாட்டைக் கைக்கொண்ட காலத்திற் கடைச்சங்கம் மதுரையி லிருந்தாலும், அவர் அதனைப் பாதுகாத்திரார். அன்றி

அதனைப் பாதுகாத்திருந்தனராயின், வஜ்ரநந்தி என்னுஞ் சமண்முனிவராற் புதியதொரு தமிழ்க்கழகம் நிலைநாட்ட வேண்டுவதும் இன்றாம். அதுவேயும் அன்றி, இங்குள்ள பழந்தமிழ்ப் புலவரைக்கொண்டு ஒரு தமிழ்க்கழகம் புதுக்காமல், தம் மதத்தவராகிய வஜ்ரநந்தியைக் கொண்டு அங்ஙனம் அதனை நிறுவினமையாலும், அவ்வரசர் இங்கிருந்த தமிழ்ப் புலவர்பால் அன்புடையரல்ல ரென்பது பெற்றாம். பெறவே, கருநட அரசரது ஆட்சி மதுரையிற் றுவங்கிய கி. பி. நான்காம் நூற்றாண்டிலும், அதற்குப் பின்னுங் கடைச்சங்கம் அங்கிருந்ததில்லை யென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குதல் காண்க. அங்ஙனமே அவர் வருதற்குமுன் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் நடைபெற்ற பாண்டிய அரசு மழையின்மையானும் நோயானும் அரசியற் குழப்பங்களானும் பெரிதும் வலிகுன்றி வருந்தினமையின், இரண்டாம் நூற்றாண்டில் மதுரை எரியுண்டமையாற் கலைந்த கடைச்சங்கப் புலவரை அது மீண்டும் ஒருங்குகூட்டி அதனை நடைபெறுவிக்க மாட்டாதாயிற்று; ஆகவே, கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலுங் கடைச்சங்கம் மதுரையில் இருந்திலாமை தெளியப்படும்; படவே, கடைச்சங்ககாலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் அது முடிவெய்துதற்குமுன் நிகழ்ந்ததாகுமெனக் கடைப்பிடித்துணர்ந்து கொள்க. இவ்வாறு கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டின் நடுவெல்லைகாறும் நிகழ்ந்த பல்வேறு மாறுதல் நிகழ்ச்சிகளை வரலாற்று முறையின் நன்காய்ந்துணராமற், 'சேரன் செங்குட்டுவன்' நூலாரும், அவரைப் பின்பற்றித் 'தென்னிந்திய சைனமத ஆராய்ச்சி' நூலாருங் கடைச்சங்கம் இருந்தது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயாம் என் றுரைத்தவுரை உண்மை வரலாற்றுடன் மாறுகொள்ளும் போலியுரையாமென உணர்ந்துகொள்க.

இனிச், சோழன் கரிகாலன் காலத்தும் அதற்கு முன்னும் இருந்த மாமூலனு ரென்னும் ஆசிரியர் அகநானூற்றிற் பாடிய,

"வெல்கொடித், துனைகாலன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்கு வெள்ளருவி அறைவாய்." (உருக)

என்னுஞ் செய்யுளில் வடநாட்டிலிருந்த மோரிய அரசர் தென்னாட்டின்மேற் படையெடுத்துவந்த ஞான்று, 'மோகூரில்' இருந்த தமிழ் மன்னன் அவரைப் பணிந்து அவர்க்குத் திறைகொடாமையின், அவனது ஊரின் வடவெல்லையில் அரணாய்த் தடைசெய்திருந்த மலைப்பாறையைக் குறைத்து மட்டமாக்கித் தாம் வருதற்கு வழியுண்டாக்கினர் என்னும் வரலாறு கூறப்பட்டிருத்தலை, அவ் விருவரும் எடுத்துக் காட்டி, இதன்கட் குறிப்பிடப்பட்ட மோகூர் மன்னன் என்போன், சேரன் செங்குட்டுவனால் தோல்வியுற்ற 'பழையன் மாறனே' யாதல் வேண்டுமெனவும், அவ்வாறாகவே மாமூலனார் சேரன்செங்குட்டுவன் காலத்தவராகவும் பெறப்படுதலின் அவராற் சொல்லப்பட்ட மோரியரது படையெடுப்பு இச் சேரவேந்தன் காலத்திலேயே நிகழ்ந்ததாகல் வேண்டுமெனவும், கிறித்து பிறப்பதற்கு முந்நூறு ஆண்டுகளுக்குமுன் வடநாட்டில் அரசுபுரிந்த 'சந்திரகுப்த' அரசனே மோரியமரபுக்கு முதல்வனாகலின் அவனாவது அவன்றன் மகன் 'பிந்துசார'னாவது சேரன் செங்குட்டுவன் காலத்தில் தென்னாட்டின்மேற் படையெடுத்துவந்தா ரென்பது பொருந்தாதெனவும், கிறித்துவுக்குப்பின் நான்காம் நூற்றாண்டிற் றுவங்கிய 'குப்தமரபுக்'கு முதல்வனான மற்றொரு 'சந்திரகுப்த'னின் மகனான 'சமுத்ரகுப்தன்' என்பவனே தென்னாட்டிற் காஞ்சிநகர் வரையிற் படையெடுத்துவந்தமை வரலாற்று நூல்களால் நன்கறியக் கிடத்தலின் இங்ஙனம் வந்த இக் குப்தமரபினரையே மாமூலனாரும் அவர் காலத்திருந்த ஏனைப் புலவர் சிலரும் பிழைபாடாக 'மோரியர்' என்று

கூறினரெனவும், ஆகவே இக் குப்தமரபினர் படையெடுப்பைக் குறிப்பிட்ட மாமூலனாரும் அவரோடுடனிருந்த மற்றைக் கடைச்சங்கப்புலவரும் அவர் தமிழாராய்ந்த கடைச்சங்கமுமெல்லாங் கி. பி. நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேனும் ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேனும் இருந்ததாகல் வேண்டுமெனவும் உரைநிகழ்த்தினார். இவை தம்மையாராய்ந்து இவருரைத்த இவ்வுரை பொருந்தாமை காட்டுவாம்.

முதற்கண் ஆராயற்பாலது, மோரியர் தமிழ்நாட்டின் மேற் படையெடுத்துவந்த ஞான்று அவரொடு பகைத்து அவரைப் பணியாமல் இருந்தோன் 'பழையன்மாறன்' றானே என்பதேயாம். ஆசிரியர் மாமூலனார் தாம் பாடிய அகநானூற்றுச் செய்யுட்கள் இரண்டில்மட்டும் (உருக, உஅக) 'மோரியர் தென்னாட்டின்மேற் படையெடுத்துவந்த' செய்தியினைக் குறித்திருக்கின்றார்; அவ் விரண்டுள்ளும் மேலேகாட்டிய செய்யுளில் மட்டுமே மோகூர் மன்னன் அம் மோரியரைப் பணியாமை கூறினார்; இங்ஙனங் கூறியவழி வறிதே 'மோகூர்' என்று மொழிந்தனரேயன்றி, அம் மன்னன்பெயர் 'பழையன்மாறன்' என்று மொழிந்தன ரல்லர். அங்ஙனமிருக்க மோரியர் வந்தஞான்று மோகூரில் அரசியற்றினோன் பழையன் மாறனே யென்று 'சேரன் செங்குட்டுவன்' நூலார் கூறுதற்குச் சான்றென்னை? இம் மோரியரது வரவினை அகநானூற்றிற் கூறிய (சுகூ) மற்றொரு புலவர் பரங்கொற்றனாராவது, அதனைப் புறநானூற்றிற்கூறிய (களரு) ஆத்திரையனாராவது அம் மோரியரைப் பகைத்துப் பணியாதிருந்தோன் பழையன்மாறனே யென்று கூறினரா? அங்ஙனம் ஏதும் இல்லையே. அற்றன்று,

> "பழையன் மோகூர் அவையகம் விளங்க
> நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன." (ருoஅ, ருoகூ)

என்று மதுரைக்காஞ்சியுட் சொல்லப்படுதலின், அப்போது மோகூரிலிருந்தோன் பழையன்மாறனே என்பது பெறப்படுமாலெனின்; இம் மதுரைக்காஞ்சியுட் சொல்லப்

பட்டது கொண்டு, அதனை யியற்றிய 'மாங்குடி மருதனார்' காலத்தில் மோகூரிலிருந்தோன் 'பழையன்' என்பது மட்டும் பெறப்படுமே யல்லாமல், மோரியர் வந்த காலத்தும் அவ்வூரிலிருந்தோன் பழையனேயென்பது பெறப்படாதாகலின், அவ்வாறு கொள்ளுதல் பொருந்தாதென மறுக்க. அஃதொக்குமாயினும், கரிகாற் பெருவளத்தான் காலத்திற்கும் முற்பட்ட 'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்' காலத்தில் மோகூரிற் 'பழையன்' என்னுஞ் சிற்றரசன் ஒருவன் இருந்தமை நுவலப்பட்டவாறுபோலவே, அப் பாண்டியனுக்கு ஒரு நூற்றுண்டு பிற்பட்டிருந்த 'சேரன் செங்குட்டுவன்' காலத்தும் மோகூரிற் 'பழையன்' என்பான் ஒருவன் இருந்தமை பதிற்றுப்பத்தின் சச, சகூ-ஆஞ் செய்யுட்களினும் ரு0-ஆஞ் செய்யுளின் பதிகத்தினும் நுவலப்பட்ட வாறென்னையெனின்; ஒருவன் தன் தந்தையின் பெயரைத் தன் மகற்கிட்டு வழங்குதல் பண்டுதொட்டு இத் தென்றமிழ்நாட்டின்கண் நடைபெற்றுவரும் வழக்கென்பது "சிறந்தோன்பெயரன் பிறந்தமாறே" என்பதனால் நன்குணரக்கிடத்தலின், மாங்குடி மருதனார் காலத்தில் மோகூரிலிருந்த 'பழையன்' பாட்டன் ஆவன் எனவும், சேரன் செங்குட்டுவன் காலத்தில் அதன்கணிருந்த 'பழையன்' அவற்குப் பேரன் ஆவனெனவும் பகுத்தறிந்து கொள்க. இவ்வாறு பகுத்தறியமாட்டாமையிற் 'சேரன்செங்குட்டுவன்' நூலாரும் அவரைப் பின்பற்றிய சமண் நூலாரும் அவ் விருவேறு 'பழையரை'யும் ஒன்றுபடுத்திச் செய்த குழப்பங்கள் சாலப்பல.

அற்றாயினும், "நான்மொழிக்கோசர்" என்பார் மோரியரொடு சேர்ந்து அவர்க்கு முற்படையாய்ப் போந்து 'மோகூர்ப் பழையனைத்' தாக்கினவரலாற்றை மேலெடுத்துக் காட்டிய செய்யுளில் மாமூலனார் கூறியிருத்தல் கொண்டும், அங்ஙனமே 'மதுரைக் காஞ்சியில்' மாங்குடி மருதனார் கூறியிருத்தல் கொண்டும் மோரியர் கோசரை முன்னணியாய் விடுத்துத் தாக்கியது மோகூரிலிருந்த

பழையனையேயாம் என்று அச் 'சமணமத ஆராய்ச்சி நூலார்' உரைத்தது பொருத்தமேயாமெனின்; அது பொருத்தமன்று. ஆசிரியர் மாமூலனார் தாம் பாடிய அகநானூற்றுச் செய்யுள் மற்றொன்றில் (உ௮௧),

> "கனைகுரல் இசைக்கும் விரைசெலற் கடுங்கணை
> முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
> தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு."

என மோரியர் வடுகரை முன்றுணையாய்க் கொண்டு வந்தனரென்று மொழிந்தாற்போல, அவர் கோசரையும் முன்றுணையாய்க்கொண்டு வந்தனரென யாண்டும் மொழிந்தார் அல்லர். ஏனைத் தமிழாசிரியராதல் அக் கோசரை மோரியர்க்குத் துணைவரென்றேனும், பழையன் மாறனை அவர் தாக்கினரென்றேனும் யாண்டுங் கூறக் காண்கிலேம். மற்று, அக்கோசர் "பழையன் மோகூர் அவையகம் விளங்கத் தோன்றினர்" எனவே மதுரைக்காஞ்சி புகலாநிற்கின்றது; அவர் பழையனுக்குப் பகைஞராய்ப் புகுந்தனரென்றால், அவனது அவையகம் அழியப்புகுந்தனரென்றன்றோ கூறுதல் வேண்டும், அவ்வாறின்றி அவனது அவையகம் விளங்கப் புகுந்தனரென்று கூறுதல் ஒக்குமோ? மற்று அஃது அவர் அவனது அவையகம் விளங்கப் புகுந்தனரென்றுரைக்கும் பரிசினை உற்று நோக்குமவழி, அக்கோசர் மோகூர்ப் பழையனுக்கு நண்பரே யில்லாமற் பகைஞரல்லரென்பது இனிது புலனாதலின், அவரை மோரியர்க்குத் துணைபோந்தாரென்பது பெரியதொரு பிழைபாட்டுரையாம். அற்றேல், மாமூலனார், "வெல்கொடித், துனைகாலன்ன" என்று பாடிய மேற்காட்டிய செய்யு ளடிகட்குப் பொரு ளென்னையெனின்; "வென்றெடுத்த கொடியினையும், விரைந்துசெல்லுங் காற்றையொத்த ஒப்பனைசெய்த தேரினையும் உடைய கோசரது பழையதாய் முதிர்ந்த ஆலமரத்தின் கேடில்லாத கிளைகளின் கீழுள்ள அம்பலத்தின்கண்ணே, இனிய இசையையுடைய முரசங் குறுந்தடியால் அறையப்பட்டு ஒலிக்கப், பகை மேற்கொண்டு வந்து ஓரிடத்தும் நிலை

பெறுதலில்லாத மோரியஅரசர் தமக்குப் பகையாய அக்கோசரது போர்முனையை அழித்தநாளிலும் மோகூர் மன்னன் தமக்குப் பணியாமை கண்டு யானை குதிரைகளையுடைய தமது படையின் புனைதேர் உருள்கள் அவனது ஊர்மேல் தடைப்படாது உருண்டுசெல்லும் பொருட்டு மட்டமாக்கிய, விளங்கும் வெள்ளிய அருவிகள் இழியும் மலைப்பாறைகளிடத்து" என்பதே மேலெடுத்துக் காட்டிய அவ் வடிகட்குப் பொருளாகும். இதனால், வடக்கிருந்து வந்த மோரியஅரசர், தெற்கின்கண் உள்ள கோசரது ஆலமரத்தின்கீழுள்ள அம்பலத்தின்கண்ணே அக்கோசரொடு பொருது அவரைத் தோல்விபெறச் செய்தாரென்பதூஉம், தமக்குத் துணைவரான கோசர் தோல்வியுற்றதைக் கேட்டும் அஞ்ஞான்று மோகூரிலிருந்த மன்னன் அஞ்சி அம்மோரிய அரசரைப் பணியாமையின் அவனையுந் தாக்குதற்பொருட்டுப் படையெழுந்த அம் மோரியர் இடையே தடையாய் நின்ற மலைப்பாறைகளை மட்டமாக்கி வழியுண்டாக்கின ரென்பதூஉம் பெறப்படுகின்றன அல்லவோ? மாமூலனார் கூறிய கோசர் மோகூர் மன்னர்க்கு வழிவழி நண்பரென்பது இவர் கூறியவாற்றானேயன்றி, 'மதுரைக் காஞ்சி'யில் மாங்குடிமருதனார் கூறியவாற்றானும் பெறப்படுதல் காண்க. மேலும், இக்கோசர் என்பார் வாய்மையிற் றவறாத படைமறவ ரென்பதும், துளுநாட்டையும் செல்லூரையும் ஆலமரத்துப் பொதியிலையுங் கொங்கு நாட்டையும் இருப்பிடமாகக்கொண்டு வாழ்தல் பற்றி "நாலூர்க்கோசர்" (குறுந்தொகை, கரு) "நான்மொழிக் கோசர்"[1] (மதுரைக்காஞ்சி, ரு0௯) என்று வழங்கப்படுவரென்பதும் பழைய நூல்களால் நன்கறியக்கிடக்கின்றன. ஆகவே, இக் கோசரை முன்றுணையாய்க்கொண்டு மோரிய அரசர் மோகூர்ப் பழையனைத் தாக்கினரென அச் சமண மத ஆராய்ச்சி நூலாரும் பிறரும் உரைத்தவுரை பழைய நூற் சான்றுகளுக்கு முற்றும் முரணுதலின் அது கொள்ளற்பால தன்றென மறுக்க.

---

1. அகநானூறு, கரு, ௯0, உருக; சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரை, உ.

இனி, இந் நாலூர்க்கோசர் மோகூர்மன்னர்க்கு வழி வழி நண்பரென்பது மேற்காட்டியவாற்றால் நன்கு விளங்குதலின், மாமூலனார் தாம் பாடிய அகநானூற்றுச் செய்யுள் உருக-இல் அக் கோசரையும் மோரிய அரசரையும் மோகூர் மன்னனையும் ஒருங்கெடுத்துக் கூறுதல் ஒன்றேகொண்டு, அக் கோசரொடு தொடர்புடையோன் மோகூரில் ஒரு காலத்தி லரசாண்ட பழையனே என்றல் ஒரு சிறிதும் பொருந்தாது. அக் கோசர்தம் மூதாதைகளும் மோகூர் மன்னர்தம் மூதாதைகளும் நட்பிற் பிணிப்புண்டோராதல் பற்றியே, அவ் விருவர்தம் வழித்தோன்றினாரும் அங்ஙனம் நட்புரிமையிற் சிறந்து விளங்கினர்; ஆதலாற், கோசர் என்பாரின் தொடர்பு காணப்படுதல் ஒன்றேகொண்டு, மாமூலனார் கூறிய மோகூர் மன்னன் பழையனேயென்று முடிபு கட்டுதல் பெரியதொரு பிழைபாடாமென்க. மற்று, மோரியர் படையெடுத்துத் தன்மேல் வந்த காலத்து அவரைப் பணியாதிருந்த மோகூர்மன்னன் இன்னானென்று மாமூலனார் அவனது பெயரையெடுத்து மொழிந்திடாமையின், அம் மோரிய அரசர் வந்தகாலத்தில் மோகூரிலிருந்தோன் பழையனுக்குப் பல தலைமுறை முற்பட்டோன் ஆவனென்பதே துணிபொருளாமென்க.

மேலும், அம் மோரிய அரசர் தென்னாட்டின்மேற் படையெடுத்து வந்த செய்தியை மாமூலனார் தங்காலத்து நிகழ்ந்ததென நிகழ்காலத்தின் வைத்துரையாமல், "தெம் முனை சிதைத்த ஞான்றை" எனவுங், "குறைத்த" எனவும் இறந்தகாலத்தின் வைத்துரைத்தலிற் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பாதியிலிருந்த அம் மாமூலனார்க்கு முந்நூறாண்டு முற்பட்டிருந்த மோரிய அரசனான பிந்துசாரனே அங்ஙனம் படையெடுத்து வந்தவனாமென்பது தெளிபொருளாகும். அதுவேயுமன்றிச் 'சந்திரகுப்தன்' என்னும் முதல் மோரிய அரசற்குமுன் பாடலிபுரத்திற் கி. மு. சகரு-இல் அரசாண்ட நந்த[1] அரசர் கங்கையாற்றின் அடிப்

1. Dr. V. A. Smith's 'The Oxford History of India' of 1923, pp. 57-58.

படையில் ஒளித்துவைத்த நிதியத்திரளை அம் மாமூல ஞரே அகநானூற்றில்,

"நந்தன் வெறுக்கை யெய்தினும்." (உருக)

எனவும்,

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங்கொல்லோ" (உகூரு)

எனவுங் கூறக்காண்டலின், அவ் வடநாட்டுச் செய்தியும், அதனையடுத்து நிகழ்ந்த மோரியரது தென்னாட்டுப் படையெடுப்பும் மாமூலனார்க்கு முந்நூறாண்டு முற்பட்டனவாதல் ஐயுறவின்றித் துணியப்படும் என்க.

மேலும், மோரியரது படையெடுப்பினையும், அம் மோரிய அரசர்க்குமுன் பாடலிபுரத்தை ஆண்ட நந்த அரசரது பெரும் பொருட்டிரளையும், அப் பொருட்டிரளை அவர் கங்கையாற்றின் அடிப்படையில் மறைத்துவைத்த வரலாற்றையும் ஆசிரியர் மாமூலனார் பிழைபடாது உரைப் பக்காண்டலின், இவர் தங் காலத்துக்குமுற்பட்ட வடநாட்டு நிகழ்ச்சிகளை நன்குணர்ந்தவராகவே காணப்படுகின்றார். இங்ஙனமிருக்கக், கி. பி. கூஉ0-ஆம் ஆண்டிற் றுவங்கிய 'குப்தமரபுக்'கு முதல்வனான மற்றொரு சந்திரகுப்தனின் மகனான 'சமுத்ரகுப்தன்' என்பான் தமிழ்நாட்டின்மேற் படையெடுத்துப்போந்த செய்தியினையே பிழைபாடாக 'மோரியரது' படையெடுப்பென்று கருதி ஆசிரியர் மாமூலனார் பாடிவிட்டனரெனச் 'சேரன்செங்குட்டுவன்' நூலார் அவ் வாசிரியர்க்கு ஓர் அறியாமையேற்றினார். கிறித்து பிறப்பதற்கு கூஉஉ-ஆண்டுகட்கு முன் சந்திர குப்தனைத் தலைவனாய்க்கொண்டு துவங்கிய மரபே 'மோரிய வமிசம்' எனப்பட்டதென்பதும், கிறித்து பிறந்தபின் கூஉ0-ஆம் ஆண்டில் மற்றொரு சந்திரகுப்தனைத் தலைவனாய்க் கொண்டு துவங்கிய மரபோ 'குப்தவமிசம்' எனப்பட்ட தென்பதும் வரலாற்று நூலாரால் பகுத்துவைத்துக் காட்டப்பட்டதோர் உண்மையாம். கி. பி. கூஉ0-இல்

துவங்கிய மரபுக்கு 'மோரியவமிசம்' என்னும பெயர் வழங்கப் படவில்லையென்பது 'சேரன் செங்குட்டுவன்' நூலாரும் உடன்பட்டதொன்றும். ஆசிரியர் மாமூலனார் தாமிருந்த காலத்திற் படையெடுத்துப்போந்த மன்னன் குப்தமர பினைச் சேர்ந்தவனாயிருப்பின், அதனை அவர் எளிதிலே யறிந் துரைத்தற்கு இடன்உண்டு; குப்தமரபில் வந்த அரசர் அனைவருந் தம்மைக் குப்தமரபின்பாற் படுத்து வழங்கினரே யல்லாமல், மோரிய மரபின்பாற் படுத்து வழங்கினரல்லர்; ஆகவே, தங்காலத்துவந்த மன்னன் குப்த மரபினனாயிருந்தால், அவர் அம்மரபின் பெயரையே தமது பாட்டின்கண் எடுத்துமொழிந்திருப்பர். மேலுங், குப்தமரபினன் காலத்திருந்தவராயின் அம் மரபை அவர் தெரிந்துகொள்ளாது, அம் மரபினர்க்கு அறுநூறு ஆண்டு முற்பட்டிருந்த 'மோரியமரபை' அவர் நினைந்து அப் பெயரைக் குப்த மரபினர்மேற் பிழையாக ஏற்றிக் கூறினா ரென்றல் சிறிதும் பொருத்தமில் கூற்றாம். தமது காலத்தை யடுத்திருந்த தொன்றாயின் ஒருகால் அவர் அதனை நினைந்து பிழைத்து வழங்கினாரென்றல் சிறிது பொருந்தினும் பொருந்தும். மோரிய மரபினரது படை யெடுப்பை அவர் இறந்த காலத்தின்கண் வைத்து ஓது தலின், அஃது அவர் காலத்திற்கு முற்பட்டதாதல் பெறப்படும். படவே, அவர் அம்மோரிய மரபிற்குப் பின்னிருந்தோராதலுந் தானே பெறப்படும். மோரியரது படையெடுப்பைப்போற் குப்தமரபினரது படையெடுப்பை அவர் யாண்டும் ஓதாமையானும், அவர் காலத்திருந்த ஏனை நல்லிசைப் புலவராகிய பரணரும் (அகநானூறு, ௬௯) பரங்கொற்றனார் ஆத்திரையனாரும் மோரியரது படையெடுப்பினையே தாம் பாடிய செய்யுட்களிற் குறிப்பிட் டனரன்றிக் குப்தமரபினரது படையெடுப்பினை ஓரிடத் தாயினுங் குறிப்பிடாமையானும், இந் நல்லிசைப் புலவ ரெல்லாருங் குப்தமரபினரை மோரிய மரபினராகப் பிழை படுத்துரைத்தார் என்றலினும் பெரியதோர் அறிவில் கூற்றுப் பிறிதொன்று இன்றாமாகலானும், அங்ஙனம் பண்டை நல்லிசைப் புலவராகிய மாமூலனார், பரணர்,

பரங்கொற்றனார், ஆத்திரையனார் முதலியோரால் எடுத்துரைக்கப்பட்டது, கிறித்து பிறப்பதற்கு முந்நூறாண்டு முற்பட்டு நிகழ்ந்த மோரியரது படையெடுப்பே யல்லாமற், கிறித்து பிறந்த முந்நூறாண்டிற்குப் பின் நிகழ்ந்த குப்த அரசரது படையெடுப்பு அன்றெனக் கடைப்பிடித்துணர்ந்துகொள்க. ஆகவே, இவையெல்லாம் ஆய்ந்து பாரா துரைத்த 'சேரன் செங்குட்டுவன்' நூலாரது உரை வழுக்குரையே யாமென விடுக்க.

இனிச், 'சமுத்ரகுப்தன்' என்னுங் குப்த அரசனால் வெல்லப்பட்ட அரசர்களின் பெயர் அவ்வரசனே வெட்டுவித்த கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றன. அங்ஙனம் அவனால் வெல்லப்பட்டோருள் 'மண்டராஜா' என்பவனும் ஒருவனாகச் சொல்லப்படுகின்றான். கல்வெட்டில் 'மண்டராஜா' என்று பொறிக்கப்பட்டிருக்கும் பெயரைச்,[1] 'சேரன் செங்குட்டுவன்' நூலார்தங் கருத்து நிரம்புமாறு 'மாந்தராஜா' (சேரன் செங்குட்டுவன், பக்கம், கஎக) எனத் திரித்துப் 'புறநானூறு' முதலான பழைய தமிழ்நூல்களான் அறியப்படும் 'மாந்தரன்' எனப் பெயர் பூண்ட சேர மன்னர் இருவரில் முதலிலிருந்தோனே சமுத்ரகுப்தனால் வெல்லப்பட்டோனாதல் வேண்டுமெனவும், அதனால் அம் மாந்தரனுக்குப் பின்னர் அரசு புரிந்த சேரன் செங்குட்டுவனும் அவன் காலத்துப் புலவர்களும் எல்லாம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியி லிருந்தோராதல் வேண்டுமெனவும், ஆகவே கடைச்சங்க காலமும் ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியேயா மெனவுங் கூறினார்.

சமுத்ர குப்தன் இத்தென்னாட்டின் கீழ்கரைப்பக்கமாய்ப் படையெடுத்து வந்தவனே யல்லாமல் மேல்கரைப் பக்கமாய் வந்தவன் அல்லன். அங்ஙனங் கீழ்கரைப் பக்கமாய் வந்தபோது, அவன் கலிங்கநாட்டின் தலைநகரான 'பிஷ்டபுரத்'தையும், கஞ்ச மாகாணத்திலுள்ள 'மகேந்திர

1. Dr. V. A. Smith's 'The Early History of India' 1914, p. 284; also of R. C. Dutt's 'A History of Civilisation in Ancient India,' vol. II, p. 50.

கிரி,' 'கோட்டூர்' என்னும் மலைக் கோட்டைகளையுங் கைக்கொண்டு, கோதாவரி கிருஷ்ணா என்னும் ஆறுகளுக்கு இடையிலுள்ள 'கொல்லேரு' ஏரியின் கரைக் கண்ணதான நாட்டில் அரசுபுரிந்த 'மண்டராஜா' என்பவனையும், அவனுக்கு அருகில் 'வேங்கைநகரத்'தை அரசாண்ட மன்னனையும் வென்று, அதன்பின் தெற்கு நோக்கிப் புகுந்து காஞ்சிபுரத்திற் செங்கோல் ஓச்சிய 'விஷ்ணு கோபனை'யுந் தனக்கு அடங்கச் செய்து, அதன்பின் மேற்கு முகமாய்த் திரும்பி நெல்லூர் மாகாணத்தில் உள்ள 'பாலக்க' அரசனான 'உக்ரசேன'னையும், தக்கணத்தின் மேல்பா லுள்ள 'தேவராஷ்டிரம்,' 'ஏரண்டபல்ல' என்னும் நகரங்களையுந் தன்கீழ்ப் படுத்துக்கொண்டு, தனது தலைநகராகிய 'பாடலிபுரம்' போய்ச் சேர்ந்தான். தமிழ்நாட்டின்கண் தொண்டைநாட்டைத் தவிரச் சோழ பாண்டிய சேரநாடுகளுக்கு இவன் சென்றனனென்பது இவன் வெட்டுவித்த கல்வெட்டுகளில் ஒரு சிறிதுங் குறிக்கப்படவில்லை. அக் கல்வெட்டுகளிற் காணப்பட்ட சொற்களுட் 'கௌராளக' என்னும் ஒரு சொல்லுக்குச் சிலர் 'கேரளம்' எனப் பிழையாகப் பொருள் செய்து கொண்டதனையே 'சேரன் செங்குட்டுவன்' நூலார் தாம் பிடித்த பிழைக் கொள்கையை நாட்டுதற்குப் பெருந் துணையாய்க் கொண்டார். பின் வந்த ஆராய்ச்சிக்காரரால் அச் சொல்லுக்குத் திருத்தமான பொருள் காணப்பட்டதும், அது 'கொல்லேரு' என்னும் ஏரிக்கரைப் பக்கத்ததான ஒருநாட்டைக் குறிப்பதும், அதன்கண் அரசு செலுத்தினவன் 'மண்டராஜா'வே[1] யன்றி மாந்தராஜா அல்லன் என்பதும் அவர் சிறிதும் உணர்ந்திலர். தாங் கொண்ட பிழையானதொரு கோட்பாட்டை நாட்ட முயல்குவார், தாம் அதற்கெடுக்குஞ் சான்றுகளை யெல்லாந் திரித்துப் பிழைபடுத்துவர் என்பதற்குச் 'சேரன் செங்குட்டுவன்' நூலார் ஓர் எடுத்துக்காட்டாயினர் கண்டீர்! தமிழ்நாட்டின் மேல்கரைக் கண்ணதான மலைநாட்டை அரசுபுரிந்த 'மாந்தரஞ் சேரல்'

1. Dr. V. Smith's 'The Early History of India' 1914, p. 284.

என்னுந் தமிழ்வேந்தற்குங், கீழ்கரைக்கண் வடுகநாட்டின் ஒரு சிறு பகுதியில் அரசாண்ட 'மண்டராஜா' என்பவற்கும் ஏதொரு தொடர்புங் காணப்படாமையின், தொடர்பில்லா அப் பெயர்களைத் தொடர்புபடுத்தி அவரெழுப்பிய போலிக் கொள்கை கீழே அடிப்படையின்மையின் நிலைபெறாது நுறுங்கிவிழுந் தழிந்தமை காண்க.

'மாந்தரஞ்சேரல்' என்னும் வேந்தன், வடமவண்ணக் கன்பேரிசாத்தனார் என்னும் புலவர் பெருமான் காலத்தவனென்பது கஉரு-ஆம் புறப்பாட்டால் இனிது விளங்கலானும், ஆசிரியர் நக்கீரனாராற் பாடப்பெற்ற 'பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சியநன்மாறனை' இவ்வடமவண்ணக்கன் பேரிசாத்தனாரும் பாடியிருத்தல் கக௯-ஆம் புறப்பாட்டாற் போதரலானும், கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பாதியி லிருந்தவராக முன்னரே பெறப்பட்ட (௩எகூ-ஆம் பக்கம்) நக்கீரனார் காலத்தில் 'மாந்தரஞ் சேரல்' இருந்தவனே யன்றிச், 'சேரன் செங்குட்டுவன்' நூலார் பிழைபொதுளக் கூறுமாறு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தவன் அல்லனென்று கடைப்பிடித் துணர்ந்து கொள்க.

இனி, முன்னரெடுத்துக் காட்டிய "பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர், சீர் மிகு பாடலிக்குழீஇக் கங்கை, நீர் முதற் கரந்த நிதியங்கொல்லோ" என்னுந் தமது பாட்டில் ஆசிரியர் மாமூலனார் பாடலிநகர் கங்கையாற்றின் வெள்ளத்தால் அழிந்து பட்டதனைக் குறித்திருக்கின்றாரெனவுங், கி. பி. நான்காம் நூற்றாண்டில் அங்குப் போந்து அந்நகரை நன்னிலையிற்கண்ட 'பாகியான்' என்னும் சீன அறிஞர் காலம் வரையில் அஃது அங்ஙனம் அழிந்துபட்டதெனக் கூறுதற்கு இடம் இன்மையின், கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அங்குப் போந்து அதனை அழிந்து பட்ட நிலைமையிற் கண்ட மற்றொரு சீன அறிஞரான ஹியூந் ஸ்தாங் காலத்திற்கு முன்னரே அஃது அவ்வாறு அழிந்து பட்டதாகல் வேண்டுமெனவும், அவ்விருவர் காலத்திற்கும் இடையே அஃது இன்னகாலத் தழிந்ததென உறுதிப்

படுத்துதற்குச் சான்றில்லையாயினுங் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் அதனழிவு நிகழ்ந்ததெனக் கருதுதல் இழுக்காதெனவும், ஆகவே ஆசிரியர் மாமூலனாருங் கடைச் சங்கமும் இருந்தகாலங் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டே யாகல் வேண்டுமெனவுஞ் 'சேரன் செங்குட்டுவன்' நூலார் துணிந்துரைத்தார்.

ஆசிரியர் மாமூலனரது மேற்காட்டிய செய்யுளடிகளிற், கங்கையாறு பாடலி நகரை அழித்த தென்னுஞ் செய்தி ஒரு சிறிதுங் கூறப்படவில்லை. அவ் வடிகளுக்குப் பொருள் "வென்ற போராற் பலபுகழ் நிறையப்பெற்ற நந்த அரசர் சிறப்பு மிகுந்த பாடலி நகரின்கண் தொகுத்துப், பின் பிறர் அறியாமைப் பொருட்டுக் கஙகையாற்று நீரின் அடியில் ஒளித்துவைத்த பொருட்டிரள் தானோ" என்பதேயாம். இங்ஙனம் வெளிப்படையாகப் பெறக் கிடைக்கும இச் செய்யுட் பொருளால், 'நந்தர்' எனப்படும் அரசர் திரண்ட பொருளைத் தமது பாடலி நகரின்கண் தொகுத்து வைத்தார்களென்பதும், அப் பொருட்டிரளினிருப்பைப் பகையரசர் அறிந்து அதனைக் கவர்ந்து கொள்ளாமைப் பொருட்டு அவர் கங்கையாற்றின் அடியிலே அறைகள் வெட்டிக் கட்டுவித்து அவற்றின்கண் அப் பொருண் முழுதும் ஒளித்து வைத்தார்களென்பதும் நன்கு விளங்குகின்றன. இச் செய்திக்கு முற்றும் இசைவான ஒரு வரலாறு, 'சந்திர குப்தன்' என்னும் பெயர்தாங்கி வெளிவந்த வடுகுநூல் ஒன்றிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றதென ஓர் அறிஞர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.[1] அது வருமாறு: "'மகாபத்மன்' மிக்க செல்வமுடையோன். நந்தனிடத்து 'மகாபத்மதனம்' இருந்தமையால் அவன் அப்பெயர் பெற்றான். நூறுகோடி கொண்டது ஒரு பத்மம், ஆயிரம் பத்மங் கொண்டது ஒரு மகாபத்மம். இவன் தனது ஆண்மையால் நிலைநிறுத்திய மகதநாட்டிலிருந்து வரி கடமை காணிக்கைகளை அருளும் இரக்கமுமின்றிக் கவர்ந்து, அங்ஙனங்

1. செந்தமிழ், கரு-ஆந்தொகுதி, கூஇக-ஆம் பக்கம் காண்க.

கவர்ந்த அப் பொருட்டிரளை யெல்லாங் குவியல் குவியலாகச் சேர்த்து வந்தமைபற்றி மிக்க செல்வனெனப் பெயர் பெற்றான். இவன் கங்கையாற்றின் நீரை ஒருபுறம் அணைகோலித் தடுத்து, அதனடியில் ஐந்து அறைகள் வெட்டுவித்து அவற்றை அழுத்தமான கற்சுவர்களால் அழியாதமைப்பித்து, அவற்றின்கண் அப் பொருட்டிரளை நிரப்பிப், பின்னர் உருக்கியோட்டிய ஈயத்தால் அவ்வறைகளை மூடுவித்து, அதன்பின் அணையை உடைப்பித்துக் கங்கை நீரை அவற்றின்மேல் ஓடச் செய்தனன்." தமிழ்நாட்டிலேயன்றி வடநாட்டிலுந் தொன்றுதொட்டு வழங்கிவந்த இவ் வரலாற்றின் இயல்பினை உற்றுநோக்குங்கால், இஃது இவ் விந்தியநாடு முழுதும் அஞ்ஞான்று பரம்பி வழங்கிய தொன்றுதல் நன்கு விளங்காநிற்கும். இதனானன்றே ஆசிரியர் மாமூலனார் 'அகநானூற்'றில் தாம்பாடிய மற்றையொரு செய்யுளிலும் (உடுக) "நந்தன் வெறுக்கை யெய்தினும்" என்று நந்தனது பெருஞ்செல்வத்தை வியந்துரைத்தார். 'வெறுக்கை' எனினுஞ் செல்வமெனினும் ஒக்கும். இவ்வாற்றாற் 'சேரன் செங்குட்டுவன்' நூலார், "நந்தர், பாடலிக் குழீஇக், கங்கை நீர்முதற்கரந்த நிதியம்" என்னும் ஆசிரியர் மாமூலனாரது பாட்டுக்கு உண்மைப் பொருள் காணஅறியாது, கங்கைநீர் பாடலியை அழித்ததென அதற்குப் பொருந்தாப் பொருளுரைத்து இழுக்கியிடர்ப்பட்டமை தெற்றெனப் புலனும். மாமூலனார் காலத்திற் பாடலிநகர் சிறப்புற்றிருந்தமை பற்றியே அதன்கண் நிகழ்ந்த செய்திகளைத் தெரிந்துரைத்தாராகலின், அதற்கு முரணாக அஃதழிந்துபட்ட காலத்தில் அவரிருந்தாரெனச் செங்குட்டுவன் நூலார் உரைத்த உரையும், அதுகொண்டு காட்டிய கோட்பாடும் பெரியதொரு தலைதடுமாற்றமாய் முடிந்தமை கண்டுகொள்க.

இனி, அச் 'சேரன் செங்குட்டுவன்' நூலார் ஆசிரியர் நக்கீரனார் இருந்த காலத்தை ஆராயப்புகுந்து, பழையன் மாறன் கிள்ளிவளவனை வென்ற செய்தி 'அகநானூறு' நூசசு-ஆஞ் செய்யுளில் நக்கீரனாற் கூறப்படுதல்

கொண்டும், அப் பழையன் மாறன் சேரன் செங்குட்டுவ ஞெடு பொருதானென்பது 'பதிற்றுப்பத்தில்' நுவலப் படுதல் கொண்டும் நக்கீரனர் சேரன்செங்குட்டுவன் காலத்தவராதல் வேண்டுமெனத் துணிந்துரைக்கின்றார்.

இனி, இவரது துணிவுரையின் பிழைபாடு இனைத் தென்பது ஆராய்ந்து காட்டுவாம்: மோகூர் மன்னன் என்னும் பெயரைக் கண்ட அளவானே அவன் 'பழையன் மாறனே' யாதல் வேண்டும் எனவும், 'பழையன் மாறன்' என்னும் பெயரைக் கண்ட அளவானே அவன் 'சேரன் செங்குட்டுவனொடு' பொருத 'பழையனே' யாதல் வேண்டு மெனவும் ஆராயாது முடிபுகட்டுதலில் மிக வல்லுநரான 'சேரன் செங்குட்டுவன்' நூலார் ஈண்டும் அங்ஙனமே ஆராயாது முடிபு கட்டுந் தமது வன்மையைக் காட்டு கின்றார். 'பழையன்' எனப் பெயர்பூண்ட சிற்றரசர் இருவர் மோகூரில் இருந்தன ரென்பதும், அவ் விருவரில் ஒருவன் 'தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன்' காலத் திலும், மற்றொருவன் அப் பழையற்குப் பேரனாய் அவற்கு ஒரு நூற்றாண்டு பிற்பட்டுச் 'சேரன் செங்குட்டுவன்' காலத்திலும் இருந்தனரென்பதை மேலே ௫௯௯, ௬௦௦-ஆம் பக்கங்களில் நன்கு விளக்கிக் காட்டினும். மோகூரிற் 'பழையன்' என்னும் பெயர்பூண்டிருந்த இவ்விரு சிற்றர சரேயன்றிப், போஓர்' என்னும் மற்றோர் ஊரிற் 'பழையன்' எனப் பெயர்பூண்டிருந்த சிற்றரசன் வேறொருவனும் உளன் என்பது அகநானூற்றிற் 'பரணர்' பாடிய கஅ௬, ௩௨௬-ஆஞ் செய்யுட்களானும் நன்கறியப்படும். எனவே, தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் காலந்தொட்டுச் சேரன் செங்குட்டுவன் காலம் வரையில், மோகூரிற் பழையன் எனப் பெயர்பூண்ட சிற்றரசர் இருவரும், 'போஓர்' என்னும் ஊரில் அப் பெயர் பூண்ட சிற்றரசன் வேறொருவனும் ஆகப் 'பழையர்' மூவர் இருந்தமை பெறப்படுதல் காண்க.

இங்ஙனமே, 'கிள்ளிவளவன்' எனப் பெயர்வாய்ந்த சோழ மன்னரும் அவ்வொரு நூற்றாண்டில் மூவர்

இருந்தமை பழைய தமிழ்நூல்களால் நன்கு புலனு கின்றது. 'புறநானூற்'றின், கூஎகூ-ஆஞ் செய்யுளாற் 'குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன்' என்பான் ஒரு வனும், கூச, கூரு முதலான பல செய்யுட்களாற் 'குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்' ஒருவனும், சிலப்பதி காரத்தானும் (நீர்ப்படைகாதை, ககஅ), மணிமேகலை யானும் (உரு, கச) அந் நூலாசிரியர்காலத் திருந்தவனகப் பெறப்படுங் 'கிள்ளிவளவன்' மற்றொருவனுமாக மூவர் பெறப்படுகின்றனர். கோவூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனார், மாறோக்கத்து நப்பசலையார் முதலான நல்லிசைப்புலவர் பலருங், கபிலர் என்னுஞ் சான்றோர் காலத்தவரென்பது நன்கறியக்கிடத்தலின், இப் புலவர் பெருமக்களாற் பாடப்பெற்ற முதலிரு கிள்ளிவளவருங் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியி லிருந்தோ ராதலும், மூன்றாங் கிள்ளிவளவன், கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்திருந்தோனாதலும் இனிது விளங்காநிற்கும். மற்று ஆசிரியர் நக்கீரனாரோ ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனார் முதலான சான்றோர் காலத் தவர் என்பதை மேலே ருஎசு, ருஅ0-ஆம் பக்கங்களில் விளக்கிப் போந்தாம். ஆகவே, நக்கீரனாராற் குறிப்பிடப் பட்ட பழையன் மாறனும், அவனைற் றோல்விபெற்ற கிள்ளி வளவனுங் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பாதியிலிருந்த வேறு மன்னராதல் வேண்டுமே. யன்றிச், சேரன் செங்குட் டுவனாற் றோலைவுண்ட பழையனும், அச் செங்குட்டுவற்கு மைத்துனனான கிள்ளிவளவனும் ஆகாரென்பதூஉந் தானே பெறப்படும்.

ஈதிங்ஙனமாகவுஞ், 'சேரன் செங்குட்டுவன்' நூலார் 'கிள்ளிவளவன்' என்னும் பெயரைக் கண்டதுணையானே அவ் வளவன் செங்குட்டுவன் மைத்துனனேயாதல் வேண்டுமென ஆராயாது முடிபு கட்டியது நிரம்பவும் பிழைபாடான தொன்றும். மேலும் அவர், இவ் வளவன், கரிகாலனுக்கு மகனாதல் வேண்டுமெனவும் ஏதொரு சான்றுங் காட்டாது கூறினார் (சேரன் செங்குட்டுவன்,

பக்கம், கOஉ). கரிகாற் பெருவளத்தானுக்கும் சேரன் செங்குட்டுவனுக்கும் இடையே இரண்டு தலைமுறையாதல் சென்றதாகல் வேண்டுமென்பதை மேலே சகூக, சகூஉ-ஆம் பக்கங்களில் விளக்கிக்காட்டினும். அதனால், மூன்றாங்கிள்ளி வளவன் கரிகாற் சோழனுக்குப் பேரனாகவாதல் பேரன் மகனாகவாதல் இருத்தல் வேண்டுமேயல்லாமல், அவனுக்கு மகனாதல் ஒருவாற்றானுஞ் செல்லாதென உணர்ந்து கொள்க. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் உறையூரைத் தலைநகராய்க் கொண்டு அரசு புரிந்தோ னென்பது நகூ-ஆம் புறப்பாட்டால் அறியப் படுதலின், அவன் காலத்திற் புகார் நகரில் (காவிரிப்பூம் பட்டினத்தில்) அரசு செலுத்தின கரிகாற் சோழன் அவ னுக்குத் தந்தையோ உடன்பிறந்தானோ ஆதல்வேண்டும். மற்றுக் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவனும் அக் காலத்தவனே யாதலின், அவன் கரிகாற் பெருவளத்தா னுக்குப் பின் புகார் நகரில் அரசுபுரிந்தோனாகற்பாலன். இவ்விரண்டாங் கிள்ளிவளவனுக்குப்பின் சோழன் கோச் செங்கணானும் அவனுக்குப்பின் மூன்றாங் கிள்ளிவளவனும் புகார்நகரிற் செங்கோல் செலுத்தினார் ஆகற்பாலார். 'களவழி' பாடிய பொய்கையார், கபிலர் காலத்தையடுத்தும் நக்கீரனார் காலத்தும் இருந்தவரென்பது நிசுO-ஆம் பக்கத்திற் காட்டினேமாதலின், பொய்கையாராற் பாடப் பெற்ற கோச்செங்கணான், கரிகாற் பெருவளத்தானுக்குப் பின் அரசாண்டவன் எனக் கோடலே பொருத்தமாம் என்க. எனவே, செங்குட்டுவன் மைத்துனனான கிள்ளி வளவன், சோழன் கோச்செங்கணானுக்குப் பின் காவிரிப் பூம்பட்டினத்தில் அரசு செலுத்தினமை தெளிபொருளாக லின் இவன் கரிகாலனுக்குப் பேரன் முறையனாகற்பாலனே யன்றி, மகன் முறையனாதல் ஒருவாற்றானுஞ் செல்லா தென விடுக்க.

இனிக், கூடல் நகரிற் பழையன் மாறனாற் சாய்ப் புண்ட கிள்ளிவளவன் 'களவழி' பாடிய பொய்கையார் காலத்தவன் என்பது, அங்ஙனம் அவன் சாய்ப்புண்ட

தனைக் கண்டு உளம் மகிழ்ந்த 'கோக்கோதைமார்பன்' என்னுஞ் சேரமன்னனை அப் பொய்கையார் பாடியிருத்தலே (புறநானூறு, ௪௮, ௪௯) சான்றும். இக் கோக்கோதை மார்பனை நக்கீரனுருந் தமது செய்யுளிற் குறிப்பிட்டிருத் தலே மேலே காட்டினும். ஆகவே, பழையன் மாறனுற் ருேல்வியுற்ற கிள்ளிவளவன் கி. பி. முதல் நூற்ருண்டின் நடுவிலிருந்த நக்கீரனுர் காலத்தவனேயன்றிக், கி. பி. இரண்டாம் நூற்ருண்டின் பிற் பகுதியிலிருந்த இளங்கோ வடிகளின் காலத்தவனுன மூன்ருங் கிள்ளிவளவன் அல்ல னென ஓர்ந்து கொள்க. மேலும், இம் மூன்ருங் கிள்ளி வளவனெடு பகைத்து இவற்குத் தீதுசெய்தோர் சோழர் குடியிற் பிறந்த ஒன்பது குறுநில மன்னரே யல்லாமற், பழையன்மாறன் அல்லன் ; இது,

"நின், மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொருஅர் ஏவல் கேளார்
வளநா டழிக்கும் மாண்பின ராதலின்
ஒன்பது குடையும் ஒருபக லொழித்தவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்."
(௨௭, ௧௧௮-௧௨௩)

என்று சிலப்பதிகாரமும்,

"ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோன்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து." (௫, பதிகம்)

என்று பதிற்றுப்பத்தும் நுவலுமாற்ருன் அறிந்துகொள்ளப் படும். எனவே, பழையன் மாறனெடு பகைத்து வீழ்ந்த வன், மூன்ருங் கிள்ளிவளவனுக்குப் பாட்டனுகக் கருதப் படுதற்குரிய நக்கீரனுர் காலத்துக் கிள்ளிவளவனேயென் பது தெளிபொருளாம் என்க.

அற்றேல், மூனருங கிள்ளிவளவனுக்கு மைத்துன னுன சேரன்செங்குட்டுவன், மோகூர் மன்னன் பழைய னைத் தாக்கினனென்னும் வரலாறும் உளதாலோவெனின்; தனக்குப் பகைவனுதல்பற்றி அவனை அவன் தாக்கின

னென்பது சிலப்பதிகாரத்தானும் (உள, க௨௪-க௨௫), பதிற்றுப்பத்தானும் (ரு, ௪௪, ௪௯, பதிகம்) பெறப்படுகின்றதேயல்லாமற், கிள்ளிவளவனுக்குப் பகையாதல் பற்றித் தாக்கின னென்பது பெறப்படாமையால், அதுகொண்டு ஈண்டைக்காவதோர் இழுக்கில்லையென உணர்ந்து கொள்க. அதுவேயுமன்றிப். 'பழையன் மாறன்' என்னும் பெயர்க்கும், 'பழையன்' என்னும் பெயர்க்கும் உள்ள வேற்றுமையுங் கருதற் பாற்று. சேரன்செங்குட்டுவனுல் தாக்குண்டோன் மேற் காட்டிய இரு நூல்களினும் 'பழையன்' எனப்பெயர் சொல்லப்பட்டானே யன்றிப் 'பழையன் மாறன்' எனப் பெயர் சொல்லப்பட்டிலன். அகநானூற்றின் நக்கீரனுர் செய்யுளிற் சொல்லப்பட்டவனே, "இழையணி யானைப் பழையன் மாறன்" எனப் பெயர் சொல்லப்பட்டவனுயிருக்கின்ருன்; மேலும், அப் பழையன்மாறன் மோகூர்மன்னன் என்பது அவராற் சொல்லப்படாமல், அவன் கூடன்மா நகரிலிருந்துகொண்டு ஆண்டு வந்தெதிர்த்த கிள்ளிவளவனைச் சாய்த்தன னென்னுந் துணையே சொல்லப்பட்டமையால் அப் பழையன் மாறன் பாண்டிய மன்னன் படைத்தலைவனேயாதல் உய்த்துணர்ந்து கொள்ளப்படும். நக்கீரனுர் காலத்துப் பாண்டியனும் (இவன் 'இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன் மாறனுய்'[1] இருக்கலாம்), சேரமான் கோக்கோதைமார்பனுங் கூடலில் ஒருங்கு படைகூட்டிப் 'பழையன் மாறனைப்' படைத்தலைவனுய்க் கொண்டு நிற்க, அவரை அஞ்ஞான்று வந்தெதிர்த்த 'கிள்ளிவளவன்' என்னுஞ் சோழனையே பழையன்மாறன் சாய்த்தானுதல் வேண்டும் என்று ஓர்ந்துகொள்க. இங்ஙனம் இவரை வந்தெதிர்த்த கிள்ளிவளவன், கரிகாற் சோழனுக்குப்பின் உறையூரிலாதல் புகாரிலாதல் அப்பெயர் பூண்டு அரசாண்ட இருவரில் ஒருவராதல் வேண்டுமென்பதூஉம் உய்த்துணரப்படும். படவே, பழையன் மாறனுற் சாய்ந்த கிள்ளிவளவன் பாட்டனும், சேரன்செங்குட்டுவன் மைத்துனனுன கிள்ளிவளவன் பேரனும் ஆவராகலின், வேறுவேருன அவ் விருவரையும்

1. புறநானூறு, ௫௬.

ஒன்று படுத்திய 'சேரன் செங்குட்டுவன்' நூலாரது கோள் பெரியதொரு வழுக்கோளாமென விடுக்க. நக்கீரனாரற் சொல்லப்பட்ட பழையன் மாறனும், அவனாற் சாய்ப்புண்ட கிள்ளி வளவனும் சேரன்செங்குட்டுவன் காலத்தினர் அல்ல ரென்பது தெளியப்படவே, ஆசிரியர் நக்கீரனாரும் அச் சேரன் காலத்தவர் அல்லரென்பதூஉம், அவர் அவனுக்கு இரண்டு தலைமுறை முற்பட்டவராவ ரென்ப தூஉந் தெளியப்படும்; படவே, நக்கீரனாருஞ் செங்குட்டுவனும் ஒரு காலத்தவரென்ற சேரன்செங்குட்டுவன் நூலாருரை பொருந்தாவுரையானமை கண்டு கொள்க.

இனிச், 'சேரன்செங்குட்டுவன்' நூலார், இறையனாரகப் பொருளுக்கு ஆசிரியர் நக்கீரனார் உரைத்த உரை யாராய்ச்சியில் இறங்கி, அவ்வுரை வாய்ப்பாடமாகப் பத்துத் தலைமுறை வரையில் ஓதப்பட்டுவந்து, இடை யிடையே பல திரிவுபாடுகள் உடைத்தாய்க், கடை முறை யாகக் கி. பி. எட்டாம் நூற்றாண்டிலேயே எழுத்துரு வடைந்ததென்றும், தலைமுறையொன்றுக்கு முப்பதாண் டாகப் பத்துத் தலைமுறைக்கும் முந்நூறாண்டு கூட்ட நக்கீரனார் இருந்தது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு மேற்படாதென்றுங் கூறினர். இவர் இவ்வாறு கூறு நிற்கத், 'தமிழ்வரலாறு' உடையாரோ இறையனாரகப்பொரு ளுரை ஊர் பெயர் தெரியாத ஒருவரால் எழுதப்பட்டதே யன்றி நக்கீரனாரால் எழுதப்பட்டதன்று (தமிழ் வரலாறு, பிற்பாகம், பக்கம், உக) என உரைப்பர். இவர்வழிச் சார்ந் தார் சிலரும் இங்ஙனமே உரையாநிற்பர்.

இற்றைக்கு இருபத்து நான்கு ஆண்டுகட்கு முன்னரே யாம் 'சேரன்செங்குட்டுவன்' நூலாரொடு வழக்கிட்டு, 'இறையனாரகப் பொரு'ளுக்கு நக்கீரனார் வரைந்த உரையே இஞ்ஞான்றும் நடைபெறுகின்றதெனவும், அவ்வுரையின் பாயிரப்பகுதியிற் சில உரைக் கூறுகளும், உரையின் இடை யிடையே கட்டளைக் கலித்துறைப் பாட்டுக்களும் பின் வந்தோராற் சேர்க்கப்பட்டிருத்தல் கொண்டு, அவ்வுரை முழுதும் நக்கீரனார் உரைத்தபடியாகவன்றிப் பெரிதுந்

திரிபெய்தி வந்துளதென்றலும், அது வாய்ப்பாடமாக ஓதப்பட்டு வந்து பிற்காலத்தேதான் எழுத்துருவடைந்த தென்றலும் பொருந்தா எனவும் ௧௬௦௨-ஆம் ஆண்டு வெளிப்போந்த ஞானசாகர முதற்பதுமத்தின் ௬, ௧௦-ஆம் இதழ்களில் விரித்து விளக்கினேம். இறையனாரகப் பொருளுரை நக்கீரனாரதுரையென்றே நிறுவிய எம்முடைய ஏதுக்களை இதுகாறும் மறுத்தார் எவரும் இலர். யாங் காட்டிய ஏதுக்களை மருமலும், எம்மால் மறுக்கப்பட்டொழிந்த தங் கூற்றுக்களைப் பெயர்த்தும் நிலைநிறுத்திக் கொள்ளாமலுந் தாம் முதலிற் கூறிய கூற்றுக்களையே திரும்பத் திரும்பக் கூறி அவ் விழுமியவுரை நக்கீரனாரது அன்று என்னும் ஒரு போலிக் கொள்கையினை எங்கும் பரப்புதலிலேயே எமக்கு மாறுவார் கருத்துற்று நிற்கின்றனர் பழைய செந்தமிழ் நூலுரைகளின் சொற்சுவை பொருட்சுவைகளில் ஊறி, அவ்வந் நூலாசிரியர்களின் உரைவன்மை மென்மைகளையும், அவ் வவர்க்குள்ள சொற் பொருட்டிட்ப நுட்ப வேறுபாடுகளையும் நன்கு பகுத்துக் காணவல்ல நுட்ப வுணர்வினார்க்கு, அவர் பரப்பும் அப் போலிக் கொள்கையின் பெற்றி தெற்றெனப் புலப்பட்டு விடும். அத்துணை நுண்ணுணர்வு வாய்ப்பப்பெறுதார் அப் போலிக் கோட்பாட்டினைக் கண்டு மருளாமைப் பொருட்டு, இறையனார் களவியலுரையென வழங்குவது ஆசிரியர் நக்கீரனார் அருளிய உரையேயா மென்பதூஉம், அவ்வுரையின் பாயிரப் பகுதியிற் காணப்படுஞ் சில உரைக் கூறுகளும், அவ் வுரையின் இடையிடையே காணப்படுங் கட்டளைக் கலித்துறைப் பாட்டுக்களும், அப் பாட்டுகள் ஒரு சிலவற்றிற்கு எழுந்த ஒரு சில விளக்கவுரைச் சிறு பகுதிகளுமே பிற்காலத்தவராற் சேர்க்கப்பட்டனவா மென்பதூஉம், இவையல்லாத ஏனை உரைப்பெரும் பகுதி முற்றும் நக்கீரனார் உரைத்தபடியாகவே இன்றுகாறும் வழங்கப்பட்டு வருகின்றதென்பதூஉம் பெயர்த்தும் ஈண்டு விளக்கிக்காட்டுவாம்:

பயில்வாரது உணர்வினை இன்புறுத்தி அவரது கருத்தைத் தம்மாட்டு ஈர்க்கவல்ல தீஞ்சுவைகெழுமித்

தெவிட்டா அமிழ்தமாய் விளங்கும் அரும்பெருந் தமிழ்ப் பாட்டுகளை இயற்றி இயற்றிப் பழுத்த சொல்லும் பழுத்த பொருளும் வாய்ப்பப் பெற்றாரான ஒரு மாப்பெருந் தமிழ்ப் புலவரால் இறையனாரகப் பொருள் உரை எழுதப்பட்ட தென்பதற்கு வேண்டும் அடையாளங்கள் அவ் வுரையின் முதல் இடை கடை யெங்கும் மிளிர்ந்து காணப்படுகின்றன. அவ் வடையாளங்கள் முற்றும் ஈண்டு எடுத்துக் காட்டலுறின் இது மிக விரியுமாகலான், அவற்றுள் ஒரு சிலவே காட்டுதும்.

இறையனாரகப் பொருள் உ-ஆஞ் சூத்திர உரையுள்,

"ஆயின், இவ் வகைப்பட்ட ஆயத்திடை மேனாட் பிரிந்து பயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோ வெனின் நிற்கும்; தான் பயின்ற இடம் தன் ஆயத்தி னோடு ஒக்குமாகலான் என்பது. யாங்ஙனம் நிற்குமோ வெனின், சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தீம்பல வும் ஆசினியும் அசோகமுங் கோங்கும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங் கமழ்ந்து, பாதிரியும் பாவைஞாழலும் பைங்கொன்றை யொடு பிணிய விழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக் குயில்கள் இசை பாடத், தண் டென்றல் இடை விராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண், ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல் களி கூர்ந்து தன் செம்மலர்ச் சீறடிமேற் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம் மலரணிக் கொம்பர் நடைகற்ப தென நடந்துசென்று, நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்தவிடத்து, மரகதமணி விளிம் படுத்த மாணிக்கச்சுனை மருங்கினதோர் மாதவி வல்லி மண்டபத்துப், போதுவேய்ந்த பூநாறு கொழு

நிழற் கீழ்க் கடிக்குருக்கத்தி கொடிப் பிடித்துத் தகடு படு சிகரங்களின் முகடுதொடுத்து ஞான்றுவந்து இழிதரும் அருவி பொன்கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தொடு வயிரம் உந்தி அணிகிளர் அருவி ஆடகப்பாறைமேல் அதிர் குரன் முரசின் கண் ணிரட்ட, வண்டுந் தேனும் யாழ்முரல, வரிக்குயிலுங் கிளியும் பாடத், தண்டாது தவிசுபடப் போர்த்த தோர் பளிக்குப்பாறை மணித்தலத்துமிசை நீல ஆல வட்டம் விரித்தாற்போலத் தன் கோலக்கலாவங் கொளவிரித்து முளையிள ஞாயிற்று இளவெயில் எறிப்ப ஓர் இளமயில் ஆடுவது நோக்கிநின்ருள்." எனவும்,

உகூ-ஆஞ் சூத்திர உரையுள்,

"இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தானும், பாங்கற் கூட்டங் கூடியானுந் தெருண்டு வரைந்தெய்த லாற்றுத் தமரை விடும்; விட்டவிடத்து அவர் மறுப்ப, அஃது இலக்கணமாகலான்; அங்ஙனம் மறுத்த விடத்துத் தலைமகள் வேறுபடும். எம்பெருமான் மறுக்கப்பட்டமையான் மற்றொருவாருங் கொல்லோ வெனக் கலங்கி வேறுபாடு எய்தின பொழுதே தோழிக்குப் புலனும்; புலனுயினவிடத்து, எம்பெரு மாட்டி! நினக்கு இவ் வேறுபாடு எற்றினுன் ஆயிற் றென்னும். என்றவிடத்து, இஃதெனக்குப் பட்டது, இன்னவிடத்து ஒருஞான்று நீயும் ஆயங்களுந் தழையுங் கண்ணியுங் கோடற்கு எண்ணிச் சிறிது நீங்கினுய்; யான் நின்று ஒரு மணிச்சுனை கண்டேன்; கண்ட அம் மணிச்சுனை தான் ஆம்பலே குவளையே நெய்தலே தாமரையே என்றிப் பூக்களால் மயங்கிடும் மேதக்கது; கண்டு வேட்கையான் ஆடுவான் இழிந் தேன்; இழுக்கிக் குட்டம் புக்கேன்; புக்குத் தோழியோ வென நீ அங்ஙனங் கேளாயாயினுயாக, ஒரு தோன்றல் வந்து தோன்றி எனது துயர் நீக்குதற்காகத் தன் கை நீட்டினுன்; நீட்ட, யானும் மலக்கத்தான் நின்கை

யெனப் பற்றினேன்; பற்ற, வாங்கிக் கரைமேல் நிறீஇ நீங்கினன்; நீ அன்று கவலுதியெனச் சொல்லேனாயி னேன். நீ எவ்வெல்லைக் கண்ணுங் கைவிடாதாய்க்கு அஞ்ஞான்று கைவிடலாயிற்று விதியாகாதே? இனிப் பிறிதொன்றாங் கொல்லோவெனக் கலங்கி வேறு பட்டே னென்று தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நிற்கும்" எனவும்,

ருகூ-ஆஞ் சூத்திர உரையுள்,

"இயற்கைப் புணர்ச்சியின் விளையாட் டொக்கல் வேற்றிடம் படர இருவருந் தம்முட் டலைப்பெய்யு மாறும், புணருமிடத்துத் தன்மையும்; அது கன்மேற் பொதும்புபட்டுக் கோட்டுப்பூவுங் கொடிப் பூவும் நிரந்து, நீர்த்துறைமேற் சித்திரபடாம் விரித்தாலே போன்று, வண்டுந் தும்பியும் வரிக்கடைப் பிரசமும் யாழுங் குழலும் முரன்று, கடற்கரையுங் கானியாறும் முழவுந்துடியும் பாடியம்ப, இரவோரன்ன கொழு நிழற்றாய், நிலவோரன்ன வெண்மண லொழுகி, அகத் தார் புறத்தாரைக் காண்டலெளிதாய்ப், புறத்தார் அகத்தாரைக் காண்டல் அரிதாய், வாரேரும் விழைவைத் தவிர்த்தோரும் விரும்பும் பொழிலுள்"

எனவும், அவ்வுரையின் முதலிடை கடைகளிற் காணப்படும் இப் பகுதிகளைப் போலவே அவ் வுரையின் மற்றைப் பல இடங்களிலுஞ் செய்யுட்சுவை மலிந்த வளவிய உரைநடை காணப்படுகின்றது. இங்ஙனம் அவ்வுரையின் துவக்கம் முதல் அதன் ஈறுவரையிற் செய்யுள்நடை விரவிய ஒரே வகையான உரைச்சுவை கிளர்ந்து திகழுதலின், இறைய னாகப் பொருளுரையினை இயற்றினவர், செய்யுளியற்றுந் திறன்மிக்க ஒரு மாப்பெரும்புலவரா யன்றிப், பிறரொருவர் ஆகாமை செந்தமிழ்நடை வேறுபாடுகளை நன்கு பகுத் துணரவல்லார் எவர்க்கும் எளிதின் விளங்கற் பாலதே யாம். இவ்வாறு செய்யுட்சுவை தோய்ந்த உரைநடை, இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், அடியார்க்கு

நல்லார், பரிமேலழகியார், நச்சினார்க்கினியர் முதலான வேறு உரைகாரர்தம் உரைகளுள் யாண்டுங் காணப்படா மையின், இறையனாரகப் பொருளுரை அவ்வுரைகாரருள் ஒருவரால் இயற்றப்பட்டதாகாமையும் இனிது விளங்கற் பாற்றும். விரிந்தவுரை எழுதுதலில் வல்லரான பேராசிரியர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் என்பவருஞ் சிற்சில இடங்களில் நக்கீரனாரது உரைபோற் செய்யுள் நடை விராய விழுமிய உரை எழுத முயன்று பார்த்தன ராயினும், அஃது அவர்க்கு நன்கு வாயாமையின், அவ ரெல்லாந் தம் உரைகளை அம்முறையில் முற்றும் எழுத மாட்டாராய் அம்முயற்சியைக் கைவிட்டனர். மேலுஞ், சூத் திரங்களின் சொற்பொருளை விடாமல் அவற்றைக் கௌவிக் கொண்டே சென்று பேருரை விரிப்பார் ஆசிரியர் நக்கீரனா ரைத் தவிர வேறொருவரைக் காண்டல் இயலாது; பிற் காலத்திருந்த சிவஞான முனிவருங்கூட நக்கீரனார்க்கு ஈடாகார்.

இனி, இளம்பூரணர், சேனாவரையர், பரிமேலழகியார் என்னும் உரைகாரர் மூவருஞ் சொற்பொருட் டிட்ப நுட் பங்கள் செறிந்த உரைகள் எழுதுதற்கண் வல்லுநராயி னும், இளம்பூரணரும் பரிமேலழகியாருஞ் சுருக்கவுரை களே வரைந்தனர்; சேனாவரையரோ விரிவுரை யெழுத மாட்டுவாராயினும், அவரதுரையும், ஏனை இளம்பூரணர் பரிமேலழகியார் உரையுந் திறமான சொற்செறிவுடை யனவே யல்லாமல், நக்கீரனாரது உரைபோல் நெகிழவேண் டும் பதத்து நெகிழ்ந்தும், இறுகவேண்டும் பதத்து இறுகி யும், நல்லிசைப் புலமை மலிந்த செய்யுட்போல் நகை, அழுகை, இழிபு, வியப்பு, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடு தோற்றுவிக்கும் எண்வகைச்சுவை வாய்ந்துஞ் செல்வன அல்ல. அதுவேயு மன்றி, அவைக்களத்தே கேட்பார்ப் பிணிக்குந் தகைத் தான பேருரை நிகழ்த்தும் பேராற்றல் வாய்ந்தோர் தாங் கூறும்பொருளை வினாவும் விடையுமாய் வைத்துத் தருக்க நூன்முறை வழாது தொடர்புபடுத்து விளக்கிச்

செல்லுமாறு போலவும், சொல்லேயும் பொருளேயும் அடுக்கடுக்காய் நுவன்று நகைவேண்டும்பொழுது நகையும், அழுகை வேண்டும்பொழுது அழுகையும், இழிபு வேண்டும் பொழுது இழிபும், வியப்பு அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்பன வேண்டும்பொழுது அவ்வம் மெய்ப்பாடுகளுங் கிளர்ந்து தோன்றுமாறு சொன்மாரிபொழிந்து நிகரின்றிச் செல்லுமாறு போலவும் ஆசிரியர் நக்கீரனரது உரையினமைப்பும் பொலிந்து திகழ்கின்றது; இத்தகையதொரு விழுமிய அமைப்பு ஏனே யுரையாசிரியர் எவரிடத்தும் முற்றக் காணப்படுகின்றிலது. பேராசிரியர் இவ்வுரையமைப்பைப் பின்பற்றிச் செல்லச் சால விழைந்தனரேனும், ஒரோவொருகாலன்றி அஃது அவர்க்கு முற்றுங் கைகூடிற்றில்லே. இங்ஙனமாக ஏனே எவரானும் ஆக்குதற்கேலாத ஆசிரியர் நக்கீரனரது உரையின்மாட்சி, அவ்வுரையின் முதல், இடை கடை யென்னும் மூன்றிடங்களினின்றும் மேலெடுத்துக் காட்டிய உரைக்கூறுகளால் இனிது விளங்கா நிற்கும். என்றாலும், ஈண்டு எடுத்துக் காட்டிய அவரது உரையின் நலந் தெற்றெனப் புலனுதற் பொருட்டு, அதன்கணிருந்து மீண்டும் ஓர் உரைப் பகுதியினே ஈண்டெடுத்துக் காட்டுதும் :

௩௫-ஆம் சூத்திர உரை

"இனி ஓதற்குப் பிரியும் பிரிவு முன்வைக்கப் பட்டது; தலையான பிரிவாகலானும், உயர்ந்தோர்க்கு உரித்தாகலானும் என்பது. பரத்தையிற் பிரிவு பின்வைக்கப்பட்டது, காமம் பின்வைத் தெண்ணப் படுமாகலான் என்பது. அஃதேயெனின், இவர், முன் பொருவிறந்தார் என்பதனெடு மாறுகொண்டது இச் சூத்திரம்; என்னேயோவெனின், தலைமகளே எய்தியிருந்தே இவன் ஓதுவான் பிரிவானெனின், முன் ஞானமிலனும்; இலனுகவே, ஞானத்தின் வழியது ஒழுக்கமாகலானும் ஒழுக்கத்தின் வழித்துத் தலைக் குலமாகலானும் இவையெல்லாங் குறைவுபட்டானு மென்பது. இனிக் காவல் என்பது இவன் நாட்டைப்

பிறர் புகுந்து அலைப்பதுங் கொள்வதுஞ் செய்ய அவரை நீக்குதற்கு நீங்குமேயெனின் ஆண்மையிற் குறைபட்டானும் என்பது. இனிப் பகைதணி வினை யென்பது சந்துசெய்வித்தற்குப் பிரிவது, அங்ஙனம் பிரியுமேயெனின் தூதுவனாயினானும்; தூதுவராவார் பிறர்க்குப் பணிசெய்து வாழ்வாராவர், அவரது பொருவிறப்பு என்னையோவென்பது. இனி வேந்தற் குற்றுழிப் பிரியுமேயெனின், கருமச் சேவகனும்; கருமஞ் செய்வதென்பது இறப்பவும் இளிவந்தோர் ஒழுக்கம்; பிறர் குறிப்பின்றித் தன் குறிப்பில்லை யெனப்படும்; ஆகலின் அவரது பொருவிறப்பு என்னையோவென்பது. இனிப் பொருள்வயிற் பிரியுமே யெனின், முன்னர்ப் பொருள் இலன் ஆயினானும்; ஆகவே, எள்ளுநர்ப் பணித்தலும் இரந்தோர்க்கு ஈதலும் என்னும் இவையெல்லாம் பொருட்குறைபாடு உடையார்க்கு நிகழாமையின் இக் குறைபாடெல்லாம் உடையனும்; அவையுடையானது பொருவிறப்பு என்னையோ வென்பது. இனிப் பரத்தையர்மாட்டுப் பிரியுமேயெனின், இவன் கண்டார்கண் தாழ்வானும்; ஆகலான், தலைமகள்மாட்டுக் கிடந்த அன்பிலன் ஆயினானும்; அல்லதூஉங் கண்டுழியெல்லாம் உள் ளத்தைச் செலீஇ உள்ளத்தின்வழி ஓடுமாகலான் நிறை இலனாயினானும்; நிறையிலானது பொரு விறப்பு என்னையோவென்பது. இவையெல்லாஞ் சொல்லப் பெரிது மாறுகொண்டு காட்டிற் றெனின், மாறுகொள்ளாது; மாறுகொள்ளாவாறு என்னையோ வெனின், ஓதற்குப் பிரியுமென்பது கற்பான் பிரியுமென்பதன்று; பண்டே குரவர்களாற் கற்பிக் கப்பட்டுக், கற்றான் அறம் பொருள் இன்பம் வீடு பேறுகளை நுதலிய நூல்களெல்லாம்; பரதேசங் களினும் அவை வல்லார் உளரேற் காண்பல் என்றும், வல்லார்கள் உள்வழிச்சென்று என் ஞானம் மேற் படுத்து அவர் ஞானங் கீழ்ப்படுப்பல் என்றும் பிரியு மெனக்கொள்க, இனிக் காத்தற்குப் பிரியுமென்பது

நலிவார் உளராக நலிவுகாத்தற்குப் பிரியுமென்ப தன்று; நாட்டகத்து நின்றும் நகரகத்துந் தமக்கு உற்றது உரைக்கல்லாத மூத்தார்களும் பெண்டிர்களும் இருகை முடவருங் கூனருங் குருடரும் பிணியுடையாரும் என இத் தொடக்கத்தார் தம் முறைக் கருமங் கேட்டுத் திருத்துதற் பொருட்டாகவும், காட்டகத்து வாழும் உயிர்ச் சாதிகள் ஒன்றனை யொன்று நலிவன உளவாயினவிடத்துத் தீதென்று அவற்றை முறைசெய்தற்குங் கொடிய வலைப்பட்டுக் கிடந்தனவற்றைத் துறைநீக்குதற் பொருட்டாகவும், வளன் இல்வழி வளந் தோற்றுவித்தற் பொருட்டாகவுந், தேவ குலமே சாலையே அம்பலமே என்று இத் தொடக்கத்தனவற்றை ஆராய்தற்கும், அழிகுடியோம்புதற்கும் பிரியுமென்பது; அல்லதூஉம், பிறந்த உயிர் தாயைக் கண்டு இன்புறுவதுபோலத் தன்னாற் காக்கப்படும் உயிர்வாழ்சாதிகள் தன்னைக்கண்டு இன்புறுதலின், தான் அவர்கட்குத் தன் உருக் காட்டுதற்கும், மாற்றரசர் ஒற்று வந்தவிடத்து அவர் முன்னந் தனது ஊக்கங் காட்டுதற்பொருட்டாகவும் பிரியும்; அதனானே மாற்றரசருந் திறை கொடுப்பரென்பது. இனிப் பகைதணிவினையென்பது, தூதுவர்போலச் சந்து செய்வித்தற்குப் பிரியுமென்பதன்று; இருவர் அரசர் நாளைப்பொருதும் இன்றுபொருதும் என்று முரண்கொண்டு இருந்த நிலைமைக்கண், தான் அருளரசனாகலின் இம் மக்களும் இவ் விலங்குகளுமெல்லாம் பட இவ் விரண்டு குலத்திற்கும் ஏதம் நிகழும்; அதனால் இப்போரொழிப்பனென்று இருவரையும் இரந்து சந்துசெய்வித்தலுமொன்று; அல்லதூஉந், தேவரும் அசுரரும் பொருதகாலத்துத் தேவர்களையும் அசுரர்களையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யானெனப் பாண்டியன் மாகீர்த்தி சந்துசெய்வித்ததுபோல் இருவரின் மிகைசெய்தீரை ஒறுப்பலென்று சந்து செய்வித்தலுமொன்று; இருவரையும் ஒறுக்குந் துணை

ஆற்றலுடையனாகலானென்பது. அஃதேயெனின், தன்னகத்து இருந்துவிட அமையாதோ அன்ன ஆற்றலனாகலான், தான் செல்லவேண்டுமோவெனின், செல்லவேண்டும்; என்னை? காதலரைப் பிரிந்து ஒருகருமம் முடிப்பதனின் மிக்க ஆள்வினை இல்லையாக லானென்பது; ஆதலாற் பிரிந்தே சந்துசெய்விக்கு மென்பது. இனி, வேந்தற் குற்றுழியென்பது அவற் குச் சேவகனாய்ப்பிரியுமெனபதன்று, தனக்கு நட்டான் ஓரரசன் சென்றவிடத்து அவற்கு ஆய மறுதலையை வென்று நீக்குதற்குப் பிரியுமென்பது. இனிப், பொருட்பிணியென்பது, பொருளிலனாய்ப் பிரியுமென்ப தன்று; தன் முதுகுரவராற் படைக்கப்பட்ட பல் வேறு வகைப்பட்ட பொருள்களெல்லாங் கிடந்தது மன், அதுகொடு துய்ப்பது ஆண்மைத்தன்மையன் றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள் கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியுமென்பது; அல்லதூஉந் தேவர்காரியமும் பிதிரர்காரியமுந் தனது தாளாற்றலாற் படைத்தபொருளாற்செய்தன வல்லது பயன்படாது; என்னை, 'தாயப்பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறார்' ஆகலான்; அவர்களையும் இன்புறுத்துதற்குப் பிரியுமென்பது. இனிப் பரத்தை யென்பது பொதுப்பெண்டிர்மாட்டுப் பிரிவு; இவள்கண் அன்பிலனாய்க்கண்டார்கட் டாழ்ந்து நிறைஇலனாய்ப் பிரிந்தான் அல்லன்; என்னை? தலை மகளின் நீங்கி ஆடல் காண்பல் பாடல் கேட்பல் எனப் பிரியும்; பிரிய, அவற்றின்கட் சென்ற உணர்வு தலைமகண்மாட்டு நின்ற உணர்வினை மறைப்பிக்கும்; என்னை? இரண்டுணர்வு உடன் நில்லாமையின்; அவ்வகை மறைப்ப இவர் கண்ணதே உள்ளமா மென்பது; என்னை? தாம் இயல்பாகவேயும் பிறரான் நயக்கப்படும் வனப்புடையார் ஆடற்றகையானும் பாடற்குரலாலும் நயப்பித்துக் கொள்வமென்று எடுத்துக்கொண்டால், அவர்கண் நயப்புச் சொல்ல வேண்டுமோ வென்பது."

இவ்வாருக, 'இறையனாரகப்பொருளில்' அறுவகைப் பிரிவினை யுணர்த்தும் "ஓதல் காவல்" என்னும் ௩௫-ஆஞ் சூத்திரத்திற்கு ஆசிரியர் நக்கீரனார் விரித்த இவ்வுரைப் பகுதி தருக்க இயைபுஞ், சொற்பொருளடுக்குமுடைத் தாய்ப், பாச்சுவை விராய உரை நடைத்தாய்ப், பண்டைக் காலச் செந்தமிழ் வளந்துறுமி அகன்று ஆழ்ந்து தெளிந்து நிற்றல் காண்க. இத்தகையதோர் உரை, இளம்பூரணர் முதலான ஏனை யுரைகாரர் எவரானும் யாண்டும் எழுதப் பட்டதின்று. "ஓதல் பகையே தூதிவை பிரிவே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு (பொருள், அகத்திணை இயல், ௨௭), இளம்பூரணர் உரைத்த உரையெல்லாம்,

> "ஓதற்குப் பிரிதலாவது, தமது நாட்டகத்து வழங்காது பிறநாட்டகத்து வழங்கும்நூல் உள வன்றே, அவற்றினைக் கற்றல்வேண்டிப் பிரிதல். பகைவயிற் பிரிதலாவது மாற்றுவேந்தரொடு போர் கருதிப் பிரிதல். தூதிற்குப் பிரிதலாவது இருபெரு வேந்தரைச் சந்துசெய்தற் பொருட்டுப் பிரிதல்."

என்னும் இவ்வளவே. இனிப், பேராசிரியர் 'திருச்சிற்றம் பலக்கோவையார்' உரையில் அறுவகைப் பிரிவுகளை விளக்கியோதிய உரைக்கூறுகள் வருமாறு:

> "இவ் வண்ணம் முன்னர் ஓதலின்றி இவளை வரைந்த பின்னர் ஓதநின்றானோவெனின், அல்லன்; முன்னர் இவனைப் பொருவிறந்தா னென்று கூறப் படுதலால் ஓதி முடித்தானென்பது. இவன் தான் ஓதிய புருடார்த்தமாகிய தருமார்த்த காமங்களை ஒழிய வேறும் புருடார்த்தமாகக் கூறப்படுவன உளவோ வென்பதனை ஆராய வேண்டுங் கருத்தினை னுதலானும், கல்வியாற் றன்னிற் றாழ்ந்தாரைத் தனது கல்விமிகுதி காட்டி அவர்களை யறிவித்தல் தருமநூல் விதியாதலானும் பிரியும் என்பவாகலின்" (௩௦௮-ஆஞ் செய்யுள் முகவுரை). "இனிக், காவற் பிரிவென்பது, எல்லாவுயிர்களையும் அரசன் பாது காக்கவென்னுந் தருமநூல்விதியான் அக் காவற்குப்

பிரிதல்" (௩கஉ-ஆஞ் செய்யுள் முகவுரை). "இனிப், பகைதணிவினைப் பிரிவென்பது, தம்மிற் பகைத்த வேந்தரைப் பகையைத் தணித்து இருவரையும் பொருந்தப்பண்ணுதல்" (௩கச-ஆஞ் செய்யுள் முகவுரை). "இனி, வேந்தற் குற்றுழிப் பிரிவென்பது ஒரு வேந்தனுக் கொருவேந்தன் தொலைந்து வந்தடைந்தால் அவனுக் குதவிசெய்யப் பிரியாநிற்றல்" (௩கசு-ஆஞ் செய்யுள் முகவுரை). "இனிப், பொருள் வயிற்பிரித லென்பது, குரவர்களாற் படைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ் செய்தால் அதனான் வரும் பயன் அவர்க்கு ஆம் அத் துணையல்லது தமக் காகாமையால், தமது பொருள்கொண் டில்லறஞ் செய்தற்குப் பொருள்தேடப் பிரியாநிற்றல்" (௩௩உ-ஆஞ் செய்யுள் முகவுரை). "இனிப், பரத்தையிற் பிரிதலென்பது, தலைமகளை வரைந்தெய்திய பின்னர், வைகலும் பாலே நுகர்வான் ஒருவன் இடையே புளிங்காடியும் நுகர்ந்து அதன் இனிமை யறிந்தாற் போல, அவள் நுகர்ச்சியினிமை அறிதற்குப் புறப் பெண்டிர்மாட்டுப் பிரியாநிற்றல். அல்லதூஉம், பண்ணும் பாடலும் முதலாயின காட்டிப் புறப் பெண்டிர் தன்னைக் காதலித்தால்தான் எல்லார்க்குந் தலைவனாகலின், அவர்க்கும் இன்பஞ்செய்யப் பிரியா நிற்றல் என்றுமாம். அல்லதூஉந், தலைமகளை ஊடலறிவித்தற்குப் பிரிதலென்றுமாம். இவ்வா றொழிந்து தனக்கின்பம் வேண்டிப் பிரிவனாயின், 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள' என்பதனால், இவளுக்குத் தலைமக ளென்னும் பெயரொடு மாறுபட்டுத் தனது பெருமை யொடும் மாறுபடாநிற்கும்" (௩டுஉ-ஆஞ் செய்யுள் முகவுரை).

இளம்பூரணர், பேராசிரியர் என்னும் ஈருரைகாரரும் உரைத்த இவ் வுரைக்கூறுகளை, மேலெடுத்துக்காட்டிய ஆசிரியர் நக்கீரனாருரைப் பகுதியோடு ஒப்பிட்டுக்காண

வல்ல அறிஞர்க்குப், பளபளப்பான பலநிறச் சலவைக் கற்கள் அழுத்திப் பொன்மினுக்குப் பூசிப், பலபல அடுக்கு மாடங்கள் உடைத்தாய் வான்முகடு அளாய்க், காண்பார் கண்ணுங் கருத்துங் கவரும் நீர்மைத்தாய் உயர்ந்தோங்கி நிற்கும் எழுநிலைமாடம்போல் ஆசிரியர் நக்கீரனாரதுரை நிவந்துநிற்றலும், அம் மாடத்தின் அருகே புல்வேய்ந்த குடிலும் ஓடு மூடியதொரு சிற்றிலும் ஏழைமைத் தோற்ற முடையவாய்த் தாழ்ந்துநிற்றல்போல் இளம்பூரணர் பேராசிரியருரைகள் பீடுகுறைந்து நிற்றலும் பிரிந்தினிது விளங்காநிற்கும். நக்கீரனாருரையும், மேற்காட்டிய ஏனை யிருவருரையுந் தன்மையால் வேறுபடுதலோடு, கொள்கை வகையாலும் வேறுபடுகின்றன. ஓதற்பிரிவு, பகைவயிற் பிரிவுகட்கு இளம்பூரணர் கூறியவுரை, நக்கீரனார் உரைக்கு மாறாய்நிற்பத், தூதிற்பிரிவுக்கு அவர் கூறியவுரை, நக்கீரனார் கூறிய ஒரு சொற்றொடரை எடுத்தாண்ட வளவில் நிற்றலுங் காண்க. மற்றுப் பேராசிரியருரையோ, இளம்பூரணருரையினுஞ் சிறிது விரிவுடைத்தாயினும், பிற்காலத்து வடசொற்குறியீடுக ளுடைத்தாய், நக்கீரனா ருரையின் சொற்கள் சொற்றொடர்களையெடுத்தாண்டு, அவருரைப்பொருளொடு பெரும்பான்மை யொத்துச் சிறு பான்மை யொவ்வாது, அவ் வுரைநலத்தின் மிகச்சிறிதே தன்கட்கொண்டு நிற்கின்றது. இங்ஙனந் தன்மையானுங் கொள்கைவகையானும் இவ்விருவ ருரையும் நக்கீரனாருரை யின் வேறாக நிற்றலானும், நக்கீரனாருரையின் சொற்றொடர் களை யெடுத்தாளலானும் அவ்வுரைகளை வகுத்த இளம் பூரணர் பேராசிரிய ரென்னும் இருவர்தம் மனவியற்கை யும் நக்கீரனாரது மனவியற்கையின் முற்றும் வேறாதலுந் தெற்றெனப் புலனும்.

இறையனாரகப்பொரு ளுரையினை இயற்றிய ஆசிரிய ரின் புலமைத்திறம் பெருமாட்சித்தாதலும், தொல்காப்பிய உரையினையியற்றிய இளம்பூரணரின் திறம் அத்துணை மாட்சித்து அன்றாதலும் நுண்மாண் நுழைபுலமுடையார்க் கெல்லாம் வெள்ளிடைமலைபோல் விளங்கிக்கிடப்பவும்,

இஞ்ஞான்று வழங்கும் இறையனார் களவியலுரையினை யியற்றினவர் இளம்பூரணரே யாதல்வேண்டுமெனச் 'சேரன் செங்குட்டுவன்' நூலார் கூறினர்.[1] இவ்வாறு கூறுதற்குக் களவிய லுரையிலும், தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணர் உரையிலும் பொதுப்போற் காணப்படும் இரண்டு உரைக்குறிப்புகளே அவர்க்குப் பெருஞ் சான்றுகளாய்த் தோன்றுகின்றன. களவியல் முதற்சூத்திர உரையின் ஈற்றில் 'என்மனார்' என்னுஞ் சொல்லுக்குக் காட்டப்பட்டிருக்குஞ் சொன்முடிபும், அதன் ஏழாஞ்சூத்திர வுரையின் ஈற்றிற் காட்டப்பட்டிருக்கும் 'வரவு' என்னுஞ் சொல்வழக்கும் ஆண்டுள்ளவாறுபோல், தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணருரையினுங் காணப்படுகின்றன. இவ்வாறு இருவர் உரையினும் பொதுவாகக் காணப்படும் இவ்விரு குறிப்புக்களையுந் தம்முரையுள் மறுத்தபின் உரைகாரரான சேனாவரையர் அக் குறிப்புகளை இளம்பூரணருடையவாக வைத்து மறுத்தனரேயன்றி, நக்கீரனாருடையவாக வைத்து மறுத்திலாமையின்,[2] அவ்வுரைக் குறிப்புகள் இரண்டையும் உடைய களவியலுரை இளம்பூரணர் இயற்றியதொன் றென்று கோடலே 'செங்குட்டுவன்' நூலாரது கோள்.

இனி, இவர் எடுத்துக்காட்டிய அவ் வுரைக்குறிப்புகள் இரண்டையும் இளம்பூரண ருரைகளாக வைத்து, அவ் விளம்பூரணருக்குப் பின்வந்த சேனாவரையர், தொல் காப்பியச் சொல்லதிகாரத்திற்குத் தாம் வரைந்த உரையில் மறுத்திருப்பது கொண்டு, அவ் வுரைக்குறிப்புகள் இரண்டு மட்டுமே காணப்படுங் 'களவியலுரை' முழுவதூஉம் இளம்பூரணரே இயற்றியதாமெனல் யாங்ஙனம் பொருந்தும்? ஒருவர் உரையில் உள்ள சொற்களையுஞ் சொற்றொடர்களையும் பொருள்களையும், அவர்க்குப் பின் வரும் உரைகாரர் தமதுரையில் நிரம்ப எடுத்தாள்வது தொன்றுதொட்ட வழக்கமா யிருக்கின்றது. இஃது, இளம்

1. செந்தமிழ், ௪-ஆந்தொகுதி, பக்கம், ௩௦௧.
2. தொல்காப்பியம், சொல், ௧, ௨௧.

பூரணருரையினையும் அவர்க்குப் பின்வந்த பேராசிரியர் சேனாவரையர் நச்சினார்க்கினிய ருரைகளையும் ஒத்து நோக்குவார்க்கு நன்கு விளங்கும். இளம்பூரணருரையிற் காணப்படும் உரைப் பகுதிகள பல ஏனை உரைகாரர் உரைகளிற் காணப்படுதல் கொண்டு, அவருரைகளை யெல்லாம் இளம்பூரணருரை யென்று கோடல் அடுக்குமோ? அடாதன்றே. அதுபோலவே, இளம்பூரணருரையிற் காணப்படும் இரண்டு சிறு உரைக்குறிப்புகள் மட்டும் 'இறையனுரகப் பொருளுரையிற்' காணப்படுதல் கொண்டு, அவ்வுரைமுற்றும் இளம்பூரணருரைத்ததே என்று கோடலினும் பெரியதோர் இழுக்கான உய்த்துணர்ச்சி வேறுயாண்டுமிலது. இறையனுரகப் பொருளுரைப் போக்கும், இளம்பூரணருரைப் போக்கும், ஒன்றையொன் றொவ்வாமற் பெரிதும் வேறுபட்டுக் கிடக்குமாற்றினை, அவருரைகளினின்றும் மேலெடுத்துக் காட்டிய உரைப்பகுதிகளால் நன்கு விளக்கிக் காட்டினேம்.

அதுவேயுமன்றி, நக்கீரனார் சொற்றொடர்களை அமைக்கும் முறையோ, இளம்பூரணர் முதலான ஏனை உரைகாரர் அவற்றை அமைக்கும் முறைக்கு முற்றும் வேறானதொரு தன்மைத்தா யிருக்கின்றது. ஒரு பொருண்மேல்வரும் பல சொற்றொடர்களை அவர் ஒருவரிசைப்படத் தொடுக்குந் திறமும் அழகும் பெரிது பாராட்டற்பாலதான தனிச் சிறப்பு வாய்ந்து மிளிர்கின்றன; ஒரு சொற்றொடரை முடித்து, அதனோடு இயைபுடைய பிறிதொரு சொற்றொடரைத் தொடங்குகையில், முடித்த சொற்றொடரின் ஈற்றிலுள்ள வினைமுற்றுச் சொல்லையே வினையெச்சமாகத் திரித்து, அதனை அதற்கடுத்த சொற்றொடரின் முதற்கட் பெய்து தொடங்கிச் செல்கின்றார்; மேலே உகஅ-ஆம் பக்கம் முதல் உஉ0-ஆம் பக்கம் வரையில் எடுத்துக் காட்டிய 'இறையனுரகப் பொருளுரைப்' பகுதிகளில் தடித்த எழுத்திற் பதிப்பித்திருக்குஞ் சொற்களைக் காண்க; "வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்" என்று முதலில் ஒரு சொற்றொடரை முடித்தவர், அச் சொற்றொடரின் ஈற்றில்

உள்ள 'கண்டாள்' என்னும் வினைமுற்றைக் 'கண்டு' என்னும் வினையெச்சமாகத் திரித்து அதனை முதற்கட்பெய்து அடுத்த சொற்றொடரைத் தொடங்குதலும், இங்ஙனமே அதற்கடுத்த தொடரை அவர் எழுதிக்கொண்டு போதலும் உற்று நோக்குக. இத்தகையதொரு சொற்றொடரமைப்பு 'இறையனார்களவியலுரை'யின் துவக்கம் முதல் அதன் முடிவுவரையிற் காணப்படுமாறுபோல, இளம்பூரணருரையிலாதல் ஏனை உரைகாரருரையிலாதல் காணப்படாமையின், களவியலுரை, அவ்வுரையெழுதுதற்கு இயைந்த பேராற்றல் வாய்ந்த ஆசிரியர் நக்கீரனாரால் இயற்றப்பட்டதாகுமேயன்றி இளம்பூரணர் முதலான ஏனையோருள் ஒருவரால் இயற்றப்பட்டதாகாது.

மேலும், "வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போல" எனவும், "பள்ளத்துவழி வெள்ளம்போல" எனவும், "யானை தொடு வுண்ணின் மூடுங்கலம் இல்லது போல" எனவும், "கடல்வெதும்பின் வளாவுநீர் இல்லது போல" எனவும், "கெடுத்துத் தேடும் நன்கலம் எடுத்துக் கொண்டாற் போல" எனவும், "மணிக்கலங் கதுவாய்ப் பட்டதுபோல" எனவும், "உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர், கொண்டார்க் குரியர் கொடுத்தார்" எனவும், "மூடியிருந்து வேவதோர் கொள்கலம் மூய்திறந்தவிடத்து ஆவியெழுந்து முன்னின்ற வெப்பம் நீங்கினாற்போல" எனவும், "யாறு வருகின்றதென்று ஆடை தலைச்சூடாரன்றே" எனவும், "வண்டோரனையர் ஆடவர் பூவோரனையர் மகளிர்" எனவும் 'இறையனார் களவியலுரை'யில் ஆண்டாண்டுக் காணப்படும் பண்டைக் காலத்துச் செந்தமிழறிஞர்தம் முதுமொழிகள் போல்வன, இளம்பூரணர் முதலான ஏனையுரையாசிரியர்தம் உரைகளிற் காணப்படுகின்றில. இவ்வாற்றானும் 'இறையனார் களவியலுரை' நக்கீரனார் இயற்றியதாவதல்லது ஏனையோர் இயற்றியதாகாமை 'உள்ளங்கை நெல்லிக்கனி' போற் றெற்றெனப் புலனும். இதுகொண்டு, சான்றோர்தம் முதுமொழிகளை இடையிடையே மடுத்து உரை எழுதுதலில் ஆசிரியர் நக்கீரனார்

வேட்கை மிகுதியும் உடையராதல்போல ஏனையுரை காரர் இருப்பக் காணுமையின், அவ் விருபாலார்க்குமுள்ள இயற்கை வேறுபாடுகளைப் பகுத்துணர்ந்து கடைப்பிடித் துக்கொள்க.

இவையெல்லாம் ஒக்கும்மன்; இறையனுர் களவிய லுரையிலுந், தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரண ருரையிலும் பொதுமையிற் காணப்படுவனவாக மேலெடுத் துக் காட்டிய இரண்டுரைக் குறிப்புகளையும், பின்வந்த சேனுவரையர் நக்கீரனுர் மேலனவாக வைத்துரையாது, இளம்பூரணர் மேலவாக வைத்துரை கூறியதென்னை யெனின்; சேனுவரையர் காலத்து வழங்கிய 'களவியலுரை' ஏட்டுச் சுவடிகளில் அவ் விரண்டுரைக் குறிப்புகளுள் ஒன்று காணப்படாமல், தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணர் உரையில் மட்டும் அது காணப்பட்டமையின், அது தன்னை இளம்பூரணர் மேலதாக வைத்துச் சேனு வரையர் மறுத்திட்டார். எனவே, சேனுவரையர் காலத் திற்குப் பின்வந்த களவியலுரை ஏட்டுச் சுவடிகளின் மட்டுமே, அவ் விரண்டில் ஒன்று இளம்பூரண ருரையி லிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டதாதல் வேண்டுமென் பது பெறுதும். அதனுனன்றே, அது நக்கீரனு ருரையி னகத்தே காணப்படாமல், 'இறையனுரகப் பொருள்' முதற் சூத்திர உரையின் முடிவில் அதற்குப் புறம்பாய்க் காணப் படுவதாயிற் றென்பது. ஒருவருரையில் மற்றொருவ ருரை யினைச் சேர்க்கலுறுவார், அவ் வுரையின் இடையே அதனைச் சேர்த்தற்கு இடங் காண்டல் அரிதாகலின், அதன் ஈற்றிலே அதனை எளிதாகச் சேர்த்துவிடுவர். இவ் வியல்புக்கு ஒப்பவே, இளம்பூரண ருரைக்குறிப்பு ஒன்றை, நக்கீரனாது களவிய லுரையிற் சேர்க்கவேண்டினுர் ஒருவர், அதற்கு அவ்வுரையின் அகத்தே இடங் காணுமை யின், அதன் ஈற்றின்கண்ணே அதற்குப் புறம்பாய் அதனைச் சேர்க்கலாயினு ரென்க. அற்றேற், களவியல் முதற் சூத்திரத்திற் போந்த 'எண்மனுர்' என்னுஞ் சொல் லின் முடிபை நக்கீரனுர் கூறுதுவிட்ட தென்னையெனின்;

நக்கீரனார் பேருரை வகுக்குங் குறிப்பினராகலின், தம துரைக்கு வேண்டப்படாத சொன்முடிபுகளைக் கூறிற்றிலர்; அதனால் 'என்மனார்' என்னுஞ் சொல்லுக்கு அவர் முடிபு கூறாதுவிட்டது ஒரு குறைபாடாகாதெனவிடுக்க. மற்றுப், பிற்காலத்து வந்தார் ஒருவர் அச் சொல்லுக்கு முடிவுகாட்டல் வேண்டினாராகலின், அவரே அதனை இளம் பூரண ருரையிலிருந்தெடுத்துக், களவியல் முதற் சூத்திர வுரையி னிறுதியிற் சேர்த்துவிட்டாரென்க.

இனி, இறையனாரகப்பொருள் ஏழாஞ் சூத்திர வுரை யில் 'வரவு' என்னுஞ் சொல்வழக்குக்கு நக்கீரனார் உரைத்த உரையுந், தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் " தருசொல் வருசொல் ஆயிரு கிளவியுந், தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த" என்னுஞ் சூத்திரத்திற்கு இளம்பூரணர் கூறிய உரையுந் தம்முள் மாறுபட்டு நிற்கின்றன. 'வருதல்' என் னும் வினை இச் சிறப்புச் சூத்திரங் கூறுமாறு தன்மை முன் னிலை என்னும் ஈரிடத்தின்கண் வரற்பாலதாகவும், அதனை விட்டு அஃது " இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல் " எனக் களவியற் சூத்திரத்திற் படர்க்கை யிடத்தின்கண் வந்தமை வழுவாம் போலுமென மயங்கும் மாணக்கர்க்கு அம் மயக்கந் தீர்த்தற்பொருட்டாகவே, நக்கீரனார்,

" செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப."
(தொல்காப்பியம், சொல், ௨௮)

என்னும் பொதுச் சூத்திரத்தால் அது படர்க்கையிடத் திற்குஞ் சிறுபான்மை யுரித்தாதலை விளக்கிக் காட்டினார். நக்கீரனார் கூறிய இவ்வுரைக்கு இணங்கவே, சேனாவரை யருந் " தருசொல் வருசொல் " என்னுஞ் சூத்திரத்தில் வருசொல்லைப் படர்க்கை இடத்திற்கும் அமைத்துத் " தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது " என்னுஞ் சான்றோர் செய்யுளையும் அதற்கு இலக்கியமாக் காட்டினார். மற்று, இளம்பூரணரோ 'செலவு' 'வரவு' 'தரவு' 'கொடை'

என்னுஞ் சொற்கள் நான்குங் கொடைப் பொருளை உணர்த்துமெனக் கூறித், "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" என்னுஞ் செய்யுளை அதற்குப் புறனடையாக எடுத்துக் காட்டினார். இளம்பூரணர் கூறிய இவ்வுரை தொல்லாசிரியர் வழக்கொடு முரணுதலின், அச் சொற் களுட் 'கொடுத்தல்' 'தருதல்' என்னும் இரண்டொழியச் 'செல்லுதல்' 'வருதல்' என்னும் மற்றிரு சொற்களுங் கொடைப் பொருளை உணர்த்தா என்பதூஉம், இளம் பூரணர் தாமே புறனடையாக எடுத்துக் காட்டிய "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" என்னுஞ் சான் றோர் செய்யுளே அதற்குச் சான்றாமென்பதூஉம் போதரச் சேனாவரையர் "இந் நான்குங் கொடைப் பொருளனவென்று உரையாசிரியர் கூறினாரெனின்; தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது என்பதனை அமைத்தாராகலின், அவர்க்கு அது கருத்து அன்று என்க" எனப் பணிவுகாட்டி அவரை மறுத்திட்டார். சேனாவரையர் மறுத்த இவ் விளம் பூரண ருரைப் பகுதிக்கும், ஆசிரியர் நக்கீரனார் அச் சொற்கள் நான்கும் பற்றிக்கூறிய உரைப்பகுதிக்கும் ஏதோ ரொற்றுமையும் இன்மை, அவ்விரு நூலுரைகளை நன் காராய்ந்தார்க் கெல்லாம் இனிது விளங்கிக் கிடப்பவுஞ், 'சேரன்செங்குட்டுவன்' நூலார் அவற்றை நன்காய்ந்து பாராது, தாம் பிடித்ததை எங்ஙனமாயினும் நிலைப்படுத்தி விடுதல் வேண்டுமென எழுந்த பற்றினால் அறிவு மருண்டு நக்கீரனார் வரைந்த களவிய லுரையை இளம்பூரணர தென் றுரைத்து இழுக்கினார். நக்கீரனார் 'செல்லுதல்' 'வருதல்' என்னுஞ் சொற்கள் கொடைப்பொருளை யுணர்த்து மென்று கூறிற்றிலர்; இளம்பூரணரோ அவையுங் கொடைப்பொருளையுணர்த்து மென்று கூறினர்; நக்கீ ரனார் "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" என்னுஞ் சான்றோர் செய்யுளை, 'வருதல்' என்னுஞ்சொல் படர்க்கை யிடத்தில் வருதற்கு இலக்கியமாய்க் காட்டினர்; இளம் பூரணரோ அச்சொல் தாங்கூறிய கொடைப்பொருளில் அடங்காது வேறாய் நிற்றற்கு அதனைப் புறனடை இலக்கிய மாய்க் காட்டினர். இவ்வா றிருவர் உரையும் ஒன்றினொன்று

மாறுபட்டு நிற்றல் வெள்ளிடைமலைபோல் விளங்கிக் கிடப் பவுஞ் 'செங்குட்டுவன்' நூலார் அவ் விரண்டனையும் ஒரு பெற்றியவாக வைத்து மயங்கிக்கொண்டு, இளம்பூரண ருரையை அவர்க்குரிய 'உரையாசிரியர்' என்னும் பெயராற் கூறிமறுத்த சேனவரையர், அதனோடு ஒப்பதாகிய களவியலுரையை நக்கீரனார் பெயராற் சொல்லாமையின் அக் களவியலுரை இளம்பூரணர் இயற்றியதே யாதல் வேண்டுமெனப் பெரிதும் பிழைபட உரைத்தார். களவிய லுரையும் இளம்பூரண ருரையும் ஒரே பொருளைப் பற்றி யெழுந்து ஒரு தன்மைப்பட நிற்குமாயின், இளம்பூரணருரை யென்று கொண்டு மறுத்த சேனவரையர், அதற்குமுன் னிருந்த களவியலுரையிலுங் காணப்படும் அதனை இளம் பூரணர் மேற்றாக வைத்து மறுத்தது என்னை? என்பது ஆராயற் பாற்றும். அங்ஙனம் அவை ஒரு தன்மைப்பட நிற்றலைக் கண்டவிடத்தும், அவ்வொற்றுமையாகிய ஒரு சிறு சான்றினைக்கொண்டு கதுமென ஒருவ ருரையினைப் பிறரொருவ ருரையாக மயங்கவைத்தலுங் குற்றமாம்; என்னை? சேனவரையர் காலத்துக் களவியலுரை ஏட்டுச் சுவடிகளிற் காணப்படாத சில உரைப்பகுதிகள் அவர்க்குப் பிற்பட்ட காலத்தவரால் அதன்கட் சேர்க்கப்பட் டிருத் தலுங் கூடுமாகலின் என்பது. எனவே, சேனவரையர் "தருசொல் வருசொல்" என்னுஞ் சூத்திரவுரையில் எடுத்து மறுத்த இளம்பூரண ருரைப்பகுதிக்கும், ஆசிரியர் நக்கீரனார்• 'களவியலுரை' எ-ஆஞ் சூத்திர வுரையில் 'வருசொல்' வழக்குப்பற்றி யுரைத்த உரைப்பகுதிக்கும் ஏதோர் இயைபுங் காணப்படாமையின், சான்றல்லா அதனைச் சான்றாகக்கொண்டு நக்கீரனாருரையை இளம் பூரணருரையாகப் புரட்டிவிடத்துணிந்த 'சேரன்செங்குட் டுவன்' நூலாரது செயல், சிறுதுரும்பினைப் புணையாகப் பற்றிக்கொண்டு ஆழ்ந்ததொரு குட்டத்தின்கட் புக்கோன் செயலோ டொப்புமை யுடைத்தாய் முடிந்தமை காண்க.

அற்றேல் அஃதாக, சேனவரையர் காலத்திற்கு முன்னரே, நக்கீரனார் 'இறையனாரகப் பொருளுக்கு'

எழுதிய உரை உண்டென்பது எற்றாற் பெறுதுமெனின்; 'இறையனாரகப் பொருள்' ௩௮-ஆஞ் சூத்திரவுரையில் "அஃதேயெனின், அறியக் 'கிளக்கப்பட்ட இடம்' என்றது 'கிளந்த இடம்' என்றது எற்றிற்கோ வெனின், வினைச் சொற்கள் நான்கு விகற்பம் உடைய; யாவை அவ்விகற்ப மெனின், கருத்தன் ஏதுக் கருத்தன் கருவிக் கருத்தன், கருமக்கருத்தன் என இவை; அவற்றுட் கருத்தனென்பது, தச்சனெடுத்த மாடம், கொல்லன் செய்தவாள்; ஏதுக் கருத்தனென்பது ஏவினானைக் கருத்தாவாகச் செய்வது, அரசர் தொட்ட குளம், அரசர் எடுத்த தேவ குலம் என இத் தொடக்கத்தன; இனிக் கருவிக் கருத்த னென்பது, வாள் எறியும், சுரிகை குற்றும், இம்மிடா நாற் குறுணி, அரிசிச் சோறு அடும் என இத் தொடக்கத்தன; கருமக் கருத்தன் என்பது, திண்ணைமெழுகிற்று, கலங் கழுவிற்று, மரங்குறைத்தது என்று சொல்லுவது" என ஆசிரியர் நக்கீரனார் விளக்கிய உரைக் கூற்றிற் போந்த 'கருமக்கருத்தன்' என்பதனைச் சுட்டிச் சேனாவரையர், தொல்காப்பியச் சொல்லதிகார உ௪௬-ஆஞ் சூத்திரவுரை யில், "செயப்படுபொருளை வினைமுதல் வாய்பாட்டாற் கிளத்தலேயன்றி, எளிதின் அடப்படுதல் நோக்கி, அரிசி தானே யட்டது எனச் செயப்படுபொருளை வினை முதலின் றொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபு என்றற்குத் 'தொழிற்படக்கிளத்தலும்' என்றார்; இதனைக் கருமக் கருத்தன் என்ப" எனக் கூறியிருத்தலின், சேனாவரையர் காலத்திற்கு முற்றொட்டே நக்கீரனாரது களவியலுரை உண்டென்பதூஉம், அதனைச் சேனாவரையர் நன்கு பயின் றிருந்தன ரென்பதூஉம் பெறப்படும். இவ்வாறே, இளம் பூரணரது தொல்காப்பிய வுரைக்கு முன்னும நக்கீர னாரது களவியலுரை யுண்டென்பதற்குச் சான்றுண்டோ வெனின்; உண்டு; யாம் மேலே காட்டியவாற்றால் (உ௨௬, உ௨௭, உ௨௮-ஆம் பக்கங்கள்), நக்கீரனாரது களவியலுரைச் சொற்றொடர்களையுங் கருத்துகளையும் இளம்பூரணர் ஆங் காங்குத் தழுவி யுரைவரைந் திருத்தல் அறியப்படும்; அவை யெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டலுறின் இது மிகவிரியும்;

ஆகலின், நக்கீரனார் களவியல் நூற்பாயிர வுரையிலும், களவியல் முதற் சூத்திரவுரையில் முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்பவற்றிற்குக் கூறிய வுரைப் பகுதிகளிலும் உள்ள சொற்பொருள்களை இளம்பூரணர் அங்ஙனமே எடுத்துத் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாயிரவுரையிலும், பொருளதிகார முதல் கருவுரிப்பொருட் சூத்திரவுரையிலும் எழுதிச் செல்லுதலை ஒப்பிட்டுக் கண்டு கொள்க.

இனி, 'இறையனாரகப்பொருள்' உரைப்பாயிரத்தில், தமிழ்முச்சங்க வரலாறும் நக்கீரனார் உரைவந்த வரலாறுங் கூறுநின்ற சில உரைப்பகுதிகளைக்கொண்டும், நூலின் உரையகத்தே எடுத்துக்காட்டாக வந்துள்ள 'கட்டளைக் கலித்துறைச்' செய்யுட்களைக் கொண்டும், இறையனாரகப் பொருளுரை முழுவதூஉங் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின் இயற்றப்பட்டதொன்றாகல் வேண்டுமென்றும், அக் கலித்துறைச் செய்யுட்களிற் புகழ்ந்துரைக்கப்படும் பாண்டி வேந்தன் காலத்திருந்து பத்துத் தலைமுறை கணக்குச் செய்ய நக்கீரனாருங் கடைச்சங்கமும் இருந்த காலங் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குமேற் செல்லாதென்றுஞ் 'சேரன் செங்குட்டுவன்' (பக்கம், கஎஅ-கஅ0) நூலார் கூறினர். இக் கூற்றுக்களின் பிழைபாடும் ஆராய்ந்து காட்டுதும்:

'களவியல்' முதற்சூத்திரத்திற்கு ஆசிரியர் நக்கீரனார் உரை யுரைக்கும் முன் அதற்குப் பாயிரவுரையும் அவர் தாமே உரைத்திட்டார். அந் நூலுக்குச் சிறப்புப்பாயிரங் கூறினார் வேறுயாரும் இல்லாமையின், உரையெழுதுவான் புகுந்த நக்கீரனாரே அதற்குப் பாயிரவுரை கூறியது வாய்வதேயாம். ஒரு நூலுக்கு உரைகூறப் புகுந்த ஆசிரியர், அந் நூலின் வரலாறு தெரிப்பதாகிய பாயிரம் மட்டுமே தமதுரையில் வரைகுவரன்றித், தாம் அந் நூலுக்கு உரைவகுக்கவந்த வரலாறுந் தெரிப்பாரல்லர். ஆகவே, நக்கீரனார், இறையனார் களவியலுக்கு முதற்கண் எழுதிய தமது பாயிரவுரையில், தாம் அந் நூலுக்கு உரையெழுதப் புக்க வரலாறுங் கூறுவாரல்லர்; என்னை? அவ்

வாறுரைப்பது தம்மைப் புகழ்தலாய் முடியுமாகலானும், நல்லிசைப்புலவர் அங்ஙனந் தம்மைப் புகழாராகலானும் என்பது. எனவே, நூல்வரலாறு தெரிக்கும் அப் பாயிர வுரையினிடையே, நக்கீரனரது உரை வரலாறு தெரிக்கும் பகுதி நக்கீரனாலன்றி அவர்தம் மாணக்கர் வழியில் வந்த ஒருவரால் எழுதிச் சேர்க்கப்பட்ட தொன்றுதல் தேற்றமாம்.

அற்றன்று, "அது பாயிரத்துள்ளே உரைத்தாம்" என்று நக்கீரனரே தமது சூத்திரவுரையகத்தே மொழியக் காண்டலின், பாயிரவுரை முற்றும் அவரே எழுதினரென் பது பெறப்படுமாலோ வெனின்; அறியாது கூறினய்; "அது பாயிரத்துள்ளே உரைத்தாம்" என்று அவர் கூறியது எதுவென்று ஆராய்ந்து காண்பார்க்கு, அது நூல்வரலாறு தெரிக்கும் பாயிரவுரையில் அவர் கூறிய வுரையேயல்லாமல், தமது உரைவந்த வரலாறு காட்டும் உரைப்பகுதியில் உள்ளதல்லாமை இனிது விளங்கும். யாங்ஙனமெனிற் கூறுதும்: களவியல் முதற் சூத்திரவுரை யினகத்தே இரண்டிடங்களில் "அது பாயிரத்துள்ளே உரைத்தாம்" என்னுஞ் சொற்றொடர் காணப்படுகின்றது; அவற்றுள் ஒன்று: "இனி, நூல் நுதலியதூஉம் உரைக் கற்பாலது; அது பாயிரத்துள்ளே உரைத்தாம்." என்ப தாம்; இப் பகுதியுள் 'அது பாயிரத்துள்ளே யுரைத்தாம்' என்னுஞ் சுட்டு, நூற்பாயிரவுரையுள் "இனி நுதலிய பொருளென்பது நூற்பொருளைச் சொல்லுதல் என்பது. இந் நூல் என்னுதலிற்றோவெனின், தமிழ் நுதலியதென் பது." என்று அவர் கூறிய வுரையினைக் குறியாநிற்கின் றது. மற்றொன்று: "இங்குப் பிறவுங் களவுண்மைசொல்லி, அக் களவுகட்கெல்லாம் இக் களவு சிறப்புடைமை சொல் லும்; துறக்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான் 'எனப் படுவது' என்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது; அது பாயிரத்துள்ளும் உரைத்தாம்" என்பதேயாம்; இதன்கட் போந்த சுட்டு, நூற்பாயிர வுரையில் "இனிப், பயன் என்பது இது கற்க இன்னது பயக்கும்" என்பது துவங்கி

"மற்றும் இவைபோல்வன களவாகா, நன்மை பயக்கும்" என்பது ஈருகக்கிடந்த பகுதியினையே குறியா நிற்கின்றது. இங்ஙனமாக முதற்சூத்திர வுரையுள் "அது பாயிரத் துள்ளே உரைத்தாம்" என்று இருகாற்போந்த சுட்டுக்கள் இரண்டும், நக்கீரர் தாமேயுரைத்த நூற்பாயிர வுரையிற் போந்த உரைப்பகுதிகளைக் குறிக்கக் காண்டுமேயல்லாமல், உரைவரலாறு கூறும் பகுதியிலுள்ளவற்றைக் குறிக்கக் காணுமையின், அவைகொண்டு பாயிரவுரை முழுதும் நக்கீரஞர் ஆக்கியதே யென்றல், அப் பாயிரவுரைப் பகுதி களைப் பகுத்தாராய்ந்து பார்க்கமாட்டாதார் கூறும் பிழை பாட்டுரையேயாமென விடுக்க.

அற்றேல், இறையனுரகப்பொருள் முதற் சூத்திரத் திற்கு ஆசிரியர் நக்கீரஞர் கூறிய நூற்பாயிர வுரையாவது எது? அதன்கட் பிறர் கூறிய உரைப்பாயிரவுரையாவது எது? என வினவின், அவைதம்மையும் பிரித்துக் காட்டுதும். நூற்பாயிர வுரையாவது: ஒரு நூல் செய்த ஆக்கியோன் பெயரும், அந் நூல் இன்ன நூலின் வழித் தாகச் செய்யப்பட்டதென அதன் வழியும், அஃது இன்ன எல்லைக்குள் வழங்குவதென அதன் எல்லையும், அந்நூலின் பெயர் இதுவென அதன் பெயரும், அது 'தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு' என ஆக்கப் படும் நால்வகையில் இன்னதுபற்றி யாக்கப்பட்டதென அதன் யாப்பும், அஃது இத்தகையதொரு பொருளை விளக்குவான் புகுந்ததென அது நுதலிய பொருளும், அஃது இன்னதோர் அவையகத்தே இத்துணைச் சிறந்த சான்ருேரால் கேட்டு ஏற்கப்பட்டதென அதனைக் கேட் போரும், இந்நூல் கற்க இன்னபயன் உண்டாம் என அதன் பயனும், அஃது இயற்றப்பட்ட காலமும், அஃது அரங்கேறிய அவைக்களமும், அந்நூல் செய்யவேண்டிற் ருங் காரணமும் என அந் நூலைப்பற்றிய பதினெரு வர லாறுந் தெரிப்பதே ஒரு நூலுக்குப் பாயிரமாகும். இப் பதினெரு வரலாறுங் கூறும் பாயிரம் ஒரு நூலுக்கு இன்றியமையாச் சிறப்பிற்ருதல் நோக்கியே தொன்று

தொட்டு வந்த தமிழாசிரியர் "ஆயிர முகத்தான் அகன்ற தாயினும், பாயிரம் இல்லது பனுவலன்றே"[1] என்று கூறுவாராயினர்; அவர் கூறிய ஆணைகடவாதே நக்கீர ஞர் முதலாகவந்த உரையாசிரியரும் பிறருந் தாமெடுத்த நூற்கு முதலிற் பாயிரம் உரைத்தலை ஒரு பெருங்கடமை யாக் கொண்டார். அறுபது சூத்திரங்களால் ஆகிய 'இறையனாரகப்பொருள்' என்னும் அகப்பொருள் நூல், திருவாலவாய்க் கோயில் இறைவன் திருவுருவப் பீடத்தின் கீழ் நின்றுந் தற்செயலாய்க் கிடைத்த மூன்று செப்பேடு களில் எழுதப்பட்டிருக்கக் கண்டமையின், அதனை இறை வனே அருளிச்செய்தா னென்றுகொண்டு, அக்காலத் திருந்த நக்கீரனாரை யுள்ளிட்ட நல்லிசைப் புலவர் அதற்கு உரை வரைந்தாராதல் வேண்டும். அதற்குச் சிறப்புப் பாயிரம் எவராலும் உரைக்கப்படாமையின், உரையெழுது வான் புகுந்த நக்கீரனாரே தமது உரைமுகத்தில் அந்நூற் சிறப்புப்பாயிரத்திற்குரிய பதினொன்றும் உரைத்திட்டார்.

௨௨. முச்சங்க வரலாறும் தொல்காப்பிய காலமும்

நூல் வரலாறு தெரிக்கும் இப் பதினொன்றும் அல் லாத ஏனை உரைப்பாயிர வுரையெல்லாம் நக்கீரனார் தம் மாணக்கர் வழிவந்த ஏனையொருவராற் றும் கேட்டவாறே எழுதிச் சேர்க்கப்பட்டனவாகும். அங்ஙனஞ் "சேர்க்கப் பட்டவை யாவையோவெனிற், கூறுதும்: தலைச்சங்க இடைச்சங்க கடைச்சங்க வரலாறுகளை எடுத்துரைக்கும்

1. இதுவும், இன்னோரன்ன பாயிரச் சூத்திரங்களும் நக்கீர னார் இளம்பூரணர் முதலான தொல்லாசிரியர்தம் உரைகளில் வழங்கக் காண்டலின், இவை அவர்க்குப் பிற்காலத்து வந்த பவணந்தியாரால் இயற்றப்பட்டன அல்ல. இவை கடைச்சங்க காலத்திற்கு முன்னரே ஆக்கப்பட்டனவாகும். இவற்றுட் சில **பாடலனார் என்னும் ஆசிரியரால் இயற்றப்பட்டனவென யாப் பருங்கலக்காரிகையின்** பழையவுரை கூறுகிற்கும் இவை தம்மையே பிற்காலத்திற் பவணந்தியார் தமது நன்னூலில் எடுத்தாண்டன ரென்க

பகுதிகள் அவ்வளவும் நக்கீரனூர் எழுதியன ஆகா. என்னை? 'சங்கம்' என்னுஞ்சொற் றமிழ்ச்சொல் அன்மையானும், நக்கீரனூர் காலத்தும் அவர்க்கு முன்னும் இருந்த சான்றோர்கள் எல்லாம் 'மன்றம்,' 'அம்பலம்,' 'குழாம்,' 'பொதியில்' என்னுந் தூய தமிழ்ச் சொற்களையே வழங்கினரன்றிச் 'சங்கம்' என்னுஞ்சொல்லை வழங்கக் காணுமையானும், முச்சங்க வரலாறு நக்கீரனூரே எழுதினராயின் அவருந் 'தலைமன்றம்,' 'இடைமன்றம்' முதலான தனித்தமிழ்ச் சொற்களினாலேயே அவை தம்மை வழங்கியிருப்பராகலானும் என்பது. அதுவேயுமன்றித், தலைச்சங்கத்தில் அகத்தியனூரும் சிவபெருமானும் முருகக்கடவுளும் இருந்து தமிழாராய்ந்தா ரென்னும் ஒரு கதையை, உலக இயற்கையொடு மாறுறு நக்கீரனூர் எழுதுவாரல்லர்; மேலும், கி. பி. இரண்டாம் நூற்றுண்டுக்கு முற்பட்ட பழந்தமிழ்ப் பாட்டுகளில் எங்கும் அகத்தியனூர் என்று ஓராசிரியர் இருந்தாரென்பதற்கு ஏதொரு சான்றும் இல்லாமை மேலே விளக்கிப் போந்தாமாகலானும், காணவுங் கருதவும் படாத முழுமுதற் கடவுளான சிவபிரானும் முருகவேளுந் தலைச்சங்கத்தில் ஏனைப் புலவரோடு ஒக்க வீற்றிருந்து தமிழாராய்ந்தார் என்னுங் கதை, புராணகதைகள் மிக்கெழுந்த கி. பி. நான்காம் நூற்றுண்டுக்குப் பின்னன்றி முன் வழங்கியதாகாமையானும், அன்றி அது முன்வழங்கியதென்பதற்குக் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்கு முற்பட்ட தமிழ் நூல்களிற் சான்றின்மையானும் அக் கதையை நக்கீரர் எழுதினூரென்பதூஉம் ஆகாது. அதுவேயுமன்றித், தலைச்சங்கம் ௪௪௪௦-ஆண்டு நடைபெற்றதென்பதூஉம் நம்பற்பாலதன்று; மக்கள் வாழ்க்கையில் அத்துணை நீண்டகாலம் ஏதொன்றும் நடைபெறக் காணுமையானும், அதற்குப் பழையநூற்சான்று ஏதும் இன்மையானும் இந்நீண்டகால அளவைக் கற்பித்தது, ஒன்றை ஆயிரமாகப் பெருக்கிப் பொய்க்கும் புராண காலத்தன்றி நக்கீரனூர் காலத்தாகாது. இங்ஙனமே இடைச்சங்கத்தைப் பற்றிய வரலாற்றினுள்ளும் அகத்தியனூர் பெயரும், அச் சங்கம் ௩எ௦௦-ஆண்டிருந்த தென்னும் நீண்ட காலவளவையுங்

காணப்படுதலானும் அதுவும் நக்கீரனார் எழுதியதாகாது. தலைச்சங்க வரலாற்றின்கண், அச் சங்கத்தை நடைபெறு வித்தார் ஒருவர்பின் ஒருவராய் அரசுக்குலுந்த பாண்டியர் எண்பத்தொன்பதின்ம ரென்பது குறிக்கப்பட் டிருக்கின்றது. உலகின்கண் ஆங்காங்கு அரசாண்ட அரசர்களின் தொகையையும், அவரரசுபுரிந்த ஆண்டுகளையுந் தனித்தனியே கூட்டிப், பின் ஆண்டின் தொகையை அரசரது தொகையால் வகுத்துப் பார்க்க, ஒவ்வோர் அரசர்க்கும் இருபது முதல் முப்பது ஆண்டுக்குமேல் ஆட்சிக்காலம் பெறப்படாமையை இஞ்ஞான்றை வரலாற்று நூலாசிரியர்கள் நன்காராய்ந்து முடிவுகட்டி யிருக்கின்றார்கள். அம்முடிபொடு பொருந்த, ஒரு பாண்டிய அரசர்க்குக் குறைந்தது இருபதாண்டு வைத்துக் கணக்குச் செய்யத் 'தலைச்சங்கம்' நடைபெற்ற காலம் ௧௭௮0-ஆண்டுகள் ஆகுமே யல்லாமல், ௪௪௪0-ஆண்டுகள் ஆகா. இங்ஙனமே 'இடைச்சங்கத்'தை நடைபெறுவித்த பாண்டியர் ஐம்பத்தொன்பதின்மர் என்பதூஉம் அவ் வரலாற்றின்கட் சொல்லப்பட் டிருத்தலால், அவ் வைம்பத் தொன்பதின்மருக்கும் மொத்தமாய்ப் பெறப்பட்ட ௧௧௮0-ஆண்டுகளே இடைச்சங்கம் நடைப்பெற்ற காலமாகும்; ஆதலால், அது ௩௭00-ஆண்டுகள் நடைபெற்ற தென்பதும் பிழைபாட்டுரையேயாம். ஆகவே, இவ்விரண்டு சங்கங்களின் வரலாறும் நக்கீரனார் எழுதியதாதல் செல்லாது.

இனிக், 'கடைச்சங்க' வரலாறும் நக்கீரனார் எழுதியதாகாது. என்னை? கடைச்சங்கம் நடைபெறுவித்த பாண்டி மன்னர் நாற்பத்தொன்பதின்மர் என்பது குறிக்கப்பட்டிருத்தலானும், அந் நாற்பத்தொன்பதின்மர்க்கும் ௯௮0-ஆண்டுகளே பெறப்படுவதாயிருக்க, அது நடைபெற்ற காலம் ௧௮௫0-ஆண்டுகளென்று வழூவுற வரையப்பட்டிருத்தலானு மென்பது. அதுவேயுமன்றி, 'அகத்தியம்' என்னும் இலக்கணத்தைப் பற்றிய குறிப்பு, இறையனாரகப்பொருளுரையிலாதல் ஏனைக் கடைச்சங்க நூல்களிலாதல் ஒரு சிறிதுங் காணப்படாதாக, இப் பாயிர வுரை

யிற் போந்த கடைச்சங்க வரலாற்றில் "அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமும் என்ப" என்பது குறிக்கப்பட்டிருக்கின்றது. 'அகத்தியம்' கடைச்சங்க காலத்துப் புலவர்பால் வழங்கிய துண்மையாயின், தொல் காப்பியச் சூத்திரங்கள் நக்கீரனரது உரையின்கண் மிகுதி யாய்ப் பயின்று வருதல்போல், அகத்தியச் சூத்திரங்கள் ஒருசிலவாயினும் அதன்கட் காணப்படுதல் வேண்டும் அன்றே? அவ்வாறு ஒரு சிலவுங் காணப்படாமையின், அகத்தியம் என்பதொன்று கடைச்சங்க காலத்திலும் இல்லாமை திண்ணமாம்; அங்ஙனமாகவும், அஃது அஞ் ஞான்றிருந்ததெனக் கூறும் பொய்வரலாறு நக்கீரனர் உரைத்ததாகாது. இன்னுங், கடைச்சங்க காலத்துப் புலவர்களாற் பாடப்பட்டவை: "நெடுந்தொகை நானூறும் (அகநானூறும்), குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப் பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத் தொடக்கத்தன" என்பது கடைச்சங்க வரலாற்றிற் குறிக்கப்பட் டிருக்கின்றது. இங்ஙனங் குறிக்கப்பட்டுள்ள நூல்களுள் இதுகாறும் வெளிப்போந்தவை யெல்லாம், ஒரோவொரு புலவரால் ஆக்கப்படாமற், பற்பல காலத் திருந்த புலவர் பற்பலராற் பற்பல பொழுதுகளிற் பாடப் பட்ட பாக்களின் தொகை நூல்களாயிருக்கக் காண் கின்றேம். தலைச்சங்க காலத்திருந்த 'முரஞ்சியூர் முடிநாக ராயர்,' 'நெட்டிமையார்,' 'காரி கிழார்,' 'நெடும்பல்லியத்த னர்' முதலான நல்லிசைப் புலவர் பாடிய செய்யுட்கள் 'புறநானூற்'றின்கட் காணப்படுதலானும், 'பரிபாடற்' பாட்டுகளிற் சொல்லப்பட்டுள்ள திருமால் வணக்கத்தை ஆராயுங்கால் அப் பாடல்களைப் பாடிய புலவர் பலருங் கடைச்சங்க காலத்திற்கு மிக முற்பட்டவராதல் வேண்டு மென்பதை மேலே ௨௨0-ஆம் பக்கத்திற் காட்டினமாக லானும், இவ்வாறே ஏனைத் தொகைநூல்களினுங் கடைச் சங்க காலத்தவரல்லாத பண்டை நல்லிசைப் புலவர்தம் பாக்கள் விராய்க் காணப்படுதலானும் மேற்காட்டிய

தொகைநூல்களெல்லாங் கடைச்சங்கப் புலவர்களாலேயே ஆக்கப்பட்டனவென்பது பொருத்தமில் கூற்றும்; இப் பொருத்தமில் கூற்றைக் கடைச்சங்க காலத்திருந்த நக்கீரனார் எழுதினாரென்றல் இசையாமையால், இது கொண்டும் முச்சங்க வரலாறு நக்கீரனார் உரைத்ததன் றென்பது பெற்றாம்.

அற்றேல், நக்கீரனார் வரைந்த பாயிரவுரையி னிடையே முச்சங்க வரலாறு கூறும் இப்பகுதி அவர் உரை யாததொன்றாயின் ஆகுக; மற்று, இல்லாததொன்றை அங்ஙனம் உள்ளதுபோற் படைத்துப் பிறரொருவர் அதனை வழங்கவிட்டனரென்றல் யாங்ஙனமெனின்; நன்று கடாயினாய்; முச்சங்க வரலாறு கிளக்கும் அப் பகுதி முற் றும் பொய்யாவது அன்று; அதன்கண் மெய்யாவன பலஉள: அவை யாவையெனிற் காட்டுதும்: முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் நல்லிசைப் புலவர் தலைச்சங்கத்தில் வீற்றிருந்தாரென்னு முரை உண்மையுரையேயாம். பாண் டவர் ஐவர்க்குந் துரியோதனன் முதலிய நூற்றுவர்க்கும் நிகழ்ந்த பாரதப் போரில் முனைந்து நின்ற பாண்டவர் படைக்குப் பெருஞ்சோறு வழங்கிய உதியஞ்சேரலாதன் என் னுஞ் சேரவேந்தனது ஈகைத்திறத்தினை வியந்து அவனை முன்னிலைப் படுத்து,

"வலியுந் தெறலும் அளியும் உடையோய் !
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும்நின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந !
வான வரம்பனை நீயோ பெரும!
அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம்பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!"

என்று அப் புலவர் பெருந்தகையாகிய முரஞ்சியூர் முடி நாகராயர் பாடிய "மண்டிணிந்த நிலனும்" என்னுஞ் செய்

யுள் புறநானூற்றிற் கடவுள் வாழ்த்துச் செய்யுளுக்குப் பின்னே முதலதாக வைக்கப்பட்டிருக்கின்றது. அஃது அத்துணைப் பழைய காலத்தே பாடப்பட்ட செய்யுளாதல் நோக்கியே, பண்டிருந்த சான்றோர் அதனை அந் நூலின் முதற்கட் பெய்துவைத்தா ரென்பது தெற்றென விளங்கும். பாரதப்போரில் நின்ற பாண்டவர் படைக்கு உதியஞ் சேரன் பெருஞ்சோறு வழங்கிய செய்தி,

"உதியஞ் சேரல்,
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை" (உசுசு)

என்று அகநானூற்றினும்,

"ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தான்அளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடி." (ஊசல்வரி, உச)

என்று சிலப்பதிகாரத்தினும் நன்கெடுத்து மொழியப்பட்டிருத்தலால், அஃது உண்மை வரலாறேயாதல் ஐயுறவின்றித் துணியப்படும்.

இனித், தலைச்சங்கம் நடைபெற்ற காலத்தில் ஒருவர் பின் ஒருவராய் அரசுபுரிந்த பாண்டி வேந்தர் எண்பத்தொன்பதின்மரெனவும், இடைச்சங்கம் நடைபெற்ற காலத்தில் அங்ஙனமே அரசுபுரிந்த பாண்டியர் ஐம்பத்தொன்பதின்மரெனவும் அம் முச்சங்க வரலாற்றிற் காணப்படுங் குறிப்புகள் உண்மையாவனவேயாம். யாங்ஙனமெனிற் கூறுதும்: மேலே கூறிய பாரதப்போர் இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகட்குமுன் நிகழ்ந்ததாகும் என்பதனை வைத்தியா என்னும் அறிஞர் தாம் எழுதிய 'மகாபாரத ஆராய்ச்சி'[1] என்னும் நூலில் உயர்ந்த பல உண்மைச் சான்றுகள் காட்டி நன்கு விளக்கியிருக்கின்றனர். மாபாரதப்போர் நிகழ்ந்தகாலம் கிறித்து பிறப்பதற்குமுன் கஉருo-ஆம்

1. 'The Mahabharata, a Criticism' by Mr. C. V. Vaidya, M.A., LL.B.; see also his article on 'The Date of the Bharata Fight' in The Students' Brotherhood Quarterly, vol. VII, No. 4, Bombay.

ஆண்டில் நிகழ்ந்ததாகு மெனத் 'தத்தரும்' கககூச-ஆம் ஆண்டில் என 'வேலந்தைக்கோபால ஐயரும்' புகன்றவை பொருந்தாவாய்ப் பிழைபடுதலும், சதபதபிராமணமானது கி. மு. உரு00-ஆம் ஆண்டில் அஃதாவது இற்றைக்கு நாலாயிரத்து நானூறு ஆண்டுகட்குமுன் இயற்றப்பட்ட தொன்றாகுமென்று பாலகங்காதர திலகர் பெரிது ஆராய்ந்து நிறுவிய கொள்கையே பொருத்தமாதலும்[1] அவரால் நன்காராய்ந்து காட்டப்பட்டிருக்கின்றன. அவ் வாராய்ச்சிகளெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டலுறின் இது மிக விரியும்; ஆகலான் அவற்றை அந் நூல்களிற் கண்டுகொள்க. இங்கே, அம் முடிபு தமிழ் முச்சங்க வரலாற்றுட் காணப்படுங் காலக்கணக்கோடு ஒத்திருத்தலே யாங் காட்டுதற்கு உரித்தாவதாம். தலைச்சங்கம் நடைபெறத் துவங்கிய காலம்முதல் அதன் ஈறுவரையில் அகூ பாண்டியர்கள் அரசாண்டன ரென்பதனால் அதன் முழுக்கால வெல்லை களஅ0-ஆண்டுகளாகும்; இடைச்சங்கம் நடைபெற்ற காலத்தில் ருகூ பாண்டியர்கள் இருந்தன ரென்பதனால் அதன் முழுக்காலவெல்லை கக அ0-ஆண்டுகளாகும்; கடைச்சங்க காலத்தில் சகூ பாண்டியர்கள் இருந்தமை நுவலப்படுதலால் அதன் முழுக் காலவெல்லை கூஅ0-ஆண்டுகளாகும்; ஆகத் தமிழ் முச்சங்கமும் நடைபெற்ற மொத்தக் காலம் ௬கூச0-ஆண்டுகளாதல் இனிது பெறப்படும். இனிக், கடைச்சங்கம் கி. பி. உ-ஆம் நூற்றாண்டில் முடிவடைந்ததென்பதை மேலே விளக்கிக் காட்டின மாதலால், முச்சங்ககால மொத்தத்தொகையில் உ00-ஆண்டுகள் கழிக்கக், கிறித்து பிறப்பதற்கு ௬எச0-ஆண்டுகட்கு முன்னர்த்தான் தலைச்சங்கந் துவங்கியதென்பது தெளியப்படும். மற்றுத், தலைச்சங்கம் களஅ0-ஆண்டுகள் நடைபெற்றுக், குமரிநாடு கடல்கொண்ட காலத்தில் அதற்குத் தலைநகராகிய தென்மதுரையும் அழிந்துபட்டமையால், அதன்கண் நடைபெற்ற அத் தலைச்சங்கமும் அழிந்து பட்டது; எனவே, அத் தமிழ்ச்சங்க முடிவுங் குமரிநாடு கடல்கொண்ட காலமுஞ் சிறிதேறக்குறையக் கி. மு.

1. The Artic Home in the Vedas, p. 387.

உ000-த்தில் அஃதாவது இற்றைக்கு ச000-ஆண்டுகட்கு முன் நிகழ்ந்தனவாமென்பதுதானே போதரும். மநு வென்பவர் காலத்து நிகழ்ந்த கடல்கோள் ஒன்று சதபத பிராமணத்தின்கண் (க, அ, கக-க0) நுவலப்பட்டிருக்கின்றது. அதனால், அக் கடல்கோள்நிகழ்ச்சியினைக் கூறுஞ் சதபதபிராமணப்பகுதி, இற்றைக்கு நாலாயிர ஆண்டுகட்குமுன் அக் கடல்கோளை யடுத்துச் செய்யப்பட்டதாகல் வேண்டுமென்பது நன்கு பெறப்படும். பாபிலோனியர் என்னும் மிகப் பழைய மக்கள் வழங்கிய இக் கடல்கோள் வரலாறு கி. மு. உ000-ஆம் ஆண்டில் அவர்களாற் செதுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றிற் சொல்லப்படுதலாலும்,[1] யூதவேதத்தின் முதலாகமத்திற் குறிக்கப்பட்ட உலகத் தோற்றத்திற்குப்பின் கசுநுசு - ஆண்டுகள் கழித்து அஃதாவது உகூசச-ஆம் ஆண்டில் அக் கடல்கோள் நிகழ்ந்ததென்று யூத நூலாசிரியர்கள் கணக்கிட்டிருத்தலாலும்,[2] குமரிநாடு முதன்முதற் கடலால் விழுங்கப்பட்டது இற்றைக்கு நாலாயிர ஆண்டுகட்கு முன்னென்பது துணியப்படும். தனித்தனி வெவ்வேறிடங்களில் இருந்த தமிழர், ஆரியர், பாபிலோனியர், யூதர் என்னும் பழைய பல்வேறு மக்கட்பிரிவினர் அதற்குக் கூறுங் காலக் கணக்குப் பெரிதும் ஒத்திருத்தல்கொண்டு, அக் கடல்கோள் நாலாயிர ஆண்டுகட்குமுன் நிகழ்ந்தமை ஒருவாற்றானும் ஐயுறற்பாலதன்றாம். இங்ஙனமாகத், தமிழர் அல்லாத ஏனைப் பழையமக்கள் மொழிந்த கடல்கோட் காலக்கணக்கொடு, தமிழ் முச்சங்கம் நடாத்திய பாண்டி வேந்தரின் காலக்கணக்குப் பெரும்பாலும் ஒத்திருத்தலின், இறையனாரகப்பொருள் உரைப் பாயிரவுரையில் தலைச்சங்கம் நடாத்திய பாண்டிமன்னர் எண்பத்தொன்பதின்மரெனவும், இடைச்சங்கம் நடாத்திய பாண்டி மன்னர் ஐம்பத்தொன்பதின்மரெனவும், கடைச்சங்கம் நடாத்திய பாண்டிமன்னர் நாற்பத்தொன்பதின்ம

---

1. See Dr, H. E. Ryle's Commentary on Genesis, p. 118.
2. do do Introduction, p. XXXVI

ரெனவும் மொழிந்த வரலாற்றுரை உண்மையுரையே யாதல் கடைப்பிடித்துக்கொள்க.

அற்றாயினும், சதபத பிராமணத்திற் சொல்லப்பட்ட கடல்கோள தென்னாட்டின்கண் நிகழ்ந்ததென்று அதன் கட் கூறப்படாமையானும், அதனை ஆராய்ந்த 'பாலகங்காதரதிலகர்' அது வடதுருவத்தின்கண்ணே நிகழ்ந்ததாகல்வேண்டுமெனக் கூறுதலானும், அது குமரிநாட்டைக் கொண்ட கடல்கோளே என்பதற்குச் சான்றென்னையெனிற் கூறுதும்; சதபதபிராமணம் அக் கடல்கோள் இன்ன இடத்தில் நிகழ்ந்ததென்று உரைத்திலதேனும், அதற்குப் பின்வந்த புராணங்களில் மிகப் பழைதாகிய மற்சபுராணம் (க, கஉ), அக் கடல்கோளில் தொடர்புற்ற மநு என்பவர் மலையம் என்னும் மலைமேல் தவம்புரிந்துகொண்டிருந்தார் என்று நுவலுதலானும், சதபதபிராமண மற்ச புராணங்களிற் போந்த அச் சுருக்க வரலாறுகளுக்கு விரிவுரைபோற் றோன்றிய பாகவதபுராணமானது (அ, உச, எ), தமிழ்நாட்டில் ஓடுங் கிருதமாலை என்னும் ஆற்றங்கரையில் தமிழர்க்கு அரசனான சத்தியவிரதன் என்பான் தவஞ் செய்துகொண்டிருந்த காலையில், அங்கு மீன் வடிவில்வந்த ஒரு தெய்வம் அவற்கு அங்கு நிகழப்போகுங் கடல்கோளினை முன் அறிவித்து, அறிவித்தவாறே அது நிகழலானபொழுது, அங்குப் போந்த மரக்கலம் ஒன்றில் அவனையும் அவனுடனிருந்தார் சிலரையும் ஏற்றுவித்து, வெள்ளத்தில் அம் மரக்கலத்தை இழுத்துக்கொண்டு போய் அவர்தம்மையெல்லாந் தப்புவித்த வரலாற்றினை விரித்துரைத்தலானும், 'மலையம்' என்னும் பொதியமலையிருந்த குமரி நாட்டிலேயே அக் கடல்கோள் நிகழ்ந்தமை நன்கு துணியப்படும். அத் தமிழ்நாட்டு மன்னனான 'சத்தியவிரதன்' (இப் பெயர் அவனுக்குரிய பழைய தமிழ்ப் பெயரை மொழிபெயர்த்த வடமொழிப் பெயராகும்) என்பான் இறைவனாற் பாதுகாக்கப்பட்டு அக் கடல்கோளுக்குத் தப்பிக், கடல்கொண்ட குமரிநாட்டுக்கு வடக்கிருந்ததாகிய இத் தமிழ்நாட்டில் வந்து சேர்ந்து, கடல்நீராற் கவரப்பட்ட தமிழ்நான்மறைப் பொருள்களைப் பெயர்த்

தும் வழங்கச்செய்து, நாகரிகத்தை நிலைநாட்டினன். இங்ஙனம் போந்த இவ்வுண்மை வரலாறுகள் கொண்டு, சதபதபிராமணத்திற் குறிக்கப்பட்ட கடல்கோள் பண்டைத் தமிழ்நாடாகிய குமரிநாட்டின்கண் நிகழ்ந்ததேயாகு மென்பது தெள்ளிதிற் புலப்படுதலால், ஏதொருசான்றும் இன்றி அது வடதுருவத்தில் நிகழ்ந்ததாகுமென மொழிந்த பாலகங்காதர திலகருரை கொள்ளற்பால தன்றென விடுக்க.

இனிச், சதபதபிராமணமானது குருகுல பாஞ்சால குல மன்னர்க்குரிய தேயம் இதுவெனக் குறித்துரைப்பதோடு, ஜனமேஜயன் குருகுலவேந்தனாதலும்,[1] சுருதசேனன் உக்கிரசேனன் வீமசேனன் முதலியோர் அருச்சுனன்றன் பேரற்கு மக்களாய் ஜனமேஜயனுக்கு உடன்பிறந்தோராதலும்[2] தெரித்தோதுகின்றது. எனவே, சதபதபிராமணம் மாபாரதப்போர் நடந்தேறியபிற் பல நூற்றாண்டுகள் கழித்து இயற்றப்பட்ட நூலாதலும் நன்கு தெளியப்படும். சதபத பிராமணப் பகுதிகள் சில கி. மு. உ௩00-ஆம் ஆண்டிற்குப் பின் இயற்றப்பட்டதாதல் செல்லாமையாற், குமரி நாடு கடல்வாய்ப்புக்கது கி. மு. உ௪00-இலும், பாரதப் போர் நிகழ்ந்தது கி. மு. ௩000 - இலும் என்று கோடலே சாலப் பொருத்தமாம். மற்றுத், தலைச் சங்கமோ அக் கடல்கோளுக்கு முன் ௪௭௮0-ஆண்டுகள் நடைபெற்றதென்பதனை மேலே விளக்கிக் காட்டினமாதலால், அத் தலைச்சங்கப் புலவருள் ஒருவரான முரஞ்சியூர் முடிநாகராயர், பாரதப் போரில் நின்ற பாண்டவர் படைக்குச் சோறு வழங்கிய உதியஞ்சேரலனை முன்னிலைப் படுத்துப் பாடியிருத்தல் கொண்டு, அப் பாரதப்போர் நிகழ்ந்த கி. மு. ௩௫0௧-இல் அஃதாவது இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகட்குமுன், அஃதாவது தலைச்சங்க நடுக்கால எல்லையில் அவர் இருந்தவராவ ரென்பது துணியப்

1. Prof. A. A. Macdonell's Sanscrit Literature, p. 213.
2. Mr. C. V. Vaidya's The Mahabharata, A Criticism, pp. 69, 70.

படும். இங்ஙனமாக, இறையனாரகப் பொருள் உரைப் பாயிரத்தின் முச்சங்க வரலாற்றிற் குறிக்கப்பட்ட பாண்டி வேந்தரது தொகையுந், தலைச்சங்கத்தில் முரஞ்சியூர் முடி நாகராய ரென்பாரொரு பெரும்புலவர் இருந்தனரெனப் போந்த உண்மையும், வடநூற் சான்றுகளோடும் ஏனைப் பாபிலோனியர் யூதர் என்னும் பிறநாட்டார் வரைந்து வைத்திருக்கும் வரலாறுகளோடும் முழுதொத்து நிற்கக் காண்டலின், அவை தொன்றுதொட்டு வந்த மெய் வரலாறுகளாதல் துணியற் பாற்றும் என்பது.

இனித் தலைச்சங்கத்தார்க்கு நூல் 'அகத்தியம்' என்றும், இடைச்சங்கத்தார்க்கு நூல் "அகத்தியமுந் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூத புராணமும் என இவை" என்றும் போந்த உரையில், 'அகத் தியம்' தலைச்சங்கநூலென்றதூஉம், 'தொல்காப்பியம்' இடைச்சங்கநூலென்றதூஉம் உண்மையாகா. 'அகத் தியம்' என்றொரு நூல் பண்டைக்காலத்தில் இருந்ததில்லை யென்பதை முன்னரே காட்டினும். மற்றுத் 'தொல்காப் பியமோ, குமரிநாடு கடல்கொள்ளப்படுமுன் ஆக்கப்பட்ட நூலென்பது பனம்பாரனூர் கூறிய சிறப்புப் பாயிரத்தானும், அதற்கு 'இளம்பூரணர்' உரைத்த உரையானுந் தெளியப் படுதலின், அது தலைச்சங்ககாலத் தெழுந்த நூலேயாகு மல்லாமல் இடைச்சங்ககாலத்த தாகாது.

அற்றேல், தொல்காப்பியத்திற்குப் பாயிரஞ் செய்த பனம்பாரனூர் "பல்புகழ் நிறுத்த படிமை யோனே" என்று ஆசிரியர் தொல்காப்பியனாரைத் தவவொழுக்கத்தினராக வைத்து உயர்த்துக் கூறுதலானும், 'படிமை' என்னுஞ் சொல் 'தவ வொழுக்கத்தினை' யுணர்த்துதல் சமண் மதத் தவர் நூல்களிலன்றி அவற்றிற்கு முற்பட்ட வடமொழி தென்மொழி நூல்களிற் காணப்படாமையின் அச் சொல் லால் உயர்த்துரைக்கப்பட்ட தொல்காப்பியனார் சமண் மதத்திற்கு உரியவரேயாதல் அதனாற் போதரலானும், சமண்நூலார் உயிர்த் தொகைகளை ஓரறிவு முதல் ஐயறிவு ஈருகப் பகுத்து அவ்வவ்வகையுள் அவற்றை

வைத்து அடக்குமாறுபோலவே தொல்காப்பியனாரும் 'மரபியலில்' உயிர்த்தொகைகளை ஒன்றுமுதல் ஆறு அறிவு ஈறாகப் பகுத்து அவ்வகைகளுள் வைத்து அவை தம்மை அடக்கிக்கூறுதல் கொண்டு அவர் சமண்மதத்தின ரென்பதற்கு மற்றுமொரு சான்று பெறப்படுதலானும் அவர் சமண்மதத்தினரேயாவர் என்பர் ஒரு சாரார்.[1] வடமொழி இலக்கண ஆசிரியரான பாணினி என்பவரும் 'ஐந்திரவியாகரணத்தைச்' செய்த 'இந்திரன்' என்னும் ஆசிரியரும் கி. மு. ௩௦௦-ஆம் ஆண்டில் இருந்த ஒரே காலத்தவராயினும், தொல்காப்பியனார் ஐந்திர வியாகரணத்தையே விரும்பிக் கற்றவராகலின், அவரை "ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்" என்று பனம்பாரனார் ஓதினார்; ஓதவே, தொல்காப்பியனார் காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாதல் பெறப்படும் என்பர் பிறிதொருசாரார்.[2] இவ்வா றுரைப்பவரே பிறிதோரிடத்தில், தொல்காப்பியம் கி. மு. நான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகாது[3] என முன்னொடுபின் முரண உரை நிகழ்த்தினார். பின்னும் ஒருசாரார், இலங்கைத் தீவின் வரலாற்றில்[4] முதற் கடல்கோள் கி. மு. ௨௩௮௭-இலும், இரண்டாங் கடல்கோள் பாண்டுவாசன் அரசு புரிந்த கி. மு. ௫0௪-இலும், மூன்றாவதொன்று கி. மு. ௩0௬-இலும் நிகழ்ந்தமை குறிக்கப்பட்டிருத்தலின், இறையனாரகப்பொருட் பாயிரவுரையிற் சொல்லப்பட்ட கடல்கோளைக் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் நிகழ்ந்த மூன்றாங் கடல்கோளாகவைத்துத் 'தொல்காப்பியம்' அக் கடல் கோளுக்குச் சிறிது முன்னே செய்யப்பட்டதெனவும், கி. மு. நான்காம் நூற்றாண்டில் இந்தியநாட்டின்மேற் படை

---

1. செந்தமிழ், தொகுதி ௧௮, பகுதி ௬; தொகுதி ௧௬, பகுதி ௪.

2. 'Dravidian India' by Mr. T. R. Sesha Iyengar, M. A., pp. 158, 159.

3. Ibid, p. 170.

4. Tennent's History of Ceylon; See also P. Arunachalam's Sketches of Ceylon History, pp. 8, 9.

யெடுத்து வந்த கிரேக்க அரசனான அலெக்சாந்தருடன் போந்த கிரேக்க வான்நூலாசிரியர் கொணர்ந்த 'ஹோரா' என்னுங் கிரேக்கமொழியைத் தொல்காப்பியனார் 'ஓரை' எனத் திரித்துத் தமது நூலுள் வழங்குதலே அவர் கி. மு. மூன்றும் நூற்றாண்டில் இருந்தாரென்பதற்குப் பின்னும் ஒரு சான்றாமெனவும் உரையாநிற்பர்.[1] மற்றும் ஒருசாரார், கிறித்துபிறந்த முதல்நூற்றாண்டாகிய அத்துணைப் பழையகாலத்தில் தமிழ்மொழி அத்துணை ஒழுங்கானதோர் உயர்ந்த நிலையை அடைந்திருத்தல் நம்பற்பாலதன்றெனத் தங்கருத்து உரைத்துப், பாண்டிமன்னர் வழங்கிய 'வட்டெழுத்துக்கள்' என்பன அசோகமன்னன் வழங்கிய 'பிராமி' எழுத்துக்களினின்றே வந்தனவாகல்வேண்டுமாதலானும், 'பிராமி' எழுத்துக்களால் ஆக்கப்பட்ட கல்வெட்டுகள் கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டன அன்மையால் வட்டெழுத்துக்கள் தோன்றியபின்னன்றித் தமிழ்மொழி எழுத்துரு அடைந்திருத்தல் ஏலாமையானும் தொல்காப்பியம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகுமென்று கோடலே பொருத்தமாம் என்பர். கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. எட்டாம் நூற்றாண்டுவரையிற் சென்ற ஆயிர ஆண்டுகளில் வட்டெழுத்தாற் செதுக்கப்பட்ட ஒரு கல்வெட்டுத்தானுந் தமிழ்நாட்டின்கட் காணப்படாமையின், கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்குமுன் தமிழ்மொழி ஓர் ஒழுங்குபெற்ற நிலையை எய்தவில்லையென்பதே திண்ணமாம் எனவும் இன்னோர் உரையாநிற்பர்.[2] பின்னும் ஒரு பார்ப்பனர், கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தொல்காப்பியம் இயற்றப்பட்டதென நாட்டுவான் புகுந்து, சிலப்பதிகாரத்திற்,

> "புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
> விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்."
>
> (௧௧, ௯௮-௯௯)

எனவும்,

---

1. Studies in S. Indian Jainism, pp. 38, 39.
2. Studies in South Indian Jainism by Mr. M. S. Ramaswami Ayyangar, M.A., pp. 168—171.

"கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கையின் விளங்கக் காணாய்."
(௧௧, ௧௫௪-௧௫௫)

எனவும் போந்த அடிகளிற் குறிப்பிடப்பட்டது 'பத்ரபாகு' என்னுஞ் சமண் முனிவராற் செய்யப்பட்ட 'கல்பசூத்திரமே' யாகுமென்றும், இக் கல்பசூத்திரமானது 'ஐந்திரம்,' 'ஜைநேந்திரம்' என்னும் பெயர்களால் வழங்கப்படுவதாமென்றும், இதனைக் கடைமுறையாக வெளியிட்ட 'பூஜ்யபாதர்' என்னுந் தேவநந்தியின் மாணாக்கரான 'வஜ்ரநந்தி' என்பவர் கி. பி. ௪௭0-இல் மதுரையின்கண் ஒரு திராவிட சங்கம் நிலைநிறுத்தினராகலின் அச் சங்கத்தாருள் ஒருவரான தொல்காப்பியர் சமண்முனிவரே யாகல் வேண்டுமென்றும், சமண்முனிவராகிய தொல்காப்பியர் உணர்ந்தது பத்ரபாகு இயற்றிய கல்பசூத்திரமாகிய ஜைநேந்திரமே யாகல்வேண்டுமென்றும், இவ்வாற்றால் தொல்காப்பியர் கி. பி. ௬௫0-ஆம் ஆண்டளவில் இருந்தாராகற் பாலரென்றும் மொழிந்திட்டார்.[1] இங்ஙனமாகப், பார்ப்பனரும் அவர் வழிச்சார்ந்தார் ஏனைச்சிலரும் ஒருவர்பின் ஒருவராய் எழுந்து, தமிழ்க்குந் தமிழர்க்கும் இயற்கையாயுள்ள தனிப்பெருஞ் சிறப்பினையும் பழைய நாகரிகத்தினையுங் குறைத்து விடுதற்கும், தம்பால் வந்து கலந்த ஆரியரது கூட்டுறவினாலேயே தமிழர் ஓராயிர ஆண்டுகளாகத்தான் சிறிது நாகரிகம் எய்தி வருகின்றார்களென்று காட்டுதற்கும் உண்மையல்லாதவைகளை உண்மைபோல் எழுதித் தமிழ் மக்களை இழித்துப்பேசி வருகின்றார். தமிழரில் ஆராய்ச்சியுணர்வு வாயாதார் எல்லாம் பார்ப்பனர் உரைக்கும் இப் பொய்யுரைகளிற் சிக்குண்டு, தாமும் அவர்க்குத் துணையாய் நின்று தம்மினத்தவரை வேரறுக்குங் கருவியாய் அவர்க்குப் பயன்றந்து வருகின்றாராலெனின்; அவர்தம் பெற்றி எவ்வாறாயினும் ஆகுக. ஒப்புயர்வில்லாத் தொல்காப்பிய நூலின் உண்மைப் பழமையைக் குறைப்பான் புகுந்த இப் பார்ப்பன ருரைகள் அத்தனையும்

1. See the 'Hindu' for the 4th April, 1925.

பொய்யுரைகளாதலை முறையே வகுத்தாராய்ந்து காட்டுவாம்:

தொல்காப்பியத்திற்குப் பாயிரச்செய்யுள் உரைத்த பனம்பாரனார் "பல்புகழ் நிறுத்த படிமை யோனே" என்பதில் தொல்காப்பியனாரைப் 'படிமையோன்' என்று கூறினமையானும், 'படிமை' என்னுஞ் சொல் சமண நூல்களிலன்றி வேறு வடமொழி தென்மொழிப் பழைய நூல்களில் தவவொழுக்கத்திற்குப் பெயராய் வழங்காமையானுந் தொல்காப்பியர் சமணரேயாதல் வேண்டுமென்றார் கூற்றை முதற்கண் ஆராய்வாம். 'படிமை' என்னுஞ் சொல் 'ப்ரதிமா' என்னும் வடசொல்லின் திரிபாகுமென்பது எல்லார்க்கும் உடன்பாடாம்; இது 'படிவம்' எனவுந் தமிழிற் றிரிந்து வழங்கும். "மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய" என்னுஞ் சூத்திரவுரையில் (தொல்காப்பியம், பொருள், ௩0), உரையாசிரியர் இளம்பூரணர், "'படிமை' என்பது 'ப்ரதிமா' என்னும் வடமொழித்திரிபு; அது தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கட் செய்து அமைத்த தேவர் மேல் வந்தது" என்று உரை கூறியவாற்றால் இச்சொல்லின் உண்மை தெளியப்படும். படவே, 'படிமை' என்பது கடவுளர்க்குப் பிரதியாக அஃதாவது கடவுளரையொப்ப அமைத்த வடிவங்களை உணர்த்துதல் பெற்றாம். பெறவே, இச் சொல் முதலில் ஒரு தெய்வத்தோடு ஒத்த வடிவத்தையும், பின்னர்த் தெய்வவடிவம் போல்வாராகிய அருந்தவத்தோரையும், அதன்பின் அவ்வருந்தவத்தோர்க்குரிய தவவொழுக்கத்தையும் உணர்த்துதலும் பெற்றாம்

"பாரோர் காணப் பலர்தொழு படிமையன்."

(சிலப்பதிகாரம், கரு, கருஅ)

என்புழி அச்சொல் தெய்வ வடிவத்தினையும்,

"கூறினை பெருமநின் படிமை யானே."

(பதிற்றுப்பத்து, எச, உஅ)

என்புழி அது தெய்வ வடிவத்தோடொத்த தவவொழுக்கத்தினையும்,

"இஃதிவர் படிவம் ஆயின்." (புறநானூறு, ௧௫௪)

என்புழித் தவவொழுக்கத்தின் பாலதான நோன்பினையும்,

"தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே." (குறுந்தொகை, ௧௫௬)

என்புழித் துறந்த பார்ப்பனரின் தவவொழுக்கத்தினையும் அஃதுணர்த்துதல் காண்க. "கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்" என்னும் முல்லைப்பாட்டின் ௩௭-ஆம் அடியினுல் அந்தணரிற் காவியாடை யுடுத்தாரின் தவ வடிவத்தைப் படிவம் என்னுஞ்சொல் உணர்த்துதலும் நன்கு விளங்காநிற்கும். மேற்காட்டிய குறுந்தொகைச் செய்யுளால் அவ் வந்தணத் துறவோர் முக்கோலுந் தண்ணீர்க்கரகமுங் கைக்கொண்டிருப்ப ரென்பதூஉம் இனிது புலனும். கலித்தொகையிற் போந்த,

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவல்அசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை அந்தணீர்!"
(பாலைக்கலி, அ)

என்பதனுலும் பண்டைக் காலத்துத் தண்டமிழ் நாட்டு அந்தணரில் துறவொழுக்கத்தின் பாலராய் நின்ருர் தவ வடிவம் நன்கெடுத்து மொழிந்திடப்பட்டமை காண்க. ஆசிரியர் தொல்காப்பியனருந் தமதுகாலத்திருந்த அந்தணர்க்குரிய வடிவங் கூறுகின்றுழி,

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய." (மரபியல், ௭0)

என்று ஓதுதலால், அக்காலத்து அந்தணரில் இல்லறத் தாருங்கூடத் தவவடிவங் கைக்கொண் டிருப்பரென்பது பெற்ரும்.

பெறவே, அக்காலை அந்தணர் கொண்ட தவவடிவம் அப்பெற்றித்தாயது என்னையென்பது ஆராயற்பாற்று.

பண்டைத் தமிழ்மக்கள் காணவுங் கருதவும்படாத முழு முதற் கடவுளைக் காணவுங் கருதவும் எளிதாம்படி தம்மை யொத்த ஒரு மக்கள் வடிவில்வைத்து வழிபடலாயினர். அங்ஙனம் மக்கள் வடிவில் வைத்து அவனை வழிபடினும், அவன் மக்களுள் ஒருவனும் போலுமெனத் தம்மனோர் மயங்கிவிடாமைப் பொருட்டு, உலகத்தோற்றத்திற் கட் புலனும் விழுப்பொருள்களையே அவன்றன் திருவுருவத் திற்குப் பல்வேறு உறுப்புகளாக்கினர். உலகத்தில் நடை பெறும் ஒழுக்கங்களெல்லாம் ஒளியுடைப் பொருள்களின் உதவியால் நடைபெறக் காண்டலின், அவ்வொளியுடைப் பொருள்களை அப் பெருமானுக்குக் கண்களாகக் கருதினர். உலகின்கட்காணப்படும் ஒளியுடைப் பொருள்கள்: ஞாயிறு, திங்கள், தீ என்னும் மூன்றுமேயாம்; ஆகவே, சிவபிரா னுக்கு ஞாயிறு வலக்கண்ணாகவும், திங்கள் இடக்கண்ணாக வும், தீ நெற்றிக் கண்ணாகவுங் கொள்ளப்பட்டன. இம் மூன்றொளியுடைப் பொருள்களும் இறைவனுக்கு மூன்று கண்கள் போல் விளங்குவதோடு, அருளொளியினனாகிய அவனுக்குத் திருமேனி போலவும் பொலிதலால் அம் மூன்றும் அவ்வொப்புமை பற்றி அம்முழுமுதற் கடவு ளாகவே வைத்து வணங்குதலும், வாழ்த்துதலுஞ் செய் யப்படும். இதுபற்றியே ஆசிரியர் தொல்காப்பியனார்,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."

(புறத்திணை இயல், ௩௩)

என ஓதினார். இச் சூத்திரத்திற்கு இளம்பூரணர் மெய் யுரை கண்டிலர். நச்சினார்க்கினியர் 'கொடிநிலை' என்ப தற்கு 'வெஞ்சுடர் மண்டிலம்' எனவும், 'வள்ளி' என்பதற் குத் 'தண்கதிர் மண்டிலம்' எனவும் மெய்யுரை கண்டு மொழிந்தனரேனுங், 'கந்தழி' என்பதற்கு 'ஒருபற்றுக்கோ டின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்' என்று ஒருவாற்றாற் பொருந்தாவுரை கூறினார். 'கந்தழி' என்பது முழுமுதற் கடவுளை மட்டுமே உணர்த்

துவதாயின் அவர் அதற்குக் கூறியவுரை பொருந்து வதேயாம். மற்றுக், கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் மூன்றனை வாழ்த்தும் வாழ்த்துரையுங் கடவுள் வாழ்த்தோ டொப்பக் கருதுமாறு வரும் என்று ஆசிரியர் தொல்காப் பியனார் மேற்காட்டிய சூத்திரத்தில் அருளிச்செய்தலின், அம் மூன்றும் முழுமுதற் கடவுளாகா என்பது ஆசிரியர் கருத்தாதல் பெற்றாம். பெறவே, முழுமுதற் கடவுளாகாமல் முழுமுதற் கடவுளோடு ஒருபுடையொப்பக் கருதப்படுங் 'கந்தழி' என்பதற்கு, 'முழுமுதற்கடவு ளிலக்கணமாகிய ஒருபற்றுக்கோ டின்றி அருவாகித் தானே நிற்குந் தத்து வங்கடந்த பொருள்' என்பதனை ஏற்றுதல் ஆசிரியர் கருத்தறிந்த உரையாகாமையுந் தெற்றென விளங்கும். அற்றேல், மற்றென்னோ அதற்கு மெய்யுரையெனிற் கூறுதும்: 'கந்தழி' என்றது 'தீப்பிழம்பினையே' யாம்; அஃது அப்பொருள் தருமாறு யாங்ஙனமெனிற்; 'கந்து' எனுஞ்சொல் 'பற்றுக் கோடு' என்னும் பொருட்டாதல், "மறங் கந்து ஆக நல்லமர் வீழ்ந்த" (புறநானூறு, கூங) என்பதனாலும் அதனுரையாலும் அறியப்படும். 'அழி' என்பது அழிப்பது; எனவே, 'கந்தழி' என்பது 'தான் கொண்ட பற்றுக்கோட்டினைத் தானே அழிப்பது' என்று பொருடருவதாகும். இனித், தீயானது தான்பற்றிய விறகினையுந், திரி நெய்யினையும் அழித்துவிடுதல் எவரும் அறிந்ததேயாம். அதனாற், 'கந்தழி' என்பது தீப்பிழம்பே யாயிற்று. மேலும், ஞாயிறு திங்கள் என்னும் இரண்டு ஒளியுடைப் பொருள்களோடு இயைபுடையது அனற் பிழம்பே யல்லது பிறிதின்மையின், 'கந்தழி' என்பதற்கு அவ் விரண்டோடு இயைபு சிறிதுமில்லா வேறுபொருள் உரைத்தல் ஆசிரியர் கருத்துக்கு முற்றும் முரணுமென்க.

அற்றாயின், ஞாயிறு தீ திங்கள் என்னும் வெளிப் படைச் சொற்களாற் கிளவாமற், கொடிநிலை கந்தழி வள்ளி என்னுந் திரிசொற்களால் ஆசிரியன் அவற்றைக் கிளந்தது என்னையெனின்; ஞாயிறு தீ திங்கள் என்னுஞ் சொற்கள் கற்றார் முதற் கல்லாதார் ஈறான எல்லாரானும் வழங்கப்

படுதலின், அச் சொற்கள் ஒளியுடைய அப் பொருள்களின் கடவுட்டன்மையினை நினைவுறுத்தமாட்டா. ஆகலான், அருளொளி யுருவினனாகிய இறைவன் அவ் வொளியுடைப் பொருள்களைத் தனக்குத் திருமேனியாகக் கொண்டு அவற்றின்கண் விளங்கித் தோன்றி எல்லா உயிர்களின் அறிவையும் மறைக்கும் புறவிருள் அகவிருள் இரண்டனையும் ஓட்டி அவைதமக்கு அவ் வறிவை விளங்கச் செய்தல் குறித்து, அம் மூன்றுங் கடவுட்டன்மை யுடையவாதல் தெரிப்பார் அவைதம்மைக் கொடிநிலை கந்தழி வள்ளியென்னும் பெயர்களாற்சிறந்தெடுத்துக் கூறினார். அற்றேல், அச் சொற்கள் கடவுட்டன்மையினைக் குறிக்குமாறு யாங்ஙனமெனிற் காட்டுதும்: 'கொடிநிலை' என்னும் இருமொழித் தொடரிற் 'கொடி' என்பது கிழக்குத் திசையினை யுணர்த்துதல்,

> "பொய்தீர் உலகம் எடுத்த கொடி மிசை
> மையறு மண்டிலம் வேட்டனள்." (கலித்தொகை, கசக)

என்று உரைகாரர் நச்சினார்க்கினியர் ஆண்டெடுத்துக் காட்டிய செய்யுளால் நன்கு விளங்கும். விளங்கவே, கீழ்த்திசைக்கண்ணே வந்து நிற்குங் கதிரொளியை அஃதுணர்த்துதல் புலனாம். திங்களும் இல்லாத இரவின் எல்லையெல்லாங் கண்ணொளியை மறைத்த இருளால் அறிவொளியும் மறைபட்டு அயர்ந்துறங்கிய உயிர்த்தொகைகள் அத்தனையுங், கிழக்கின்கட் கதிரொளி வந்து நிலைபெற்ற அளவானே தங் கண்ணொளியுங் கருத்தொளியும் ஒருங்கு விளங்கப்பெற்று முயற்சி யுடையவாதல் கண்டாமன்றே. இங்ஙனமாக உயிர்ப் பன்மைகளின் அறிவும் முயற்சியும் விளங்கி நடைபெறுதற்குக் கீழ்த்திசைக்கண் எழுந்து நிலையும் ஞாயிறு ஏதுவாதலின் அக் கீழ்த்திசைக் கதிரொளி கடவுட்டன்மை யுடையதென்பது அறிவுறுத்துதற்கே அதற்குக் 'கொடிநிலை' என்னுஞ் சொல்லைப் பேரறிவு மிக்க ஆசிரியன் வழங்குவானாயினன். ஞாயிறு என்னும் வழக்குச்சொல் கீழ்த்திசை மேற்றிசை இரண்டினும் நிற்குங் கதிரொளிக்குப் பொதுப்பெயராகலானும்,

மேற்றிசைச்சென்ற ஞாயிறு விரைவில் மறைந்து புறவிருள் அகவிருள்களை வருவித்தலின் அது கடவுட்டன்மை யுடைய தாகாமையானும், கடவுட்டன்மை யுடையதெனை வைத்து வாழ்த்துதற்கு ஏற்புடையது கீழ்த்திசை ஞாயிறே யென்பதனை வலியுறுத்துவான்வேண்டி அப் பொருள் பயக்குங் 'கொடிநிலை' என்னுஞ்சொல்லை ஆசிரியன் அதற்கு விதந்தெடுத்துக் கூறினு னென்பது. இதனு னன்றே, ஆசிரியர் நக்கீரனார்,

> "உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு."

என்று திருமுருகாற்றுப்படையிலும், ஆசிரியர் இளங்கோ வடிகள்,

> "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதுங்
> காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
> மேரு வலந்திரித லான்."

என்று சிலப்பதிகார முகத்தினுங் கீழ்த்திசை எழூஉஞ் செங்கதிர்ச் செல்வனை வாழ்த்துவாராயினர் என்க.

இனி, மேலது போலவே தீ, நெருப்பு, அழல், தழல் முதலான சொற்கள் மக்கள் எல்லாரானும் வழங்கப்படுதல் நோக்கி, அவை அதன் கடவுட் டன்மையினை உணர்த்தா வென்றறிந்த ஆசிரியன், அதன் கடவுட் டன்மையினை யுணர்த்துதற் கேற்ற 'கந்தழி' என்னுஞ் சொல்லால் அதனைக் குறிப்பானுயினன். தனக்கொரு பற்றுக்கோ டின்றித் தான் எல்லாவற்றிற்கும் ஒரு பற்றுக் கோடாய் நிற்பதூஉந், தான்பற்றிய உயிரின் பருப்பொருளறிவினை யழித்து அவ் வறிவினை நுண்ணிதாக்கி அதனைத் தன் றன்மையாய் நிற்கச் செய்வதூஉந், தான் எதனுனும் பற்றப்படாத அருவுமாய்க் கட்புலனுயினும் தொடப்படுவ தல்லாத உருவுமாய் இவ்வாறு இருதிறமும் விராய அரு வுருவாய் நின்று திகழ்வதூஉம் எல்லாம்வல்ல இறைவ னியல்பாதல்போலத், தீப்பிழம்புந் தானிருத்தற்கு ஒரு பற்றுக்கோடு வேண்டுமென்பது இன்றாய் எல்லா உயிர்ப்

பொருள்களி னிருப்புக்குந் தாளொரு பற்றுக்கோடாய் அவற்றினுள்ளும் ஏனைப் பொருள்களினுள்ளும் விரவி நிற்றலானுந், தான் பற்றிக்கொண்டு தோன்றும் விறகு திரி நெய் முதலியவற்றின் பருப்பொருட்டன்மையை அழித்து அவற்றை நுண்பொருளாக்குவதுடன் தான் பற்றி எரியுங்காறும் அவற்றைத் தன் நிறமாக வயங்கச் செய்தலானுந், தான் புலப்பட்டுத் தோன்றுவழி எங்குமுள்ள அருவாய் விளக்கு விறகு முதலியவற்றிற் புலப்பட்டுத் தோன்றியவழியும் எவரானும் பிடிக்கப்படுவதல்லாத உருவுமாய் இவ்வாறு அருவும் உருவுமாம் இருதிறமும் ஒருங்கு கலந்த இயல்பிற்று மாகலானுந் தீ கடவுட்டன்மை யுடையதாதல் துணியப்படும். இப்பெற்றித்தாந் தீப்பிழம்பின் இலக்கணத்தை உணர்த்துதற்கு வாய்ப்புடைத்தாதல் பற்றியே ஆசிரியன் 'கந்தழி' என்னுஞ் சொற்கொண்டு அதனையுங் கடவுள் வாழ்த்தின்பாற் படுப்பானாயினன் என்க. இனி, ஞாயிறு திங்கள் என்னும் இருமண்டிலங்களுங்கூடத் தீத் திரளைகளே யாகலானும், தீ யொன்றுமே அவற்றின் விளக்கத்திற்கு ஏதுவாகலானுங் 'கொடிநிலை' என்னும் ஞாயிற்றிற்கும், 'வள்ளி' என்னுந் திங்களுக்கும் இடையே 'கந்தழி' என்னுந் தீப்பிழம்பின் வாழ்த்தை ஆசிரியன் வைத்திட்டானென்பதூஉம் அறியற்பாற்று.

இனித், திங்கள், நிலா, அம்புலி என்னுஞ் சொற்கள் எல்லாரானும் வழங்கப்படுதலின் அவை அவருள்ளத்தே கடவுள் நினைவினைத் தோற்றுவியா எனக் கருதி, அந்நினைவினைத் தோற்றுவித்தற்கு ஏற்ற 'வள்ளி' என்னுஞ் சொல்லால் அதனை ஆசிரியன் குறிப்பானாயினன். கதிரொளி வெம்மைகலந்த ஆற்றலை[1] உலகுயிர்களுக்குத் தரா நிற்ப, நிலவொளி தண்மை கலந்த ஆற்றலை[2] அவற்றிற்கு வழங்கி அவற்றைப் பேணி வளர்த்தலின் 'வள்ளி' எனப் படுவதாயிற்று. அற்றேற், கதிரவனும் வெம்மை கலந்த ஆற்றலை வழங்கும் வண்மை (ஈகை) யுடையனாகலின்

1. Positive electricity. 2. Negative electricity.

அவனையும் 'வள்ளி' எனக்கூறல் வேண்டுமாம் பிற வெனின்; அற்றன்று; கொடுமையொடு கொடுக்குங் கொடையினைக் கொடை என்று எவரும் உயர்த்துக்கூறார், அஃது இன்றியமையாக் கொடையேயாயினும். மற்று, அகங்கனிந்து முகம் மலர்ந்து குளிர்ப்பக்கூறிக் கொடுக்குங் கொடையினையே எவரும் மகிழ்ந்து புகழாநிற்பர். அங்ஙனமே, ஞாயிறு கொடுக்கும் மின்னாற்றல் இன்றியமையாததொன்றேயாயினும், அது வெம்மையொடு கூடியிருத்தலின் அதனை 'வண்மை' என ஆசிரியன் கொண்டிலன்; மற்றுத் திங்கள் வழங்குந் தண்மைகலந்த மின்னொளி எவரானும் விரும்பி ஏற்கப்படுங் குளிர்ச்சியுடைமையின் அதனையே ஆசிரியன் 'வண்மை' என வேண்டினான். அதுவேயுமன்றிக், கதிரொளி வெய்யதாகலின், அஃது ஆண்டன்மைப்பாற்படும்; நிலவொளி தண்ணிதாகலின் அது பெண்டன்மைப்பாற்படும்.[1] அப் பெண்பாற் றன்மையினை 'வள்ளி' என்னுஞ் சொல் இகரவிகுதியால் நன்குணர்த்துதலின், அது திங்கண்மண்டிலத்தின் வண்மைத்தன்மையினை அறிவிக்கும் பெயராதற்குப் பெரிதும் ஏற்புடைத்தாதல் காண்க. ஈண்டுக் காட்டிய இவ்வியல்புகள் "ஞாயிறு நெருப்பின் றன்மையும் ஆண்டன்மையும் உடைமையானும், திங்கள் நீரின்றன்மையும் பெண்டன்மையும் உடைமையானுமென்பது. அல்லதூஉம், வெண்கதிர் அமிர்தம் தேவர்க்கு வழங்கலானும் 'வள்ளி' என்பதுமாம்" என்று நச்சினார்க்கினியர் கூறியவுரையானும் புலனாதல் கண்டுகொள்க.[2] இறைவன் ஒருபால் ஆண்டன்மையனாயிருந்து அழித்தற் றொழிலினையும், மற்றொருபாற் பெண்டன்மையனாயிருந்து படைத்தல் காத்தல்களையுஞ் செய்கின்றனாகலின், அவன்றன் ஆண்கூற்றின்பாற்பட்ட 'கொடிநிலை' போல, ஈண்டு 'வள்ளி' என்பது அவன்றன் பெண்கூற்றின்பாற்பட்டு நிற்றலும் நுணுகி யுணர்ந்து கொள்க.

1. சதபதபிராமணம், க, க, க, உ0.

2. தொல்காப்பியம், புறத்திணை இயல், ங ங-ஆஞ் சூத்திர வுரை.

இவ்வாருகக், காணவுங் கருதவும்படாத முதல்வன் இயல்பினை நம்மனோர் காணவுங் கருதவும் எளிதாம்படி வைத்து விளங்கக்காட்டும் விழுப்பம் பற்றியே "கொடிநிலை கந்தழி வள்ளி" என்னும் மூன்றும் அம் முதல்வனோடொப்ப வைத்து வாழ்த்தப்படுமென்று முற்றுணர்வுடைய ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிச்செய்தனர். இன்னும், இறைவன் தீ வடிவினன் ஆதலும் தீவடிவில் விளங்கித் தோன்றி நம்மனோர்க்கு அருள் வழங்கலும் மேலே மாணிக்கவாசகர் வரலாறு கூ௫-ஆம் பக்கம் முதல் கூகூ-ஆம் பக்கம் வரையில் வைத்து விரித்து விளக்கியிருக்கின்றேம். ஞாயிறுந் திங்களுந் தீ வடிவேயாகலின், அவ் விரண்டொடுங் கூட்டத் தீ மூவகைத்தாதல் கண்டுகொள்க. ஏனை உலகுயிர்களில் விரவி நிற்குங்கால் இறைவன் கட்புலனாகா அருவனாய் இருத்தலின், தன்னை உயிர்கள் கட்புலனாற் கண்டு வணங்கமாட்டாவென இரங்கியே, அவர்தங் கண்கட்குப் புலனாகும் இவ் வொளியுடைப் பொருள்கள் மூன்றையுந் தோற்றுவித்து, அவற்றின்கட் டனது அருளொளி யுருவினைக் காட்டி அவர்தமக்குத் தன் அருளமிழ்தம் வழங்கிவராநிற்கின்றான் என்பது. இங்ஙனமாக இறைவன்றன் அருளொளி விளக்கத்திற்கு ஓர் உறையுளாயிருந்து உயிர்கட்கு உதவுதல் குறித்தே ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்றுங் கடவுளோடொப்ப வைத்து வணங்குதலும் வாழ்த்துதலுஞ் செய்யப்படும். தமிழ்நாட்டு அந்தணர் மிகப் பழையகாலந் தொட்டே இறைவனைத் தீ வடிவில்வைத்து வணங்கிவந்தனரென்பதும், அத்தீத்தான் ஞாயிறு திங்கள் தீ என முத்திறப்படுதலின் அவற்றிற்கு அடையாளமாக ஞாயிற்றை யொத்த வட்டவடிவிலும் பிறையை யொத்த வில்வடிவிலுந் தீயையொத்த முக்கோண வடிவிலுங் குழிகள் வெட்டுவித்து அவற்றின்கண் தீ வளர்த்து அதனை வழிபட்டு வரலாயினரென்பதும் அறியற்பாலன. தலைச்சங்கத்திருந்த முரஞ்சியூர் முடிநாகராயர் காலத்திலேயே பொதியமலைமுதல் இமயமலைகாறும் பரவியிருந்த தமிழ்நாட்டு அந்தணர் முத்தீ வேட்டமை,

"சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே."
(புறநானூறு, உ)

என்று அவர் பாடியவாற்றான் அறியப்படும். இம் முத்தீயை வளர்க்கும் வேள்விக் குண்டங்களுள் ஒன்று வட்டமாய் அமைக்கப்படுதல் சதபதபிராமணம் ஏழாங்காண்டம் முதல் அத்தியாயம் முதற் பிராமணத்துள்ளும், மற்றிரண்டும் வில்வடிவும் முக்கோண வடிவுமாய் அமைக்கப்படுதல் "மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து" என்னுந் 'திருமுருகாற்றுப்படை'யடிக்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையுள்ளுங் கண்டுகொள்க. பண்டைக்காலத்திருந்த தண்டமிழ்ச் சான்றோர் தாம் ஞாயிறு திங்கள் தீ என்னும் முத்தீயை வணங்குதற்கு அறிகுறியாக அம் மூன்றின் வடிவுபோன்ற குண்டங்கள் நிலத்தின்கண் வெட்டுவித்து அவற்றின்கண் வேள்விவேட்ட நுட்பம் அறியாத பிற்காலத்தார் இக் குண்டங்களில் ஒன்றன் வடிவை நாற்கோணமாக்கிப் பிழைபட்டார். அதுகிடக்க.

இனி, இம் முத்தீயினையும் வடநூலார் 'ஆகவநீயம்,' 'காருகபத்தியம்,' 'தக்ஷிணாக்கினி' என வழங்கினரேனும், அவற்றுள் ஆகவநீயங் காருகபத்தியம் என்னும் இரண்டுமே சதபதபிராமணம் முதலான பழைய வடநூல்களுட் காணப்படுகின்றன; ஏனைத் 'தக்ஷிணாக்கினி' என்னும் பெயர் அவற்றின்கட் காணப்படுகின்றிலது. இருக்குவேதத்திலுந் (உ, ருசு, ச; ரு, உ0, உ) தீக் கடவுளுக்கு மூன்றிருப்பிடங்கள்மட்டுஞ் சொல்லப்பட்டிருக்கின்றனவேயல்லாமல், அம் மூன்றின் பெயர்களாதல் 'தக்ஷிணாக்கினி' என்னும் பெயராதல் ஆண்டுச் சொல்லப்படவில்லை. மற்றுப், புறநானூற்று உரையாசிரியரோ தக்ஷிணாக்கினியைத் 'தென்றிசையங்கி' என்றுரைக்கின்றார்; தென்றிசையங்கி என்பது தென்றிசைக்கண்ணதாகிய தமிழ் நாட்டிலே வேட்கப்படுந் தீ என்று பொருள்படுவதாகும்.

தீயானது எல்லாத்திசைகளில் உள்ள எல்லா நாடுகளுக்கும் உரித்தாகவும், அதனைத் தென்றிசைக் கண்ணதாகிய தமிழ்நாட்டுக்கே வரைந்து வைத்துத் 'தக்ஷிணாக்கினி' அல்லது 'தென்றிசையங்கி' எனக் கூறியதென்னை? என நுணுகிநோக்கவல்லார்க்கு, எல்லாம்வல்ல முழுமுதற் கடவுள் தீ வடிவின்கட் புலப்பட்டுத்தோன்றி விளங்குதலை முதன்முதலுணர்ந்து, அதற்கேற்ற பரிசால் தீயினை வழிபடும் முறைகளைக் கண்டறிந்து, அவ் வழிபாட்டினைச் செய்து வந்தோரும் வருவோருந் தென்றமிழ்நாட்டி லுள்ள தமிழ்ச் சான்றோர்களே யென்பது இனிது புலனாகாநிற்கும். மேலே ௬௪அ-ஆம்பக்கத்திற் 'சத்தியவிரதன்' என்னும் மநு தமிழ் முனிவனே யாதலை உயர்ந்த பல மேற்கோள்கள் கொண்டு விளக்கினும்.

"ஓ அக்நியே, நின்னை மநுமுனிவன் மக்களெல்லார்க்கும் ஓர் ஒளிப்பொருளாய் ஏற்படுத்தினான்" (க, ௩௬, ௧௯) எனவும்,

"ஓ ஆதித்தியர்களே, மநுமுனிவன் தீ வளர்த்த காலையில், முதல் அவியை ஏழு ஹோத்திரிக் குருமார்களோடும் வேண்டுகோளுரையோடும் நுமக்கே சேர்ப்பித்தான்" (௧௦, ௬௩, ௭) எனவும்,

"இறைவனை அழைப்பவனும் மநுமுனிவன் மரபினர்பாற் குடிகொண் டிருப்பவனுமான அக்நியே இச் செல்வங்களுக்கெல்லாந் தலைவனாவான்" (க, ௬அ) எனவும்,

"அறிவனும் இல்லத்திற்கு இளைய தலைவனுமான அக்நி ஐந்து மரபினரின் இல்லங்கடோறுங் குடிகொண்டிருக்கின்றான்" (௭, ௧௫, ௨) எனவும்,

"ஓ இந்திராக்நியே, நீ யதுக்கள், துருவசர்கள், துருகியர்கள், அணுக்கள், பூருக்கள் என்னும் இவ்வைவகையினரிடங் குடிகொண்டிருத்தலால்" (க, ௧௦அ, அ) எனவும் இருக்கு வேதங் கூறுமாற்றானும்,

"இவ் வைந்து நாடுகளும், இவ் வைந்து மரபினர்களும் மநுவினிடத்திருந்தே தோன்றினர்" (௩, ௨௪, ௨)

என அதர்வ வேதங் கூறுமாற்றானும், இவற்றோடு இணங் கவே ஆசிரியர் திருமூலரும் "தமிழ் மண்டலம் ஐந்துந் தாவிய ஞானம்" எனக் கூறுமாற்றானும், தமிழ்முனிவ ராகிய மநுவும், அவர்வழித் தோன்றி ஐந்து நாடுகளிற் குடியிருந்த 'பஞ்ச திராவிடர்' எனப்படும் பண்டைத் தமிழ் மரபினருமே, முழுமுதற்கடவுள் தீ வடிவில் விளங்கித் தோன்றுதலை முதன்முதற் கண்டறிந்து அத் தீயின்கண் அவனை வழிபடும் முறைகளை வகுத்தனரென்னும் அரிய பெரிய உண்மை தெளியப்படும். இவ் வைவகைத் தமிழ் மரபினர்க்குந் தலைவராய் இருந்து அந்நாளில் அரசுபுரிந்த வர்கள் பரதன் என்னுந் தமிழ்வேந்தன் வழியில் வந்தவ ரான பரதர்களே யாவர்.

"பாரத மரபினரான தேவசிரவர், தேவவாதர் என்னும் இருவரும் பயன்மிகுந்த அக்நியை மிக்க வலிமை யொடுந் தேய்த்து உயிர்ப்பித்தனர்" (ங, உங, உ) எனவும்,

"ஓ அக்நியே, வலிய படைவீரர்களையுடைய பழைய பரதர்கள் தமக்குப் பேரின்பம் வேண்டி நின்னையே இரந் தனர்" (சு, கசு, ச) எனவும், "ஓ பரதர்களுக்கு உரிய அக்நியே" (சு, கசு, சரு) எனவும் இருக்குவேதம் இங் ஙனமே இன்னும் பலவிடங்களில் வற்புறுத்து ஓதுதல் கொண்டு, பண்டைத் தமிழ்மக்கட்குத் தலைவரான பரதர் களே இறைவனைத் தீ வடிவிற்கண்டு வழிபடும் நுட்பத்தை முதன்முதற் கண்டுணர்ந்தன ரென்பதும், தீப்பிழம்பின் வடிவுபோல்வதாகிய திரண்டு நீண்டு குவிந்த சிவலிங்க அருட்குறிகளும் அவற்றிற்கு உறையுளாகக் கூட கோபுர மோங்கிய திருக்கோயில்களுந் தெற்கே பொதியம்முதல் வடக்கே இமயமலைகாறும் அவர்தம்மால் ஆங்காங்கு அமைக்கப்படலாயின வென்பதும் நன்கு தெளியப்படும். தீப்பிழம்பு இறைவனருளொளியோடு ஒற்றித்து விளங்கும் இவ்வரும்பே ருண்மையினைப் பரதர் என்னும் பண்டைத் தமிழ்த்தலைவர் முதன்முதற் கண்டறிந்த சிறப்புப்பற்றியே "அக்நியானது பாரதன்" எனப் பெயர்பெறலானமை இருக்குவேத இரண்டாம் மண்டிலத்து ஏழாம் பதிகத்

தானும், அதன் முதன் மண்டிலத்து நாற்பத்து நான்காம் பதிகத்தாற் றெளியக்கிடந்தபடி அக்நிக்கு உயிராவான் 'பகன்' என்னும் பெயருடைய சிவபிரானேயாம் உண்மையைத் தெளியக்கண்டவர் பரதரேயாம் சிறப்புப் பற்றியே உருத்திரப்பெருமானுங்கூடப் 'பரதன்' எனப் பெயர்பெற்றமை அதன் இரண்டாம் மண்டிலத்து முப்பத்தாரும் பதிகத்தானும் இனிதுணரக்கிடக்கின்றன. 'அக்நி'யின் உண்மைத் தன்மையும், அதன் வழியே எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளைக் கண்டு வழிபடுமாறுந் தென்றமிழ் நாட்டவர்க்கு உரியவாதல் பற்றியே அக்நி வடநூல்களில் 'தக்ஷிணாக்நி' எனப் பெயர் பெறலாயிற்று. விளக்கொளியிற் சிவவொளியைக் கண்டுதொழுங் கார்த்திகைத் திருவிழாத் தமிழ்நாட்டகத்துக் கொண்டாடப் படுமாறு போலப், பிறநாடுகளிற் கொண்டாடப் படாமையுங் கருத்திற் பதிக்கற்பாற்று.[1]

இங்ஙனமாக இறைவனை நெருப்பொளியிற் கண்டு வணங்கும் முறையுணர்ந்த 'பரதர்' பண்டைநாளில் இவ் விந்திய நாடு முழுதும் ஒருங்கு செங்கோல் ஓச்சினராகலின், அவர் பெயரால் இது பரதகண்டம் எனப் பெயர்பெறுவதாயிற்று. இப் பரதர்கள் முதன்முதல் கடல்சார்ந்த நெய்தல் நிலத்தின்கட் குடியேறி, அதன்கட் பட்டினங்கள் அமைத்து நாகரிகத்திற் சிறந்து வாழ்ந்தனராகலின், அந் நெய்தல் நிலத்துமக்கள் 'பரதர்,' 'பரத்தியர்' எனப் பெயர் பெறலாயினர்.[2] வடக்கிருந்து வந்து இந்திய நாட்டின் வடமேற் கெல்லையிற் குடியேறிய ஆரியர் நாகரிகம் இல்லாதவராய், உயிர்க்கொலை புரிந்து வரைதுறையின்றி ஊனுண்டுங் கட் குடித்தும் மகளிர்ப் புணர்ந்தும் நாகரிகமுடைய தமிழ் மக்கள் அருவருக்குமாறு ஒழுகினமையின் அவர்கள் இந் நாட்டுள் நுழையாதபடி அக்காலையில் அவர்களை விபாஸ் சுதுத்ரீ என்னும் ஆற்றங்கரையின் அப்பால் இப் பரதர்

1. தற்செயலாய் இப்பகுதி இவ்வாண்டின் கார்த்திகைத் திருநாளன்றே எம்மால் எழுதப்படலாயிற்று.

2. இறையனாரகப்பொருள் முதற்சூத்திர உரை.

கள் எதிர்த்து நின்றமையும், பின்னர் அவர்கள் அவ்வாறுகளை இடையூறின்றிக் கடந்து இப்பால் இனிது சேரும்படி, அப் பரதமரபினர்க்குக் குருவான விசுவாமித்திரர் அவ் யாறுகளை வேண்டி வழுத்தினமையும் இருக்கு வேத மூன்ரும் மண்டிலத்தின் ௩௩-ஆம் பதிகத்தில் நன்கெடுத்து மொழியப்படுதல் காண்க. திரித்சுக்கள் என்னும் ஆரிய வகுப்பினர் சுதாஸ் என்பவனைத் தலைவனுய்க் கொண்டுவந்தஞான்று, மேலெடுத்துக் காட்டிய ஐவகைத் தமிழ்மரபினரில் துருவசர்களும் துருகியர்களும் அணுக்களும் பூருக்களும் ஒன்றுகூடி அவர்களைத் தடுத்துநின்று போர் புரிந்தமையும், அத் தமிழ் அரச வகுப்பினர்க்குதவியாகப் பக்தர்கள், பலாநர்கள், அலிநர்கள், சிவர்கள், விஷாநியர்கள் என்னும் வேறு ஐவகைத் தமிழ்க் குடியினர் ஒருங்குநின்று திரித்சுக்கள் என்னும் அவ்வாரியரோடு போராடினமையும் இருக்குவேத ஏழாம் மண்டிலத்தின் கஅ-ஆம் பதிகத்தில் விளக்கமாகக் கூறப்படுதல் காண்க. இப்பதிகத்தின் க௩-ஆஞ் செய்யுளிற் 'பூருக்கள்' ஆரியரால் மிக இழித்துப் பேசப்படுதலும் நினைவிற் பதிக்கற்பாற்று. வசிட்டரைக் குருவாய்க்கொண்ட ஆரியத் திரித்சுக்களுக்கும், விசுவாமித்திரரைக் குருவாய்க்கொண்ட பரதர் முதலான தமிழ்மரபினர் பதின்மர்க்கும் நிகழ்ந்த போரில், ஆரியர்க்குத் தெய்வமான இந்திரன் பரதர்களைச் செயலற்றிருக்கச் செய்தனன் என்று இருக்குவேத ஏழாம்மண்டிலத்து ௩௩-ஆம் பதிகத்தைச் செய்த வசிட்டக்குடியினர் தமக்குரிய அவ் விந்திர தெய்வத்தைப் புகழ்ந்து பேசிக் கொள்கின்றனர். பரதர்கள் அப்போரில் தோல்வி பெற்றிலராயினும், ஆரியர் செய்த சூழ்ச்சியினுலும் அச் சூழ்ச்சிக்கு உதவியாய் நின்ற தமிழரிலேயே ஒரு வகுப்பாரின் படிற்றொழுக்கத்தினுலும் அப்போரில் தமிழ் மரபினர்க்குத் தலைவராய்நின்ற பரதர்க்குப் பேரிடுக்கண்கள் நேர்ந்தன என்பது மட்டும் புலனுகின்றது. இங்ஙனம் பரதர்க்குப் பேரிடுக்கண் நேருமாறு ஆரியர்க்கு உதவி செய்த தமிழ்வகுப்பினர், முன்னெல்லாம் அப் பரதர்க்கு நெருங்கிய உறவினருந் துணைவருமாய் நின்ற 'பூருக்கள்'

என்பவரேயாவர். இஞ்ஞான்றைத் தமிழரிற் சிலர் ஆரியர் கட்டிய சூழ்ச்சியில் அகப்பட்டுத் தம்மினத்தவ ராகிய தமிழரை அவ் வாரியர் இழிபு படுத்துதற்குக் கருவி யாய் முன்நின் றுதவுதல்போல, அஞ்ஞான்றைத் தமிழ் வகுப்பினராகிய பூருக்களுந், தம்மவர்க்கு இரண்டகமாய் நடந்து ஆரியர்க்கு மறைந்துதவிபுரிந்தமையும், அதுகண்டு பரதர்க்கே உரியதான தீக்கடவுள் ஆரியரோடு உடன் கூட்டி அப் பூருக்களைப் போரிற் றுலைத்தமையும் இருக்கு வேத ஏழாம் மண்டிலத்து அ-ஆம் பதிகத்திற் சொல்லப் படுதலும் நினைவுகூரற்பாற்று.

எனவே, அக்காலத்து ஆரியர் தமிழரைப் போரில் வென்று இந் நாடுகளைக் கைப்பற்றின ரென்பாருரை பொருந்தாமையும், அவர் தமிழரிலேயே சில வகுப்பாரைத் தம் வயப்படுத்தி அவர்தம் இரண்டகச் செயலின் உதவி யால் இந் நாடுகளை மெல்ல மெல்லக் கைப்பற்றிக் கொண்ட மையுந் தாமே பெறப்படும். தமிழ்நூல்களைப் பயின்றறியா மையின் தமிழரின் நாகரிக உயர்ச்சியை நன்கு உணரப் பெறுத ஐரோப்பிய ஆசிரியரான ராகொசின் என்னும் நுண்ணறிவினர், தமிழரைவிட ஆரியரையே உயர்த்துப் பேசுங் குறிப்பினராயினும், இருக்குவேதப் பாட்டுகளை நடுநிலை திறம்பாமல் தாம் ஆராய்ந்த ஆராய்ச்சியின் முடி பாக, ஆரியர் தமிழரைப் போரில் வென்று அவர்தம் நாடு களைக் கைப்பற்றினவர் அல்லரென்னும் எமது கருத் தினையே தாம் அரிது ஆராய்ந்தெழுதிய 'வேத இந்தியா' என்னும் நூலில் விளக்கமாகக் கூறியிருக்கின்றார். "ஆரியர் தென்றமிழ்நாடு புகுந்தது படையெடுப்பினுல் அன்று, மெல்லமெல்ல முன் ஊர்ந்து சென்றதனாலேயாம். ஆண்மையும் விடாப்பிடியும் வலுவாய் ஒழுங்கு படுத்தப் பட்ட படையமைப்புங் குடிநெருக்கமும் உடைய தமிழர் களைத், தொகையில் மிகக் குறைந்த ஒருகூட்டத்தார் எதிர்த்துச் செல்வதென்றால் அஃது எத்துணை இடர்ப் பாடுடையதாய் இருக்கவேண்டு மென்பது நாம் எளிதில் உணரக்கூடிய தொன்றேயாம். தமிழர்கள் இப்போதும்

அத்தன்மையராகவே இருக்கின்றனர்; விந்தியமலைக்குத் தெற்கே இருநூற்றெண்பது இலட்சம்பேர்க்குமேல் உளர்; அவர்கள் தமது தேயத்தின்மேல் வைத்த அன்பினால் ஆரியரை எதிர்த்து நின்ற அம் மிகப் பழையகாலத்திலும் அவர்கள் அங்ஙனமே பெருந் தொகையினராய் இருந்தன ரென்பதை ஐயுறுதற்கு ஏதோர் இயையும் இல்லை"[1] எனவும், "இந்திய நாட்டுக்குள் குடியேறிய ஆரியர் தமக்கு முற்பட்டே அந் நாட்டுக்கு உரியராகத் தாம் கண்ட இனத்தாரின் மரபினரோடும் அவ் வினத்தார்க்கு ஈடானாரோடும் அவ் வாரியரை ஒப்பிட்டுக் காணுமளவில் அவ் வாரியரது தொகை அவர்க்குச் சிறிதும் ஒவ்வாது மிகச் சிறிதா யிருத்தல் பலர்க்கும் வியப்பினைத் தோற்றுவியாநிற்கும். இவ் விருதிறத்தாரின் தொகையில் ஏற்றத் தாழ்வுகள் அம் மிகப் பழையகாலத்தே இன்னும் மிகுதியாய் இருந்த தாகல் வேண்டும்; ஆகவே, வெறுவல்லாண்மையினாலும் வெற்றியினாலுமே ஆரியரது தலைமைப்பாடு இந் நாட்டின் கண் நிலைபெறலாயிற்றென்னுங் கொள்கை பெரிதும் பொருத்தமற்றதெனஉறுதிப்படுத்துதற்கு ஈதொன்றுமே போதும்."[2]

---

1. "It was not so much an invasion as an advance, and we can easily imagine that it must have been an achievement of no small difficulty for a body of men necessarily very inferior in numbers, in the face of a compact population, brave, stubborn, and strongly organized. Such the Dravidians are now, when they number over twentyeight millions south of the Vindhya, and there is not the slightest reason to doubt that such, in the main, they were at the early time of their long patriotic struggle" Vedic India, p. 298.

2. "It will be a surprise to many that the Aryan population of the Indian continent should be so out of all proportion small when compared to the descendants and representatives of those races which the Aryan immigrants found in possession. The same difference must have existed on a still greater scale in those earliest times—and would alone suffice to stamp as irrational the theory of Aryan supremacy having been established by sheer conquest and force." Ibid, p. 314.

இங்ஙனமெல்லாம் பண்டைக்கால ஆரியர்க்குந் தமிழர்க்கும் இடைநிகழ்ந்த பெரும்போராட்டமும், தமிழரின் பேராண்மையினையும் பெரு நாகரிகத்தினையும் நன்குணர்ந்த ஆரியர் அவரோடு எதிர்த்துநின்று அவரை வெல்லுதல் இயலாமை கண்ட வளவானே அவர்தம்மில் வலியராயினாரைப் பல்வகைச் சூழ்ச்சிகளால் தமக்குத் துணையாய்க்கொண்டு அவ்வழியால் இப் பரதநாட்டுள் மெல்ல மெல்லப் புகுந்து ஆங்காங்குக் குடியேறலானமையும் இருக்குவேதப் பாட்டுகளைக் கருத்தூன்றி ஆராய்வார்க்கெல்லாந் தெற்றெனப் புலனாகா நிற்கும். தமிழரிற் பரத மரபினர்க்குக் குலகுருவான விசுவாமித்திரருங்கூட ஒருகால் ஆரியர் செய்த சூழலில் அகப்பட்டு, ஆரிய அரசனான சுதாஸ் என்பவனுக்கு வேள்வியாசிரியராய்ச் சென்று, ஆரியர்க்குத் தெய்வமான இந்திரனை வணங்கி வழுத்திக், கீகடர் என்னுந் தமிழ் வகுப்பாரின் அரசனான பிரமகந்தனின் பெருஞ்செல்வமெல்லாம் அவ் வாரிய அரசன் சுதாஸ் என்பவனுக்கு வந்து சேருமாறு வேண்டவே, அங்ஙனம் இரண்டகஞ் செய்த அவ் விசுவாமித்திரரின் நாவானது சிவபிரான்றன் சீற்றத்தால் மந்திரஞ் சொல்லும் வன்மை யிழந்து இயங்காது அவரை ஊமை ஆக்க, அவரும் அப்போது செயலற்றிருந்தனர். அது கண்டு உருத்திரரைத் தீ வடிவிற் கண்டு வணங்குவோரும், விசுவாமித்திரர்க்கு உறவினருமான ஜமதக்கினிகள், (இருக்கு, ௩௦, ௩௬, ௭, ௪) என்னுந் தமிழ்க்குருமார் அவரது செயலறவினைக் கண்டு இரங்கி, ஞாயிற்றின்கட் புலனாய்த் தோன்றுஞ் சிவபிரான்பக்கல் அமர்ந்த சசர்பரீ என்னும் உமைப்பிராட்டியை வேண்டி வழுத்த அவளது அருட்கடைக்கண் நோக்கால், விசுவாமித்திரர்க்குப் பெயர்த்தும் நாவன்மை உண்டாகவே, அவர் தாம் செய்த பிழையினை உணர்ந்து, தம்மைச் சேர்ந்த ஐவகைத் தமிழ் வகுப்பினர்க்கும் அவ் வகுப்பினர்க்குத் தலைவரான பரதர்க்கும் நன்மை விளையுமாறு வேண்டி, ஆரிய அரசன் சுதாஸ் என்பவனது வேள்விக்களத்தைவிட்டு அகலா நிற்ப, அது கண்டு அவ் வாரிய அரசனின் குலகுருவான

வசிட்டர் அவரையுந் தமிழரையும் பகைத்து இகழ்ந்துரைப்ப, அதனால் விசுவாமித்திரரும் பெருஞ்சீற்றங் கொண்டு அவ் வசிட்டரையும் ஆரியரையும் வைதுரைத்துத், தாம் தம் தமிழ்மரபினரோடுஞ் சென்றமையும் இருக்குவேத மூன்றாம் மண்டிலத்து ௫௩-ஆம் பதிகத்தில் நன்கெடுத்து ஓதப்பட்டமை காண்க. இப் பதிகப் பொருளை ஆழ்ந்தாராய்ந்த ராகோசின் என்னும் ஐரோப்பிய ஆசிரியர் தமது வேத இந்தியா என்னும் நூலில் அதுபற்றி எழுதிய நடுநிலைவழா உரை தமிழ் நன்மக்களாவார் கருத்திற் பதிக்கற்பால தொன்றாகலின் அதனை இங்கே மொழிபெயர்த் தெழுதுவாம் :

[1]" இருக்கு வேதத்தினாலேயே அறியக் கிடக்குஞ் செய்தியினளவில் தனிநின்று நோக்குங்கால், வசிட்டர்

---

1. "To keep strictly within the information supplied by the Rig-Veda itself—Vasishtha was the bard of the *Tritsu*, the leading and purest Aryan tribe, and *Visvamitra* was the bard of the *Bharatas*, their great enemies and one of the most powerful native tribes. He at one time had been with the Tritsu, and for whatever cause he left them—not improbably personal revenge—he played a conspicuous part in the confederacy which attempted to check the Aryan advance and increasing power. There is a hymn (53), in Book III, that of the Visvamitra family, which evidently alludes to this very thing. In the first part of the hymn it is said that when Visvamitra conducted King Sudas' sacrifices, Indra was gracious to him for the Rishi's sake, and a great blessing is pronounced on the king, and his war-steed and the expedition on which he starts. Then, quite suddenly, Visvamitra is made to declare, in his own person, that his prayers protect the tribes of the Bharatas, and the hymn ends with four verses of imprecations against enemies who are not named, but whom tradition so positively identified with Vasishtha and his family, that the priests of this house in later times never uttered these four verses, and tried not to hear them when spoken by other Brahmans. It is most probable that the Visvamitras resented some distinction conferred upon the Vasishthas, possibly their appointment as *purohitas* to the Tritsu royal family

என்பார் தனி ஆரியத் தலைவரான திரித்சுக்களுக்குக் குரவராதலும், விசுவாமித்திரர் என்பார் அவ் வாரியர்க்குப் பெரும் பகைவரும் உள்நாட்டுக் குடிமக்களுள் ஆண்மையில் மிகச் சிறந்தாரும் ஆன பரதர்க்குக் குரவராதலும் பெறப்படாநிற்கும். விசுவாமித்திரர் ஒரு காலத்தில் திரித்சுக்களிடம் போய்ச் சேர்ந்திருந்தனர். பின்னர் ஏதனாலோ—ஒருகால் பழிக்குப் பழிவாங்கும் எண்ணத்தினாலோ, அவர் அவர்களை விட்டுச் சென்றனர்; ஆரியர் முன்னேறி வருகையினையும் அவர்க்கு வரவர மிகும் வலிவினையுந் தடை செய்யத், தம்மினத்தவர் தம்மிற் கூடிச் செய்த கட்டுப்பாட்டில் அவர் முதல்வராய் நின்றனர். இருக்கு வேத மூன்றும் மண்டிலத்தில் (தீக்கடவுண்மேலும் ஏனை ஆரியச் சிறு தெய்வங்கண் மேலும்) விசுவாமித்திரக் குடியினர் இயற்றிய பதிகங்களுள் ருந-ஆம் பதிகமானது மேற்காட்டிய நிகழ்ச்சியினையே (தமிழர் ஆரியரொடு போராடி அவரைத் தடுத்து நின்ற செய்தியி

---

and went over to their most powerful enemies, the Purus and Bharatas. The Tritsu and their allies were victorious in the ensuing struggle, known as "the War of the Ten Kings," and both the bards have left descriptions of it and of the final battle on the banks of the Parushni, in some spirited hymns, the most undoubtedly historical of the collection. At a later period the followers of Vasishtha and his descendants represent the narrowly orthodox Brahminic school, with its petty punctilliousness in the matter of forms, rites, observances, its intolerance of everything un-Aryan, its rigid separatism. This school it was which stood guard through all these ages, and up to our day, the champion-and possibly orginally the institutor, of caste; who advanced and upheld all the exaggerated claims of the Brahman priesthood, to divinity, to the rule of the world, and ownership of all it holds, to supernatural compelling powers over nature and the gods themselves through sacrifice and ascetic practices, and the like. The followers of Visvamitra and his descendants, on the other hand, represented the school of liberalism and progress, of conciliation and amalgamation." Vedic India, pp. 318-320.

னையே) குறிப்பிடுகின்றது. சுதாஸ் என்னும் அரசனின் வேள்விகளை விசுவாமித்திரர் நடத்தியபோது இந்திரன் அம் முனிவர்பொருட்டு அவனுக்கு அருள்புரிந்து அவன் எடுத்துச் செல்லும் படையெடுப்பினையும் அவன்றன் போர்க் குதிரையினையும் அவனையும் வாழ்த்தி வரங் கொடுத்தனனென அப் பதிகத்தின் முதற் பகுதியானது மொழியா நிற்கின்றது. அதன்பிற் சடுதியிலே விசுவாமித்திரர் தம் வேண்டுகோளுரைகள் பரத வகுப்பினரைக் காக்கவெனக் கட்டுரைத்தார் எனக் கழறுகின்றது; அப் பதிகத்தின் ஈற்றில் நிற்கும் நான்கு செய்யுட்கள் பகைவரைக் கெடுகவென வைதுரைக்கின்றன; இங்ஙனம் வைதுரைக்கப்பட்ட பகைவர் இன்னாரென்பது அவற்றின் கட் சொல்லப்படவில்லையாயினும், அப் பகைவர் வசிட்டரும் அவர் தங் குடியினருமேயாவரெனவும், அதனால் அவ் வசிட்டக் குடியினைச் சேர்ந்த பிற்காலத்துக் குருக்கண்மார் களுங்கூட அந் நான்கு செய்யுட்களையுந் தம் வாயால் ஒரு போதுஞ் சொல்லாமையோடு, மற்றைப் பார்ப்பன வகுப்பினர் அவற்றை ஓதுங்கால் அவைதம்மைச் செவி கொடுத்துக் கேளாதிருக்கவும் முயன்றனரெனவுந் தொன்றுதொட்டுவரும் வரலாறு நுவல்கின்றது. வசிட்டக் குடியினர்க்குத் தனிச்சிறப்புக் கொடுக்கப்பட்டமை கண்டு (இது திரித்சுக்கள் என்னும் அரச குடும்பத்தார்க்கு அவர்கள் புரோகிதராக ஏற்படுத்தப்பட்டமையா யிருக்கலாம்), விசுவாமித்திரர் செற்றங்கொண்டு, அத் திரித்சுக்களுக்குப் பெரும் பகைவரும் வலியருமான பூருக்களும் பரதர்களும் என்பார்பாற் போய்ச்சேர்ந்தனர். திரித்சுக்களும் அவர்களோ டுடன்சேர்ந்தவர்களும் பின் நிகழ்ந்த 'அரசர் பதின்மரின்போர்' எனப்படுஞ் சண்டையில் வெற்றி பெற்றனர். இரு திறத்தாரையுஞ் சேர்ந்த பாவலர் அச் சண்டையைப் பற்றியும், பருஷிநீ யாற்றங் கரையில் முடிவாக நடந்த போரைப் பற்றியுந் தாம் பாடிய கிளர்ச்சியான பதிகங்களில் (இருக்கு வேதப் பதிகத்திரட்டில் இப் பதிகங்கள் உண்மை நிகழ்ச்சிகளை அறிவிப்பன என்பதிற் சிறிதும் ஐயுறவுக்கு இடமில்லை) விளக்கமாகச் சொல்லி

யிருக்கின்றார்கள். பிற்பட்டகாலத்தில் வசிட்டரைச் சார்ந்தோரும் அவர் வழியில் வந்தோரும், உயிரற்ற விதிகள் பொருளற்ற சடங்குகள் ஆசாரங்கள் என்பவற்றை ஓர் எள்ளளவுகூட விடாமல் உன்னித்துச் செய்யும் புல்லிய தன்மையிலும, ஆரியரது முறையிற் சேராத எதனையுங் கண்டு மனந் தாங்காமையிலும், மற்றை வகுப்பாரொடு கூடாமற் பிரிந்துநிற்குங் கொடுமையிலும் முதிர்ந்து குறுகிய நோக்கமுடையராய் வருஞ் சரியான பார்ப்பன இனத்தின் றன்மையினைக் காட்டுவோ ராவரென்பது அறியற்பாற்று. இம் மரபினரே நமது காலம் வரையிற் சாதி வேற்றுமையினை நெடுகக் காத்துவந்தவராவர்; அவ் வேற்றுமையினை முதன்முதல் உண்டாக்கினவரும் அவரே யாதல் கூடும். பார்ப்பனக் குருமார்கள் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள், அவர்களே உலகினை ஆளுதற்கு உரியர், அவர்களே உலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் உரிமையாளர், அவர்களே உலகின்கண் நடைபெறும் இயற்கை நிகழ்ச்சிகளை யெல்லாந் தாம் வேண்டுமாறு நடப்பிக்கவல்ல கடவுட் டன்மையுடையர், வேள்வியாற்றுதலாலுந் தவவொழுக்கங்களாலும் இன்னும் இவைபோல்வன பிறவாலும் அவர்களே கடவுளரையும் ஏவல்கொள வல்லவர், எனப் பார்ப்பன ருரிமைகளை அளவுக் கடங்காமற் பாரித்துப் பேசி, அவற்றை விடாப்பிடியாய்க் கொண்டு முன்னேற்றி வைத்தவர்கள் இவ்வசிட்ட மரபினரே யாவர். மற்று, விசுவாமித்திரரைச் சீர்ந்தாரும் அவர் வழிவந்தாருமோ, விரிந்த நோக்கமும் மேன்மேற் பெருகும் ஆக்கமும் எல்லாரோடும் உறவுபாராட்டும் இயற்கையும் எல்லாரோடும் அளவளாவும் வாழ்க்கையும் வாய்ந்த குடிமக்களின் றன்மையினைக் காட்டுவோராவரென்பதூஉம் அறியற்பாற்று" எனவும், "சிவர் என்பாருடன் சேர்த்துச் சொல்லப்பட்ட விஷாநியர் என்பார், மிகப் பழைய தமிழ்மக்களுள் ஒரு வகுப்பினரான துக்ரரே யாவரெனக் கருதப்படுகின்றனர்; இவர்களையே "நாகரின் மக்கள்" எனக் குறிப்பிட்டு ஆரியர் இகழ்ந்துரைத்தனர்; இவர்களே சைவர் எனப் பெயர் பூண்டு, நாகத்தின்

வடிவின்கீழ் அல்லதொரு நாகத்தின் தன்மையில் வைத்துச் சிவவழிபாட்டினை உண்டாக்கினோராதல்வேண்டும்."[1] எனவும் அவர் மொழிந்தமை காண்க. உண்மையாராய்ச்சியில்வல்ல இவ்வைரோப்பிய ஆசிரியர் இருக்குவேதப் பதிகங்களை நடுநின்று நுண்ணிதின் ஆராய்ந்துரைத்த இவ்வுரைகளால், வசிட்டரும் அவரைக் குருவாய்க்கொண்ட ஆரியரும், விசுவாமித்திரர்க்கும் அவரைக் குருவாய்க்கொண்ட பரதர் முதலான தமிழ்க் குடியினர்க்கும் அத் தமிழ்க் குடியினர் தீ வடிவில் வைத்து வழிபடுஞ் சிவவழிபாட்டுக்கும் முற்றும் மாறாய் நின்றமை நன்கு புலனாகின்றதன்றோ? தீத்திரளையான ஞாயிற்றினையும், அஞ் ஞாயிற்றினை ஓர் உடம்பாய்க்கொண்டு 'பர்க்கன்' எனப் பெயர் பூண்டு விளங்குஞ் சிவபெருமானையும் வழுத்துங் காயத்திரி மந்திரமானது, விசுவாமித்திரரையும் அவர்தங் குடியினரையும் ஆசிரியராய்க்கொண்ட இருக்குவேத மூன்றாம் மண்டிலத்தின் இறுதிக் கண்ணதான ௬௨-ஆம் பதிகத்தின் ௧௦-வது செய்யுளாய் அமைந்திருத்தலையும், இம் மூன்றாம் மண்டிலத் தொடக்கத்திலுள்ள பதிகங்களும் அதன் இடையிடையேயுள்ள பதிகங்களுந் தீக்கடவுண் மேலனவாயிருத்தலையும், தீக்கடவுண் மேலனவாய் இம் மூன்றாம் மண்டிலத்தினும் ஏனை மண்டிலங்களினும் பாடப்பட்டுக் கிடக்கும் பதிகங்கள் பெரும்பாலனவற்றின் மட்டுமே 'பரதர்' என்னுந் தமிழ்க்குடியினர் பெயர் எடுத்துக் கூறப்படுதலையும், இருக்குவேதத்தில் தீக்கடவுண்மேலும் உருத்திரர் மேலும் பாடப்பட்டிருக்கும் பதிகங்களின் ஆசிரியர் பெரும்பாலும் விசுவாமித்திரக் குடியினைச் சேர்ந்த முனிவராயிருத்தலையும் உற்றுநோக்க வல்லார்க்குத், தீக்கடவுளையுஞ்

---

1. "The Vishanin bracketed with the Siva, which is thought to be a name of the Tugra, one of the oldest aboriginal Dravidian peoples, whom the Aryas had specially nicknamed 'Sons of the Serpent,' and who, under the religious designation of Siva, were very probably the originators of the worship of Siva under the form or with the attribute of a snake." Ibid, p. 328.

சிவபிரானையும் பாடிய அம் முனிவரரெல்லாரும் பண்டைத் தமிழ் வகுப்பினரேயாதல் தெற்றென விளங்காநிற்கும். இதனாலன்றோ வசிட்ட மரபினரும் விசுவாமித்திர மரபினரும் ஒருவரையொருவர் மிகப் பகைத்து வைதுரைக்கும் பாட்டுகள் இருக்குவேதத்தின்கட் காணப்படுவவாயின. இவர் தம்மிற்றம் இகலி நின்றதொன்றின் மட்டின் அமையாது வசிட்டக் குடியினர் விசுவாமித்திரக் குடியினர் வணங்கிய முழுமுதற் றெய்வமாகிய சிவபெருமானையுங் கூடச் 'சூத்திரதெய்வம்,' 'சிசிநதேவதை' எனப் பெரிதும் இகழ்ந்துபேசலாயினர். இங்ஙனம் வசிட்டரைக் குருவாய்க் கொண்ட ஆரியர், விசுவாமித்திரரைக் குருவாய்க்கொண்ட தமிழரிடத்தும், அவர் வணங்கிய தமிழ்த் தெய்வமாகிய ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளிப்பிழம்புகளிடத்தும் அப் பிழம்புகளினுட் கட்புலனாய் விளங்கித் தோன்றும் உருத்திரரிடத்தும் வரைகடந்த பகைமைகொண்டமையாலன்றோ, பிற்காலத்தில் அவ்வாரிய வசிட்ட மரபினரின் வழித்தோன்றிய பார்ப்பனர் ஆக்கிய 'வசிட்ட ஸ்மிருதி' முதல் அத்தியாயத்தில், "சதுர்வேதீ ச யோவிப்ரோ வாசுதேவம் நவிந்ததி" என்று தொடங்குஞ் செய்யுண் முதல் ஐந்து செய்யுட்கள், "நான்கு வேதங்களிலும் வல்லவனாயிருப்பினும், வாசுதேவனை யறியாத ஒரு பார்ப்பனன், வேதமாகிய ஒரு பெருஞ் சுமையைத் தாங்கி நடுங்கிக்கொண்டிருக்கும் ஒரு பார்ப்பனக் கழுதையேயாவன். ஆதலால், வைஷ்ணவனாயிருந்தாலன்றி ஒருவன் பார்ப்பனத்தன்மையை இழந்துவிடுவன்; வைஷ்ணவனாயிருப்பதால் ஒருவனுக்கு முழுமுதற்றன்மை உண்டாகின்றதென்பதிற் சிறிதும் ஐயம் இல்லை. ஏனென்றால் நாராயணனே பரப்பிரமம்; அவனே பார்ப்பனர்களுக்குத் தெய்வமாவன்; திங்களும் ஞாயிறும் மற்றையவும் க்ஷத்திரியர்க்கும் வைசியர்க்குந் தெய்வங்களாகும்; உருத்திரனும் அவனையொத்த தெய்வங்களுஞ் சூத்திரர்களாலேயே இடைவிடாது வணங்கற்பாலன. புராணங்களினும் ஸ்மிருதிகளினும் உருத்திர வணக்கஞ் செய்கவெனக் கட்டளையிடும் இடங்கள் பார்ப்பனரைக் குறிப்பன அல்ல; இவ்வாறு பிரஜாபதி

வற்புறுத்திக் கூறினர். புராணங்களில் விதந்து சொல்லப் படும் உருத்திரவழிபாடும் மூன்று கீற்றாகத் திருநீறு இடுதலும், க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் இனத்தாரை நோக்கிச் சொல்லப்பட்டனவே யல்லாமல், மற்றை யோரை நோக்கின அல்ல. ஆகையாற், சிறந்த முனிவர்களே, பார்ப்பனர்கள் திரிபுண்டரம் அணிதல் ஆகாது."[1] என்று வற்புறுத்தி, ஆரியப் பார்ப்பனர் தமிழ்த்தெய்வமாகிய உருத்திரரை வணங்காவாறும், தீயினை வழிபட்டு அதன் தூய அடையாளமாகத் தமிழர் இடுந் திருநீற்றை அவ் ஆரியர் தாமும் அணியாவாறுந் தடைசெய்வவாயின. இங்ஙனமாகப் பண்டுதொட்டு ஆரியர் தமிழரையுந் தமிழ்த்தெய்வமாகிய சிவபிரானையும் பகைத்து இகழ்ந்து வருதல் பற்றியே, அவ்வாரிய இனத்திற் றம்மைச் சேர்த்துக்கொண்டு வடமொழியையும் வடநூல்களையுமே தமக்குரியன வென்று தழீஇத், தம்மைப் பார்ப்பனரென்று சொல்லிக்கொள்ளும் இஞ்ஞான்றை மக்களெல்லாரும், சிவபிரானைச் சூத்திரதெய்வமென்றுந் தேவார திருவாசகத் தமிழ்மறைகளைச் சூத்திரப்பாட்டென்றும் இழித்துரைத்துத், திருமாலின் அவதாரங்களாகத் தாம் பிழைபடக்கொண்ட இராமன் கண்ணன் என்பாரை மட்டும் வணங்கி வடநூல்களையே ஒரு வரைதுறையின்றிப் பாராட்டி வருகின்றனர். இவ்வாறு தொன்றுதொட்டு இன்றுகாறும் நடைபெற்றுவரும் ஆரியர் ஒழுகலாற்றினை நடுநின்று நன்காய்ந்து காணும் நுண்ணறிவாளர் எவர்க்கும், இருக்குவேதத்திற் 'பரதர்' முதலிய பெயர்களால் வழங்கப்பட்ட பண்டைத் தமிழ் நன்மக்களே ஞாயிறு திங்கள் தீ என்னும் முத்தீவடிவில் வைத்து முழுமுதற் கடவுளான சிவபிரானை வழிபடும் நுட்பமுறையைக் கண்டோராவர் என்னும் அரும்பேருண்மை தெற்றென விளங்காநிற்கும்.

---

1. See the great vedic scholar Prof. Max Muller's 'A History of Ancient Sanscrit Literature,' Panini office publication, p. 29.

பரதகண்டமாகிய இத் தமிழ்நாட்டுட் புகுந்து பல் வகைச் சூழ்ச்சிகளால் தமிழரது உறவைப்பெற்று ஆங் காங்குக் குடியேறி நிலைபெற்ற ஆரியர், தமக்கு முன்னே நாகரிகத்தில் மிகச் சிறந்தாராய்த் திகழ்ந்த தமிழ்மக்கள் செய்து போதரும் முத்தீ வேள்வியினைக் கண்டு, அதைப் போற்றும் வேள்வி வேட்கத் தலைப்பட்டனர். இருக்கு வேத காலத்தில் தமிழ்ச் சான்றோர்களே முத்தீ வேள்வி கள் வேட்டனரன்றி, ஆரியக்குருமார் அவற்றை வேட்டன ரல்ல ரென்பதூஉம், எஜுர்வேத சாமவேத காலங்களிலே தாம் அவர்கள் தமிழாசிரியரது துணைகொண்டு அவற்றை வேட்கலாயின ரென்பதூஉம் ஐரோப்பிய ஆசிரியரான மாக்ஸ்முலர் விளக்கியவாற்றானும் நன்குணரப்படும்.[1] ஆரியர் தாம் வேள்விவேட்கத் தெரியாத காலங்களிலெல்லாம் 'விசுவாமித்திரர்,' 'ஜமதக்கினிகள்' முதலான தமிழ்க் குருமார்களைத் தம்பால் வருவித்துத் தமக்குரிய இந்திர தெய்வத்திற்கு வேள்வி வேட்டமையும், அவ்வாற்றால் தாமும் வேள்விவேட்கத் தெரிந்து கொண்டபின் அத் தமிழ்க்குருமாரை விலக்கித் தமக்குக் குரவர்களான வசிட்டர் முதலாயினரைக்கொண்டு அவ்வாரியர்கள் வேள்விவேட்கலானமையும், இங்ஙனஞ் செய்துபோந்த ஆரியரது படிற்றொழுக்கத்தால் இருதிறத்துக் குருமார் களுக்குட் பகைமையும் அதுவாயிலாக அவ் விருதிறத் தாரின் அரசர்க்குட் போரும் அடுத்தடுத்து நிகழலானமை யும் இருக்குவேதப் பாட்டுகளைக் கருத்தூன்றி யாராய் வார்க்கு இனிது புலனாகாநிற்கும். தமிழர் வேட்கும் முத்தீ வேள்வியைப்போல், ஆரியரும் வேட்கத் தொடங்கி வேள்விச் சடங்குகளை அளவிறப்பப் பெருக்கிப் 'பிராமணங் கள்' வரைந்து, தமிழரசர்களை ஏமாற்றி அவர்பாற் பெற்ற பெரும் பொருட்டிரள் கொண்டு, தாம் ஊனுண்டு கட்குடிக் கும் ஒழுகலாறு உடையராகலின், அதற்கேற்பக் கொலையுங் குடியும் மலிந்த வேள்விகளைப் பல்லாயிரக் கணக்காக வேட்டுவந்தனரேனும், அவர்கள் அவ்வேள்விகளிற் சிவ பெருமானை வணங்கினவர் அல்லர்.

---

1. Ibid, pp. 236-238.

தமிழ்ச் சான்றோர்கள் வேட்டுவந்த வேள்விகள் அத் துணையுங் கொலையுங் குடியும் இல்லாதனவாய்ச் சிவபிரான் ஒருவனை மட்டுமே வணங்குதற் பொருட்டு வேட்கப்பட்டன; ஆரியர் வேட்ட வேள்விகளோ பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் கொன்றுந் தொட்டி தொட்டியாகச் சோமப் பூண்டில் இறக்கிய கள்ளை யுண்டும் இந்திரன் வருணன் முதலான சிறு தேவதைகளை வணங்குதற் பொருட்டாகவே வேட்கப்பட்டன.

தமிழர் தீயினையும் ஞாயிறு திங்களினையும் வழிபடுங் கால் அவை முழுமுதற் கடவுளோடொப்ப ஒளிவடிவின வாய் விளங்கும் நுட்பம் உணர்ந்து, அவற்றை இறை வற்கு உடம்பாகவும் இறைவனை அவற்றிற்கு ஓர் உயிராக வுங்கொண்டு அவ் வொளிவடிவுகளைச் சிறந்தெடுத்துப் பாராட்டி வழிபட்டனர்; ஆரியரோ, தாம் படைக்கும் ஊனையுங் கள்ளையும் ஏற்று அவற்றை இந்திரன் முதலான சிறுதெய்வங்கட்குச் சேர்ப்பிக்கும் ஓர் ஏவலனாக இழிந்த நிலைமைக்கண் வைத்துத் தீக்கடவுளை வணங்கலாயினர். இவ்வாறு தமிழர் வேட்ட வேள்விகட்கும் ஆரியர் வேட்ட வேள்விகட்கும் உள்ள பெரியதொரு வேறுபாட்டினைத் தெரித்தற் பொருட்டே சைவசமயாசிரியரான திருநாவுக் கரசு நாயனார்,

"எரிபெ ருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவ ருக்கம தாவது உணர்கிலார்,
அரிஅ யற்குஅரி யானை அயர்த்துப்போய்
நரிவி ருத்தம தாகுவர் நாடரே." (பொது)

எனவும்,

"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கன் ஆவான் அரன்உரு அல்லனோ?
இருக்கு நான்மறை ஈசனையே தொழுங்
கருத்தி னைநினை யார்கள் மனவரே." (பொது)

எனவும் அருளிச்செய்திட்டார். தீயும் ஞாயிறுஞ் சிவபெரு மான்றன் றிருவுருவங்களாதலை உணரப்பெறாத ஆரியப்

பார்ப்பனரை "நரிவிருத்தம தாகுவர்," "கன்மனவர்" என்று ஆசிரியர் இரங்கி இகழ்ந்துரைத்தமை நினைவிற் பதிக்கற்பாற்று. அவ்வாரியர் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வணங்குதல் விட்டு, அரிபிரமன் இந்திரன் என்னுஞ்செத்துப் பிறக்குஞ் சிறுதெய்வங்களை வழிபடுதல் கண்டன்றோ இரங்கி மனங்கொதித்துப் பின்னும் அப் பெருந்தவ ஆசிரியர்,

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட்கு ஏறுமோ?
அத்தன் என்று அரியோடு பிரமனுந்
துத்தி யஞ்செய நின்றநற் சோதியே." (பொது)

எனவும்,

"நூறு கோடி பிரமர்கள் நொங்கினார்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே." (பொது)

எனவும் நிரம்பக் கடுத்த சொல்லில் எடுத்து இடித் தறிவுறுத்தருளினார். இவரைப் போலவே சைவசமய முதலாசிரியரான மாணிக்கவாசகப் பெருமானும்,

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியாரொ டல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப்பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே."
(திருச்சதகம், உ)

என்றும்,

"புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி

மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்துஎம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே.'' (அச்சப்பத்து, க)

என்றுந் திருவாசகத்தில் அருளிச்செய்திருத்தல் காண்க.

இவ்வாறு பிறப்பு இறப்பு இல்லாச் சிவபெருமானே முழுமுதற் கடவுளாதல் தெரித்து, ஏனைச் சிறு தெய்வங்களெல்லாம் பிறப்பு இறப்புக்களுட் கிடந்து அவன் ஆணை வழி யுழலுஞ் சிற்றுயிர்களாதலுங் காட்டிச் சைவ சமயாசிரியர்களெல்லாரும் ஒரே முகமாய் அச்சிறுதெய்வ வணக்கத்தை மறுத்து விலக்கிய செந்தமிழ் அருளுரைகள் வெள்ளிடை மலைபோல் விளங்கிக் கிடப்பவும், இஞ்ஞான்று தம்மைச் சைவரெனவுங் கூறிக் கொள்வார் சிலர், ஆரியரது சூழ்ச்சியில் வீழ்ந்து ஆரிய வேதங்கள் சிவபிரான் அருளிச் செய்தனவேயா மென்னும் ஒரு பொருந்தாக் கொள்கை யினை நாட்டுதற்குப் புகுந்து, இறைவன்றன் திருவுருவ வழிபாட்டினை இகழ்ந்து மறுத்துத் தம் வாழ்நாள் எல்லை யளவுஞ் சைவசமயத்துக்கு மாறாய் நின்ற 'தயாநந்த சரஸ்வதி' என்னும் வடநாட்டு முனிவரரின் கொள்கையைத் தழீஇ, இருக்குவேதத்திற் சொல்லப்பட்ட இந்திரன் மித்திரன் வருணன் முதலான பல தெய்வப் பெயர்களெல்லாம் ஒரு தெய்வத்தின் மேலனவே யாமென்றும், ஆரிய வேதங்களின்படி வேட்கப்பட்ட வேள்விகளில் உயிர்க் கொலை நிகழவில்லையென்றும், உயிர்க்கொலை செய்கவென வுஞ் சொற்றொடர்கட்கெல்லாம் வேறு பொருள்கள் உள வென்றுந் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் பேசி, இலக்கண இலக்கிய அளவை நூல் வரம்புகளைக் கடந்தும், தொன்றுதொட்டு வரும் ஆரியர்தம் ஒழுகலாற்றுக்கும், வேதங்கள் பிராமணங்கள் தரும சூத்திரங்கள் முதலான ஆரிய நூல்களில் மிக விரிவாகவும் விளக்கமாகவுஞ் சொல்லப்பட்டிருக்கும் உயிர்க்கொலை வேள்வி முறைகட்கும் முற்றும் மாறானதொரு கோட்பாட்டினைக் கிளப்பியும் பெரியதோர் ஆரவாரம் புரிவாராயினர்.

இந்திரன் முதலிய பெயர்கள் முழுமுதற் கடவுளையே குறிப்பது உண்மையாயின், அப் பெயர்களால் உணர்த்தப்படும் அத் தெய்வங்கள் முழுமுதற் கடவுட்குரிய இலக்கணங்கள் உடையவாய் இருத்தல் வேண்டுமன்றோ? இந்திரன் சோமன் என்பார் பிரஜாபதியாற் படைக்கப் பட்டவர் எனச் 'சதபதபிராமணங்' (கக, க, சு) கூறுதலானும், மித்திரன், வருணன், தாத்ரி, அர்யமான், அம்சன், பகன், விவஸ்வதன், ஆதித்யன் என்னும் எண்மரும் அதிதியின் புதல்வரென அஃது அங்ஙனமே எடுத்துச் சொல்லுதலானும், கட்குடியும் விலங்குகளின் கொலையால் வரும் ஊன் உணவும் அவ் இந்திரன் முதலியோர் கைக்கொண்டமையுந் தந்தையைக்கொல்லல் மகளைப் புணர்தல் முதலான மிக இழிந்த செயல்களை அவர் புரிந்தமையும் மேலே ௲எஉ-ஆம் பக்கம் முதல் ௲அ௦-ஆம் பக்கம் வரையில் எம்மால் எடுத்துக் காட்டப்பட்டிருத்தலானும், இத் தேவர்கள் பகைவராற் பலகாலுந் தோல்வியுற்று வருந்தி வந்தமையின் தாம் சாவாதிருத்தற்கு மருந்துவேண்டி முயன்ற காலத்தில் அவரைக் கொல்லும் நஞ்சு ஒன்று எழ அதனைச் சிவபிரான் உட்கொண்டு அத் தேவர்களைக் காத்தமை "கேஸி விஷஸ்ய பாத்ரேண யத் ருத்ரேணாபிபத் சஹா" (க௦, க௱சு, எ) என இருக்கு வேதத்தின் கண் நன்கெடுத்துக் கூறப்பட்டிருத்தலானும் அத் தேவரெல்லாரும் மக்களோடொத்த சிற்றுயிர்களேயாவரல்லது முழுமுதற் கடவுளராதல் செல்லாது. மற்றுச், சிவபிரானோ உயிர்கட்குள்ள இக் குற்றங்கள் சிறிதும் அணுகப் பெறுதவனாகலின் அவன் ஒருவனே எல்லா முதன்மையும் உடைய முழுமுதற் கடவுளாதலும் மேலே விளக்கப்பட்டது. இன்னும் இதன் விரிவை வேளாளர் நாகரிகம் என்னும் எமது நூலிற் கண்டு கொள்க.

ஆரியர் உயிர்களை ஏராளமாய்க் கொன்று தாம் வணங்கி வந்த சிறு தெய்வங்களுக்கு அவற்றின் இறைச்சியைப் படைத்துத் தாமும் அயின்றுவந்தமை இருக்கு வேதத்திலேயே பற்பல இடங்களிலுந் தெளிவாகச் சொல்

லப்பட்டிருக்கின்றது. அதன் முதன் மண்டிலத்து, ௧௧௬-ஆம் பதிகத்தின் எ-ஆவது செய்யுளில் அசுவினி தேவர்கள் கக்ஷீவானுக்கு நூறு சாடிச் சாராயங் கொடுத்தமையும், ௧௬-ஆவது செய்யுளில் 'ரிஜிராசுவன்' அசுவினி தேவர்களின் ஊர்தியான கழுதையின்பொருட்டு விதையடித்த நூறு செம்மறியாடுகளை வெட்டி அவற்றின் ஊனை உணவாகப் படைத்தமையுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன; ௧௬௨, ௧௬௩-ஆம் பதிகங்களில் வெள்ளாட்டினையுங் குதிரையையுங் கொன்று அவற்றின் ஊனைச் சமைத்துப் 'பூஷன்,' 'இந்திரன்' என்னுந் தெய்வங்கட்குப் படைத்தமை விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது; அதன் ஐந்தாம் மண்டிலத்து உ௯-ஆம் பதிகத்தின் எ-வது செய்யுளில் முந்நூறு எருமை மாடுகளைக் கொன்று அவற்றின் இறைச்சியை நெருப்பில் வாட்டிப் பதப்படுத்தி அதனை மூன்று பெரிய தொட்டிச் சோமச் சாராயத்துடன் இந்திரனுக்குப் பலியூட்டினமை வெளிப்படையாக நுவலப்பட்டிருக்கின்றது; அதன் ஆறும் மண்டிலத்து ௧எ-ஆம் பதிகத்தின் ௧௧-வது செய்யுளிலும் அங்ஙனமே நூறு எருமை மாடுகளைக் கொன்று தீயிற் பதப்படுத்தி அவ்வூனை மூன்று பெரிய தொட்டிக் கள்ளுடன் இந்திரனுக்குப் படைத்தமை தெளிவாக மொழியப்பட்டிருக்கின்றது; அதன் பத்தாம் மண்டிலத்து ௧௬-ஆம் பதிகத்தின் ௪-வது செய்யுளில் ஆரியர் தம்முள் இறந்துபோன ஒருவனைச் சுடுகாட்டின் விறகின்மேல் வைத்துக் கொளுத்தப் போகையில் ஓர் ஆட்டைக் கொன்று அதன் உறுப்புகள் ஒவ்வொன்றனையும் பிணமாய்க் கிடப்பவன் உறுப்புகளின் மேல் வைத்து அவனைக் கொளுத்தினமை கூறப்பட்டிருக்கின்றது; அம் மண்டிலத்து அ௫-ஆம் பதிகத்தின் ௧௩-வது செய்யுளில் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் மணம் நடத்துதற்குமுன் மகமீன் நாளிற் காளைமாடுகளைக் கொன்று பகலவனுக்குப் பலியூட்டி, அதன்பிற் பங்குனி நாளில் மணம் நடத்தும் முறை பகரப்பட்டிருக்கின்றது; அம் மண்டிலத்து அ௬-ஆம் பதிகத்தின் ௧௪-வது செய்யுளில் ஆரியர் பதினைந்து எருமை மாடுகளைக் கொன்று

இந்திரனுக்குப் படைக்க, அவன் அவற்றின் கொழுப்பை ஆரத்தின்று வயிறு நிறைந்தடைந்த மகிழ்ச்சி எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது; அம் மண்டிலத்து ௧௬௧-ஆம் பதிகத்தின் ௧௪-வது செய்யுளிற் குதிரைகளையும் எருதுகளையும் ஆக்களையும் வறட்டு ஆக்களையும் செம்மறியாடுகளையுங் கொன்று ஆரியர் வேள்வி வேட்டமை விளக்கமாக விளம்பப்பட்டிருக்கின்றது. இருக்கு வேதத்திற்குப் பின் எழுந்த 'பிராமணங்கள்,' 'ஸ்மிருதிகள்' என்பவற்றில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கும் உயிர்க்கொலை வேள்விகள் தாம் இருக்குவேத காலத்திற்குப்பின் உண்டாயினவென்று கூறத்துணிபவர், இருக்குவேதத்திலேயே ஒருகாலன்றிப் பலகாலும் இங்ஙனம் விளக்கமாக நுவலப்பட்டிருக்குங் குடிகொலை மலிந்த வெறியாட்டு வேள்விகளை நிகழவில்லையென்றலும், அவை தமக்கு வேறு பொருள்கள் உளவென்றலும் 'முழுப் பூசனிக்காயைச் சிறு சோற்றில் மறைப்பதற்கே' ஒப்பாய் ஆராய்ச்சி யறிவுடையாரால் நகையாடி விடுக்கற்பாலனவாய் ஒழியும் என்க. இவை தமக்கெல்லாம் வேறு பொருள்கள் உளவென்பார் கூற்றுத், 'தவவொழுக்க மென்பது ஏதோர் உயிரையுங் கொன்று அதன் ஊனை உண்ணுமையேயாம்' என்று வற்புறுத்தி ஔவைப்பிராட்டியார் மொழிந்த "நோன்பென்பது கொன்று தின்னாமை" என்னும் அறிவுரைத் தொடரைத் தன் கருத்துக்கு இணங்குமாறு பொருள்படுத்த வேண்டினான் ஓர் ஊன்தின்னி, 'தின்னாமை' என்னும் ஒரு சொல்லைத் 'தின் ஆமை' என இரண்டு சொல்லாகவும், 'தின் ஆ மை' என மூன்று சொல்லாகவும் பிரித்து 'ஆமை இறைச்சியைத் தின்னல்' எனவும், 'மாடு ஆடு என்பவற்றின் இறைச்சியைத் தின்னல்' எனவும் பொருளுரைத்து, ஆகவே 'தவவொழுக்க மென்பது ஆமை மாடு ஆடு என்பவற்றின் ஊனை யுணவாகக் கொள்ளுதலேயாம்' என்று அவ் வறிவுரைக்குப் பொருள்கூறி ஆரவாரம் புரிதலோடு ஒப்பதாமன்றிப் பிறிதென்னை? ஒரு நூலின் போக்கையும் அதனை இயற்றிய ஆசிரியர் கருத்தையும் பிறழ்த்தித், தாம் வேண்டியவாறெல்லாம் உரை யுரைப்பதும் மெய்யுரை யாகுமா?

எனவே, தென்னாட்டுச் சைவ முனிவரர் எவரது அருளுரையுந் தமது மருளுரைக்கு இடந்தந்து உதவி செய்யாமையின், அத் தெய்வ முனிவரரைத் தமக்கு மேற்கோளாகக் கொள்ளுதல் ஆகாமை கண்ட இந் நாட்டுப் போலிச் சைவர் சிலரும் மாயாவாத வேதாந்திகள் பலருந் தமது போலிக் கொள்கைக்கு இசைந்த வடநாட்டு முனிவரர் தயாநந்த சரஸ்வதியை அடைக்கலம்புக்கது சாலப் பொருத்தமேயாம். புக்கும் என்! அவர் கைக்கொண்ட இருக்கு வேதமே அவரது கோட்பாட்டின் பொய்ம்மை காட்டி அவரைக் கைவிட்டதாயின், தயாநந்த சரஸ்வதி அவர்க் கெங்ஙனம் உதவி செய்யவல்லார்!

அற்றேல் அஃதாக, ஆரியமொழி நூல்களாகிய 'இருக்கு,' 'எசுர்' முதலியவற்றில் தமிழ்ச் சான்றோர்தங் கோட்பாடுகள் புகுந்தவாறு என்னையெனிற் கூறுதும்: ஆரியர் நல்லுணவும் நல்லுறைவிடமும் பெறுதற்குத் தேடியலைந்து தமிழ் நிலமாகிய இப் பரத நாட்டிற் புகுந்த காலத்துப் பெரும்பாலும் போர் மேற்கொண்டே போந்தனர்; அப்போது தமிழர்கள் நாகரிகத்தின் மிக்காராய், ஆங்காங்கு நகரங்களும், அந் நகரங்களில் அரசியல்களும் அமைத்துப் பொருள்வலியும் படைவலியும் போர் வலியும் மிகப் படைத்தவர்களாய் வாழ்ந்து வந்தமையின், பசித்துவந்த வறியராகிய ஆரியர் பண்டைத் தமிழ்மக்களை எதிர்த்து வெல்லுதல் இயலாதாயிற்று. இயலாதாகவே, பலவகையாலுந் தமிழர்தம் நட்பையும் உறவையும் பெறுதற்குச் சூழ்ச்சிசெய்து, தாம் 'உத்தரகுரு' வென்னுந் தேவ நாட்டிலிருந்து வந்த தேவர்களேயென்றுந், தாம் பேசும் மொழி தேவமொழியே யென்றுந், தம்மைப் பகைத்தலுந் தமக்கு இடர்செய்தலும் அங்ஙனஞ் செய்வாரை மீளா நரகிற்கு ஆளாக்கு மென்றுந், தம்மை வணங்கித் தாம் ஏவிய செய்தொழுகுவார்க்கு இம்மையில் எல்லா நலங்களும் பெருகுவதன்றி மறுமையிலும் பிதிரர்களால் உவந்தேற்று உயர்ந்த இன்ப உலகங்களில் வைக்கப்படுவதுங் கைகூடுமென்றுஞ் சொல்லித் தமிழரிற் பெரும்பாலாரை

ஆரியர் தம்வயப்படுத்திவிட்டார். அஞ்ஞான்றை ஆரியரிற் பெரும்பாலார் வடக்கே பனிமிகுந்த நாடுகளிலிருந்து வந்தவர்களாதலின் அழகிய வெண்ணிறமுள்ள உடம்பும் நீல விழிகளும் வாய்ந்தவர்களாயிருந்தனர். அவர்களது அழகிய தோற்றத்தைக்கண்ட அஞ்ஞான்றைத் தமிழரிற் பலர், அவ்வாரியர் சொல்லை மெய்யென நம்பி அவர்களைத் தம்மினும் உயர்ந்த தேவர்களாகவே எண்ணிக் கொண்டாடி அவர்க்குப் பணிந்தொழுகலாயினர். இவ்வளவுக்குத் தமிழரைத் தங் கீழ்ப்படுத்த இடம்பெற்ற ஆரியர்க்கு இனி இங்கு ஆகாதது என்உளது! ஆரியர் கடவுளராகவும், அவர் கொணர்ந்த ஆரியமொழி கடவுள்மொழியாகவும், அம்மொழியில் அவர் பாடியபாட்டுகள் 'இருக்கு,' 'எசுர்,' 'சாமம்' என்னும் வடிவிற் புருஷமேதத்தில் (ஆண் மகனைக்கொன்று வேட்ட வேள்வியில்) தோன்றியனவாகவும் (இவ்வாறு இருக்குவேத புருடசூத்த மந்திரத்தில் எழுதிவைக்கப்பட் டிருக்கின்றது), பின்னுஞ் சிலகாலங் கழிந்தபின் இவ்வேதங்கள் சிவபிரானாலேயே அருளிச் செய்யப்பட்டனவாகவும் வைத்துத் தமிழர் கொண்டாடும்படி செய்துவிட்டனர். இவ்வளவில் அமையாது, ஆரிய மொழி யல்லாத தமிழ் முதலியன மக்களால் ஆக்கப்பட்டனவாகலின் அவற்றின்கண் வரையப்பட்ட நூல்கள் ஆரியரால் ஏற்கற்பாலன அல்லவெனவும், ஆரியமொழியில் உள்ள நூல்களே தலைமேற்கொண்டு ஏற்றற்குரியன வெனவும், ஆரிய இனத்தவரல்லாத தமிழரும் பிறரும் ஆரிய மொழி நூல்களை ஓதுதற் குரிமையுடையரல்ல ரெனவும், தமிழரும் பிறரும் ஆரியர் ஏவிய பணிசெய்து ஒழுகுதல் ஒன்றற்கே உரியரெனவும் மொழிந்து நாட்செல்லச்செல்லத் தமது முதன்மையினை நாட்டுதற்கு வேண்டும் ஏற்பாடுகளை யெல்லாம் ஆரியர் ஒரே கட்டுப்பாடாயிருந்து திறமாய்ச் செய்துகொண்டனர். தமிழரில் வலியராயுள்ள அரசர்களையுஞ் செல்வவாழ்க்கையிற் சிறந்த வணிகர்களையுந் தாம் வகுத்த இக் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கினல் தமது முதன்மை நிலைபெறுமெனக் கண்டு, அரசரையும் வணிகரையும் மட்டுந் தமக்குக் கீழ் ஒருபடி இரண்டுபடி

மட்டில் இறக்கி, அவர்களுக்கு 'க்ஷத்திரியர்,' 'வைசியர்' என்னும் பெயர்களைச் சிறப்பாகத் தருவதுபோற் றந்து, அவர்கள் மகளிரோடு தாம் கலக்கலாம், ஆனால் அவர்கள் தம் மகளிரொடு கலக்கலாகாதென்றும், அங்ஙனங் கலப்ப ராயின் அவர் பெருந் தீவினைக்கு ஆளாகுவரென்றும், தமக்குக்கீழ் இவ் விருவகுப்பினர் மட்டுந் தம்முடைய ஆரிய நூல்களை ஓதுதற்கு உரிமையுடையரென்றுஞ் சொல்லி அவ்விருவகுப்பினரையுந் தம் மினத்தவராக்கி, அவ்வாற்றால் தமது முதன்மை அவர் தமக்குள்ளும் நிலைபெறுதற்கு இடஞ்செய்துகொண்டனர். இங்ஙனமாக ஆரியரது சூழ்ச்சியாற் பழந்தமிழ் மக்களுக்குட் பெரியதொரு மாறுதல் நிகழ்ந்து பரவவே, ஆரியரால் உயர்ந்தவராகப் பாராட்டப் படுதலும், ஆரியமொழியைக் கற்பதும், ஆரியநூல்வழி யொழுகுதலும், தமிழையுந் தமிழ்வழங்கும் ஏழைமக்களை யும் இழிந்த நிலைமைக்கட் படுத்துப் பேசுதலுந் தமக்குச் சிறப்புத் தருவனவாகத் தமிழரிலேயே கற்றவருஞ் செல் வருமாயுள்ளார் கருதுவாராயினர். அதனால், தமிழரில் அரச வகுப்பினரும் பிறரும் ஆரியமொழியை விரும்பிக் கற்று, அதன்கண் உரையாடுதலும் நூல் எழுதுதலுஞ் செய்வாராயினர். இங்ஙனந் தமிழர்க்குள் ஆரியமொழியும் ஆரியர்தம் வழக்கவொழுக்கங்களும் பரவவே, அவ்வாரிய வழக்குகளுக்கு ஒருவாற்றால் உடன்பட் டிருப்பினும், அவற்றின் சிறுமையும் தமிழ் வழக்குகளின் பெருமையும் புடைபட ஒற்றி ஆராய்ந்தளந் துணர்ந்து உண்மை கண்ட 'ஜனகன்,' 'அஜாதசத்துரு,' 'அஸ்வபதிகைகேயன்,' 'பிரவாகனஜைவலி' முதலான தமிழ்வேந்தர்கள், அமயம் நேர்ந்துழியெல்லாம் ஆரிய முனிவர்க்குத் தமிழ்ச்சான்றோர் நுணுகி யறிந்த மெய்ப்பொருள்களை அவர்க்குரிய ஆரிய மொழியிலேயே யெடுத்துத் தெருட்டி, அவர்க்கு மெய் யறிவு கொளுத்தி, அவர் தம் ஆரியக் கோட்பாடுகள் பயனிலவாதன் மேலுந் தீவினைப் பாலவாதலுங் காட்டி வரலாயினர். இவ்வாறு தமிழ் வேந்தர்கள் ஆரியர்க்கு அறிவுறுத்தி வந்த மெய்யுரைத் திரட்டுகளே 'உப நிடதங்கள்' எனப் பெயர்பெறுவவாயின. இத் தமிழ்வேந்தர்

களின் பெயர்கள் ஆரியச் சொற்களாயிருத்தல் கொண்டு அவரெல்லாம் ஆரியர் போலுமென மயங்கிவிடற்க. சேக்கிழார் அருளிய திருத்தொண்டர்புராணத்திலுள்ள சிவனடியாரின் தனித்தமிழ் இயற்பெயர்கள் பலவற்றை வடநூலார் தமது வடமொழியில் மொழிபெயர்த்து வைத்துக் கொண்டவாறு போல, அவ் வேந்தர்களின் பண்டைத் தனித்தமிழ்ப் பெயர்களும் அவ்வாறு ஆரியமொழியில் மொழிபெயர்த்து அமைக்கப்பட்டன வென்று உணர்ந்து கொள்க. இன்னும் தமிழரச வகுப்பினின்றுந் துறவு புகுந்த 'விசுவாமித்திரர்,' 'தேவாபி' முதலான முனிவரர்களும் ஆரிய மொழியைக் கற்று அதிற் பெரும்புலமை மிக்கு, ஆரியர் கைக்கொண்டு போதருஞ் சிறுதெய்வ வணக்கத்தையும் உயிர்க்கொலை வெறியாட்டு வேள்விகளையுந் தொலைப்பான் வேண்டியே ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளிவடிவுகண் மேலும், அவற்றின்கண்ணெல்லாம் அருளொளி வடிவினராய் விளங்குஞ் சிவபிரான் மேலும் பற்பல பதிகங்களை ஆரியர்க்கு மாறாய் அவர்தம் ஆரிய மொழியிலேயே இயற்றி, அவைதம்மைத் தாம் முழுமுதற்கடவுளை வழிபடுங் காலங்களிற் பயன்படுத்தி வந்தனர். இவ்வாறு விசுவாமித்திரர் முதலாயினோர் ஆரிய மொழியிற் பதிகங்களும் நூல்களும் இயற்றினும் அவரெல்லாந் தமிழ் வகுப்பினராதலை யுணர்ந்தன்றே மநுமிருதியும் (க0, ௪௫),

> " இருபிறப்பாள ரல்லாத மற்றை எல்லா வகுப்பினரும் மிலேச்சர்தம் மொழியைப் பேசினும் அல்லது ஆரியர்தம் மொழியைப் பேசினும் அவரெல்லாந் தஸ்யுக்களேயாவர்."

எனக் கூறுவதாயிற்று. இதனால் ஆரியரல்லாத தமிழரும் பிறரும் அக்காலத்தில் ஆரியமொழியைப் பேசினரென்பது பெறப்படுகின்றதன்றோ?

தஸ்யுக்களெனப்பட்ட தமிழரில், அரசராயினாரையும் அவருட் டுறவுநிலை புக்காரையுஞ் செல்வவள முடையாரை

யும் வேறு போக்கின்மையாலே க்ஷத்திரிய வைசிய வகுப் பின்கட் சேர்த்துக்கொண்ட ஆரியர், அங்ஙனஞ் சேர்க்கப் பட்ட அவர்கள் தமக்கு மாறான தஸ்யுக்களே என்பதனை அமயம் வாய்த்துழியெல்லாம் வெளிப்படையாகச் சொல் லியே வந்திருக்கின்றனர். 'அஜீகர்த்தன்' என்னும் ஆரியப் பார்ப்பனன், தன்மகன் 'சுநஸ்ஸேபனை' வேள்விக்களத்தில் வெட்டி வருணனுக்குப் பலியூட்டவேண்டிக் கேட்ட 'ரோகிதன்' என்பவன்பால் நூறு கறவைமாடுகளை வாங்கிக்கொண்டு அவனை அவனுக்கு விற்றுவிட்டது மன்றி, வேள்விக்களத்திற் கொணரப்பட்ட தன்மகனைக் கழுத்தறுப்பதற்கு வேறு யாருந் துணியாராய்ப் பின் வாங்கிநிற்றல் கண்டு, தனக்கு இன்னும் இருநூறு கறவைகள் கொடுத்தால் தானே தன் மகன் கழுத்தை வெட்டுவதாகச்சொல்லி, அங்ஙனமே இருநூறு கறவைகள் கொடுக்கப் பெற்றுக்கொண்டு அவ்விளைஞன் கழுத்தைக் கத்திகொண்டு அரியப்போகையில், அம்மகன் தன்தந்தை யின் கொடுஞ்செயலைக்கண்டு அலறிக் கடவுளரை வேண்டி அழாநிற்ப, அதுகண்டு பெரிதும் நெஞ்சங்கரைந்த விசுவா மித்திரர் அச் சுநஸ்ஸேபனை அக் கொலைக்குத் தப்புவித்து, அவனைத் தம் மக்கள் எல்லார்க்கும் மூத்த தலைமகனாக ஏற்றுச் சிறப்புச்செய்தமையும், அந்நேரத்தில் அச் சுநஸ் ஸேபன் விசுவாமித்திரரை நோக்கி "ஓ பரதர்களுக்குத் தலைவரே" என்று விளித்து "நுங்கள் புதல்வர்கள் இசைந் தால் எனக்கு நன்மையுண்டாமாறும் யான் தங்கட்கு மகனாந் தன்மையடையுமாறும் அவர்கள் என்பால் நேய மாய் இருக்கக் கற்பியுங்கள்" என்று வேண்ட, அவரும் அதற்கு ஒருப்பட்டுத் தம்மக்கள் நூறுபேர்க்குந் தம் துணிபு தெரிவிக்க, அவருள் 'மதுச்சந்தர்' எனப்படும் இளைஞர் ஐம்பதின்மர்க்கு மூத்த ஐம்பதின்மர் மட்டும் அதற்கு உடன்படாராக, அதனால் விசுவாமித்திரர் அவர் மேற் சினங்கொண்டு "நும் வழியில் வருவார் இந் நாட்டை விட்டகன்று இதன் எல்லைப் புறங்களில் இருக்க" என்று வைதமையால் அம் மரபினரே ஆந்திரர், புண்டரர், சபரர், புளிந்தர், மூதிபர் ஆனமையும், தஸ்யுக்களிற் பெரும்

பாலார் விசுவாமித்திரர் வழித்தோன்றினமையும் ஐதரேய பிராமணம் ஏழாம் இயலில் (௧௩-முதல் ௧௮-வரையில்) தெளித்துரைக்கப் பட்டிருத்தல் காண்க. இதனால், ஆரியப்பார்ப்பனர் தாம் பொருண்மேல் வைத்த பேரவா வால் எத்தகைய கொடுந்தொழிலுஞ் செய்தற்குப் பின் இடையாராதலும், தமிழ்ச்சான்றோர் இடருற்ற ஆரியர் மாட்டும் பேரிரக்கமுடையராய் அவர்க்குப் பேருதவி புரிவாராதலும், ஆரியரல்லாத தஸ்யுக்க ளெல்லார்க்கும் பிறப்பிடமாவார் விசுவாமித்திர மரபினரேயாதலும், தஸ் யுக்களிற் சிறந்த 'பரதர்க்கு' விசுவாமித்திரரே முதற்குரவ ராதலும், ஆரியர் நேரத்திற்குத் தக்கவாறு தம்மவ ரல்லாதாரை ஒருகால் தஸ்யுக்களென இகழ்ந்தும் பிறி தொருகால் க்ஷத்திரியர் வைசியரெனத் தம்மோடு இனப் படுத்திப் புகழ்ந்துந் தமிழரை ஏமாற்றும் நீரராதலும் இனிது விளங்குகின்றனவல்லவோ? இன்னும், விசுவா மித்திர மரபினர் உயர்ந்த மெய்ப்பொருளுணர்ச்சி யுடைய ரென்பதூஉம், தாம் அறிதின் உணர்ந்த மெய்ப்பொருள் களை, அவை யுணராத ஆரியமரபின் வழிவந்த சுநஸ்ஸேப னுக்கு அவர் அறிவுறுத்தின ரென்பதூஉம், விசுவா மித்திர மரபினரான காதினர்க்கு ஆரியவேதங்களின் வேருகத் தெய்வத்தன்மை பொருந்திய மற்றொரு வேதம் இருந்ததென்பதூஉம்[1] அவ் ஐதரேய பிராமணமே நன்கு உரைதருகின்றது. இவ் விசுவாமித்திர மரபினர்க்குரிய தெய்விகவேதமே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொரு ளியல்புகளையும், சிவபிரானையும், அவன் முனைத்து விளங்கும் முத்தீ வழிபாடுகளையும் உணர்த்தும் பண்டைத் தமிழ்வேத மாதலுந் தானே பெறப்படும்.

இன்னுந், தமக்கு உதவியுந் துணையுமா யிருந்து, தாஞ்செய்து போந்த உயிர்க்கொலை வேள்விகளை நடத்தி வந்த வரையில் தமிழரை க்ஷத்திரியராக வைத்துத் தம்மோடினப்படுத்திக் கொண்டாடிய ஆரியர், பின்னர்த் தம்மை அவர் ஒருபொருட் படுத்தாரானவழி, உடனே

1. "தைவ வேதேச காதிநாம்." ஐதரேய பிராமணம், ௭, ௧௮.

அவரை இழிந்தவராக்கிவிட லாயினர். இது, "வேள்வி யாற்ருமையாலும் பிராமணரோடு உறவு கலவாமையாலும், க்ஷத்திரிய மரபினரான பௌண்டரகர், ஒட்ரர், திராவிடர், காம்போஜர், யவனர், சகர், பாரதர், பல்லவர், சீனர், கிராதர், தரதர், கசர் என்பார் வரவரச் சாதிப்புறம்பான விருஷலரின் நிலையை யடைந்தனர்" என மநுவும் (௧௦, ௪௩, ௪௪), மாபாரத அநுசாசன பருவமும் (௨௧௦௩) உரைக்குமாற்ருல் நன்குணரப்படும். மேற்குறித்த தமிழரச மரபினர் அனைவரையும் ஆரியர் 'தஸ்யுக்கள்' எனவே கொண்டு இகழ்ந்தன ரென்பதற்கு, மாபாரத துரோண பருவம் (௪௭௪௭), "ஆயிரக்கணக்கான காம்போஜர், சகர், சபரர், கிராதர், வர்வரர் என்பாரின் குருதியினுலுந் தசையினுலும் இவ் வழகிய நிலத்தைச் 'சைநேயன்' சேற்றுத் திரளை யாக்கினுன்; கத்தரிக்கப்பட்டுத் தலையில் மயிர் இலராயினும் நீண்ட தாடிமயிரினை யுடைய தஸ்யுக்களின் தலைகளாலும், அவர்தம் முடிகளாலும் மூடுண்ட நிலம், இறகிழந்த பறவைகளால் மூடுண்ட நிலம்போன் றிருந்தது." எனக் கூறுதலே சான்ரும். இதனேடொப்பவே அரிவம்சமும் (௭௭௩), "சகர், யவனர், காம்போஜர், பாரதர், பல்லவர், கோலிசர்ப்பர், மகிஷர், தார்வர், சோழர், கேரளர் முதலிய அனைவரும் க்ஷத்திரியராகவே யிருந்தனர்; ஆனுல், வசிட்டருடைய சொல்லால் தூண்டப்பட்ட சிறந்த சகர வேந்தனுல் அவர்கள் தமக்குரிய வாழ்க்கை யுயர்வினையுஞ் சமய நிலையினையும் இழக்கலாயினர்" என உரைத்தல் காண்க. மேலே குறித்துக் காட்டப்பட்ட இனத்தவர் பற்பலரும் பண்டைத் தமிழ்வகுப்பினராதலும், ஆரியர் இங்கு வருதற்கு முன்னரே இந் நாட்டின் பற்பல பகுதிகளிலுங் குடியேறி அவற்றை அரசாண்ட அத் தமிழ் மக்கள் தம்பால் வந்து அடைக்கலம் புகுந்த ஆரியர் தம் சூழல்களிற் சிக்குண்டு அவர்தஞ் சொற்படி நடந்து வந்த வரையில் அவர் தம்மை 'க்ஷத்திரியர்,' 'வைசியர்' எனப் பெயர் வைத்துச் சீராட்டிவந்த ஆரியர், பின்னர்த் தம் தீவினைச் செயல்களைக் கண்டு தம்மை அத் தமிழ்மக்கள் அருவருத்துவிட்ட வுடனே அவர்தமக்கெல்லாம் 'தஸ்

யுக்கள்' என ஓர் இழிந்த பெயர் வைத்து அவரை ஒருங்கே இழித்துரைக்கலானதும், இவ்வாறாகத் தமிழரை இழித்துரைக்குமாறு ஆரியரை ஏவினவர் ஆரியர்க்குக் குருவான வசிட்டரேயாதலும் மேற்காட்டிய வடமொழி நூல்களின் உரைகளினாலேயே நன்கு தெளியப்படுகின்றன அல்லவோ?

இனி, இஞ்ஞான்று தம்மைப் பார்ப்பனரென உயர்த்துப் பேசிக்கொள்வாரும், அப் பார்ப்பனரைப் பின்பற்றி யொழுகி அவ்வாற்றால் தமக்கு உயர்வு தேடிக்கொள்வாரும் ஏனைப் பொதுமக்களை இழிந்த நிலைமைக்கட்படுத்து நடத்தும் இயல்புகளை உற்றுக்காண வல்லார்க்குப், பண்டைக் காலத்துப் பார்ப்பனரின் ஒழுகலாறுகளும் இவர் தம்மோடொத்த இயல்பினவாம் உண்மை தெற்றெனப் புலனாகாநிற்கும். மேல்நாட்டிலிருந்து போந்து இந்நாட்டை அரசாளும் ஆங்கில நன்மக்களின் மொழியையும் அவர்தம் நடையுடை வழக்கங்களையும் பின்பற்றி அவர்பாற் பல சிறப்புக்களையும் பெற முந்துவோர் பார்ப்பனரேயாவர். ஏனைப் பொதுமக்களின் வேறாகத் தம்மைப் பிரித்து உயர்த்துதற்கும், செல்வவாழ்க்கையிற் றலைமைபெற்று வாழ்தற்கும் ஏதுவாவது ஆங்கில மக்களின் நாகரிகத்தைத் தழுவி யொழுகுதலே எனக் கண்டுகொண்ட நாள் தொட்டுப், பார்ப்பனர் பெரும்பாலும் ஆங்கிலமொழியையே கற்றலும், அதனாலேயே உரையாடுதலும், ஏனைத் தமிழரையுந் தமிழையுஞ் 'சூத்திரர்,' 'சூத்திர பாஷை' என இகழ்தலுஞ் செய்தல் எவரும் உணர்ந்ததே யாம். இங்ஙனமே பண்டைநாளி லிருந்த பார்ப்பனரும், தம்மைத் தமிழரின் வேறாக உயர்த்துதற்கு வாயிலாவது ஆரிய மொழியையும் ஆரிய ரொழுகலாற்றையும் பின்பற்றுதலே எனக் கண்டவளவானே ஆரிய மொழியைக் கற்று ஆரிய வழக்குகளைத் தழுவித், தமிழரெல்லாரையுந் 'தஸ்யுக்கள்' எனவுந், தமிழரின் மொழியை 'மிலேச்சமொழி' எனவும் இகழ்ந்துரைப்பா ராயினர். இஞ்ஞான்றைப் பார்ப்பனர், தமிழிற் சிறந்த அரசரையும் செல்வ வாழ்க்கையிற் பெரிய

வணிகரையும் அவ்வாறிகழ்ந் தொதுக்குதல் ஆகாமல் அவரைத் தாம் சார்ந்து பிழைக்கவேண்டியிருத்தல் கண்டு, அவரை 'க்ஷத்திரிய வைசிய' வகுப்பின்பாற் படுத்துக்கொண்டாடுதல் போலவே, பண்டைப் பார்ப்பனருந் தமிழ அரசரையும் வணிகரையும் 'க்ஷத்திரிய வைசிய' வகுப்பின்பாற்படுத்துக் கொண்டாடலாயினர். திருவனந்தை அரசர், மைசூர் அரசர் முதலாயினுரை 'க்ஷத்திரியர்' எனவும், நாட்டுக்கோட்டை வணிகரை 'வைசியர்' எனவுங் கொண்டாடி, அவர்பாலுள்ள பொருட்டிரளையும் பிறநலங்களையும் இஞ்ஞான்றைப் பார்ப்பனர் கொள்ளை கொண்டு நுகர்தல் காண்க. இவர்தம் பாராட்டுரையில் மயங்கி இவ் வரசரும் இவ் வணிகருந் தம்மை அப் பார்ப்பனருக்கு அடுத்தநிலையில் உயர்ந்தவராகக் கருதி வைத்துக்கொண்டு தம மினத்தவரான ஏனைத் தமிழ்மக்களெல்லாரையுஞ் 'சூத்திரர்' என இகழ்ந்துரைத்து ஒழுகுதல் போலவே, பண்டைத் தமிழ் மன்னரும் வணிகரும் பார்ப்பனர் தம் பொய்ப் பாராட்டுரையில் வீழ்ந்து தம்மினத்தவரையுந் தமிழையும் புறம்பழித்து வந்தனர். இன்னும் இஞ்ஞான்று, பார்ப்பனர்தம் பாராட்டினையே பெரிதாகக் கருதிப் பிழைப்பா ரெல்லாருந், தம்மோடொத்த தமிழர் பாற் சிறிதும் உறவுகலக்க இசையாராய், அப் பார்ப்பனர் பாலும் உறவு கலத்தல் இசையாதேனும் அவர்தம் புறக்கடை வாயிலிற் காத்திருந்து அவர் வீசியெறியும் எச்சிற் சோற்றை யுண்டு, அப் பார்ப்பனர்தந் தெய்வத் தன்மையினையும் அவர்தம் ஆரியமொழி நூல்களின் தெய்வத் தன்மையினையும் அப் பார்ப்பனரினும் பார்க்க உயர்த்துப் பேசித், 'திருநாவுக்கரசர்,' 'மெய்கண்டதேவர்,' 'சேக்கிழார்' முதலான அருட் பேராசிரியர்களையும் பார்ப்பனர் கூறுஞ் சூத்திர வகுப்பின்பாற் படுத்து, அவர் அருளிச்செய்த அருள்நூல்களையும் வடமொழியிலிருந்து கடன்கொளப்பட்டனவாக மொழிந்து, உண்மைக்கு மாறுன பொய்ப்படுகுழியில் வீழ்ந்து அலகைபோல் அலறுதல்போலவே, அஞ்ஞான்றைப் பார்ப்பனர்தம் பாராட்டினை விழைந்த தமிழருங் கோடரிக்காம்பை யொப்

பத் தம்மினத்தவர்க்குந் தமது தமிழ்மொழிக்கும் இழைத்த தீங்குகள் அளப்பில. தமிழர்க்குந் தமிழ்க்குந் தமிழ்நாட்டுக்கும் ஆரியரால் விளைந்த பொல்லாங்குகளை விடத், தம்மை அவ் ஆரிய இனத்திற் சேர்த்துக்கொண்ட பார்ப்பனராலும், அவர் தம்மால் ஒதுக்கப்பட்டிருந்தே அவர்தம் பாராட்டுரையினை மேலதாகக் கருதி அவர் வழிச் சார்ந்தொழுகிய தமிழராலும் விளைந்த பொல்லாங்குகளே மிகக் கொடியனவாமென்று உணர்ந்துகொள்க. இஞ்ஞான்று ஆரியர் என ஒரு தனி வகுப்பார் காணப்பட்டிலரேனுந், தமிழரிலிருந்தே பெருந்தொகையினர் ஆரியராய்மாறிப் பார்ப்பனப் பெயர் புனைந்து வடமொழி நூல்களை ஓதித், தமிழர்க்குந் தமிழ் மொழிக்குந், தமிழ்த்தெய்வக்கொள்கைக்கும் மாறாய் நின்று வருதல் போலவே, அஞ்ஞான்றுந் தமிழ் வகுப்பினரும் பிறரும் பெருந்தொகையினராய் ஆரியர் ஒழுகலாறுகளைக் கைக்கொண்டு வடநூல்களைப் பயின்று தமிழ்வழக்குக்கு முழுமாறாய் நின்றனர் என்க. இப் பெற்றியினரால் எழுதப்பட்டனவே வடமொழியில் உள்ள பல பிராமணங்கள், கல்ப சூத்திரங்கள், மீமாஞ்சை, பொய்க்கதை பொதிந்த புராணங்கள் முதலாயினவாகுமென்று உணர்ந்துகொள்க. இனி, இஞ்ஞான்றும் பார்ப்பனர் கட்டிய பொய் வழக்குகளின் பெற்றி தேற்றி, அருளொழுக்கமாட்சியும் முழுமுதற் கடவுள் வழிபாடுந் தெருட்டுவார் உளராதல் போலவே, அஞ்ஞான்றுங் குடி கொலை மலிந்த ஆரிய வேள்வியின் தீவினைப் பெற்றியுஞ் சிறுதெய்வ வணக்கச் சிறுமையுந் தேற்றி அன்பும் அருளும் பெருகச்செய்த தமிழ்ச்சான்றோரும் உளர். அவர் அருளிச் செய்தனவே: முத்தீ வேள்வியும் உருத்திர வழிபாடுஞ் சிறந்தெடுத்துக்கூறும் இருக்கு எசுர் சாம அதர்வ வேதப் பதிகங்கள் சில பலவும், உண்மைவழா உபநிடதங்களும், சாங்கிய யோக வைசேடிக நையாயிக வேதாந்த சூத்திரங்களும், மற்சம் வாயு முதலான சில புராணங்களும், பௌட்கரம், மிருகேந்திரம் முதலான சில சிவாகமங்களும் பிறவுமாம். இஞ்ஞான்றும் ஆங்கில மொழியைக் கற்று அதன்கண் நலங்கிளரும் நூல்கள் பல இயற்றுந் தமிழர்

களும் ஏனை வகுப்பினரும் உளராயினாற்போலவே, அஞ்ஞான்றும் ஆரிய மொழியைக் கற்று அதன்கட் பயன் பெருகும் நால்வேதப் பதிகங்களும் உபநிடதம் முதலிய அறிவுநூல்களும் இயற்றின தமிழ்ச்சான்றோர் பலரும் உளராஞர் என்று தெளிக. இஞ்ஞான்றை ஆங்கில மொழியில் ஆங்கிலரும் ஆங்கிலரல்லாத பிறரும் இயற்றிய நூல்களில் அவ்வவர் இயற்கைகளும் அவ்வவர்க்குரிய கோட்பாடுகளும் பிரித்தறியலாம்படி விளங்கிக் கிடத்தல் போலவே, அஞ்ஞான்றை ஆரிய மொழியுளும் ஆரியரும் அவரைப் பின்பற்றிஞரும் தமிழ்ச்சான்றோரும் ஏனைப் பிறரும் இயற்றிய பதிகங்களும் நூல்களும் அவரவர்க்குரிய இயற்கையுங் கோட்பாடுகளும் பொருந்தப் பெற்றனவாய், நுண்ணறிவிஞர்க்கு இவை ஆரியர் இயற்றின, இவை தமிழர் இயற்றின, இவை ஏனைப் பிறர் இயற்றினவென்று பிரித்தறியலாம்படி விளங்கி நிற்குமெனக. எனவே, ஆரிய மொழியில் தமிழ்ச்சான்றோர் அருளிச்செய்த பதிகங்களும் நூல்களும் விரவி நிற்கும் இயல்பு ஆராய்ச்சியறிவுடையார்க்கெல்லாந் தெற்றென விளங்கிக் கிடக்கு மெனக. பண்டுதொட்டே பல்வேறு நாடுகளிலுள்ள பல்வேறு மக்கட் பிரிவினருந் தத்தம் நாடுகளை விட்டகன்று ஏனை நாடுகளில் உள்ள ஏனை மக்களோடு கலந்துறவாடி வந்தனராகலின், அவர் தம்முள் ஒரு வகுப்பினர் ஏனை வகுப்பினரின் நடையுடை வழக்கங்களைப் பின்பற்றி யொழுகுதலும் அவரது மொழியைத் தாங் கற்றலும் அம் மொழியில் தாம் நூல்கள் இயற்றுதலும் இயற்கையாய் நிகழப் பெறுமாறு வரலாற்று நூலுணர்ச்சி யுடையார்க்கெல்லாம் இனிது விளங்கிக்கிடப்பதொன்றேயாம். ஆகவே, தமிழ்ச்சான்றோர் அருளிச்செய்த பதிகங்களும், நூல்களும், அவர்தங் கோட்பாடுகளும் ஆரியமொழியிற் புகுந்து நிலைபெறலானது ஒரு புதுமையன்றென ஓர்ந்து கொள்க.

என்றிதுகாறும் விளக்கியவாற்றாற், பிறப்பு இறப்பு இல்லா அருளொளி வடிவினனாகிய எல்லாம்வல்ல முழு

முதற் கடவுள், எத்துணையும் பெரிய தனது முழுமுதற் றன்மையை எத்துணையுஞ் சிறிய எம்மனோர் ஒருவாற்றானு யினுங் கண்டு வழிபட்டு உய்தற்பொருட்டு, எம்மனோர் கண் கட்குப் புலனும் நெருப்பொளியில் விளங்கித் தோன்றி நிற்கும் உண்மையினை முதன்முதற் கண்டறிந்தோர் பரதர் என்னும் பண்டைத் தனித் தலைமைத் தமிழ்ச்சான்றோரே யாவரென்பதூஉம், அவ் வுண்மைக்கு மாறாகாமலே இருக்கு வேதம் அனல் வழிபாட்டை ஓதும் இடங்களி லெல்லாம் அதனைக் கண்டறிந்தவர் 'பரதரே' ஆவர் என வும், அதனால் அனற் கடவுளும் அக் கடவுட்கு உயிராய் விளங்குஞ் சிவபிரானும் 'பாரதன்,' 'பரதன்' எனப் பெயர் பெறுவரெனவுந் தெளியக் கூறுவதாயிற் றென்ப தூஉம், தீப்பிழம்பின் வாயிலாக எல்லாம்வல்ல முதல்வனை நேரே கண்டு வணங்கும் மாப்பெரு வணக்கத்தை முதன் முதற் கண்டவர் தென்றமிழ் நாட்டின்கட் பண்டிருந்த தமிழ்ச்சான்றோரேயாதல் பற்றியே தீக்கடவுள் வணக்கத் தைத் தென்றிசைக் குரியதாக்கி அதனைத் 'தக்ஷிணாக்கினி' என வடநூல்களெல்லாம் ஒருமுகமாக நின்று ஒத் துரைப்பவாயின வென்பதூஉம், தீப்பிழம்பானது 'ஞாயிறு,' 'திங்கள்,' 'தீ' என முத்திறப்பட்டு நிற்றலின் அம் மூன்றினும் விளங்கித் தோன்றும் இறைவனை வழி படும் வேள்வியினையும் முத்திறப்படுமாறு வைத்து வேட்டு வந்தவர் இமயம் முதற் குமரியீறாகக் கிடந்த இப்பரதநாட் டின்கட் பண்டுவைகிய தமிழந்தணரே யாவரென்பதூஉம், விசுவாமித்திரர் முதலான தமிழந்தணர் வேட்ட முத்தீ வேள்வி சிவபிரான்மேற்றாய்க் குடி கொலை இல்லா அரு ளொழுக்க வழிபாட்டின்பாலதாதல் பற்றியே அம் மெய்ம்மையினை ஓதாதுணர்ந்த அருளாசிரியரான திரு ஞானசம்பந்தப் பெருமான் அதனை "வேதவேள்வி" என மீக்கூறுவாராயினரென்பதூஉம், தமிழந்தணர் வேட்ட முத்தீ வேள்வியின் நுண்பொருள் மறைநுட்பம் அறியப் பெறாத பருப்பொருளறிவினரான ஆரியப் பார்ப்பனர் தாமும் அவர்போல் வேள்வியாற்றப் புகுந்து தமக்குரிய ஊனையுங் கள்ளையும் படைத்து இந்திரன் முதலான சிறு

தெய்வங்களை வணங்கி வெறியாட் டயர்ந்து வந்தமை கண்டே சைவசமய ஆசிரியரான திருநாவுக்கரசு நாயனார் அவரையும் அவர் செய்துபோந்த வழிபாடுகளையும் வருந்தி இகழ்ந்துரைப்பா ராயினரென்பதூஉம், தமிழ்ச்சான்றோர் வேட்ட முத்தீ வழிபாட்டினையே பண்டைத் தமிழ்ப்பேரா சிரியரான தொல்காப்பியனார், "கொடிநிலை கந்தழி வள்ளி" என்னும் பொருளதிகாரச் சூத்திரத்திற் கடவுள் வாழ்த்தின் பாற் படுப்பாராயின ரென்பதூஉம், முத்தீயும் இறைவ னுக்குத் திருமேனிபோல் விளங்குவதோடு அவற்கு மூன்று விழிகள்போலவுங் காணப்படுதல் குறித்தே இறைவன் அவைதம்மைக் கண்களா உடைய 'முக்கண் ணன்' எனப்பெயர் பெறுவானாயின னென்பதூஉம் இனிது பெறநக்கிடந்தமை கண்டுகொள்க. ஆசிரியர் தொல்காப் பியனார் குறித்த முத்தீ வழிபாடு, குடி கொலை முதலான குற்றங்கள் உடையதல்லாமை பற்றியே அதனை "வடு நீங்கு சிறப்பு" வாய்ந்ததென அவர் ஓதினார். அவர் அதனை அவ்வா றோதவே, ஏனை ஆரியர் செய்துபோந்த வேள்விகளெல்லாங் குடி கொலை முதலான குற்றங்கள் உடையவாதலுந் தானே பெறப்படும். அது நிற்க.

இனிப், பண்டைக்காலத்துத் தண்டமிழ் அந்தணர் கொண்ட தவ வடிவம் முழுமுதற் கடவுளின் திருவருளுரு வத்தோடு ஒத்த இயல்பிற்றுதல் காட்டப்புக்க முறையில், இறைவற்கு ஒளியுடைப் பொருள்கள் மூன்றும் மூன்று கண்களாக வைத்து உருவகப்படுத்தப்பட்ட உண்மை இத்துணை விரிந்தமையின், எஞ்சியவற்றைச் சுருக்கமாக எடுத்து ஆராய்ந்து காட்டுதும்.

இறைவன் ஞாயிற்றின்கண் முனைத்து விளங்குவோ னாகலின், அஞ்ஞாயிற்றினை அவற்கொரு திருமுகமாகக் கொண்டு, கீழ்பால் எழூஉம் ஞாயிற்றின் உச்சியிலும் மேல் பால் விழூஉம் ஞாயிற்றின் உச்சியிலும் வானின்கட் படர்ந்து காணப்படும் முகிற்குழாங்க ளெல்லாங் கதிரவன் றன் செவ்வொளி தோயப்பெற்று அவற்குச் செக்கர்ச் சடைபோற் றோன்றுதல் பற்றி, அவை தாமே அவற்குச்

செஞ்சடைக் கற்றைகளாக வைத்து நுவலப்பட்டன. இதனானன்றே இறைவற்குச் 'சடையன்' என்னும் பெயருந் தொன்றுதொட்டு வழங்கிவரா நிற்கின்றது.

இனி, வானின்கட் படர்ந்துள்ள முகிற்குழாங்கள் அத்துணையும் நீராவிப்படலங்களே யாகையாலும், அப் படலங்கள் தம்மேற் குளிர்ங் காற்று வீசியவளவானே வானினின்றும் மழைத் துளிகளாய்க் கீழ் இறங்குகை யாலும், அம் முகிற்குழாங்களை இறைவற்குச் சடைக் கற்றைகளாகக் கூறிய தமிழ்ச்சான்றோர், அம் முகிற் குழாத்திலுள்ள தூயநீரை அச் சடைக்கற்றையில் வைகிய கங்கை நீராகவும், வானினின்று மலைமேல் இறங்கி நிலத் திலிழியும் அம் மழைநீரை இறைவன்றன் சடைமுடியி னின்றும் பனிமலை (இமயமலை)யில் வீழ்ந்து கீழ்இழியுங் கங்கையாறாகவும் வைத்து உருவகப்படுத்தி யுரைப்பா ராயினர்.

இனி ஒருநாட் காலையிற் கீழ்பால் எழூஉம் ஞாயிறு புதிய இளமைச் செவ்வி வாய்ந்ததாய் இருத்தலானும், கீழ்கடலின் எல்லைப்புறத்தினின்றும் எழுந்து ஞாயிறு மேல்இவருங்கால் அக் கடல்நீரின் மேற்பரப்பெல்லாம் மயிலின் நிறம்போல் நீலமும் பசுமையுங் கலந்து ஒளிருதலா னும், அவ் விடியற்காலை ஞாயிற்றின்கண் விளங்கித் தோன்றும் இறைவற்கு 'இளையோன்' என்று பொருள் படும் முருகன் என்னும் பெயரை வைத்து, அஞ் ஞாயிற்றின் கீழ்ப் பச்சென்று காணப்படுங் கடற்பரப்பினை அவன் ஊர்ந்து செல்லும் மயிலாக வழங்குவாராயினர். பண்டைத் தமிழ் மக்களாகிய 'பரதர்' என்பார் கடற்கரையடுத்த இடங்களில் முதன்முதல் வைகி உயிர் வாழ்ந்தனர் என்பதை மேலே காட்டினம். அவ்வாறுயிர்வாழ்ந்த மிகப் பழைய காலத்தேதான் அவர் தாம் வணங்கிய முழுமுதற் கடவுளை முருகன் என்னும் பெயரான் வழங்கினர். காலை ஞாயிற்றின்கட் கட்புலனாய் விளங்கிய முதல்வனை இளைய னெனக்கொண்டு வணங்கிய அவர், அதன் பிற்பொழுது முதிர்ந்த மாலை ஞாயிற்றின்கட் டோன்றிய இறைவனை

முதியோன் எனக்கொண்டு, அங்ஙனங் கொள்ளினும் அவ்விருவரும் ஒருவரேயாதல் தெரிந்து, அவர்தம் ஒற்றுமை தெரிப்பான் வேண்டி அம் முதியோன் 'முருகன் தாதை'யே யாவன் எனவும், மிகவுஞ் சிவந்த நிறத்ததாய் விளங்கும் அம் மாலை ஞாயிற்றின்கண் வைகுவானுன அப் பெருமானுஞ் சிவன் எனுஞ் சிவந்த நிறத்தினனே யாவனெனவுங் கடைப்பிடிப்பா ராயினர். இவ் வுண்மை அறிவுறுத்தற் பொருட்டே "சிவன் எனும் நாமந் தனக்கே யுடைய செம்மேனி எம்மான்" என்னுந் திருநாவுக்கரசு நாயனர் அருண்மொழியும் எழலாயிற்று. அது நிற்க.

இனி, மாலைஞாயிற்றின் மேல்பா லெல்லையெல்லாம் மிகச் சிவந்து சுடருஞ் செக்கர் வானத்தில் மட்டுமே மூன்ரும்பிறை இயற்கையாய்த் தோன்றுதலின், அதனையே உருவக வகையாற் சிவபிரான்றன் செஞ்சடைக்கண் வைகும் மூன்ரும் பிறையாக வைத்துத் தமிழ்ச்சான்ரேர் உரைப்பாராயின ரென்பது.

இனித், தீயானது தான் பற்றியபொருளை முழுதும் எதிர்த்துச் சாம்பராக்குதற்குமுன், அப் பொருளின் மேற்சுற்று முழுமையும் எரித்துச் சாம்பராக்கி அச் சாம்பர் மேலே பூத்திருப்ப உள்ளே தான் செந்தணலாய் முறுகி விளங்கும் இருவகை இயல்பே, இறைவன்றன் திருமேனி மிசைப்பூத்து ஒளிருந் தூய வெண்ணீருகவும் அதனுட் சிவந்து மிளிரும் அத் திருமேனியாகவும் வைத்து உருவகப்படுத்தப்பட்டது. இவ் அரிய உருவகத்தின் வனப்பு

"துடிகொள்நேர் இடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே."

(திருவாசகம், அருட்பத்து, ௫)

என்று மாணிக்கவாசகப் பெருமான் இசைத்த செய்யுளிற் கனிந்து நிற்றல் காண்க.

இனி, எண்ணிறந்த உயிர்களை யெல்லாம் இறுகப் பற்றி வருத்திவரும் ஆணவம், மாயை, வினை என்னும் மும்மலங்களையுங் குத்திக் கல்லி நீக்கவல்ல பேராற்றல் இறைவன் ஒருவனிடத்தே மட்டும் உளதாகலின், அம் மும்மலங்களையும் அகத்தே முத்திறமாய் நின்று தொலைக்கும் அப்பேராற்றலே, புறத்தே காணப்படுங் கழுக்கடை அல்லது முத்தலைவேல் (சூலம்) ஆக வைத்து உருவகப் படுத்தப்பட்டது. இவ்வுண்மை,

"கோற்றேன் மொழிக்கிள்ளாய், கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய்—ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்
கழுக்கடைகாண் கைக்கொள் படை." (திருத்தசாங்கம், ௭)

என்னுந் திருவாசகத் திருப்பாட்டினால் உணர்த்தப்பட்டமை காண்க.

இனி, எல்லாத் துன்பங்களும் பிறத்தற்கிடமான ஆணவமலத்தின் குறும்புக்கு அடையாளமாவது புலியே யாகலின், அம்மலத்தின் செயலை ஒடுக்கிநிற்கும் இறைவனது நிலையே, புலித்தோலை யுரித்து உடுத்திருக்கும் நிலை யாகவைத்து உருவகப்படுத்தப்பட்டது. இங்ஙனமே இறைவன் திருமேனிமிசை யடையாளங்களாக மொழியப்படுவன வெல்லாம், அரும்பெரு நுண்பொருள்களை உள்ளடக்கிய உருவக வமைப்புகளே யாகும்; அவையெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டலுறின் இது மிக விரியும். இதுகாறுங் காட்டியவளவே ஈண்டைக்குப் போதுமாகலின், இவற்றை இத்துணையின் நிறுத்தி மேற்செல்வாம்.

இறைவன் திருவுருவ அடையாளங்களாக வைத்து மேலே காட்டியவாறு உருவகஞ்செய்து, எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளை ஓர் உருவத்திருமேனியிற் கொண்டு வழிபடும் முறை, எத்தனையோ ஆயிர ஆண்டுகளுக்கு முற்றொட்டே நிகழ்ந்து வருவதொன்றாம். இறைவனைச் சிவந்த நிறனுடைய 'சேயோன்' ஆகவும், நீலநிறனுடைய 'மாயோன்' ஆகவுங்கொண்டு வழிபடுந் திருவுருவ வணக்கம்,

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்."

என்னுந் தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரத்திலேயே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. 'பஃறுளியாறு' கடல்கொள்ளப்படுமுன் அவ் யாறு பாய்ந்த பெருநிலப் பரப்பை அரசாண்ட பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பான் சிவபிரான் திருக்கோயிலை வலம்வந்து பணியும் இயல்பினனென்பது,

"பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட்செல்வர் நகர்வலஞ் செயற்கே." (புறநானூறு, ௬)

என்று அவனுடனிருந்த காரிகிழார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய பாட்டான் நன்கு புலனாகின்றது. இப் பாண்டி மன்னன் அவையிலிருந்த மற்றொரு நல்லிசைப் புலவரான நெட்டிமையார் என்பார் இவனை வாழ்த்துகின்றுழி,

"முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே." (புறநானூறு,௯)

என்பதனாற் பஃறுளியாற்று மணலினும் பல ஆண்டு வாழ்கவென அவனை வாழ்த்துதல் கொண்டு, முதுகுடுமி எனும் அப் பாண்டிவேந்தனும், அவனது அவைக்களத்துப் புலவர்களான 'காரிகிழார்,' 'நெட்டிமையார்' முதலியோரும் பஃறுளியாறு கடல்கொள்ளப்படும முன் அஃதாவது இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தோராதல் நன்கு துணியப்படும்.

இனித், தொல்காப்பியம் ஆக்கப்பட்ட காலத்தில் முத்தீ வழிபாடும், அம் முத்தீக்கண்ணும் முனைத்து விளங்கும் இறைவன் சிவந்த மேனியனாய்ச் 'சேயோன்' என நிற்பனென்னுங் கோட்பாடும் மிக்கு வழங்கினவாயினும், 'சிவன்' என்னும் பெயராலாதல், முக்கண்ணன் என்னும் பெயராலாதல் இறைவனை வணங்கும் வணக்கம் அஞ்ஞான்று உளதாயிற்றில்லை. 'முக்கண்ணன்' 'சிவன்'

என்னுஞ் சொற்கள் தொல்காப்பியத்தில் ஓரிடத்தாயினும் காணப்படவில்லை. இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட காரிகிழாரது செய்யுளிற் காணப்படும் 'முக்கண்ணன்' என்னுஞ் சொல் தொல்காப்பியத்திற் காணப்படாமையை உற்றுநோக்குங்கால், தொல்காப்பியங் காரிகிழாரது காலத்திற்கும் பன்னூற்றுண்டு முற்பட்டு இயற்றப்பட்டதென்பது தெளியப்படும். படவே, தொல் காப்பியனூர் காலத்தில் வணங்கப்பட்ட தெய்வங்கள் முருகக்கடவுளும், அக் கடவுள் முனைத்துவிளங்கும் ஞாயிறு திங்கள் தீ என்னும் முத்தீயும், மாயோனுமேயாம்.

இனி, இருக்குவேதத்தில் உருத்திரக் கடவுண்மேற் பாடப்பட்ட பாக்களையும், ஏனைச் சிறுதெய்வங்கண்மேற் பாடப்பட்ட பாக்களையும் ஒப்பிட்டு நோக்குங்கால், ஏனை யோரைப் பாடிய பாக்களினும், உருத்திரன்மேற் பாடியவை மிகச் சிலவாதல் ஆராய்ச்சிவல்லார்க் கெல்லாம் எளிதின் விளங்குவதேயாம். அச் சிலவற்றுள்ளும் 'உருத்திரன்' என்னும் பெயரன்றி, 'முக்கண்ணன்' எனும் பெயர் காணப்படுகின்றிலது. இருக்குவேதப் பத்து மண்டிலங்களுள், ஏனை ஒன்பது மண்டிலங்களைவிடக் காலத்தாற் பிற்பட்டதாகிய பத்தாம் மண்டிலந் தொண்ணூற்றிரண்டாம் பதிகம் ஒன்பதாஞ் செய்யுளில்மட்டும் "ஏபி: சிவ:" எனச் 'சிவன்' எனும்பெயர் காணப்படுகின்றது. சுக்கில எசுர் வேதத்தின்கண்ணதான 'சதருத்ரியத்'தில் உருத்திரன், சிவன், சர்வன், பவன், சங்கரன், பசுபதி, ஈசானன் முதலான சிவபிரான் பெயர்களெல்லாம் ஒருங்கே காணப்படினும், 'முக்கண்ணன்' என்னும் பெயர்மட்டும் ஆண்டுங் காணப்படுகின்றிலது. 'த்ரையம்பகன்' எனும் ஒருசொற் காணப்படினும், அஃது 'அம்பிகையாகிய அம்மையோடு கூடினவன்' எனப் பொருள் செய்யப்படுகின்றதல்லாமல், முக்கண்ணன் எனப் பொருள் செய்யப்படுகின்றிலது. இருக்கு, எசுர் முதலான வேதங்கள் எங்கணும் 'ஆயிரங் கண்களுடையவன் சிவபிரான்' என்பது சொல்லப்படுகின்றதேயல்லாமல் 'முக்கண்ணன்' என்பது ஓரிடத்தாயினுஞ்

சொல்லப்படவில்லை. பண்டைத் தென்றமிழ் மக்களின் கோட்பாடுகளைப் பெரிதுந் தழுவி எழுதிய இதிகாசங்கள், புராணங்கள், உபநிடதங்கள் முதலாயின ஈண்டைக்கு மேற்கோள்கள் ஆகா. மிகப் பழைய தமிழ்நூல் வடநூல் களை நன்காய்ந்து காணுங்கால், எல்லாம்வல்ல இறை வற்கு, ஞாயிறு, திங்கள், தீ என்னும் மூன்று ஒளிகளையும் முக்கண்களாக அமைத்துச், சிவந்தொளிரும் உலகுரு வினையே அவற்கு ஒரு திருமேனியாகக் கற்பித்து அவனை வணங்கும் வணக்கம் பண்டைத் தமிழ்மக்கட்கு மட்டுமே உரித்தாதல் இனிது விளங்காநிற்கும்.

இன்னும், இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்நூல்கள் தமிழ்ப்பாட்டுக்களிலாதல் வட நூல்கள் வடமொழிப் பாட்டுக்களிலாதல், கடவுளை நான் முகன் திருமால் சிவபிரான் என முத்திறப்படுத்து 'மும் மூர்த்தி' என்றோதி, அம்மூவருட் சிவபிரானும் ஒருவன் என்னும் பொருந்தாக் கோட்பாடு ஒரு சிறிதாயினுங் காணப்படாமையும், அவற்றின்கண்ணெல்லாஞ் சிவபிரான் பிறப்பு இறப்பு இல்லா எல்லாம் வல்ல முழுமுதற் கடவு ளாகவே வைத்து மொழியப்படுதலும் பெரிதும் நினைவிற் பதிக்கற்பாலனவாகும்.

இனி, உருத்திரப் பெருமான் சிவந்த நிறத்தினனாய்த் திகழ்தலோடு, சென்னியிற் செக்கர்ச்சடைகளும் உடையனா யிருக்கின்றனனென்பது இருக்குவேதத்திற் பலகாலும் நுவலப்பட் டிருக்கின்றது. இதற்கு, அதன் முதன்மண்டி லத்தில் "இமா: ருத்ராய தவஸே கபர்திநே க்ஷயத் வீராய" என்று தொடங்கும் ககச-ஆம் பதிகமே சான்றாம். இதன்கட் போந்த 'கபர்திந்' என்னுஞ்சொற் 'சடையன்' என்னும் பொருட்டு. இதுவும், இதனையொத்த இருக்கு வேதப் பதிகங்கள் ஏனையவும் நாலாயிரத்து நானூறாண்டு கட்கு முன்னரே இயற்றப்பட்டனவாகும்.

இன்னுங், கிறித்து சமயத்தவர்க்குரிய முதலாக மத்தில் 'இறைவன் ஆபிரகாமுக்கு எதிரே தோன்றி அருள்

செய்தக்கால் தன் பெயர் எல்சடை என மொழிந்தான்' என்பது சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும், 'எல்' என்னும் அடைமொழியின்றிச் 'சடை' என்னும் பெயரே இறைவற் குரிய இயற்பெயராக 'ஜாப்' என்னும் ஆகமத்தில் முப்பத் தொருமுறை காணப்படுகின்றது.[1] இச் 'சடை' என்னுஞ் சொல் தமிழ்ச்சொல்லாதல் அறியாத ஈபுருமொழிப்புலவர், இதன் பிறப்பும் பொருளுந் தெரியாமையிற் பெரிதும் இடர்ப் பட்டு மயங்குவாராயினர். 'ஆபிரகாம்' முதலான பண்டை நாயன்மார்கள் தமிழரே யென்பது ஆராய்ச்சியிற் புலனு தலின், அவர் தமக்குத் தோன்றிய இறைவன் தன் பெயரைச் 'சடையன்' எனத் தமிழ்மொழியில் அருளிச் செய்தது சாலப் பொருந்துவதேயாம் என்க.

இனி, இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்குமுன் 'செவ்வேள்'மேற் பாடப்பட்ட 'குன்றம் பூதனார் து' பரிபாடற் செய்யுளிற், சிவபிரான் தன் சடைக் கற்றையிற் கங்கை நீரைத் தாங்கிநிற்கும் இயல்பு,

"எரிமலர்த் தாமரை இறைவீழ்த்த பெருவாரி
விரிசடைப் பொறையூழ்த்து விழுநிகர் மலரேய்ப்பத்
தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி
மணிமிடற் றண்ணற்கு மதியாரற் பிறந்தோய் நீ."

என்று தெளிவாகக் கூறப்பட்டிருத்தல் காண்க. 'திருமாலின் திருவடிகளினின்றும் இறங்கிய கங்கை நீரைச் சிவப்பிரான் தனது சடைக்கண் ஏற்றான்' எனப் பிற் காலத்து வைணவர் முழுமுதற் கடவுளை இழித்துரைப் பான் வேண்டிக் கட்டிவிட்ட பொய்க்கதை பழைய தமிழ் நூல் வடநூல்களிற் சிறிதுங் காணப்படாமையும் ஈண்டு நினைவிற் பதிக்கற்பாற்று.

இனி, இறைவன் திருமுடிமேற் பிறையமர்ந்து விளங்குந் தோற்றம், இற்றைக்கு ஆயிரத்தெண்ணூ ருண்டுகட்கு முன் பாடப்பட்டனவாகிய,

1. See Dr. H. E. Ryle's Commentary on the Book of Genesis, p. 197.

"ஓங்குமலைப் பெருவிறற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறை." (புறம், ருரு)

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற் றொருவன்." (புறம், கக)

"நுதலது இமையா நாட்டம் இகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலும் உண்டுஅத் தோலா தோற்கே,
ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே,
செவ்வான் அன்ன மேனி, அவ்வான்
இலங்குபிறை அன்ன விலங்குவால் வையெயிற்று
எரியகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள்நிழற் றவிர்ந்தன்றால் உலகே." (அகம், க)

என்றற் றொடக்கத்துப் பழந்தமிழ்ச் செய்யுட்களிற் றெளித் துரைக்கப்பட் டிருத்தல் காண்க. ஏனைத் திருவுருவ வடையாளங்களும் இவ் வகநானூற்றுச் செய்யுட்கண் ஓவியத்தெழுதிக் காட்டினாற்போல் அத்துணை எழில் பெறக்கூறப்பட்டிருத்தலும் வியக்கற்பாலதொன்றும்.

இவ்வாறாக ஒளியொடுகூடி விளங்கும் உலகத் தோற்றத்தினையே உருவக வகையால் இறைவன்றன் திருவுருவமாக வைத்து வழிபட்ட பண்டைத் தமிழ்ச் சான்றோரில், அந்தணர் என்பார் வேறு முயற்சியிற் புகுதலின்றி, இறைவற்கு வழிபாடு ஆற்றுதலினும், இறைவன் நூல் ஓதுதலினுமே கருத்து ஒருப்பட்டு நின்றனராகலின், அவரெல்லாம் அவ் விறைவன் றிருவுருவத்தோடு ஒத்த

தவவடிவமே தமக்கும் உரியதாகக் கொண்டிருப்பாராயினர். அரசரைச் சார்ந்தார் பெரும்பான்மையும் அவ் வரசரோ டொத்த கோலத்தினையும், முனிவரைச் சார்ந்தார் பெரும் பான்மையும் அம் முனிவரோடொத்த கோலத்தினையும், ஏனைப் பல்வகை நிலையின் நிற்பாரைச் சார்ந்தார் பெரும் பான்மையும் அவ்வந் நிலையினர்க்குரிய கோலத்தினையுந் தாந் தாம் மேற்கொள்ளுதல் இயல்பாதல்போல, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைச் சார்ந்தாரும் பெரும்பான்மை யும் அக் கடவுட்குரிய திருக்கோலத்தினைத் தாமும் மேற் கொண்டு ஒழுகுதலும் இயல்பாயிற்றென்பது. எனவே, இறைவன் பொன் போன்ற ஒளிவடிவினனாதல் பற்றி அவன் வழியில் நிற்பாரான அருந்தவத்தோர் தாமுந் தழல்வடிவினதாகிய காவியாடை உடுப்பாராயினர். தழல் தான் பற்றிய பொருளைத் தூய சாம்பராக்கி அச் சாம் பரைத் தன்மேற் பூக்க அணிந்திருக்கும் இயல்பே இறை வன்றன் திருமேனிமிசைத் திமிர்ந்திருக்குந் திருநீற்றின் உண்மையாதல் கண்டு, அவனை வழிபடுஞ் சானறோருந் தந்திருமேனி மேலுந் திருநீறு பூசாநிற்பர். இறைவன் தனது நெற்றிமேற் கண்ணொடு முக்கண்ணனாய் விளங்குத லோடு ஒப்பவே, சான்றோருந் தமது நெற்றிமிசைச் சாந்தினாற் பொட்டிட்டிருப்பர். இறைவன் தன் திருமுடி மேற் சடைக்கற்றை உடையனாய் இருத்தல் போலவே, அருந்தமிழ்த் தாபதருந் தஞ்சென்னிமேற் சடைமுடி யுடையராயிருப்பர். இறைவன் தன் சடைக்கற்றைமிசைச் சுமந்திருக்குங் கங்கைநீர்க்கு அடையாளமாகவே, தமிழ்த் தாபதருந் தம் கையில் தண்ணீர்க் குடுவை ஏந்தியிருப்பர். இறைவனைப் போல் தண்ணீரைத் தாம் தலைமிசைத் தாங்குதல் ஆகாமையின், அருந்தவத்தோர் அதனைத் தலையிலன்றிக் கையின்கட் டாங்குவாராயின ரென்று உணர்ந்துகொள்க. இன்னும், மும்மலங்களைச் செகுக்கும் இறைவனது பேராற்றலே அவன் தன் கையில் ஏந்திநிற் கும் முத்தலை வேலாகச் சொல்லப்படுதலின், அவனது திருக்கோலத்தைத் தாங்கிய தாபதரும் 'முக்கோல்' ஏந்தி யிருப்பர்; இதுபற்றியே இவர் 'முக்கோற் பகவர்' எனவும்

மொழியப்படுவர்.[1] இன்னும், ஆணவமலத்தின் வலியை யொடுக்கிய இறைவனது நிலையே, அவன் புலித்தோலை உடுத்திருக்கும் இருப்பாதலின், அவன்வழிச் சார்ந்த தாபதர் தாமும் புலித்தோலை மேற்கொண்டிருப்பர்; இனி, 'மான்' என்னுஞ் சொல் தமிழில் மான் என்னும் விலங்கினையும், வடமொழியிற் 'பிரகிருதிமாயை'யினையுங் குறிப்பதொன்றாகலின்[2] மாயையை யொடுக்கிநிற்கும் நிலைக்கு அடையாளமாக மான்றோலை இருக்கையாய்க் கொண்டும் இருப்பரென்க. இன்னும், எல்லா நூற்கல்விக்கும் இறைவனே தலைவன் என்பதற்கு அறிகுறியாக அவன் தனது வலக்கையிற் சுவடியொன்றேந்தி அமர்ந்திருத்தல் போல, அவன் வழிப்பட்ட தாபதருந் தமது கையில் நூல் ஒன்றேந்தியிருப்பரென்க. இவ்வாறாக இறைவனோடொத்த வடிவுகொள்ளுந் தமிழந்தணரின் தவவடிவ அடையாளங்களிற் சில, ஆசிரியர் தொல்காப்பியனாரால்,

> " நூலே கரகம் முக்கோல் மணையே
> ஆயுங் காலை அந்தணர்க்கு உரிய."

என்று ஓதப்பட்டமை காண்க. இச் சூத்திரத்தின்கட் சொல்லப்பட்ட 'நூல்' என்பது 'கலைநூலே' யல்லாமற் பூணூல் அன்று. தொல்காப்பியனார் நூல் எழுதிய பண்டைக்காலத்திற் புரிநூல் பூணும் வழக்கம் உண்டென்பதை நாட்டுதற்குச் சான்று இன்மையானும், துறவொழுக்கத்தின் நிற்பார்க்குப் பூணூல் இன்மை வடநூலார்க்கும் உடம்பாடாகலானும்,[3] இதற்குப் பூணூல் என்று உரை கூறிய பிற்காலத் துரைகாரரான 'பேராசிரியர்' கூற்றுப் பொருந்தாமை கண்டுகொள்க. 'கரகம்' என்பது நீர்க் குடுவை. 'முக்கோல்' இறைவனேந்திய முத்தலை வேலுக்கு அடையாளம். 'மணை' இருத்தற்கு இடும் புலித்தோல்

---

1. " எறித்தரு கதிர்தாங்கி." என்னும் பாலைக்கலிக்கு நச்சினார்க்கினிய ரெழுதிய உரையைக் காண்க.

2. சிவஞானமாபாடியம், கசூ0-ஆம் பக்கம்.

3. துறவிகள் பூணூலைக் களைந்தெறியுமாறு **பிரமோபநிடதங்** கூறுதல் காண்க.

மான்றேல் முதலியன. இன்னுந் தவவொழுக்கம் மேற்கொண்ட அந்தணர் தலைமிசைச் சடைமுடியுடையரா யிருப்பரென்பது,

"கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்துவோனே." (உருக)

என்னும் பழைய புறநானூற்றுச் செய்யுளால் இனிது விளங்காநிற்கும். இன்னும் அவர் காவியாடை பூண்டு முக்கோல் கைக்கொண்டு தவவொழுக்கத்தின் நிற்றல்,

"கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப."

என்னும் பழைய முல்லைப்பாட்டு அடிகளாற் புலனாகின்றது. இன்னும் அவர் மேற்கூறிய தவஅடையாளங்களொடு, தந் திருமேனிமேல் திருநீறும் பூசியிருப்பரென்பது,

"சுத்திய பொக்கணத்து என்பணி
கட்டங்கஞ் சூழ்சடை வெண்ணீ
பொத்திய கோலத்தினீர்." (உசஉ)

என்று திருச்சிற்றம்பலக் கோவையாரில் மாவிரதியர் விளிக்கப்படுமாற்றால் அறியப்படும்.

இங்ஙனமாகப் பண்டைக்காலத்துத் தண்டமிழ் நாட்டிலிருந்த தாபதரெல்லாரும், எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளை 'முருகன்,' 'சிவன்' என்னும் பெயர்களால் முத்தீக்கண் வணங்கி, அம் முழுமுதற் கடவுளுக்குத் தாம் உருவக வகையாற் கற்பித்த வடிவத்தையே தாமும் பூண்டு, தவவொழுக்கத்தின் கண்ணராய் ஆங்காங்கு வைகினமையே பழைய செந்தமிழ் நூல்களான் அறியக்கிடக்கின்றது. இவ்வாறொழுகிய அருந்தவத்தோரின் வடிவமும், அவர்தந் தவவொழுக்கமும், அவ்வொழுக்கத்தின் பாலதான நோன்பும், பார்ப்பனரின் துறவொழுக்கமுமே 'படிமை,' 'படிவம்' என்னுஞ் சொற்களால் உணர்த்தப்பட்டன என்பதை மேலே கூருச, கூருரு-ஆம் பக்கங்களிற் பழையநூல் மேற்கோள்கள் பல கொண்டு நன்கு விளக்கிக்காட்டினேம்.

தொல்காப்பியம் முதலாக வந்த பண்டைத் தமிழ்நூல்களில் ஓரிடத்தாயினும் 'படிமை,' 'படிவம்' என்னுஞ் சொற்கள், சமண்முனிவரின் தவவொழுக்கத்தினை உணர்த்துதற்கு மேற்கோள் கண்டிலம். கரிகாற்சோழன் காலத்திற்கு அஃதாவது இற்றைக்கு ஆயிரத்துத் தொள்ளாயிர ஆண்டுகளுக்கு முற்பட்டகாலத்தில் தமிழ்நாட்டின்கட் சமணசமயமாதல் அதனைத் தழுவினோராதல் இருந்தனரென்பதற்கு ஏதொரு சான்றும் பழைய தமிழ்நூல்கள் தமிழ்ப்பாட்டுகளில் ஓர் எட்டுணையுங் காணப்படவில்லை.

உண்மை யிவ்வாறிருப்பத், தொல்காப்பியனாரைச் சமண்முனிவரென நாட்டப்புக்கவர், அவர் காலத்திற் சமண்மதந் தமிழ்நாட்டில் இருந்ததென்னுந் தமது கூற்றை மெய்ச்சான்று ஒன்றுதானுங் காட்டி நிறுவாமல் அவரைச் சமணரெனக் கூறப்புக்கது,[1] பழந்தமிழ் நூலாராய்ச்சியுடையாரால் நகையாடி எள்ளப்படுதற்கே இடனாயது காண்க. மேலும், அவர் 'படிமை' என்னுஞ் சொல்லுக்குத் 'தவவொழுக்கம்' என்னும் பொருள் உளதாதலைக் கண்டிலேம் எனவும், தாம் வினவிய வடமொழிப் புலவர்களுங்கூட அச்சொல் அப்பொருளில் வைதிக நூல்களில் வழங்குதலைத் தமக்கு எடுத்துக்காட்டல் இயலாமையின் அந் நூல்களினும் அச்சொல்லும் பொருளும் இல்லையென்று தெளிந்தேம் எனவும் உரைப்பாராயினர்.

பழைய தமிழ்நூல்களை ஆராய்ந்துபாராமலே அவர் அங்ஙனந் துணிவுரை நிகழ்த்தியது இரங்கற்பாலதொன்றாம்.

"கூறினை பெருமநின் படிமை யானே."

என்னும் பதிற்றுப்பத்திலும்,

"தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே."

என்னுங் குறுந்தொகையிலும்,

---

1. செந்தமிழ், தொகுதி, கஅ, பகுதி, ௯.

"கல்தோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்."

என்னும் முல்லைப் பாட்டிலும் 'படிமை' 'படிவம்' என்னுஞ் சொற்கள் அந்தணரின் தவவொழுக்கத்தை உணர்த்துதல் முன்னரே எடுத்துக் காட்டினும். அச் சொற்கள் அங்ஙனம் அப் பொருள் உணர்த்தும்வழியெல்லாஞ் சைவசமயத் துறவிகளையே உணர்த்தக் காண்டுமன்றிச், சமண் துறவிகளை ஒரு சிறிதாயினும் உணர்த்தக் காண்கிலேம்.

மேலுஞ், சமண் சமயத்தினர் முழுமுதற் கடவுள் ஒன்று உண்டென்னும் நம்பிக்கையுடையரல்லர்; அந் நம்பிக்கை யில்லாமையின், முத்தீவேட்டு வழிபடும் நீரரும் அல்லர்; அஃதில்லாமையின், தீநிறத்ததாகிய காவியாடையும், தீயின் எச்சமாகிய தூய வெண்ணீறும் மேற்கொள்வாரும் அல்லர்; இறைவன் திருவடையாளமாகிய சடைமுடியுந், தண்ணீர்க் குடுவையும், முக்கோலும் உடையாரும் அல்லர்; இப் பெற்றியினரான சமண் முனிவர் 'ஆசீவகரும்,' 'நிகண்டரும்,' 'முண்டசாவகரும்' என முத்திறப் படுவ ரென்பதூஉம், இவருள் ஆசீவகராவார் ஆடையின்றி முற்றும் அம்மணமாயும், நிகண்டர் இடுப்பில் ஒருசிறு துண்டு மட்டும் உடுப்பவராயும், முண்டசாவகர் அரையில் ஒரு துண்டு உடுத்துத் தலையை மழித்துவிடுபவராயும் இருப்பரென்பதூஉம் அங்குத்தரநிகாயத்திற் குறிக்கப்பட்டிருக்கின்றன. இச் சமண்முனிவரும், இவரின் வேறான புத்த முனிவர்களும் கௌதம சாக்கியர் காலத்தில் இருந்தாற்போலவே, தலையிற் சடைமுடியுடையருங் கையில் முக்கோல் ஏந்தியவருமான பார்ப்பனத் துறவிகளும் அக் காலத்தில் வடநாட்டிலும் இருந்தனரென்பதூஉம் அவ் அங்குத்தரநிகாயத்திலேயே நுவலப்பட்டிருக்கின்றது.[1] எனவே, கௌதமசாக்கியர் இருந்த காலத்திலேயே அஃதாவது இற்றைக்கு இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்னரேயே வடநாட்டிலுஞ் சிவவடிவம் பூண்ட

1. See Prof. Rhys Davids' Buddhist India, p. 145. and Dialogues of the Buddha, vol. 1, pp. 220, 221.

பார்ப்பன முனிவர்கள் இருந்தமை பௌத்த சமய நூல்களினாலேயே புலனாகின்றதன்றோ? மற்றுத் தென்றமிழ் நாட்டிலோ அக்காலத்திற் பார்ப்பன முனிவரைத் தவிர, ஏனைச் சமண் பௌத்த முனிவர் இருந்திலர். ஆகவே, 'படிமை' என்னுஞ் சொற் றென்றமிழ் நாட்டிலிருந்த சைவ அந்தணரின் தவவொழுக்கத்தையுந் தவவடிவத்தையுஞ் சுட்டுதற்கே எழுந்ததன்றிச், சமண் முனிவரின் தவ வொழுக்கத்தை உணர்த்துதற் கெழுந்ததன் றென்பது கடைப்பிடிக்க. அதுவேயுமன்றி, வடநாட்டிலிருந்த சமண் முனிவரின் தவவொழுக்கத்தை உணர்த்துஞ் சொல்லாக அது சமண் சமய நூல்களிலாயினும் வழங்கப்பட்டுளதோ வென யாம் அந் நூல்களை ஆராய்ந்து பார்க்க, ஆண்டும் 'படிமா' என்னுஞ் சொல்லைக் கண்டிலேம். அச் சொல் சமண் முனிவரின் தவ வொழுக்கத்தையே குறிக்குமென நாட்டப்புக்கவராதல், அதற்கு ஒரு மேற்கோளாயினுஞ் சமண் நூல்களிலிருந் தெடுத்துக் காட்டினரோ வென்றால், அதுதானும் இல்லை. 'படிமா' என்பது சமண் சமயச் சொல்லே என்பதற்கு ஏதொரு மேற்கோளும் பழைய சமண் நூல்களிலிருந் தெடுத்துக் காட்டாது, இப்போது சில ஆண்டுகளுக்குமுன் ஓர் ஆங்கில மாதர் எழுதிய ஓர் ஆங்கில நூலை நம்பி அச்சொல் சமண் சமயத்தவர்க்கே யுரித்தாதல் வேண்டுமெனத் தந் துணிபுரைத்தலினும் பிழைபாடாவது பிறிதில்லை; இப் பிழைபாட்டுரையைக் கொண்டு ஆசிரியர் தொல்காப்பியனாரைச் சமண் முனிவரென் நாட்டப்புகுவதினும் பேதைமையாவதும் பிறிதில்லை. ஆராய்ச்சிமுறை இன்னதென் றறியாதார் தாமும் இன்னோரன்ன ஆராய்ச்சியிற் புகுதல் பெரிதும் ஏதமாமென்க.

இப்போது வழங்குஞ் சமண் நூல்களில் வடமொழி தென்மொழியில் இருப்பனவெல்லாம் கி. பி. ஆறும் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து இயற்றப்பட்டனவாகுமென அவைதம்மை நன்காராய்ந்த ஐரோப்பிய ஆசிரியர்கள் கூறாநிற்கின்றனர்.[1] இவ்வாறு பிற்பட்ட காலத்தில்

1. Dr. A. Barth's 'The Religions of India;' p. 140.

எழுதப்பட்ட சமண் நூல்களில் யாண்டோ அருகிப் 'படிமை' என்னுஞ் சொல் சமண் முனிவரின் தவவொழுக்கத்தை யுணர்த்துதற்கு வழங்கப்பட்டிருக்கலாம். அது கொண்டு அச்சொல் சமண் சமயத்தவர்க்கே உரித்தென்றல் ஆராய்ச்சியுணர்வில்லார் கூற்றும். கி. பி. ஆறும் நூற்றாண்டிலிருந் தெழுதப்பட்ட சமண் நூல்கட்கு ஐந்நூறாண்டு முற்பட்ட அருந்தமிழ் நூல்களினும் பாட்டுகளினு மெல்லாம் அச்சொல் அந்தணரின் சைவ தவவொழுக்கத்தையே உணர்த்தக் காண்டலால், அது சைவசமயத்தவர்க்கே உரித்தாவதன்றிச் சமண்மதத்தவர்க்கு உரித்தாதல் ஒருவாற்றானுஞ் செல்லாது. தமக்கு முன்னிருந்த சைவ அந்தணத் தாபதர்தந் தவவொழுக்கத்துக்கு வழங்கிவந்த அப் 'படிமை' யென்னுஞ் சொல்லையே பின்வந்த சமண்முனிவர் தமக்கும் உரியதாக ஒரோவிடத்துப் பயன்படுத்தின ராகற்பாலார். வடநாட்டிற் கௌதம சாக்கியர் காலத்திருந்த புத்த சமண் சமயத்தவருங்கூடத், தங் காலத்திற்கு முன்னிருந்த சைவ அந்தணரின் தவவொழுக்கத்தையே முதலாக வைத்து, அதன்படி தமக்குரிய ஒழுகலாறுகளை வரையறுத்தமைப்பா ராயினரென, இவைதம்மைப் பலபடியானும் நடுநின்று நன்காய்ந்த ஹெர்மன் ஜாகோபி என்னும் ஐரோப்பிய ஆசிரியர் நன்கு விளக்கிக்காட்டி யிருக்கின்றார்.[1] வடநாட்டிற் பண்டைக் காலத்திருந்த சைவ அந்தணத் தாபதர் சிவபிரான் திருவுருவ அடையாளமான காவியாடையே உடுத்துத் தலைமேற் சடைமுடியுடையரா யிருந்தனரென்பது, அவர் தமது 'ஜைனசூத்திர ஆங்கில மொழிபெயர்ப்பின்' முகவுரையில் எடுத்துக் காட்டிய போதாயன தருமசாத்திர மேற்கோள்களால் (உ, சு, கக, கரு-உக) நன்கு விளங்கும். சைவ அந்தண முனிவர் உடுத்துங் காவியாடையைப் பார்த்தே, பௌத்த பிட்சுக்கள் நிறத்தால் அதனை யொப்பதொரு துவராடை யுடுப்பராயினரென்பதூஉம், புத்த சமண்முனிவர் துவக்கத்தில் வடநாட்டின் ஒரு சிறு பகுதியில் இருந்

1. Introdution to Jaina Sutras by Hermann Jacobi, pp. xxiv-xxix.

தமைபோலாது சைவமுனிவரர் பரதநாடெங்கும் பண்டு தொட்டே பரவியிருந்தன ரென்பதூஉம் பிறவும் அவரால் நன்கெடுத்துக் காட்டப்பட்டன. உண்மையாராய்ச்சியிற் றேர்ந்த இவ் வைரோப்பிய ஆசிரியர் எடுத்துக் காட்டிய பண்டை வட்நூல் மேற்கோள்களையும், அவற்றை அடிப் படையாக்கொண்டு ஆராய்ந்து காட்டிய உண்மை முடிபு களையும் நடுநின்று நோக்கவல்லார்க்குப், புத்த சமண் முனிவர் தோன்றுதற்குப் பலநூற்றாண்டுகள் முற்றொட்டே சைவ அந்தண அருந்தவத்தோர் இப் பரதநாடெங்கும் பரவியிருந்தமையும், பின்வந்த புத்த சமண் துறவோர் தமக் குப் பலநூற்றாண்டுகள் முன்னிருந்த சைவ அந்தணரின் தவவொழுக்கத்தையே பெரும்பான்மையுந் தழுவி யொழுக லானமையுந் தெற்றெனப் புலனாகா நிற்கும். ஆகவே, தவவொழுக்கமும், அத் தவவொழுக்கத்தை யுணர்த்தும் 'படிமை,' 'படிவம்,' 'ப்ரதிமா' என்னுஞ் சொற்களுஞ், சைவ அந்தணரினின்று ஏனைப் புத்தசமண் சமயத்தார்க்கு வந்ததாகல் வேண்டுமேயன்றிப், பிற்காலத்தவரான புத்தர் சமணரிலிருந்து, இவர்க்குப் பல்லாயிரம் ஆண்டு முற்பட்ட சைவ முனிவரர்க்குச் சென்றதாகல் ஏலாது. ஆதலால், முற்காலத்தது இது, பிற்காலத்தது இது என்று பகுத் தாராயமாட்டாது, முன்னது பின்னதாகவும் பின்னது முன்னதாகவும் பிறழக்கொண்டு, படிமையொழுக்கஞ் சமணர்க்கே யுரியதெனக் கரைந்தாரது உரை பெரிய தொரு தலைதடுமாற்ற வுரையாய் முடிந்தமை கண்டு கொள்க.

அற்றேலஃதாக, தவவொழுக்கமும் அதற்கேற்ற தவ வடிவமும் அதனை யுணர்த்தும் 'படிமை' என்னுஞ் சொல்லும், புத்தர் சமணர் தோன்றுதற்குப் பல்லாயிர ஆண்டுகள் முன்னரே சைவ அந்தணர்பால் உளவாயது உண்மையாயின், 'அதனை நிறுவுதற்குரிய பழையநூன் மேற்கோள்கள் காட்டுக வெனின்; அவைதம்மைப் பண் டைத் தமிழ்நூல்களினின்றும் முன்னரே எடுத்துக்காட்டி னும். அப் பழந்தமிழ் நூல்கள் பாட்டுக்களில் யாண்டும்

புத்த சமண் சமயத்தவர் ஓரெட்டுணையுங் குறிக்கப்படாமையும், 'படிமை,' 'படிவம்' என்னுஞ் சொற்கள் சைவ அந்தணரின் தவவொழுக்கத்தையே குறித்தற்கு அவற்றுள் வழங்கப்படுதலும் ஆண்டே விளக்கிப் போந்தாம். ஆகவே, புத்தர் சமணர் தோன்றுதற்கு மூவாயிர ஆண்டு முற்பட்டதாகிய தொல்காப்பியச் சிறப்புப்பாயிரவுரையிற் போந்த 'படிமையோன்' என்னுஞ்சொற் சைவ அந்தண முனிவனாகிய ஆசிரியன் றொல்காப்பியன்றன் தவவொழுக்கத்தையுந் தவவடிவத்தையும் மட்டுமே சுட்டுதல் வேண்டுமன்றி, அவற்குப் பெருங்காலம் பிற்பட்டிருந்த புத்தர் சமணரின் தவவொழுக்கத்தையாதல் தவவடிவத்தையாதல் சுட்டுதல் ஒரு சிறிதும் இசையாதென் றுணர்ந்துகொள்க. தொல்காப்பியத்துள் யாண்டும் புத்தசமண சமயங்கள் ஒரு தினைத்தனையுங் குறிப்பிடப் படாமையும் நினைவிற் பதிக்கற்பாற்று.

இன்னுங், கௌதமசாக்கியரும் மகாவீரருந் தோன்றி முறையே புத்தசமண் சமயங்களைத் தோற்றுவித்தற்கு முன், சாக்கிய வகுப்பினர் சிவபிரானையே வணங்கி வந்தன ரென்பது, வடநாட்டிலுள்ள பழைய கல்வெட்டுகளின் ஆராய்ச்சியால் நன்கு புலனாகாநிற்கின்றது.[1] கௌதம சாக்கியர் பிறந்த ஞான்று, அவர் சிவபிரான் திருவருளைப் பெறுதற் பொருட்டுச் சிவபிரான் திருக்கோயிற்குப் பெற்றோரால் எடுத்துச் செல்லப்பட்டமை, பழைய புத்தசமயக் கல்வெட்டு ஒன்றிற் செதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது.[2] மிகச் சிறந்த இச் சான்றுகளை உற்றுராய வல்லார் எவர்க்கும், புத்த சமண்மதங்கள் தோன்றுதற்குப் பல்லாயிர ஆண்டுகள் முற்றொட்டே இப் பரதநா டெங்கணும் பரவியிருந்தது சைவசமயமேயா மென்பதூஉம், இங்கு முழுதும் உலவிய தாபதர் சைவசமய அந்தண முனிவரேயாவ ரென்பதூஉந் தெற்றென விளங்காநிற்கும்.

1. See Mr. H. Krishna Sastri's 'South-Indian Images of Gods and Goddesses,' p. 73.

2. See Epigraphia Indica, Vol. V, p. 3.

அற்றேல், 'ப்ரதிமா,' 'படிமை,' 'படிவம்' என்னுஞ் சொற்களுள் ஒன்றேனும், புத்தசமண் நூல்களுக்கு முற்பட்ட பழைய வடநூல்களுள் உண்டோ வெனின்; உண்டு. வடநூல்களுள் மிகப் பழையன இருக்கு, எசுர், சாமம் என்பவைகளேயாம். ஐயாயிர ஆண்டுகளுக்குமுன் தமிழர் ஆரியர் என்னும் இருவகுப்பினர்க்கும் ஆசிரியராயிருந்த முனிவர்களாற் பாடப்பட்டுச் சிதர்ந்துகிடந்த இவற்றின் பாட்டுகள், பாரதப்போர் முடிந்தபின் வியாசரால் ஒருங்கு தொகுக்கப்பட்டு, இருக்கு, எசுர், சாமம் என்னும் மூன்று வேதங்களாக வகுக்கப்பட்டன. இவ் வேதப்பாட்டுகள் வழங்கிய காலத்தில் வணங்கப்பட்டு வந்த இந்திரன், வருணன், உருத்திரன் முதலான தெய்வங்களுக்கு உருவங்கள் சமைத்து வைத்து, அவற்றிற்கு வழிபாடு ஆற்றி வந்தனர் என்பதும் அவைதம்மைக் கருத்தூன்றி ஆராயும்வழி இனிது புலனாகின்றது. ஆரியர் போர்மேற் சென்ற காலங்களில் இந்திரனது வடிவத்தை எடுத்துச் சென்றனரென்பது இருக்குவேதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.[1] சிவபிரான் திருவடையாளமான சிவலிங்க வடிவத்தைப் பண்டைத் தமிழ்மக்கள் வைத்து வழிபட்டமை இருக்குவேத ஏழாம் மண்டிலத்தின் இருபத்தோராம் பதிகத்திலும், பத்தாம் மண்டிலத்தின் தொண்ணூற்றொன்பதாம் பதிகத்திலும் விளக்கமாக வைத்து நுவலப்பட்டிருக்கின்றது. இவையேயன்றி, 'ப்ரதிமா' என்னுஞ் சொல்லே ஒரு தெய்வம்போற் செய்த வடிவத்தைக் குறிக்கும் மொழியாக எசுர்வேதத்தில் "நதஸ்ய ப்ரதிமா அஸ்தி" (௩௨, ௩) என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. இவ் வுண்மைகளைச் சிறிதாயினும் ஆராய்ந்து பார்க்கும் அறிவு மதுகையின்றி, 'ப்ரதிமா' என்னுஞ் சொல் சமண் நூல்களி லன்றிப், பழைய வேதநூல்களில் யாண்டுமில்லை யென்று துணிந்துரைத்தவர்தம் பேதைமைப் பெருக்கை என்னென்பேம்! இனியேனும் அச்சொல் பௌத்த சமண் நூல்கள் தோன்றுதற்கு மூவாயிர ஆண்டு முன்னிருந்த

1. The Cambridge History of Ancient India, Vol. 1. p. 106.

எசுர்வேதத்திலேயே உளதென்றறிந்து அவர் உண்மை தெளியக்கடவராக.

இனி, அவர், தொல்காப்பியரைச் சமணசமயத்தின ரென நாட்டுதற்கு மற்றுமொரு சான்று காட்டுவே மெனப் புகுந்து, உயிர்களை ஓரறிவுமுதல் ஐயறிவு ஈருக உள்ள ஐந்துவகைகளிற் பகுத்தடக்குதல் சமண்சமயக் கோட் பாடாகுமென்றுந், தொல்காப்பியனுர் இவ்வைவகை உயிர்ப் பாகுபாடுகளைத் தமது 'மரபியற்' சூத்திரங்களில் எடுத் தோதுதலின் அவர் சமண்சமயத்தவரேயாதல் வேண்டு மென்றுங் கூறினுர். இதுவும் ஒரு சிறிது ஆராயற்பாற்று.

சமண் மதத்தவர்கள் எவ்வகைப்பட்ட உயிரையும் எவ்வகை ஏதுப்பற்றியுங் கொல்லலாகாது என்னும் மிகச் சிறந்த கொல்லா அறத்தைக் கடைப்பிடித்து நின்றவர் கள் வடநாட்டின்கண் வந்து குடியேறிய ஆரியரும் அவர் வழிச் சார்ந்த பார்ப்பனரும் வேள்வி வேட்டலை ஓர் ஏதுவாக வைத்துக் கொண்டு, எண்ணிறந்த விலங்கினங் களைக் கொன்று அவற்றின் ஊனை நெய்யிற் பொரித்து உண்டுஞ், சோமப் பூண்டில் இறக்கிய கள்ளை நிரம்ப அருந்தியும வெறியாட்டயர்ந்து வந்தமையால், இயற்கையி லேயே புலாலுங் கள்ளும் மறுத்த சைவவேளாள அரசர் (க்ஷத்திரியர்) அவ் வாரியர்தந் தீயஒழுகலாற்றினை அரு வருத்து, அதனைத் தடைசெய்தற் பொருட்டாகவே சமண் புத்தக் கொள்கைகளைத் தோற்றுவித்து, அவற்றை எங்கும் பரவச்செய்தனர். சமண்மத ஆசிரியரான 'மகா வீரரும்,' புத்தசமய ஆசிரியரான 'கௌதம சாக்கியரும்' வடக்கே மகதநாட்டில் வைகிய க்ஷத்திரிய அல்லது தமிழ வேளாள அரசமரபிற் பிறந்தோரே யாவர். ஆரியர் வட நாட்டிற் புகுந்து ஆங்காங்குக் குடியேறியபோது, அங்கம், மகதம், காசீ, கோசலம், வச்சீ, மல்லை, சேதீ, வஞ்சம, குரு, பாஞ்சாலம், மச்சம், சூரசேனம், அச்சகம், அவந்தி, கந்தாரம், காம்போசம் முதலிய பதினுறு நாடுகளில் நாகரி கத்திற் சிறந்து விளங்கிய வேறு மரபினரான தமிழ

வேளாளரே அரசுபுரிந்தனர் என்பது அங்குத்தரநிகாயத்தில் (க, உகரு; ச, உ௫௨, உ௫௬, உ௬௦) செவ்வனே குறிக்கப்பட்டிருக்கின்றது. மகதநாட்டிலிருந்த தமிழர், முன்னரே யாம் விளக்கியெழுதிய பூருக்களைச் சேர்ந்தோராவர்.[1] இங்ஙனமாகச் சமண் கோட்பாட்டைப் பரவச் செய்த மகாவீரர் தமிழரச முனிவரேயாகையால், அவர்க்கும் அக்காலத்திருந்த ஏனை வேளாளர்க்கும் பொதுவாக உரிய கொல்லா அறத்தை அவர் வலியுறுத்திப் பரவச் செய்ததில் ஏதும் புதுமையில்லை. அஞ்ஞான்றிருந்த அத்தமிழ் முனிவர், தங் காலத்திற்குப் பல்லாயிர் ஆண்டு முன்னிருந்த ஆசிரியர் தொல்காப்பியனார் முதலான தமிழ்ச் சான்றோர் கண்டுரைத்த உயிர்ப்பாகுபாடுகளையே தாமுந் தழுவிக் கூறினரல்லது, மகாவீரர் முதலாகப் பின்வந்த சமண்முனிவர் வகுத்ததனைக் கண்டு தொல்காப்பியனார் அவைதம்மைக் கூறினரல்லர்.

அஃதெங்ஙனமெனிற் காட்டுதும்: எவ்விடத்திலுள்ள உயிரையுங் கொல்லலாகா தென்பதே சமணர் தங் கோட்பாடாகையால், அக் கோட்பாட்டிற்கு இசையவே உயிர்கள் உயிர்வாழும் இடங்களை அவர்கள் முதலில் ஆராய்ந்துரைப்பாராயினர். உயிர்கள் நிலத்திலுள்ளனவும், நீரிலுள்ளனவும், நெருப்பிலுள்ளனவுங், காற்றிலுள்ளனவும் என நால்வகைப்படுமென்று உரைத்து, ஆண்டாண்டுள்ள உயிர்களுக்கு நோயுஞ் சாக்காடும் உண்டாகாவண்ணம், அவற்றோடு இயைந்து காணப்படும் உயிரில் பொருள்களைத் தாம் பயன்படுத்திக்கொள்ளும் முறைகளை விளக்கிக் காட்டுதலே சமண்சமய ஆசிரியர் கருத்தாகும். இப்போதுள்ள சமண் நூல்களில் மிகப் பழையதாகிய ஆசாரங்க சூத்திரம், சுருதஸ்கந்தம், இரண்டு, மூன்று, நான்கு, ஏழாம் அத்தியயனங்களில், உயிர்கள் உலவுதற்கிடமான நிலன் நீர் நெருப்பு காற்று என்னும் இடவகையால் அவ்வுயிர்களை நால்வகைப்படுத்து, அவை தமக்கு இடர் நேரா வண்ணம் அங்கங்குள்ள ஏனைப் பொருள்களைப் பயன்

1. The Cambridge History of Ancient India, p. 309.

படுத்துமாறு விரித்துரைத்தல் காண்க; இதன் ஆரும் அத்தியயனத்தில், ஈரறிவு மூவறிவு நாலறிவு ஐயறிவு உடைய எல்லா உயிர்களுக்கும் இன்ப துன்பமும் அச்சமும் உளவாகலின், அவை தமக்கு எந்த ஏதுவைக் கொண்டும் எவ்வகை இடருஞ் செய்தலாகாதென்னும் அத்துணையே வற்புறுத்துரைக்கப்பட் டிருக்கின்றதல்லாமல், ஓரறிவுமுதல் ஐயறிவு ஈறுக வைத்து உயிர்களைப் பாகுபாடு செய்தல் ஆண்டுங் காணப்படவில்லை. ஆகவே, உயிர்களை இடவகையால் நால்வகைப்பட வகுத்துக்காட்டுதலே பண்டைச் சமண் ஆசிரியர்தங் கருத்தாதல் காண்டுமன்றி, அறிவுவகையாற் பகுத்துக்காட்டுதல் அவர்க்குக் கருத்தாதல் கண்டிலம். இடவகையாற் பகுத்தலே அவர்தங் கோட்பாட்டுக்குப் பயன்படுவதன்றி, அறிவு வகையாற் பகுத்தல் அதற்குச் சிறிதும் பயன்படுவதன்றும்; என்னை? ஈரறிவுடையவாயினும் அல்லது ஐயறிவுடையவாயினும் எல்லாவுயிர்களும் இன்பதுன்பமும் அச்சமும் உடையவாகையால், அறிவின் ஏற்றத்தாழ்வு கருதாது எல்லாவுயிர்களையும் பாதுகாத்தலே செயற்பாலதென்பதூஉம், உயிர்கள் ஓரிடத்து உள ஓரிடத்து இல என அறியாமையாற் கருதிவிடாது நிலன் நீர் நெருப்பு காற்று என்னும் நான்கிடங்களினும் அவை உளவாதலைக் கருத்தூன்றி யாராய்ந்து பார்த்தல் இன்றியமையாததென்பதூஉம் அவர்தங் கருத்தாகலினென்க. எனவே, உயிர்களை இடவகையால் ஆராய்தலே பண்டைச் சமணாசிரியர் கோட்பாடாகுமல்லது, அறிவுவகையால் ஆராய்தல் அவர்தங் கோட்பாடாகாமை பெறறும். பெறவே, உயிர்களை இடவகையாற் பகுத்து விரித்துக் காட்டிய பழைய ஆசாரங்க சூத்திரத்திற்கு மாறுக, அவைதம்மை இடவகையாலும் அறிவுவகையாலும் பகுத்து விரித்துரைத்த உத்தராத்தியயனநூல் (ந-சு) மிகவும் பிற்பட்ட காலத்தெழுந்த சமண்முனிவரால் தொல்காப்பியத்தைப் பார்த்துச் செய்யப்பட்ட தொன்றுக வேண்டுமாகலின், அஃது ஈண்டைக்கு மேற்கோளாகாதென மறுக்க. ஆசாரங்க சூத்திரத்திற்குச் சீலாங்க முனிவர் எழுதியவுரை கி. பி.

அஎகூ-இல் முடிக்கப்பட்ட தொன்றுகையால்,[1] ஆசாரங்க சூத்திரத்தின் காலங் கி. பி. ஐந்து அல்லது ஆறும் நூற்றுண்டிற்கு மேற்பட்டதாகாது. 'உத்தராத்தியயனம்' சமண் நூல்களில் மிகப் பிற்பட்டதாதலும், அதன் இறுதிக்கண் உயிர்களை இடவகையாலும் அறிவுவகையாலும் பாகுபாடு செய்து விரித்தோதும் முப்பத்தாறும் அத்தியயனம் இன்னும் பிற்பட்டகாலத்தே செய்து சேர்க்கப்பட்டதாதலும் மேற்குறிப்பிட்ட ஐரோப்பிய ஆசிரியரால் நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன.[2] பழையதாகிய 'ஆசாரங்க சூத்திரம்' முதற்கண் உயிர்களை இடவகையாற் பகுத்து விரித்தோதி அறிவுவகையாற் பகுத்தலை ஒரு சொற்றொடரளவில் மிகச் சுருக்கிக் கூறுநிற்க, 'உத்தராத்தியயனமோ' இடவகையான் மட்டுமேயன்றி அறிவுவகையாலும் உயிர்களைப் பகுத்து மிக விரித்தோதா நிற்கின்றது; இதனை உற்றுநோக்கவல்லார்க்கு, உத்தராத்தியயனத்தின் இவ் விறுதிப்பகுதி பெரிதும் பிற்பட்ட காலத்ததாதலும், அறிவுவகையால் உயிர்களைப் பகுத்தோதுமுறை பண்டைச் சமணுசிரியர்களா லன்றிப் பின்றைச் சமண் புலவரால் அவர்தம் பழைய கோட்பாட்டுக்கு முரணுகக் கைக்கொள்ளப்பட்டதாதலும் அங்கையங் கனிபோல் இனிது விளங்காநிற்கும். உயிர்களை அறிவுவகையாற் பகுத்தல் சமண் கோட்பாட்டிற்கு இசைந்து அதற்கு ஏதொரு பயனும் பயவாமையாலும், அவைதம்மை இடவகையாற் பகுத்தல் அதன் கோட்பாட்டொடு பெரிதும் ஒத்து அதற்குப் பயன்படுதலாலும், அதற்கிணங்கவே பழைய 'ஆசாரங்க சூத்திரமும்' உயிர்களை இடவகையாற் பகுத்தே விரித்துரைத்தலாலும், பண்டைக்காலத்துச் சமண் நூலாசிரியர்க்கு உயிர்களை அறிவுவகையாற் பகுத்தல் கோட்பாடன்றென்பது துணிந்துகொள்ளப்படும். ஆகவே, 'ஆசாரங்க சூத்திரத்'தைப்போல், உயிர்களை ஒரு சிறிதாயினும் இடவகையாற்

1. See H. Jacobi's Introduction to Jaina Sutras Vol. I, p. II.
2. Do Do Vol. 2. pp. xxxviii-xxxix

பகுத்தோதாத ஆசிரியர் தொல்காப்பியனார் சமண் சமயத் தவராதல் யாண்டையதென மறுக்க. ஆசிரியர் தொல் காப்பியனார் சொற்பொருளாராய்ச்சியில் ஆழச்சென்று, அச் சொற்பொரு ளிலக்கணப் பரப்பெல்லாம் நுணுகி யறிந் தெடுத்து விளக்கி முடிக்கின்றுழி, உலகின்கட் காணப் படும் உயிர்த்தொகுதிகளெல்லாந் தத்தமக்கு இயல்பாக அமைந்த ஒன்றுமுதல் ஆறாகுன அறிவுகள் விளங்குதற் கேற்ற உடம்புகளின் வைகி உயிர்வாழுமாற்றைத் தமது நுண்மாண் நுழைபுலத்தாற் கண்டறிந்து, அறிவான் மிக்க சான்றோரெல்லாங் கண்டு வியந்து பாராட்டும்படி அவற்றை அறுவகைப்படுத்தோதித் தமதொப்புயர் வில்லா இலக்கணக் களஞ்சியத்தைக் கட்டிமுடித்தார். இங்ஙனம் உயிர்களை அறிவுவகையால் அறுவகைப்படுத்து விளக்கல் இலக்கண ஆராய்ச்சியின்பாற் படுவதல்லது, ஒருசமயக் கோட்பாட்டின்பாற் படுவதன்றாம். உயிர்களை இடவகையாற் பகுத்தலோ சமண் கொள்கைக்குப் பெரி தும் பயன்படுவதாகும். இவ்வாறு ஒன்றினொன்றியை யாத இருவேறு பாகுபாடுகளின் இயல்பும் பயனும் அறிந்து பாராமல், தொல்காப்பியனாரைச் சமண்சமயத் தின்பாற் படுக்கப் புகுந்தார்தம் அறியாமையின் வலிவை என்னென்பேம்! அதுகிடக்க.

இனித், தொல்காப்பியனார் சமண்சமயத்தின ரல்ல ரென்பதற்குப் பின்னுஞ் சில சான்றுகள் காட்டுதும். பழைய சமண் நூல்களினெல்லாம் நிலன் நீர் தீ வளி என்னும் நாற்பெரும் பொருள்களே சொல்லப்பட்டன வல்லாமல், அந் நான்கின் வேறான 'விசும்பு' (ஆகாயம்) ஒன்று உளதென்பது கூறப்படவில்லை. உத்தராத்தி யயனத்திற் கூறப்படும் இடைவெளி ஐம்பெரும் பொருள் களிற் சேர்ந்ததன்று; அஃது ஆண்டு 'ஆகாச' மெனக் கூறப்படாமல் 'நபஸ்' எனக் கூறப்படுதலே அதற்குச் சான்றாம். மற்று, ஆசிரியர் தொல்காப்பியனாரோ,

"நிலந் தீ நீர் வளி விசும்போடு ஐந்துங்
கலந்த மயக்கம் உலக மாதலின்." (மரபியல், அக)

என்பதனால் 'விசும்பு' என ஐந்தாவதொருபொருள் உள தென அருளிச்செய்கின்றார். சமண்நூலார் மக்களையுந் தேவர் நரகர்களையும் ஐயறிவுடைய உயிர்வகைகளில் அடக்கி,

"வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
ஆதி செவியறிவோடு ஐயறி வுயிரே."
(நன்னூல், உரியியல், அ)

எனக் கூறுநிற்பர்; உத்தராத்தியயனநூலும் இங்ஙனமே கூறுநிற்கும். இவ்வைந்தறிவின் வேறாக ஆறாவது மன வறிவு ஒன்று உண்டென்பது பழைய சமண்நூல்களிற் காணப்படவில்லை; பிற்காலத்து நூல்கள் மேற்கோள்கள் ஆகா. மற்று, ஆசிரியர் தொல்காப்பியனாரோ, மக்களினுங் கீழ்ப்பட்ட மாவும் மாக்களுமே ஐயறிவினவா மென்பதும், மக்களோ ஆறறிவினராவ ரென்பதும் போதர,

"மாவு மாக்களும் ஐயறி வினவே." (மரபியல், ௩௨)

எனவும்,

"மக்க டாமே ஆறறி வுயிரே." (மரபியல், ௩௩)

எனவுந் தெற்றென மொழிகின்றார். மேலும், புத்தசமண் ஆசிரியர் தாம் இயற்றும் நூல்களின் முகப்பில் புத்தனை யும் அருகனையும் வணங்காதிரார். எல்லாச் சமயத்தவரும் எடுத்துப்பயிலும் இலக்கணம் நிகண்டு முதலான பொது நூல்களை ஆக்கும் வழியும் புத்தர் சமணர் அந் நூல்களின் முதலிற் புத்தக்கடவுள அருகக்கடவுளுக்கு வாழ்த்து உரையாதிரார். இதற்கு 'வீரசோழியம்,' 'யாப்பருங்கலம்,' 'யாப்பருங்கலக்காரிகை,' 'நன்னூல்,' 'சூடாமணிநிகண்டு' முதலிய நூல்களின் கடவுள் வாழ்த்துச் செய்யுட்களே சான்றாம். மற்றுத், தொல்காப்பியனாரோ தமது நூன் முகத்தில் அங்ஙனம் புத்தனையாதல் அருகனையாதல் வணங்கக் காணாமையானும், அவர் அருளிச்செய்த பெரு நூலாகிய 'தொல்காப்பியத்'துள் ஓரிடத்தாயினும், புத்தக் கடவுள் அருகக் கடவுள் அவர் வகுத்த பௌத்த சமண்

மதங்கள் முதலாயினவற்றைப் பற்றிய ஒருசிறு குறிப்புத் தானுங் காணப்படாமையானும், அவ் வாசிரியர் அதன் கட் கூறுங் கொள்கைக் குறிப்புகளெல்லாம் பண்டைக் காலத்தில் இப் பரதநா டெங்கணும் பரவியிருந்த தமிழ்ச் சைவ அந்தண முனிவரின் ஒழுகலாறுகளையும் அவர் தமக்குரிய சைவக் கோட்பாடுகளையுமே தழீஇ நிற்றலா னும் அவ்வாசிரியர் பௌத்த சமண்மதங்கள் தோன்று தற்குப் பல்லாயிர ஆண்டு முற்பட்டிருந்தவராதல் ஒரு தலையேயாம். என்றித்துணையும் ஆராய்ந்து காட்டிய வாற்றாற் 'படிமை' என்னுஞ் சொல்லாற் குறிக்கப்பட்ட தவவொழுக்கம் பண்டைத் தமிழ்ச் சைவ அந்தணரின் தாபதவொழுக்கத்தையே குறிக்குமென்பதூஉம், அதற்கு முதலான 'ப்ரதிமா' என்னுஞ்சொற் பழைய எசுர்வேதத் தினகண்ணேயே காணப்படுதலின் அஃதறியாது அதனைச் சமண் மதத்தவர்க்கே உரிய சொல்லாக வரைந்துவைத்து அவ்வாற்றால் தொல்காப்பியனாரைச் சமண் சமயத்தின் பாற் படுக்கலாயினாருரை நுணுகி விரிந்த ஆராய்ச்சியுணர் வில்லாதார்தம் போலியுரையா மென்பதூஉம், தொல் காப்பியனார் ஒன்று முதல் ஆறறிவு ஈறாக வைத்து உயிர் களை ஆறு தொகுதியில் அடக்கிய முறைக்கும், சமணர் நிலன் நீர் நெருப்பு காற்று என்னும் நான்கிடவகையில் வைத்து உயிர்களைப் பகுத்த முறைக்கும் வேற்றுமை சாலப் பெரிதாகலின் அவ் வியல்புகளெல்லாம் பழைய் சமண்நூல் மேற்கோள்கள் கொண்டு முற்ற ஆராய்ந்து பாராது நுனிப்புல் மேயும் யாடுபோல் தாம் அறிந்த சிறிதையே பெரிதாக மயங்கி அம் மயக்கவுணர்ச்சியால் தொல்காப்பியனாரைச் சமணரென்றாருரை பொருந்தா தென்பதூஉம், அதுகொண்டு அவர் கி. மு. ரு-ஆம் நூற் றாண்டிலிருந்தாரெனல் போலியுரையா மென்பதூஉம் நன்கு விளக்கப்பட்டன.

௨௩. தொல்காப்பிய காலத் தொடர்ச்சி

இனி, ஆசிரியர் தொல்காப்பியனாரைக் கிறித்து பிறத்தற்குமுன் மூந்நூறும் ஆண்டிலிருந்த பாணினி முனிவர் காலத்திற்கும் பின்னே வைத்தல் வேண்டுமென வரைந்த பார்ப்பனருரை ஆராயற்பாற்று. யாம் 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்' என்ற நூலில் ஆசிரியர் தொல்காப்பியனார் இற்றைக்கு நாலாயிரத்து மூந்நூறுண்டுகட்கு முன் இருந்தாரென்று பல ஏதுக்கள்கொண்டு நாட்டிய காலத்தைத், தாமும் பல் தக்கசான்றுகள் காட்டி மறுமல், யாம் கூறிய காலக்கணக்கு அளவுக்கு மிஞ்சியதெனவும், ஆகவே அதனை மறுத்தல்வேண்டா வெனவும் அப் பார்ப்பனர் மொழிந்தனர். தமிழர் அல்லாத ஆரியர், எகுபதியர், சாலடியர், பாபிலோனியர் முதலியோரெல்லாம் ஐயாயிரம் பதினாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நாகரிகத்திற சிறந்து விளங்கினா ரென்று கூறுவதெல்லாம் அளவுக்கு மிஞ்சியதாகாது! ஆனால் தமிழர் நாலாயிர ஆண்டுகட்கு முன்னரே இலக்கண இலக்கியங்களுடையராய் நாகரிகத்திற சிறந்து விளங்கினாரென்றுரைப்பது மட்டுந்தான் இப் பார்ப்பனருக்கு அளவுக்கு மிஞ்சியதாய்த் தோன்றிவிட்டது! இவர் ஏதொரு சான்றுங் காட்டாது, உண்மைச் சான்றுடன் எழுதிய எமதுரையினைத் தாம் கருதுதற்குரித்தன்றென விட்டனரேனும், அறிவான் மிக்கோர் எமதுரையின் மெய்ம்மையும் அவருரையின் பொய்ம்மையும் எளிதிற் றேர்ந்து எமதுரையினைக் கைக்கொள்வ ரென்க. அது கிடக்க.

முதலில் இவர் தொல்காப்பியம் இடைச்சங்க நூலென்னும் ஒரு பொருந்தாவுரையைத் தழுவி, அவ் விடைச்சங்கங் கிறித்து ஆண்டுக்கு முன்னும், கடைச்சங்கம் அவ்வாண்டின் துவக்க காலத்திலும் இருந்தனவெனக் கரைந்தார். 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்பான் குமரிநாடு கடல்வாய்ப்புகுவதன்முன் அஃதாவது இற்றைக்கு ருంయం-ஆண்டுகட்குமுன் தலைச்சங்க காலத்தில் இருந்தோனவன் என்பதை மேலே எ௦௧-ஆம் பக்கத்தில்

விளக்கிஞம். அவன்மேற் பாடப்பட்ட செய்யுள் ஒன்றில் 'ஞமன்' என ஞகரத்தை முதலாக உடைய சொல் (புறம், சூ) ஒன்று வரக் காண்கின்றேம். தொல்காப்பியஞர் இப் பாண்டிய அரசன் காலத்திலேனும், அல்லது அவற்குப் பின்னேனும் இருந்தனராயின், தாம் இயற்றிய இலக்கண நூலில் ஞகரத்தை முதலாகவுடைய சொல்லையுந் தழுவி யிருப்பர். ஆனல், அவர் தங்காலத்தில் ஞகரத்தை முதலாகவுடைய சொல் தமிழில் வழங்காமையின், அதனை விலக்கி "ஆ, எ, ஒ எனும் மூவுயிர் ஞகாரத்துரிய" (எழுத்து, சூச) என்று சூத்திரஞ் செய்வாராயினர். இவ் வொரு பெருஞ்சான்று கொண்டே தொல்காப்பியஞர் பாண்டியன் முதுகுடுமியின் காலத்திற்கும் அஃதாவது இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்கும் முன்னரே இருந்தா ரென்பது நன்கு துணியப்படும். இன்னும், கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் அஃதாவது இற்றைக்கு இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குமுன் தொல்காப்பியஞர் இருந் தனராயிற், சிறிதேறக்குறைய அக்காலத்தில் இயற்றப் பட்ட 'பரிபாடற்' செய்யுட்களிற் காணப்படுஞ் 'சகடம்,' 'சடை,' 'சண்பகம்,' 'சமம்,' 'சமழ்ப்பு,' 'சமப்பின்' முத லான சகர முதற் றமிழ் மொழிகளையும், 'ஞமன்' என்னும் ஞகரமுதற் றமிழ் மொழியினையுந் தழுவியிருப்பர்; ஆனல், அவர்தங் காலத்தில் அச் சொற்கள் வழங்காமையின் ஞகர முதன்மொழி தமிழில் வரா என்று சூத்திரஞ் செய்தாற் போலவே,

> "சகரக் கிளவியும் அவற்ரோ ரற்றே
> அ ஐ ஔ வெனும் மூன்றலங்கடையே." (எழுத்து, சூஉ)

எனச் சகர முதன்மொழிகளுந் தமிழில் வரா எனச் சூத் திரஞ்செய்திட்டார். ஆகவே, இச் சொற்கள் தமிழில் வழங்கிய கி. மு. மூன்ரும் நூற்ருண்டிற்கும், ஞகர முதன் மொழி வழங்கிய கி. மு. முப்பதாம் நூற்ருண்டிற்கும் முன்னே தொல்காப்பியஞர் இருந்தமை கன்மேற் கட்டிய அரண்போல் நாட்டப்படுமென்க. எனவே, தொல்காப்பிய

ஞர் தலைச்சங்க காலத்தவ ரல்லால், இடைச்சங்க காலத் தவரல்லரென ஓர்ந்துகொள்க.

இனி, அவர், தொல்காப்பியச் சிறப்புப் பாயிரச் செய் யுளிற் போந்த "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்பதிலுள்ள 'ஐந்திரம்' என்பதை ஆராயப்புகுந்து, அது வடமொழியிலுள்ள வியாகரணமா மென்றும், அதனை யாக்கிய இந்திரனும், அட்டாத்தியாயியை ஆக்கிய பாணினியும் ஒரே காலத்தவராதல் வேண்டுமென்றும், பாணினி கி. மு. மூன்ரும் நூற்ருண்டிலிருந்தவராகலான் ஐந்திரம் உணர்ந்த தொல்காப்பியர் கி. மு. மூன்ரும் நூற் ருண்டிற்கும் பிற்பட்டவராதல் வேண்டுமென்றுங் கூறுவ துடன், பனம்பாரனர் இயற்றிய சிறப்புப்பாயிரச் செய்யுள் பிற்காலத்தேசெய்து தொல்காப்பியத்தில் நுழைக்கப்பட்ட தாயிருக்கலாமென்றும் நுவல்கின்ருர். இவ்வாறுரைக்கும் உரைகளின் இடையே ஒன்றினுந் துணிவு பிறவாமலுந் தக்க சான்றுகள் காட்டாமலும் முன்னொடுபின் முரணு மாறு இவர் செய்யுங் குழப்பங்கள் பல.[1]

வடமொழி இலக்கண நூலாசிரியரில் இந்திரனே முதலாசிரியனுவனென்பது தைத்திரீய சம்ஹிதையிற் (ஏ, ச, ஏ) சொல்லப்பட்டிருக்கின்றது. 'தைத்திரீய சம் ஹிதை' கிருஷ்ணயஜுர் வேதத்தைச் சேர்ந்ததாகையால், அஃது இற்றைக்கு நாலாயிரத்து ஐந்நூருண்டுகளுக்கு முற்பட்டதென்பதும் மேற்காட்டியவாற்ருல் தானே போதரும். நாகோஜிபட்டரது 'பரிபாஷேந்து சேகரத்' திற்கு உரை யெழுதிய வைத்தியநாதரும் "பழைய வையா கரணிகளாவார் இந்திரன் முதலாயினுர்"[2] என்று அவ் வுரைமுகத்திற் கூறினுர். இந்திரனுக்குப் பின்னும் பாணி னிக்கு முன்னும் ஒருவர்பின் ஞெருவராய் வந்த வடமொழி இலக்கண ஆசிரியர் அறுபத்துநால்வ ரென்பது பெறப்

1. See pages 154-160, 'Dravidian India' by Mr. T. R. Sesha Iyengar, M. A.

2. Dr. T. Goldstucker's Panini, p. 58; Panini Office Publication.

படுதலால்,[1] ஓர் ஆசிரியர்க்கு முப்பதாண்டு விழுக்காடு வைத்துக் கணக்குச்செய்யவே அறுபத்து நால்வர்க்கும் ஓராயிரத்துத் தொளாயிரத் திருபஃது யாண்டுகள் ஆகின்றன. இனிப் பாணினி முனிவர் இருந்த காலம் கி. மு. எ00-என்று முடிவு செய்யப்பட்டிருத்தலால், வடமொழி முதல்இலக்கண நூலாசிரியன் இந்திரன் இருந்தது இற்றைக்கு நாலாயிரத்தைந்நூறியாண்டுகளுக்கு முன்னென்பதும் முடிக்கப்படும். ஆரியவேத காலத்தையுங், குமரிநாடு கடல்கொண்ட காலத்தையும், பாரதப்போர் நிகழ்ந்த காலத்தையுந், தலைச்சங்க காலத்தையுந், தொல்காப்பியனார் காலத்தையும் மேலே பல முகத்தால் ஆராய்ந்து காட்டிய காலக்கணக்கோடு, ஆரிய இலக்கண முதலாசிரியன் இந்திரன் காலமும் ஈண்டுக் காட்டியவாறு கணக்குச் செய்யின் முழுதொத்து நிற்கக் காண்டலால், இவ் வுண்மை முடிபுக்கு மாறாக, இந்திரனும் அவற்கு இரண்டாயிரமாண்டு பிற்பட்ட பாணினி முனிவரும் ஒரே காலத்தினரென்றுரைரை பெரியதொரு பிழைபாட்டுரையாம் என்க.

அற்றன்று, இந்திரனோ பாணினிகாலத் திருந்தவன் அல்லன்; இந்திரன் ஆக்கிய ஐந்திரத்தின்வழிக் கி. பி. முதல் நூற்றாண்டிற் செய்யப்பட்ட 'காதந்தரமும்',[2] கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்ட 'ஜைநேந்திரமும்'[3] என்னும் நூல்களே, பனம்பாரனாரது சிறப்புப் பாயிரவுரையில் 'ஐந்திரம்' என அவற்றின் முதல் நூற் பெயராற் கூறப்பட்டன வென்று கொள்ளாமோ வெனிற், கொள்ளாம்; இப் பரதநாடெங்கணும் உள்ள ஆன்றோராற் பெரிது பாராட்டிப் பயிலப்பட்டு வந்த பழைய விழுமிய இலக்கண நூலாகிய பாணினீயத்தைப் பயிலாது, அருகி மிகச் சிலராற் பயிலப்பட்டு வந்த

1. Dr. A. A. Macdonell's 'A History of Sanscrit Literature,' p. 430.

2. Dr. S. K. Belvalkar's Systems of Sanscrit Grammar, p. 83.

3. Do Do Do p. 64.

'ஜைநேந்திரம்' முதலிய பின்னூல்களைத் தொல்காப்பிய னார் கற்று நிரம்பினாரென்றல் ஒவ்வாமையானும், தொல் காப்பியனார் பாணினீயத்திற்குப் பிற்பட்டவராயின் ஒரு முதனிலையிற் பிறந்த பல சொற்களை ஆராய்ந்து அவ் வொரு முதனிலையிற் கொணர்ந்தடக்கும் பாணினீய முறை யின் நுட்பமும் பயனும் உணர்ந்து தாமுந் தமிழ்ச்சொற் களை அம் முறையில் ஆராய்ந்தடக்குவரே யன்றி "மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" (தொல்காப்பியம், சொல், ங௲௬) எனக் கூறாராகலானும், ஐந்திரத்தின் வழி வந்த 'காதந்தரம்,' 'ஜைநேந்திரம்' முதலிய நூல்கள் ஒரு காலத்தனவன்றி வெவ்வேறு காலத்தனவாகலின் அவை தம்மையெல்லாந் தொல்காப்பியனார் ஒருங்கு கற்றற்குக் கி. பி. ஆறாம் நூற்றாண்டில் இருந்தாலல்லது அவர்க்கு அஃது இயலாமையானும், அவ் வழிநூல்கள் பலவற்றை யுங் கல்லாத ஒருவரை "ஐந்திரம் நிறைந்த" என்றல் பொருந்தாமையானும், 'ஐந்திரம்' என்னும் முதல்நூலை மட்டும் பயின்றார் ஒருவரையோ அவ்வாறு "ஐந்திரம் நிறைந்த" என்றுரைத்தல் ஏற்புடைத்தாமாகலானும், திருநாவுக்கரசு நாயனா ரிருந்த கி. பி. ஆறாம் நூற்றாண்டி லிருந்து தொல்காப்பியனார் நூல் செய்தனராயின் அக் காலத்திற் பெரிதும் பரவிவழங்கிய 'கட்டளைக்கலித்துறை,' 'பல்வகை விருத்தப் பாக்கள்' முதலியவற்றிற்கும் ஏனைச் சொற்கள் சொற்றொடர்கட்கும் இலக்கணங்கூறல் இன்றி யமையாததாகவும் அவற்றுள் ஒருசிறிதாயினும் அவர் உரையாமையானும், பௌத்தம் சமணம் முதலான மதக் குறிப்புகளாதல் அம் மதத் தெய்வங்களாதல் அவரால் ஓர் எட்டுணையுஞ் சுட்டப்படாமையானுந், தொல்காப்பிய னார் நுவன்ற இலக்கணங்கள் அத்துணையும் மிகப் பழைய அஃதாவது ஐயாயிர ஆண்டுகட்கு முற்பட்ட செந்தமிழ்ச் சொற்பொருள் வழக்குகளையே குறிப்பனவா யிருத்தலா னுந், தொல்காப்பியனார் பயின்ற 'ஐந்திரம்' என்பது ஆரியத்தில் முதல் இலக்கண ஆசிரியனாகிய இந்திரன் செய்த நூலேயாமெனா றுகோடலே தொல்காப்பியனா ரிருந்த மிகப் பழைய காலத்திற்கு இசைவதொன்றா

மாகலானும், பனம்பாரனுர் மொழிந்த 'ஐந்திரம்' இந்திரன் ஆக்கிய முதல் நூலேயாகுமன்றி அதற்குப் பன்னெடுங் காலம் பின்னெழுந்த 'காதந்தரம்' முதலியனவாகாவென்று கடைப்பிடித் துணர்ந்துகொள்க.

இனி, ஆங்கில ஆசிரியர் சிலரது கோட்பாட்டைத் தழீஇப் பாணினி முனிவர் கி. மு. மூன்றும் நூற்றுண்டில் இருந்தாரென அவர் மொழிந்ததூஉங் கொள்ளற்பாலதன்று. ஐரோப்பிய ஆசிரியருள்ளும், நம் பரதநாட்டுக் கற்றுருள்ளும் வடமொழிநூற் காலஅளவைகளைக் கணக்கிட்டார் தொகை இருதிறப்பட்டு நிற்கின்றது. அவருள் ஒருசாரார் மிகப் பழைய இருக்குவேதப் பாட்டுகளுக்கே கி. மு. ௧௫00-க்குமேற் பழமை சொல்ல ஒருப்படுகின்றிலர், மற்றொரு சாரார் அவை தமக்குக் கி. மு. ௪000-க்கு மேற் பழமை சொல்வர்.[1] இப்போது காளிகட்டத்தின்கண் ஓர் அறிஞர் இருக்குவேதப் பதிகங்கள் பல இற்றைக்கு முப்பதினுயிர ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்டன வாகுமென்று அரிய பல சான்றுகள் கொண்டு விளக்கிவருகின்ருர்.[2] இங்ஙனமே மாபாரதப்போர் நிகழ்ந்த காலமும், பாணினிமுனிவர் காலமும் இருதிறப்படுத் துரைக்கப்படுகின்றன. இவைதம் பழமைகளைக் குறைத்துக் கூறுவார் தங் காலக்கணக்குப் பழைய தமிழ்நூலாராய்ச்சிக்கும், ஏனை எகுபதியர், சாலடியர், எபிரேயர் முதலான மக்களின் நாகரிகப் பழமைக்கும் இசைந்து வாராமையின் அஃது உண்மையுடையதாகாது. இருக்குவேத முதலியவற்றின் மிகப் பழைய காலத்தை உண்மையாராய்ச்சியாற் கண்டுரைப்பார்தங் காலக்கணக்கே, பழந் தமிழ்மக்களின் பண்டை நாகரிக வரலாற்றோடு ஒத்துநிற்கக் காண்டலின் அதுவே உண்மையென்று கொள்ளற்பாற்று. 'என்

1. Dr. Hermann Jacobi in Indian Antiquary, Vol. XXIII, pp. 154 sq., Mr. B. G. Tilak in 'The Arctic Home in the Vedas.' and Dr. Bloomfield.

2. Dr. Abinas Chandra Das, M.A., Ph.D., in his 'Rig Vedic India'.

பகைவற்கு இரண்டு கண்கள் கெடுவதாயின், எனக்கு ஒரு கண் கெடினுங் கெடுக' என்னும் அழுக்காறுடையான் போல், தமிழ்நூல்களின் பழமையைக் குறைத்துவிடு தற்கு உதவுமாயின் வடநூல்களின் பழமையுங் குறையி னுங் குறைகவென்று பார்ப்பனர் சிலர் அழுக்காற்றுற் கருதுகின்றனர். இதற்குத், தொல்காப்பியனுரைக் கி. மு. இரண்டாம் நூற்ருண்டிற் படுப்பிக்கவேண்டிய பார்ப்பனர், கி. மு. முப்பதாம் நூற்ருண்டிற்கு முன்னிருந்த ஐந்திர ஆசிரியன் இந்திரனையுங், கி. மு. ஏழாம் நூற்ருண்டிலிருந்த பாணினி முனிவரையுங் கி. மு. மூன்ரும் நூற்ருண்டிற் படுப்பித்ததே சான்ரும். பாணினிமுனிவர் காலத்தைப் பற்றித் தமக்குமுன் ஆராய்ந்தார் முடிபுகளையெல்லாந் திரும்பவும் நுணுகி யாராய்ந்து, அவரது காலங் கி. மு. ஏழாம் நூற்ருண்டிற்குப் பிற்பட்டதாதல் ஒருவாற்ருனும் இசையாதென்று கிருஷ்ணபேல்வால்கர் என்னும் அறிஞர் 'சமஸ்கிருத வியாகரணவகைகள்'[1] என்னுந் தமது நூலில் நன்கு விளக்கியிருத்தல் காண்க.

இன்னும் அப் பார்ப்பனர், பனம்பாரனுர் உரைத்த பாயிரவுரை தமது கோட்பாட்டிற்கு இடர்விளைத்து அதனைப் பாழ்செய்தல் கண்டு, அது பிற்காலத்தெழுதித் தொல்காப்பியத்துள் நுழைக்கப்பட்டதா யிருக்கலா மென்று மெல்லக் கரைந்தார். இப்போதுள்ள உரை களில் மிகப் பழையதாகிய நக்கீரனுர் தம் 'இறையனுரகப் பொருளுரை' முகத்திலேயே "வடவேங்கடந் தென் குமரியாயிடை" என்பது தொல்காப்பியத்தில் உளதாகக் குறிக்கப்பட்டிருத்தலானும், அவர்க்குப் பின்வந்த இளம் பூரணர், பேராசிரியர், நச்சினுர்க்கினியர் முதலான எல்லா உரைகாரரும் அதனைத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரச் செய்யுளென்றே மொழிதலானும், அப் பாயிரச்செய்யுள்

1. 'Systems of Sanscrit Grammar' by Mr. Krishna Belvalkar, M.A., Ph.D., p. 18. Dr. Goldstucker, Prof. Bhandrakar and Dr. Vincent Smith long ago assigned 7th century B. C. to Panini.

இயற்றினர் தொல்காப்பியனர் என்று களவியலுரையும் தொல்காப்பியனரோடு ஒரு சாலை மாணக்கராய பனம்பாரனர் என்று ஏனையுரைகளுங் கூறுதல்கொண்டு அப்பாயிரச்செய்யுள் இயற்றினர் பெயர் ஐயுறவுக்கு இடனுயிருப்பினும் எல்லா உரைகாரரும் அதனைத் தொல்காப்பியத்தில் உள்ளதெனக் கிளத்தலின் ஆண்டு அதன்கண் ஐயுறுதற்கு இடன் இன்மையானும், அது பிற்காலத்தெழுதி நுழைக்கப்பட்டதென மெல்லக் கிளந்தார் உரை பொய்யுரையேயாமென விடுக்க.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனர் காலத்தைக் கி. மு. இரண்டாம் நூற்றுண்டிற் படுப்பித்த பார்ப்பனருரையாலுந் தொல்காப்பியம் இரண்டாயிர ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையுடைத் தென்பது போதரலால், அவ்வளவு பழமைகூட அதற்குச் சொல்லுதற்கு மனம் பொருத மற்றெரு பார்ப்பனர், தொல்காப்பியனர் அறிந்த 'ஐந்திரம்' என்பது 'ஜைநேந்திரமே' என நாட்டுதற்குப் புகுந்து, சிலப்பதிகாரத்தில் அதற்குச் சான்றுகள் தேடிக் காட்டுவாராய்ப்,

> "புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
> விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்."

எனவும்,

> "கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
> மெய்ப்பாட் டியற்கை விளங்கக் காணய்."

எனவும் போந்த 'சிலப்பதிகார' அடிகளிற் குறிக்கப்பட்ட இந்திரன் நூல் 'ஜைநேந்திரமே' எனப் புகன்றூர்.

மேற்காட்டிய அடிகள் சிலப்பதிகாரத்தின் 'காடு காண்காதை'யில் இருக்கின்றன. மதுரைக்குச் செல்லும் வழிகேட்ட கோவலனுக்கு, அவனை எதிர்ப்பட்ட ஒரு மறையோன் அவ்வழியின் அடையாளங்களைச் சொல்லிக் கொண்டு போம்பொழுது, அழகர்மலையின் பக்கத்தே மூன்று பொய்கைகள் உள, அவற்றுட் "'புண்ணிய

சரவணம்' என்னும் பொய்கையில் நீராடுவிராயின் வான வர்க்கு அரசனுன இந்திரன் இயற்றிய சிறந்த நூலினுட் பொருளை உணரப்பெறுவீர்'' என்றுகூறக், கோவல னுடன் இருந்த கௌந்தியடிகள் அச் சொற்கேட்டு "ஆயுட் கற்பத்தினையுடைய அவ்விந்திரன் இயற்றிய நூலின் மெய்ப்பொருளை அருகன் அருளிச்செய்த பாட்டியலில் விளங்க அறிவாயாக'' என அறிவுறுத்தின ரென்பதே மேலையடிகளின் பொருளாகும்; விண்ணவர் கோமானுகிய இந்திரன் இயற்றிய நூலென்பது 'ஐந்திரவியாகரணமே' யென இவ் வடிகளுக்கு உரையெழுதிய அரும்பதவுரைகார ரும் அடியார்க்கு நல்லாரும் மொழிந்தனர்; இவ்வுரைகளி லன்றிச், சிலப்பதிகார நூலில் எங்கும் 'ஐந்திரம்' என்னும் பெயர் காணப்படவில்லை. உரைகாரர் கூறியவாறே யெடுப் பினும், 'ஐந்திரம்' இந்திரன் இயற்றிய நூலென்றே மேலை யடிகளிற் பெறப்படுகின்றதல்லாமற், 'பத்ரபாகு' என்னுஞ் சமண் முனிவன் இயற்றிய 'ஜைநேந்திரம்' என்பது அவற் றின்கட் சிறிதும் பெறப்படவில்லை; சிறிது தமிழறிவுடை யார்க்கும் மேலையடிகளின் பொருள் இதுவேயாதல் தெற் றென விளங்காநிற்கும். 'கப்பம்' என்னுஞ் சொல் நீண்ட வாழ்நாள் எல்லையினைக் குறிக்கும் 'கல்பம்' என்னும் வட சொல்லின் திரிபாகுமென்றே உரைகார ரிருவருங் கூறினர்; அதன் உண்மைப்பொருள் அவ்வாறிருக்கத், தங்கருத்து நிரம்புதற் பொருட்டு அச் சொல்லுக்குக் 'கல்பசூத்திரம்' எனப்பொருள் செய்து, 'பத்ரபாகு என்னும் முனிவன் செய்த கல்பசூத்திரத்திலே இந்திரன் ஆக்கிய ஐந்திரவியா கரணத்தின் உண்மை காணுயோ' என அப் பார்ப்பனர் அவ் வடிகளுக்கு உரை யுரைத்துக்கொண்டார். 'ஜைநேந் திரம்' என்னும் நூல் பூஜ்யபாதர் என்னுந் தேவநந்தியாற் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் இயற்றப்பட்டதேயல்லாமற் கி. மு. நான்காம் நூற்றுண்டிலிருந்த பத்ரபாகுவினுலா வது, கி. மு. ஆரும் நூற்றுண்டிலிருந்த மகாவீரராலாவது இயற்றப்பட்ட தன்று. 'தனஞ்சயகோசம்' என்னும் 'ஜைநஹரிவம்ஸ' நூலும், போப தேவரென்னும் ஹேம சந்திரரும் 'பூஜ்யபாதரென்னுந் தேவநந்தியே ஜைநேந்

திரம் இயற்றினோராவர்' எனக் கூறுமாற்றால் இவ்வுண்மை நன்கு விளங்கும்; பூஜ்யபாதரே 'ஜைநேந்திரத்'தின் ஆசிரியராவரெனப் 'பேல்வால்கரும்' முடிந்துக் கூறினர்.[1] இனி, 'ஜைநேந்திரம்' இயற்றப்பட்ட காலங் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியாமென்பதும் அவரால் நன்கு காட்டப்பட்டது.[2] கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையை ஆண்ட 'முதற்கயவாகு' மன்னன், சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளின் காலத்தில் இருந்தவன் என்பது சிலப்பதிகார நூலினுள்ளேயுங்[3] குறிக்கப்பட்டிருத்தலால், ஜைநேந்திரம் இயற்றப்படுதற்கு உ௩0-ஆண்டுகளுக்கு முன்னரேயுள்ள சிலப்பதிகாரத்திற், பிற்பட்ட அச்சைநேந்திர நூல் குறிப்பிடப்பட்டதென்றல் யாங்ஙனம் பொருந்தும்? 'மொட்டைத் தலைக்கும் முழந் தாளுக்கும் முடிப்போடுதலோடு' ஒப்ப, இயைபு சிறிதும் இல்லாதவைகளை இயைத்து வைப்பதில் இப் பார்ப்பன ரன்றி மற்று எவர் வல்லார்! அது நிற்க.

மேற்காட்டிய சிலப்பதிகார அடிகளிற் குறிக்கப் பட்டது 'ஜைநேந்திரம்' என்னும் வடமொழியிலக்கணம் ஆதல் செல்லாதென்றது ஒக்கும்; 'பழைய பிராதிசாக்கி யங்'களையும் 'ஐந்திரத்'தையும் பின்பற்றிச் செய்த 'காதந் தரம்' என்னும் வியாகரணநூல், தக்கணத்திற் கி. பி. முதல் நூற்றாண்டில் அரசுபுரிந்த 'சாதவாகனன்' காலத்த தாகலின், அதுவே அச் சிலப்பதிகார அடிகளிற் சுட்டப் பட்டதாகுமென்று கொள்ளாமோவெனிற்; கொள்ளா மன்றே; என்னை? அங்கே சுட்டப்பட்டது விண்ணவர் கோமான் இந்திரன் இயற்றிய நூலேயல்லாமற் பிறிதன்று; வெளிப்படையாகச் சுட்டப்பட்டதொரு நூலை விடுத்துச் சுட்டப்படாத தொன்றனை ஆண்டுக்கொணர்ந்து பிணைத் தல் பெரிதுங் குற்றமாகலி னென்க.

1. Systems of Sanscrit Grammar, p. 63.
2. Ibid. p. 64.
3. வரந்தருகாதை, ௧௬0.

அற்றாயினும், இந்திரன் ஆக்கிய நூற்பொருளை அருக தேவன் அருளிய ஆகம நூல்களிற் பரக்கக் காணலாம் என்று கௌந்தியடிகள் கூறும் பின்னிரண்டடிகளைக் கொண்டு, ஐந்திர நூற் பொருளை அகத்தடக்கிய சமண் நூல்கள் சிலப்பதிகாரத்திற்கு முன்னரே உளவாதல் பெறப்படுமாலோவெனிற், கூறுதும்: மேலே குறித்த சிலப்பதிகார அடிகளில் இந்திரன் ஆக்கிய நூல் என்று பொதுவகையாற் குறிக்கப்பட்டிருப்பதற்கு 'ஐந்திரவியா கரணம்' எனச் சிறப்புவகையாற் பொருள் செய்வது யாங்ஙனம் பொருந்தும்? இளங்கோவடிகள் வேறியாண்டே னும் இந்திரன் ஆக்கியது ஐந்திரமே எனக் கூறினரா? இல்லையே. அவ்வாறிருக்க, அவ்வடிகளிற் சுட்டியது ஐந்திரவியாகரணமே என்ற உரைகாரருரை பொருத்த முடையதாகக் காணப்படவில்லை. மற்றுக், கௌந்தியடிகள் மொழிந்த விடையை உற்றுநோக்குங்காற், சமணசமயக் கோட்பாடுகள் பொதிந்த ஒருநூல் இந்திரன் எனப் பெயரிய ஓர் அரசனால் இயற்றப்பட்டு முன்னரே யுளதாயிற் றென்பதே அதனாற் போதரும். அருகதேவன் அருளிச் செய்த ஆகமம் என்பது வீட்டு நூற்பொருளை யறிவுறுத்து வதாயிருத்தல் வேண்டுமேயன்றி, இலக்கணமாகிய கருவி நூற்பொருளை யறிவுறுத்துவதாய் இருத்தலாகாது; ஆகவே, அவ்வாகமப் பொருளோடு ஒப்பச்செய்த இந்திரன் நூலும் வீட்டு நூற்பொருளையே யுணர்த்துவதாயிருத்தல் வேண்டுமென்று தெளிந்து கொள்க. ஆகவே, மேலே காட்டிய சிலப்பதிகார அடிகளிற், சமண்முனிவர் செய்த வடமொழியிலக்கண நூலாகிய ஜைநேந்திரஞ் சுட்டப்பட்ட தெனக் கரைந்த பார்ப்பனருரையும், அவரோடொப்பக் கூறும் ஏனையோருரைகளும் பொள்ளறப்பட்டுப் போலியா யொழிந்தமை காண்க. அவை அவ்வாறொழியவே, ஐந்திரம் நிறைந்த ஆசிரியன் தொல்காப்பியனைச் சமண்மதத்திலும், அம் மதத்தவர் இருந்த கி. பி. ஆறும் நூற்றாண்டிலும் படுப்பிக்க முயன்றார் முயற்சியும் புரைபட்டொழிந்தமை காண்க.

இனி, இலங்கைத்தீவின் வரலாற்றிற் சொல்லப்பட்ட மூன்று கடல்கோள்களிற் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் நிகழ்ந்த மூன்றாம் கடல்கோளுக்குச் சிறிது முன்னரேதான் 'தொல்காப்பியம்' இயற்றப்பட்டதாகல் வேண்டுமென்ற மற்றொரு பார்ப்பனருரையின் பெற்றியினை ஆராய்வாம். மூன்றில் முதற் கடல்கோள் கி. மு. ௨௩௮௭-இல் நிகழ்ந்த தென 'இலங்கை வரலாறு' கூறாநிற்ப, அதற்குமுன் 'தொல்காப்பியம்' இயற்றப்பட்டதாகுமென உரையாமல், மூன்றாங் கடல்கோளுக்கு முன்னர்த்தான் அஃதியற்றப் பட்டதெனக் கூறுதற்கு அவர் காட்டிய ஏது வென்னை. ஒன்றுமேயில்லை. மேலே யாம் பலவாற்றானும் விளக்கிக் காட்டிய பகுதிகளால், தொல்காப்பியங் 'குமரிநாடு' கடல் கொள்ளப்படுமுன் இயற்றப்பட்ட தொன்றென்பது பெறப் படும். குமரிநாடு இருந்த முதலூழிக்கட் செய்யப்பட்ட செங்கோன்றரைச்செலவு என்னும் நூலின் மிகப் பழைய வுரையில் "பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் ஏழ்தெங்க நாட்டு முத்தூர் அகத்தியன்" எனவும், "முதலூழி, முன் கடல் கொள்ளப்பட்ட பெரும்பரப்புத் தமிழ் நிலம்" என வும் போந்த உரைக் குறிப்புகளாற், பஃறுளியாறு பாய்ந்த குமரிநாடு மிகப் பெரியதொரு நிலனாயிருந்ததென்பது புலனாம். இவ்வுண்மை,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள."

என்று சிலப்பதிகாரத்துந் தெளித்துக் கூறப்படுதல் காண்க. இவ் வடிகளுக்கு உரையெழுதிய 'அடியார்க்கு நல்லாரும்,'

"அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத் திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற் றிற்கும், குமரியென்னும் ஆற்றுக்கும் இடையே எழு நூற்றுக்காவதவாறும் இவற்றின் நீர்மலி வானென மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன் பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகாரைநாடும் ஏழ்குறும்பனைநாடு மென்

> னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடும் காடும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண் டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றார் ”

என்று கடல்கொண் டொழிந்த பெருநிலப் பரப்பாகிய குமரிநாட்டின் வகைகளெல்லாம் விரித்துரைத்தார். இஞ் ஞான்று கிடைக்கப்பெறாத அரிய பெரிய தமிழ் நூல்கள் பற்பலவற்றை நன்காராய்ந்துணர்ந்த இவ் வுரைகாரர் உரைத்த குமரிநாட்டின் பெரும் பரப்பு, மேலே காட்டிய செங்கோன்றரைச்செலவின் உரையாசிரியர் கூற்றோடு பெரிதொத்து நிற்றல் காண்க. இங்ஙனமே 'களவியல்' முகவுரை யுரைகாரரும், இளம்பூரணரும், நச்சினார்க்கினிய ரும், 'கலித்தொகை'யில் ௧0௪-ஆம் கலியின் ஆசிரியரும் பெரும்பாலும் ஒத்துரைப்பர். இவருட் சிலர் கூறுவன சுருக்கமாயும், வேறு சிலர் கூறுவன விரிவாயும் இருக்கும்; அடியார்க்கு நல்லார் பண்டை நூல்கள் பலவற்றை நன் காய்ந்த பெரியாராகலின், அவர் இவ் வரலாற்றைப் பழையநூற் சான்றின்றி விரித்துரையார்; இவருரையிற் கண்ட 'ஏழ்தெங்கநாடு' செங்கோன்றரைச் செலவு என் னும் முதலூழி நூலின் உரையிற் காணப்படுதலோடு, 'எழுநூற்றுக்காவதவாறு' என்பதனுற் பெறப்பட்ட பெரு நிலப்பரப்பும் அப் பழையவுரையிற் குறிக்கப்பட்டமை காண்க. 'பெருந்தமிழ் நிலமாகிய குமரிநாடு கடல்வாய்ப் புக்க செய்தி' தொன்றுதொட்டு நூலாசிரியர் உரையாசிரி யர்களால் வரலாற்றுமுறை வழாமல் உரைக்கப்பட்டு வரா நிற்கவும், அடியார்க்குநல்லார் காட்டியவாறு அத்துணைப் பெருநிலங் கடல்நீரால் விழுங்கப்பட்டது மக்கள் தோன்று தற்கு எத்தனையோ நூறுயிர ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்த தாதல் வேண்டுமேயன்றி ஐயாயிர ஆண்டுகட்குமுன் நிகழ்ந்தது ஆகாதெனவும், அவருரைத்தவுரை அவரே கட்டிய பொய்யுரையா மெனவும், கடல் கொண்ட அத் தமிழ்நிலம் ஒரு சிற்றளவினதேயா மெனவும், வேறொரு பார்ப்பனப் புலவர் செந்தமிழ் ௧௪-ஆந் தொகுதியின் ௧௧, ௧௨-ஆம் பகுதிகளில் எழுதினர்.

இப்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கேயுலவும் 'இந்திய மாக்கடல்' பல்லாயிர ஆண்டுகளுக்குமுன் பெரு நிலமா யிருந்ததென்பது இஞ்ஞான்றை 'நிலநூல்' வல்லார் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தொன்றேயாம். இப் பார்ப்பனர் தாமும் அதனை உடம்படுகின்றார். அப் பெருநிலப் பரப்பைக் கடல்நீர் விழுங்கியதும் இப் பார்ப்பனர்க்கும் ஏனை இயற்கை நூல் வல்லார்க்கும் உடம்பாடாவதேயாம்.[1] பண்டைக்கால மக்கட் பகுதியாரின் வரலாறுகளை ஆராய்ந்து நூலெழுதினாரில் மிகச்சிறந்தாரான ஜான்லப்பக் என்னும் ஆசிரியர், நிகிரோவர் என்னும் மக்களின் பண்டை வரலாற்றினை நன்காய்ந்து பார்த்துப் பின்வருமாறு முடிபு கூறுகின்றார் :

" 'நிகிரோவர்' ஆப்பிரிக்கா தேயத்திற் 'சகாரா' என்னும் பாலைநிலத்திற்குத் தெற்கேயுள்ள நாடெங்கும் உறைகின்றனர்; அப் பாலைவெளியை அவர்களாவது மற்றை விலங்கினங்களாவது கடந்துசென்றதேயில்லை; இம் மக்கள் அரேபியா, பாரசிகம், இந்துஸ்தானம், சீயம், சீனம் முதலிய நாடுகளிலும் யாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய தீவுகளிலுங் காணப்படாவிடினும், மடகாஸ்கர் அந்தமான் தீவுகள், மலாய் நாடு, பிலிப்பைன், புதுக்கினியா, புதுஹீப்ரிட்ஸ், புதுக்காலிடோனியா, பிஜித் தீவுகளிலுந், தாஸ்மானியாவிலுங் காணப்படுகின்றனர். இவர்கள் கப்பலேறிச் செல்லும் வழக்கமுடையரல்லராகையால், இவர்கள் மேற்கூறிய நாடுகளிலும் தீவுகளிலும் பரந்து காணப்படுதற்கு, ஆப்பிரிக்காவின் கீழ்கரையிலிருந்து இந்தியமாக் கடலினூடே நெடுகத்தொடர்ந்து நீண்டு கிடந்த தீவுகளாவது அல்லது மிகப்பெரிய நிலமாவது இருந்ததாகல் வேண்டும். அப்போது இந்தியமாக்கடல் இப்போதுள்ள சகாரா பாலைநிலத்தில் நின்றுலவினதாயிருத்தல் வேண்டும்."[2] என்று அவ் வியற்கை நூற் பேரறிஞர் பெரிதாராய்ந்துரைக்கும் மெய்யுரையால், இப்

1. See 'The Tamilian Antiquary,' Vol. II, No. 1.
2. 'Fre-Historic Times' by Sir John Lubbock, p. 363.

போதுள்ள இந்தியமாக்கடலின் ஒரு பெரும்பகுதி பல்லாயிர ஆண்டுகளுக்குமுன் ஒரு பெருநிலமாயிருந்த தென்பதூஉம், அந் நிலத்தின்கண் உறைந்த மக்களின் கால் வழியில் வந்தோரே இப்போது ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியமாக்கடலின் நெடுக ஆங்காங்குள்ள தீவுகளிற் சிதர்ந்து காணப்படும் நிகிரோவ ராவரென்பதூஉம் இனிது பெறப்படுகின்றன வல்லவோ? இனி, இப் பெருநிலப் பரப்பு முழுதும் ஒரே காலத்திற் கடல்நீரால் விழுங்கப் பட்டதெனக் கோடல் பெரியதொரு பிழைபாடாம். சகாரா என்னும் பாலைநிலத்தின்கண்நின்ற கடலே, நிலவுருண்டையின் மையத்தே காலங்கடோறுந் தோன்றும் அதிர்ச்சிகளின் அளவுக்குத் தக்கபடி அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து குமரிநாட்டை மெல்ல மெல்ல விழுங்கியதாகும். சகாரா நிலத்தின் சுற்றளவு காற்கோடி மைல் ஆகும்; இந்தியமாக்கடலின் சுற்றளவோ இரண்டரைக்கோடி மைல் ஆகும். ஆகவே, சகாராவில் நின்ற கடல் நீரால் விழுங்கப்பட்ட குமரிநாட்டின் சுற்றளவு சிறிதேறக்குறைய இருபத்தைந்து இலட்சம் மைல் உள்ளதாகும். சகாராவின் நீளம் மூவாயிரம் மைல் என்று கணக்கிடப்பட்டிருத்தலாற், குமரிநாட்டின் நீளமும் மூவாயிரம் மைலாகுமென்றும், அதன் அகலம் எண்ணூறு மைலுக்குக் குறையாதென்றுங் கணக்குச் செய்தல் இழுக்காது. கடல்கொண்ட நாற்பத்தொன்பது நாடுகளும் எ00-காவதம் பரப்புள்ளன என்று அடியார்க்குநல்லார் கூறியதை ஆராயப் புகுந்த அப் பார்ப்பனர், குமரிமுனைக்குந் தென்றுருவத்திற்கும் இடையேயுள்ள அகலம் ஏழாயிரமைலிற் குறைந்துளதாகலின், எழுநூறு காவதம் அல்லது ஏழாயிர மைல் கடல்கொண்டதென்ற அடியார்க்கு நல்லாருரை பொருந்தாதென்றார். அகலத்தில் ஏழாயிரமைல் என்பது அடியார்க்கு நல்லாருரையிற் பெறப்படாமையின், அவ்வாறு பொருள் செய்த அப் பார்ப்பனருரையே பொருந்தா வழுவுரையாமென்க. அடியார்க்கு நல்லார் உரைத்த அப் பரப்பின் அளவு ஏன் நீளத்தையே சுட்டுவதாயிருத்தலாகாது? என்று வினவுவார்க்கு அவர் விடைகூறு

மாறு யாங்ஙனம்? குமரி என்னும் யாற்றுக்கும் பஃறுளி யென்னும் யாற்றுக்கும் இடையேயுள்ள நிலம் எ00-காவதமுளதென்ற வளவானே, அஃதகலத்தின் அள வையே சுட்டுவதென்றால் பொருந்துமோ? அவ்விரண்டு யாறுகளைச் சுட்டிக் கூறினமையானே அவற்றினிடைப் பட்ட நிலத்தின் அகலம் சிறிதென்பது தானே பெறப்படா நிற்க, நிகளத்தில் அங்ஙனம் இருபுறத்து எல்லைகளுஞ் சுட்டப் படாமையின் அந் நிகளத்தின் பெரும் பரப்பு எல்லாரானும் அறியப்படாமைபற்றி அதுவே அங்ஙனம் எ00-காவதமென்று அவராற் குறிக்கப்பட்டதென்பது தானே போதரும்.

இனி, உரைகாரர் அடியார்க்கு நல்லார் காலத்திலும் அவர்க்கு முற்சென்ற காலத்தினுங் 'காவதம்' என்னுஞ் சொல் எத்தனை நாழிகை வழிக்குப் பெயராய் வழங்கிற் றென்பதனைத் தெளிய அறிதற்குத் தக்க சான்றுகள் பழைய தமிழ்நூல்களில் ஆராய்ந்த மட்டில் அகப்பட்டில. ஆயினும், இற்றைக்கு உ௨00-ஆண்டுகட்குமுன் இயற்றப் பட்டதாகிய கௌடிலியரது அர்த்த சாஸ்திரத்தில் கசு000-முழங் கொண்டதே ஒரு யோஜனையென்று சொல்லப்பட் டிருத்தலால், அதுவே ஒரு சின்னக் காவதமாம் என்றுங், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தாகிய 'கணிதசார சங்கிரகத்'தில் ௬௨000-முழங்கொண்டதே ஒரு யோஜனை யென்று கூறப்பட்டிருத்தலால் அதுவே ஒரு பெரிய காவதமாம் என்றும் ஓர் அறிஞர் எழுதினர்.[1] மேற்காட்டிய வடநூல்கள் இரண்டிலும் 'யோஜனை'யி னளவு இத்துணையென வரையறுத்துரைக்கப்பட்டிருக் கின்றதே யல்லாமற், 'காவதம்' என்னுஞ் சொல்லாதல் அதனளவாதல் அவற்றின்கட் சிறிதுங் குறிக்கப்பட்டில. இனி, மற்றோர் அறிஞர் பழைய தமிழ்ப்பாட்டுகள் சில வற்றின் சான்று கொண்டு "அணு-அ க்கொண்டது க-தேர்த்துகள், தேர்த்துகள்-அ க்கொண்டது க-பஞ்சிழை, பஞ்சிழை-அ க்கொண்டது க-மயிர், மயிர்-அ க்கொண்டது

1. செந்தமிழ், கசு, பகுதி, கக.

க-மணல், மணல்-அ க்கொண்டது க-கடுகு, கடுகு-அ க் கொண்டது க-நெல், நெல்-அ க்கொண்டது க-விரல், விரல்-கஉ கொண்டது க-சாண், சாண்-உ கொண்டது க-முழம், முழம்-ச கொண்டது க-கோல், கோல்-ந௦௦ கொண் டது க-கூப்பீடு, கூப்பீடு-ச கொண்டது க-காதம்" என நன்கு விளக்கிக்காட்டி யிருத்தலோடு, இந் நீட்டலளவைக் கணக்கு முற்றுந் தனித்தமிழ்நாட்டு வழக்கேயா மெனவும் நாட்டியிருக்கின்றார்.[1] இவ் அறிஞர் தாம் சான்றாகக் காட்டிய பாட்டுகள் இன்ன நூலின்கண் உள்ளனவென் பது காட்டிற்றிலராயினும், இவர் காட்டிய இந் நீட்டலள வைக் கணக்குத் தனித்தமிழ் நாட்டுவழக்கேயா மென்ப தற்கு, இதன்கணுள்ள சொற்கள் அத்துணையுந் தனித் தமிழ்ச் சொற்களாயே யிருத்தலுங், 'காதம்' என்னுஞ் சொற் பழைய வடநூல்களுட் காணப்படாமையுமே சான்று மென்பது. எனவே, ஒரு காவதம் என்பது அ௦௦௦-முழங் கொண்ட ஒருநெடுவழியே யாதல் தெளியப்படும். அஃது இஞ்ஞான்றை ஆங்கில அளவைப்படி இரண்டே கால் மைலும் எண்பது முழங்களும் ஆகின்றது. ஆக, எழு நூறுகாவத நிகளமென்பது சிறிதேறக் குறைய ஆயிரத் தறுநூறு மைல்களே யாகின்றது. ஆப்பிரிக்கா தேயத் தின கீழ்கரையிலிருந்து கிழக்கே சுமத்திரா தீவகத்தின் மேல்கரைவரையிற் கடல்கொண்ட நிலத்தின் நிகளஞ் சிறிதேறக்குறைய நாலாயிர மைலாகும். ஆப்பிரிக்காவின் வடக்கிலுள்ள சகாரா பாலைநிலத்தின் நிகளம் மூவாயிர மைல் என்பது முன்னரே காட்டினேம். அதன் அகலம் ஆயிரம் மைல் உளது. இப் பெரும்பரப்பில் நின்ற கடல்நீர் வற்றி, ஆயிரத்தறுநூறு மைல் அஃதாவது எழுநூறு காவத நிகளமுள்ள குமரிநாட்டை விழுங்கிற்றென்பதில், உண்மை நிகழ்ச்சிக்கு மாறானது ஏதுமேயில்லை. ஆதலால், இவ் வுண்மை நிகழ்ச்சியைத் தமது காலத்து வழங்கிய நூற்சான்றுகள் கொண்டு நன்குவிரித்து விளக்கிய அடி யார்க்கு நல்லாருரையைப் புனைந்து கட்டிய பொய்யுரை

---

1. செந்தமிழ், கஙி, பகுதி, ௩.

யென்ற பார்ப்பனருரையே புரைபட்டுப் பொய்படுவதா மென்க.

அற்றேல், ஆங்கில ஆசிரியர் பலர், ஒதெற்கின்கண்ண தான பெருநிலப்பரப்பு மக்கள் தோன்றுதற்குப்பன்னூ றுயிர ஆண்டுகளுக்கு முன்னரே கடல்நீரால் விழுங்கப் பட்டதெனக் கூறுவதென்னையெனின்; குமரி நாட்டினும் நான்மடங்கு பெரிதாய், அக் குமரிநாட்டின் தெற்கிலிருந்த பெருநிலம் மட்டுமே மக்கள் தோன்றுதற்குப் பன்னூறுயிர ஆண்டுகட்கு முன்னர்க் கடலுள் அமிழ்ந்துபோயிற் றென் பதே அவர்தங் கருத்தாவதாம். மக்கள் தோன்றுதற்கு முன் அழிந்து பட்ட அந்நிலப் பரப்பைப் பற்றி ஈண்டு ஆராய்ச்சியில்லை. மக்கள் தோன்றியபிற் பல்லாயிர ஆண்டு கள் கழித்துக் கடல்வாய்ப் புக்க குமரிநாட்டைப் பற்றியதே யாம் ஈண்டு எடுத்துக் கொண்ட ஆராய்ச்சியின் பெற்றி யாம் என்க. அற்றன்று, மக்கள் தோன்றுதற்கு முன் தெற்கின்கண் இருந்த பெருநிலத்தைக் கவர்ந்த கடல் கோள் ஒன்றுமே பெரியதொரு கடல்கோளாம்; மற்று, அவர் தோன்றியபின் நிகழ்ந்தனவெல்லாம் அத்துணைப் பெரிய கடல்கோள்கள் ஆகா; அவையெல்லாஞ் சிறுசிறு நிலப்பகுதிகளை அடித்துச் சென்ற சிறுசிறு கடற்பெருக்கு களேயா மெனின்; மக்கட் டோற்றத்திற்குப்பிற் பெருங் கடல்கோள்கள் ஏதும் நிகழ்ந்தில தென்று அவர் அங் ஙனந் துணிந்து சொல்லுதற்குச் சான்றென்னை? உலக இயற்கையிற் பண்டுதொட்டு நிகழ்ந்து வராநின்ற சாலப் பெரிய மாறுதல்களெல்லாம் இப் பார்ப்பனர்தங் கருத்துப் படிதான் நிகழ்ந்து வருகின்றன போலும்! லப்பக் என்னும் ஆங்கில ஆசிரியர் மக்கட்டோற்றத்திற்குப் பின் இந்திய மாக்கடலால் விழுங்கப்பட்ட நிலப்பரப்பு மிகப் பெரிதாதல் வேண்டுமென நன்காய்ந்து முடிவுகட்டிய உரைக்கூற்றை மேலே எடுத்துக்காட்டினமாகலானும், அவர் கூறிய அம் முடிபு குமரிநாடிருந்த காலத்தில் இயற்றப்பட்ட செங் கோன்றரைச் செலவு என்னும் நூற்கூற்றொடுங், குமரிநாடு கடல் கொண்டபின் இயற்றப்பட்ட தமிழ்நூற் கூற்றுக்க ளொடும் முழுதொத்து நிற்கக் காண்டலானும் அஞ்ஞான்

றிருந்த தமிழகமாகிய அக் குமரிநாடு பெரியதொரு நிலப் பரப்பேயா மென்பதூஉம், அதனை விழுங்கிய கடல்கோளும் பெரியதொரு கடல்கோளேயா மென்பதூஉம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் விளங்கற்பாலனவா மென்க. தமிழ்நூல் வடநூற் சான்றுகளானும், இஞ் ஞான்றை ஆங்கில மாப்பேராசிரியர் செய்து போதரும் வியத்தகு ஆராய்ச்சிகளானும் ஐயுறவுக்குத் தினைத்தனை இடமுமின்றி நாட்டப்பட்டதாகிய இம் மெய்ந்நிகழ்ச்சியினை அடியோடு புரட்டி அப் புரட்டால் தமிழின் தொன்மையைக் குறைத்துவிடுதற்கு ஆவலுற்று உழலும் அப் பார்ப்பனரது செயல், மலையைக் கல்லியெறிதற்கு மிக முயன்று அது கைகூடாமையின் மாயையின் றோற்றமாம் அம்மலை என்றுமில்லாத வெறும் பொய்ப்பொருளேயாமெனக் கரைந்து மகிழும் அவர்தம் இனத்தாரது உரைபோற் கரைந்துமகிழுநர் செயலாய் நகையாடிவிடுக்கற்பாலதாகும். மேலாராய்ந்து காட்டியவாற்றால், மக்கட்டோற்றத்திற்கு முன் தெற்கின்கணிருந்த பெருநில வெல்லைகளைப் பற்பல காலங்களிற் கவர்ந்து வந்த கடல்கோள்கள் பற்பல உளவாயினும் அவையெல்லாம் ஈண்டை யாராய்ச்சிக்கு வேண்டப்படாவெனவும், மக்கட்டோற்றத்திற்குப் பல்லாயிர ஆண்டுகள் கழித்துத் தோன்றிப் பண்டைத் தமிழகமாகிய குமரிநாட்டின் பெரும் பரப்பை வாய்ப்பெய்து கொண்ட பெருங் கடல்கோள் புறத்தேயுள்ள தமிழர்தம் நாடு நகரங்களை அழித்தொழிப்பினும், அவர் தமதகத்தே ஆராய்ந்து எழுப்பிய மாப்பேறிவுநிலையாகிய தொல்காப்பியத்தை யழிக்கும் வலியிலதாய், அதன் றொன்மை மாட்சியினை யஞ்சி, அது வீறி நிற்கும் இத் தென்றமிழ் நாட்டின் கீழ்கரை மேற்கரைப் பக்கங்களைத் தன் திரைக்கைகளாற் கவைஇத், தான் முன்செய்பிழையினைக் கூறி ஓவென ஓலமிட்டு, அதன் அடிக்கீழ் வீழ்ந்து அரற்றுநிற்கின்றதெனவும் ஓர்ந்து கொள்க.

இனிச், 'செங்கோன் றரைச்செலவு' என்னும் நூலுரையினும், அடியார்க்குநல்லா ருரையினுங் குமரிநாட்டி

லிருந்தனவாகக் குறிப்பிடப்பட்ட 'ஏழ் தெங்கநாடு,' 'ஏழ்பனைநாடு' என்பவைகளில் அழிந்தனபோக இப்போது எஞ்சி நிற்பனவே: ஈழம், நக்கவாரம், மோரிசு, சுமத்திரா, யாவா முதலான தீவுகளாகும். இத் தீவுகளிலெல்லாந் தென்னையும் பனையுமே மிகச் செழித்திருத்தலும் மேலை நிகழ்ச்சிக்குப் பின்னும் ஒரு பெருஞ் சான்றாம். ஆகவே, கி. மு. உருஅ௧-இல் நிகழ்ந்த முதற்கடல்கோளே குமரிநாட்டின் மாப்பெரும் பகுதியை வாய்ப்பெய்து கொண்டதாகுமென்பதூஉம், அக் கடல்கோளுக்கு முன்னர்ச்செய்யப்பட்டுத் தமிழ் வழங்கும் நிலனெங்கும் உலாயதே 'தொல்காப்பியம்' ஆமென்பதூஉம் இனிது தெளியக் கிடந்தவாறு காண்க. மற்றுக், கி. மு. ௫0௪-இலும், கி. மு. ௩0௬-இலும் நிகழ்ந்த ஏனைக் கடல்கோள்கள் இரண்டுந், 'திருச்சீர் அலைவாய்'(வடமொழியிற் 'கபாடபுரம்')எனப்பட்ட திருச்செந்தூர்க்குப் பக்கத்தே எஞ்சி நின்ற சில நாடு நகரங்களை இரண்டு முறையாக அடித்துச்சென்ற சிறுசிறு கடல்கோள்களாகு மல்லாமற், குமரிநாட்டை முழுதுங்கவர்ந்த பெருங் கடல்கோள் ஆகாதென்பதுங் கருத்திற் பதிக்கற்பாற்று.

இனித், தொல்காப்பியத்துக் களவியல், ௪௪-ஆஞ் சூத்திரமாகிய " மறைந்த வொழுக்கத்து ஓரையும் நாளும்" என்பதன்கட் காணப்படும் 'ஓரை' என்னுஞ் சொல்லைக் கிரேக்க மொழியெனக்கொண்டு, அவ்வாற்றால் தொல்காப்பிய காலத்தைக் கி. மு. மூன்றாம் நூற்றாண்டின்பாற் படுப்பிக்க வேண்டினார் கூற்றைச் சிறிது ஆராய்வாம். 'ஓரை' என்னுஞ் சொல் இன்னமொழிக்கு உரியதென்று ஆராய்ந்து உறுதிப் படுத்தியபின், அதனை ஒரு சான்றாகக் கொண்டு ஒரு முடிவுக்கு வருதலன்றோ உண்மையாராய்ச்சி செய்வாரது கடமையாகும்? அங்ஙனம் ஆராய்ந்து பாராது 'ஓரை' எனும் அச் சொல்லைக் கண்ட அத்துணையானே, அதனைக் கிரேக்க மொழியெனத் துணிந்துரைத்தல் பெரிதும் பிழைபடுவ துடைத்தாம். இங்ஙனமே இஞ்ஞான்று ஆராயாமல் வடமொழிகளெனவும் பிறமொழிக

ளெனவுங் கொள்ளப்படும் நூற்றுக் கணக்கான சொற்கள் ஆராய்ந்து பார்க்கப் பார்க்கத் தனிச்செந்தமிழ் மொழிக ளாதலை அறிவுடையோர் (Dr. Caldwell) காட்டா நிற்பர். யாமும் மேலே சில காட்டிப் போந்தாம். இனி, 'ஓரை' என்னுஞ் சொல் தமிழ்மொழியிலுங் கிரேக்க மொழியிலும் வடமொழியிலுங் காணப்படுகின்றது. மூன்று மொழிகளி லும் பொதுவாகக் காணப்படும் இச் சொல்லைக் கிரேக்க மொழிக்கே யுரியதெனை வரைந்து கட்டினவர், அவ்வாறு தாம் அதனை வரைந்து கட்டுதற்குக் காட்டிய சான் றென்னை? ஏதுமே காணேம். தொல்காப்பியத்திற்கு முற்பட்ட கிரேக்க நூலிலாயினும் வடநூலிலாயினும் 'ஓரை' என்னும் அச் சொல் வழங்கப்பட்டிருக்குமாயின், அதனை அப் பிறமொழிகளுக்கு உரிய சொல்லாகக் கொள் ளுதல் ஒக்கும். தொல்காப்பியங், கி. மு. மூன்றும் நூற் ருண்டிலேதான் இயற்றப்பட்டதாகும் என இச் சொல் வழக்கையே ஒரு சான்ருகக்கொண்டு நாட்டப்புக்கவர், அச் சொல் கிரேக்க மொழியிலேனும் வடமொழியிலேனுங் கி. மு. மூன்ரும் நூற்ருண்டிற்குமுன் இயற்றப்பட்ட நூல் களில் வழங்கப்பட்டுளதெனக் காட்டல் வேண்டுமன்ருே? அவ்வாறு செய்தலை விடுத்து, அதனை வாளா கிரேக்க மொழியென்ருல், அதனை ஆராய்ச்சியறிவுடையார் கைக் கொள்வரோ? யாம் ஆராய்ந்த மட்டிற் கி. மு. மூன்ரும் நூற்ருண்டிலாதல், அதற்கு முற்பட்ட காலத்திலாதல் இயற்றப்பட்ட கிரேக்க நூல் ஆரிய நூல்களில் 'ஓரை' என்னுஞ்சொல் வழங்குதலைக் கண்டிலம். கி. பி. ஆரும் நூற்ருண்டிலிருந்த வராகமிகிரரால் மட்டுங் கிரேக்கரின் வான்நூலாராய்ச்சியைத் தழுவி 'ஹோரா சாஸ்திரம்' என்னும் ஒரு நூல் வடமொழியில் எழுதப்பட்டிருக் கின்றது. அதுகொண்டு 'ஹோரா' என்னுஞ்சொற் கி. பி. ஆரும் நூற்ருண்டிற்குச் சிறிது முற்பட்ட காலத்திற் கிரேக்க மொழியில் வழங்கப்பட்டமை மட்டும் அறியப் படும். [1]கி. மு. இரண்டாம் நூற்ருண்டிலிருந்த கிரேக்க

1. See 'A Short History of Astronomy' by A. Perry, M.A., pp. 40 and 62.

ஆசிரியரான 'ஹிப்பார்க்கஸ்' காலத்திலேதான் கிரேக்கரின் வான்நூலாராய்ச்சி ஓர் ஒழுங்குபெறத் துவங்கி அவர்க்கு முந்நூற்றாண்டுகளுக்குப்பின் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இடையிலிருந்த 'தாலமி' என்னுங் கிரேக்க ஆசிரியராலேதாம் அது முற்றுப் பெறலாயிற்று. ஆகவே, கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற்குங் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலேதான் 'ஹோரா' என்னுஞ்சொல் கிரேக்கமொழியில் வழங்கப்பட்டதாகல் வேண்டுமென்பது துணியப்படும். படவே, கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற்குமுன் கிரேக்கமொழியில் வழங்காத 'ஓரை' என்னுஞ் சொல்லை அக் கிரேக்கமொழிக்கே உரியதென்றலுங், கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகிய 'தொல்காப்பியத்தை' அந் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகிய அச் சொற்கொண்டு கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகு மென்றலும் "என் முப்பாட்டன் திருமணக்காலத்தில் யான் அத் திருமணப் பந்தற்காலைப் பிடித்து நின்றேன்" எனக் கூறும் ஒருபேரனது சான்றுமொழியோ டொப்பவைத்து நகையாடற் பாலனவா மென்க.

அற்றேல், 'ஓரை' என்னுஞ்சொல் எந்தமொழிக்கு உரியதெனின்; மிகப்பழைய தமிழ்நூலாகிய தொல்காப்பியத்தில் அச்சொற் காணப்படுமாறுபோல் அங்ஙனமே பழைய கிரேக்கநூல் ஆரிய நூல்களில் அது காணப்படாமையானுந், தொல்காப்பியத்திற்கு மூவாயிரத்தைந்நூற்றாண்டு பிற்பட்டுக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந் துண்டான கிரேக்க ஆரிய வான்நூல்களின் மட்டும் அது காணப்படுதலானும் அது பண்டைச் செந்தமிழ் மொழிக்கே யுரிய தூயதமிழ்ச் சொல்லாதல் உணர்ந்து கொள்க. அங்ஙனமாயின் அதற்குத் தமிழ்ச் சொற்பொருள கூறுகவெனிற் கூறுதும். 'ஓரை' என்னும் அச் சொற்கு முதனிலை 'ஓர்' என்பதாகும். "'ஓர்ப்பு' என்பது ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல்"[1] என்று ஆசிரியர்

1. இறையனாரகப்பொருள், ௨-ஆஞ் சூத்திரவுரை.

நக்கீரனூர் உரை கூறினாராகலின், அவ்வாறு ஆராய்ந்து உணரப்பட்ட வான்மீன் வட்டமே (இராசிச் சக்கரமே) ஓரையென வழங்கப்படலாயிற்று. பண்டைத் தமிழ்மக்கள் வழங்கிய 'ஓரை' என்னும் இத் தமிழ்ச்சொல்லே கிரேக்க மொழியிற் சென்று 'ஹோரா' என அம் மொழியினியல் புக்கு ஏற்பத்திரிந்து, பின் வடநாட்டில் வந்து குடியேறிய கிரேக்கர் வாயிலாக வடமொழியிற் புகுவதாயிற்று.

அற்றேற், பண்டைத் தமிழ்மக்கள் தமக்கு நெடுந் தொலைவிலிருந்த மேனாட்டவராகிய கிரேக்கருடன் கடல் தாண்டிச்சென்று கலந்தாலன்றோ, அச்சொல் அவர் மொழியிற் கலத்தற்கு இடனுண்டாம்? எனின், அந் நிகழ்ச்சியும் ஒரு சிறிது காட்டுதும்: மேல்கடற் பாலதான சாலடி நாட்டின் (Chaldea) தலைநகராகிய 'ஊர்' என்னும் இடத்தே நிலத்திற் புதைந்துகிடந்த பழைய வேந்தரின் அரண்மனைகளைக் கிளறிப் பார்க்கையிற், கி. மு. ௩000-த்தில் அஃதாவது இற்றைக்குச் சிறிது குறைய ஐயாயிர ஆண்டுகளின்முன் அங்கு அரசுபுரிந்த 'ஊரேயா' என்னும் வேந்தனாற் கட்டப்பட்ட அரண்மனையின்கண் தமிழ்நாட்டுத் தேக்குமரத்துண்டொன்று கண்டெடுக்கப்பட்டது; அது கொண்டு, பண்டைத் தமிழர்கள் ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னரேயே கடல் தாண்டிச்சென்று மேல்நாட்டவரொடு வாணிகம் நடாத்தினரென ஆங்கில வரலாற்று நூலாசிரியர் முடிவுகட்டிச் சொல்கின்றனர்.[1] அதுவேயுமன்றி, விவிலிய நூலிற் சொல்லப்பட்ட 'சாலமன்' என்னும் வேந்தன் மேல் நாட்டில் அரசுபுரிந்த கி. மு. க000-த்தில், அஃதாவது இற்றைக்கு மூவாயிர ஆண்டுகளுக்கு முன்னமே மயிற்றோகை, யானைமருப்பு, குரங்கு, அகிற்கட்டை முதலான பண்டங்களை, அவ் வரசனுடைய மரக்கலங்கள் 'உவரி'[2] என்னும் இத் தென்னாட்டுத் துறைமுகத்தில் வந்து ஏற்றிக்கொண்டுபோன வரலாறுங், கருவாப்

1. Ragozin's Vedic India, p. 305.

2. இப்போது இவ்வூர் தூத்துக்குடிக்குத் தெற்கே செம்படவர் குப்பமாய் இருக்கின்றது; Tamilian Antiquary, No. I, p. 23.

பட்டை, கருப்பூரம் முதலான பண்டங்கள் தமிழ்நாட்டி லிருந்து கிரேக்கநாட்டிற்கு இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகளின் முன்னரே ஏற்றிச்செல்லப்பட்டமையின் அப் பண்டங்களின் தமிழ்ப்பெயர்கள் கிரேக்க நூல்களிற் கலந்தவரலாறுங் 'கால்ட்வெல்' ஆசிரியரால் நெடுநாட்கு முன்னமே நன்கெடுத்துக் காட்டப்பட்டன.[1] இங்ஙனமாக ஐயாயிர ஆண்டுகளுக்கு முற்றெட்ட காலத்திருந்தே தமி ழர்களும் மேனுட்டவர்களும் ஒருங்கு கலந்து வந்தமை ஐயமின்றித் தெளியக்கிடத்தலின், அம் மேனுட்டு மொழி களுட் கலந்த பலப்பல தமிழ்ச் சொற்களில் 'ஓரை' யென்ப தும் ஒன்றுதல் காண்க.

அற்றேலஃதாக, இற்றைக்கு இரண்டாயிர ஆண்டு களாக மேனுட்டவர்களே வான்நூலாராய்ச்சியிற் சிறந்தவ ராகக் காணப்படுகின்றனரன்றி, இப் பரதநாட்டின்கண் உள்ளார், அவருள்ளும் இத் தென்றமிழ் நாட்டவர் அத் துணைப் பழைய காலத்தே அதில் வல்லுநரா யிருந்தன ரென்பது கண்டிலமாலெனின்; ஆராயாது கூறினுய்; வானூலாராய்ச்சி 'மதிவழியளவு' (சந்திரமானம்) எனவும், 'பகல்வழியளவு' (சூரியமானம்) எனவும் இருதிறப்படும். மேனுட்டவரிற் பண்டை நாளிலேயே வானூலாராய்ச்சியிற் பெரும்புலமை பெற்று வயங்கிஞர் பாபிலோனியர் அல்லது சாலடியரெனப்படும் பழைய நாகரிகமக்களே யாவர். என்ருலும், இவர்கள் 'பகல்வழியளவு' என்னுஞ் சூரியமான ஆராய்ச்சியிற் றேர்ந்தவர்களேயல்லாமல், 'மதிவழியளவு' என்னுஞ் சந்திரமான ஆராய்ச்சியிற் றேர்ந் தவரல்லர், அதனை யுணர்ந்தவரும் அல்லர். வான்மீன் களைப் பன்னிரண்டு வீடுகளாக (இராசிகளாக)ப் பகுத்து, அவற்றினூடு செல்லும் பகலவன் இயக்கத்தைக்கொண்டு ஙசுo நாட்கள் அடங்கிய ஓர் ஆண்டினைப் பன்னிரண்டு திங்களாக வகுத்தனர்.[2] ஆனலும் இருபத்தேழு அல்லது

1. See Dr. Caldwell's 'A Comparative Grammar of the Dravidian Languages,' 3rd edition, Introduction, pp. 88-91.

2. Chaldea by Z. Ragozin, p. 230.

இருபத்தெட்டு வான்மீன் நிலைகளை யுணர்ந்து, அவற்றோடு செல்லும் மதியின் இயக்கத்தைக் கண்டறிந்து நாள்களுங் கோள்களும் வகுத்த நம் இந்திய மக்களின் 'மதி வழியள'வாகிய சந்திரமான ஆராய்ச்சியைப் பழைய பாபிலோனியர் ஒரு சிறிதுந் தெரிந்தவர் அல்லர். இந்நாளில் ஆரியமொழி நூல்களை எழுத்தெண்ணிக் கற்று ஆரியமொழியினும் மேனாட்டு மொழியாராய்ச்சியினும் மாப்பெரும் புலவராய்த் திகழ்ந்த மேனாட்டாசிரியரான மாக்ஸ்முலர், இவ் வரிய பெரிய உண்மையினை இற்றைக்கு சச-ஆண்டுகட்கு முன்னமே பின்வருமாறு எடுத்துக் காட்டினார் :

"பாபிலோனியர் கண்டறிந்த வான் வீடுகள் பகலவன் வழியவாகும். முளையெழுத்துப் பட்டையங்களை அடுத்தடுத்து ஆராய்ந்தமையாற் பற்பல உண்மைகள் புலனாயினவேனும், மதிவழியளந்த வான்வீட்டாராய்ச்சி பாபிலோனியர்பா லிருந்ததென்பதற்கு ஏதொரு சுவடுதானும் அகப்பட்டிலது. மதிவழியளவு பாபிலோனியர்க்குத் தெரிந்ததொன்றென்றே வைத்துக்கொள்வோமாயினும், வேத நூல்களையும் பழைய வேதச்சடங்குகளையும் அறிந்தவர் எவரும், அவ் எளிதான வான்அளவையினைப் பாபிலோனியரிடமிருந்து இந்துக்கள் இரவலாக வாங்கிக் கொண்டனரென நம்புதற்குத் தாம் எளிதில் இசையார். வேத வேள்விகளிற் பெரும்பாலன, பகலவ னியக்கத்தைவிட மதியினியக்கத்தையே சார்ந்து நிகழ்வன வென்பது எவரும் நன்குணர்ந்ததேயாம். * * * ஒவ்வொரு நாளுஞ் செய்யப்படுஞ் சடங்குகளாகிய மாப்பெரு வேள்விகள் ஐந்துங், காலை மாலையிற் செய்யப்படும் எரியோம்பலுமே யன்றி, வேதகாலத்தில் முதன்மை பெற்றன : 'தர்சபூரண மாசம்' என்னும் மறைநிலா முழுநிலா வேள்விகளும், பருவகால வேள்விகளாகிய 'சாதுர்மாசியமு'மே யாகும்."[1] இங்ஙனமாக இப் பரதநாட்டின்கணிருந்த பண்டை நன்மக்

1. MaxMuller's 'India What Can It Teach Us?' pp. 126, 127.

களே வான்நூலாராய்ச்சியிற் சிறந்து விளங்கினமை காட்டியதோடு, 'மதிவழியளவு,' இருக்குவேத இரண்டாம் மண்டிலத்தின் கூஉ-ஆம் பதிகத்திலும், எட்டாம் மண்டிலத்தின் கூ-ஆம் பதிகத்திலுங் குறிப்பிடப்பட்டிருத்தலையும் முதன்முத லெடுத்துக் காட்டினார். இருக்குவேதத்தின் மட்டுமேயன்றி, எசுர்வேதத்திலுந், தைத்திரீயகத்திலுஞ், சாந்தோக்கியத்திலும் வான்நூலாராய்ச்சிக்குரிய சான்றுகள் இருத்தலையுங் குறித்துப் போந்தார்.[1] இவரைப்போலவே வீபர் என்னும் மேனாட்டாசிரியரும் பழைய ஆரியவேத நூல்களிலிருந்து சான்றுகள் பல எடுத்துக்காட்டி, மிகப் பழைய நாளிலேயே இப் பரதநாட்டவர் 'மதிவழியளவை' யாகிய வானூலாராய்ச்சியிற் புலமையுடையராயிருந்தமை தெளித்து விளக்கினார்.[2] இவர்களெல்லார்க்கும் முன்னரேயே கோல்புரூக் என்னும் ஆசிரியர் இவ்வுண்மைகளை எடுத்துரைத்தனர்.

இனி, 'மதிவழியளவை'த் தவிரப் 'பக்ல்வழியளவு' வடநாட்டிலிருந்த நம்பரத நன்மக்கட்குத் தெரியாதாயினுந், தென்னாட்டிலிருந்த பண்டைத் தமிழ் நன்மக்கட்கு அவ்விருவகை யளவுந் தொன்றுதொட்டே தெரிந்திருந்தன வென்பதற்குப் பதினோராம் பரிபாடலிற் போந்த,

" விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
எரிசடை யெழில்வேழந் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்த மூன்றொன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
அங்கி யுயர்நிற்ப அந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்குப்பால் எய்த இறையமன்

1. Max Muller's 'A History of Ancient Sanscrit Literature,' Panini Office edition (1912), pp. 107-109.

2. A. Weber's 'The History of Indian Literature,' p. 248.

வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதியம் மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுனம் அடைய விரிகதிர் வேனில்
எதிர் வரவு மாரி.''

என்னும் பகுதியிற் பன்னிரண்டு நாள் வீடுகளும் (இராசிகளும்), தாங்கூறும் முதிர்வேனிற்காலத்தில் அவை காணப்பட்டவாறும் ஆசிரியர் நல்லந்துவனர் நன்கெடுத்து மொழிதலே சான்றும். ஆசிரியர் நல்லந்துவனர், அகநானூறு, ருகூ-ஆஞ் செய்யுளில் மதுரை மருதனிளநாகனாற் புகழ்ந்து பேசப்பட்டிருத்தலானும், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை இம் மருதனிளநாகனாரும் ஆசிரியர் நக்கீரனாரும் பாடிய பாட்டுக்கள் (ருரு, ருசு) புறநானூற்றின்கட் காணப்படுதலானும் மேலே ருஎகூ-ஆம் பக்கத்திற் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தவராகப் பெறப்பட்ட நக்கீரனாரது காலமே நல்லந்துவனார்க்கும் காலமாதல் தெளியப்படும். படவே, நல்லந்துவனர் கூறிய 'பகல்வழியளவு,' கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்த கிரேக்க வானூலாசிரியரான 'தாலமி' என்பவர் கண்டெழுதிய 'பகல்வழியளவுக்'கும் முற்பட்டதாதலுந் தானே விளங்கும். இங்ஙனமாகக் கிரேக்க வானூலாசிரியர்க்கு முன்னமே தமிழ்ச்சான்றோர் 'பகல்வழியளவு' தெரிந்திருந்தமை புலனாதலிற், கிரேக்கரிடமிருந்து அவ் வளவினைத் தமிழர் கற்றுணர்ந்தாரென்பது அடாது. மற்றுத், தமிழரிடமிருந்தே அதனைக் கிரேக்கர் கற்றுணர்ந்தாரென்க.

அற்றேற், கி. பி. ஆறும் நூற்றாண்டிலிருந்த வராகமிகிரர் எழுதிய 'ஹோராசாஸ்திரத்'திற் காணப்படுங் கோள்கள், வான்வீடுகள் முதலியவற்றின் பெயர்கள் இரேக்கமொழிச் சொற்களோடு ஒத்து நிற்றலும், அவை தமிழ்ச் சொற்களோடு ஒத்து நில்லாமையும் என்னையெனின்: கி. மு. முதல் நூற்றாண்டிலிருந்தே வடநாட்டவரும் அவர்வழியே வடமொழியுந் தமிழ்நாட்டின்

கண் வந்து மிகுதியாய்ப் பரவத் துவங்கிவிட்டமையின், தமிழர்கள் முன்னே தனித்தமிழ்ச் சொற்களால் வழங்கிய தம் பொருள்களையும் இடையிடையே வடசொற்களால் வழங்கத் துவங்கிவிட்டனர். மேலெடுத்துக் காட்டிய நல்லந்துவனாரது செய்யுட் பகுதியிற் றனித்தமிழ்ச் சொற்களினிடையே 'புந்தி,' 'மிதுனம்,' 'அங்கி,' 'பங்கு,' 'யமன்,' 'மகரம்,' முதலான வடசொற்கள் புகுந்துவிட்டமை காண்க. இங்ஙனமே நாட்செல்லச் செல்ல வடசொற்களும் வடமொழி வழக்குகளுந் தமிழ் நாட்டிற் பரவப் பரவத் தமிழர்களே தம் இயற்பெயர்களையும் 'ஞானசம்பந்தன்,' 'சுந்தரன்,' 'உமாபதி,' 'சுவாமிநாத தேசிகன்' என்றற் றொடக்கத்து வடசொற்களால் அமைக்கலானதுடன், தாமே வருந்தி யாராய்ந்தறிந்தெழுதிய ஒப்புயர்வில்லாத் தனித்தமிழ் நூல்களுக்குஞ் 'சிவஞான போதம்,' 'சிவஞானசித்தி,' 'சிவப்பிரகாசம்,' 'சங்கற்பநிராகரணம்' முதலான வடமொழிப் பெயர்களை யமைத்து, அந் நூல்களுள் எடுத்துரைக்கப்படுஞ் சில பலபொருள்கட்கும் வடசொற்குறியீடுகளை யிட்டு வழங்குவாராயினர். தமிழ் வேளாண் மக்கட்குப் பிறந்த பிள்ளைகள் 'சுப்பிரமணியன்,' 'விநாயகன்,' 'வீரபத்திரன்,' 'சங்கரநாராயணன்' முதலான வடசொற் பெயர்களைப் புனைந்துகொண்ட அளவானே, வடநாட்டுக்குரிய ஆரியப்பிள்ளைகளாய்விடாமை போலத், தனித் தமிழர்தம் ஆராய்ச்சி நுண்ணுணர்விற் பிறந்த 'சிவஞானபோதம்' முதலிய அருந்தமிழ் நூல்கட்கு வடசொற்பெயர் புனைந்துவிட்டமை பற்றி அவை ஆரியர்க்குரிய ஆரியநூல்களாய்விடுதல் ஒருவாற்றானுமில்லை. இவ்வாறே தமிழ்நாட்டு ஊர்களாகிய தில்லை, அண்ணாமலை, ஐயாறு முதலியன சிதம்பரம், அருணாசலம், பஞ்சநதம் முதலான வடமொழிப் பெயர்களைப் புனைந்தமட்டானே அவை வடவர்க்குரிய 'ஆரியப் பிரதேசங்க'ளாய் விடுதலும் எஞ்ஞான்றுமில்லை. இவ்வியல்புகளை ஆய்ந்து கண்டுணரமாட்டாதார், இவ் வடசொற் பெயர்களுங் குறியீடுகளும் உடைமைபற்றி மேற்கூறிய உண்மைத் தமிழ்நூல்களை வடநூன் மொழி

பெயர்ப்புகள் போலுமென மயங்குவாரும், அவை அவற்றின் மொழிபெயர்ப்புகளேயா மெனப் பிடித்துப் பேசுவாருமாய்ப் பெரிதும் பிழைபடாநிற்பர். இஞ்ஞான்றை ஆங்கில வழக்குப் பற்றி, ஆங்கிலம் அறியாத் தமிழ்மாதர்களுந் தாம் வழங்கும் பண்டங்களுக்குத் தப்புந் தவறுமாய் ஆங்கிலச் சொற்களையிட்டுப் பேசுதலும், ஆங்கிலமுணர்ந்த தமிழாடவர் இடையிடையே ஆங்கிலச் சொற்கலந்த தமிழில் உரையாடுதலும் ஆகிய 'அயல்மொழி மயக்கின்' இயல்பினை உற்றுக்காண வல்லார்க்குப், பண்டைத் தமிழ்ச்சான்றோருந், தமக்குப் புறம்பான ஆரியமொழிச் சொற்களைத் தாங்கண்டறிந்த கோள்கள் நாள்கள் முதலியவற்றிற்கும் பிறவற்றிற்கும் பெயர்களாய் அமைக்கும் வேட்கையுடையரான தன் உண்மை புலனாகா நிற்கும். வடநாட்டவரால் அறியப்படாமல் தமிழ்நாட்டவராற் கண்டுணரப்பட்ட கோள்கள் நாள்கள் ஓரைகட்குத் தமிழ்ச் சான்றோரே வடமொழிப் பெயர்களைப் புனைந்துவிட்டாராகலின், வாணிகஞ் செய்தற்பொருட்டும் பொறிகள் அமைக்கும் பொருட்டும் அரசர்க்கு மெய்காப்பாளராயும் ஏவற்சிலதர் சிலதியராயும் அமர்தற்பொருட்டுந் தமிழ் நாட்டில் தொகை தொகையாய் வந்த யவனராகிய கிரேக்கரே 'பகல்வழியள'வினைத் தமிழர்பாற் கற்றுணர்ந்து, அதனைத் தாம் கற்றுணர்ந்தபடியே வடசொற் பெயர்களோற் றமது கிரேக்கமொழியில் வரைந்து வைப்பாராயினர். அவ்வாறவர் வரைந்துவைத்த வானூற்கல்வி அவர் கூட்டங்கூட்டமாய்க் குடியேறிய வடநாட்டிற் பரவவே, அங்கிருந்த வராகமிகிரரை யுள்ளிட்ட வடநூற் புலவர்கள் அப் பகல்வழியளவினைத் தாமுங் கற்று, அதன்கட் காணப்பட்ட பெயர்களுங் குறியீடுகளுந் தமது ஆரிய மொழிக் குரியவாயிருத்தலைக் கண்டு மகிழ்ந்து, அவை யெல்லாவற்றையும் ஒருங்கே தழுவி 'ஹோராசாஸ்திரம்' எனப் பெயரிய ஒரு வான்நூல் எழுதி, அங்ஙனம் எழுதினும் தாம் அறிந்த அப் பகல்வழியளவு தமக்குக் கிரேக்கர்பாலிருந்துங் கிடைத்ததென்பது தோன்ற அதற்கு 'ரோமகசித்தாந்தம்,' 'பௌலிசசித்தாந்தம்' என்னும்

பெயர்களேயுங் கிளந்து சூட்டினர்.[1] இங்ஙனமாகக் கிரேக்கர் 'பகல்வழியள'வினைத் தமிழர்பாலிருந்து கற்றது கி. பி இரண்டாம் நூற்றாண்டிலும், அதனை வடநாட்டவராகிய ஆரிய பட்டரும் வராகமிகிரருங் கிரேக்கர் பாலிருந்து கற்றது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் துவக்கத்திற்குப் பின்னுமேயாகலின், இதனைக் கி. பி. முந்நூற்றாண்டுக்கு முன்னரே யறிந்திருந்த தமிழ்ச்சான்றோரே இதனை இவ் விருவேறினத்தார்க்குங் கற்பித்த ஆசிரியராவரென் றுணர்ந்துகொள்க.

அற்றாயினுஞ், சாலடிநாட்டிலிருந்த பாபிலோனியர் மிகப் பழைய நாளிலேயே வான்நூலாராய்ச்சியில் தேர்ச்சி பெற்றிருந்தா ரென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்த தாகலின், அவரொடு வாணிகம் நடாத்திய பண்டைத் தமிழரே 'பகல்வழியள'வினை அவர்பாற் கற்றுணர்ந்தா ரென்றாற் படும் இழுக் கென்னையெனிற்; கூறுதும்: பண் டைச் சாலடியராதல், இருக்குவேத காலத்து வடவராதல் வானூலாராய்ச்சியில் நிரம்பத் தேர்ந்தவரென்று கோடல் அமையாது; என்னை? சாலடியர் அதிற் றேர்ச்சி பெற்றது உண்மையாயின், அவர்பாற் 'பகல்வழியள'வோடு 'மதிவழி யளவுங்' காணப்படுதல் வேண்டும், மற்றஃது அவர்பாற் காணப்படாமையானும், இனி இருக்குவேத காலத்து வடவர் அதிற்றேர்ச்சி பெற்றவராயின் அவர்பால் 'மதிவழி யளவு' காணப்படுமாறு போலப் 'பகல்வழியளவுங்'காணப் படுதல் வேண்டும், ஆனலஃது அவர்பாற் காணப்படாமை யானும் என்பது. பண்டைச் சாலடியர்பாற் 'பகல்வழி யளவு' ஒன்றுமே காணப்படுதலானும், இருக்குவேத காலத்து வடவர்பால் 'மதிவழியளவு' ஒன்றுமே காணப் படுதலானும், மற்றுப் பண்டைத் தமிழர்பாலோ அவ் இருவேறளவும் ஒருங்கே காணப்படுதலானும், சாலடியரும் வடவருந் தாமாகவோ அன்றித் தமிழரிடமிருந்தோ அவ்

1. See Dr. A. Weber's 'The History of Indian Literature,' p. 258; and also Mr. R. C. Dutt's 'A History of Civilisation in Ancient India,' vol. II, p. 243.

விரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளுதற்கு முன்னமே, தமிழ்ச்சான்றோர் தாமாகவே அவ் விருவகையளவும் ஒருங்குணர்ந்திருந்தமை தேற்றமாம்.

அற்றன்று, சாலடியரிடமிருந்து 'பகல்வழியளவும்,' வடவரிடமிருந்து 'மதிவழியளவுந்' தெரிந்துகொண்டமையி னுற்ருன், தமிழர்பால் அவ் விரண்டும் ஒருங்கு காணப் படுவ வாயினவென் றுரையாமோ வெனின், உரையாம். தமிழரின் வானூலுணர்ச்சியை நடுவுநிலை வழாது ஆராய்ந் தறிந்த மக்லீன் என்னும் மேனுட்டாசிரியர்,

"தென்னுட்டின்கண் உள்ள பரதவர் தமது தொழி லின் பொருட்டு வளர்பிறை தேய்பிறை இயக்கங்களைத் தெரியவேண்டினமையிற், பண்டை நாளிலேயே காலத்தை 'மதிவழியளக்குங்' கணக்கை உண்டாக்கினர். வெளி நிலங்களி லிருந்த உழவர்களோ பருவகாலங்களையும் பகலவ னியக்கங்களையும் உற்று நோக்குவாராயினர். பார்ப்பனரது தொடர்பினுற் பற்றப்படுதற்கு முன்னமே, தமிழர்கள் தமது நாள்வாழ்க்கைக்கு வேண்டிய வளவு வானூற் பயிற்சியை மிகவுஞ் சிறந்ததாகச் சீர்ப்படுத்தி வைத்திருந்தனர்; அவர்களது முறை பலவாற்ருனும் இன்றும் நிலைபெறுற்று நிலவுகின்றது. தமிழரது காலக் கணக்கை ஒழுங்குறுத்துவதாகிய வியாழ மண்டிலச் சுழற்சி ஐந்து கொண்ட அறுபதாண்டு வட்டம் ஆரியரது முறையிற் சேர்ந்ததன்று. தமிழரின் மனைவாழ்க்கை நிகழ்ச்சிகளின் பொருட்டு வழங்கும் பன்னிரண்டாட்டைக் கால அளவும் அங்ஙனமே தமிழர்க்கு மட்டும உரித்தாவது." என்று கூறுதலும்,[1] ஸ்லேட்டர் என்னும் ஆசிரியர்,

"தமிழ்க் காலக் குறிப்புகள் நமதாராய்ச்சி யுணர் வினைப் பெரிதும் எழுப்பி விடுகின்றன. குருக்கள்மார்க்கு உரியதுங் குடிமக்கட் குரியதுமெனக் காலக்குறிப்பு இரு திறப்படுகின்றது. குருக்கள்மார்க்குரிய குறிப்பு, தெலுங்

1. Quoted in Mr. T. R. Sesha Iyengar's 'Dravidian India,' pp. 129, 130.

குக் குறிப்பு உட்பட ஏனை ஆசியாநாட்டுக் குறிப்புகளோ டொப்ப 'மதிவழியளவின்'பாற் படுவதாகலின், அதனைச் சிறந்தெடுத்துப் பேசல்வேண்டா. ஆனாற், குடிமக்கட் குரிய காலக்குறிப்போ 'பகல்வழியள'வின்பாற் படுவது, உண்மையாகவே முற்றும் 'பகல்வழியள'வின்பாற் படுவ தாகும்; முதலில் 'மதிவழியள'வாயிருந்து பின்பு பகல்வழி யாண்டிற்கு இசையத் திரிபு செய்யப்பட்ட நமது காலக் குறிப்பை ஒப்பதன்று. ஒரு திங்களுக்கு இத்தனை நாட்கள் தாம் இருத்தல் வேண்டுமென்று அவாவாத அவ்வள வுக்கு அது தனிப் 'பகல்வழியள'வின்பாற் பட்டதாயிருக் கின்றது. பகலவன் செல்லும் வான்வழியானது பன்னி ரண்டு கூறுகளாகப் பகுக்கப்படுகின்றது; காலையிலோ நண்பகலிலோ இரவிலோ எந்த நேரத்திற் பகலவன் ஒரு புதுவீட்டிற் செல்கின்றனனோ அந்த நேரத்திலேயே ஒரு புதுத்திங்கள் பிறக்கின்றது. நாட்களின் பிறப்பானது கதிரவன் எழும் பொழுதிலேயே துவங்குகின்றது; அங்ஙனந் துவங்குவது, இந்தியாவிலுள்ள ஏதேனும் ஓரிடத்திற் றோன்றுங் கதிரவன் எழுச்சியைப்பற்றிய அவ் விடத்து நேரத்தைக் கொண்டன்று; மற்று, அது, பழைய தமிழர்கள் கோள்களின் இயக்கங்களை உற்றுநோக்குதற்கு அமைத்த கொடுமுடிகளுள்ள இடத்தின் நேர் உச்சியிலும், நடுக்கோட்டின் (Equator) பாற்படும் இடத்திலும் பகலவன் எழும்போது கணக்குச் செய்யப்பட்ட நேரத்தைக்கொண்டு துவங்குவதாகும். இத்தகையதொரு தனிக் காலக்குறிப் பினை இவர்கள் எக்காலத்திற் கைக்கொண்டார்களென் பதை எவரேனும் என்றாயினும் எடுத்துக் காட்டினரோ இல்லையோ யான் அறியேன். இது தனித்த இயல்பிற் றென்பதும், வழக்கமான வசதிக்குச் சிறிது இடர் பயப்ப தாயினுங் கோள்கள் நாள்களின் இயக்கங்களை முன்பின் முரணாமல் திருத்தமாக அளந்தறிவதில், இப்போது வழங்கும் வேறெந்தக் காலக் குறிப்பைக் காட்டிலும், இதுவே முன்நிற்ப தென்பதும் பெரிதுங் கருத்திற் பதிக்கற் பாலனவாகும். இது தமிழரல்லாதாரின் தொடர்பு சிறிதும் அணுகப்பெறாத தென்னாட்டின்கண்

தனியே இடையறுது நடைபெற்று வந்த தமிழ்மக்களின் கலைநூற் புலமையின் சுருசுருப்பினை மெய்ப்பிக்கின்ற தன்றோ?''[1] என்று கூறுதலுங் கொண்டு, சாலடியர்க்குத் தெரியாத 'மதிவழியள'வினையும், ஆரியர்க்குத் தெரியாத 'பகல்வழியள'வினையும் பண்டைத் தமிழ்மக்கள் தாமாகவே நன்கறிந் திருந்தமை தெளியக் கிடக்கின்றதன்றோ? தமிழ் நாட்டின்கண் வழங்கும் அறுபது ஆண்டுகளுக்குத் தமிழ் மக்கள் வடமொழிப் பெயர்களைப் புனைந்திருப்பினும், வியாழமண்டிலச் சுழற்சியை ஆராய்ந்து கண்டு அவ் வாற்றால் அவ்வறுபதாண்டுகளை வகுத்தமுறை தமிழ் மக்கட்கே உரித்தாதல், மேற்காட்டிய ஆங்கில ஆசிரியர் நடுவுநின்று ஆராய்ந்துரைக்கு முறையால் இனிது பெறப் படுகின்றதன்றோ? இவ்வானூ லாராய்ச்சியால் வெளிப் பட்ட உண்மையைக் கருத்தூன்றிப் பார்ப்பவர்க்கு, வட சொற்களையுங் குறியீடுகளையும் உடைமை பற்றித் தமிழர்க் குரியவைகள் ஆரியர்க் குரியவாதல் செல்லாமை நன்கு விளங்கும். எனவே, வெறும் பெயர்களையுங் குறியீடு களையுங் கண்டு மயங்கி உண்மையைத் திரித்துணராமல், அதனை உள்ளவா றுணர்தல் மெய்யறிவினூர்க்கு இன்றி யமையாத கடமையாதலுந் தானே போதரும். என்றித் துணையும் விரித்து விளக்கியவாற்றாற், பழைய 'தொல் காப்பிய நூலுட்' காணப்படும் 'ஓரை' என்னுஞ்சொல் வானின்வீட்டைக் குறிக்குந் தூய தமிழ்ச்சொல்லாய்ப் பண்டைத் தமிழரால் வழங்கப்பட்டுவந்த தொன்றுவ தூஉம், தமிழர்பால் வந்து 'பகல்வழி'யளவினைக் கற் றுணர்ந்த யவனராகிய கிரேக்கரே ஏனைப் பல தமிழ்ச் சொற்களோடு அதனையுங் கற்றுப் போய்த் தாம் வரைந்த வானூல்களுள் எழுதிவைப்பாராயின ரென்பதூஉம் நன்கு புலனுதலின், அவ் 'ஓரை' எனுஞ் சொல்லைக் கிரேக்க மொழியெனப் பிறழவுணர்ந்து, அவ்வாற்றால் 'தொல் காப்பியம்' கி. மு. மூன்றும் நூற்றாண்டிற்றுன் இயற்றப் பட்டதாதல் வேண்டுமெனக் கரைந்தாருரை பொருந்தா

---

1. 'The Dravidian Element in Indian Culture' pp. 71, 72.

வுரையாதல் காண்க. மேலும், 'ஓரை' என்னும் இத் தமிழ்ச் சொல் கிரேக்க மொழியில் 'ஓரீ' எனப் பெரும்பாலுந் தமிழ் வடிவத்தோடு எழுதப்படுதலையும்[1] நினைவிற் பதித்தல் வேண்டும். இச் சொல்லைக் கிரேக்கரிடமிருந்து கடன் வாங்கிய வடநாட்டு ஆரியரே அதன் தமிழ் வடிவத்தைத் திரித்து 'ஹோரா' என எழுதினர் என்க.

இனிப், பாண்டிய அரசர் வழங்கிய 'வட்டெழுத்துக்க'ளின் பிறப்பையும், அவற்றாற் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் காலத்தையும் ஆராயும் முகத்தால், 'தொல்காப்பிய' காலத்தைக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற் படுப்பித்தார் உரைகள் ஆராயற்பாலன. தமிழ்நாட்டில் வழங்கிய வட்டெழுத்துக்களைப்பற்றியும், இவ் விந்திய நாடெங்கும் வழங்கிய அசோக எழுத்துக்களைப் பற்றியும் யாம் இற்றைக்கு இருபத்தோராண்டுகட்கு முன்னமே ஆராய்ந்து, அவ் வாராய்ச்சியைக் கி. பி. கசுOசு-ஆம் ஆண்டு வெளிப்போந்த 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்' என்னும் எமது நூலில் வரைந்திட்டாம். அதற்கு எட்டாண்டுகள் கழித்துக் கி. பி. கசுகச-இல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதாகிய 'தமிழாராய்ச்சிகள்' (Tamil Studies) என்னும் நூலின்கண் அதன் ஆக்கியோரான சீனிவாசஐயங்கார் வட்டெழுத்துக்களைப் பற்றிய எமதாராய்ச்சியினை முற்றுந் தழுவி, வட்டெழுத்துக்கள் தமிழர்க் குரியனவேயன்றி வடநாட்டில் வழங்கிய 'பிராமி' எழுத்துக்களின் திரிபாகா வென்றும், இற்றைக்கு மூவாயிரத்தைந்நூறாண்டுகட்கு முன்னமே தமிழரும் பினீசியர் எகுபதியரும் வாணிகவாழ்க்கையிற் கலந்துறவாடினராகலின் எகுபதிய ரறிந்த எழுத்து முறையைத் தமிழரும் அந்நாளிலேயே அறிந்தவரா யிருத்தல் வேண்டுமென்றும், இவ்வெழுத்து முறையைத் தமிழரிடமிருந்தே இந்திய ஆரியர் கற்றுணர்ந்தவராதல் வேண்டுமென்றும், ம ப என்னும் எழுத்தின் வடிவங்கள் பிராமி அசோக எழுத்துக்களிலும் வட்டெழுத்துக்களிலும் வேறுபட்டிருத்தலே

1. A. Weber's 'The History of Indian Literature,' p. 254.

இதற்குச் சான்றுமென்றும், ஆசிரியர் தொல்காப்பியனுர் உரைக்குந் தமிழ் எழுத்தின் வடிவங்கள் வட்டெழுத்துக் களின் வடிவோடு ஒத்திருத்தல்போற் பிராமி எழுத்துக் களின் வடிவோடு ஒத்திராமையால் தொல்காப்பியனுர் காலத்திற்கு முன்னமே வட்டெழுத்துக்கள் தமிழ்நாட் டின்கண் வழங்கினவாதல் வேண்டுமென்றும் நன்காய்ந்து வலிய சான்றுகள் பலவற்ருல் தமிழ்எழுத்துக்களின் பழமையை இனிது விளக்கிக் காட்டியிருக்கின்ருர்.[1] அவர் கொண்ட முடிபே எமது முடிபுமா மாகலானும் இவ் விந்தியநாட்டு எழுத்தின் வடிவங்களை நன்காய்ந்துகண்ட 'ரிஸ்டேவிட்ஸ்,' 'தாமஸ்,' 'பர்னல்' முதலான ஐரோப்பிய ஆசிரியர் நடுநின்ருராய்ந் துரைக்கும் உரையும் எமது முடிபோடு ஒருங்கொத்து நிற்றலானுந் தமிழ் வட்டெழுத் துக்கள் தமிழர்க்கே உரியவாய்த் தொல்காப்பியனுர் காலத் துக்கு முன்னே தொட்டு வழங்குந் தனித்தமிழெழுத்துக் களே யல்லாமல், அவை வட வாரியர் வழங்கிய பிராமி எழுத்துக்களினின்றும் வந்தன அல்லவென்பது கடைப் பிடித் துணர்தல்வேண்டும். தமிழ் வட்டெழுத்துக்கள் ஆருயிர ஆண்டுகளாய் வழங்குவனவாகப், பிராமி யெழுத்துக்களோ இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டு களுக்கு உட்பட்ட வழக்கமே யுடையனவாயிருத்தலாற், பிராமியெழுத்துக்களே தமிழ் வட்டெழுத்துக்களை பார்த் துச் செய்யப்பட்டன வாகல் வேண்டுமல்லது, வட்டெழுத் துக்கள் பிராமி யெழுத்துக்களைப் பார்த்துச் செய்யப் பட்டனவாகல் ஒரு சிறிதுஞ் செல்லாதென்க.

அற்றேற், கி. பி. எட்டாம் நூற்ருண்டிற்குமுன் வட் டெழுத்துக்களாற் செதுக்கப்பட்ட ஒரு கல்வெட்டாயினும் இத் தென்றமிழ்நாட்டின்கட் காணப்படாமை யென்னை யெனிற்; கி. பி. எட்டாம் நூற்ருண்டிற்கு முன்னே நீண்டு சென்ற பெருங் காலத்திலேதான் தமிழருந் தமிழ் மன்ன ரும் மிகச் சிறந்த நாகரிக வாழ்க்கையிலிருந்தனர்; அக் காலத்திலேதான் தனித்தமிழ்மொழி எழில்நலங் கனிந்து

1. See 'Tamil Studies,' pp. 113-131.

தன் சுடரொளி விரிந்து வீறித் திகழ்ந்தது; அஞ்ஞான் றிருந்த தமிழ்ப்புலவர்கள் மெய்யறிவு சான்ற மேன்மக்க ளாய்ப் பலகலைத் துறைகளிலும் அறிவுநிரம்பி அவ்வத் துறைகளிலும் அளவிறந்த விழுமிய நூல்களியற்றி இத் தமிழகத்தை அறிவொளியால் துலங்கச் செய்தனர்; அப் பண்டைநாளில் ஏனை நாடுகளிலிருந்த ஏனை மக்களெல் லாம் நாகரிகத்திலும் வளத்திலுங் குறைந்தாராய்த் திருந்திய அறிவின்றி வருந்துநிலையி லிருந்தமையின் அவரும் அவர்தம் மன்னருந் தமிழகத்தைக் கைப்பற்ற மாட்டாராயினர். அதனால், தமிழகந் தனக்குப் பகையா வார் எவருமின்றித் தன் வேந்தர் பெருமக்களின் வெண் கொற்றக்குடை நீழலில் அமைதியுற் றிருந்தது; எங்குங் கல்வியுங் கைத்தொழிலும் உழவும் மலிந்திருந்தன; நூல் களும் நூலாராய்ச்சி செய்வார் தொகையும் பெருகிக்கிடந் தன; எல்லாநூல்களும் ஏடுகளில் எழுதப்பட்டு எங்கும் பரந்து வழங்கின. அரசர்களின் ஆண்மையும் புகழும் விளங்கப் பாடிய பாட்டுக்களும், அவர்தம் ஈகையுங் கொடையும் வரலாறும் விரித்த நூல்களும் ஏடுகளிற் பொறிக்கப்பட்டு எங்கும் நிலவினமையாலும், இவ் வேட்டுச் சுவடிகள் அழிந்துபடுதற்குரிய நிகழ்ச்சிகள் ஏதுமே அஞ் ஞான்று நிகழாமையாலும் அவை தம்மைக் கருங்கற்களிற் செதுக்கிவைக்க வேண்டுமென்னும் எண்ணம் பண்டைத் தமிழ் மன்னர்க்குங் கற்றோர்க்கும் ஏனைக் குடிமக்கட்குந் தோன்றாமலே போயிற்று. அதனாலேதான் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முற்சென்ற பழந்தமிழ்க் காலத் தில் வட்டெழுத்தால் ஆக்கிய கல்வெட்டு ஒன்றுதானும் இல்லாதாயிற்று. இதனை முன்னரே ௧௭௫-ஆம் பக்கத்தி லும் எடுத்துக் காட்டினேம். மற்று, வடநாட்டிற் குடி புகுந்த பழந்தமிழரோ தென்னாட்டவரைப்போல் நாகரிகத் தில் அத்துணைச் சிறவாமையானும், தம் நாட்டகத்தே அடுத்தடுத்துப் புகுந்த ஆரியரானுங் கிரேக்கரானும் ஊணரானுந் தொடர்பாக அலைக்கப்பட்டு அவ் வலைப் பினால் தம் அரும்பொருள்களையும் நாடுநகரங்களையும் நூற் சுவடிகளையும் இடையிடையே இழக்கலானமையானும்

அங்கிருந்த மன்னர்களும் பிறரும் தம் ஆண்மைச் செயல்களையும் பிற வரலாறுகளையும் எளிதிற் சிதைந்துபோம் பனையேடுகளிற் • பொறித்துவையாமற் கருங்கற்களிற் செதுக்கிவைக்க வேண்டியவரானர். அதனாற் கல்வெட்டுகள் முதன் முதல் வடநாட்டின்கண்ணே தான் தோன்றுவவாயின. கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின் தென்னாட்டின்க ணிருந்த தமிழ்வேந்தர்களின் ஆற்றலும் ஆண்மையுஞ் சுருங்கவே வடக்கிருந்த மன்னர்கள் மெல்ல மெல்லத் தமிழ்நாட்டின்கட் புகுந்து தமிழ்மன்னர்களை வென்று அதனைக் கைக்கொள்வா ராயினர். இங்ஙனமாக இத் தென்னாட்டின்கட் பெருங்குழப்பங்கள் நிகழ்வுழித் தமிழ்மக்கள் தமக்குரிய அரும்பொருள்களையும் நாடுநகரங்களையும் ஏட்டுச் சுவடிகளையும் இழந்துவரலானர். வடக்கிருந்துவந்த பல்லவ அரசர்களுந் தமது வழக்கப்படி தம் ஆண்மைச் செயல்களையும் பிறவற்றையுங் கருங்கற் சுவர்களில் ஆங்காங்குப் பொறித்துவைப்பாராயினர். அப் பல்லவர் காலத்தும் அதற்குப் பின்னும் இத் தமிழகத்திலிருந்த தமிழரசர்களும் அவ் வழக்கத்தைத் தாமுங் கைப்பற்றி ஏடுகளினும் நிலைபேருயுள்ள கல்வெட்டுகளை அமைப்பாராயினர். தமிழ்நாட்டின்கட் கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்குப் பின் கல்வெட்டுகள் உண்டான வரலாறு இங்ஙனமாகலின், இஃதறியாமல் அம் மூன்றும் நூற்றாண்டிற்கு முன் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றுதானும் இல்லாமை பற்றி, வட்டெழுத்துக்களே அஞ்ஞான்று வழங்கிற்றில வெனக் கரைவாருரை பொருந்தாப் புல்லுரையாமென்க. நாகரிகம் மிக்க இந் நாளிற் காகிதச் சுவடிகளில் எத்தகைய வரலாறும் நூலும் எழுதிவைப்பாரையே காண்டுமன்றி, அவைதம்மையெல்லாங் கருங்கற் பலகைகளிலேயே பொறித்துவைப்பாரைக் காண்கிலேம்; இடைப்பட்ட காலத்து வழக்கம்பற்றிக் கருங்கற்களில் நினைவுக்குறிகளை வரைந்தமைப்பார் இஞ்ஞான்று ஒரு சிலரேனும் உளராதல் போலப், பண்டைக்காலத்துத் தமிழ் நாகரிகமாந்தரிலும் "பெயரும் பீடுமெழுதி அதர்தொறும், பீலி

சூட்டிய பிறங்குநிலை நடுகல்"[1] நாட்டும் வழக்கம் நிகழ்ந்து வந்தமை பழைய நூல்களிற் புலனாயினும், கி. பி. இரண்டாம நூற்றாண்டிற்குமுன் அங்ஙனம் நாட்டப்பட்ட நடுகல் ஒன்றுதானும் இதுகாறுங் காணக்கிடையாமையின், அவ்வியல்பினை இனைத்தென்றுணர்தல் இயலாதென்று விடுக்க. மேலும், இத் தென்றமிழ் நாட்டின்கட் பழைய நகரங்கள் இருந்து அழிந்துபோன இடங்களை அகழ்ந்து, அவற்றின் கீழ்ப் புதைந்து கிடக்கும் பொருள்களை மேற் கொணர்ந்து ஆராய்வார் இன்மையின், பண்டைக் காலத்து நடுகற்களின் இயல்பினை அவ் வாராய்ச்சியின்றி முடிவுகட்டுதல் இயலாதென்பதுங் கருத்திற் பதிக்கற் பாற்று. அசோகமன்னன் காலத்திலேயே அவனுக்குக் கீழடங்காமல் அவனொடொத்தநிலையி லிருந்த சேரசோழ பாண்டியர்களாந் தமிழ்வேந்தரின் அரசியல் மாட்சி அவ் வசோகமன்னன் வெட்டுவித்த கல்வெட்டுக்களிலேயே நுவலப்பட் டிருக்கின்றது; அத்துணைச் சிறந்த அத் தமிழ்மன்னர் தம் நாகரிக அரசியல் எழுத்துக்களின் உதவியின்றி நடைபெறுதல் இயலாதென்பதும் ஓர்ந்துணரற் பாற்று. மேலும், வட்டெழுத்துக்களாற் பொறிக்கப்பட்ட பழைய கல்வெட்டுகள் கிடையாவாயினும், அவ் வெழுத்துக்களின் வடிவினைத் தெளிய விளக்கும் மிகப் பழைய தொல்காப்பிய நூல் உண்மையின், இதனினுஞ் சிறந்த சான்று பிறிதொன்று வேண்டுமோவெனவுங் கூறிமறுக்க, கி. பி. எட்டாம் நூற்றாண்டுமுதல் தமிழ்நாட்டில் வழக்கத் துக்கு வந்த கல்வெட்டுகள் அந் நூற்றாண்டிற்குமுன் அந் நாட்டின்கட் காணப்படாமையினையே ஒருபெருஞ் சான்றாய்க் கொண்டு, ஏனைப் பழைய உண்மைத் தமிழ்நூற் சான்றுகளை யெல்லாம் புறந்தள்ளி, அவ்வாற்றால் தமிழ் மொழி கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்குமுன் ஓர் ஒழுங்குபட்ட நிலையை எய்தவில்லையெனக் கரையும் பார்ப்பனர், அவ்வாறு கரைதல் தமக்குந் தமக்குரியதெனக் கொள்ளும் வடமொழிக்குமே கேடு பயத்தலை யுணர்ந்திலர். என்னை?

1. அகநானூறு, ௩௬௬.

தனிச் சமஸ்கிருத மொழியிற் பொறிக்கப்பட்ட கல்வெட்டு கள் எல்லாம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற் பட்டனவேயன்றி, அதற்கு முற்பட்டது அவற்றுள் ஒன்றுதானும் இன்மையின்,[1] சமஸ்கிருத மொழியும் அவ் விரண்டாம் நூற்றாண்டிற்குமுன் ஓர் ஒழுங்குபட்டநிலையை எய்தவில்லையென்பதும், அம் மொழியிற் பழைய நூல்க ளெனக் கூறப்படும் இருக்கு, எசுர் முதலிய வேதங்களும் பிராமணங்களும் பிறவு மெல்லாம் பிற்றை ஞான்றைப் பார்ப்பனர்களாற் பழையனபோற் புனைந்து கட்டப்பட் டனவேயன்றி உண்மையில் அவை கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டனவேயா மென்பதும் முடிக்கப் படுமாகலின் என்க. கல்வெட்டுகளை மட்டுஞ் சான்றாகக் கொண்டு தமிழ்ப் பழமையைக் குறைக்க மடிகட்டி நிற்கும் பார்ப்பனர்க்கு, அவர்கொண்ட அம் முறையே அவர் தம் வடநூற் பழமையைக் குறைத்து, உண்மைக்கு மாறாய்ப் பெரியதொரு தலைதடுமாற்றத்தினை விளக்கக் காண்டலிற், பழைய உண்மைநூற் சான்றுகளே பண்டைக்கால நிலை யினை உள்ளவாறு அளந்தறிதற்குக் கருவியாதல் தெளிந்து கொள்க. எனவே, கி. பி. எட்டாம் நூற்றாண்டி லிருந்து இத் தமிழ்நாட்டில் வழங்கிய தமிழ் வட்டெழுத் துப் பட்டையங்களை மட்டுஞ் சான்றாகக் கொண்டு, அவற் றிற்குப் பல்லாயிர ஆண்டு முற்பட்ட தொல்காப்பிய நூலின் காலத்தை அளக்கப் புகுதல் 'நரிவால் கொண்டு கடலாழம் பார்க்கப் புகுத'லோடு ஒத்து நகையாடற் பால தாமென விடுக்க. இனித் தொல்காப்பியத்தி னுதவி கொண்டே வட்டெழுத்துக்களின் காலந் துணியப்படுவ தன்றி, வட்டெழுத்துப் பட்டையங்களி னுதவிகொண்டு தொல்காப்பிய காலந் துணியப்படா தென்பதுங் கடைப் பிடிக்க.

இன்னும், குமரிநாடு கடல்வாய்ப்படாது நிலவிய காலத்தில் தொல்காப்பியம் இயற்றப்பட்டதா மென்பதற்கு, அந் நூலின்கண் உள்ள குறிப்புகள் பலவுமே நன்குசான்று

1. See Prof. Rhys Davids' Buddhist India, pp. 134, 135.

பகர்கின்றன. அவற்றுட் சில எண்டெடுத்துக் காட்டுதும்: ஆசிரியர் தொல்காப்பியனார் வெறுமணல் வெளியாகிய பாலை நிலத்தை "நடுவு நிலைத்திணை" எனவும், அந் நிலத்தின்கண் வேனிற்காலத்து நண்பகற் கொடுமையே மிகுந்திருக்கும் எனவுங் கூறுகின்றார்.[1] நாற்புறத்துங் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலப் பகுதிகளாற் சூழப்பட்டு, அவற்றிடையே மிக அகன்று நீண்டு விரிந்து கிடப்பதாகிய வெறுமணல் வெளிக்கு அவர் "நடுவு நிலைத்திணை" என்று பெயர் கூறுமாற்றை உற்றாராயுங்கால், அத்தகையதொரு பெருமணல்வெளி அவர் காலத்தில் இருந்ததாகல் வேண்டுமென்பது புலனாம். இஞ் ஞான்றுள்ள இத் தமிழ்நாட்டின்கண், நாற்புறமும் நால் நிலங்களாற் சூழப்பட்டு இடையே பெரிதும் விரிந்து நீண்டு வேனிற்கொடுமை மிகுந்த அத்துணைப் பெரியதொரு மணல்வெளி எங்கேனும் உளதோவென ஆராயின், அவ்வியல்பின தொன்று உளதென்பது புலனாகவில்லை. வெம்மை மிகுந்த நடுக்கோட்டிற்கு (Equator) இஞ்ஞான்றைத் தமிழ்நாடு மிக எட்டியிருத்தலின் அவர் கூறியதொரு வேனிற்காலக் கொடுமையும் இங்குப் புலனாகவில்லை. ஆகவே, தொல்காப்பியனார் கூறிய பெருமணல் வெளியும், அதன்கண் உண்டாம் வேனில் அழற்சியும் நடுக்கோட்டை யடுத்த நிலப் பகுதியிலேதான் இருந்தனவாதல் பெறப்படும். அந் நிலப்பகுதி இஞ்ஞான்று இந்திய மாக்கடலின்கீழ் அமிழ்ந்தி நிற்பினும், தொல்காப்பியனார் இருந்த ஞான்று அது பெரியதொரு நிலப்பரப்பாய்க் குமரி நாடெனப் பெயர்பெற் றிருந்ததென உணர்ந்துகொள்க. அந் நிலப்பரப்பி னிடையே யிருந்த பெரும் பாலைநிலமே அவரால் 'நடுவுநிலைத்திணை' எனச் சுட்டப்பட்டதாகும் என்பது.

அதுவேயுமன்றித், தொல்காப்பியனார், "ஒட்டகம் அவற்றொடு ஒருவழி நிலையும்" (௧௮) என்னும் மரபியற்சூத்திரத்தில், 'ஒட்டகம்' என்னும் விலங்கினைக் குறிப்பிட்

1. தொல்காப்பியம், அகத்திணையியல், ௯-ஆஞ் சூத்திரம்.

டிருக்கின்றார். தமது காலத்திருந்த நூல்களிற் பெருவர வினவாய் வழங்கிய சிற்றுயிர்களின் ஆண் பெண் அவற் றின் பிள்ளைகளை எவ்வெச் சொற்களால் வழங்குதல் மரபோ அம் மரபினை அவர் முறைப்படுத்திச் சொல்லுதற் கண் ஒட்டகம் என்னும் விலங்கும் அவரிருந்த காலத்து மக்களாற் பெரிதும் பயன்படுத்தப்பட்ட தொன்றென்பது தெற்றெனெ விளங்கா நிற்கும். ஒரு பெரும் பாலை நிலத் தைச் சூழவுள்ள மக்களே அம் மணல்வெளியை ஊடுருவிச் சென்று வாணிகம் நடாத்துவர். அவ்வாறவர் அம் மணல் வெளியை ஊடுருவிச் செல்லுதற்கே, அந்நிலத்தில் இயற்கையே யுண்டாய் உயிர்வாழும் ஒட்டகம் என்னும் விலங்கினைப் பயன்படுத்தா நிற்பர். இவ் வுண்மை, இஞ் ஞான்றை வட ஆப்பிரிக்காவிலுள்ள சகாரா என்னும் பெரும் பாலைநிலத்தைச் சூழவுள்ள மக்கள் ஒட்டகத்தின் உதவியையே கொண்டு வாணிகம் நடாத்துமாற்றால் நன் குணரப்படும். இவ்வாறு பாலைநிலத்திற்கு இயற்கையா யுள்ள விலங்காய்ப், பாலைநிலத்தைச் சூழவுறையும் நாகரிக மக்களால் வாணிக வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படுத் தப்படும் ஒட்டகத்தைத் தொல்காப்பியனார் கூறுதல் கொண்டு, அவர் காலத்திற் குமரிநாட்டினிடையே கிடந்த பாலை வெளியை, அதனைச் சூழ இருந்த பண்டைத் தமிழ் மக்கள் ஒட்டகங்களினுதவியாற் கடந்துசென்று வாணிகம் நடாத்தினமை தெளியப்படும். இஞ்ஞான்றைத் தமிழ் நாட்டில் அத்தகைய பெரும்பாலை வெளியும், அதன்கண் இயங்கும ஒட்டகமும் இல்லாமையின், அவ் விலங்கினைக் காட்சிப்பொருட்டாகவன்றி ஊர்தியாகப் பயன்படுத்துவார் யாருமில ரென்க. எனவே, ஒட்டகம் என்னும் விலங்கும் அதன்பெயரும் பண்டைத் தமிழ்மக்கட் குரியனவே யல்லாமல் வடவாரியர்க்கு உரியன ஆகாமையால், அவர் அவ் விலங்கின் பெயராய் வழங்கும் 'உஷ்ட்ர:' என்னுஞ் சொல், 'ஒட்டகம்' என்னுந் தமிழ்ச் சொல்லின் திரிபாதல் துணியப்படும். இவ் வொட்டகம என்னும் விலங்கு தெற்கே நடுக்கோட்டைச் சார்ந்த வெய்ய பாலைநிலங்களி லன்றிக் குளிர் மிகுந்த வடநாடுகளில் உயிர் வாழ்வது அன்மை

யின், இது தென்னாட்டவர்க்கே யுரித்தாதல் திண்ணம். இங்ஙனமாகக் குமரிநாட்டிலிருந்த பெரும் பாலைநிலத்தை யும், அதனூடுசென்று வாணிகம் நடாத்திய பண்டைத் தமிழர் அம் மணல்வெளியைக் கடத்தற்குப் பயன்படுத்திய 'ஒட்டகம்' என்னும் விலங்கையும் ஆசிரியர் தொல்காப் பியனார் நன்கு குறிப்பிடுதலின், அவரும் அவரியற்றிய தொல்காப்பியமுங் குமரிநாடு கடல்வாய்ப் படுதற்குமுன் இருந்தமை தேற்றமாம். என்றிதுகாறுந் தொல்காப்பிய காலத்தைப் பற்றி யெழுந்த ஆராய்ச்சியின் முடிபாகத், 'தொல்காப்பியங்' குமரிநாடு கடல்கொள்ளப்படும்முன், அஃதாவது இற்றைக்கு நாலாயிரத்தைந்நூறாண்டுகட்கு முன்னும், அதற்கும் முன்னே பாரதப்போர் நிகழ்ந்த காலத்து உடனிருந்த 'முரஞ்சியூர் முடிநாகராயர்,' 'பாண் டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி,' 'நெட்டிமை யார்,' 'நெடும்பல் லியத்தனார்' முதலான தலைச்சங்கப் புலவர் சிலர்க்குமுன் அஃதாவது இற்றைக்கு ஐயாயிரத்து ஐந்நூறி யாண்டுகட்கு முன்னும் இயற்றப்பட்ட மிகப் பழையதொரு தனித்தமிழ் நூலாதல் பெறப்பட்டது. பெறவே, அது தலைச்சங்க காலத்து நூலாகுமே யல்லா மற், குமரிநாடு கடல்வாய்ப் புக்கபின் எழுந்த இடைச்சங்க காலத்து நூலாதல் செல்லாதென்பதுந் தானேபோதரும். போதரவே, அதனை இடைச்சங்ககாலத்து நூலென்ற இறையனாரகப்பொருள் உரைப்பாயிரவுரைக்கூற்று ஆசிரியர் நக்கீரனார் உரைத்ததாகாமையும், அஃது உண்மை வர லாறு அன்மையுந் தாமே பெறப்படும். இறையனாரகப் பொருள் முகத்துள்ள 'நூற்பாயிரவுரை,' 'உரைப்பாயிர வுரை' என்னும் இரண்டுள் நூற்பாயிரவுரை முற்றும் நக்கீரனாரே கூறியதாதலும், அதன்பிற் போந்த உரைப் பாயிரவுரை நக்கீரனாரால் உரைக்கப்படாமல் அவர்தம் மாணாக்கர் வழிவந்த பிறரொருவரால் உரைக்கப்பட்டதாத லும் பகுத்துக்காட்டி விளக்கியவழி, உரைப்பாயிரவுரையுட் போந்த வரலாற்றுக் குறிப்புகள் மெய்யோடு பொய்யும் இடைமிடைந்தனவாயிருத்தலைப் பகுத்துக் காட்டுவான் புகுந்து அதன்கண் மெய்யாவன இவை யெனவும் பொய்

யாவன இவை யெனவும் நிரலே இதுகாறுங் காட்டிவந்தன போக, எஞ்சி நிற்பனவுங் காட்டுகின்றாம்.

உசு. இறையனாரகப்பொருளுரை யாராய்ச்சித் தொடர்பு

இனி, இடைச் "சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்பது; அக்காலத்துப் போலும் பாண்டிய னாட்டைக் கடல் கொண்டது" என்னுங் குறிப்பு உண்மை வரலாறு தெரிப்பதொன்றேயாம். குமரிநாடு கடல்கொண் டது சிறிதேறக்குறையக் கி. மு. உ000-த்திலாமென்பதை மேலே சுசஎ-ஆம் பக்கத்தில் விளக்கிக் காட்டினமாகலின், அப் பெருங் கடல்கோளுக்குப் பின் பாண்டிமன்ன ரரசு ஓர் ஒழுங்குபெற்றுத் திரும்பவுந் தமிழ்ச்சங்கங் கூட்டப்படு தற்கு மூன்று நான்கு நூற்றாண்டுகள் சென்றிருத்தல் வேண்டும். ஏனென்றால், இரண்டாங் கடல்கோள் ஒன்று இலங்கையிற் பாண்டுவாசான் அரசுபுரிந்த கி. மு. ஐந் தாம் நூற்றாண்டிலும், மூன்றாங் கடல்கோ ளொன்று கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலும் நிகழ்ந்தமை இலங்கைத் தீவின் வரலாற்றிற் குறிக்கப்பட் டிருத்தலின் இடைச் சங்கங், கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் நிகழ்ந்த கடல்கோளுடன் முடிவடைந்திருத்தல் வேண்டுமாகலானும், இடைச்சங்கம் நிகழ்ந்த காலம் ககஅ0-ஆண்டுகளாகுமென மேலே சுசஉ-ஆம் பக்கத்தில் விளக்கிக் காட்டினமாகலின் கிறித்து பிறப் பதற்குமுற்சென்ற அவ் ஐந்நூறாண்டுகளோடு இவ்விடைச் சங்க காலத்தையுங் கூட்டக் கி. மு. கசுஅ0-ஆம் ஆண்டை யடுத்து இடைச்சங்கந் தோன்றியிருத்தல் வேண்டுமாகலா னும் என்பது. அற்றாயினும், மூன்றாங் கடல்கோள் நிகழ்ந்த கி. மு. மூன்றாம் நூற்றாண்டையே இடைச் சங்கத்தின் இறு திக் காலமாய்க் கொள்ளலாகாதோவெனிற், கூறுதும்: இரண்டாங் கடல்கோள் நிலப்பரப்பை மிகுதியும் விழுங்கிச் சென்ற தொன்றாயின், அந் நிலப்பரப்பின்கண் நடைபெற்ற சங்கமும் அதனோடு உடனழிந் திருக்கவேண்டுமாகலின் அது பின்னுங் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு வரையிலிருந்த

தெனக்கோடலாகாது. மற்று அக்கடல்கோள் அத்துணைப் பெரியதன்றாக, மூன்றாங் கடல்கோளே பெரியதொன்றா மாயின் இடைச்சங்கங் கி. மு. மூன்றாம். நூற்றாண்டிலே தான் முடிவடைந்திருத்தல் வேண்டும்; அஃதெங்ஙன மாயினுங், கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுமுதல் மூன்றாம் நூற்றாண்டுவரையிற் சென்ற இருநூறாண்டுகளில் இரண்டு கடல்கோள் நிகழ்ந்ததனை உற்றுக் காணுமிடத்து, இந் நிலவுலக அமைப்பிற் பேரிடர் பயப்பனவாகிய பெரு மாறுதல்களும் பெருங் குழப்பங்களும் அப்போது அதன் தென்பகுதியில் நிகழ்ந்தமை தெளியப்படும். அவ்வாறு அப்பெருந் துன்பநிகழ்ச்சிகள் நடைபெறத் துவங்குதற்கு ஓர் அறிகுறியாகவே கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் ஒரு சிறு கடல்கோள் நிகழலாயிற்றெனக் கொள்ளினும், அச் சிறு கடல்கோளை யடுத்துத்தோன்றிய பெருந் துன்ப நிகழ்ச்சியினிடையே இடைச்சங்கம் இருந்ததாயினும் அஃது அப்போது செவ்வனே நடைபெற்றதாகாது. ஆகவே, இடைச்சங்கங் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் ஒடுங்கிற்றெனக் கொள்ளினும், அல்லதது கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் ஒடுங்கிற்றெனக் கொள்ளினும் ஈண்டைக் காவதோர் இழுக்கில்லை. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அது முடிவடைந்ததெனக் கொள்ளின், கி. மு. ௨000-த்தில் நிகழ்ந்த முதற்கடல்கோளுக்குப்பின் ஐந்நூறாண்டுகள் கழித்து இடைச்சங்கந் துவங்கலாயிற்றென்று கொள்ளல் வேண்டும். இனி, அவ் விடைச்சங்க மிருந்து தமிழாராய்ந்த இடங் கபாடபுரம் என்ற உரைத்தொடரிற் 'கபாடபுரம்' என்னுஞ்சொல் வடசொற்றொடரா யிருத்தலானும், இடைச்சங்கம் நடைபெற்ற அப் பழையகாலத்தே அத் தகைய வடசொற்றொடர் வழங்கினமைக்குச் சான்று இல்லாமையானும், அக் 'கபாடபுரம்' என்னும் பெயர் வட மொழியில் வான்மீகி இயற்றிய இராமாயணத்தின்கட் காணப்படுதலின் அவ் இராமாயணகதை இத் தமிழ்நாட் டின்கட் டெரியத் துவங்கிய கி. பி. முதல் நூற்றாண்டிற்குப் பின்னன்றி அதற்குமுன் அப்பெயர் இங்கு வழங்குதலாகா மையானும் அச்சொற்றொடர் நக்கீரனார் எழுதியதாகாது.

அற்றேற் 'கபாடபுரம்' இருந்தது பொய்யோ வெனிற், பொய்யன்று; என்னை? அவ் வடமொழிப் பெயராற் கூறப் பட்ட அப் பழந்தமிழ் நகரம் பண்டைநாளில் 'அலைவாய்' என்னுந் தூய தமிழ்ப்பெயரால் வழங்கப்பட்டதாகும். 'அலைவாய்' என்னுஞ்சொல் 'அலையையுடைய கடலை நோக்கும் வாயில்' எனப் பொருடந்து, அவ்வாயிலையுடைய பாண்டியனது தலைநகருக்குப் பெயராயிற்று. இத் தூய தமிழ்ச்சொல்லின் மொழிபெயர்ப்பாகவே 'கபாடபுரம்' என்னும் வடமொழிப்பெயர் வான்மீகியாராற் குறிக்கப் பட்டது. 'கபாடம்' என்பது 'வாயிற்கதவு' எனவும், 'புரம்' என்பது நகரமெனவும் பொருடருவனவாகும். "பொன் நிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்துமணிகளால் ஒப்பனை செய்யப்பட்டதாயும், பாண்டியர்க்கு இசைந்த தாயுமுள்ள கவாடத்தை வானரவீரர்காள் பார்க்கக் கடவீர்கள்"[1] என்று சுக்கிரீவன் கூற்றாகவைத்து வான் மீகியார் கூறுதல் காண்க. இவ் 'அலைவாய்' நகரிற் பழந் தமிழ்த் தெய்வமாகிய முருகன்கோயி லிருந்தமை "அலை வாய்ச் சேறலும் நிலைஇய பண்பே" என்று நக்கீரனார் 'திருமுருகாற்றுப்படை'யிற் கூறுமாற்றால் அறியப்படும். பழைய அலைவாய் நகர் கடல்கொண்டழிந்தபின், அந் நகரைக் கவர்ந்த கடலின்கரைக்கண் உள்ள 'திருச்செந் தூரில்' அம் முருகன்கோயில் அமைக்கப்படலாயிற்றென்க. எனவே, கபாடபுரத்தின்கண் இடைச்சங்கம் இருந்ததென் னும் உரை நக்கீரருரை யன்றாயினும், அதிற் போந்த வரலாறு மெய்வரலாறேயாமென ஓர்க.

இனிக், கடைச்சங்கம் நடைபெற்ற ஞான்று பாண்டி நாட்டிற் பன்னீரியாண்டு மழைவளங் குன்றிப் பெரிய தொரு வற்கடந்தோன்ற மன்னுயிர்கள் மடிந்தனவாகலின், அச் சங்கம் அவ்வற்கடம் நீங்கும்வரையிற் கலைந்து அது நீங்கியபின் திரும்பக் கூடிற்றென அவ்வுரைப்பாயிரங் கூறும் வரலாறு உண்மையாகவே காணப்படுகின்றது.

---

1. செந்தமிழ், ஏழாந்தொகுதி, மூன்றாம்பகுதி, கஉஅ-ஆம் பக்கம்.

பாண்டிநாட்டைவிட்டு வேறு சேயநாடுகளுக்குச் செல்லாத நம் தமிழாசிரியன்மார் பன்னீரியாண்டு உயிர்களை வருத்திய அவ் வற்கடத்தைப் பாண்டிநாட்டின்கண் நிகழ்ந்த தொன்றாக வைத்துரைப்பினும், அக் கொடிய வற்கடஞ் சேய்மைக்கண்ணுள்ள வடநாடுகளிலும் அப் பன்னீரி யாண்டு நிகழ்ந்ததென்பது வடமொழியிலுள்ள சமண் நூலாராய்ச்சியால் இனிது புலனாகின்றது. கிறித்து பிறப் பதற்குமுன் மூன்றாம் நூற்றாண்டிலிருந்த 'பத்ரபாகு' என்னுஞ் சமண்முனிவர் காலத்தில் அக்கொடிய வற்கடம் பன்னீரியாண்டு நிகழ்ந்ததெனவடநாட்டின்கண் இயற்றப் பட்ட சமண்நூலொன்று கூறுதலால்,[1] அஃது அஞ் ஞான்று வடநாடு தென்னாடு முழுவதூஉம் பரவியிருந்தமை புலனாம். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தாகிய மணிமேகலையிலும்,

> "பன்னீ ராண்டு பாண்டிநன் னாடு
> மன்னுயிர் மடிய மழைவளம் இழந்தது." (கச, ௧௫-௧௬)

என இவ் வற்கடகாலங் குறிப்பிடப்பட் டிருத்தலின், இது மணிமேகலை காலத்திற்குப் பல நூற்றாண்டுகட்கு முன் னமே தென்னாட்டின்கண்ணும் நிகழ்ந்தமை ஐயமின்றித் துணியப்படும். இனிச், சமண்முனிவரான 'பத்ரபாகு' என்பவர் கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலிருந் தவரென்பது வரலாற்று நூலாசிரியரால் துணியப்பட் டிருத்தலின், அம் முனிவர்காலத்தில் நிகழ்ந்ததாகிய அக் கொடிய வற்கடமுங் கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் இறு தியில் நிகழ்ந்தமை தெளியப்படும். அவ்வற்கடகாலத் திற்கு முன்னிருந்த கடைச்சங்கம், அவ் வறட்சிக் காலத்திற் கலைந்ததென்பதனால், கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் ஈற்றில் நிகழ்ந்த இரண்டாங் கடல்கோளுடன் ஒடுங்கிய இடைச்சங்கத்திற்குப்பின் ஓரைம்பது ஆண்டுகளா வது கழித்துத்தான் கடைச்சங்கங் கூட்டப்பட்டதாகல் வேண்டும். மூன்றாங் கடல்கோளும் பன்னீரியாண்டு வற்

1. Introduction to Jaina Sutras by Dr. Hermann Jacobi, vol. I, p. xliii.

கடலும் ஒருங்குதோன்றிய பேர்இடரான காலத்திற் கலைந்த கடைச்சங்கத்திற்குப்பின், அவ்விடர் நீங்கிய காலத்தில் மீண்டுங் கூட்டப்பட்டதாகிய சங்கத்தை நான்காஞ் சங்கமென்றுரையாமற், கடைச்சங்கமே யென்றுரைத்த தென்னையெனின்; கடைச்சங்கம் அவ்வாறு கலைந்ததும் மீண்டு கூட்டப்பட்டதும் ஓரரசனது ஆட்சிக் காலத்திலேயே நிகழ்ந்தனவென்று அவ் வுரைப்பாயிரமே தெளிவாகக் கூறுதலால், ஓரரசனாலேயே கலைத்துக் கூட்டப்பட்ட அது வெவ்வேறு சங்கங்களாகாமல் ஒரே சங்கமாகவைத்து வழங்கப்படுவதாயிற் றென்க. இவ் வாற்றால், மூன்றாம்முறை தோன்றிய கடல்கோள் இலங்கைத் தீவைச்சேர்ந்த நூற்றுயிரங் கடற்றுறைப் பட்டினங் களையுந், தொள்ளாயிரத்தெழுபது செம்படவர் குப்பங் களையும், நானூற்றெழுபது முத்துச்சலாபத் தூர்களையுங் கொள்ளைகொண்டு போயினும்,[1] அஃது இத் தமிழ்நாட்டின் தென்பகுதியை அத்துணை மிகுதியாய் வாய்ப்பெய்து கொள்ளவில்லை யென்பதூஉம், அதனால் அப்போதிருந்த பாண்டியவேந்தன் தானுந் தன் நாடும் அழிந்துபடாமற் கொடிய அவ் வற்கடத்தினால் மட்டுந் துன்புற்று அச் சங்கத்தை அது நீங்குங்காறுங் கலைத்து அது நீங்கியபின் மீண்டுங் கூட்டினா னென்பதூஉம், அதுபற்றியே அம் மூன்றாம்சங்கங் கடைச்சங்கமென ஒரு பெயரே பெறலாயிற் றென்பதூஉம் அறியப்படும். மற்றுத், தலைச்சங்க இடைச் சங்கங்களோ முதற் கடல்கோள் இரண்டாங் கடல்கோள் களால் வாய்ப்பெய்து கொள்ளப்பட்ட பெரிய நாடுநகரங்கள் மன்னர்கள் மக்களோடு ஒருங்கழிந்துபோனமையின், அவற்றை யொருதொடர்புபடுத்துவார் இல்லையாய் ஒழிய, அவை ஒரு சங்கமென ஒன்றாய் வைத்து வழங்கப்படா வாயினவென்பது. இனி, இடைச்சங்கம் அழிந்துபட்ட கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிக்குப்பின் அதன் இடையிற் றுவங்கிய கடைச்சங்கங் கி. மு. மூன்றாம் நூற் றாண்டின் முதலில் ஒருகாற் கலைந்து மீண்டுங்கூடிப், பின்

1. See P. Arunachalam's 'Sketches of Ceylon History,' pp. 8, 9.

கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் ஈறுவரையில் நடைபெற்று முடிவெய்தியதாகலின் அதன் முழுக்காலவெல்லை அறுநூற்றைம்ப தாண்டுகளே யாகின்றன. மேலே கூ௯உ-ஆம் பக்கத்திற் கடைச்சங்கம் நடைபெற்ற முழுக்காலவெல்லை கூ௲௦-ஆண்டுகளென்று கணக்குச் செய்யப்பட்டதாயினும், இப்போது ஆராய்ந்து பெறப்பட்ட முடிபினுல், அதன் முழுக்காலவெல்லை கூ௫௦-ஆண்டுகளேயாதல் தெளியற்பாற்று; அற்றேல், இது முன்னதனோடு முரணுதோவெனின் முரணுது; என்னை; ஆண்டு அரசர் ஒருவர்க்கு ஒரு குத்துமதிப்பாக இருபதாண்டு வைத்து நாற்பத்தொன்பதின்மர்க்கும் கூ௲௦-ஆண்டுகள் கணக்குச் செய்யப்பட்டன; ஆனுல், அதனை நடாத்திய அவ் வரசர் நாற்பத்தொன்பதின்மரிற் பலர் குறைந்த வாழ்நாளுடையராய்ச் செல்லுதலும் இயல்பேயாகலின், அக் கணக்கு இப்போது கூ௫௦-ஆண்டுகளில் வந்து ஓர் உறுதிப்பட்டு முடியலாயிற்றென்க.

இன்னும், 'இறையனுரகப்பொருள்' வந்த வரலாறு தெரிக்கும் உரைப்பகுதியும் ஆசிரியர் நக்கீரனுர் உரைத்த தாகாது. என்னை? அதன்கட் காணப்படுங் குறிப்புகள் பல பொருந்தாதனவாயிருத்தலின். அப் பொருந்தாக் குறிப்புகள் யாவையோவெனிற் காட்டுதும்: "பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றபின், மழை மிகப்பெய்து நாடு செழித்தமையிற், கலைத்த கடைச்சங்கத்தைத் திரும்பக் கூட்டலுறும் பாண்டியன் 'நூல்வல்லாரைக் கொணர்க' என ஒற்றரை எல்லாப்பக்கமும் போக்க, 'எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார்.' அதனுல் அரசன் கவலை பெரிதுடையனுக, அவ்ற்கு இரங்கி ஆலவாயமர்ந்த அவிர்சடைக் கடவுள் அறுபது சூத்திரங்களாலாய இச் சிறுநூலை ஆக்கி, அதனை மூன்று செப்பேட்டிலெழுதித் தான் அமர்ந்த இருக்கையின்கீழ் இட, அதனைக் கோயிற் பூசகன் கண்டெடுத்துக்கொணர்ந்து அரசன்பாற் காட்ட, அதனை அரசன் தன்பால் மீண்ட அந் நூல்வல்லார் கைக்

கொடுத்து, அதற்கு உரைகாண்கவென, அவரும் அதனை ஏற்றுப்போய் உரைகண்டுழி, ஒருவருரைத்தவுரை மற்றொருவ ருரைத்தவுரையொடு மறுதலைப்பட்டு, உண்மைப் பொருள் இதுதான் என்பது துணியப்படாதாம்யொழியப், பின்னர் இறைவனருளாற் பெற்ற உருத்திரசன்மரால் நக்கீரனாருரைத்தவுரையே மெய்யுரையெனத் துணிந்தார்.'' என்பது இந் நூல் வரலாற்றின் சுருக்கமாகும். இவ் வரலாறுகொண்டு, பன்னீரியாண்டு வற்கடம் நேர்தற்கு முன் நடைபெற்ற கடைச்சங்கத்திருந்த புலவரனைவரும் பொருளதிகாரம் வல்லுநராயிருந்தன ரென்பதூஉம், அவ் வற்கடத்தின்பிற் றிரும்பக் கூட்டப்பட்ட கடைச்சங்கத்திற் போந்த புலவரே பொருளதிகாரவுணர்ச்சி நன்கு வாயாதவ ராயினாரென்பதூஉம் அறியப்படும. பன்னிரண்டு ஆண்டு கட்குமுன் கலைந்து பின்னர் அது திரும்பக் கூட்டப்படு தற்குள் முன்னிருந்த புலவரனைவரும் மடிந்து போயினா லன்றிப் பொருளதிகார வுணர்ச்சி இல்லையாயொழிதல் ஏலாதன்றே! திரும்பக் கூட்டப்பட்ட அக் கடைச்சங்கத் திற் பொருளதிகாரம் வல்லார் எவரும் இருந்திலராயின், அகப்பொருளிலக்கணமாகிய 'இறையனாரகப்பொருளைப்' பாண்டிய மன்னன் அவர் கைக்கொடுத்து அதற்குப் பொருள்காணச் சொல்லுதலும், அவருள் ஒருவராகிய நக்கீரனார் அதற்கு மெய்யுரை கண்டாரென்றலும் யாங் ஙனம் பொருந்தும்? முன்னரே பொருளதிகார வுணர்ச்சி நன்கு வாயாதவராயின் நக்கீரனார் அதற்கு அத்துணை விழுமியதொரு விரிவுரை யுரைத்து அகப்பொருளிலக்க ணங்க ளெல்லாம் ஒருங்கெடுத்துத் தெளித்தல் யாங்ஙனம் கைகூடும்? பொருளதிகார வுணர்ச்சி யிலராயின், தொல் காப்பியப் பொருளதிகாரத்திலிருந்து பல சூத்திரங்களைத் தமதுரையில் நக்கீரனார் எடுத்துக் காட்டி விளக்குத லென்னை? என்று இவ்வாறெல்லாந் தடை நிகழ்த்து வார்க்கு, அவ் வரலாறு உண்மையன்றாதல் தெற்றெனவிளங்கா நிற்கும்.

மேலும், இறைவனே அந்நூலை இயற்றித் தந்தா னென்பதும் நம்புதற் குரித்தன்றாம். மக்களறிவு விளங்கு

தற்குக் கருவிகளான பல அமைதிகளை வகுத்து, அவ் வாற்றான் அவரறிவினுண் ணின்று அதனை யியக்கி, அம் முகத்தால் அம்மக்கடாமே பல அரும்பெரு நூல்களையும் புதுமைகளையும் ஆக்குமாறு இறைவன் புரிந்து வருதலைக் காண்கின்றாமே யன்றி, அவன்றானே நூல்களையும் புதுமைகளையும் ஆக்குதல் யாண்டுங் கண்டாமில்லை. மேனாட்டு வெண்மக்கள் நிலத்திலும் நீரிலும் வானிலுஞ் செல்லுமாறு அமைத்திருக்கும் பொறிகளின் புதுமைகளைக் காண்பவர்க்குக், கடவுளன்றி மக்களும் இங்ஙனம் இவற்றைச் செய்தல் இயலுமோ என்று இறும்பூது எழாநிற்கும். இத்தகைய புதுமைகளெல்லாம் மக்களறிவினாற் செய்யப்படுவனவாயிருக்க, இவற்றோடொத்த அருமைப்பாடு இல்வாய், மக்களியற்கை உலக வியற்கைகளை யுள்ளவாறு ஆராய்ந்து விளக்கும் ஆராய்ச்சி யொன்றேயுடைய 'இறையனாரகப்பொருள்' போன்ற நூல்கள் மட்டும் இறைவனால் ஆக்கப்பட்டன வென்றல் ஒரு சிறிதும் நம்பற்பாலதன்றாம். ஆகவே, பொய்யும் புரட்டும் நிறைந்த கதை நூல்களையுங்கூட இறைவன் வாய்மொழியெனக் கூசாதுரைக்கும் பிற்காலத்துப் பொய்யர் மலிந்த புராண காலத்திலே, இக் கதையுங் கட்டிவிடப்பட்டதொன்றாகல் வேண்டுமேயல்லாது, பொய்யா நாவினரான நக்கீரர் முதலான சங்கப்புலவர் காலத்தில் இக்கதை வழங்கியதாகாது. தொல்காப்பிய பொருளதிகாரத்திலுள்ள 'களவியல்,' 'கற்பியல்' என்பன மிக விரிந்து கிடத்தலின், அவற்றைச் சுருக்கி அறுபது சூத்திரத்தில் ஒரு சிறு நூலை எவரோ ஒரு சிறந்த புலவர் இயற்றி, அதனைப் பனையேட்டிற் பொறித்துவைப்பிற் செல்லரித்துவிடுமென அஞ்சிச், செப்பேட்டிற் பொறித்துவைத்தாராகல் வேண்டும். அஃது ஆலவாய்க் கோயிலில் இறைவன் திருவுருவத்தின்கீழ் வைக்கப்பட்டிருந்ததனை உற்றுநோக்குமிடத்துப், பண்டொருகாலத்திருந்த அக் கோயிற் பூசகரொருவராதல், அல்லதவர்க்கு நேயரான பிறரொருவராதல் அந்நூலை யியற்றினாராகல் வேண்டும். பின்னர் அஃது இறைவன் திருவுருவத் தவிசின்கீழிருந்து எடுக்கப்பட்ட ஏதுவினால், அஃது இறைவனாலேயே இயற்றப்பட்ட

தாகுமெனக் கருதிவிடலாஞர். பாண்டியனது கவற்சி கண்டு இறைவனே யியற்றினனாயின், உடனே வெளிப் படுக்கப்படுவ தாகிய அந் நூலைச் செல்லுக் கஞ்சிச் செப் பேட்டிற் பொறிக்க வேண்டுவது இன்ரும். செப்பேட்டிற் பொறிக்கப்பட்டதென்பது கொண்டே அது பண்டிருந்த புலவரொருவரால் ஆக்கப்பட்ட தென்பது போதரும்.

இங்ஙனங் கண்டெடுக்கப்பட்ட இறையனாரகப் பொருள் என்னும் நூல் திட்பநுட்பஞ் செறிந்து, பரந்த தொல்காப்பியப் பொருளிலக்கணச் சுருக்கமாய், அவ் விலக்கணப் பொருளைத் தெளித்துரைக்கும் பெற்றி கண்டே, பாண்டிமன்னன் அதனை வழங்குவித்தற் பொருட்டு அதற்கொரு நல்லுரை காணுமாறு புலவரை ஏவினன். ஒரு நூலுக்குப் பலர் உரை வகுக்குங்கால், அப் பலருரையும் ஒன்ரோடொன் ருெவ்வாமலிருத்தல் எங்கும் நிகழும் இயற்கை நிகழ்ச்சியேயாம். இனி, அவ் வுரைகள் பலவற்றுள்ளுஞ் சிறந்ததொன்றனைத் தெரிந் தெடுத்தல் பேரறிவு வாய்ந்த சான்ருேர்க்கு எளிதிற் கைகூடுவதேயாகவும், இதன் பொருட்டுத் தெய்வத் தன்மை மிக்க ஓர் ஊமைப்பிள்ளையி னுதவியைத் தேடினு ரென்றல், பின்வந்த புராண காலத்தவர் கட்டிவிட்ட கதையேயாகுமல்லால், உண்மைப் பேரறிவுசான்ற சங்கப் புலவர் குழாத்திற்குச் சிறிதும் அடாது. அப் புலவர் பெருமக்கள் தம்முள் இகலாமைப் பொருட்டுத், தம்மாற் பெரிது பாராட்டப்பட்ட 'உருத்திரசன்மர்' என்னும் நடு நிலைதிறம்பாப் புலவர்பெருமானை அவற்றுள் விழுமிய வுரை இதுவெனத் தேற்றும் நடுவராக எல்லாரும் ஒருப் பட்டு வைத்து, அவர் தம்மால் நக்கீரனுருரையே அந் நூலுக்கு மெய்யுரையெனக் கண்டாரென்க. இவ் வுண்மை நிகழ்ச்சியே பிற்போந்த புராண காலத்தவரால் திரித் துரைக்கப்பட்ட தாகலின், இவ்வுரைப்பாயிரப் பகுதி நக்கீர ஞருரைத்த தன்றென்பது ஒருதலை.

இனி, இவ் 'இறையனாரகப் பொரு'ளுக்கு நக்கீரனார் தாம் உரைத்த உரையைத் தம் மகனார் கீரவிகொற்ற

ஞர்க்கு விளக்கிச் சொல்லி அதனை அவர்கைக் கொடுத்தார்; கீரவிகொற்றனார் அங்ஙனமே அதனைத் தம் மாணாக்கர் தேனூர் கிழார்க்கு விளக்கிச் சொல்லி அதனை அவர்கைக் கொடுத்தார்; அவர் அதனைப் படியங் கொற்றனார்க்குக் கொடுத்தார்; படியங்கொற்றனார் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கும், அவர் மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கும், அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங் குமரனார்க்கும், அவர் திருக்குன்றத் தாசிரியர்க்கும், அவர் மாதவளனார் இளநாகனார்க்கும், அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்குமாக அதனை விளக்கி யுரைத்து அவ்வுரையினை இங்ஙனம் வழிவழியே வழங்குவித்தார் என்னும் உரைப்பகுதியும் நக்கீரனார் உரைத்ததாகாது; என்னை? நக்கீரனார் தமக்குப் பின்வந்த பத்துத் தலைமுறைப் புலவரை முன்னெடுத்துரைத்தலாகாமையால். ஒரு தலைமுறைக்கு முப்பதாண்டு வைத்துக் கணக்குச் செய்யின், இப் பதின்மர்க்கும் முந்நூறாண்டுகளாகும். இறுதிக்கண் நின்ற முசிறியாசிரியர் நீலகண்டனார் ஆசிரியர் நக்கீரனார்க்கு முந்நூறாண்டு பிற்பட்டு வந்தோராகையால், அவரே இப் பத்துத் தலைமுறை கூறும் உரைப் பகுதியினைச் சேர்த்தாராதல் வேண்டுமென்பது.

மேலும், பன்னீரியாண்டு வற்கடம் நிகழ்ந்ததும், அது நிகழ்ந்த ஞான்று கடைச்சங்கம் கலைக்கப்பட்டு அது நீங்கியபின் திரும்பக் கூட்டப்பட்டதும் உண்மையேயாயினும், அவ்வாறது பெயர்த்துங் கூட்டப்பட்டுழி 'இறையனாரகப்பொருள்' கண்டெடுக்கப்பட்ட தென்றலும், அப்போதற்கு நக்கீரனார் முதலான ஆசிரியர் உரைகண்டாரென்றலும் மெய்யாகா. ஏனெனில், அவ் வற்கடமுங் கடைச்சங்கங் கலைத்துக் கூட்டப்பட்டதும் மேலே காட்டியவாறு கிறித்து பிறப்பதற்கு இருநூற்றைம்பதாண்டுகளின் முன் நிகழ்ந்தனவாகும்; மற்று, ஆசிரியர் நக்கீரனாரோ கிறித்து பிறந்த முதல் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தோராதலை மேலே ௩௭௬-ஆம் பக்கத்தில் விளக்கிக்காட்டினேம். தமது 'உரை அரங்கேறியது உக்கிரப்பெருவழுதியின் அவைக்

களத்திலேயாம் என்று நக்கீரனாரே கூறுதலாலும், அவ் வுக்கிரப் பெருவழுதி யென்பான் 'கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியே' யாவனென மேலே ௩௬௨, ௩௬௩-ஆம் பக்கங்களிற் காட்டப்பட் டிருத்தலாலும், இவ்விருவர் காலமுங் கி. பி. முதல்நூற்றாண்டிற்குமேற் செல்லாமை யாலுங் கி. பி. முதல்நூற்றாண்டில் நிகழ்ந்த இந் நிகழ்ச்சி களைக், கி. மு. மூன்றாம்நூற்றாண்டில் நிகழ்ந்த வற்கட காலத்தை யுடுக்கவைத்துரைக்கும் அவ்வுரைப் பகுதி பெரியதொரு தலைதடுமாற்றத்தை விளைக்கக் காண்டலின், அது பிற்காலத்தவர் எழுதி நுழைத்ததே யல்லாமல் நக்கீரனார் உரைத்த தன்றென ஓர்க. இவ்வாறாக, ஆக்கி யோன் பெயர் முதலிய நூற்பாயிர வுறுப்புகள் பதினொன் றனையும் விளக்கிச் சொல்லும் நக்கீரனாரது பாயிர வுரைக் கிடையே மடுக்கப்பட்ட உரைப்பாயிரவுரை, நக்கீர னார்தம் மாணாக்கர் மரபில் வந்த பின்னையோர் ஒருவராற் சேர்க்கப்பட்டதாதல் தெளிந்துகொள்க. "அது பாயிரத் துள்ளே உரைத்தாம்" என நக்கீரனார் தமதுரையிற் குறிப்பிட்டவை, தாம் உரைத்த நூற்பாயிரவுரையி லுள்ளனவற்றையே சுட்டக் காண்டுமன்றிப், பிறர் அதனிடையே செருகிய உரைப்பாயிரத்தி லுள்ளவற்றை யல்லாமையால், நக்கீரனார்தம் அவ் வுரைக்குறிப்புக் கொண்டு பாயிரவுரை முற்றும் நக்கீரனாரே யெழுதியதா மென்றார் கூற்று, அவ் வேறுபாடுகளைப் பகுத்தறிய மாட்டார்தங் கூற்றாயினவாறு கண்டுகொள்க; இதனை முன்னரும் உரைத்தாம்.

இனி, முதற்சூத்திர வுரையினீற்றில் 'என்மனார்' என்பதற்குச் சொன்முடிபு கூறிய உரைப்பகுதியும் நக்கீரனா ருரைத்ததன்றென்பது மேலே ௬௨௯-ஆம் பக்கத்தில் விளக்கிக்காட்டினும்; அங்கே அதனைக் காண்க.

இனி, இறையனாரகப்பொருட் சூத்திரங்களுக்கு நக்கீரனார் உரைத்த உரைக்கிடையே அவர்தம்மால் மேற்கோள்களாகக் காட்டப்பட்ட செய்யுட்கள், "அக நானூறு,' 'ஐங்குறுநூறு,' 'குறுந்தொகை,' 'நற்றிணை,'

'கலித்தொகை,' 'கூத்தநூல்,' 'திருக்குறள்,' 'காக்கை பாடினியம்,' 'தொல்காப்பியம்' முதலான தமிழ்ச்சங்க நூல்களினின்று எடுக்கப்பட்டன வாகும். அகநானூற்றிலிருந்து எட்டுச் செய்யுட்களும், ஐங்குறுநூற்றிலிருந்து மூன்று செய்யுட்களுங், குறுந்தொகையிலிருந்து பதினெட்டுச் செய்யுட்களும், நற்றிணையிலிருந்து பன்னிரண்டு செய்யுட்களுங், கலித்தொகையிலிருந்து இரண்டு செய்யுட்களுங், கூத்த நூலிலிருந்து ஒரு செய்யுளுங், திருக்குறளிலிருந்து ஐந்து செய்யுட்களுங், காக்கை பாடினியத்திலிருந்து ஒரு சூத்திரமுந், தொல்காப்பியத்திலிருந்து முப்பத்திரண்டு சூத்திரங்களும், பெயர் தெரியாத ஏனைப் பல பண்டை நூல்களிலிருந்து நாற்பத்தாறு செய்யுட்களும் ஆக நூற்றிருபத்தெட்டுச் செய்யுட்கள் அவ்வுரைப் பொருளை நன்கு விளக்குதற்கு மேற்கோள்களாக அவர் தம்மால் எடுத்துக்காட்டப்பட் டிருக்கின்றன. இங்ஙனங் காட்டப்பட்ட இப் பழந்தமிழ்ப் பாக்களே உரைப்பொருளை மாணுக்கன் இனிது தெளிந்து கொள்ளுதற்குப் போதுமாவனவாம்; இவற்றின் வேருக மேலும் பல செய்யுட்களையெடுத்துக் காட்டுதல், வேண்டாகூறல் மிகைபடக்கூறல் கூறியதுகூறல் என்னுங் குற்றங்கட் கிடனுதல் அவ்வுரை மேற்கோள்களை நுணுகி யாராய்வார்க்குத் தெற்றென விளங்கும். இதற்குச் சான்ருக ஈண்டு ஒன்றெடுத்துக் காட்டுதும்: எழில்நலங் கிளர்ந்த ஒரு குமரிபாற் காதல் கைம்மிக்கு மெலிந்து வந்த தன் தலைமகனை நோக்கி அவன் பாங்கன் அவற்கு உற்றதுவினவ, "நெருநல் இவ் வகையார் ஒருவரைக் கண்டேற்கு என்னுள்ளம் பள்ளத்துவழி வெள்ளம்போல ஓடி இவ்வகைத் தாயிற்றென்று சொல்லும்; அதற்குச் செய்யுள்," (௩-ஆஞ் சூத்திர உரை),

"சிறுவெள் ளரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு
இளையள் முளைவாள் எயிற்றள்
வளையுடைக் கையள்எம் அணங்கி யோளே."

(குறுந்தொகை, ககக)

இதன்கட் போந்த உரைக்கு எடுத்துக்காட்டிய இச்செய்யுளும் மற்றொரு குறுந்தொகைச் செய்யுளும் உரையாசிரியன் கூறிய பொருளை விளக்குதற்குச் சாலுந் தன்மையவா யிருக்கின்றன. இவ்வா றிருப்பவும், மேற் காட்டிய குறுந்தொகைச் செய்யுட் பொருளையே கொண்ட "அளையா ரரவின் குருளை அணங்க," "அலையார் கழன் மன்னர்," "பொரு நெடுந்தானைப் புல்லார் தம்மை" என மேலும் மூன்று செய்யுட்கள் கூறியது கூறலாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. தாம் எடுத்துக்காட்டிய குறுந் தொகைப் பாக்களினாலேயே இனிது விளங்கும் அப் பொருளுக்கு நக்கீரனார் மேலும் பல செய்யுட்களை யெடுத்துக் காட்டிக் கூறியதுகூறல் மிகைபடக்கூற லென்னுங் குற்றங்களுட் படுவாரல்லர். ஆசிரியர் நக்கீரனார் இத் தகைய குற்றங்களுட்படும் நீரரல்லர் என்பது, அவர்மிக நுணுகி யாராய்ந் தெழுதும் இவ் வுரையில் ஒரு சொல்லாயினும் வேண்டா கூறலாய் நில்லாமல் எல்லாம் ஒன்றோடொன்று தொடர்புற்று ஒன்றற்கொன்று இன்றியமையாதனவாய் நிற்றலை உற்றுநோக்குவார்க் கெல்லாம் நன்கு விளங்கும். இங்ஙனமே தாங்கூறும் உரைப்பொருள்கட்கு அவர் மேற்கோள்களாக எடுத்துக் காட்டிய பழந் தமிழ்ப்பாட்டின் பொருளையே நுதலும் பலப்பல கட்டளைக் கலித்துறைப் பாக்கள் ஆங்காங்கு வேண்டா கூறலாய்ச் சேருகப்பட்டிருத்தலை ஆராய்ந்து காணவல்ல அறிவு மதுகை யுடையார், அக் கலித்துறைச் செய்யுட்களும் அங்ஙனமே 'சிலப்பதிகாரங்' கானல்வரியினின் றெடுத்துக் காட்டப்பட் டிருக்கும் ஏழு செய்யுட்களும் நக்கீரனாற் காட்டப்பட்டன ஆகாமையினைத் தெற்றெனை அறிந்து கொள்வர். மேலும், இக் கட்டளைக் கலித்துறைப்பா நக்கீரனார் இருந்த கி. பி. முதல்நூற்றாண்டில் வழங்கிய தூஉம் அன்று; அது முதன்முதல் வழங்கத் துவங்கிய தெல்லாங் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்குப் பின்னரேயாம்; கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பழந்தமிழ் நூல்களில் ஓரிடத்தாயினும் இக் கட்டளைக் கலித்துறைப் பாவினைக் காண்டல் இயலாது. ஆகவே,

வேண்டா கூறலாய் இவ் வுரையின்கட் போந்த கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் அத்துணையும், நக்கீரனார்க்குப் பல நூற்றாண்டுகள் பிற்பட்டுவந்த ஒருபுலவராற் செய்து சேர்க்கப்பட்டனவாகுமே யல்லாது, நக்கீரனால் எடுத்துக் காட்டப்பட்டன ஆகாவென்று தேர்ந்து கொள்க.

அற்றேல ஃதாக, மாணிக்கவாசகப் பெருமான் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் இருந்தனராயின், அவர் அருளிச்செய்த 'திருச்சிற்றம்பலக்கோவையா'ரில் அகப் பொருட்டுறைகளை விளக்குங் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் மலிந்துகிடக்கவும், அவைதம்மை விடுத்து அவ் வகப்பொருட்டுறைகளையே நுதலும் வேறு முந்நூற் றிருபத்தொன்பது கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களைப் புதியவாய்ப் படைத்து, அவற்றை அப் பின்வந்த புலவர் அவ் விறையனாரகப்பொருளுரையி னிடையிடையே செருகி விட்ட தென்னையெனிற், கூறுதும்: இக் கட்டளைக் கலித் துறைச் செய்யுட்கள் முந்நூற்றிருபத் தொன்பதிலும் புகழ்ந்துபாடப் பெறுவோன் ஆண்மைமிக்க ஒரு பாண்டிய வேந்தனே யாவன்; அவ் வேந்தன் பெயர்கள்: உசிதன், பராங்குசன், பஞ்சவன், பூழியன்மாறன், நெடுமாறன், அரிகேசரி, வரோதயன், விசாரிதன், அதிரியன், நேரியன், வானவன்மாறன், இரணாந்தகன், சத்துருதுரந்தரன், விசயசரிதன், கலிமதனன் முதலிய பலவாகச் சொல்லப்படுகின்றன. அவன் பாழி, விழிஞம், கோட்டாறு, ஆற்றுக்குடி, பூலந்தை, சேவூர், நறையாறு, கடையல், நெல்வேலி, வல்லம், மணற்றிமங்கை, வெண்மாத்து, களத்தூர், நாட்டாறு, நெடுங்களம், குளந்தை, சங்கமங்கை, வாட்டாறு, மேற்கரை முதலான பத்தொன்பதூர்களில் நடந்த பெரும் போர்களிற் சேரமன்ன னொருவனை அடுத்தடுத்து வென்றமை இக் கலித்துறைச் செய்யுட்களிற் பலகாலும் உயர்த்துச் சொல்லப்படுகின்றது. இவ் வாற்றால் இப் பாண்டிவேந்தனுக்கு, அவன்காலத் திருந்த சேர மன்ன னொருவனே பெரும் பகைவனா யிருந்தமை அறியப்படும். ஈதிங்ஙனமாகவும், "கோடன் மலர்ந்து" என்னும் ௩௨௩-

ஆஞ் செய்யுளிற் 'பொன்னி நாடன்' என்னும் ஒரு சொற்றொடர் காணப்படுதல் கொண்டு, அவன்காலத்துச் சோழ மன்னனொருவனையும் இவன் வென்றானெனப் பொருள் பண்ணினாரும் உளர்.[1]

"பாழிவென்ற
ஆடல் நெடுங்கொடித் தேர்அரிகேசரி அந்தண் பொன்னி
நாடன் பகைபோல் மெலிகின்ற தென்செய்ய நன்னுதலே."

என அச் செய்யுளிற் போந்த அடிகள் 'பாழியென்னும் ஊரிற் போர்க்களத்தே வெற்றிகொண்ட ஆடுதலையுடைய நீண்டகொடிக் கட்டிய தேரினையுடைய அரிகேசரி' எனவும், 'அழகிய குளிர்ந்த காவிரியினையுடைய நாட்டுக்குத் தலைவன்' எனவும், 'அத்தகைய தலைவற்குப் பகையாயினார் மெலிவடைதல்போலச் செவ்விய நன்னுதலையுடைய இந் நங்கையும் மெலிவடைதலென்னை?' எனவும் பொருடருதலின், 'அரிகேசரி,' 'பொன்னிநாடன்' என்னும் இரு பெயரும் ஓரரசன் மேலவாயே வருதல் வெள்ளிடை மலை போல் விளங்கற்பாற்று. இச் செய்யுளிற் குறிப்பிடப்பட்ட பாண்டி மன்னன் தனது பாண்டி நாட்டுக்கேயன்றிச் சோழ நாட்டுக்குந் தலைவனாயிருந்தனனென்னும் அத் துணையே இதன்கட் பெறப்படுகின்றதல்லாமல், இவன் சோழ மன்னனை வென்றானென்பதும் அதனாற் பெறப்படவில்லை. சோழநாட்டுக்குந் தலைவனென்றமையானே அது பெறப் படுமாலெனின், அஞ்ஞான்றைச் சோழ மன்னற்கு அரசுக் குரிய புதல்வன் இல்லையாய்ப் புதல்வியொருத்தியே இருந் தனளாயின், அப் புதல்வியை மணந்துகொண்ட முறை யால் அப் பாண்டிவேந்தன் சோழ நாட்டுக்குந் தலைவ னாதல் கூடுமாகலின், அந் நாட்டினுரிமை அவற்குச் சொல் லியதே கொண்டு அவன் சோழனை வென்றானென்றல் பொருந்தாதென மறுக்க.

இனி, இப் பாண்டிவேந்தன் பெயர்கள் பலவற்றுள். 'நெடுமாறன்' என்பதும் ஒன்றாய்க் காணப்படுதலானும்,

---

1. Dr. S. Krishnaswami Aiyangar in his 'The Beginnings of South Indian History,' p. 267.

இவன் 'நெல்வேலி'யிற் போர்புரிந்து பகைவரைத் தொலைத்தானென்பது சொல்லப்படுதலானும், திருஞான சம்பந்தப்பெருமான் காலத்தவனும் நெல்வேலிச் செருக்களத்தில் வந்தெதிர்ந்த வடபுல மன்னரைச் சாய்த்தவனுமாகிய 'நின்றசீர் நெடுமாற பாண்டியனே' இறையனாரகப் பொருளுரையி னிடையிடையே செருகப்பட்ட கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களிற் குறிப்பிடப் பட்டவனாவனென்று கொள்வாரும் உளர். அது பொருந்தாது. நின்றசீர் நெடுமாறன் நெல்வேலிப் போர்க்களத்திற் சாய்த்தது வடக்கிருந்து படைதிரட்டி வந்த வடுகமன்னரையேயாம்; அஃது,

"ஆயவர சளிப்பார்பால் அமர்வேண்டி வந்தேற்ற
சேயபுலத் தெவ்வரெதிர் நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடன்முடுகும் பரிமாவின் பெருவெள்ளங்
காயுமதக் களிற்றினிரை பரப்பியமர் கடக்கின்றார்."

எனவும்,

"இனையகடுஞ் சமர்விளைய இகலுழந்த பறந்தலையிற்
பனைநெடுங்கை மதயானைப் பஞ்சவனார் படைக்குடைந்து
முனையழிந்த வடபுலத்து முதன்மன்னர் படைசரியப்
புனையுநறுந் தொடைவாகை பூழியர்வேம் புடன்புனைந்து."
(நின்றசீர் நெடுமாற நாயனார், ௩, எ)

எனவும் போந்த பெரியபுராணச் செய்யுட்களால் நன்குணரப்படும். மற்று, இறையனாரகப்பொருளுரைக் கலித்துறைகளிற் சுட்டப்பட்ட பாண்டியனே நெல்வேலிப் போர்க்களத்திற் றொலைத்தது இன்னாரையென்பது சொல்லப்படவில்லை; வாளா,

"நீடிய பூந்தண் கழனி நெல்வேலி நிகர்மலைந்தார்
ஓடிய வாறுகண் டொண்சுடர் வைவே லுறைசெறித்த
ஆடியல் யானை அரிகேசரி." (உஉ)

என்று பொதுப்படப் பகைவரை ஓட்டினனென்னு மளவே சொல்லப்பட்டிருக்கின்றது. நெல்வேலியில் அவனால் முறி

வுண்ட பகைவர் பெயர் குறிக்கப்பட்டிலதேனும், விழிஞம், கோட்டாறு, ஆற்றுக்குடி, பூலந்தை, சேவூர், நறையாறு, கடையல் முதலான போர்க்களங்களில் அவனாற் றோலை வுண்டோன் ஒரு சேரமன்னனே யென்பது அடுத்தடுத்து விளக்கமாய்ச் சொல்லப்படுதலின், நெல்வேலி முதலான ஏனைப் பறந்தலைகளிலும் அப் பாண்டியனாற் றோல்வி யுற்றோன் ஒரு சேரமன்னனே யாவனன்றி வடபுலமன்னன் ஆகான். ஆகவே, நெல்வேலிப் போரில் வென்றான் என்னுங் குறிப்பு ஒன்றேகொண்டு, இறையனாரகப்பொரு ளுரைக் கலித்துறைப் பாக்களில் மொழியப்பட்டோன் 'நின்றசீர் நெடுமாறனே' யென்றல் பெரிதும் பிழைபடுவ துடைத்தாம்.

இனிச், சின்னமனூரிலும் வேள்விக் குடியிலுங் கண் டெடுக்கப்பட்ட பட்டையங்களானே இந் நின்றசீர் நெடு மாற பாண்டியனுக்கு முன்னே 'செழியன் சேந்தன்,' 'மாற வர்மன் அவனி சூளாமணி,' 'கடுங்கோன்' எனப் பெயரிய பாண்டிய அரசர் மூவர் அரசுபுரிந்தமை அறியக் கிடக்கின் றது. அம் மூவரில் நடுநின்ற 'அவனி சூளாமணி' என்னும் பாண்டியனுக்கும் 'மாறன்' என்னும் பெயர் உண்மை தெளியப்படுதலானும், நடுக்காலத்துச் சமண் தமிழ்க் காப்பியங்களுள் மிகச் சிறந்ததாகிய 'சூளாமணி' என்பது இப் பாண்டிமன்னன் பெயரால் இவன்மகன் 'செழியன் சேந்தன்' காலத்தில் ஆக்கப்பட்டதனை உற்றுநோக்கு மிடத்து அவ் 'அவனி சூளாமணி மாறன்' தமிழ்மொழிக்கண் மிக்க அன்புடையனாய் அதனை வளர்த்தலில் நிரம்பக் கருத்தூன்றி நின்றமை புலப்படுதலானும் 'இறையனாரகப் பொருளுரை'யின் இடையிடையே செருகப்பட்ட கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் அத்துணையும், அவனது தமிழ்ப் பற்றினையும் அவன்றன் பேராண்மையினையும் பாராட்டுதற்பொருட்டு அவனது அவைக்களத்துப் புலவ ரொருவராற் பாடப்பட்டமை துணியப்படும். இவ் அவனி சூளாமணி மாறன் காலத்திற் றமிழ்மொழி மதுரையில் மிகவுஞ் செழிப்புற் றிருந்த தென்பது,

"வண்டுறை வார்பொழில் சூழ்நறை யாற்றுமன் ஓடவைவேல்
கொண்டுறை நீக்கிய தென்னவன் கூடற் கொழுந்தமிழின்
ஒண்டுறை மேலுள்ளம் ஓடியதோ அன்றி யுற்றதுண்டோ
தண்டுறை வாசிந்தை வாடிட என்நீ தளர்கின்றதே."

என்னும் ௨௩-ஆம் கலித்துறைச் செய்யுளிற் கூறப்படுதலாலும், அவன் தமிழ்மொழி யுணர்ச்சியிலும் நிரம்பி யிருந்தானென்பது, "உரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதன்"(௨), "பாவணை யின்றமிழ் வேந்தன் பராங்குசன்" (௧௩), "ஆய்கின்ற தீந்தமிழ் வேந்த னரிகேசரி" (௨௮), "அந் தீந்தமிழ்நர் கோமான்" (௫௦), எனப் பலகாலும் அவன் அக் கலித்துறைச் செய்யுட்களிற் பாராட்டப்படுதலாலும் நன்கு தெளியப்படும். இவ் வவநி சூளாமணி மாறனுக்கும், இவன்றன் பேரனாகக் கருதப்படும் நின்றசீர் நெடுமாறனுக்கும் இடையில் அறுபதாண்டுகளாவது சென்றதாகல்வேண்டும். நின்றசீர்நெடுமாறன் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே இருந்தமை கல்வெட்டுகளாற் றுணியப்பட்டிருத்தலின், அவற்குப் பாட்டனை அவநி சூளாமணிமாறன் கி. பி. ஆறும் நூற்றாண்டின் முற்பகுதியி லிருந்தானாதல்வேண்டு மென்பதுந் தானே பெறப்படும். இம் மன்னர்பிரான் காலத்திற் றமிழ்மொழிப் பயிற்சியும் ஆராய்ச்சியும் மிக்கு ஓங்கவே, அஞ்ஞான்று பெரிது பயிலப்பட்டுவந்த இறையனாரகப்பொரு ளுரையி னிடையே, அப் பாண்டி மன்னன்மேற் பாடிய கலித்துறைச் செய்யுட்கள் எல்லாவற்றையும் அவற்றைப் பாடிய புலவரே சேர்த்துவிட்டாரென்க. இவ்வாற்றால், இப் பாண்டிவேந்தன் 'இறையனாரகப் பொருளுக்கு' ஆசிரியர் நக்கீரனா ரியற்றிய சாலச்சிறந்த தமிழுரைப் பயிற்சியை மிகப் பரவவைத்தா னென்பதூஉம், அது பற்றியே அவன் காலத்துப் புலவரொருவர் அவன்மேற் பாடிய அக் கலித்துறைச் செய்யுட்களை அதன்கட் சேர்க்கலாயினா ரென்ப தூஉம் அறியற்பாலன. மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த 'திருச்சிற்றம்பலக் கோவையா'ரின் அகப் பொருட் கலித்துறைகள் சைவசமயத் தெய்வமாகிய

சிவபெருமான் மேல்வாய் வருதலிற் பொதுநூலாகிய இறையனார் களவியலுரையில் அவற்றை யெடுத்துக் காட்டுதல் நடுவன்றாகலானும், அல்லது அவற்றை யெடுத்துக் காட்டலுறின் அக்களவியலுரைப் பயிற்சியை வளர்த்துத் தமிழை யோம்பித் தம்போன்ற தமிழ்ப்புலவரைப் புரக்கும் அவ் வேந்தர் பெருமானைப் பாராட்டுதற்கு விழைந்த தங் கருத்து நிரம்பாமையானும் அப் புலவர் அவ் வரசன் மேற் பாடிய கலித்துறைச் செய்யுட்க ளவ்வளவையும் அவ்வுரையின்கட் சேர்த்துவிடலாயின ரென்று தெளிந்து கொள்க.

இனி, இறையனாரகப்பொருள், உ-ஆஞ் சூத்திர வுரையில் 'நயப்பு' என்பதற்கு ஆசிரியர் நக்கீரனார் உரைத்த உரையினிடையே செருகப்பட் டிருக்கும,

"வேறு மெனவின் றிகன்மலைந் தார்விழி ஞத்துவிண்போய்
ஏறுந் திறங்கண்ட கோன்றென் பொதியில் இரும்பொழில்வாய்த்
தேறுந் தகையவண் டேசொல்லு மெல்லியல் செந்துவர்வாய்
நாறுந் தகைமைய வேயணி யாம்பல் நறுமலரே."

என்னுஞ் செய்யுளும் அதனுரையும் அவர் தம்மால் வரையப்பட்டன ஆகா. 'நயப்பு' என்பதற்கு நக்கீரனாருரைத்த உரைப்பொருளையே இச் செய்யுள் தன்கட்கொண்டு நிற்கின்றது. 'நயப்பு' இன்னதென விளக்கித் தாம் கூறிய உரைக்குப்பின் அவர் தம்மாற் காட்டப்பட்ட மேற்கோள் "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் பழைய 'குறுந் தொகைச்' செய்யுள் ஒன்றேயாம். இக் குறுந்தொகைச் செய்யுட் பொருளே அடங்கிய மேலும் ஐந்து கலித்துறைச் செய்யுட்கள் வேண்டா கூறலாய்ப் பின்னும் ஈண்டுச் சேர்க்கப்பட்டிருத்தலை உற்றுநோக்குமிடத்து, இவை யெல்லாமும், இவற்றுட் சிலவற்றிற்குப் போந்த வுரைகளும் நக்கீரனார் கண்ட வுரையுட்படுவன அல்லவென்பது நன்கு புலனும். இங்ஙனமே, பிறரால் பிற்காலத்தே சேர்க்கப்பட்ட கலித்துறைச் செய்யுட்களைப் பற்றிய பிற உரைக் குறிப்புகள் சிற்சிலவும் அச் செய்யுட்களைச் சேர்த்தவர்

தம்மாலே தாம் எழுதி உடன்சேர்க்கப்பட்டனவாதல் வேண்டுமென் றுணர்ந்துகொள்க. அவையெல்லாம் ஈண் டெடுத்துக் காட்டலுறின் இது பின்னும் விரியும். இவ் வளவில், ஆசிரியர் நக்கீரனார் இறையனாரகப் பொருளுக் குரைத்த ஒப்புயர்வில்லா விழுமிய உரையி னிடையிடையே பிறராற் பின்றைக்காலத்தே சேர்க்கப்பட்டவை : நக்கீரனா ரது அவ் வுரைவந்த வரலாறு தெரிக்கும் உரைப்பகுதியும், இடையிடையே மேற்கோள்களாக வேண்டா கூறலாய்க் காட்டப்பட்டிருக்குங் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் அவ்வளவும், அக் கலித்துறைச் செய்யுட்கள் ஒரு சிலவற் றிற்கு எழுதப்பட்டிருக்கும் ஒரு சில உரைகளும் உரைக் குறிப்புகளுமே என்பது பிரித்தெடுத்துக் காட்டப்பட் டமையால், இச் சிறு பகுதிகள் ஒழிய ஏனை உரைப் பெரும் பகுதிமுற்றும் அதனிடையே விராய பழைய சங்கச் செந் தமிழ்ச் செய்யுள் மேற்கோள்களும் ஆசிரியர் நக்கீரனார் வரைந்தனவேயா மென்பது கடைப்பிடிக்க.

இனிச், 'சேரன் செங்குட்டுவன்' நூலார், 'இறையனா ரகப்பொரு' ளுரையினிடையே சேர்க்கப்பட்டிருக்குங் கலித்துறைச் செய்யுட்களிற போந்த 'அரிகேசரி பராங்கு சன்' என்பான் கி. பி. எஎ0-இலிருந்த 'ஜடில பராந்தக' னுக்குத் தந்தையே யாவனென்றும், அவன்மேற் பாடப் பட்ட கலித்துறைச் செய்யுட்களை எடுத்துக்காட்டிய 'களவியலுரை' அவ்வாற்றாற் கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதே யாகுமென்றும், நக்கீரனார் செய்த அவ்வுரை வாய்ப்பாடமாகப் பத்துத் தலைமுறை சொல்லப்பட்டுவந்து பத்தாந் தலைமுறையாகிய கி. பி. எட்டாம் நூற்றாண்டிலே தான் எழுத்துருவடைந்தமையின் அப் பத்துத் தலை முறைக்கும் முந்நூற்றாண்டு கூட்ட நக்கீரனார் இருந்தது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டேயாகல் வேண்டுமென்றுங் கூறிய கூற்றினைச் சிறிதாராய்வாம்.

செப்புப் பட்டையங்களிற் குறிப்பிடப்பட்ட 'அரிகேசரி பராங்குசன்' என்னும் பாண்டிமன்னன் குழும்பூரிலுஞ் சங்கரமங்கையிலும் பல்லவ அரசர்களை முறியடித்தவன்

என்னுந் துணையே சொல்லப்பட் டிருக்கின்றது; மற்று 'இறையனாரகப் பொருளுரை'க் கலித்துறைச் செய்யுட் களிற் புகழ்ந்து பாடப்பட்ட 'அரிகேசரி பராங்குச நெடு மாறன்' என்னும் அவநிசூளாமணி பாண்டியனே பாழி, விழிஞம், சங்கமங்கை, நெல்வேலி முதலான பத்தொன்ப தூர்களிற் சேரனொருவனைச் சிதைத்தான் என்னுந் துணையே சொல்லப்பட்டிருக்கின்றது. செப்புப் பட்டை யத்திற் கண்ட அரிகேசரி பாண்டியன் நெல்வேலியிற் போர் புரிந்து சேரனொருவனை வென்றானென அச் செப்புப் பட்டையங்களுள் ஒன்றாயினுங் குறிக்கக் காணேம்; பல்ல வரை வென்ற செப்புப்பட்டையப பாண்டியனையுஞ், சேரனை வென்ற களவியலுரைக் கலித்துறைப் பாண்டியனையும் ஒருவராக நாட்டுதற்குச் சான்று ஒன்றுதானுங் காணப் படா தாகவும் அவ் விருவரையும் ஒருவரென அஞ்சாது கூறத் துணிந்த செங்குட்டுவன் நூலாரது துணிவை என்னென்பேம்! அற்றன்று, செப்புப் பட்டையத்திற் குறிக் கப்பட்ட 'சங்கர மங்கை' என்னும் ஊரே களவியலுரைக் கலித்துறையிற் 'சங்கமங்கை' எனக் கூறப்பட்டதென உரையாமோவெனின், அவ்வாறுரைத்தற்குத்தான் சான் றென்னை? அரிகேசரி பாண்டியன் சங்கரமங்கையில் வென் றது பல்லவ அரசரையேயாம்; மற்று, அவநிசூளாமணி பாண்டியனே சங்கமங்கையிலும் ஏனைப் பல போர்க்களங் களிலும் வென்றது ஒரு சேரமன்னனையேயாம்; களவிய லுரைக் கலித்துறைச் செய்யுட்கள் ௩௨௯-இல் ஓரிடத்தா யினும் அவன் பல்லவரை முறியடித்தானென்பதுஞ் சொல் லப்படவில்லை; அவன் போர்புரிந்த, பத்தொன்பது ஊர்ப் போர்க்களங்களிற் 'குழும்பூர்' ஒன்றுதலுங் காணப்பட வில்லை. ஆகவே, சங்கரமங்கை, குழும்பூர் என்னும் இடங் களிற் பல்லவரை முறியடித்த 'அரிகேசரி பராங்குச மாற வர்மனும்,' பாழி, விழிஞம், சங்கமங்கை, நெல்வேலி முத லான பத்தொன்பதூர்ப் பறந்தலைகளிற் சேரமன்னன் ஒரு வனைவென்ற 'அவநி சூளாமணி நெடுமாறனும்' வெவ்வேறு காலத்திருந்த வெவ்வேறு பாண்டி மன்னரே யாவரல்லது, அவ் விருவரும் ஒருவராகாமை உள்ளங்கை நெல்லிக்

கனிபோல் தெள்ளிதின் விளங்கற் பாலதாம். அல்ல தூஉங் களவியலுரைக் கலித்துறைச் செய்யுட்களில் நுவலப்பட்ட பத்தொன்பதூர்ப் பெரும் போர்களில் ஓரிடத் தாயினும் பல்லவ அரசர் மொழியப்படாமையின், இத் தென்னாட்டின்கட் பல்லவராட்சி நிலைபெறுதற்குமுன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையே அக் கலித்துறைச் செய்யுட்கள் மொழிகின்றன வென்பது திண்ணமாம். அக் கலித் துறைச் செய்யுட்கள் அத்தனையும் ஒரு பாண்டிவேந்தன் மேலனவாய்ப் பாடப்பட்டிருத்தலை உற்றுநோக்குவார் எவர்க்கும், அவை அவ்வரசனாற் புரக்கப்பட்ட ஒரு புலவ ரால் அவ் வேந்தன் காலத்திலேயே இயற்றப்பட்டன வாதல் வேண்டுமென்பது புலனாகாநிற்கும். கி. பி. எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் 'அரிகேசரி பராங்குச மாற வர்மன்' என்னும் ஒரு பாண்டியனும், கி. பி. ஏழாம் நூற் றாண்டின் முற்பாதியில் நெல்வேலிக்கண் வில்வேலியை முறியடித்த 'அரிகேசரி மாறவர்மன்' என்னும் ஒரு பாண் டியனும், கி. பி ஆறாம் நூற்றாண்டின் முற்பாதியில் 'அவநி சூளாமணி மாறவர்மன்' என்னும் ஒரு பாண்டிய னும் ஆகப் பாண்டிமன்னர் மூவர் 'மாறன்' என்னும் பெயருடையராய் அரசுபுரிந்தமை செப்புப் பட்டையங்க ளான் அறியக் கிடக்கின்றது. 'மாறன்,' 'அரிகேசரி,' 'பராங்குசன்' என்னும் பெயர்கள் பாண்டிவேந்தர் பலர்க் குப் பொதுவாகக் காணப்படுதலால், அப் பெயர்களை மட்டுங் கொண்டு இன்னார் இன்னகாலத் திருந்தனர் எனத் துணிவது இழுக்குடைத்தாம். அவ்வம் மன்னர் செய்த ஆண்மைச் செயல் வரலாறுகளையும் பிறவற்றையுங் கருவியாகக் கொண்டு இவர் இன்னகாலத் திருந்தன ரெனத் துணிவதே வாய்வதாகும். மேற்காட்டிய பாண்டி வேந்தர் மூவரில் எவ்வெவர் காலத்திற் செந்தமிழ்ப் பயிற்சி மிக்கு நிகழ்ந்ததென்று ஆராயும்வழி, 'அவநி சூளாமணி மாறன்'றன் ஆட்சிக் காலத்திலும், அவன் மகன் 'செழியன் சேந்தன்' காலத்திலுமே அஃதவ்வாறு செழிப்புற்றுத் திகழ்ந்த தென்பது, 'சூளாமணி' என்னுஞ் செந்தமிழ்க் காப்பியம் முன்னையோன் பெயரால் இயற்றப்பட்டு அவன்

மகன் சேந்தனது அவைக்களத்தே அரங்கேற்றப் பட்டமையினை,

> "நாமாண் புரைக்குங் குறையென்னினும் நாம வென்வேற்
> றேமாண் அலங்கற் றிருமால்நெடுஞ் சேந்த னென்னுந்
> தூமாண் தமிழின் கிழவன்சுட ராரமார்பிற்
> கோமான் அவையுள் தெருண்டார்கோளப் பட்ட தன்றே."[1]

என அக்காப்பியமே நன்கெடுத்துக் கூறுமாற்றால் இனிது விளங்கும். இவ் இருபாண்டி வேந்தர்க்குப்பின் அரசு செலுத்திய நின்றசீர் நெடுமாற பாண்டியன் காலத்தில் தமிழ் அங்ஙனஞ் சிறப்புற்றிருந்த தென்பது ஏதொரு நூற் சான்றானும் பெறப்படாமையானும், அப் பின்னையோன் காலத்தில் அது சிறப்புற் றிருந்ததாயின் அவ்வாறு நூற் சான்று சிறிதும் இல்லையாய் ஒழியாதாகலானும் அப் பின்னையோன் காலத்திலெல்லாந் தமிழ்மொழிப் பயிற்சி குன்றிச், சமண் சைவ மதப் போராட்டமே எங்கும் ஆர்ப் பெடுத்துப் பரவலாயிற்றென்க; செழியன் சேந்தனுக்குப் பின்வந்த 'நின்றசீர் நெடுமாற' பாண்டியன் காலத்தில் திருஞானசம்பந்தப் பெருமானுக்குஞ் சமண் முனிவர்க்கும் இடைநிகழ்ந்த வழக்கே இதற்கு ஒருபெருஞ் சான்றாம். ஆகவே, நின்றசீர் நெடுமாற பாண்டியன் காலத்திற்குமுன் அரசுபுரிந்த 'செழியன் சேந்தன்' காலத்திலும், அவனுக் குத் தந்தையாகக் கருதப்படும் 'அவனி சூளாமணி மாறன்' காலத்திலும் மட்டுமே தமிழ்மொழிப் பயிற்சி வளங்கெழுமி நின்றமை தமிழ்நூல்களாற் றெளியக் கிடத்தலின், இறையனாரகப் பொருளுரைப் பயிற்சியும், அவனி சூளாமணி மாறன்மேற் பாடப்பட்ட கலித்துறைச் செய்யுட்கள் அவ் வுரையி னிடையிடையே செருகப் பட்டமையும் அவ் விரு வருஞ் செங்கோலோச்சிய கி. பி. ஆறாம் நூற்றாண்டினிடை யிலேதான் நிகழ்ந்ததாகல் வேண்டுமே யல்லாமற், 'செங் குட்டுவன்' நூலார் கூறியபடி கி. பி. எட்டாம் நூற்றாண் டில் நிகழ்ந்தன ஆகா. இவ்வாற்றால் செப்புப் பட்டையங் களிற் குறிக்கப்பட்ட 'சங்கரமங்கை'யுங், களவியலுரைக்

1. சூளாமணி, பாயிரம், ௩.

கலித்துறைச் செய்யுட்களில் மொழியப்பட்ட ‘சங்க மங்கை’ யும் வெவ்வே றூர்களாகக் கொள்ளப்படல் வேண்டுமென்பதும், அங்ஙனமன்றி அவை யிரண்டும் ஒன்றேயென்று கொள்ளப்படினும் அதன்கண் நிகழ்ந்த போர்கள் இரண்டாய் ஒன்று அவநி சூளாமணி மாறனுக்கும் ஒரு சேர மன்னனுக்கும் இடைநிகழ்ந்ததேயாக, மற்றொன்று அரிகேசரி பராங்குச மாறனுக்கும் பல்லவ அரசர்க்கும் இடைநிகழ்ந்ததாய் வெவ்வேறு காலத்தன ஆகுமென்பதுந் தாமே போதரும் என்க.

இனி, நக்கீரனார் இயற்றிய களவியலுரை பத்துத் தலைமுறை வாய்ப்பாடமாக வந்து, பத்தாந்தலைமுறையாகிய கி. பி. எட்டாம் நூற்றாண்டிலேதான் எழுத்துருவெய்திற் றென்ற ‘செங்குட்டுவன்’ நூலாரது கூற்றுப் பெரியதொரு பிழைபாடுடைத்தாம். வடக்கிருந்த ஆரிய மாந்தரே கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் தம்முடைய நூல்களை எழுத்திலிட்டு எழுதத் தெரியாதவர்களாய், அவற்றை வாய்ப்பாடமாகக் கிடைகூட்டி நெட்டுருப்பண்ணி இடர்ப்பட்டோ ராவர். மற்றுத், தமிழ்மக்களோ தொல்காப்பியனார் இருந்த ஆறாயிர ஆண்டுகளுக்கு முன்னே தொட்டுத் தமது மொழியையும் அம்மொழி நூல்களையும் எழுத்திலிட்டு எழுதத் தெரிந்த நாகரிக வாழ்க்கையினராய் இருந்தனரென்பதையும், அவர் வழங்கிய எழுத்துகள் வட்டெழுத்துகளேயா மென்பதையும் மேலே எ௫௩-ஆம் பக்கத்திலிருந்து எ௫௬-ஆம் பக்கம் வரையில் வைத்து விளக்கிக்காட்டி யிருக்கின்றேம். அங்ஙனம் எழுத்தெழுதத் தெரிந்த பண்டைத் தமிழறிஞர் தம்முடைய நூல்களை யெல்லாம் பனையேடுகளில் எழுதிவைத்துப் பயின்று வந்தனரே யன்றி, வட வாரியரைப்போற் கிடைகூட்டிப் பயின்று அவைதம்மை முற்றும் உருச்செய்து இடர்ப்பட்டாரல்லர். தமிழர்க்கும் ஆரியர்க்கும் பண்டேயுரிய இவ் விருவேறு நூற்பயிற்சி முறையினியல்பு, எழுத்தெழுதத் தெரிந்த இந் நாளிலும் அவ்வாரிய வழக்கத்தைப் பின்பற்றிய பார்ப்பனர் அதனை விடமாட்டாராய்க்

கிடைகூட்டித் தம் நூல்களை நெட்டுருச் செய்து வருதலா லும், தமிழறிஞர் அவ்வாறின்றித் தமது பழைய வழக்கப் படியே தம் நூல்களையெல்லாம் பனையேடுகளில் எழுத்திட் டெழுதிப் பயின்று வருதலானும் தெற்றென விளங்கா நிற்கும். அதுவேயுமன்றிக், களவியலுரைப் பாயிரமே "இவ் வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப் பிதழகத் தெழுதிப் பீடத்தின்கீழ் இட்டான்" என மொழிதலால், 'இறையனாரகப்பொருட்' சூத்திரமும் அவற்றினுரையும் ஆக்கப்பட்ட பழைய நாளிலேயே தமிழ் நூல்கள் எழுத்திட் டெழுதப்பட்டமை ஐயுறவின்றித் துணியப்படும். படவே, களவியற் சூத்திரமும் உரையும் பத்துத் தலைமுறை வரையில் வாய்ப்பாடமாகவே வந்த தென்று பண்டைநூற் சான்றுகட்கெல்லாம் முரணாகத் துணிபுரை நிகழ்த்திய 'சேரன் செங்குட்டுவன்' நூலாரது கோள் புரைபட் டழிந்தமைகாண்க. அற்றேல், நக்கீரனார் தாமெழுதிய அக் களவியலுரையைத் "தம் மகனார் கீரங் கொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர் கிழார்க் குரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க் குரைத்தார்" என்றற் றொடக்கத்தனவாகப் போந்த சொற்றொடர்க் கருத் தென்னையெனின்; இக் காலத்திற் பல்லாயிரக் கணக்கான நூல்களை அச்சிற் பதித்துப் பரப்புவிக்கும் அச்சுப் பொறிகளும் அச் செழுத்துக்களுந் தாள்களும் உளவாயினாற் போல, அக்காலத்து அக் கருவிகள் இன் மையின், அஞ்ஞான்றிருந்த நல்லிசைப் புலவ ரொருவர் தாம் இயற்றிய நூலைத் தாம் எழுதியவாறே பிழைபடா மல் வழங்குவித்தற்பொருட்டுத், தாம் அறிந்த கற்றார் ஒருவர்க்கு அந் நூலைப் பாடஞ்சொல்லி வைத்து அந்நூற் பொருளைப் பிறர் தமக்குத்தோன்றியவாறு திரித்துணர்ந்து அத் திரிபுணர்ச்சிக்கு இசைய அதன்கண் உள்ள சொற் களையுஞ் சொற்றொடர்களையும் மாற்றி பிழைபடுத்தா வண்ணம், தமதுண்மைக் கருத்துத் தெரித்துரைப்பர். அவ்வாறு அந் நூலாசிரியன் வாய் அந் நூலின் மெய்ப் பொருளுணர்ந்தவர், அதனைத் தாம் கேட்டுணர்ந்தவாறே தாம் அறிந்த மற்றொருவர்க்கோ அல்லது பலர்க்கோ

அதனைப் பாடஞ்சொல்லி வைப்பர். இங்ஙனமாக ஓராசிரியன் இயற்றியநூல் அவன் கருத்தை வழுப்படாமல் அறிவிக்குங் கருவியாய் அவன் வழிவந்த மாணாக்கருள் ஒருவர் ஒருவர்க் குரைப்பவரும் வரிசையினையே "நக்கீரனார் தம்மகனார் கீரங்கொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர்க் கிழார்க் குரைத்தார்" என்றற் றொடக்கத்துச் சொற்றொடர்கள் அறிவுறுத்துவதன்றி, எழுத்தெழுதத் தெரியா ஆரிய மாந்தர் தம் நூல்களைத் தம்மவர்க்கு வாய்ப்பாடமாகச் சொல்லிவைத்தல்போல், நக்கீரனார் முதலியோருந் தத்தம் மாணாக்கர்க்கு அதனை வாய்ப்பாடமாய்ச் சொல்லி வைத்தாரென அறிவுறுத்துவன அல்ல. ஏனெனிற், பண்டே எழுத்தெழுதத் தெரிந்த தமிழர்க்குள் அங்ஙனம் வாய்ப்பாடமாகச் சொல்லிவைக்கும் வழக்கம் இல்லாமையானும், அன்றி அவ் வழக்கம் இருந்ததெனக் காட்டுதற்கு ஏதொரு சான்றுங் காணப்படாமையானும் என்பது. அது கிடக்க.

இனிக், களவியலுரை உரைக்கப்பட்டு வந்த மாணாக்கரின் காலவரிசை பத்தாந் தலைமுறைக்கண் நின்ற முசிறியாசிரியர் நீலகண்டனாரொடு முற்றுப் பெறுதலின், அவ்வுரை நீலகண்டனார் காலத்திலேதான் எழுத்துருப் பெற்று ஏட்டிலெழுதப்பட்டதென்றும், அங்ஙனம் அஃது எழுதப்பட்ட காலம் அவ்வுரையி னிடையிடையே எடுத்துக் காட்டாய்ப் போந்த கலித்துறைச் செய்யுட்களிற் புகழப் பட்டவனுங் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியி லிருந்தவனுமாகிய 'அரிகேசரி பராங்குச மாறவர்மன்' காலத்திற்கும் பிற்பட்டதேயாகற்பாலதென்றுஞ் 'செங்குட்டுவன்' நூலார் கூறினர். பத்தாந் தலைமுறைக்கண் வந்த நீலகண்டனாரொடு நக்கீரனாருரையின் வழிவந்த மாணாக்கர் மரபு முற்றுப் பெறுதலால், அம் மாணாக்கர் வரிசையினைக் கூறும் உரைப்பகுதி மட்டும் நீலகண்டனார் எழுதியதாயிருக்கலாம். ஆனால் நீலகண்டனார் காலத்திலேதான் அவ்வுரை எழுத்துருப் பெற்றதென்பதற்குச் சான்றென்னை? தொல்காப்பியனார் காலந்தொட்டே தமிழ் நாட்டகத்துத்

திகழ்ந்த தமிழ்ச்சான்றோர்கள் தம்முடைய நூல்களை எழுத்திட் டெழுதிப் பயின்று வந்தார்களென்பதற்கே நூற்சான்றுகள். இருக்கக் காண்டுமென்றி, அவர்கள் அவற்றை வாய்ப்பாடமாக ஓதிவந்தார்களென்பதற்குத் தினைத்தனைச் சான்றும் இன்மையின், நீலகண்டனார் காலத் திலேதான் அவ்வுரை எழுத்துருப் பெற்றதெனப் பிழை யாகப் பொருள்பண்ணிக்கொண்ட 'சேரன் செங்குட்டுவன்' நூலாரது உரை பெரும்பிழைபாட்டுரையேயா மென்க.

இனிக், களவியலுரையி னிடையிடையே செருகப்பட் டுள்ள கலித்துறைச் செய்யுட்களிற் புகழ்ந்துபாடப் பெற்றவன் கி. பி. ஆறும் நூற்றாண்டின் முற்பாதியிலிருந்த 'அவனிசூளாமணி மாறனே' யல்லாது, அவனுக்கு நான்கு தலைமுறை பிற்பட்டு வந்து கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த 'அரிகேசரி பராங்குச மாறவர்மன்' அல்லனென்பதை மேலே நன்கு விளக்கிக் காட்டினமாத லால், அவ்வரசனைப் பின்னோனாக மாறுபடுத்திச் சொல்லிய செங்குட்டுவன் நூலாரதுரை பெரியதொரு தலைதடுமாற்ற வுரையேயாமென விடுக்க.

இனி, அப் பாண்டி மன்னன்மேற் பாடப்பட்டிருக்குங் கலித்துறைச் செய்யுட்களை அவ்வுரையினிடையிடையே சேர்த்தவர், நக்கீரனார்தம் மாணாக்கர் வழியில் வந்த நீல கண்டனாரே யாவரென்பதுபடச் 'செங்குட்டுவன்' நூலார் மொழிந்ததற்குச் சான்று யாது என்றுராய்வுழிச் சான் றேதும் புலப்படக்காணேம். சான்றேதுமின்றித் தமக்குத் தோன்றியவாறெல்லாம் எழுதிவிடுதல்தான் வரலாற்றுரை போலும்! மற்று, அக் கலித்துறைச் செய்யுட்கள் அவ் அவனிசூளாமணி மாறனது அவைக்களத்திருந்த ஒரு புலவ ராற் செய்து அவ்வுரையினிடையே சேர்க்கப் பட்டனவாதல் வேண்டுமே யல்லாமல், நக்கீரனார்தம் மாணாக்கர் வழிவந்த நீலகண்டனாராற் சேர்க்கப்பட்டன ஆகாவென்பது முன் னரே விளக்கப்பட்டது. ஆசிரியர் நக்கீரனார் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியி லிருந்தாரென்பதை மேலே ஙஎகூ-ஆம் பக்கத்திற் பல சான்றுகள்காட்டி விளக்கியிருக்

இன்றேம். ஆகவே, அவர்தம் மாணுக்கர் மரபிற் பத்தாந் தலைமுறைக்கண் நின்ற நீலகண்டனூர் கி. பி. நான்காம் நூற்ருண்டின் நடுவிலிருந்தாராகற் பாலார். நக்கீரனூர் கண்ட களவியலுரைப் பாயிரத்தினிடையே அவருரை வந்தவரலாறு தெரிக்கும் உரைப்பாயிரப்பகுதி இந் நீல கண்டனூரால் எழுதி அதன்கட் சேர்க்கப்பட்டதோ, அன்றி அந் நீலகண்டனூர்க்கும் முற்போந்த மாணுக்க ரால் எழுதிச் சேர்க்கப்பட்டதோ, இன்னதுதானென்று துணிந்து சொல்லுதற்குச் சிறிதும் வாயிலில்லை. அஃதெங்ஙனமாயினும், ஆரியர் நடையைப் பின்பற்றிய பார்ப்பனர் பொய்யும் புரட்டும் நிரம்பக் கட்டிவிட்ட புராண கதைகள் தமிழ் நூல்களில் மெல்லமெல்லப் புகத் தொடங்கிய கி. பி. இரண்டாம் நூற்ருண்டிற்குப் பின் னரேதான் அப் புராணகதைகளோ டொத்த புளுகுகள் பல விரவிய அவ்வுரைப்பாயிரப் பகுதி எழுதி அதன்கண் நுழைக்கப்பட்டதாகல்வேண்டு மென்பதுமட்டுந் திண்ணம். ஏனைக் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் முந்நூற் றிருபத்தொன்பதும், அவற்றுட் சிலவற்றிற்குப் போந்த உரைகளும் உரைக்குறிப்புகளுமோ நீலகண்டனூர்க்கு இரு நூருண்டு பிற்பட்டுவந்த 'அவநிசூளாமணி மாறன்'றன் அவைக்களத்துப் புலவரொருவரால் இயற்றி அவ்வுரை யின்கட் சேர்க்கப்பட்டனவாதல் வேண்டுமென்று பகுத் துணர்ந்துகொள்க. இவ்வாருக, அக் கலித்துறைச் செய் யுட்களை அவ்வுரையின்கட் கோத்தவர் நீலகண்டனூர் அல்லரென்பது பெறப்படவே, கி. பி. நான்காம் நூற் ருண்டின் கண்ணதான அவரதுகாலத்தைக் கி. பி. எட்டாம் நூற்ருண்டின் கண்ணதாகச் சான்றேதுமின்றிப் பிழைத்துணர்ந்து, அவ்வாற்ருல் ஆசிரியர் நக்கீரனூரைக் கி. பி. ஐந்தாம் நூற்ருண்டிற் படுப்பிக்க விழைந்த 'சேரன் செங்குட்டுவன்' நூலாரது விழைவு நிரம்பாது ஏமாற்றம் அடைந்தமை காண்க. நக்கீரனூர் இருந்த காலங் கி. பி. ஐந்தாம் நூற்ருண்டாகாமல் முதல் நூற்ருண்டாகவே பல வாற்ருனுந் திண்ணமாய்ப் பெறப்படுதலால், அவரும் அவரோடொருங்கிருந்த தமிழ்ச் சான்ருேரும் நடை

பெறுத்திய கடைச்சங்கமிருந்த காலமுங் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டாகாமற் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்கு முற்பட்டதாகவே பெறப்படும் என்பது.

உரு. கடைச்சங்க காலத் தொடர்ச்சி

இனிச், 'சேரன் செங்குட்டுவன்' நூலார் மேற்காட்டிய வாறெல்லாம் பிழைபாடாகத் தாம் செய்துகொண்ட செய்யுட்பொருள்களாலும், உண்மைகளை மாறுபடுத்திக் கொண்ட மாறுபாட் டுரைகளாலும், ஒன்றை மற்றென் றுகக் கருதிய திரிபுணர்ச்சியாலுங் கடைச்சங்க காலத் தைக் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின்கட் படுப்பிக்க முயன்று அம் முயற்சியில் முற்றும் இழுக்கியவாற்றினை விரித்து விளக்கிக், கடைச்சங்ககாலங் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்கு முற்பட்டதாதலை நிறுவினும். அவர் அம் மட்டிலமையாது, 'சிலப்பதிகாரத்'திற் போந்த சில குறிப்பு களைப் பொறுக்கியெடுத்து அவற்றிற்குத் தம் மனம் போனவாறு பொருளுரைத்து அவ்வாற்ருல் வடநாட்டு மன்னர் சிலரிருந்த காலவாராய்ச்சியினைத் தம் கருத்துக் கிணங்கத் திரித்து அதுகொண்டு கடைச்சங்ககாலம் ஐந்தாம் நூற்றுண்டின்கட் படுமென்ருர். ஆகலின், அத னையும் ஆராய்ந்து அவர்கொண்ட முடிபு பொருந்தாமை காட்டுதும்.

சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ வடிகட்குத் தமையனும், பேராண்மையிற் சிறந்த சேர வேந்தனும் ஆகிய செங்குட்டுவன் கண்ணகியின் உருவஞ் சமைத்தற்கு இமயமலையினின்றும் ஒரு கருங்கற்றுண்டு கொண்டு வருதற் பொருட்டுந், தென்றமிழ் மன்னரை இகழ்ந்து பேசிய வட ஆரிய மன்னராங் கனக விசயர் என்பாரை வென்றடக்குதற் பொருட்டும் வடநாடு நோக்கிப் படை யெடுத்துச் சென்ருனென்பதும், அங்ஙனம் அவன் சென்ற காலத்து அவனுக்கு உதவிசெய்த நண்பரான ஆரிய மன்னர் 'நூற்றுவர் கன்னர்' எனப்படுவ ரென்பதுஞ்

சிலப்பதிகாரங், கால்கோட் காதையிற் சொல்லப்பட்டிருக் கின்றன. வட ஆரியமன்னரில் நூற்றுவர் கன்னரே சேரன் செங்குட்டுவனுக்குச் சிறந்த நண்பரென்பது,

"வேற்றுமை யின்றி நின்னொடு கலந்த
நூற்றுவர் கன்னரும்." (கால்கோட் காதை, ௧௪௯, ௧௫௦)

எனப்போந்த அடிகளாலும், இவன் வடக்கே சென்று கங்கைப் பேரியாற்றைக் கடக்க வேண்டுழி அக் கங்கை யாற்றுப் பக்கத்திருந்த நாடுகளில் அரசு புரிந்த அந் நூற்றுவர்கன்னர் அவனுக்கு மரக்கலன்கள் பலவற்றைக் கொடுத் துதவிசெய்து, அவற்றால் அவன் தன்படை யொடும் அவ்வியாற்றைக் கடந்து அதன் வடகரை சேர்ந்தவழி அவ் வாரியமன்னர் அவனை எதிர்கொண்டு தமது நாட்டுக்கு அழைத்துச் சென்றனரென்பது,

"கங்கைப் பேரியாற்றுக் கன்னரிற் பெற்ற
வங்கப் பரப்பின் வடமருங் கெய்தி,
ஆங்கவர் எதிர்கொள அந்நாடு கழிந்து." (௧௭௬, ௧௭௮)

எனப்போந்த அடிகளாலும், அங்ஙனஞ்சென்ற செங்குட்டு வன் தன்னை எதிர்த்த கனகவிசயரையும் அவனுக்குத் துணைப்போந்த ஆரிய மன்னரையும் வென்று இமயத் தெடுத்த கருங்கற்றுண்டை அக் கனகவிசயர் முடிமே லேற்றித் தென்னாடு நோக்கிப் பெயர்கையில் தனக்கு உதவிசெய்த நண்பரான 'அந் நூற்றுவர் கன்னரை' அவர்தம் நாடுநோக்கிச் செல்கவென ஏவினனென்பது,

"ஆரிய மன்னர் ஐயிரு பதின்மரைச்
சீர்கெழு நன்னாட்டுச் 'செல்கவென் றேவி."
(நீர்ப்படைக் காதை, ௧௭௭, ௧௭௮)

என்னும் அடிகளாலும், அதன்பின் தென்றமிழ்க் குடநாட் டிற் றன் வஞ்சிமாநகர்க்குத் திரும்பிய செங்குட்டுவன் தான் கொணர்ந்த கருங்கற் றுண்டிற் கண்ணகியின் உருவமைத்து அதற்கென்று கட்டுவித்த கோயிலில் அதனை நிறுத்தி விழாவெடுத்த ஞான்று, அவன் போரிற்

றுலைத்துச் சிறையாய்க் கொணர்ந்த ஆரிய மன்னரையும் அவர்போல் முன்னரே சிறைக்கணிருந்த ஏனை மன்னரை யுஞ் சிறையினின்றுஞ் சிறைவீடுசெய்ய அம் மன்னருங், குடகநாட்டின் கொங்கரும், மாளுவநாட்டின் வேந்தரும், இலங்கைத்தீவின் வேந்தனுன கயவாகுவும் வந்து அக் கண்ணகியி னுருவத்தை வணங்கினரென்பது,

" அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னருங்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தருங்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்ட."

(வரந்தரு காதை, கநஎ-கசுஅ)

என்னும் அடிகளாலும், இவற்றையெல்லாம் உடனிருந்து கண்ட இளங்கோவடிகளே சிலப்பதிகாரத்தில் விளங்கக் கூறியிருக்கின்றார். இவர் கூறிய இவ் வுண்மைவரலாற்றுக் குறிப்புகளிற் 'கன்னர்' என்னும் அரசர் நூறுபேருங் கங்கையாற்றின் வடகரையை யடுத்துள்ள நாடுகளில் அரசாண்ட ஆரிய மன்னராதலும், ஏனை 'மாளுவ வேந்தர்' என்பார் கங்கையாற்றுக்குத் தெற்கே நெடுந்தொலைவில் உளதாகிய நருமதையாற்றங்கரையை யடுத்து 'ராஜபுதனத்'தின் தென்பகுதிக்கண் விரிந்ததாகிய மாளுவ நாட்டை ஆண்டோராதலும், இவ் விருவேறு அரசரும் வெவ்வேறு நாட்டினரும் வெவ்வேறு இனத்தினருமாவரே யல்லது இவ்விருவரும் ஒருவரேயென ஒன்றுபடுத் துரைத்தற்குத் தினைத்தனைச்சான்றும் இளங்கோவடிகள் அருளிச்செய்த இவ்வரலாற் றுரைகளில் இல்லையாதலும் இவைதம்மை ஆயுந் தமிழறிஞர் எவரும் நன்குணர்வர்.

ஈதிங்ஙனமாகவுஞ் 'செங்குட்டுவன்' நூலார், இளங் கோவடிகள் குறித்த 'மாளுவ வேந்தரும்,' 'நூற்றுவர் கன்னரும்' வேறுவேறல்லர் ஒரு வகுப்பினரே யென்றுங்,

கி. பி. ௩௫0-ஆம் ஆண்டிற் சமுத்திரகுப்தன் இம்மாளுவ நாட்டின்மேற் படையெடுத்துவந்த ஞான்று இம்மாளுவ வேந்தர் தமது மாளுவநாட்டைப் பல. பிரிவுகளாகப் பகுத்து அவற்றின்கண் அரசுபுரிந்துவந்தன ரென்றுங், கண்ணகிகோயிலிற் செங்குட்டுவன் விழவெடுத்த நாளில் அவனுக்குச் சிறந்த நண்பரான நூற்றுவர்கன்ன ரென்பார் வராதிராராகலின் அவர் அப் பெயராற் குறிக்கப் படாவிடினும் அப்போது வந்திருந்தவராகச் சொல்லப் பட்ட மாளுவவேந்தரே அந் நூற்றுவர்கன்ன ராதல் வேண்டுமென்றும், அதனாற் செங்குட்டுவன் காலங் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டேயாகற்பாலதென்றுங் கூறினர்.

மாளுவவேந்தரும், நூற்றுவர் கன்னரும் வேறல்லர் என்பதனை நாட்ட இவர் காட்டிய இரு சான்றுகளுட், சமுத்திரகுப்தன் படையெடுத்துவந்த ஞான்று மாளுவ நாடு பல பிரிவுகளாக வகுக்கப்பட்டு அரசர் பலரால் ஆளப்பட்டதென்பதொன்று. ஆனால், இவர் இதற்கு மேற்கோளாக எடுத்துரைத்த ஆங்கில வரலாற்று நூலாசிரியர் இவருரைக்கும் வண்ணமே யுரைப்பக் காணேம். அவ் வாங்கில ஆசிரியர் [1]"பஞ்சாபி கீழைஇராசபுதனம் மாளுவ நாடென்பன பெரும்பாலுங் குடியரசு முறையில் உயிர்வாழ்ந்த குடியினர் அல்லது இனத்தவரின் ஆளுகை யில் இருந்தன" எனவும், [2]"சமுத்திரகுப்தன் ஆண்ட நாட்டின் எல்லைப்புறத்திருந்த மாளுவரும் மற்றைக் குடியினருந் தமதாட்சியில் வைத்திருந்த தேயங்கள் தனது பேராளுகையினுள் ளடக்கப்பட்டதுடன் (இரண்டாஞ் சந்

1. "The Panjab, Eastern Rajputana, and Malwa for the most part were in possession of tribes of clans living under republican institution" Dr. Vincent A. Smith's 'The Early History of India,' 1914, p. 286.

2. "The year 395 may be assumed as a mean date for the completion of the conquest, which involved the incorporation in the empire of the territory held by the Malavas and other tribes, who had remained outside the limits of Samudragupta's dominion." Ibid, p. 291.

திரகுப்தனது) வெற்றி நிறைவெய்திய நடுக்காலம் கி. பி. ௩௯௫-ஆம் ஆண்டாகக் கொள்ளப்படலாம்" எனவும் மொழிதல்கொண்டு, சமுத்திரகுப்தனும் அவன் மகன் இரண்டாஞ் சந்திரகுப்தனும் அரசுசெலுத்திய கி. பி. நான்காம் நூற்றுண்டில் மாளுவநாடானது குடியரசின் கீழிருந்ததென்பது பெறப்படுகின்றதே யல்லாமல், அப்போது அது வேந்தராட்சியின்கீழிருந்ததென்பது சிறிதும் பெறப்படக் காணேம். மற்று, ஆசிரியர் இளங்கோவடிகளோ, சேரன் செங்குட்டுவன் எடுப்பித்த கண்ணகி விழவுக்கு மாளுவநாட்டிலிருந்து வந்த அரசரை "மாளுவ வேந்தன்" என்றே விளக்கமாய்க் கூறுகின்றுர். ஆகவே, 'செங்குட்டுவன்' நூலார் தாம் எடுத்துக்காட்டிய ஆங்கில வரலாற்று நூலாசிரியரதுரை தமது கருத்துக்கு முழுதும் மாருய் நிற்றலை அறிந்துகொள்ளாமை இரங்கற்பால தொன்றும். ஆங்கிலத்திலுள்ள அந்நூலைத் தமிழொன்றே கற்றுர் அறியாராதலால், அந்நூலைக் காட்டியாயினுந் தமது வழுக்கொள்கையினை நாட்டிவிடலாமென அவர் எண்ணினர் போலும்!

இனிச், சமுத்திரகுப்தன் காலத்தும் அவன் மகன் சந்திரகுப்தன் காலத்தும் மாளுவநாடு குடிமக்கள் பலர் ஒருங்குகூடி நடாத்திய குடியரசின்கீழிருந்தமை, அவரெடுத்துக் காட்டிய ஆங்கில ஆசிரியர் வரைந்த வரலாற்று நூலினுலேயே தெற்றெனப் புலனுதலின், இளங்கோவடிகள் குறித்த மாளுவவேந்தர் அக் குடியரசு நடாத்திய குடிமக்கள் ஆகாமை சிறிதறிவுடையார்க்கும் விளங்கற்பாலதேயாம். அற்றேல், இளங்கோவடிகள் குறித்த அம் மாளுவவேந்தர் தாம் யாரோவெனிற்; கனிஷ்க மன்னனைத் தலைவனுய்க்கொண்டு காந்தாரத்தில் அரசு புரிந்த குஷான்குடிப் பேரரசர்க்குக் கீழடங்கி மாளுவ நாட்டை ஆண்ட அரசர் 'சகசத்திர பதிகளே' ஆவர். இவர்களுட் சிறந்த அரசனுய்த் திகழ்ந்தவன் 'முதலாம் ருத்ரதாமன்' என்பவனே யாவன்; இவன் கி. பி. ௧௫௦-ஆம் ஆண்டையடுத்துக் 'கிர்நார்' ஊர்க் கற்

பாறையில் வெட்டுவித்த கல்வெட்டு ஒன்றால் இவன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியி லிருந் தமை துணியப்படும்.[1] அவனுக்குப் பின்னும் அரசர் அறுவர் மாளுவ நாட்டின் தலைநகராகிய 'உச்சயினி'யில் அரசு புரிந்தமையுங், கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியோடு, இச் சகசத்திரபதி யரசரின் மரபும் இவரோடு ஒரு காலத்தினராகிய ஆந்திர அரசரின் மரபும் அற்றுப் போனமையும் ஆங்கில ஆசிரியரான வின்செண்ட் சிமித் என்பவரால் நன்கெடுத்துக் காட்டப்பட்டிருக்கின் றன.[2] மேலே உசஅ, உசகூ-ஆம் பக்கங்களிற் காட்டப்பட்ட படி கி. பி. களக முதல் ககூரு வரையில் இலங்கையில் அர சாண்ட முதற் கயவாகு என்னும் வேந்தனும் சேரன்செங் குட்டுவன் எடுப்பித்த கண்ணகி விழவுக்கு வந்திருந்த தனை, அவரோடு உடனிருந்த ஆசிரியர் இளங்கோவடி களே சிலப்பதிகாரம், வரந்தருகாதை, கசுo-ஆம் அடியில் விளங்கக் கூறுதலின், அவ் விருபத்திரண்டு ஆண்டு களில் மாளுவ நாட்டின்கண் அரசு புரிந்த 'ஜீவதாமன்,' 'முதல் ருத்ரசிம்மன்,' 'முதல் ருத்ரசேனன்' என்னுஞ் சகசத்திரபதி அரசர் மூவரில் எவனேனும் ஒருவனும், அக் காலத்தில் மாளுவத்தை யடுத்த மேல்நாடுகளுக்கு அரச ரான ஆந்திரர் அச் சத்திரபதி யரசரோடு உறவு கலந்த பிற் றோன்றிய ஆந்திர மன்னனான 'கௌதமீபுத்ர யஜ்ஞஸ்ரீ' என்னும் வேந்தனுமே அக் கண்ணகி விழவுக்கு வந் திருந்தா ராகற்பாலர். அவரையே இளங்கோவடிகள் அவர்தம் உறவுரிமை பற்றி 'மாளுவவேந்தர்' எனப் பலர் பாற் சொல்லாற் குறித்தாராகல் வேண்டும். இவ்விரு மன்னர் வந்தமை பற்றியே இவரை இளங்கோவடிகள் இங்ஙனம் பலர்பாற் சொல்லாற் கிளந்திருக்க, இவ் வுண்மையினை நன்காய்ந்து பார்க்கும் ஆங்கில நூலறிவு மதுகை யின்றி, 'வேந்தர்' என்னும் அச் சொல்லைக் கண்ட துணையானே, அதற்கு 'நூற்றுவர் கன்னர்' எனப் பிழை யாகப் பொருள்செய்து, அப் பிழையையே தமது பொருந்

1. Ibid. p. 132. 2. Ibid. p. 218.

தாக் கொள்கைக்கு ஒரு பெரும் பற்றுக்கோடாய்க் கொண்ட 'செங்குட்டுவன்' நூலார் செயல், நீரில் அமிழ்ந்துவோன் மரக் கோடென நினைந்து ஒரு சிறுதுரும் பினைத் தாவிப்பற்றிய செயலோடு ஒப்பதாய் முடிந்தமை காண்க.

இனி, அவர் அவ் விருவேறு வேந்தரையும் ஒன்று படுத்தற்குக் காட்டிய நுண்ணறிவின் திறத்தை என்னென் பேம்! செங்குட்டுவனுக்குச் சிறந்த நண்பரான 'நூற்றுவர் கன்னர்' அவ் வேந்தன் எடுப்பித்த கண்ணகி விழவுக்கு வராதிரார் ஆகலின், அதற்கு வந்திருந்தவராகச் சொல்லப்பட்ட மாளுவ வேந்தரே அந் நூற்றுவர்கன்ன ராதல் வேண்டுமென்னுஞ் 'செங்குட்டுவன்' நூலாரது உய்த்துணர்ச்சி எவ்வளவு நுண்ணிது! எவ்வளவு ஆழ்ந் தது! "வேற்றுமையின்றி நின்னொடு கலந்த, நூற்றுவர் கன்னர்" எனவும், "கங்கைப் பேரியாற்றுக் கன்னரிற் பெற்ற" எனவும், "ஆரியமன்னர் ஐயிருபதின்மரை" எனவுஞ் செங்குட்டுவனுக்கு நட்பரசரான அவரைத் தாம் மொழிய வந்துழி யெல்லாங் 'கன்னர்,' 'நூற்றுவர்,' 'ஐயிருபதின்மர்' என்னும் பெயர்களால் ஐயுறுதற் கிடனின்றி விளங்கக் குறிப்பிட்டுவந்த ஆசிரியர் இளங் கோவடிகள், இவ் வோரிடத்துமட்டும் அவரை 'மாளுவ வேந்தர்' என முன்பின் மொழிந்திலாத வேறொரு பெய ராற் குறிப்பரோவெனவும், அவ்வாறு குறித்தற்கு ஏது வென்னை யெனவும், எத்துணைப் பெரியாருந் தாங் கருதிய வற்றைத் தாங் கருதியவாறே செய்துமுடிக்க இயலாவாறு மாறான நிகழ்ச்சிகள் வலிகொண்டு நிகழும் இஞ்ஞாலத்தில் 'நூற்றுவர் கன்னர் வராதிரார்' என நீர் அங்ஙனந் துணிந் துரைத்தற்குக் கொண்ட சான்று எப்பெற்றியதெனவும் வினவுவார்க்குச் 'செங்குட்டுவன் நூலார்' தமது நுண் ணறிவு கொண்டு எங்ஙனம் இறுப்பரோ அஃதிறைவனே அறியற்பாலன்! யாம் ஆராய்ந்த மட்டில் இவரது நூலி லிருந்து இவ் வினாக்களுக்கு விடை ஒரு சிறிதும் பெறப் படாதென்பது திண்ணம். கங்கையாற்றின் வட கரைக்

கண் அரசாண்ட நூற்றுவர் கன்னரை ஆசிரியர் வேறி யாண்டும் மாளுவ வேந்தரென உரைப்பக் காணுமையா னும், மாளுவ நாடென்பது கங்கையாற்றுக்குத் தெற்கே நெடுஞ் சேய்மைக்கண் உளதாகிய நருமதை யாற்றங் கரையை யடுத்துளதாகலின் அதன்கண் அஞ்ஞான்று அரசுவைகிய வேந்தர் வேறென்பதே வரலாற்று நூலாற் புலப்படுதலானும் அம் மாளுவவேந்தரே நூற்றுவர்கன்ன ராவரென்றல் சிறிதும் அடாதவுரையாம் என்பது.

அற்றேற் கண்ணகி விழவிற்கு வந்திருந்த அரசரில் நூற்றுவர் கன்னர் மொழியப்படாமை யென்னையெனிற், கூறுதும்: தென் றமிழ்நாட்டுச் சேரன் செங்குட்டுவ வேந்தற்கு உற்ற நண்பராயினர் வட ஆரியமன்னர் நூற் றுவர் கன்னர் மட்டுமே யென்பது மேலெடுத்துக்காட்டிய இளங்கோவடிகளின் கொழுந்தமி ழுரைகளால் நன்கு விளங்காநிற்கும்; அவரை யொழிந்த ஏனை வட ஆரிய மன்னர் அவனைப் பகைத்திருந்தமையும், அதுபற்றியே அவன் அவர்மேற் படையெடுத்துச் சென்றமையுங் கூட அவ் வாசிரியர் மொழிகளாற் புலனாகின்றன. இங்ஙன மாகத் தென் றமிழ்நாட் டரசனை செங்குட்டுவற்கு நண்ப ராகித், தம் இனத்தவரான ஆரியமன்னரைப் பகைத்து நின்ற நூற்றுவர் கன்னர்க்கு வடநாட்டில் உள்ள அவ் ஆரிய மன்னரோடு எவ்வளவு போராட்டம் இருந்ததாகல் வேண்டும்! நெடுஞ் சேய்மைக்கண் உளதாகிய தென்னாட்டி லிருந்து, தமது வடநாடு நோக்கிப் படை திரட்டி வந்த செங்குட்டுவ வேந்தற்கு அந் நூற்றுவர் கன்னர் எவ்வளவு உதவிகள் செய்து, தம் மிருவர்க்கும் மாற்றாரான அவ் ஆரிய மன்னரைப் போரில் வென்றிருத்தல் வேண்டும்! அவ்வாறு பேருதவிகள் செய்து பெரும்போர் நிகழ்த்தி வெற்றிகண்ட பேராண்மையில் எத்தனை ஆயிரம் படை ஞரும் எத்தனை ஆயிரம் யானை குதிரைகளும் அவர் மடியக் கொடுத்திருத்தல்வேண்டும்! எத்தனை நூறுயிரம் பொருட் டிரள்களை அவர் இழந்தாராகல்வேண்டும்! இங்ஙனமெல் லாந் தம் படைகளையும் பொருளையும், இழந்து தமது

அரசியல் வலிகுறைந்த நிலையி லிருக்கையில், அதனைத் திரும்ப வலிபெறுத்தும் முயற்சியைக் கைவிட்டு, அடுத்து நிகழ்ந்த கண்ணகிவிழவுக்கு அந் நூற்றுவர் கன்னர் எங்ஙனம் வரக்கூடும்? அன்றி வந்திருப்பரேற் சீர்குலைந்த நிலையிலுள்ள அவர்தம் அரசியல் அவரில்லாத காலத்தில் வேறு மாற்றரசரால் எளிதிற் கைப்பற்றப் படுமன்றே? இவ்வியல்புகளை நன்குணர்ந்து பார்த்தே செங்குட்டுவன் வெற்றி வேந்தனாய்த் தனது தென்னாடு நோக்கித் திரும்புகின்றுழி, உற்ற நண்பரான அந் நூற்றுவர் கன்னரைத் தன்னோ டுடனழைத்துவராமல், அவரை அவர்தம் நாடு நோக்கிச் "செல்கவென்று ஏவி," அவ்வாற்றால் அவர் வலிகுறைந்த தமது அரசியலைப் பெயர்த்தும் வலிபெறுத்துதற்கு இடஞ்செய்தான். ஆகவே, அந் நூற்றுவர் கன்னர் செங்குட்டுவ வேந்தன் உடன்பாடு பெற்றே கண்ணகி விழவுக்கு வாராராயினரென்பது சிறிது கருத்தொருங்கி நோக்க வல்லார்க்கும் புலனாகற் பாலதேயாம். இவ் வுண்மையினை ஆராய்ந்து பார்க்கும் வன்மையின்றிச் 'சேரன் செங்குட்டுவன்' நூலார் கண்ணகி விழவுக்கு வந்திருந்தோரில் நூற்றுவர் கன்னர் சொல்லப்படாமை ஒன்றேகொண்டு, அதற்கு வந்திருந்த மாளுவ வேந்தரை அந் நூற்றுவர் கன்னராகப் பிழைத்துணர்ந்தது சிறிதும் பொருந்துவ தில்லாப் போலியாராய்ச்சியாமென விடுக்க. எனவே, மாளுவ வேந்தரென ஆசிரியராற் குறித்தோதப் பட்டார் 'நூற்றுவர் கன்னர்' அல்லரென்பதூஉஞ், சமுத்திர குப்தனும் அவன் மகன் சந்திரகுப்தனும் அரசுபுரிந்த கி. பி. நான்காம் நூற்றாண்டில் மாளுவநாடு குடியரசின் கீழிருந்ததே யன்றி வேந்தராட்சியின் கீழிருந்ததன்றென்பது வரலாற்று நூல்களால் நன்கறியக் கிடத்தலின் அஃது அரசாட்சியிலிருந்தது கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் நடுவுக்கு முன்னரே யாமென்பதூஉம், அந் நூற்றாண்டின் நடுவுக்கு முற்சென்ற காலத்தில் மாளுவ நாட்டை அரசுபுரிந்த அரசர் வரிசையிற் கண்ணகிவிழவுக்கு வந்தவராகக் கொள்ளப்படுதற் குரியார், முதற் கயவாகுவென்னும் இலங்கைவேந்தன் காலத்தவரான சகசத்திர பதியரசர்

மூவரில் ஒருவனும் அவற்குறவினனான 'கௌதமீபுத்ர யஜ்ஞஸ்ரீ' என்னும் ஆந்திர மன்னனுமேயாவரென்பதூஉம், அவரது காலங் கி. பி. ௧௭௫-க்கும் ௧௯௫-க்கும் இடைப் பட்டதேயாகலின் அதன்கண் அழிந்துபட்ட கடைச்சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுவுக்கு முற்பட்டதே யாகல் வேண்டுமென்பதூஉந் திண்ணமாய்ப் பெறப்படும். ஆதலால், இவ்வுண்மை முடிபுக்கு மாறாகச் 'சேரன் செங்குட்டுவன்' நூலார் அதனைக் கி. பி. ஐந்தாம் நூற் றாண்டின்கட் படுப்பிக்க விழைந்து செய்த போலியாராய்ச்சி பொருந்தா தொழிந்தமை காண்க.

இனிச், 'சிலப்பதிகாரம்,' 'மணிமேகலை' என்னும் பெருந்தமிழ்ப் பாட்டுடைச் செய்யுட்கள் இயற்றப்பட்ட காலத்தை வகுத்தற்கும், அதன்வழியே அதற்குமுன் நிலவிய கடைச்சங்க காலத்தை வகுத்தற்கும் நுறுங்கா வைரவாள்போல் நின்று உதவிபுரிவதாகிய இலங்கை மன்னன் முதற்கயவாகுவின் காலங் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதியிற் படுவதாதலை வரலாற்று நூலாசிரியரெல்லாரும் ஒருப்பட்டுரைக்கக் காண்டலிற், கடைச்சங்க காலத்தைக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற் படுப்பிக்க விழைந்த தமது கருத்துக்கு அது முழுமாறாய் நின்று தமதாராய்ச்சியினை இருகூறாய்ப் போழ்ந்து அவ் வாராய்ச்சி உள்ளீடில்லா வெறும் புரையாய் இருத்தலைக் காட்டுதலுணர்ந்த 'செங்குட்டுவன்' நூலார் அவ் வைர வாளினையும் நுறுக்கிவிடுதற்கு முயன்று, அம்முயற்சி கை கூடாவாறு அஃது அதனையும் ஈர்ந்து பாழ்படுத்த, அதனால் அவர் செயலற்றுக் கரைந்த கையறவுரைப் பெற்றியுஞ் சிறிதுகாட்டுதும்: இலங்கையரசரின் வரலாறு களை யுரைக்கும் பொருட்டுப் புத்த குருமார்களால் வரையப்பட்ட 'மகாவம்சம்' என்னும் நூலின்கண், முதற் கயவாகு வேந்தன் சேரன் செங்குட்டுவன் காலத்திருந் தனன் என்பதனைக் காட்டுங்குறிப்பு ஏதுங் காணப்பட வில்லையென்று 'செங்குட்டுவன்' நூலார் கூறினர். புத்த சமயத்தினனாகிய அம் மன்னவன் கண்ணகியென்னும்

ஒரு கற்புடைமாதைத் தெய்வமாய்க்கொண்டு வழிபட்டா ராயின், அதனைச் சொல்லுதலிற், புத்த குருமார்க்கு விருப்பு நிகழாமை இயற்கையேயாம். அவர் அது சொல் லாமையே பற்றிக் கயவாகுவேந்தன் செங்குட்டுவன் காலத் தினன் அல்லனென்றல் யாங்ஙனம் பொருந்தும்? செங்குட் டுவனால் எடுப்பிக்கப்பட்ட கண்ணகிவிழவுக்குக் கயவாகு வேந்தன் சென்றதையுந், திரும்பி அவன் இலங்கைக்கு வந்தபோது கண்ணகியணிந்திருந்த பொற் சிலம்பினைக் கொணர்ந்து தனது வெற்றியினை நினைவுகூர்தற் பொருட்டு ஆண்டுதோறும் அவன் நடப்பித்த கொண்டாட்ட விழவில் அப் 'பத்தினிதேவி'யின் வழிபாட்டைச் சிறந் தெடுத்து வைத்ததையும், இன்றுங்கூடச் சிங்களவர்கள் அறங்கூறும் மன்றில் அச் சிலம்பைத் தொட்டுச் சூளுரைப் பதையும் நன்கெடுத்துக் காட்டி, முதற் கயவாகுவேந்தன் சேரன் செங்குட்டுவன் காலத்தினனே யாவனென்று திரு அருணாசலம் அவர்கள் தாம் பெரிதாராய்ந் தெழுதிய 'இலங்கை வரலாற்றின் முதற்குறிப்புகள்'[1] என்னும் நூலில் இனிது விளக்கியிருக்கின்றார்கள். கயவாகு மன்னன் கண்ணகி வழிபாட்டினை இலங்கைக்குக் கொண்டு சென்ற வரலாறு 'மகாவம்சத்'திற் குறிக்கப்படாவிடினும், அம் மகாவம்சத்தைப்போலவே பழையனவாய் இலங்கை வரலாறுகளுரைக்கும் 'ராஜரத்நாகரி,' 'ராஜாவளி' என்னும் நூல்களில் அது குறிக்கப்பட் டிருத்தலினா லன்றே[2] அருணாசலம் அவர்கள் தாம் எழுதிய அந்நூலில் அக் குறிப்பினை நன்கெடுத்து விளக்குவாராயினர்கள். இவ் வாற்றால் முதற் கயவாகுவேந்தன் சேரன் செங்குட்டுவன் காலத்தினனே யாவனென்பதும் அதனால் அவனுஞ் செங்குட்டுவனுங் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந் தவரே யாவரென்பதும், ஆகவே செங்குட்டுவனைக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற் படுப்பிக்க முயன்ற 'செங்குட்

1. 'Sketches of Ceylon History' by P. Arunachalam, M. A., (Cantab), 2nd edition, p. 22.

2. 'See also Dr. Krishnaswami Aiyangar's 'The Beginnings of South Indian History,' p. 210 and first foot-note.

டுவன்' நூலாரது முயற்சி 'ஆடிக்காற்றி னிடைப்பட்ட பஞ்சுத்துய்' போற் பயன்படாது பறந்தோடிப் போயிற் றென்பதும் வைரத்தூணென நாட்டப்பட்டமை காண்க.

இனித், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண் டியன் நெடுஞ்செழியன் காலத்தவனை 'திதியன்' என்னுந் தமிழ்மன்னனையுங், கி. பி. ௪௯0-இல் இலங்கையை அர சாண்ட 'ததியன்' என்னுந் தமிழ்மன்னனையுஞ் 'செங்குட் டுவன்' நூலார் ஒன்றுபடுத்துரைத்து, அதனைத் தமது கோட்பாட்டுக்கு ஒருபெருஞ் சான்றாக்க் காட்டித் தம தாராய்ச்சியினை முடித்திட்டார். 'ததியன்' எனும் பெயர் வாய்ந்த மற்றொரு தமிழரசன் கி. மு. ௯0-இல் இலங் கையை ஆண்டவன் என்பது அருணசலம் அவர்களால் தமது 'இலங்கை வரலாற்று முதற்குறிப்புகள்' என்னும் நூலில் எடுத்துக்காட்டப்பட் டிருக்கின்றது.[1] 'செங்குட் டுவன்' நூலார் தாமும் அதனையே யெடுத்துக் காட்டினார். ஆகவே, 'ததியன்' எனப் பெயர்பூண்ட இலங்கைத் தமிழ் மன்னர் இருவரில் ஒருவன் கி. மு. ௯0-இலும், மற்றொருவன் அவற்கு ஐந்நூற்றாண்டு பிற்பட்டுக் கி. பி. ௪௯0-இலும் இருந்தமை புலனாகாநிற்கும். மற்றுத், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனோ கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்தவனென்பதை மேலே ௯00-ஆம் பக்கத்தில் விளக்கிக்காட்டினோம். ஆதலால், அப் பாண்டியன் காலத்தவனாய்த் தமிழ்நாட்டிலிருந்த 'திதியன்' என்னும் அரசனுக்கும், அவனுக்கு ஒரு நூற்றாண்டு முன்னும் நான்கு நூற்றாண்டுகள் பின்னும் இலங்கையி லிருந்து அரசாண்ட 'ததியன்' எனப் பெயர்பூண்ட அரச ரிருவர்க்கும் ஏதொரு தொடர்புங் காண்கிலம். திதிய னுக்குந் ததியனுக்கும் பெயரொற்றுமைதானும் இலது. வரலாற்றுநூலில், வெறும் பெயரொற்றுமை யொன்றே கொண்டு ஒரு முடிபுசெய்தல் பொருந்தாதெனப் பல்காலுங் கரையாநிற்குஞ் 'செங்குட்டுவன்' நூலாரே, அப்பெய ரொற்றுமைதானும் இல்லாத 'திதியன்,' 'ததியன்'

1. 'Sketches of Ceylon History,' List of Kings facing p. 26.

என்னும் அரசர் இருவரையும் ஒருவரெனத் துணிந்துரைப்பது நகையாடுதற்கே ஏதுவாம். வெவ்வேறிடங்களினும் வெவ்வேறு காலங்களிலும் இருந்த அவ்விருவரையும் ஒருவரெனக் கோடற்குப் பிற குறிப்புக்கள் தாமும் இல்லாகவும், இயைத்து ஒன்றுபடுத்தற்கு இயலா அவ் விருவரையும் இயைத்து ஒன்றுபடுத்தப் புக்கது, 'மொட்டைத் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிப்போடுவதோடு' ஒப்பதாமன்றி மற்றென்னை? இங்ஙனமாகக், கி. பி. முதல் நூற்றாண்டில் தமிழ்நாட்டின்கணிருந்த 'திதியன்' என்னும் அரசற்குங், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்த 'ததியன்' என்னும் அரசற்குந் தொடர்புகாட்டுதல் எவ்வாற்றானும் இயலாதாகலின், தமது வெற்றெண்ணமே கருவியாய்க்கொண்டு கடைச்சங்க காலத்தைக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற் படுப்பிக்கப்புகுந்த 'செங்குட்டுவன்' நூலாரது முயற்சி, வானத்தின்கண் ஓவியம் வரையப் புகுந்தார்தம் முயற்சியோடொத்து வறிதானமை காண்க. என்றிதுகாறும் ஆராய்ந்து காட்டியவாற்றால், கடைச்சங்ககாலஞ் 'செங்குட்டுவன்' நூலார் கூறியபடி கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின்கட் படுவதன்றாய்க், கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னதாவது ஐயுறவுக்கு இடனின்றித் துணியப்படுதலிற், கி. பி. மூன்றாம் நூற்றாண்டின்கணிருந்த மாணிக்கவாசகப் பெருமான் "உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழின்றுறை" என்று அச் சங்கத்தைக் குறிப்பிட்டு அருளிச்செய்தது சாலவும் வாய்ப்புடைத்தாய் மலைமேற் கட்டிய அரண்போல் நாட்டப்பட்டமை தெளிந்துகொள்க.

௨௧. திருத்தொண்டத்தொகையும் திருவாதவூரடிகளும்

இனித், திருத்தொண்டத் தொகையில் திருவாதவூரடிகள் குறிப்பிடப்படவில்லை யென்றும், அதன்கட் சொல்லப்பட்ட 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பார் கடைச்சங்கத்திருந்து தமிழாராய்ந்த 'கபிலர்,' 'பரணர்,'

'நக்கீரர்' முதலான புலவர் கூட்டத்தவராகிய தொகையடியாரே யாவரல்லால் தனியடியாராகிய திருவாதவூரடிகளாதல் செல்லாதென்றுந், திருவாதவூரர் தமது காலத்துக்கு முந்தியவராயின் சுந்தரமூர்த்திகள் தாம் அருளிய அத் திருத்தொண்டத் தொகையில் அவரைச் சொல்லாது விடார் என்றும், ஆகவே சுந்தரமூர்த்திகள் இருந்த கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னரேதான் திருவாதவூரடிகள் இருந்தாராகல் வேண்டுமென்றுந் 'தமிழ் வரலாறு' உடையார் கூறிய பகுதியினை ஆராய்வாம்: திருத்தொண்டத் தொகையிற் போந்த 'பொய்யடிமையில்லாத புலவரைத்' தனி யடியாராகக் கொள்ளாமல் தொகையடியாராகக் கொள்ளல் வேண்டுமென்பதற்கு இவர் காட்டிய சான்று என்னையெனிற்,

> "கூட்டம்ஒன் பானோ டறுபத்து மூன்று தனிப்பெயரா
> ஈட்டும் பெருந்தவத் தோர்எழு பத்திரண்டு."

என்று நம்பியாண்டார் நம்பிகள் தாம் பாடிய 'திருத்தொண்டர் திருவந்தாதிச்' செய்யுளில் 'தொகையடியார் ஒன்பதின்மர்' எனவுந், 'தனியடியார் அறுபத்துமூவர்' எனவுங் கூறியதேயாம். சுந்தரமூர்த்தி நாயனார் இருந்தபோது அவரோடு உடனிருந்து அவரது கருத்தை அவர்பாற் கேட்டறிந்தவராயின், அல்லது அவர்தம் மாணாக்கர் மரபில்வந்த ஒருவர்பால் அதனை உசாவி யறிந்தவராயின் நம்பியாண்டார் நம்பிகள் கொண்ட பொருளே நாயனார் கருத்தென்றல் வாய்வதாகும். சுந்தரமூர்த்தி நாயனாரோ கி. பி. எட்டாம் நூற்றாண்டின் ஈற்றி லிருந்தவர்; நம்பியாண்டார் நம்பிகளோ அவர்க்குப்பின் இருநூறாண்டு கழித்துக் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் ஈற்றில் இருந்தவர்., ஆதலால், நம்பிகள் நாயனார் கருத்தை அவர்பால் நேரேயிருந்து கேட்டவர் அல்லரென்பது புலனும். அங்ஙனமில்லையாயினும், நாயனார்தம் மாணாக்கர் மரபில்வந்த ஒருவர்பால் நம்பிகள் அதன் பொருளைக் கேட்டாரோ வென்றால், திருத்தொண்டர் திருவந்தாதியின் முதற்கண் உள்ள,

"பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதேம் மரபுசெயல்
பன்னஅத் தொண்டத் தொகைவகை பல்கும் அந்தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணைதுணையே"

என்னுஞ் சிறப்புப்பாயிரச் செய்யுளால் நம்பிகள் அங்ஙனம் அதனை ஒருவர்பாற் கேட்டவரல்லர், திருநாரையூரிலுள்ள பொல்லாப் பிள்ளையார் அருளால் அதனை யுணர்ந்தவ ராவரென்பது பெறப்படும். கடவுளிடத்து அன்புமிக்கவர் செய்த ஒரு நூலைக் கடவுளே அருளிச்செய்ததாகக் கூறுவது பிற்காலத்தவர் வழக்கமாகும். ஆகவே, திருத்தொண்டத் தொகையிற் போந்த 'பொய்யடிமையில்லாத புலவரை' நம்பிகள் தொகையடியாராகப் பொருள்செய்து கொண்டது தம துள்ளத்திற் பட்டபடியேயாம்; அவர் அவ்வாறு செய்துகொண்ட பொருளே சுந்தரமூர்த்தி நாயனரது கருத்தென்பது அடாது. என்னை? சுந்தர மூர்த்தி நாயனர் 'பொய்யடிமையில்லாத புலவர்' என்டதனல் இறைவனைப் பாடிய புலவர் கூட்டத்தினையே கூறக் கருதினராயின், அவர் திருத்தொண்டத் தொகையின் பத்தாஞ் செய்யுளிற் "பரமனையே பாடுவா ரடியார்க்கும் அடியேன்" என்று மீண்டும் அதனையே கூறுவாரல்லர். ஆகவே, 'பொய்யடிமை யில்லாத புலவர்' என ஏழாஞ் செய்யுளிலும், 'பரமனையே பாடுவார்' எனப் பத்தாஞ் செய்யுளிலுங் கூறப்பட்ட அவ்விருவேறு சொற்றொடர்களுக்கும் ஆசிரியன்கொண்ட பொருளைத் துணிதற்கு, அச் சொற்றொடர்கள் நிற்கும் இடங்களின் இயல்புணர்தலே கருவியாகும். 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்னுஞ் சொற்றொடர் நிற்குஞ் செய்யுளிற் சொல்லப்பட்ட 'புகழ்ச்சோழர்,' 'நரசிங்க முனையரையர்,' 'அதிபத்தர்,' 'கலிக்கம்பர்,' 'கலியர்,' 'சத்தியார்,' 'ஐயடிகள் காடவர்கோன்' என்னும் ஏனை நாயன்மார் எழுவருந் தனியடியாரேயல்லால், தொகையடியாரல்லர்; தனியடியாரைச் சொல்லும் இச் செய்யுளிற் 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதொன்று மட்டுந் தொகையடியாரைச் சுட்டுமென்றல் ஆக்கியோன் கருத்துக்கு மாறாவதாம். மற்றுப், 'பரமனையே பாடுவார்'

என்னுஞ் சொற்றொடர் நிற்குஞ் செய்யுளிற்போந்த 'பத்தராய்ப் பணிவார்கள்,' 'சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்கள்,' 'திருவாரூர்ப் பிறந்தார்கள்,' 'முப்போதுந் திருமேனி தீண்டுவார்,' 'முழுநீறு பூசிய முனிவர்,' 'அப்பாலும் அடிச் சார்ந்தார்' என்னும் அடியார் அறுவருமே தொகையடியாரே யாதல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்த தொன்றும். "தில்லைவா ழந்தணர்" என்னும் முதற் பாட் டொன்றிற் றவிரத், தனியடியாரைக் கூறும் ஏனை யொன்பது செய்யுட்களில் எங்குந் தொகையடியாரை இடைமடுத்து ஆசிரியன் உரைப்பக் காண்கிலம். தொகையடியாரை ஒருங்கு தொகுத்துக் கூறும் "பத்தராய்ப் பணிவார்கள்" என்னும் ஒரே செய்யுளில் வேறு தனியடியாரை இடைப்புகுத்து ஆசிரியன் மொழியவுங் காண்கிலம். ஆகவே, தனியடியாரைக் கூறும் பாட்டுக்களில் தொகையடியாரையுந், தொகையடியாரைக் கூறும் பாட்டில் தனியடியாரையும் மொழிதல் சுந்தரமூர்த்தி நாயனார்க்குக் கருத்தன்மை தெள்ளிதிற் புலனாகின்றதன்றே? அற்றேல், "தில்லைவா ழந்தணர்" என்னும் முதற்பாட்டின் முதலில் தொகையடியாரும், அதன்பிற் றனியடியாரும் மொழியப் படுத லென்னையெனிற் கூறுதும்: சிவபிரான் றிருவடிக்கண் மெய்யன்புடையராய் ஒழுகிய திருத்தொண்டரைப் பாடுதற்குச் சுந்தரமூர்த்திகள் விழைவுமீதூர்ந்து நின்றவழிச், சிவபிரானே "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று முதலடி எடுத்துக்கொடுத்துத் திருத்தொண்டத்தொகை பாடுமாறு அவர்க்குக் கட்டளையிட்டருளின ரென்பது,

"தொல்லைமால் வரைபயந்த தூயாடன் றிருப்பாகன்
அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேனென்
றெல்லையில்வண் புகழாரை யெடுத்திசைப்பா மொழியென்றார்."

எனவும்,

"தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளாற் றிருத்தொண்டத் தொகையான திருப்பதிகம்

உம்பர்பிரான் ருனருளும் உணர்வுபெற வுலகேத்த
ஏம்பெருமான் வன்றொண்டர் பாடியவ ரெதிர்பணிந்தார்."
(தடுத்தாட்கொண்ட புராணம், ௧௯௯, ௨0௨)

எனவுஞ் சேக்கிழார் பெருமான் அருளிச்செய்தவாற்ருல் நன்கறியப்படும். படவே, திருத்தொண்டத் தொகை முதற்செய்யுளின் முதலடிக்கண் உள்ள "தில்லைவா ழந்த ணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்னுஞ் சொற்றொடர் சுந்தரமூர்த்திகள் செய்த தன்றென்பது பெற்ரும். பெறவே, தனியடியாரைக் கூறும் அம் முதற் செய்யுளில் அது வந்தமைபற்றி ஈண்டைக்காவதோர் இழுக்கில்லை யென விடுக்க.

நன்று சொன்னீர், மக்கள் அறிவிஞற் செய்தற்கெளி தாகிய ஒருபாட்டுக்கு இறைவனே முதலெடுத்துக்கொடுத் தானென்றல் நம்பற்பாலதன்று; அக் கதையின் கருத் தென்னென்ருற், சுந்தரமூர்த்தி நாயஞர் திருத்தொண் டத்தொகை பாடும் விழைவினராய் அதனை எவ்வாறு துவங்குவதென்று ஆராய்ந்துகொண்டு நிற்கையில், அவர்க்கு அருகே நின்ருரில் ஒருவர் தற்செயலாய்த் 'தில்லைவா ழந்தணர்' என்று சொல்லக்கேட்டு அதனையே இறைவனெடுத்துக் கொடுத்ததாக உட்கொண்டு அதனை முதற்கண் நிறுத்துப் பாடிஞராதல் வேண்டுமெனக் கோடலே அதன் கருத்தாவதாமெனின்; அங்ஙனங் கொள்வார் கொள்க; அவ்வாறே கொள்ளினுந் 'தில்லைவா ழந்தணர்' எனத் தொகையடியாரைக் குறிக்கும் அச் சொற்றொடர் சுந்தரமூர்த்திகள் அருளியதன்றென்பதே பெறப்படுமாகலின் அதுவும் எமது கொள்கையினையே வலியுறுத்துமென வுணர்க.

அற்றன்று, தேவாரப் பதிகங்களுள் எதனைப் பாடத் துவங்கினுந் தில்லைக்கண்உள்ள 'திருச்சிற்றம்பலம்' என்ப தனைச் சொல்லியே துவங்குதல் தொன்றுதொட்ட வழக் காய்ப் போதரக் காண்டலின், ஏனையெல்லாப் பதிகளினும் உள்ள அடியாரைச் சொல்லுதற்குமுன் தில்லையம் பதிக்கண் உள்ள தொகையடியாரையுந் தனியடியா ரொரு

வரையும் ஒருங்கெடுத்து மொழிதல் வேண்டுமென்னுங் கருத்துப் பற்றியே அப் பதிக்கண் இருந்த தில்லைவா ழந்தணராகிய தொகையடியாரையுந், திருநீலகண்ட நாயனுராகிய தனியடியாரையுஞ் சுந்தரமூர்த்திகள் ஒருங்கெடுத்து முதற்கண்வைத்து ஓதுவாராயின ரெனின்; அவ்வா றுரைப்பினுந், தனியடியாரைக் கூறுஞ்செய்யுளில் தொகையடியார் குழுவொன்றைக் கூறுமாறு தமது கருத்துக்கு முரணுய் நின்று தம்மை வலிந்தேவும் ஒரு சிறந்த ஏதுவின் வழிப்பட்டே சுந்தரமூர்த்திகள் அங்ஙனந் 'தில்லைவா ழந்தண'ராந் தொகையடியாரை அம் முதற் செய்யுளின் முதற்கண் வைத்து ஓதலாயினு ரென்பதே கொள்ளக் கிடக்குமாதலின், அதைப் போலவே 'பொய்யடிமை யில்லாத புலவ'ருந் தொகையடியாராயின் அவர் தம்மைத் தனியடியார்வரிசையி னிடையே பகுத்துரைத்தற்கு அவர் தம்மை அவ்வாறு வலிந்தேவுஞ் சிறந்த பிறிதோர் ஏது வேண்டப் படுமன்றே; மற்று அதற்கு அங்ஙனஞ் சிறந்த பிறிதோரேது ஒருவாற்ருனும் பெறப்படாமையின், தனியடியாரை மொழியும் ஏழாஞ் செய்யுளிற் போந்த 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்பாருந் தனியடியாரே யாவரல்லாற் ருெகையடியா ராதல் செல்லாதென்று கடைப்பிடிக்க.

அதுவேயுமன்றித், தில்லைக்கணுள்ள அடியாரை முதற்கண் வைத்து ஓதுங் குறிப்பினராயே சுந்தரமூர்த்திகள் 'தில்லைவா ழந்தணரை' முதலாக வெடுத்துத் திருத்தொண்டத் தொகை அருளிச் செய்தாரெனக் கொள்வார்க்குந், தில்லைக்கண் உள்ள தனியடியாரான திருநீலகண்ட நாயனுரை முதற்க ணுரையாது, தொகையடியாரான தில்லைவா ழந்தணரைப் பின்ருெடருந் தனியடியார் வரிசையினின்றும் வேறு பிரித்து முதலெடுத்தது, திருநீலகண்ட நாயனுர் தொடங்கி ஒன்பதாஞ்செய்யு ளிறுதிகாறுந் தாம்பாடும் அடியார் அத்தனைபேருந் தனியடியாராகவே இருத்தல் வேண்டுமெனக் குறித்த தமது கருத்துக்கு மாருகாமற் றனியடியாரை யெல்லாம் ஒருவரிசைப்

படவைத்தற் பொருட்டும், அவருள்ளுந் தில்லையம்பதிக்கண் உள்ள தனியடியாரான திருநீலகண்ட நாயனரை அத் தனியடியார் வரிசையில் முதல் நிறுத்துதற் பொருட்டுமே யாமென்பது கொள்ளல்வேண்டும். அங்ஙனங் கொள்வுழியுந், தில்லைவாழந்தணர்க்குப்பின் ஒன்பதாஞ் செய்யுளிறுதிகாறுங் கூறப்பட்ட அடியாரத்தனை பேருந் தனியடியாரே யாவரெனவும், அதனல் அவ்வரிசையினிடைப்பட்ட பொய்யடிமையில்லாத புலவருந் தனியடியாரே யாவரெனவுங் கொள்ளும் எமது கோட்பாடே நிலைபெறுதல் காண்க.

அற்றன்று, தில்லைக்கண் வாழ்வாராயினுங் குயவர் இனத்திற் சேர்ந்த திருநீலகண்ட நாயனரிலும், அந்தண வகுப்பினராகிய 'தில்லைவாழந்தணர்' சிறந்தமையிற் சுந்தரமூர்த்திகள் அவரையே முதற்கண் வைத்து ஓதுவாராயினரெனின்; நன்று சொன்னய், அடியாருள் இன்னவர் உயர் குலத்தார், இன்னவர் இழிகுலத்தார் எனப் பிறப்பு வேற்றுமை பற்றிய உயர்விழிவுகளை ஒருசிறிதுங் கருதாது, தாம் அந்தண குலத்திற் பிறந்தவராயிருந்துஞ் சுந்தரமூர்த்திகள் அவ்வடியவ ரெல்லாரையும் ஒத்த சிறப்பினராகவே கருதி, அவரெல்லார்க்குத் தனித்தனியே தாம் அடிமையாதலை மெய்பெறக் கிளந்தோதி யிருத்தலாலும்; பதியிலார் குலத்து வந்தாராகிய பரவை நாச்சியாரையும் வேளாள குலத்திற் பிறந்தாராகிய சங்கிலி நாச்சியாரையும் அவர் திருமணம் புரிந்து சாதிவேற்றுமையின்றி ஒழுகினமையாலும்; வேளாண்குலத்தின ராகிய ஏயர்கோன் கலிக்காமநாயனர் தம்பால் அருவருப்புடையராயிருந்துந் தாம் அவர்பாற் பேரன்பு பூண்டு அவரைக் கண்டு வணங்கச் சென்றமையாலுஞ்; சாதியுயர்வு கருதியே அவர் தில்லைவாழந்தணரை முதற்கணெடுத் துரைத்தா ரென்றற்குத் தினைத்தனைச் சான்றும் அவர் அருளிச்செய்த திருப்பதிகங்களிலாதல் அவர்தம் வாழ்க்கையிலாதல் காணப்படாமையாலும்; அந்தணரென்னும் உயர்வுபற்றித் தில்லைவாழந்தணரை முதற்கணெடுத்தோதினரென்னும்

அவ்வுரை சுந்தரமூர்த்தி நாயனார் திருவுளக்கிடைக்கு முற்றும் மாறான அடாத வுரையாமென் றொழிக.

தில்லைவா ழந்தணர்' என்னுஞ் சொற்றொடர் முதல்வனால் எடுத்துக் கொடுக்கப்பட்டதாகாமற் சுந்தர மூர்த்திகளாலேயே அமைக்கப்பட்ட தொன்றாக இருக்குமாயின், தாம் ஓரினப்படக் கூறக் கருதிய தனியடியார் வரிசையினிடையே தொகையடியா ராகிய 'தில்லைவா ழந்தணரைப்' புகுத்தல் முறையாகாமை கண்டே, அவரை அவர் அத் தனியடியார் வரிசையினின்றும் வேறாகப் பிரித்தெடுத்து முதற்கண் வைத்து மொழிந்தாரெனக் கோடலே எல்லா வாற்றானும் இயைவதாமென்று கடைப் பிடிக்க.

எனவே, தனியடியார் வரிசையி னிடைப்பட்ட 'பொய் யடிமை யில்லாத புலவர்' என்பார், தமது செந்தமிழ்ப் புலமைத் திறத்தால் 'திருவாசகம்,' 'திருச்சிற்றம்பலக் கோவையார்' என்னும் ஒப்புயர்வில்லா முழு மாணிக்கங் களை உலகிருள் இரியவுஞ் சிவவொளி சுடர்ந்து திகழவுந் தந்து, அவ்வாற்றால் 'மாணிக்கவாசகர்' என்னும் அருமைத் திருப்பெயர் பூண்டு, "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே" என முழுமுதற் கடவுளாஞ் சிவபெருமான் ஒருவற்கே மெய்யடிமைத் திறம் பேணிய திருவாதவூரடிகளே யாவரல்லாற் பிறராகாமை திண்ணமாமென்று தெளிந்துகொள்க. அச் சொற்றொடர் இவ்வாறு திருவாதவூரடிகளையே யுணர்த்துதல் அறியாராய், அது கபிலர் பரணர் நக்கீரர் முதலான கடைச்சங்கப் புலவரையே குறிக்குமெனக் கூறிய நம்பியாண்டார் நம்பிகள் கூற்றுப் பிழைபடுகின்றமையின், அது கொள்ளற் பால தன்றென விடுக்க. நக்கீரர் முதலான கடைச்சங்கப் புலவர்கள் "பரமனையே பாடுவார்" என்னுந் தொகையடியார் குழாத்துள் அடங்குதலின், அவரையே மீண்டுங் கூறுதல் சுந்தரமூர்த்தி நாயனார்க்குக் கருத்தாகாமை வெள்ளிடை மலைபோல் விளங்கற்பாற்று.

அற்றேல், நம்பியாண்டார் நம்பிகள் திருநாரை யூரின் கண் எழுந்தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையார்பால்

திருத்தொண்டர் வரலாறுகளைக் கேட்டுணர்ந்தாரெனத் திருமுறைகண்ட புராணங் கூறுதலிற், 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதற்கு நம்பியாண்டார் கண்ட பொருள் இறைவனை யுணர்த்திய தொன்றுதல் வேண்டும்; வேண்டவே, நம்பிகள் பிழைபட்டாரென மேலே சொல்லிய குற்றம் இறைவனையுஞ் சாருமாலெனின்; திருத்தொண்டத் தொகையிற் போந்த அடியாரின் வரலாறுகளை ஒருவர் தெரிதல் வேண்டினாராயின் அவர் தமது காலத்துள்ள கல்வி யறிவுடையார் பலரை வினவினால் அவை தம்மை நன்கறிந்து கொள்ளலாம். நம்பியாண்டார் நம்பிகள் இருந்த காலத்தில் இச் செந்தமிழ் வளநாடு சேர சோழபாண்டிய ரென்னுந் தமிழ் வேந்தரது ஆட்சிக்கீழதாய்த் தமிழ்க் கல்வியிலும் நாகரிகத்திலும் மிகவுஞ் செழிப்புற்றிருந்தது. சைவசமய உணர்ச்சியிலும் வைணவ சமய உணர்ச்சியிலும் நிரம்பத் தேர்ந்த நல்லிசைப் புலவர்களும் ஆங்காங்குத் திரள்திரளாய் மலிந்திருந்தனர். பல்வகைக் கலைநூல் அறிவு நூல்களை ஓதுவார் தொகையும் விஞ்சி நின்றது. இவ் வுண்மை, நம்பியாண்டார் நம்பிகளே தாம் அருளிச்செய்த திருஞானசம்பந்தர் திருவுலாமாலையில்,

" மறைபயில்வார் மன்னு வியாகரணக் கேள்வித்
துறைபயில்வார் தொன்னூல் பயில்வார்—முறைமையினால்
ஆகமங்கள் கேட்பார் அருங்கலைநூல் ஆதரித்துப்
போகம் ஒடுங்காப் பொருள் துய்ப்பார்—சோகமின்றி
நீதி நிலையுணர்வார் நீள்நிலத்துள் ஐம்புலனுங்
காதல் விடுதவங்கள் காமுறுவார்—ஆதி
அருங்கலைநூல் ஓதுவார் ஆதரித்து வென்றிக்
கருங்கலியை நீங்கக் கனல்வகுப்பார்—ஒருங்கிருந்து
காமநூல் கேட்பார் கலைஞானங் காதலிப்பார்
ஓமநூல் ஓதுவார் உத்தரிப்பார்."

என்று கூறுமாற்றால் இனிது விளங்கா நிற்கும். இத்துணை நூற்பயிற்சியும், அறிவுமிக்கார் குழுவும் மலிந்தோங்கிய காலத்தில் திருத்தொண்டர் வரலாறுகளை

அறியாதாரும் இருப்பரோ? இராரன்றே. நாமிருக்கும் இக்காலந் திருத்தொண்ட ரிருந்த காலத்திற்கு ஆயிர மாண்டு பிற்பட்டதாயிருந்தும், திருத்தொண்டர் புராணத் திற் காணப்படாத வரலாறுகள்கூட இன்னும் அறிவுடை யார் தமக்குள் வழங்கக் காண்டுமன்றே. இத்துணைப் பிற் பட்ட காலத்திலேயே அவ் வரலாறுகள் தொடர்ந்து வழங்குமாயின், இற்றைக்குத் தொள்ளாயிர ஆண்டுகட்கு முன்னரேயே அத் திருத்தொண்டரது காலத்திற்கு அண்மையிலிருந்த நம்பிகள் காலத்தில் அவை யின்னும் எத்துணை மிகுதியாய் வழங்கியிருத்தல் வேண்டும்! ஆதலால், அவை மிக்கு வழங்கிய அப் பழங்காலத்திருந்த நம்பியாண்டார் நம்பிகள் அவ் வரலாறுகளை அஞ்ஞான் றிருந்த சைவசமயச் சான்றோர்பால் வினவியறிந்தாரெனக் கோடலே மெய்ம்மையாகுமன்றிப், பொல்லாப் பிள்ளையார் பால் அவைதம்மைக் கேட் டுணர்ந்தாரென்றல் வெறும் பொய்க்கதையே யாகுமென்று கடைப்பிடிக்க. நம்பிகள் இருந்த காலத்தில், தமிழ்கற்ற சான்றோருந் தமிழ்நூல் களுந் தமிழ்ப் பயிற்சியும் அறவே யில்லையாயொழியி னன்றோ, அத்துணை வறும் பாழாய்ப்போன காலத்திற் புதிது தோன்றிய நம்பிகள் ஒருவர்க்குப், பொல்லாப் பிள்ளையாராகிய தெய்வமே அருள்கனிந்து முன்னின்று அவ் வரலாறுகளை அறிவுறுத்திற் றென்றுகோடல் பொருந்தும். அவர் இருந்த அக் காலம் அங்ஙனம் வெறும் பாழாதலின்றிக் கற்றுவல்ல சான்றோர் கூட்டங் களால் நிறைந்துகிடந்தமை நம்பிகள் அருளிச்செய்த பாட்டினுலேயே நன்கு பெறப்படுதலாற், கற்றுவல்ல மக்க ளறிவினுல் ஆகற்பாலனவற்றிற் கெல்லாங் கடவுளை வலிந் திழுத்துக் கட்டிய கதைகள் படுபொய்யெனவே விலக்கற் பாலனவாமென்க. இஞ்ஞான்று நம்மனோரில் அறிவிற் சிறந்தாராலுங் கண்டறியப்படாது மறைந்துகிடந்த நீராவி, மின் என்பவற்றின் ஆற்றல்களையெல்லாங் கண்டறிந்து, 'இவை தெய்வத்தா லன்றி மக்களாலுஞ் செய்யப்படுமோ!' என்று வியக்கத்தக்க வாறுன பொறிகளை (இயந்திரங்களை) அமைத்து, அப் பொறிகளில் அவ்வாற்றல்களை யுய்த்துச்,

செயற்கருஞ் செயல்களையெல்லாஞ் செய்து போதரும் மேனாட் டறிஞர் தாங்கண்ட நுட்பங்களுக்கெல்லாங் கடவுளை முன்னிழுத்துப் பேசாதிருக்க, இந் நுட்பங்களி லும் இவற்றையறியும் அறிவின் திறங்களிலும், எட்டுணை தானும் இலவாய்க், கலைவல்லாரை உசாவிய வளவானே அறியப்படுந் திருத்தொண்டர் வரலாறுகளை அறிதற்கு மட்டுங் கடவுளை முன்னிழுத்துப் பேசுதல் பின்னுள்ளோர் கட்டிய வெறும் பொய்க்கதையாவதன்றி மற்றென்னை? ஆகவே, 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்பதற்கு நம்பிகள் செய்துகொண்ட பொருட்பிழை இறைவனைச் சாருமென்றல் ஆராய்ச்சி யுணர்வில்லார் கூற்றுமென விடுக்க.

அல்லதூஉம், நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த 'திருத்தொண்டர் திருவந்தாதி'யை வழிநூலாகக் கொண்டு 'திருத்தொண்டர் புராணம்' என்னும் பெரிய புராணத்தை அருளிச்செய்த ஆசிரியர் சேக்கிழார்,

"அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்தம் நாதனும் நம்பியாண் டார்நம்பி
புந்தி யாரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம்."

என்னும் நூற்பாயிரச் செய்யுளில், நம்பிகள் அடியார் வரலாறுகளைப் பொல்லாப் பிள்ளையார்பாற் கேட்டுணர்ந் தாரென உரையாமல் 'அவர் தமது அறிவினாலேயே நிரம்ப ஆராய்ந்து புகன்றனர்' என்பது போதரப் "புந்தியாரப் புகன்ற வகையினால்" என்று விளங்க ஓதலின், நம்பிகள் 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதற்குக் கொண்ட பொருள் தம்மறிவிற்பட்டபடி கொண்டதேயல்லாமல் இறைவன் உணர்த்தியபடி யன்றென்பது பின்னும் வலி பெறும். பொல்லாப் பிள்ளையார் நம்பிகட்கு அடியார் வரலாறுகளை யுணர்த்திய துண்மையாயின், அத்துணைச் சிறந்ததோர் அருள்நிகழ்ச்சியைச் சேக்கிழார் சொல்லாது விடார். ஆகவே, அக் கதை சேக்கிழாருக்குப்பின் வந்தாராற் கட்டிவிடப்பட்டதாகுமென்றுணர்ந்து கொள்க.

அற்றேலஃதாக, மேலே காட்டிய செய்யுள் பெரிய புராணத் திருமலைச்சருக்கத்தின் ஈற்றிற் காணப்படுதலானும், அத் திருமலைச்சருக்கஞ் சேக்கிழாரால் இயற்றப் படாமற் பிற்காலத்தவரால் இயற்றிச் சேர்க்கப்பட்டதென நீரே பிறிதோரிடத்துக் கூறுதலானும், அச் செய்யுளை ஈண்டுச் சேக்கிழாரது மொழியாக எடுத்துக் காட்டுதல் நுமது கூற்றுக்கே முரணும்போலுமெனின்; அற்றன்று; பெரியபுராணம் என்னுஞ் சார்புநூலுக்கு வழிநூலாவது இதுவெனக் காட்டும் "அந்த மெய்ப்பதிகத் தடியார்களை" என்னுஞ் செய்யுளும், அதற்கு முதனூலாவது இன்னதெனக் காட்டும் "மற்றிதற்குப் பதிகம் வன்றொண்டர் தாம்" என்னும் அதற்கு முன்னுள்ள செய்யுளும் நூற் பாயிரத்திற்கு இன்றியமையாதனவாயிருத்தலின், அவை ஆசிரியர் சேக்கிழாராலேயே செய்யப்பட்டுத், "தெய்வ வணக்கமுஞ் செயப்படுபொருளும், எய்தவுரை"க்குந் தற் சிறப்புப் பாயிரமாய் நூன்முகத்தே "உலகெலாம்" என்னுஞ் செய்யுள் முதலாக நிற்கும் பகுதியில் நூற்பெயர் கூறுவதாகிய "இங்கிதன் நாமங்கூறின்" என்னுஞ் செய்யுட்குப்பின் நிறுத்தப்பட்டனவாகும். சேக்கிழாருக்குப் பிற்காலத்தே வந்தாரொருவர் 'திருமலைச்சருக்கத்'தைப் புதிதாக இயற்றி அதனைப் பாயிரத்திற்குப்பின்னே சேர்க் கின்றுழித் தமது கருத்துக்கு இசையுமாறு அச்செய்யுட்க ளிரண்டனையும் பிரித்தெடுத்து அச் சருக்கத்தின் ஈற்றில் வைப்பாராயினரென் றுணர்தல்வேண்டும். இங்ஙனமே 'அநபாயசோழவேந்தன்' சிறப்புக் கூறுவதாகிய "கையின் மான்மழுவர்" என்னுஞ் செய்யுளுஞ் சேக்கிழாராற் செய் யப்பட்டு 'வெள்ளானைச் சருக்கத்'தில் நின்றதொன்றாகும்; திருமலைச்சருக்கம் பாடிச் சேர்த்த பின்னையோர் தமது கருத்து நிரம்புமாறு அதனையும் ஆண்டுநின்றும் பிரித் தெடுத்து இதன்கட் சேர்க்கலாயினா ரென்பதைச் 'சேக்கி ழாரும் பெரியபுராணமும்' என்னும் எமதாராய்ச்சியுரையில் விளக்கிக் காட்டினும்; அது நிற்க.

அவையெல்லாம் ஒக்குமாயினும், தெய்வத்தன்மை வாய்ந்த நம்பியாண்டார் நம்பிகள் 'பொய்யடிமை யில்லாத

புலவர்' என்பதற்கு மெய்யல்லாப் பொருள்சொல்லிப் பிழைபடுதலுங் கூடுமோவெனின்; நம்பிகள் மெய்க்கல்வியிலுஞ் சிவபிரான் திருவடிப்பேரன்பிலுஞ் சிவனடியாரன்பின் றிறத்திலுஞ் சிறந்த பெரியாரேயாயினுஞ், சைவசமயாசிரியரோடுஞ் சேக்கிழாரோடும் ஒத்த தெய்வப் பெற்றியுடையரல்லர். சைவசமயாசிரியர் நால்வரும் முழுமுதற் கடவுளை நனவிலேயே நேரே கண்டவர்; கடவுளின் திருவருட்டுணைகொண்டு எவராலுஞ் செயலாகா அரும் பெரும் புதுமைகளை நிகழ்த்தி முழுமுதற் பெரும்பொருளின் உண்மையை நாட்டினவர்; சேக்கிழாரோ இறைவனே தமக்கு "உலகெலாம்" என முதலெடுத்துக்கொடுக்கத் தாம் திருத்தொண்டர் புராணம் பாடத் துவங்கினமையைத் தாமே நூற்பாயிரத்தில்,

> "வெருளில் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய
> பொருளின் ஆகு மெனப்புகல் வாமன்றே."

என்று மொழிந்திருத்தலின் அவருந் தெய்வப்பெற்றியுடையாரென்பது துணியப்படும். நம்பிகளும் இவரையொத்த தெய்வப்பெற்றியுடையாரெனக் கோடற்குச் சான்று ஏதும் இன்மையின், அவர் ஒரோவழிப் பிழைபடுதலும் இயற்கையேயாம். எத்துணைப் பெரியாரும் பிழைபடுதலுண்டென்பது தெருட்டுதற்கென்றே தெய்வத் திருவள்ளுவர்,

> "அரியகற்று ஆசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
> இன்மை யரிதே வெளிறு."

என்று அருளிச்செய்வா ராயினரென்பது,

அற்றாயினும், உமாபதிசிவாசாரியார் தாம் இயற்றிய 'திருமுறைகண்ட புராணத்'தில், நம்பியாண்டார் நம்பிகள் பொல்லாப்பிள்ளையாரால் இயற்றிய புதுமைகளை எடுத்துக்காட்டி, அவர் தெய்வப்பெற்றியினரென்பது தேற்றினாரால்எனின்; நம்பிகள் பொல்லாப்பிள்ளையாரைக் கொண்டு மிக வியத்தகு நிகழ்ச்சிகளை விளைவித்தது உண்மையாயின், அவர் தாமியற்றிய 'திருநாரையூர் விநா

யகப்பிள்ளையார் திருவிரட்டைமாலை'யிலாதல் ஏனைத் தம் பாடல்களிலாதல் அதனைச் சிறிதாயினுங் குறித்திருப்பர். என்னை? சமயாசிரியர்க்கு நிகழ்ந்த வியத்தகு அருள் நிகழ்ச்சிகள் அவர்தம் பாடல்களில் ஆங்காங்குக் குறிக்கப்பட்டிருத்தல் காண்டுமாகலின். மற்று, நம்பிகள் அருளிச்செய்த நூல்களில் அத்தகைய குறிப்பொன்றுங் காணப்படாமையானும், அவரது காலத்தை யடுத்து வந்த ஆசிரியர் சேக்கிழார், நம்பிகள்பொருட்டு நிகழ்ந்தனவாகச் சொல்லப்படும் அருள்நிகழ்ச்சிகளை ஒரு தினைத்தனை தானுங் குறிப்பிடக் காணாமையானும் ஏதொரு சான்று மின்றி அவைகளை வெறுங்கதையாகச் சொல்லுந் 'திருமுறைகண்டபுராணம்,' நுண்ணிய உண்மையாராய்ச்சியில் தலைநின்றவருஞ் சைவசித்தாந்த ஆசிரியரில் நாலாம் எண்ணுமுறைமைக்கண் நின்றவருமான 'உமாபதிசிவாசிரியர்' செய்ததாகாது; அவர்பெயர் தாங்கிய வேறெவரோ ஒருவர் செய்ததாகல் வேண்டும். இதற்குப் பின்னும் ஒரு சான்று காட்டுதும்: நம்பியாண்டார் நம்பிகள் தாம் அருளிச்செய்த 'திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை' யின் ஏழாஞ்செய்யுளில்,

"பதிகம்ஏழ் எழுநூறு பகரும்மா கவியோகி."

என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய்மலர்ந்தருளியன நாலாயிரத்துத் தொளாயிரம் பதிகங்களேயென்பது தோன்றக்கூறினார். மற்றுத், திருமுறைகண்டபுராணமோ கரு-ஆஞ் செய்யுளில்,

"ஒருநாற்பத் தொன்பதினாயிரம தாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகங்கூறி."

என அரசுகள் நாற்பத்தொன்பதினாயிரம் பதிகங்கள் அருளிச் செய்தாரெனக் கூறுநிற்கின்றது; நம்பிகளுக்கு முன்னிருந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் "இணைகொள் ஏழெழுநூறிருபனுவல் ஈன்றவன் திருநாவினுக்கரையன்" என்று திருநின்றியூர்த் திருப்பதிகத்தில் அருளிச்செய்திருக்கின்றனர். இதனாலும், 'திருமுறைகண்டபுராணம்'

ஆராய்ச்சியுணர்வில்லாத ஒருவராற் செய்யப்பட்டதொரு நூலென்பது இனிது புலனுதலின், சான்றேதுமின்றி அதன்கட் சொல்லப்பட்ட வெறுங்கதையைக் கொண்டு நம்பியாண்டார் நம்பிகளைத் தெய்வப்பெற்றியுடையா ரெனக்கோடல் இழுக்காமென்றுணர்ந்து கொள்க. எனவே, தெய்வப்பெற்றியுடையராகாத அவர் ஒரோவழி இழுக்குதல் இயல்பேயாகலின் அதுபற்றி அவர் இகழப் படார். அவர் எம்மனோரால் வழுத்தப்படும் மாட்சிநனி யுடைய சைவப்பெரியாரென்பதிலும் ஐயம் இல்லையென்க. அத்துணைப் பெரியாரேயாயினும் அவர் வழுவிய இடங் களிலும் அவரைப் பின்பற்றி யாமும் வழுவி எமது மெய் யறிவை யிழத்தல் நன்றாகாது. நம்பிகளினுஞ் சுந்தரமூர்த்தி நாயனாரே பல்லாயிரமடங்கு சிறந்த தெய்வமாட்சி யுடைய ராகலின், அவர் அருளிச்செய்த 'திருத்தொண்டத் தொகை'யிற் போந்த 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்பதற்கு அவரது கருத்தறிந்து உண்மைப்பொருள் கோடலே சிறந்ததாகுமல்லாமல், நம்பிகளைப்பின்பற்றி நாயனரது கருத்துக்கு முரணான பொருள் கோடல் பெரிதும் ஏதமாமென்க.

அதுவேயுமன்றிப், 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதற்கு நம்பிகள் கொண்டபொருளே அதற்குண்மைப் பொருளாயின், அதனை வழிநூலாய்க்கொண்டு சார்புநூல் செய்த ஆசிரியர் சேக்கிழார் தாமும் அதற்கு அப்பொருளே கொண்டு பாடியிருத்தல் வேண்டும். பொய்யடிமையில் லாத புலவர்க்கு நம்பிகள் கொண்டபொருள் கபிலர், பரணர், நக்கீரர் முதலான நாற்பத்தொன்பான் சங்கப் புலவரேயென்பது,

"தரணியிற் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர் நக்கீரர் முதனாற்பத் தொன்பது பல்புலவோர்
அருணமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே.."

என்று அவர் திருத்தொண்டர் திருவந்தாதியிற் பாடிய

வாற்ருல் துணியப்படும். மற்றுச் சேக்கிழார் அடிகளோ அதற்கு நம்பிகள் கொண்டவாறு பொருள் கொள்ளாது,

" செய்யுணிகழ் சொற்றெளிவுஞ் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே யெனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானுர்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்."

எனப் பொதுப்படக் கூறிச்சென்ருர். இச் செய்யுளிற் 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்பார்: சங்கப்புலவரே என்று கூறப்படாமையோடு, அவர் பலரென்பது குறிக்கப் படாமையும் என்னே? யென்று நுணுகி நோக்கும்வழி, ஆசிரியர் சேக்கிழார்க்கு நம்பியாண்டார் நம்பிகள் கொண்ட பொருள் பொருத்தமாகக் காணப்படவில்லை யென்பது தானே போதரும்.

அற்றேற், 'பொய்யடிமை யில்லாத புலவர்' எனப் பட்டார் தனியடியாரே யாவரென்பதும், அவர் மாணிக்க வாசகப் பெருமானே யாவரென்பதுஞ் சேக்கிழார்க்குக் கருத்தாயின் அவைதம்மை அவர் ஏன் வெளிப்படை யாகக் கூறிற்றிலரெனிற், சேக்கிழார்க்கு எண்ணூருண்டு பிற்பட்டதாகிய இஞ்ஞான்றுள்ள எமக்கு அவரது கருத்தைத் துணிபுறக் காட்டும் வலிய சான்று ஏதும் காணப் படாமையின், அதனை இன்னதுதானெனத் திண்ணமாய்க் காட்டுதல் இயலா தெனவிடுக்க. ஆயினும், தமக்குமுன் வழிநூல் செய்த நம்பியாண்டார் நம்பிகள் அதற்குப் பொருந்தாப் பொருள் கொண்டமையானும், அவரொடு மாறுகொண்டு அதற்குத் தாங்கொண்ட தனியடியார் என்னும் பொருளை வெளிப்படையாக நாட்டுதலிற் சேக் கிழார்க்குக் கருத்தொருப்பா டில்லாமையானும் அவர் அதனை வெளிப்படச் சொல்லாது நெகிழ்ந்தோதிவிட லானுரென்க. அல்லதூஉம், மாணிக்கவாசகப் பெருமானை யும் அவர் அருளிச்செய்த 'திருவாசகம்,' 'திருச்சிற்றம் பலக் கோவையார்' என்னும் நூல்களையும் இஞ்ஞான்று ஆங்காங்குள்ள வீரசைவர்களும், வீரசைவமடங்களின்

குரவர்களும், சைவசமயாசிரியர் ஏனை மூவரினும் அவர் அருளிச்செய்த 'தேவாரமறை'களினும் பார்க்க மிகுத்துக் கொண்டாடி வழிபாடாற்றி வருதலை உற்றாராயுமிடத்து, இவ்வழக்கந் தொன்றுதொட்டு வருவதொன்றென்பது புலனாகாநிற்கும். வீரசைவமானது சைவசமயத்தின் வேறல்லாததாய்ச் சிவலிங்க வழிபாட்டில் மிக உறைத்து நிற்ப தொன்றே யாயினும், அஃது இத்தமிழ்நாட்டிற்கு உரிய தல்லாததாய்க், கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் வடக்கிருந்து தமிழ்நாட்டிற் குடிபுகுந்த வடுகக்கருநாடராற் கொணரப்பட்டதாகலின், இங்கிருந்த சைவசமயச் சான்றோர் அதனைத் தமது சமயத்தின் வேறுபட்ட தொன்றாகவே கொண்டொழுகலாயினர். கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் ஈற்றில் வடுகநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற் குடிபுகுந்து வைகிய வீரசைவ மரபினர் பலருட், பாண்டி நாட்டில் வைகிய ஒரு தெய்வப் பார்ப்பனக் குடியிலிருந்து மாணிக்கவாசகப் பெருமான் தோன்றினமையாற் போலுஞ், சிவபெருமானால் நேரே ஆட்கொள்ளப்பட்டுச் சிவமாய் வயங்கிய அப் பெருமான், கடவுள் இல்லையென மறுத்து நாத்திகம் பேசிய இலங்கைப் பௌத்தர்களை நடுநிலை வழாமல் வழக்கில் வென்றுந், திருவாசகந் திருக்கோவையா ரென்னுஞ் செழுந்தமிழ் மறைத்தேனைத் தம் அருண் மணவாய்மலர் விண்டு அருளியுந், தில்லைச் சிற்றம் பலத்தே தோன்றிய சிவவொளியில் இரண்டறக் கலந்து சிவமாகியுந் தெய்வச் சைவசமயாசிரியராய் வீறித்திகழ்ந் தமை கண்டு, அவரைத் தமது மரபிற் பிறப்பித்துக் கொள்ளும் பெருந்தவம் ஆற்றிய வீரசைவச் சான்றோர்கள் அவரைத் தம் முதலாசிரியராய்க் கொண்டு அவரையும் அவர் அருளிய தமிழ்மறைகளையுந் தம் உயிர்போற் கொண்டு வழிபாடுசெய்து வருவாராயினர். இவ்வாறு, வடக்கிருந்துவந்து குடியேறிய வீரசைவமரபினரால் முத லாசிரியராய் வைத்து மாணிக்கவாசகப் பெருமான் வழுத் தப்படுதல் பற்றியே, தமிழ்நாட்டிலிருந்த சைவசமயச் சான்றோர்கள் நெடுங்காலம் வரையில் அவரைத் தமது சைவசமய குரவர் வரிசையில் வைத்துக் கொண்டாடிற்

றிலர். இதனாலேதான் சுந்தரமூர்த்தி நாயனாரும் அவரது திருப்பெயரை விளங்கக்கூறாது 'பொய்யடிமையில்லாத புலவர்' எனச் சிறிது மறைத்துக் குறிப்பாற் கூறினாராதல் வேண்டும். சுந்தரமூர்த்தி நாயனாரது காலத்திற்குச் சிறிது பின்னேயெல்லாம் வடக்கிருந்து வந்த வீரசைவத்திற்கும் இந்நாட்டிலுள்ள சித்தாந்த சைவத்திற்கும் முன்னிருந்த வேற்றுமையுணர்ச்சி மறைய, அவ்விரண்டிற்கும் உரியார் ஒருவரோடொருவர் ஒருங்கு அளவளாவி இருவர் கொண்ட சமயமும் ஒருசமயமேயென உண்மை கண்டு உறவுகலந்தமையின், மெல்லமெல்ல மாணிக்கவாசகரையும் நாலாஞ் சைவசமயாசிரியராக இங்குள்ளாரெல்லாரும் ஒருப்பட்டுக்கொள்ளும் பெரும்பேறு பெறலாயினரென்க. சுந்தரமூர்த்திநாயனார் காலத்தும் அவர்க்கு முற்பட்ட காலத்தும் இங்கிருந்த சைவசமயப் பெரியார் மாணிக்கவாசகப்பெருமானை அவ்வாறு சைவசமய ஆசிரியராய்க் கொண்டிலர்; அல்லதவ்வாறு கொண்டனரென்பதற்குச் சான்றும் இன்று. சுந்தரமூர்த்திகளுக்குப்பின் பட்டினத்தடிகள் அருளிச்செய்த 'திருவிடைமருதூர் மும்மணிக்கோவை'யிலே தான் (உஅ) முதன்முதல் மாணிக்கவாசகப் பெருமான் ஏனை மூவரொடு சேர்த்து நாலாமவராகச் சொல்லப்பட்டிருக்கின்றார். இந் நூலுடன் 'பதினோராந் திருமுறை'யிற் கோக்கப்பட்டிருக்கும் ஏனை அருள்நூல் வரிசையில் நம்பியாண்டார் நம்பிகள் அருளிச்செய்திருக்கும் நூல்களும் இறுதியில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நம்பிகள் தாமியற்றிய நூல்களைத் தாமே ஏனைப்பெரியார்தம் நூல் வரிசையிற் சேர்த்திரார் என்பது திண்ணம். நம்பிகள் காலத்திற்குப்பின் அவர்பால் மெய்யன்பு பூண்டொழுகிய மற்றொருவரே நம்பிகளின் நூல்களை அவற்றோடுடன் கோத்தாராகல் வேண்டும். இதற்கு, நம்பிகள் அருளிய 'திருத்தொண்டர் திருவந்தாதி'யின் துவக்கத்தில், நம்பிகளின் திருவடித் துணையைவேண்டிப் பாடியிருக்கும்,

"பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதே மரபுசெயல்

பன்னஅத் தொண்டத் தொகைவகை பல்கும்அந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணைதுணையே.”

என்னுஞ் செய்யுளே சான்ரும். இச் செய்யுளை இயற்றினவர் இன்னுரென்பதும் இன்னகாலத் திருந்தாரென்பதுங் குறிக்கப்படாவிடினும், இச் செய்யுளிற் போந்த பொல்லாப் பிள்ளையார் கதையுந் ‘திருமுறைகண்ட புராணத்’திலுள்ள பொல்லாப்பிள்ளையார் கதையும் ஒத்திருத்தலின், அத் திருமுறைகண்ட புராணம் இயற்றிய உமாபதிசிவாசாரியா ரென்பவரே இச் செய்யுளையும் இயற்றிச் சேர்த்துத், ‘திருத் தொண்டர் திருவந்தாதி’யையும் நம்பிகள் அருளிச்செய்த ஏனை நூல்களையும் பதிஞேராந் திருமுறையின் ஈற்றிற் கோத்தவரா யிருக்கலாமென்று கோடல் இழுக்காது. இங்ஙனம் நம்பிகளுக்குப் பின்வந்த ஓர் அன்பராற், பதிஞேராந் திருமுறையின் ஈற்றில் நிறுத்தப்பட்ட நம்பிகளின் நூல்களைத்தவிர, ஏனைப் பெரியார்தம் நூல்களெல்லாந் ‘திருமுறைகண்ட புராணங்’ கூறுமாறு நம்பிகளாலேயே கோக்கப்பட்டன வென்பது உண்மையாயின், அங்ஙனங் கோக்கப்பட்ட நூல்களுள் ஒன்ருன ‘திருவிடைமருதூர் மும்மணிக்கோவை’யும் அதனுசிரியரான பட்டினத்தடிகளும் நம்பியாண்டார் நம்பிகளிருந்த கி. பி. பத்தாம் நூற்ருண்டின் இறுதிக்கு முற்பட்டிருந்தமை பெறப்படும். பட்டினத்தடிகள் தாம் அருளிச்செய்த அத் ‘திருவிடைமருதூர் மும்மணிக்கோவை’யில்,

“ வித்தகப் பாடல் முத்திறத் தடியருந்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்.” (உஅ)

என்று திருஞானசம்பந்தர் அப்பர் சுந்தரர் என்னும் மூவரையும் மாணிக்கவாசகரையும் ஒருங்கு சேர்த்து ஓதி யிருக்கின்ருர். முதன் மூவரை ஒரு தொகையாக்கி முன்னும், மாணிக்கவாசகரொருவரை மட்டும் அம் மூவர்க்குப் பின்னுமாகவைத்து அவர் ஓதுதலை உற்றுக்காணுமிடத்து, அவர் காலத்திற்கு முன்னெல்லாம் அம் முதன் மூவருமே சைவசமய ஆசிரியராய்க் கொள்ளப்பட்டனரென்பதும், அவரது காலத்திலேதான்

மாணிக்கவாசகரும் அம் மூவரோடு நாலாமவராக வைத்துச் சைவ நன்மக்க ளெல்லாராலும் வழுத்தப்படலாயினு ரென்பதும் நன்கு விளங்கா நிற்கும்.

ஈதிங்ஙனமாகவும், 'தமிழ் வரலாறு' உடையார், சைவ சமயாசிரியர் மூவருங் காலத்தான் முற்பட்டவராதல் பற்றி அம் மூவரையும் ஒருதொகையாக்கி முன்னும், மாணிக்கவாசகர் அம் மூவர்க்கும் பிற்பட்டவராதல்பற்றி அவரைப் பின்னுமாக வைத்துச் சைவசமயச் சான்றோர்கள் வழங்கு வாராயினரெனக் கூறினர். கால முற்பிற்பாடு பற்றி மூவர் முன்னும் மாணிக்கவாசகர் பின்னுமாக வைக்கப்பட்டது உண்மையாயின், மூவர் காலத்திற்கும் முன்னிருந்தோரான 'திருமூல நாயனாரை'யும் அவர் அருளிச்செய்த 'திருமந்திர' நூலையும் அம் மூவர்க்கும் அவர் அருளிச் செய்த 'தேவாரத் திருமுறைக'ளுக்கும் முன்னரன்றோ வைத்து வழங்கல் வேண்டும்? அற்றன்று, திருமூல நாயனார் காலத்தால் முற்பட்டவரேனுங், கடவுளுண்மையை மறுத்த பௌத்தஞ் சமணம் முதலான புறச்சமயங்களை வழக்கில் வென்று சிவபிரானே முழுமுதற் கடவுளாதலைப் பல வியத்தகு தெய்வ நிகழ்ச்சிகளால் நிலைநிறுத்திய நால்வரைப்போல் திருமூலர் சைவவுண்மையினை நாட்டினவரல்லராகலின், அவர் அவர்க்குமுன் வைக்கப்பட்டில ரெனின்; இதுவும் எமது கொள்கைக்கே துணை செய்வதாகும்; என்னை? சமயாசிரியர் நால்வரின் வைப்பு முறை அவரவர் சிறப்புப்பற்றியே வைக்கப்பட்டதல்லாமல் அவர்தங் கால முற்பிற்பாடு பற்றியன்றென்பதே எமது கோட்பாடாகலானும், நீர் எழுப்பிய வினாவும் அக்கோட்பாட்டையே நுதலுதலானு மென்பது. மேலுந், திருநாவுக்கரசு நாயனார் காலத்தால் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு முற்பட்டவராயிருந்தும், அவர் அறிவு முதிர்ந்த முதுமைக் காலத்துஞ் சமண்சமயக் கோட்பாட்டின் பொருந்தாமை யுணராராய் அதன்கண் அழுந்திநிற்ப, ஞானசம்பந்தப் பெருமானோ பால்பருகுங் குதலைச் செவ்வாய்க் குழவியாயிருந்த ஞான்றே அம்மையப்பரை நேரே கண்டு அவரால் ஞானப்பால் ஊட்டப்பெற்று எல்லாம் ஓதா

துணர்ந்த ஞானாசிரியராய் விளங்கினமை கண்டே அக் காலத்திருந்த சான்றோர் அவரை முன்னும் அப்பரை அவர்க்குப் பின்னுமாக வைத்து வழிபட்டு வரலானரென்க. இவ்வுண்மையினை நன்காய்ந்துணரமாட்டாத 'தமிழ் வரலாறுடையார்,' திருஞான சம்பந்தப் பிள்ளையார் முதலில் அருளொளியிற் கலந்தமைபற்றி முன்னும், அதற்குச் சிறிது காலங்கழித்து இறைவன் றிருவடிப்பே றெய்தினமைபற்றி அப்பர் அவர்க்குப் பின்னுமாக வைத்து வழுத்தப்பட்டனரென்றார்; இவ்வாறுரைக்கின்றுழி இவர் இடையிடையே வழுப்பட மொழிந்தனவும் பல; ஒரு காலத் தொருங்கிருந்த இருவரில் ஒருவர் முன்னும் மற்றவர் அவர்க் குப் பின்னுமாக இறைவன் திருவடிநீழல் அடைந்தமையினை ஓர் ஏதுவாக்கொண்டு முன்னடைந்தவரை முன்னும் பின்னடைந்தவரைப் பின்னுமாக வைத்து வழங்குதலை யாம் யாண்டுங் கேட்டிலேம், நூல்களிலாதல் ஆன்றோர் வழக்கிலாதல் அதற்குச் சான்றுங் கண்டிலேம். 'தமிழ் வரலாறுடையார்' ஒருவரே இவ்வாறு பொருந்தாவுரை நிகழ்த்தக் கண்டேம். சிறப்புடைய இருவரில் ஒருவரை முன்னும் ஏனையவரைப் பின்னுமாக வைப்பது, முன் வைக்கப்பட்டார் தனித்தலைமைச் சிறப்புக் கெழுமினரா யிருத்தலும் மற்றையார் அது கெழுமாராயிருத்தலும் பற்றியேயாம்; இதுவே தொன்றுதொட்டு ஆன்றோர் நூல்வழக்கிலும் உலகவழக்கிலும் பிறழாது நடை பெறும் முறையாகும். இம்முறைக்கு மாறாகத் 'தமிழ் வரலாறுடையார்' சமயாசிரியர் தம்முள் ஒருவரை யுயர்த்து தலும் மற்றொருவரை அவரிற் றாழ்த்துதலும் அடாத செயலென்கின்றார்! என் அடாதசெயலாம்? அவரவர்க் குள்ள சிறப்புகளை உள்ளவாறு ஆராய்ந்தளந்து மிக்க சிறப்புடையாரை மிக உயர்த்துதலும், அத்துணைச் சிறப்பு வாயாதாரை அவர்க்கு அடுத்த நிலையில் வைத்து வழுத் துதலுங் குற்றமாமாறு யாங்ஙனம்? தெய்வத் திருவள்ளு வரும்,

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையால் நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்."

என்று பொதுநோக்கே குற்றமுடைத்தாதலும், அவரவர்க்குரிய வரிசைக்குத்தக்க சிறப்புநோக்கே விழுப்பமுடைத்தாதலும் நன்கு தேற்றினாரல்லரோ? ஏனையாசிரியரினும் ஓராசிரியரைச் சிறந்தெடுத்துவைக்கும் உண்மையாராய்ச்சியால், அவரவர்பால் அன்பு செலுத்துமுறை உண்மைவழிச் சென்று உறைத்து நிற்குமேயல்லாமல், அதுபழுதுபடுதலும் ஏனையோரை யிழித்தலுமாய் முடியுமோ? காதல்வழிநிற்குங் கற்புடை மனையாள் ஒருத்தி தன் காதல் கணவனோடொப்ப ஏனை யுறவினர்பால் தலைப்பேரன்பு செலுத்தாமல் அவரவர்க்குத் தக்கவாறு அன்புபூண்டொழுகுவளாயின், அது கண்டார் அவளைப் புகழ்வரோ? இகழ்வரோ? எல்லாரும் அவளைப் புகழ்வதன்றே செய்குவர். அங்ஙனமே, நம் சமயாசிரியன்மார் எல்லாரையுங் குருட்டுத்தனமாய் ஒரேபடியில் வைத்து அன்புபாராட்டுதல் மெய்யன்புக்கு இழுக்காதல் உணர்ந்து, அவரவர்க்குரிய வரிசையில் வைத்து அவ்வவர்பால் உண்மையன்பு பூண்டொழுகுதலே சாலச்சிறந்ததாமென்று உணர்ந்து கொள்க.

இவ்வாறு ஆசிரியன்மார்க்குள்ள சிறப்பு முறையினை உண்மையான் உணர்ந்து அம்முறையைக் கடைப்பிடித்தொழுகுவது எம்முயிர்க்குறுதி பயத்தல் பற்றியன்றே, இவ் வாராய்ச்சியில் தலைநின்றவரான சேக்கிழாரடிகள், முதன்முதல் திருநாவுக்கரசுநாயனார் சீர்காழியிற்போந்து திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக் கண்டு வணங்கி அவரோடும் அங்குள்ள திருக்கோயிலை வழிபடச் சென்றுழி அவ் விருவர்தந் தோற்றத்தினையுங் கூறப்புக்கவர் அவ் விருவர்க்குள்ள சிறப்பிலும் வேற்றுமை தோன்றத் தெரித்து,

"அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம்
அன்புசெறி கடலுமா மெனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும் புவன முய்ய

இருட்கடுவுண் டவர்அருளும் அகில மெல்லாம்
ஈன்றுள்தன் றிருவருளு மெனவுங் கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும் அரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தா ரன்றே."[1]

என்று அருளிச் செய்வாராயினர். இதன்கண் அருட்கடலாவார் திருஞானசம்பந்தப் பிள்ளையாரெனவும், அன்பின் கடலாவார் திருநாவுக்கரசு நாயனாரெனவும், இருட்கடுவுண்ட இறைவனருளே சமணிருள் பருகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாராவரெனவும், உலகெலாமீன்ற இறைவியினருளே தாண்டகச் செந்தமிழ் பயந்த திருநாவுக்கரசு நாயனாராவரெனவும் ஆசிரியர் சேக்கிழார் அவ்விருவர் தமக்குள்ளும் உள்ள சிறப்பில் வேற்றுமை காட்டுதலை உற்றுநோக்க வல்லார்க்கு, அருள் என்பது கடவுட்டன்மையாதல் போல அதனோடொப்பிக்கப்பட்ட திருஞானசம்பந்தப் பிள்ளையாருந் தெய்வ அருள்மாட்சி யுடையராதலும், அன்பு என்பது அடியார்க்குரிய தன்மையாதல் போல அதனோடொப்பிக்கப்பட்ட திருநாவுக்கரசு நாயனாரும் அடிமைத்திறத்தில் தலைநின்ற மாட்சியுடையராதலும் பிரிந்தினிது விளங்காநிற்கும். இங்ஙனமே இவ்வாசிரியன்மார் இருவரையுஞ் சேக்கிழார் ஒருங்குகூற நேர்ந்துழி யெல்லாம், அப்பரினும பார்க்கத் திருஞானசம்பந்தப் பிள்ளையாரை மிக உயர்த்துவைத்து மொழிந்திருத்தலை ஆங்காங்கு நுணுகி யாராய்ந்துணர்ந்து கொள்க. இவ்வாறு சேக்கிழார் அவ்விருவரில் ஒருவரை ஏனையோரினும் மிகுத்துரைத்தல் கொண்டு, அவர் சம்பந்தரிடத்துப் போல அப்பரிடத்து மிக்க அன்பு வைத்திலரெனச் சொல்லுதல் ஒக்குமோ! அவர் அடியார்கள் அனைவரிடத்தும் பேரன்பு பூண்டொழுகுந் திறத்தினரென்பது அவர் அவ்வவ்வடியார் அன்பின் றிறங்களைக் கல்லும் உருகப் பாடியிருக்குஞ் செந்தமிழ்ப் பாக்களால் இனிது புலனாகின்றதன்றோ? இங்ஙனமாகச் சேக்கிழார் அடியாரெல்லாரிடத்தும் நெகிழாத பேரன்பினராயினும்,

1. திருநாவுக்கரசு நாயனார் புராணம், கஅ௫

அவ்வடியார் தமக்குள்ளுந் தனிப்பெருஞ் சிறப்புடையார் தலைமைப்பாட்டினையும் அவர் உண்மைவழாது ஆங்காங்கு நன்கெடுத்துக் காட்டும் முறை எம்மனோராற் பெரிதும் போற்றற்பால தொன்றுமென்பது.

இனித், திருநாவுக்கரசு நாயனாரே தம்மினுந் திருஞான சம்பந்தப் பிள்ளையார் சிறந்தாராயிருத்தலை யெடுத்து மொழிந்து, அத்துணை மாட்சியுடைய அப் பிள்ளையார் தம் மோடு உடனிற்றலின் அவர் பொருட்டாகவாதல் இறைவன் தனது திருவுருவினைத் தமது கட்புலனெதிரே காட்டி யருளுதல் வேண்டுமெனக் குறையிரந்து,

"திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தா ரும்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே."

என்று திருவாய்மூர்ப் பதிகம் அ-ஆஞ் செய்யுளில் அருளிச் செய்திருத்தல் பெரிதும் நினைவிற் பதிக்கற்பாற்று. இன்னுந், திருவாவடுதுறையிற் சிவபெருமான் திருஞான சம்பந்தப்பிள்ளையார்க்கு ஆயிரம் பொன்முடிந்த கிழி யொன்று அருள்சுரந்து அளித்ததனை அப்பரே மனங் கசிந்து,

"காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்க்கு அம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே."
(திருவாவடுதுறைத் திருநேரிசை, க)

என்று அருளிச் செய்தமையும் என்றும் நினைவுகூரற் பாலதாகும்.

இனி, இவ்விருவர்க்கும் பின்னேவந்து, அடியாரனைவர்க்குந் தாம் தனித்தனியே யடிமையாதலை மொழிந்து 'திருத்தொண்டத் தொகை' அருளிச்செய்த சுந்தரமூர்த்திகளும்,

"வம்பறு வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்நற்
கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்."

என்று திருஞானசம்பந்தப் பெருமானை மிக உயர்த்துக் கூறினாற்போல ஏனையடியாரைக் கூறிற்றிலர். இவ்வாறு திருஞானசம்பந்தர் காலத்திருந்த அடியார்முதல் இற்றை ஞான்றை வந்த இராமலிங்க அடிகள் ஈறான சான்றோரெல்லாரும் ஞானசம்பந்தப் பெருமானை ஏனை யெல்லாரினும் பார்க்க மிகுத்து வைத்தே வணக்கவுரை நிகழ்த்தக் காண்டலின், சமயாசிரியர் நால்வரில் ஞானசம்பந்தப் பெருமான் முன்வைத்து வழங்கப்பட்டது ஏனையாசிரியரிற் காணப்படாத தனிப்பெருஞ் சிறப்பு அவர்பாற் காணப்படுதல் பற்றியேயாம்; இவ் வுண்மையினை மறைத்து, அப்பருக்குமுன் சம்பந்தர் இறைவன் திருவடிநீழல் எய்தினமை கொண்டே அவர் அப்பருக்குமுன் வைக்கப்பட்டாரெனக் கரைந்ததும், சம்பந்தரும் அப்பர் முதலான ஏனையடியரும் ஒருங்கொத்த சிறப்பினரே யாவரெனப் பகுத்துணர்ந்து பாராது பகர்ந்ததும் ‘தமிழ் வரலாறுடையார்க்கு’ ஏதமாமென்க. அப்பரே தமது அருமைத் திருமொழியால் திருஞானசம்பந்தரைத் தம்மினும் மிக உயர்த்துவைத்துப் பாடியிருத்தலானும், அக் குறிப்பறிந்து சேக்கிழாரும் பலவிடங்களிலும் ஞானசம்பந்தரை அப்பரினும் பார்க்க உயர்த்துக் கூறுதலோடு,

“தொழுதணைவுற் றாண்டஅரசு அன்புருகத்
தொண்டர்குழாத் திடையே சென்று
பழுதில்பெருங் காதலுடன் அடிபணியப்
பணிந்தவர்தங் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி
விடையின்மேல் வருவார் தம்மை
அழுதழைத்துக் கொண்டவர்தாம் அப்பரே
என அவரும் அடியேன் என்றார்.”

என்று ஞானசம்பந்தர் தெய்வத்தலைமை யுடையராதலும் அப்பர் அவர்க்கு அடிமைத்திறம் பேணும் நிலையாதலும் விளங்கத் தேற்றுதலானும், நம்மாசிரியன்மார் தாமே அவ்வாறு அவர் தமக்குட் காட்டிய சிறப்பியல் வேற்றுமைக்கு மாறாக அவரெல்லாரையும் ஒருபடியாக வைத்துரைத்தல் பெரியதொரு குற்றமாமென்க.

உஎ. அப்பர் சம்பந்தர் இருந்தகால ஆராய்ச்சி

அற்றேலஃதாக, திருநாவுக்கரசு நாயனார் தாம் தழுவிய சமண்மதந் துறந்து சிவபெருமான் திருவருட் பேற்றினை எய்திய ஞான்று முதுமைமிக்கிருந்தா ரென்ப தற்குச் சான்றென்னையெனிற் கூறுதும்: திருநாவுக்கரசு நாயனார் சிவபிரான் திருவருளாற் சைவசமயத்திற்குத் திரும்பித் திருவதிகையிற் சூலைநோய் தீர்ந்து அப் பெரு மான் திருவடிக்கு ஆளானபிற் சில திங்களிலெல்லாஞ் சீர்காழிக்குப் போந்து திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக் கண்டு வணங்கி அவரொடு அளவளாவியிருந்தனரென் பது ஆராய்ச்சியாற் புலனாகின்றது. இதனை நன்காய்ந்து பாராத 'தமிழ்வரலாறுடையார்,' திருவதிகையில் ஆட் கொள்ளப்பட்டபின் அப்பர் அவ்விடத்திலேயே முப்ப தாண்டுகள் இருந்தாராதல் வேண்டுமென்றும், அவர் மீண்டுஞ் சைவசமயத்தைத் தழுவியஞான்று நாற்பதாண் டின ரென்றும், அவர் சீர்காழியிற் போந்து திருஞானசம் பந்தப்பெருமானை வணங்கியபோதுதான் எழுபதாண் டுக்கு மேற்பட்டவரா யிருந்தாரென்றும் உண்மை நிகழ்ச் சிக்கு முற்றும் முரணாகக் கூறினார் ('தமிழ்வரலாறு' பிற் பாகம், முற்பகுதி, ௫0-ஆம் பக்கம்). சேக்கிழாரடிகள் பெரிதாராய்ந்து பாடியிருக்கும் வரலாறுகளைக் கருத்தாய் நோக்குவார்க்குத், தமிழ் வரலாறுடையார் கூறிய இவை முற்றும் மாறுகோளுரைகளாதல் விளங்கா நிற்கும். திரு நாவுக்கரசுகள் சமண்மதந் துறந்து சைவசமயம் புகுந்தமை தெரிந்தவளவானே சமண்மதத்தவர் வாளா இரார்; அவர் தம் அரசனை ஏவி அவரை நீற்றறையில் இடுவித்தல் முதலான பொல்லாங்குகளையெல்லாம் உடனே அவர்க்கு இழைத்தாராதல் வேண்டும். அப்பர் சிவபிரான் திரு வருளைப் பெற்றதற்குப்பின் நெடுநாள் இடையீடின்றியே இத் தீங்குகள் சமண் அரசனால் அவர்க்கு உடனே விளைவிக்கப்பட்டன வென்பதற்குச் சேக்கிழார்,

"இன்ன தன்மையில் இவர்சிவ நெறியினை யெய்தி
மன்னு பேரருள் பெற்றிடர் நீங்கிய வண்ணம்
பன்னு தொன்மையிற் பாடலி புத்திர நகரிற்
புன்மை யேபுரி அமணர்தாம் கேட்டது பொறுராய்."
(திருநாவுக்கரசு நாயனர் புராணம், எக)

என்று அருளிச்செய்தவாற்ருற் புலனும். சமண் அரசன் தான் இழைப்பித்த பல கொடுந் தீங்குகளும் அப்பரை ஒரு சிறிதும் ஊறுபடுத்தாமை கண்டு, கடைப்படியாக அவரை ஒரு பெருங் கற்பாறையிற் பிணிப்பித்துக் கடலில் இடுவித்தனன். அப்பரோ ஆண்டவன் சுரந்த பேரருட் டுணையால் அக் கல்லையே புணையாகப்பெற்று மிதந்து திருப்பாதிரிப்புலியூர்ப் பக்கத்துள்ள கடற்கரையைச் சேர்ந்து கரைமீதேறி அவ்வூரிலுள்ளாராற் பெரிதும் வியந்து பணிந்து வரவேற்கப்பட்டு, அங்கேயுள்ள திருக் கோயிலிற் சிவபிரானை வணங்கி அவன்றிருவடிக்கு, "ஈன்ருளுமாய் எனக்கெந்தையுமாய்" என்னுந் தீந்தமிழ்ப் பதிகமாலை சாத்திப், பின்னுந் திருவதிகை வந்துசேர்ந்து திருத்தாண்டகச் செந்தமிழ் பாடியபடியாய் அங்கே உழ வாரத் திருப்பணி செய்துகொண்டு சிலநாள் வைகினர். இவரைப் பல கொடும் பொல்லாங்குகளால் வருத்திய சமண்வேந்தனை 'மகேந்திரவர்ம பல்லவன்' தான் கடைப் படியாக இழைப்பித்த தீங்குக்கும் அரசுகள் தப்பிக் கரை யேறினரென்பது கேட்டதுணையானே, அவரது பெருமை யுஞ் சிவபிரான் றிருவருள் அவர்க்கு உறு பெருந்துணை யாய் நின்று தான்செய்வித்த தீங்குகளையெல்லாம் பாழ் படுத்தியதும் உணர்ந்து, நல்வினையால் உளந்திருந்தித் திருவதிகை சென்று திருநாவுக்கரசரின் திருவடி மலர் களில் வீழ்ந்து, அவரது கடைக்கண்ணோக்கம் பெற்றுச், சமண்மதம் பொய்யாதலுஞ் சைவசமயமே மெய்யாதலும் உணர்ந்து சிவபிரான் றிருவடிக்கு ஆளானன். இந் நிகழ்ச் சிக்குப்பின் அப்பர் திருவதிகையினின்றும் புறப்பட்டுச் சிவபிரான் திருக்கோயில்களுள்ள பதிபலவுஞ் சென்றிறைஞ் சுதற்கு விழைவுமீதூரப் பெற்றுரென்று சேக்கிழாரடிகள்

தெளித்துக் கூறுமாற்றல், அப்பர் முன்னும் பின்னுந் திருவதிகையிற் பலவாண்டுகள் வைகினாரல்லரென்பது இனிது பெறப்படும். ஈதிங்ஙனமாகவும், இவ்வுண்மை வரலாற்றுக்கு முழுமாருய்த் 'தமிழ் வரலாறுடையார்' முப்பதாண்டுகள் அப்பர் திருவதிகையில் வைகினாரெனத் துணிபுரை நிகழ்த்தியது பெரியதொரு பொய்யுரையா மென விடுக்க.

இனி, மேற்காட்டிய வாறெல்லாம் அப்பர் சமண்மதந் துறந்து திருவதிகையிற் சைவசமயம் புகுந்து, சமண்மதத் தவரால் அளவின்றித் துன்புறுத்தப்பட்டுத், திருவருளால் அவற்றிற்கெல்லாந் தப்பி மீண்டுந் திருவதிகை சென்று இறைவனை வணங்கிச் சிலநாளங்கிருந்து, பின்னர்ச் சிவபிரான் திருக்கோயில்கடோறும் வணங்கப் புறப்பட்டவரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகட்கெல்லாம் எவ்வளவுகாலஞ் சென்றதாகல் வேண்டுமென்று சிறிதமைந்து ஆய்ந்து காணவல்லார்க்கு, அது சற்றேறக் குறையப் பன்னிரண்டு திங்கள் அல்லது ஓராண்டுக்குள்ளாகவே தான் இருக்கலாமென்பது நன்கு விளங்கா நிற்கும்.

இனித், திருநாவுக்கரசு நாயனார் திருவதிகையினின்றும் புறப்பட்டுத் 'திருத்தூங்கானைமாடம்,' 'திருவரத்துறை,' 'திருமுதுகுன்றம்,' 'திருத்தில்லை,' 'திருவேட்களம்,' 'திருக்கழிப்பாலை' முதலான திருக்கோயில்கட்குச் சென்று ஆங்காங்கு இறைவனைப் பரவிப்பாடிச் சிற்சில நாள் தங்கி, மீண்டுந் தில்லைமாநகர்க்குப்போந்து ஆண்டுத் திருப்பணிசெய் தமரும்நாளில், மூன்றாட்டைச் சிறுமதலையாகிய திருஞானசம்பந்தர் சீர்காழியிலே இறைவனையும் இறைவியையும் நேரேகண்டு அவரால் ஞானப்பால் ஊட்டப் பெற்று எல்லாம் ஓதாதுணர்ந்த எல்லாம்வல்ல ஞானாசிரியராய் எழுந்தருளி யிருக்கின்றார் என்னும் வியப்பான செய்தியை அடியார்கள் உரைப்பக்கேட்ட திருநாவுக்கரசர் அளவுபடா வியப்பும் அவரைக் காணுங் காதலுந் தமதுள்ளத்தைக் கவர்ந்துகொள்ள, உடனே தில்லையை வணங்கிப் புறப்பட்டு, வழியிலே திருநாரையூரைப் பணிந்துபாடிப்,

பின் சீர்காழிமருங்கு சார்ந்தார். இவ்வாறு இவர் வருதலைக்கேட்ட திருஞானசம்பந்தப்பிள்ளையார் தாமும் அதற்காகப் பெருமகிழ்வுற்று, அவரை எதிர்கொளச் செல்லும் பொழுதில், எதிர்வருந் திருநாவுக்கரசரின் தோற்றத்தைச் சேக்கிழாரடிகள்,

"சிந்தைஇடை யறாஅன்புந் திருமேனி தனில்அசைவுங்
கந்தமிகை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசும்எதிர் வந்தணைய."[1]

என்று விளக்கிச் சொல்லியிருக்கின்றார். பிள்ளையாரைக் காணவந்த காலத்தில் திருநாவுக்கரசுகள் ஆண்டில் மிக முதியராயிருந்தனரென்பது, மேலைச்செய்யுளிற் போந்த 'திருமேனி தன்னில் அசைவும்' என்னுஞ் சொற்றொடரால் நன்கு அறிவுறுத்தப்படுதல் காண்க. எழுபது ஆண்டுக்கு மேற்பட்டார் ஒருவர் நடக்கும் பொழுதுதான் அவர துடம்பு தள்ளாடுதலை உலகவழக்கில் எவரும் நன்குணர்வர். ஆகவே, அரசுகள் பிள்ளையாரைக் காணவந்த காலத்தில் எழுபது ஆண்டுக்கு மேற்பட்ட முதுமையுடையரா யிருந்தனரென்பதூஉம், அதுபற்றியே பிள்ளையார் அவரை 'அப்பரே' என்றழைத்தனரென்பதூஉம் இனிது விளங்கா நிற்கும். அரசுகள் சமண்மதந் துறந்து சிவபிரான் திருவருளைப்பெற்று, அதனாற் சமண்வேந்தனாற் பலவாறு துன்புறுத்தப்பட்டுச், சிவபிரானருளால் அவற்றிற்கெல்லாந் தப்பி, மீண்டுந் திருவதிகை புகுந்தவரையிற் சென்றகாலம் ஓராண்டின் அகமேயாமெனவும், அதன்பிற் திருவதிகையினின்றும் புறப்பட்டுச் சில திருக்கோயில்களை வணங்கிக்கொண்டு அவர் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக் காணவந்தவரையிற் சென்ற காலமும் ஓராண்டிற்குள்ளேயாகுமெனவுங் கோடலே சேக்கிழார் கூறும் வரலாற்றுரைக்கும் அறிவு வழக்குக்கும் ஒத்ததாக இருத்தலின், பிள்ளையார்பால் வந்தபோது அரசுகள் எழுபத்தைந்தாண்டு சென்ற முதியராயிருந்தாராதலும், அமண்

1. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், உ௭௦.

மதப் பற்றுவிட்டுத் திருவதிகையில் அவர் இறைவன் றிருவருட்பேற்றிற் குரியரானபோது எழுபத்து மூன்றாண் டினரா யிருந்தாராதலுந் தெற்றெனப் பெறப்படும். இவ் வுண்மை திருநாவுக்கரசு நாயனாரே தாம் திருவதிகையி லிருந்து திருவாய்மலர்ந்தருளிய,

"முன்பெலாம் இளையகாலம் மூர்த்தியை நினையாதோடிக்
கண்கண இருமிநாளுங் கருத்தழிந் தருத்தமின்றிப்
பின்பக லுணங்கலட்டும் பேதைமார் போன்றென் உள்ளம்
அன்பனாய் வாழமாட்டேன் அதிகைவீ ரட்டனீரே."

என்னுந் திருப்பாட்டாலும் நன்று வலியுறுத்தப்படும். இதனகட் டாம் இளமைக் காலமெல்லாஞ் சமண்மதத்தி லிருந்து கழித்தமையுங், கண்கணென்று இருமி நினைவு கலைந்து துன்புறும் முதுமைக்காலத்தே தாம் அச் சமண் மதமவிட்டுச் சிவபிரான் திருவருளைப் பெற்றமையும் அவரே விளங்கக்கூறுதல் காண்க.

மேலுந், திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய் திருக்கும் திருப்பதிகத் தொகையினையுந், திருஞான சம்பந்தப் பிள்ளையார் அருளிச்செய்திருக்குந் திருப்பதிகத் தொகையினையும் ஒப்பிட்டுக் காண்புழி, அரசுகள் சமண் மதந்துறந்து சிவபிரான் திருவருளைப் பெற்றபின் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளில் இவ்வுலகவாழ்வு நீத்து இறைவன் றிருவருளொளியில் இரண்டறக்கலந்தமை நன்கு தெளியப்படும். திருநாவுக்கரசர் அருளிச்செய்த திருப்பதிகத்தொகை நாலாயிரத்துத் தொளாயிரமே யாதலை, மேலே சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த திருப்பாட்டொன்றானும் நம்பியாண்டார் நம்பிகள் பாடி யருளிய செய்யுளொன்றானும் இனிது விளக்கிக் காட்டி னேம். மற்றுத், திருஞானசம்பந்தப் பெருமானே பதினா றாயிரந் திருப்பதிகங்கள் அருளிச்செய்தன ரென்பது,

"நகரங் கெடப்பண்டு திண்டேர் மிசைநின்று நான்மறைகள்
பகரங் கழலவ னைப்பதி னாறாயி ரம்பதிகம்
மகரங் கிளர்கடல் வையந் துயர்கெட வாய்மொழிந்த
நிகரெங் கிலிகலிக் காழிப் பிரா னென்பர் நீணிலத்தே."

என்று 'திருஞானசம்பந்தர் திருவந்தாதி,' கரு-ஆஞ் செய்யு ளிலும்,

> "பன்னூ தமிழ்ப்பதினா ருயிர நற்பனுவல்
> மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும்."

என்று 'திருஞானசம்பந்தர் திருவுலாமாலை'யிலும் நம்பி யாண்டார் நம்பிகள் அருளிச் செய்திருக்குமாற்றால் ஐயுற வுக்கு இடனின்றித் துணியப்படும். பிள்ளையார் மூன்றும் ஆண்டில் இறைவன் றிருவருளை நிறையப்பெற்றுத், தாம் இருமணங் கூடியநாளில் அவன் றிருவடிநீழலை எய்தினர். பிள்ளையார் திருமணங்கூடிய காலத்திற் பதினெட்டு அல்லது இருபதாண்டு நிரம்பப்பெற் றிருந்தாரென்று கோடல் இழுக்காகாது; என்னை? பதினாருண்டுக்குமேல் இருபதாண்டுக்குள் ஓர் இளைஞனுக்கு மணஞ்செய்து வைத்தலே பண்டைத் தமிழ்மக்கள் முறையாய்ப் போதரக் காண்டலின். ஆகவே, அருள்பெற்ற காலம் முதல் இறைவன் றிருவடிநீழலெய்திய காலம்வரையில் அஃதாவது சிறிதேறக்குறையப் பதினைந்தாண்டுகளில் திருஞானசம் பந்தப் பிள்ளையார் இந்நிலவுலகின்மீ தெழுந்தருளியிருந்து அருளிச்செய்த திருப்பதிகத்தொகை பதினாருயிரம் ஆகின் றது. பிள்ளையார் பதினாருயிரம் பதிகங்கள் அருளிசசெய் தற்குப் பதினைந்தாண்டுகள் சென்றனவாயின், திருநாவுக் கரசுகள் நாலாயிரத்துத் தொளாயிரம் பதிகங்கள் அருளிச் செய்தற்கு ஏழு அல்லது எட்டு ஆண்டுகளே தாம் சென்றன வாதல் வேண்டும். வடக்கே திருக்கைலாயம் வணங்கச் சென்றபோது அரசுகள் இடையே பாடாதிருந்தார் போலும்! மற்றுத், 'தமிழ் வரலாறுடையாரோ' அப்பர் நாற்பதாமாண்டிலேயே அருள்பெற்றுப் பின்னும் நாற்ப தாண்டுகள் இந் நிலவுலகின்மீது எழுந்தருளியிருந்தன ரென்ருர். அருள் பெற்றபின் அவ்வாறு அவர் நாற்ப தாண்டுகள் இங்கிருந்தனராயிற் சிறிதேறக்குறைய முப்பதினுயிரந் திருப்பதிகங்களாவது அவர் அருளிச்செய் திருத்தல் வேண்டுமன்ருே? அங்ஙனமின்றி அவர் நாலா யிரத்துத் தொளாயிரம் பதிகங்களே அருளிச்செய்திருக்கக்

காண்டலால், அருள்பெற்றபின் அவர் அத்துணை நீண்ட காலம் இங்கிருந்தாரென்றல் சிறிதும் உண்மையாகாது. எழுபதாண்டுக்குமேல் அருள்பெற்று எண்பதாம் ஆண்டளவில் அவர் சிவபிரான் திருவருளொளியிற் கலந்தன ரென்னும் உண்மை முடிபினையே அவர் அருளிச்செய்த திருப்பதிகத்தொகை நாட்டுவதாகுமென்று கடைப்பிடிக்க. எனவே, திருநாவுக்கரசு நாயனார் தமது நாற்பதாம் ஆண்டில் அருள்பெற்றாரென்னும் உரை பொருத்தமில்லாததா மென்பதூஉம், அவரருளிச்செய்த திருப்பதிகத் தொகைக்கு எட்டு ஆண்டுகளும் வடநாடுசென்று மீண்டமைக்கு இரண்டாண்டுகளுங் கூட்ட அரசுகள் அருள் பெற்றபின் இந் நிலவுலகின்மீ தெழுந்தருளி யிருந்தகாலம் பத்தாண்டுகள் அல்லது மிகுதியாய்ச் சொன்னாற் பன்னிரண்டு ஆண்டுகளே யாமென்பதூஉம், அவ்வாற்றால் அவர் தமது எழுபத்துமூன்றாம ஆண்டில் அருள்பெற்று எண்பத்தைந்தாம் ஆண்டில் இறைவன் திருவடிநீழலை எய்தினாராகல் வேண்டுமென்பதூஉந் தாமே போதரு மென்க.

மேலும், பழைய கல்வெட்டுகளின் ஆராய்ச்சியால் இஞ்ஞான்று புலனாயிருக்கும் உண்மை வரலாற்றுக் குறிப்புகளுக்கும் யாம மேலே காட்டியவைகளே பொருத்தமாயிருத்தலையும் ஒருசிறிது காட்டுவாம்: திருநாவுக்கரசு நாயனார் சமண்மதத்திலிருந்து சைவசமயத்திற்குத் திரும்பியகாலையில் அவரைப் பலவாற்றால் துன்புறுத்தினவனுந், தான்செய்த துன்பங்கள் அத்தனையும் அவரைச் சிறிதும் ஊறுபடுத்தமாட்டா தொழிந்தமை அவர் சிவபெருமான் றிருவருட் பாதுகாப்பில் நின்றமையாற்றான் என்பதனைத் தெளியவுணர்ந்த பின்னர் அவரது அருளாற் சிவபிரான் றிருவடிக்கு ஆளானவனும் 'முதலாம் மகேந்திரவர்ம பல்லவனே' என்பது இஞ்ஞான்று துணியப்பட்டுக் கிடக்கின்றது.[1] இவ்வேந்தன் கி. பி. ௬00-ஆம் ஆண்டிலிருந்து ௬௨௫-ஆம் ஆண்டுவரையில் அரசுபுரிந்தா

1. Dr. G. Jouveau-Dubreuil's 'The Pallavas,' p. 37.

னென்பதும் வரலாற்று நூலாசிரியராற் றுணியப்பட்டதொன்றும்.[1] இவ்வேந்தன் 'மத்தவிலாசம்' எனப்பெயரிய நகைச்சுவை நாடகம் ஒன்றை வடமொழியில் ஆக்கி, அதிற் பாசுபதமதத்தினராகிய துறவியொருவரையும், ஒரு காபாலிகரையும் அவர்தம் மனைவியாரையும், ஒரு பௌத்த பிக்குவையும் உரையாடவிட்டு, அவர்தம்மையெல்லாம் ஏளனஞ் செய்திருக்கின்றான்.[2] இதனால் இவன் இந் நாடகம் ஆக்கியகாலத்திற் சமண்மதத்தவனாயிருந்தமை பெறப்படும். இவன் அரசாண்ட இருபத்தைந் தாண்டுகளின் இறுதிப் பகுதியிலேதான், அப்பரின் அருட்பேராற்றலுஞ் சிவபிரானே முழுமுதற் கடவுளாதலுந் தெளிந்து அவரது திருவருளாற் சைவசமயத்தைத் தழுவினன். அவ்வாறு சைவசமயத்தைத் தழுவியவுடனே, தென்னார்க்காடு மாகாணத்தின் கண்ணதான 'பாடலிபுத்திரம்' என்னும் நகரிற் சமண்முனிவர்க்குப் பெரியதோர் உறையுளாயிருந்த பெருஞ்சமண்பள்ளியினை இடித்து,[1] அதன்கட் பெற்ற கருவிகளைக்கொண்டு தன்சிறப்புப் பெயர்களில் ஒன்றான 'குணபரன்' அல்லது 'குணதரன்' என்னும் பெயராற் 'குணதரேச்சுரம்' என்னுஞ் சிவபிரான் திருக்கோயிலைத் திருவதிகையிற் கட்டுவித்தான்; இது,

"வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனுந் திருவதிகை நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்திலமண் பள்ளியொடு பாழிகளுங்
கூடவிடித் துக்கொணர்ந்து குணதரவீச் சரமெடுத்தான்."[3]

என்று ஆசிரியர் சேக்கிழார் கூறுமாற்றானும் அறியப்படும். அதுவேயுமன்றித், திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென்னார்க்காடு முதலான மாகாணங்களிலுள்ள மலைகள் பலவற்றைக் குடைந்து அவற்றின்கட்

1. Dr. V. Smith's 'The Early History of India,' 1914 edition, p. 472.

2. 'Some Contributions of South India to Indian Culture' by Dr. S. Krishnaswami Aiyangar, p. 204.

3. திருநாவுக்கரசு நாயனார் புராணம், கசசு.

சிவபிரானுக்குத் திருக்கோயில்களும் அமைப்பித்தான். இவ்வாறு இவன் சைவசமயத்தைத் தழுவியபின் பல திருக்கோயில்களை அமைப்பித்தற்கு ஐந்தாண்டுகளேனுஞ் சென்றதாகல் வேண்டும். இவனது அரசு கி. பி. ௬௨௫-ஆம் ஆண்டோடு முடிவுபெறுதலால், இவன் சைவசமயத்தைத் தழுவியது கி. பி. ௬௨௦-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாகல் வேண்டும். அவ் வாண்டிலேயே திருநாவுக்கரசருஞ் சமண்மதந் துறந்து சைவசமயம் புகுந்தாராகல் வேண்டும்; புகுந்த இரண்டு ஆண்டிற்குள்ளெல்லாம் அவர் திருஞானசம்பந்தப் பெருமானைச் சீர்காழியிலே வந்து கண்டு வணங்கினமையினை மேலே விளக்கிக்காட்டினும். அக்காலையிற் சம்பந்தப் பெருமான் நாலாண்டு சென்ற சிறு மதலையாகவே இருந்தனரென்பது சேக்கிழாரடிகள் அஞ்ஞான்று நிகழ்ந்த வரலாறுகளை எடுத்துரைக்குமாற்றால் துணியப்படும். அதன்பிற் சில திங்கள் கழித்து அப்பரும் திருஞானசம்பந்தருந் திருப்புகலூரில் ஒருங்கு கூடியபோது, அவர்கள்பாற் சிறுத்தொண்ட நாயனார் வந்து அவர்களை வணங்கி அவர்களோடு அளவளாவியிருந்தனரென்பது,

"நீலநக் கடிகளும் நிகழ்சிறுத் தொண்டரும்
உடனணைந் தெய்து நீர்மைச்
சீலமெய்த்தவர்களுங் கூடவே கும்பிடுஞ்
செய்கைநேர் நின்று வாய்மைச்
சால்பின்மிக் குயர்திருத் தொண்டினுண் மைத்திறந்
தன்னையே தெளிய நாடிக்
காலமுய்த் தவர்களோ டளவளா விக்கலந்
தருளினார் காழி நாடர்."[1]

என்று சேக்கிழார் கூறுமாற்றான் அறியப்படும். இந் நிகழ்ச்சிக்குச் சிலதிங்கள் முன்னே திருஞானசம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளிய போதுஞ், சிறுத்தொண்டர் தம் அருமைப் புதல்வர் சீராளருடன் சம்பந்தப் பெருமானை வரவேற்று வணங்கினமை,

1. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், ௫௨௬.

"கூரரவல் இரைதேர்ந்து குளமூலவி வயல்வாழும்
தாராவே மடநாராய் தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்றன் அருளொருநாட் பெறலாமே."

என்று திருஞானசம்பந்தப் பெருமானே திருச்செங்காட்டங் குடித் திருப்பதிகத்தில் அருளிச் செய்தவாற்றால் தெளியப் படும். இங்ஙனமாகச் சீராளருடன் சிறுத்தொண்டரோடும் அளவளாவிப், பின்னர்ச் சில திருக்கோயில்களை வணங்கிக் கொண்டு பிள்ளையார் அப்பருடன் திருமறைக்காடு வந்து சேர்ந்து, அங்குள்ள திருக்கோயிலின் முன்வாயிற் கதவு கள் எவரானுந் திறக்கக்கூடாவாறு அடைபட்டு நிற்ப, அவற்றைத் திறக்கவும் அடைக்கவுஞ் செய்து, அம்மையப் பரை வணங்கியபடியாய் அங்கே சிலநாட்கள் வைகியிருப் புழி, மதுரையிற் பாண்டிமன்னன் மாதேவியாரான 'மங்கையர்க்கரசியார்' மதுரைக்கு எழுந்தருளுமாறு வேண் டிச் சம்பந்தப் பெருமானுக்கு ஒரு திருமுகம் விடுத்தனர். அவரது வேண்டுகோட் கிணங்கிப் பெருமானும் மதுரைக் கெழுந்தருளி அமைச்சர் குலச்சிறை நாயனாராலும் மங்கை யர்க்கரசியாராலும் வணங்கி வரவேற்கப்பட்டு இறைவனை வழுத்தி அடியார் குழாத்துடன் அங்கே வைகினர். மங்கை யர்க்கரசியார் சைவசமயந் தழுவினவராயிருந்தும், அவர் தங் கணவரான கூன்பாண்டிய மன்னரோ அப்போது சமண்மதந் தழுவினராயிருந்தார். சமண்மதம் பாண்டி நாடெங்கும் பரவியிருந்தது. சமண்முனிவர்கள் தம் மதம் புகுதாத சைவர்களை மிகவுந் துன்புறுத்திவந்தனர். சைவ சமயாசிரியரான திருஞானசம்பந்தரும் அவருடன் பெருந் திரளான சிவனடியார்களும் மதுரைக்கு வந்திருத்தலைக் கண்டு மனம்பொறாத சமண்முனிவர்கள் தம் பாண்டி மன்னனது உடன்பாடுபெற்றுப், பிள்ளையாரும் அடியார் களும் அமர்ந்திருந்த திருமடங்களிலே ஒரு நள்ளிரவில் தீயிட்டனர். அவர்களிட்ட தீப்பற்றித் திருமடங்கள் எரிதலைக்கண்ட பிள்ளையார், இது பாண்டிமன்னன் ஒருப் பாடுபெற்றுச் சமணர்செய்ததெனை உணர்ந்து,

"செங்கண் வெள்விடை யாய்திரு வாலவாய்
அங்கணு அஞ்ச லென்றருள் செய்யெனைக்
கங்குல் ஆரமண் கையர் இடுங்கனல்
பங்கயில் தென்னன் பாண்டியற் காகவே."

என இறைவனை வேண்டிப்பாட, அத் தீயானது அவிந்து, உடனே பாண்டிமன்னனின் உடம்பைக் கொடியதொரு வெப்பு நோயாய்ச் சென்று பற்றிக்கொண்டது. அக் கொடு நோய் சமண்முனிவர்களால் தீர்க்கலாகாதவாறு பெருகவே, மங்கையர்க்கரசியார் அருளுரைகேட்டு அப் பாண்டிமன்னன் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக் குறையிரந்து தன்பால் வருவிக்கப், பிள்ளையாரும் அவன்பாற் சென்று அவன் இடுவித்த இருக்கையில் அவன் மருங்கே அமர்ந்தருளினர். அப்போது மங்கையர்க்கரசியாரும் பிள்ளையாரது பக்கத்தே யிருப்பச், சமண்முனிவர்கள் அவர்க்கு எதிர்ப்பக்கத்தே யிருந்து அவரைப் பலவாறு இழித்துப் பேசலாயினர்; அதுகண்டு அரசியார் உளந்துடித்து 'எம் பச்சிளந் தெய்வப் பெருமானை இவர்கள் இவ்வாறு இகழ்ந்துரைப்பதே!' என்று தங்கணவனுரை நோக்கி வருந்தி மொழிந்தனர். அதுகண்ட பிள்ளையார் அரசியார்க்கு ஆறுதல் உண்டாம்பொருட்டு,

"மானி னேர்விழி மாத ராய்வழு
திக்கு மாபெருந் தேவிகேள்
பால்நல் வாய்ஒரு பாலன் ஈங்கிவன்
என்று நீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதி யாய
இடங் களிற்பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேன்அ லேன்திரு
வால வாய்அரன் நிற்கவே."

என்னுந் திருப்பாட்டை முதலாக உடைய திருப்பதிகத்தினைத் தமது அருமைத் திருவாய்மலர்ந்தருளிப் பாண்டிமாதேவியா ருளங் குளிரவுஞ் சமண்முனிவர் வன்னெஞ்சந் திடுக்கிட்டு ஒடுங்கவுஞ் செய்திட்டார். இங்ஙனம் அருளிச்செய்த இத் திருப்பதிகச் செய்யுளிற் பிள்ளையார் தம்மைப்

'பால்பருகுதலாற் பால்மணங்கமழும் வாயினையுடைய ஒரு பாலன்' என்று குறிப்பிடுதல் மிகவுங் கருத்திற் பதிக்கற்பாலது. இதுகொண்டு, திருஞானசம்பந்தப் பெருமான் மதுரைமாநகர்க்கு எழுந்தருளிய ஞான்று பால்பருகும் பருவத்தினையுடைய சிறுபிள்ளையா யிருந்தனரென்பது ஐயமின்றிப் பெறப்படுகின்றதன்றோ? பால்பருகும் பிள்ளைமைப்பருவம் ஐந்தாண்டுக்கு மேற்படுதலின்மையின், மதுரையிலிருந்து பிள்ளையார் அருளிச்செய்த இத் திருப்பதிகச் செய்யுளில் தம்மைப் 'பானல்வாயொருபாலன்' என்று குறிப்பிட்டது தாம் அக்காலையில் ஐந்தாட்டைப் பருவத்தினரா யிருந்தமைபற்றியேயாம். இவர் இறைவியால் ஞானப்பால் ஊட்டப்பட்ட நாள்முதல் மதுரைக்குச் சென்றவரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைச் சேக்கிழாரடிகள் கூறுமாறு வைத்துக் கணக்குச் செய்யின், அவைதமக்கு இரண்டு ஆண்டுகளே செல்லுதல் நன்கறியப்படும். மதுரைக்குச் சென்றகாலத்திற் பிள்ளையார் தாமே தம்மைப் பால்பருகும் பாலனென்று குறித்த உரையுஞ் சேக்கிழாரது வரலாற்றுரையும் ஒத்து நிற்கின்றன. ஆகவே, பிள்ளையார் ஞானப்பாலுண்டது தமது மூன்றும் ஆண்டிலும், மதுரைக்குச் சென்றது தமது ஐந்தாம் ஆண்டிலுமேயாமென்பதும், மதுரைக்குச் செல்லுமுன் திருப்புகலூரில் அப்பருடன் எழுந்தருளியிருந்த காலையிலும் அதற்குமுன் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளிய காலையிலுஞ் சிறுத்தொண்ட நாயனாரைக் கண்டு அவரோடு அளவளாவினது தமது நாலரையாண்டிலேயா மென்பதுந் தாமே போதரும்.

இனி, அப்பரும், அவரைத் துன்புறுத்தி அவரது அருளாற் சைவசமயந்தழீஇய முதலாம் மகேந்திரவர்ம பல்லவ வேந்தனுஞ் சமண்மதப் பற்றுவிட்டுச் சிவபிரான் றிருவடிக்கு ஆளான காலங் கி.பி. சுஉ0-ஆம் ஆண்டிலேயா மென்பதை மேலே நன்கு விளக்கிக்காட்டினும். அப்பர் முதன்முதற் சீர்காழிக்குப்போந்து திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்டது கி. பி. சுஉஉ-ஆம் ஆண்டிலேயா மென்பதூஉம் மேலே விளக்கினும். அப்போது திருஞான

சம்பந்தப் பிள்ளையார் நாலாண்டுடைய தெய்வச் சிறுமதலை யாயிருந்தனர். அதன்பிற் சிறுத்தொண்ட நாயனாரையும் அவர்தஞ் சிறுபுதல்வர் சீராளரையுங் கண்டபோது பிள்ளையார்க்கு நாலரையாண்டாயிற்று. அதன்பின் அப்பருடன் திருமறைக்காட்டுக்கு எழுந்தருளி, அங்கு நின்றும் அப்பரைப் பிரிந்து திருவாலவாய்க்கு எழுந்தருளி மங்கையர்க்கரசியாரையும் அவர்தங் கொழுநரான கூன் பாண்டிய மன்னனையுங் கண்டபோது பிள்ளையார்க்கு ஐந்தாமாண்டு நிரம்பிற்று. எனவே, கி. பி. சுஉரு-ஆம் ஆண்டிலேதான் பிள்ளையார் ஐந்தாட்டைச் சிறுவரா யிருந்ததூஉங், கூன்பாண்டியனைக் கண்டதூஉமாகும்.

இக் கி. பி. சுஉரு-ஆம் ஆண்டு கூன்பாண்டிய வேந்தனது ஆட்சியின் துவக்ககாலமோ இறுதிக்காலமோ வெனின்; இஞ்ஞான்றை வரலாற்று நூலாசிரியராற் சிறந்த சான்றுகளாகக் கொண்டாடப்படுங் கல்வெட்டு களைக் கொண்டு, இவ் சுஉரு-ஆம் ஆண்டு அவ்வரசன்றன் ஆட்சிக்காலத் துவக்கமாதலைக் காட்டுவாம்: யானைமலைக் குகையின்கட் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் இரண்டினால் 'ஜடிலபராந்தகன்' எனப்படும் 'மாறன் சடையன் பராந்தகன்' என்பான் கி. பி. எஎ0-இல் அரசு வீற்றிருந்தமை துணியப்படுகின்றது. வேள்விக்குடி நன்கொடைப் பட்டையத்தானும், சின்னமனூரிலகப்பட்ட சிறிய பெரிய செப்பேடுகளானும் இம் 'மாறன் சடையன் பராந்தகன்' என்னும் பாண்டிமன்னனுக்குமுன் அவன்றந்தை 'தேர்மாறன் அரிகேசரி பராங்குசன்' என்னும் 'முதலாம் ராஜசிம்ம' பாண்டியனும், அவனுக்குமுன் அவன்றந்தையாகிய 'பாண்டியன் கோச்சடையனும்,' அவனுக்குமுன் அவன்றந்தை யாகிய 'கூன்பாண்டியன் நின்றசீர் நெடுமாறன்' என்னும் 'அரிகேசரி மாறவர்மனும்' அரசு புரிந்தமை தெளியப்பட்டிருக்கின்றது.[1] இவ்வாறு ஜடிலபராந்தகனையும், அவற்கு முன் அரசாண்ட பாண்டி மன்னர் மூவரையுஞ் சேர்த்து

1. 'The Pallavas' by Prof. G. Jouveau-Dubreuil, pp 67-69.

ஒவ்வொருவர்க்கும் முப்பதாண்டு விழுக்காடு வைத்துக் கணக்குச்செய்ய, அந் நால்வர்க்கும் நூற்றிருபதாண்டுக ளாகின்றன; இத் தொகையை ஜடிலபராந்தகனிருந்த கி. பி. எஎ0-இற் கழிக்கக், கூன்பாண்டியன் கி. பி. சுரு0-இல் அரசு வீற்றிருந்தமை கல்வெட்டாராய்ச்சியானும் நன்கு புலனுகின்றது. மேற்குறிப்பிட்ட பாண்டியர் ஒவ்வொருவர்க்குங் குத்துமதிப்பாய்க் கணக்குச் செய்யும் முறையில் முப்பதாண்டுகள் வைக்கப்பட்டனவாயினுங், கூன்பாண்டியன் என்னும் நின்றசீர் நெடுமாறர் அம்முப்பதாண்டுகட்குமேல் ஐம்பதாண்டுகள் வரையில் அரசுவீற்றிருந்தமை புலனுகாமை நிற்கின்றது; என்னை? மேலே காட்டியவாற்ருல் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் இப் பாண்டி மன்னனைக் கி. பி. சுஉகூ-இல் வந்து கண்டமை துணியப்பட்டதாகலினென்க. கூன்பாண்டியன் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு இழைப்பித்த கொடுந் தீவினையாற் கொடியதொரு வெப்புநோய் கொள்ள அந் நோயே அவனுடம்பிலிருந்த நச்சுநீரையெல்லாம் உறிஞ்சி அதனைத் தூய்தாக்கவும் அதனுல் அவன் நீடுவாழவுந் தமது திருவுளத் தெண்ணிப் பிள்ளையார் அவனுக்குத் திருநீறு அளித்து "வேந்தனும் ஓங்குக" எனுந் தமது அருளுரை யாற்றலால் அவன் கூனும் நிமிர்ந்து 'நெடுமாறன்' ஆகவும் அருள்புரிந்தாராகலின், இப் பாண்டிமன்னன் ஐம்பதாண்டுகள் செங்கோல் செலுத்தினமை வாய்வதேயா மென்க.

அற்றுயினும், மேலே யெடுத்துக்காட்டிய கல்வெட்டாராய்ச்சியால் நின்றசீர் நெடுமாற பாண்டியன் கி. பி. சுரு0-ஆம் ஆண்டில் அரசுவீற்றிருந்தமை மட்டும் பெறப்படுகின்றதல்லாமல் அதற்கு முன்னே அவன் கி. பி. சுஉகூ-ஆம் ஆண்டிலும் இருந்தானென்பது பெறப்படவில்லையாலெனின்; கி. பி. சுஉகூ-ஆம் ஆண்டிலிருந்ததுடன், சிறிதேறக்குறையக் கி. பி. சுஉ0-ஆம் ஆண்டளவிலேதான் அப் பாண்டிமன்னன் அரியணையேறி அரசு செலுத்தத் துவங்கினுனதல் வேண்டுமென்பதூஉம் ஈண

டொருசிறிது விளக்கிக் காட்டுதும். நின்றசீர் நெடுமாறற்கு மகனான 'கோச்சடையன்' என்னும் பாண்டி மன்னன் கி. பி. சுஎ௦-ஆம் ஆண்டில் அரசுவீற்றிருந்தமையுங், கி. பி. சுஎச-ஆம் ஆண்டின்கண் வடநாட்டிலிருந்து படையெடுத்துவந்த சாளுக்கிய வேந்தனாகிய 'முதலாம் விக்கிரமாதித்தனை' அவன் மருதூரிலும் மங்கலபுரத்திலும் எதிர்ந்து தோல்விபெறச் செய்தமையும், அவ்வாறு அவன் அச் சாளுக்கிய மன்னனை எதிர்ந்துநின்றுழித் தொண்டைநாட்டரசனான 'முதலாம் பரமேசுரவர்மனும்' அவன்றன் மகன் 'இரண்டாம் ராஜசிம்மனும' அவற்குத் துணையாய் நின்று அவ் விக்கிரமாதித்தனொடு பொருது அவனைத் தமிழகத்தினின்று துரத்திவிட்டமையும் 'வேள்விக்குடி,' 'கேந்தூர்' என்னும் இடங்களில் அகப்பட்ட பட்டையங்களைக் கொண்டு வரலாற்று நூலாசிரியர்களால் நன்காராய்ந்து காட்டப்பட்டிருக்கின்றன.[1] இனிக், 'கோச்சடையன்' நின்றசீர் நெடுமாற பாண்டியற்கு மகனாதல் போலவே, 'முதலாம் பரமேசுரவர்மனும்' வாதாவிகொண்ட முதலாம் நரசிம்மவர்மன் ஆகிய 'முதலாம் ராஜசிம்மனுக்கு' மகன் ஆவன். இந் நரசிம்மவர்மன் மகளைக் கோச்சடையன் மணந்துகொண்டமையால், அவள் வயிற்றிற் பிறந்த தன் மகனுக்கு அவன்றன பாட்டனின் சிறப்புப்பெயரான 'ராஜசிம்மன்' என்பதனை இயற்பெயராகச் சூட்டினன். அங்ஙனமே, முதலாம் பரமேசுரவர்மனுந் தன்மனையாள் வயிற்றிற் பிறந்த தன் மகனுக்கும் அவன்றன் பாட்டன் சிறப்புப்பெயராய 'ராஜசிம்மன்' என்பதனை இயற்பெயராகச் சூட்டினன். இவ்வாற்றாற், கோச்சடையன் என்னும் பாண்டிமன்னனும், முதலாம் பரமேசுரவர்ம பல்லவ வேந்தனும் நெருங்கிய மைத்துனக்கிழமை யுடையராதலும், அதுபற்றியே அவ்விருவரும் ஒருங்கு சேர்ந்து வடக்கிருந்துவந்த பகைமன்னனை சாளுக்கிய விக்கிரமாதித்தனை எதிர்ந்து வென்று துரத்தினாதலும் வரலாற்று நூலாரால் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.[2] ஆகவே, கி. பி. சுஎச-ஆம் ஆண்டில்

1. Ibid, p. 68. 2. Ibid, p. 68.

இச் செந்தமிழ் நாட்டின் தென்பகுதிக்கண் அரசுபுரிந்த பாண்டி மன்னனும், வடபகுதிக்கண் அரசுபுரிந்த பல்லவ அரசனும் நெருங்கிய சுற்றத்தொடர்புடையராய் ஒருவரோ டொருவர் அன்பினல் அளவளாவி நின்றனரென்பதும், அவ்விருவர்க்கும் அஞ்ஞான்று பகைவனாய் அவரொடு முரணி நின்றோன் வடநாட்டுச் சாளுக்கிய மன்னனை முதலாம் விக்கிரமாதித்தனேயாவ னென்பதும் நன்கு பெறப்படுதல் காண்க.

இனிக், கி. பி. சுளசச-ஆம் ஆண்டுக்குமுன் தென் றமிழ் நாட்டில் அரசுவைகிய 'நின்றசீர் நெடுமாற பாண் டியன்' தன்மகன் கோச்சடையனுக்கு, வாதாவிகொண்ட நரசிம்மவர்ம பல்லவன் மகளை மணஞ்செய்துகொண்டமை மேற்காட்டியவாற்ருல் நன்கு விளங்குதலின், நெடுமாற னும் நரசிம்மவர்ம பல்லவனுந் தம்முள் நட்புரிமை வாய்ந் தனராயிருந்தமையுந் தானே பெறப்படும். இதுகொண்டு, நெடுமாறன் நெல்வேலிப் போர்க்களத்தில் வென்று துரத்தினது நரசிம்மவர்ம பல்லவனை அன்றென்பதூஉம், அங்ஙனம் அவனாற் போர்முனையில் தொலைவுண்டோன் தமிழ்நாட்டு வடவெல்லைக்குப் புறம்பான வடபுல வாதாவியில் அரசுபுரிந்த சாளுக்கியமன்ன னொருவனே யாவனென்பதூஉஞ் செவ்வனே முடிக்கப்படும.

இனி, நெடுமாறன்மேற் படையெடுத்துவந்த சாளுக் கிய மன்னன் யாவனென்பது ஆராயற்பாற்று. நெடு மாறற்கு மகனை 'கோச்சடையன்'மேற் போர்க்கெழுந்து வந்து தோல்வியுற்ருேன் முதலாம் விக்கிரமாதித்தன் என்னுஞ் சாளுக்கிய வடபுலமன்னனேயாதலும், அங்ஙனம் அவ்விருவர்க்குள்ளும் மூண்டபோர் கி. பி. சுளசச-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாதலுந் துணியப்பட்டுக் கிடத்தலின், கோச்சடையன் அரியணையேறி அரசு வீற்றிருக்கத் துவங் கியதும், அவன் றந்தையாகிய நின்றசீர் நெடுமாறன் இறைவன் றிருவடிநீழலெய்தியதுஞ் சிறிதேறக் குறையக் கி. பி. சுளயo-ஆம் ஆண்டில் நிகழ்ந்தனவாகல்வேண்டும். கோச்சடையன்மேற் படையெடுத்துவந்த முதலாம் விக்கிர

மாதித்த சாளுக்கிய மன்னனே, கி. பி. ௬௪௨-ஆம் ஆண்டில் நரசிம்மவர்ம பல்லவவேந்தற்குப் படைத்தலைவ ராய்ப் படையெடுத்துப்போந்த சிறுத்தொண்ட நாயனு ரொடு பொருது அப்போரில் இறந்துபட்ட இரண்டாம் புலிகேசமன்னற்கு மகனுவன். இங்ஙனமாகக், கோச் சடையனை வந்தெதிர்த்தவன் முதலாம் விக்கிரமாதித்த னென்பது தெளியப்படவே, கோச்சடையற்குத் தந்தை யான நின்றசீர் நெடுமாறனை வந்தெதிர்த்த சாளுக்கிய வேந்தன் விக்கிரமாதித்தனுக்குத் தந்தையான இரண் டாம் புலிகேசனே யாவனென்பது ஒருதலை. புலிகேச மன்னன்றன் போர்த்திறத்தினையும் அவன் படை யெடுத்துச் சென்ற நாடுகளையும் விரித்துரைக்கும் ஒரு செப்புப் பட்டையமானது கி. பி. ௬௩௪-ஆம் ஆண்டில் வெட்டப்பட்டதாகும்.[1] வடக்கே வடுகுநாட்டின்கண் எல் லூருக்குங் குண்டூருக்கும் இடையிலிருந்த ஊர்கள் அத் தனையும் முதலாம் மகேந்திரவர்மனுக்கு உரியவாயிருந்தன; தன்னாட்டுக்கு அருகிருந்த அவ்வூர்களை இரண்டாம் புலி கேசன் நடுவுநிலையிகந்து கி. பி. ௬௧0-ஆம் ஆண்டிற் கவர்ந்துகொண்டான். அதுமுதல் தமிழ்நாட்டின் வட பகுதியிலிருந்த பல்லவ அரசர்க்குந், தமிழ்நாட்டின் வட வெல்லைக்கு அப்பாலிருந்த சாளுக்கிய மன்னர்க்குந் தீராப் பகை உண்டாவதாயிற்று.[2] புலிகேசன் அவ்வாறு மகேந்திரவர்ம பல்லவற்குரிய வடுக நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டபிற, சில ஆண்டுகள் கழித்துத், தமிழ்நாட்டின் மேற் படையெடுத்துவந்து, பல்லவவேந்தர்க்குத் தலை நகரான திருக்கச்சியைக் (காஞ்சிபுரத்தை) முற்றுகைசெய் தான். அக்காலம் மகேந்திரவர்ம பல்லவன்றன் மகனுன முத லாம் நரசிம்மவர்ம பல்லவனது ஆட்சி துவங்கியகாலமா யிருத்தல் வேண்டும்; ஏனென்றால், அங்ஙனம் வந்தெதிர்த்த புலிகேச மன்னனைத் துரத்த மாட்டாமல் நரசிம்மவர்மன்

1. Prof. R. G. Bhandarkar's Early History of the **Dekkan, 1884, p. 39.**

2. Prof. G. J. Dubreuil's The Pallavas, p. 37. and Dr. V. Smith's The Early History of India, p. 472.

பின்னிடைந்தானென 'ஐகோ'லில் அகப்பட்ட கல்வெட்டானது நுவலாநிற்கின்றது. இந் நரசிம்மவர்மன் அரசாளத் துவங்கிய காலம், இவன்றந்தை 'மகேந்திரவர்ம பல்லவன்' இறைவன்றிருவடி யெய்திய கி. பி. சுஉரு-ஆம் ஆண்டேயாகையாற், புலிகேசன் இவன்மேற் படையெடுத்துவந்து இவனது தலைநகராகிய திருக்கச்சியைச் சூழ்ந்துகொண்டது இவன்றன் ஆட்சி துவங்கி ஐந்தாண்டுகள் சென்றபின் அஃதாவது கி. பி சுகூ0-ஆம் ஆண்டில் நேர்ந்ததாயிருத்தல் வேண்டும்.[1] அற்றன்று, மகேந்திரவர்மனது ஆட்சியின் இறுதிக்காலத்திலேயே புலிகேசன் காஞ்சி நகர்மேற் படையெடுத்து வந்தானெனிற் படும் இழுக்கென்னையெனின்; அக்காலையில் நருமதை யாற்றங்கரைக்கு வடக்கிலும் இமயமலைக்குத் தெற்கிலும் உள்ள வடநாடு முழுமைக்கும் ஒரு தனிவேந்தனுய்க் கன்னோசிநகரில் அரசு செலுத்திய 'ஹர்ஷன்' என்பான், நருமதை யாற்றங்கரைக்குத் தெற்கேயுள்ள சாளுக்கியநாட்டையுங் கைப்பற்றுதற்பொருட்டுக் கி. பி. சுஉ0-ஆம் ஆண்டிற் படைமேற்கொண்டுவரப், புலிகேசன் அவனைத் தடைசெய்து அவன் தனது நாட்டின்மேல் வராதபடி அவனுடைய யானைப்படைகளைக் கொன்று அவனைப் பின்னிடையச் செய்தனன். இவ்வாறு கி. பி. சுஉ0-ஆம் ஆண்டுமுதற் பல ஆண்டுகள்வரையிற் புலிகேசன் தனது நாட்டின்மேல் 'ஹர்ஷன்' வராமல் அவனைத் தடைசெய்து அதனைப் பாதுகாக்கும் முயற்சியில் நின்றமையால், அவன் மகேந்திர வர்மனது ஆட்சியின் இறுதிக்காலமாகிய அப்போது கச்சிநகர்மேற் படைதிரட்டிவருதல் சிறிதும் இயலாது. போராண்மைமிக்க ஹர்ஷவேந்தன் தனது நாட்டினுட் புகாவாறு அதன் வடவெல்லையில் தன் காவற்படைகளை நிறுத்தி அதனைப் பாதுகாக்கும் முயற்சியிற் சிறிதேறக்குறையப் பத்தாண்டுகள்வரையிற் புலிகேசன் உறைத்து நின்றமை ஆராய்ச்சியாற் புலனுகின்றது. ஏனெனில், ஹர்ஷவேந்தன் நருமதை யாற்றங்கரைக்குத் தெற்கே

---

1. Ibid, p. 425.

வரும் முயற்சியைக் கைவிட்டு மேல்கரைக்கண் உள்ள 'வலபை'நாட்டின்மேற் படையெடுத்துச் செல்லும் முயற்சியைக் கி. பி. சுஙo-ஆம் ஆண்டிற்குச் சிறிது முன்னே துவங்கி, அதன்பிற் சிறிது காலத்திலெல்லாம் அந் நாட்டின்மேற் சென்றனன்.[1] அவ்வாறு அவன் வலபை நாட்டின்மேற் செல்லும் முயற்சியிற் றன்கருத்தைச் செலுத்தினமை திண்ணமாய்த் தெரிந்தபிறகுதான், புலிகேசனுந் தமிழ்நாடு நோக்கிப் படைமேற்கொண்டு பெயர்ந் தாளுகல்வேண்டும். இங்ஙனமாகப் புலிகேசன் கி. பி. சுஉகூ-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த்தான் காஞ்சிநகர்மேற் படையெடுத்து வந்தானென்பது உண்மைச் சான்று களால் நாட்டப்படுதலானுங், கி. பி. சுஉரு-ஆம் ஆண் டொடு மகேந்திரவர்ம பல்லவனது ஆட்சி முடிவுபெற்று அவன்மகன் நரசிம்மவர்ம பல்லவனது ஆட்சி துவங்குத லானும், அவன் மகேந்திரவர்மனது ஆட்சியின் இறுதிக் காலத்தே படையெழுந்து வந்தானென்றல் ஒருவாற்றானும் பொருந்தாதென விடுக்க. மற்று, அஃது அவன் மகன் நரசிம்மவர்ம பல்லவனது ஆட்சியின் றுெடக்ககாலத்திலே தான் நிகழலாயிற்றென்பது திண்ணம். பல ஆண்டுக ளாகப் போராண்மையிற் பெரிதும்பழகி, ஹர்ஷவேந்தனை யும் போரிற் பின்னிடையச்செய்து போர்த்தொழிலிற் றேர்ச்சிபெற்ற பெரும்படையோடு சடுதியில் தன்மேற் போர்க்கெழுந்துவந்த புலிகேசனை, அப்போதுதான் அரசியற்பொறை தாங்கிய இளைஞனை நரசிம்மவர்ம பல்லவன் எதிர்ந்து வெல்லமாட்டாது பின்னிடைந்தது வாய்வதேயாம்.

இனி, இவ்வாறு தமிழ்நாட்டின் வடபகுதியிலிருந்த முதலாம் நரசிம்மவர்ம பல்லவனை வென்றடக்கியபின், அதன் நடுப்பகுதியை ஆண்ட சோழமன்னனையும் வென்று, தென்பகுதிக்கண் அரசுவைகிய பாண்டிமன்ன னை நெடுமாறன்மேற் செல்வது புலிகேசனுக்கு எளிதா யிற்று. இங்ஙனமாகப், புலிகேசன் தமிழ்நாட்டின்மேற்

1. Ibid, p. 340.

படையெடுத்துவந்து நின்றசீர் நெடுமாற பாண்டியனை எதிர்த்தது கி. பி. சூஉகூ-ஆம் ஆண்டிற்கு முற்படுதல் இசையாமையானும், இவன் தமிழ்நாட்டின்மேற் சென்ற வரலாறுகளை விரித்துரைக்கும் ஒரு செப்பேடானது கி. பி. சூகூச-ஆம் ஆண்டிற் பொறிக்கப்பட்டதாதலை மேலெடுத்துக் காட்டினமாகலானும் நெடுமாறற்கும் இவற்கும் நெல்வேலிக்கண் நடந்தபோர் கி. பி. சூஉகூ-க்குங் கி. பி. சூகூச-க்கும் இடைப்பட்டதாகிய கி. பி. சூகூ0-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததென்று கோடலே பொருத்தமாம்; வரலாற்று நூலாசிரியரும் சூகூ0-ஆம் ஆண்டிற் புலிகேசன் நருமதையாற்றுக்குத் தெற்கேயுள்ள நாடுமுழுமைக்கும் பேராற்றலில் மிக்க வேந்தனாய் வயங்கினானெனக் கூறுகின்றார்.[1] என்றாலும், புலிகேசன் நெல்வேலிப் போரிற் பாண்டியன் நெடுமாறனை வென்றான் அல்லன்; அதில் வெற்றிபெற்றான் நெடுமாறனேயென்பது, திருஞானசம்பந்தப் பெருமானது காலத்தை யடுத்துவந்த சுந்தரமூர்த்தி நாயனார்,

> "நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
> நின்றசீர் நெடுமாற னடியார்க்கும் அடியேன்."

என்று திருத்தொண்டத் தொகையில் அருளிச்செய்தவாற்றால் நன்கு பெறப்படுதல் காண்க. புலிகேசன் நெல்வேலிப்போரில் நெடுமாறற்குத் தோற்றானாயினும், அதுபற்றி அப் பாண்டிமன்னன்மேற் பகைகொளாது அவனது ஆண்மைத் திறத்தை வியந்து அவன்பால் நட்புரிமை கொண்டு தன் தலைநகர்க்குத் திரும்பினானென்னுங் குறிப்பு ஐகோலிற் கிடைத்த கல்வெட்டால் உய்த்துணரக் கிடக்கின்றது.[2]

இனி, இந் நெல்வேலிப் போர், திருஞானசம்பந்தப் பெருமான் மதுரைக்குச் சென்று சமண்முனிவர்களை வழக்கில் வென்று அம்முகத்தால் நெடுமாறனைச் சைவ சமயந் தழுவுமாறு செய்தபின் நிகழ்ந்ததென்பது ஆசிரியர் சேக்கிழார்,

---

1. Ibid, p. 425.
2. Prof. Dubreuil's 'The Pallavas' p. 37.

"தடுமாறு நெறியதனைத் தவமென்று தம்முடலை
யிடுமாறு செய்தொழுகும் அமண்வலையில் அகப்பட்டு
விடுமாறு தமிழ்விரகர் வினைமாறுங் கழலடைந்த
நெடுமாற னார்பெருமை யுலகேழு நிகழ்ந்ததால்."

"அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் அருளாலே
தென்னாடு சிவம்பெருகச் செங்கோலுய்த் தறமளித்துச்
சொன்னமநெறிபோற்றிச் சுரர்நகர்க்கோன் றனைக்கொண்ட
பொன்னார மணிமார்பிற் புரவலனார் பொலிகின்றார்."

"ஆயவர சளிப்பார்பால் அமர்வேண்டி வந்தேற்ற
சேயபுலத் தெவ்வரெதிர் நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடன்முடுகும் பரிமாவின் பெருவெள்ளங்
காயுமதக் களிற்றினிரை பரப்பியமர் கடக்கின்றார்."

எனக் கூறிய செய்யுட்களால் இனிது விளங்காநிற்கின்றது. இந்நெல்வேலிப் போர் கி. பி. சுஙு0-ஆம் ஆண்டில் நடைபெற்றமை மேலே நன்குவிரித்து விளக்கப்பட்டமையின், திருஞானசம்பந்தப் பெருமான் மதுரை மாநகர் சென்று இந்நெடுமாற பாண்டியனைக் கண்டதூஉம், அவர்தந் திருவருளால் அவன் சமண்மதந் துறந்து சைவசமயந் தழுவியதூஉஞ், சமணர்கள் சம்பந்தப் பெருமானொடு வழக்கிட்டுத் தோற்றதூஉமாய நிகழ்ச்சிகளெல்லாம் அப் பாண்டிவேந்தன்றன் ஆட்சி துவங்கி இரண்டு மூன்று ஆண்டுகள் சென்றபின அஃதாவது கி. பி. சுஉங-ஆம் ஆண்டில் நிகழ்ந்தனவாதல் வேண்டுமென்பது வெள்ளிடைமலைபோல் விளங்கற்பாலதாமென்க.

இனி, இவ்வாராய்ச்சியின் முடிபாகப் பெறப்பட்ட உறுதிப் பொருள்களொடு, 'தமிழ்வரலாறுடையார்' கூறும் வேறு சில கூற்றுக்களும் முரணி யுண்மை யல்லாதன வாய்ப் பாழ்படுதலும் ஈண்டுக் காட்டற்பாலன. திருஞான சம்பந்தப் பெருமான் மதுரைக்குச் செல்லுமுன்னரே, அவரைக் கி. பி. சுஉஉ-ஆம் ஆண்டில் திருநாவுக்கரசு நாயனார் சீர்காழியில் வந்து கண்டமையும், அப்போது நாயனார் எழுபதாண்டுக்கு மேற்பட்ட முதுமைமிக் கிருந்தமை

யும் மேலே உண்மைச் சான்றுகளால் நிலைபெறுத்தப் பட்டமையின், திருஞானசம்பந்தப் பெருமான் தமது திருமணத்திற் றோன்றிய சிவவொளியிற் கலந்தது கி. பி. சுருகூ அல்லது சுருஅ-ஆம் ஆண்டிலும், திருநாவுக்கரசு நாயனார் சிவபிரான் திருவடிப் பேற்றினை யெய்தியது கி. பி. சுருஉ அல்லது சுருச-ஆம் ஆண்டிலுமே நிகழ்ந்தனவாதல் வேண்டும். சம்பந்தப் பெருமான் தமது பதினெட்டு அல்லது இருபதாமாண்டில் திருமணங்கூடினாராதல் வேண்டுமென்பது சேக்கிழாரடிகள் கூறுமாற்றால் தெளியக் கிடத்தலின், கி. பி. சுஉஉ-இல் நாலாண்டுடையராயிருந்த பெருமான் கி. பி. சுருகூ அல்லது சுருஅ-இற் சிவவொளி யிற் கலந்தமையே தேற்றமாம். இன்னும் அக் கி பி. சுஉஉ-இல் திருநாவுக்கரசு நாயனார் எழுபத்தைந் தாண்டு சென்ற முதியராயிருந்தனரென்பதூஉம் மேலே காட்டப் பட்டமையால், அவர் அதிலிருந்து பத்தாண்டுகள் கழிந்த பின் அஃதாவது கி. பி. சுரு உ-இல் இறைவன் றிருவருட் பேரொளியிற் கலந்தாரெனக் கோடலே எவ்வாற்றானும் பொருந்துவதாகும். திருஞானசம்பந்தப் பிள்ளையார் தாமிருந்த பதினாறு பதினேழாண்டுகளிற் பதினாறாயிரந் திருப்பதிகங்கள் அருளிச்செய் திருத்தலால், நாலாயிரத் துத் தொளாயிரம் பதிகங்களை அருளிச்செய்த திருநாவுக் கரசுகள் தாம் அருள்பெற்ற கி. பி. சுஉ0-ஆம் ஆண்டி லிருந்து பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகட்குமேல் இந் நிலவுலகின்மே லிருந்தாரெனக் கோடல் ஒருசிறிதும் இசையாது; அதனால் அவர் கி. பி. சுரு0 அல்லது சுருஉ- இல் இறைவன் றிருவடி நீழலெய்தினமை ஐயுறவின்றித் தெளியற்பாற்று. இவ்வாற்றால், திருநாவுக்கரசுகளே முதலில் இறைவன் றிருவருட் பேரொளியிற் கலந்தாராத லும், அதற்கு நான்கு அல்லது ஆறாண்டுகள் கழித்தே திருஞானசம்பந்தர் சிவவொளியிற் கலந்தாராதலும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் விளங்கா நிற்கும். இவ்வுண்மை நிகழ்ச்சிகளை நன்காராய்ந்து அளந்து பார்க்கும் அறிவுமதுகை வாயாத 'தமிழ் வரலாறுடையார்,' திருஞானசம்பந்தரே முதலிற் சிவவொளியிற்

கலந்தார், அதன்பிற் பல ஆண்டுகள் கழித்தே திருநாவுக் கரசுகள் அவ்வொளியிற் கலந்தாரென மாறுபாட்டுரை நிகழ்த்தினர்; அதுவேயுமன்றி, இம் மாறுபாட் டுரையினையே ஒரு கருவியாய்க் கொண்டு, திருஞானசம்பந்தர் நால்வரில் முன்வைக்கப்பட்டது அவர் முதலிற் றிருவடிப் பேறெய்தினமை பற்றியும், திருநாவுக்கரசர் அவர்க் குப் பின்வைக்கப்பட்டது இவர் அவர்க்கும் பின்னர்த் திருவடிப் பேறெய்தினமை பற்றியுமே யெனவும் ஒரு பொருந்தாவுரை நிகழ்த்தினர்; இவர் காட்டிய ஏதுவும், அதுகொண்டு இவர்முடித்த முடிபுமெல்லாம் வெட்டவெளி யில் எழுதிய வட்டெழுத்துப்போல் மாய்ந்தொழிந்தமை இதுகாறும் யாம் விரித்து விளக்கினவாற்றாற் கண்டு கொள்க.

மேலுந், திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்குப் பூணூற் சடங்கு நிகழ்ந்தஞான்று, அவர்க்கு ஏழாண்டாயிற்று என்றுந் 'தமிழ வரலாறுடையார்' ஒரு பொருந்தாவுரை வரைந்தார். பிள்ளையார் பாண்டிநாட்டுக்குச் சென்று மங்கையர்க்கரசியாரைக் கண்டஞான்றே அவர் பால்பருகுஞ் சிறுபிள்ளையா யிருந்தனரென்பது, அவர் அரசியாரை நோக்கி யருளிச்செய்த "மானினேர்விழி மாதராய்" என்னுந் திருப்பாட்டினால் இனிது விளங்கிக் கிடத்தலானும், பிள்ளையார் அத்துணைச் சிறு மதலையா யிருந்தமையினாலேயே அவரை முதன்முதற் கண்டபோது மங்கையர்க் கரசியார் அன்பினால் நெஞ்சங் குழைந்துருக அவர்தந் திருக்கொங்கைகளிற் பால்சுரந்து ஒழுகியதென்று பிற் காலத்துச் சான்றோரான சிவப்பிரகாச அடிகளும்,

"இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்னின்—நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தஅருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தார் யார்சொல் எமக்கு."

என்று நால்வர் நான்மணிமாலையிற் கூறுதலானும் நன்கு பெறப்படும். பாண்டிநாட்டுக்குச் சென்றஞான்றே பிள்ளை

யார் ஐந்தாட்டைச் சிறுமதலையா யிருந்தனராயின், அதற்குமுன் திருச்செங்காட்டங்குடிக்குச் சென்று சிறுத்தொண்டரையும் அவர் புதல்வர் சீராளரையுங் கண்டு அளவளாவிய போழ்து பிள்ளையார் "௧௧ அல்லது ௧௨" ஆண்டினராயிருத்தலும், அதற்குமுன் பூணூற்சடங்கு நடைபெற்ற போழ்து அவர் ஏழாண்டினரா யிருத்தலும் எவ்வாறு பொருந்தும்? 'தமிழ் வரலாறுடையார்' கூறும் இப் பொருந்தாவுரை, 'என் தந்தையுந் தாயும் மணஞ் செய்துகொண்ட ஞான்று யான் அவர் மணப்பந்தற் காலைப் பிடித்துநின்றேன்' எனக் கூறும் ஒருவன் வெற்றுரையோடு ஒப்பவைத்து நகையாடி விடுக்கற்பாலதாமென்க. அற்றேற், பூணூற்சடங்கு ஏழாண்டுக்குமேல் நடத்தும் உலகியன் முறைப்படி யன்றே பிள்ளையார்க்கும் அது நடத்தப்பட்டிருத்தல் வேண்டுமாலெனின்; திருஞானசம்பந்தப் பிள்ளையார் உலகியலில் எங்குங்காண இயலாத ஓரருட்பெரும் புதுமையால் மூன்றும் ஆண்டிலேயே எல்லாம் ஓதாதுணர்ந்த பேரறிவாளராய்த் திகழ்ந்தமை கண்டு, அஞ்ஞான்றிருந்த சான்றோர் உடனே அவர்க்குப் பூணூற்சடங்கு செய்வித்தனராதல் வேண்டுமேயல்லாமல், அவரை ஏனைச் சிறுபிள்ளைகளோடொப்பக் கருதி அவர்க்கு ஏழாம் ஆண்டு வருமளவுங் காத்திருந்து பின்னர் அது செய்தாரல்லர்.

இன்னும், மதுரைமாநகர்க்குச் செல்லுமுன்னரே திருஞானசம்பந்தர் சிறுத்தொண்டரையும் அவர்தம் புதல்வர் சீராளரையுந் திருச்செங்காட்டங்குடியிற் கண்டு அளவளாவினமை மேலே காட்டப்பட்டமையால், அப்போது பிள்ளையார்க்கு நாலரையாண்டே யாதலும், அது கி. பி. ௬௨௨-க்கும் ௬௨௩-க்கும் இடையில் நிகழ்ந்ததேயாதலுந் துணியப்படும். ஈதிங்ஙனமாகவுந், 'தமிழ் வரலாறுடையார்,' திருச்செங்காட்டங்குடிக்குச் சம்பந்தப்பெருமான் எழுந்தருளியது கி. பி. ௬௪௬-ஆம் ஆண்டிலோ அதற்கு இரண்டோராண்டு பிற்பட்டோ நிகழ்ந்ததாகல் வேண்டும்

(தமிழ்வரலாறு, பிற்பாகம், ருரு-ஆம் பக்கம்) எனக் கூறினர். திருஞானசம்பந்தப் பெருமான் திருவருளொளி யிற் கலந்தது கி. பி. சுருஅ-ஆம் ஆண்டுக்குப்பின் நிகழ்ந் ததாதல் எவ்வாற்றானும் இசையாமை மேலே ஆராய்ந்து நிறுவப்பட்டமையால், அதற்குப் பின்னும் எட்டாண்டு கழித்து அவர் திருச்செங்காட்டங்குடிக்கு வந்து சிறுத் தொண்டரைக் கண்டாரெனத் 'தமிழ் வரலாறுடையார்' கூறியது இல்பொருளுரையேயாம். அற்றாயினும், 'பெரிய புராணத்'தில் ஆசிரியர் சேக்கிழார் சிறுத்தொண்ட நாயனார் வரலாறு உரைக்கின்றுழி, வாதாவிப்போரில் வெற்றிபெற்றுத் திரும்பிய பின்னர்த்தான், சிறுத் தொண்டரின் பெருமையுணர்ந்து அவர்தம் வேந்தன் அவரைத் தங்கீழ் ஏவலில் அமர்த்தற்கு அஞ்சி அவர்க்கு வேண்டும்பொருளெல்லாம் நிரம்பநல்கி அவர்தம் விருப்பப் படியே தம் மனையகத்திருக்க விடைகொடுத்தானென்றும், அதற்குப் பின்னாதாகவே சிறுத்தொண்டர் ஓரரும்பெறல் மாதரை மணஞ்செய்து கொண்டு சீராளரை ஈன்றனரென் றும், சீராளர்க்கு மூன்றாமாண்டு நிரம்பிய பின்னரேதான் சம்பந்தப் பிள்ளையார் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந் தருளினரென்றும் மொழிதலால், வாதாவிப்போர் நடை பெற்ற கி. பி. சுசஉ-ஆம் ஆண்டுக்கு நாலாண்டுகள் பிற் பட்டே பிள்ளையார் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளி னமை பெறப்படுதலின், 'தமிழ் வரலாறுடையார்' கூற்றுப் பொருத்தமே யாமாலெனின்; அற்றன்று; திருநாவுக்கரசு நாயனார் புராணத்துந் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தும் ஆசிரியர் சேக்கிழார் கூறிச் செல்லும் நிகழ்ச்சிக்குறிப்புகள் அத்தனையும் வரலாற்றுநெறி வழாது அவ்விருவர்தந் தேவாரச் செய்யுட்களிற் காணப்படும் அகச்சான்றுரைகளோடு முழுதொத்து நிற்கச், சிறுத் தொண்ட நாயனார் புராணத்துப் போந்த நிகழ்ச்சிக் குறிப்புகளோ அம் முன்னையவற்றொடு மாறுகொண்டு பொருத்தமில்லனவாய் நிற்கின்றன. வாதாவிப்போர் நிகழ்ந்த கி. பி. சுசஉ-ஆம் ஆண்டுக்குப் பத்தொன்ப தாண்டுகள் முன்னரே அஃதாவது சுஉஉ-இலேதான்

சம்பந்தப்பெருமான் சிறுத்தொண்டரையுஞ் சீராளரையுங் கண்டு அளவளாவினராதல் வேண்டும். வைரவர் கோலத் திற் புகுந்த சிவபிரானுக்குச் சிறுத்தொண்டர் தம்புதல்வர் சீராளரை அறுத்துக் கறிசமைத்து வைத்தது, சம்பந்தப் பெருமான் திருச்செங்காட்டங்குடியை விட்டுச் சென்ற இரண்டாண்டுகட்குப் பின்னராதல்வேண்டும்; ஏனென் றால், அங்ஙனம் அவர் தம் அருமைப் புதல்வரைச் சிவனடி யார் ஒருவர்பொருட்டு அறுத்துக் கறிசமைத்து வைத் தது அவர் அங்கு வருவதற்கு முன்னரே நிகழ்ந்த துண்டாயின், அத்துணைச் சிறந்த அவரது அத் திருத் தொண்டின் உறைப்பைச் சம்பந்தப்பிள்ளையார் தாம் அருளிச் செய்த திருப்பதிகத்தில் எடுத்துரையாது விடா ராகலினென்பது. மற்றுச், சிறுத்தொண்டரையுஞ் சீரா ளரையுந் தமது திருச்செங்காட்டங்குடித் திருப்பதிகத்திற் சிறந்தெடுத்துப் பாராட்டிய பிள்ளையார், அவரது இவ் வரும்பெருந் தொண்டை அதிற் சிறிதுங் குறியாதது கொண்டே அஃது அவர் அங்கு வருதற்கு முன்னே நிகழ்ந் தது அன்றென்பது தெற்றெனப் பெறப்படும் பிள்ளையார் அங்குவந்து சென்றபின், இறைவனே சிறுத்தொண்டரின் பெருமையை எல்லார்க்கும் புலப்படுத்தற்பொருட்டு அவர் தம் பிள்ளையை அறுத்துக் கறிசமைக்குமாறு செய்து, அதன்பின் அப் பிள்ளையையும் உயிர்பெற்றெழச் செய்து மறைந்தனன். அதுமுதற்றான் அவரது பெருமையை ஊரவரெல்லாரும் உணர்ந்தாராகல் வேண்டும். இவ் வுண்மை சேக்கிழாருரைக்கும் உரையினாலேயே புலப்படா நிற்கின்றது; யாங்ஙனமெனின்; வடக்கே பேரரசர்களா லும வெல்லப்படாத பேராண்மையிற் சிறந்த புலிகேச வேந்தன்மேற் சிறுத்தொண்டர் தனக்காகப் படையெடுத் துச் சென்று, அவனது வாதாவிநகரைத் துகளாக்கி மீண்ட அரும்பேராண்மையினைக் கண்டு பெரிதுவியந்து, நரசிம்மவர்ம பல்லவவேந்தன் தன் அமைச்சரை நோக்கிக் கேட்டதூஉம், அதற்கவர் விடையிறுத்ததூஉங் குறிப்பிடு வதாகிய,

"கதிர்முடிமன் னனும்இவர்தங்
களிற்றுரிமை யாண்மையினை
அதிசயித்துப் புகழ்ந்துரைப்ப
அறிந்தஅமைச் சர்கள்உரைப்பார்
மதியணிந்தார் திருத்தொண்டு
வாய்த்தவலி யுடைமையினால்
எதிரிவருக் கிவ்வுலகில்
இல்லையென எடுத்துரைத்தார்."

என்னுஞ் செய்யுளால், வாதாவிப்போர் நிகழ்தற்கு முற்றொட்டே சிறுத்தொண்டர் தம் புதல்வரை யறுத்துச் சமைத்துச் சிவனடியாரொருவர்க்குக் கறியாகப் படைத்த திருத்தொண்டின் பெருமை ஊரவர்க்கெல்லாந் தெரிந்திருந்தமை புலனும். அத்துணை யரிய திருத்தொண்டு நிகழ்ந்திலதாயின், அப்போது சிறுத்தொண்டர் தம் பேரன்பின் உறைப்பினை அமைச்சரும் பிறரும் உணர்தற்குச் சிறிதும் வாயில் இல்லையாம்; இல்லையாகவே, "மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்தவலியுடைமையினால், எதிர் இவருக்கு இவ்வுலகில் இல்லை"யென அவ்வமைச்சர் அத்திருத்தொண்டினை அத்துணை வலியுறுத்தி யுயர்த்துப் பேசுதலும் இயலாதாம். ஆகவே, வாதாவிப்போர் நிகழ்தற்கு முற்றொட்டே சிறுத்தொண்டர் மனையறவாழ்க்கையில் நின்று, சிவனடியார்க்கு ஆற்றுந் திருத்தொண்டில் மிக்க உறைப்புடையராய்த், தம் புதல்வரையும் ஓரடியவர் பொருட்டு அறுத்துக் கறியாக்கிப் படைத்துப், பின்னரவ்வடியவர் அருளால் தம் புதல்வன் உயிர்பெற்றெழ அப்புதுமையால் தமது புகழ் எங்கும் பரவப்பெற்றாரென்பதே உண்மை நிகழ்ச்சியாம். இத்துணை மனஉறுதிப்பாடுடைமையே அவர் வாதாவிப்போரில் வெற்றிபெறுதற்கு ஏதுவாயிற்றென்றறிதல் வேண்டும். அற்றேல், ஆசிரியர் சேக்கிழார் இந் நிகழ்ச்சிகளைச் சிறுத்தொண்டர் புராணத்தில் முன்பின்னாக மாற்றிக் கூறுதலென்னையெனின்; இம்மாற்றுச் சேக்கிழாரால் நேர்ந்ததோ அன்றிப் பிற்காலத்தவரால் நேர்ந்ததோ இன்னதுதானென உறுதிப்படுத்தல்

இஞ்ஞான்றுள்ள எம்மனோர்க்கு இயலாதென விடுக்க. மேலும், வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளவாறுணர்ந்தெழுது தற்கு ஏற்ற கருவிகளும் முறையும் இஞ்ஞான்று உள வாயினாற்போல், அஞ்ஞான்று உளவாயின அல்ல. அதனா லுஞ், சிறுத்தொண்ட நாயனார்க்குச் சிறிதேறக்குறைய நானூற்றைம்பதாண்டு பின்னிருந்த ஆசிரியர் சேக்கிழார், இடைக்காலத்திருந்தார் பிறழ்த்தி வழங்கிய சிறுத் தொண்டர் வரலாற்றினைத் தாங் கேட்டறிந்தவாறே எழுதினாராதலுங் கூடுமதனாலும் அப் பிறழ்ச்சி சேக்கிழா ராலேயே நிகழ்ந்ததெனக் கட்டுரைத்தல் ஏலாதென வுணர்ந்துகொள்க. எனவே, திருஞானசம்பந்தப் பெருமான் சிறுத்தொண்டரையுஞ் சீராளரையுந் திருச்செங்காட்டங் குடியிற் கண்டது கி. பி. ௬௨௨-ஆம் ஆண்டையடுத்தும் அவர் தமது திருமணத்திற் சிவவொளியிற் கலந்தது கி.பி. ௬௩௮-ஆம் ஆண்டுக்கு முன்னும் நிகழ்ந்தனவாதல் நன்கு பெறப்பட்டமையால், இவையெல்லாம் வாதாவிப்போர் நடந்த கி. பி. ௬௪௨-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட நிகழ்ச்சி களேயாதல் சொல்லாமே விளங்கும். இவற்றோடொப்பவே, திருநாவுக்கரசு நாயனார் இறைவன் திருவடிநீழல் எய்தி யதும் கி. பி. ௬௩௨-ஆம் ஆண்டை யடுத்து நிகழ்ந்த தொன்றாகையால், அதுவும் வாதாவிப்போர்க்கு முற்பட்ட நிகழ்ச்சியேயாதலுந் தெளியப்படும். இவ்வாற்றால், திரு நாவுக்கரசு நாயனாரே திருஞானசம்பந்தப் பெருமானுக்கு முன் சிவபிரான் திருவடிப்பேற்றை யெய்தினமையுந் தானே போதரும். இவ்வாறன்றித், 'தமிழ் வரலாறுடை யார்' கூறுமாறு திருஞானசம்பந்தரே திருநாவுக்கரசு களுக்குமுன் சிவபிரான் றிருவடிசேர்ந்த துண்மையாயின், சம்பந்தப் பிள்ளையார்தந் திருமணத்தில் அவர்காலத் திருந்த அடியார்களெல்லாரும் ஒருங்குவந்து குழுமி யிருக்கத், திருநாவுக்கரசுகள் மட்டும் அப்போதங்கு வந்திராமை என்னை? அப்பர் அப்போது இந் நிலவுலகின் மிசை இருந்தனராயின் அவர் பிள்ளையார்தந் திருமணத் திற்குச் செல்லாதிரார் என்பது அவர்தம் நட்பின் கெழு தகைமையினை யுணர்ந்தார் எவரும் நன்கறிவரன்றே?

பிள்ளையார் தந் திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் இன்னு ரென்பது புலப்பட ஆசிரியர் சேக்கிழார்,

" சீர்பெருகு நீலநக்கர் திருமுருகர் முதற்றொண்டர்
ஏர்கெழுவு சிவபாத இருதயர்நம் பாண்டார்சீர்
ஆர்திருமெய்ப் பெரும்பாணர் மற்றெனையோ ரணைந்துள்ளோர்
பார்நிலவு கிளைசூழப் பன்னிகளோ டுடன்புக்கார்."

என்றோதுஞ் செய்யுளில் திருநாவுக்கரசுகள் குறிக்கப் படாமையை உற்றுநோக்கும்வழி, அவர் அத் திருமண நிகழ்ச்சிக்கு முன்னரே இறைவன் றிருவடியைத் தலைக் கூடினராகல் வேண்டுமென்பது விளங்காநிற்கும். எனவே, திருஞானசம்பந்தர் முன்னுந் திருநாவுக்கரசர் பின்னுமாக இறைவன் றிருவடி நீழலெய்தினரென்றும், அம் முறைபற் றியே நால்வரிற் சம்பந்தர் முன்னும் அப்பர் அவருக்குப் பின்னுமாக வைக்கப்பட்டனரென்றுந் 'தமிழ் வரலாறுடை யார்' கூறிய கூற்று உண்மைக்கு முற்றும் மாறுன பிழைபடுகூற்றாதல் தெளியப்பட்டமையின், அப்பிழைபடு கூற்றையே ஒரு நிலைக்களனய்க்கொண்டு சமயாசிரியர் நால்வரில் மாணிக்கவாசகர் இறுதிக்கண் வைக்கப்பட்டது, அவர் காலத்தால் ஏனை மூவர்க்கும் பிற்பட்டவராதல் பற்றியே யாமென்று அவர் கரைந்ததூஉம் பிழைபடு கூற்றாய் ஒழிந்தமை காண்க.

மாணிக்கவாசகப்பெருமான் வடக்கிருந்து வந்த வீர சைவக் குடியிற் றேன்றினமையானும், அதுபற்றியே இத் தமிழ்நாட்டின்கட் குடிபுகுந்து வைகிய வீரசைவச் சான் றோர்க ளனைவருந் தொன்றுதொட்டு அவரையும் அவர் அருளிச்செய்த 'திருவாசகந்' 'திருக்கோவையாரை'யும் முதற்படிக்கண்வைத்து வழிபட்டுவரலானும் இங்கிருந்த சைவர்கள் அவரைத் தம் சமயாசிரியருள் ஒருவராக வைத்து வழிபடுதற்கு நெடுங்காலம்வரையில் ஒருப்படா திருந்து, பின்னர்க் காலஞ் செல்லச்செல்ல வீரசைவம் சைவசமயத்தின் வேறல்லாமை கண்டு அச்சமயத்தவ ரோடு தாம் அளவளாவத் துவங்கிய கி. பி. பத்தாம் நூற்

றாண்டிலிருந்தே ஏனை மூவரொடு சேர்த்து அவரையும் நாலாம் ஆசிரியராக வைத்து வழிபட்டுவரலாயினரென்க. இந்த ஏதுவினாலேயே மாணிக்கவாசகர் ஏனைமூவர்க்குப் பின் நாலாமவராக வைக்கப்பட்டதல்லது, அவர் அம் மூவர்க்குங் காலத்தாற் பிற்பட்டவராதல்பற்றி யன்றென் றுணர்ந்துகொள்க.

அல்லதூஉம், ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலிய ஆசிரியர் மூவரும் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் அத்தனையும், இருக்கு எசுர் சாமம் என்னும் ஆரிய வேதங்கள்போல், இறைவனைப் பாடிய வழுத்துரைகளாகவே இருத்தலானும், 'திருவாசகம்' வழுத்துரையாதலோடு, ஆரியவேதங்களின் அந்தமாக (முடிவாக)க் கருதப்படுதலின் 'வேதாந்தம்' எனப்படும் பழைய உபநிடதங்களைப்போல், இறைவன் உயிர் மலம் மாயை வினை என்னும் ஐம்பொருளிலக்கணங்களும், உயிர் மலப்பிணிப்பு நீங்கி இறைவனைத் தலைக்கூடுமாறும் ஆங் காங்குத் தெற்றென எடுத்து ஓதுதலானும், 'திருக்கோவை யார்' காதலின்பத்தின்வைத்து வீட்டின்ப இலக்கணமும் நுகர்ச்சியும் விளங்க விரித்துக் கூறுதலானும், தேவாரங் களை ஆரிய மும்முறைகளோடொப்ப முதற்கண்வைத்தும், திருவாசகந் திருக்கோவையார் இரண்டனையும் அவ்வாரிய மறைகளின் முடிவான உபநிடதங்களோடொப்ப அத் தேவாரங்களின் பின்வைத்தும், இவ் வைப்பு முறைக் கேற்பவே தேவாரம் அருளிச்செய்த மூவரை முன்னும், திருவாசகந் திருக்கோவையார் அருளிச்செய்த மாணிக்க வாசகரை அம் மூவர்க்குப் பின்னுமாக வைத்துங் கி. பி. பத்தாம் நூற்றாண்டுமுத லிருந்த சைவசமயச் சான்றோர் கள் அவைதம்மை வழங்கிவரலாயினரென்பதூஉம் புல னாகா நிற்கின்றது. தேவார திருவாசகங்களும் அவற்றின் ஆசிரியர்களும் வைக்கப்பட்ட வைப்புமுறை இதுவேயா மென்பதற்குப் பின்னும் ஒருசான்று உளது. மாணிக்க வாசகர்க்குப் பின்னும், ஏனை மூவர்க்கு முன்னுமாகக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்த திருமூலநாயனாரருளிச்

செய்த 'திருமந்திர நூல்' கி. பி. எட்டாம் நூற்றுண்டி லிருந்த சுந்தரர் தேவாரத்திற்கும், ஒன்பதாம் நூற்றுண்டி லிருந்த அடியார்கள் அருளிச்செய்த 'திருவிசைப்பா,' 'திருப்பல்லாண்டு' என்பவைகட்கும் பின்னர்ப் பத்தாந் திருமுறையாக வைக்கப்பட்டிருத்தலை உற்றுக்காண வல் லார்க்கு, இவ்வைப்புமுறை ஆரியநூல் வைப்புமுறையை ஒட்டி வைக்கப்பட்டதொன்றுதல் பொள்ளெனப் புலனும். என்னை? ஆரியநூல் வைப்புமுறை வேதம், உபநிடதம், ஆகமம் என நின்றுற்போலவே, தேவாரத்திருப்பதிகங்கள் தமிழ் வேதங்களாகவும், திருவாசகந்திருக்கோவையார் என்பன தமிழ் உபநிடதங்களாகவும், திருமந்திரம் தமிழ் ஆகமமாகவும் ஒன்றற்குப்பின் ஒன்ருகவைத்து முறைப் படுத்தப்பட்டு நிற்கலாயினவாகலினென்க.

அற்றேல், வீரசைவமுஞ் சைவமும் ஒன்றுதல் கண்ட பின்னரேதான் மாணிக்கவாசகப்பெருமானுஞ் சைவசமயா சிரியராக ஏனை மூவர்க்குப்பின் சேர்க்கப்பட்டனரென முன்னேகூறிய துண்மையோ, ஆரியநூல் வைப்புமுறை யோடொட்டி நால்வரும் பிறரும் அருளிய அருளுரைகளை முறைப்படுத்துகின்றுழி அவ்வருளுரைகளை வழங்கிய ஆசிரியரும் அம்முறைக்கு இணங்கவே முன்னும் பின்னு மாக வைக்கப்பட்டனரென அதன்பிற் கூறிய துண்மையோ வெனின்; இரண்டும் உண்மையேயாம்; யாங்ஙனமெனின், இத் திருமுறைகள் தொகுத்து வகுக்கப்படாநின்ற காலத்தேதான் மாணிக்கவாசகப்பெருமானுஞ் சைவ சமயாசிரியருள் ஒருவராக இங்குள்ள சைவ நன்மக்களால் வழுத்தப்படுவாராயினர்; அக் காலத்திலேயே திருமுறை வகுப்பும் நிகழ்வதாயிற்று; அதற்கு முன்னெல்லாஞ் சைவசமய ஆசிரியராக வழுத்தப்பட்டு வந்த ஏனைமூவ ரொடு மாணிக்கவாசகரையுஞ்சேர்த்து நாலாமவராக வைத்தற்குப் பின்னும் ஓர் ஏதுவுந் தோன்றுவதாயிற்று. அதுதான்: மூவர் அருளிய தேவாரமுந் தமிழ் வேதங்க ளாக நிறுத்தப்படவே, மாணிக்கவாசகர் அருளிய திரு வாசகந் திருக்கோவையாரென்பன அவ் வேதங்களின்

முடிபான உபநிடதங்களாக நிறுத்தப்பட்டன; அந் நூல்கள் நிறுத்தப்பட்ட முறை அவ்வாறுனபின், அந் நூல்களை அருளிச்செய்த ஆசிரியரும் அம்முறையே வைக்கப்படலானதற்குப் பின்னும் ஓர் ஏதுவுந் தானே போதரலாயிற்று. ஆகலான், முற்கிளந்த இருவகை ஏதுவும் மாணிக்கவாசகர் சைவசமயாசிரியரில் நாலாமவராக வைக்கப்படுதற்குக் கருவியானவாறு கடைப்பிடித் துணர்ந்துகொள்க. இவ்வாற்றால், மாணிக்கவாசகர் சைவசமயாசிரியர் வரிசையில் நாலாமவராக வைக்கப் பட்டது அவர் ஏனைமூவர்க்குங் காலத்தாற் பிற்பட்டவராதல்பற்றியன்றென்பதூஉம், அன்றகவே அங்ஙன முரைத்த 'தமிழ்வரலாறுடையார்' உரை உண்மை யாராய்ச்சியின்மையாற் பிறந்த மாறுகோளுரையேயா மென்பதூஉம் வைரத்தூண்போல் நாட்டப்பட்டமை காண்க.

அற்றேலஃதாக; மாணிக்கவாசகர் வடநாட்டின்க ணிருந்துவந்து குடிபுகுந்த மரபிற்றோன்றிய துண்மையா யின், அவர்தம் முன்னோரிருந்த அவ் வடபகுதிக்கண் உள்ள குறிகளுள் ஒன்றுயினுந் தம்நூலுட் கூறுது விடார்; அதுவேயுமன்றி, அவர்தம் முன்னோர் வழங்கிய வடநாட்டுமொழிச் சொற்களுள் ஒன்றிரண்டாயினுந் தம் முடைய பாட்டுகளிற் புகுத்தாதிரார்; தம் மரபினர் கைக்கொண்ட வீர சைவமுறைகளிற் சிலவற்றையாயினும் எடுத்துரையாதிரார்; ஆகவே, அவரை வீரசைவமரபிற் குரியராகச் சொல்லுமவர், அவர் அவ்வாறுதற்குரிய அடையாளங்கள் சிலவேனுங் காட்டற்பாலரெனின்; அவ்வாறே காட்டுதும்: மாணிக்கவாசகப் பெருமான் தாம் அருளிச் செய்த 'திருவாசகச்' செந்தமிழ்மறையிற் பலவிடங் களிலும் 'மகேந்திரமலை' என்பதொன்றைப் பலகாலுஞ் சுட்டுகின்றுர்.

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்"

என்றுஞ்,

"மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்"

என்றும்,

"மந்திர மாமலை மகேந்திர வெற்பன்"

என்றுங் கீர்த்தித்திருவகவலிலும் (க, கக, க00),

"மந்திர மாமலை மேயாய் போற்றி"

என்று போற்றித் திருவகவலிலும் (உ0ரு),

"வேடுரு வாகி மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட விருந்த சிவபெருமான்"

என்றுந்,

"தூவெள்ளை நீறணி யெம்பெருமான்
சோதிமகேந்திரநாதன்"

என்றுந் திருவார்த்தையிலும் (ச, கூ) அவர் அதனைக் குறித்துச் சொல்லுதல் காண்க. 'மகேந்திரம்' எனப் பெயரிய இம் மலை வடக்கே கஞ்சம் மாகாணத்திற் 'பெர்ஹாம்பூ'ருக்குத் தென்மேற்கே முப்பத்திரண்டுகல் இடைவழி கழிந்த ஓரிடத்தில் இருக்கின்றது; இம் மலையிற் சிவபிரான்றிருக்கோயில்கள் பல இப்போதிடிந்து பாழாய்க்கிடக்கின்றன. இம் மலைக்கண் இத்தனைப் பல திருக்கோயில்கள் அக்காலத்தில் அமைக்கப்பட்டமையினை நினைந்துபார்க்குங்கால், அம் மலையடுத்த ஊர்களிற் சைவசமயந் தழுவின மக்கள் பல்லாயிரக்கணக்காய் அஞ்ஞான்று குடியிருந்து வாழ்ந்தமை நன்கு விளங்காநிற்கும். இம் மகேந்திர வெற்பினை அடிகள் பலகாலுங் குறிப்பிடுதலை உற்று நோக்குங்கால், அவர் தமது இளமைக் காலத்தில் அம் மலையடிவாரத்திருந்த ஓர் ஊரில் இருந்தமையும், அதனால் அம் மலையின் தோற்றமும் அதன்கட் சிவபெருமான் திருக்கோயில்கொண் டெழுந்தருளிய சிறப்பும் அவருள்ளத்திற் பதிந்து நின்று, அவர்தம் இனத்தவருடன் பாண்டி

நாட்டிற் குடிபுகுந்து வைகியபின்னும் அவை அவரது நினைவைவிட்டு மாறுவாய் அவர் அருளிச்செய்த திருப் பாட்டுக்களிற் குறிக்கப்படலானமையும் புலனாகா நிற்கின் றன. நல்லிசைப்புலவர் தமது பிள்ளைமைப்பருவத்தில் எவ்வெவ்விடங்களில் இருந்தனரோ, அவ்வவ்விடங்களின் அழகிய தோற்றங்களிலும் அவ்வழகிய தோற்றங்களை யுடைய பொருள்களிலும் மனம் அழுந்தப் பெற்றுப், பின்னர்த் தாம் பாடிய பாட்டுக்களில் அவைதம்மைச் சிறந்தெடுத்துக் கூறுவதில் வேட்கையுடையராகவே வந்திருக்கின்றனர். ஆகவே, மாணிக்கவாசகப் பெருமான் தமது பிள்ளைமைப்பருவத்தில் வடக்கே கஞ்சம் மாகாணத் தின்கண்ணதான மகேந்திரமலைப் பக்கத்துள்ள ஓர் ஊரி லிருந்து, பின்னர்த் தம் பெற்றார் உறவினருடன் பாண்டி நாடு புகுந்து திருவாதவூரில் வைகினாரெனக்கோடல் இழுக்காதென்க!

இனி, இம் மகேந்திரமலையென்பது இமயமலைக் கண்ண தான கைலாயமலையே யல்லாமற் பிறிது அன்றெனக் கரைந்தாரும் உளர். அடிகள், 'நீத்தல் விண்ணப்பம்' ௩௪-ஆஞ் செய்யுளில் "எதிர்வதெப்போது பயில்விக் கயிலைப்பரம்பரனே" எனவும், ௪௦-ஆஞ் செய்யுளிற் "கயிலாயமென்னும் மலைத்தலைவா" எனவும், 'செத்திலாப் பத்து', ௧௦-ஆஞ் செய்யுளிற் "கயிலைமாமலை மேவியகடலே" எனவுங், 'கீர்த்தித்திருவகவற்' கடையில் "ஒலிதருகைலை யுயர்கிழவோனே" எனவும் அதனை வேறாக ஓதுதலின், மகேந்திரமலையுங் கைலைவெற்பும் ஒன்றே யென்பார் கூற்றுப் போலியாமென்றொழிக. அற்றன்று, "வேடுரு வாகி மகேந்திரத்து மிகுகுறை வானவர் வந்து தன்னைத், தேடவிருந்த சிவபெருமான்" என்பதனால், அருச்சுனன் பொருட்டுக் கைலைமலைச்சாரலில் வேட்டுவன் வடிவில் வந்து சிவபிரான் அருள்செய்த நிகழ்ச்சியினை அடிகள் மகேந்திரமலைக் கண்ணதாக வைத்துரைத்தல் கொண்டு அவ்விரண்டும் ஒன்றேயாதல் பெறப்படுமாலோ வெனின்; அறியாது வினாயினாய், கைலைமலைக்கட் சிவபிரான் நிகழ்த்

திய ஓர் அருள் நிகழ்ச்சியினை, அவன் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் ஏனையிடங்களினும் நிகழ்ந்ததாக வைத்துரைத்தல் ஆன்றோர் மரபு. இமயமலைக்கண் நிகழ்ந்தனவாகச் சொல்லப்படும் நான்முகன் தலையறுத்த தும், அந்தகனைக் கொன்றதும், முந்நகர் அழித்ததுந், தக்கனை ஒறுத்ததுஞ், சலந்தரனைச் சிதைத்ததும், யானை உரித்ததுங், காமனை எரித்ததுங், கூற்றுவனை உதைத்ததும் ஆய அருட்செயல்கள் முறையே திருக் கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திருவழுவூர், திருக்குறுக்கை, திருக்கடவூர் முதலிய தென்றமிழ்நாட்டூர்களில் நிகழ்ந்தனவாக வைத்து ஆன்றோர்களாற் றொன்றுதொட்டுப் பாராட்டப்பட்டு வருதலே இதற்குச் சான்றாம். ஆகவே, வேடுருவாகி வந்த அருள்நிகழ்ச்சி கைலைக் கண்ணும் மகேந்திரமலைக்கண்ணும் நிகழ்ந்ததொன்றாக வைத்துச் சொல்லப்படுதல் ஒன்றே கொண்டு, அவ்விருவேறு மலையும் ஒன்றேயாமென்றல் உண்மையுணரமாட்டாதார் வெற்றுரையே யாமென விடுக்க.

இனித், தெலுங்குமொழிச் சொல்லாகிய ‘அதெந் துவே’ என்பது அருட்பத்தில் அடுத்தடுத்துக் காணப்படு கின்றது. அதுவேயுமன்றிக், ‘கிறி’, ‘பளகு’, ‘இத்தை’, ‘சட்டோ’, ‘சழக்கு’, ‘ஆதம்’, ‘அச்சோ’ முதலிய சொற்கள் திருவாசகத்திற் பலகாலுங் காணப்படுகின்றன. திருவாசக காலத்திற்கு முற்பட்ட சங்கச் செய்யுட்களிற் காணப்படாத இச் சொற்கள் வடக்குள்ள வடுகுநாட்டில் வழங்கினவாய்ப், பின்னர் மாணிக்கவாசகப் பெருமான் வாயிலாகத் தமிழ் நாட்டின்கட் புகுந்தனபோலும்!

இனி, வடுகுநாட்டின்கண் இருக்கும் வீரசைவர் தாம் வழிபடுஞ் சிவலிங்கப் பெருமானை ஓரிமைப்பொழுதும் பிரிந் திருக்கமாட்டாராய், அதனை ஒரு சிறுபேழையுட் பெய்து தமதுடம்பின்கண் அணிந்துகொளாநிற்பர். இங்ஙனமே மாணிக்கவாசகப் பெருமானுந் தாம் வழிபட்டுவந்த சிவலிங்க அருட்குறியைத் தமது திருமேனிமிசை அணிந்

திருந்தாரென்பது, "எந்தையே ஈசா உடல்இடங் கொண்டாய்" எனச் 'செத்திலாப்பத்தி'லும் (௧0), "என் மெய்ந்நாடொறும் பிரியாவினைக்கேடா" என 'உயிருண்ணிப்பத்தி'லும் (௧) அவர் விளங்கக் கூறுமாற்றால் அறியப்படும். இவ்வாறு வடக்கிருந்த வடுகுநாட்டிற்குரிய குறிப்புகளையும், ஆண்டுள்ளார் தழுவியொழுகிய வீரசைவசமயத்திற்குரிய குறிப்புகளையும் மாணிக்கவாசகப் பெருமான் தாம் திருவாய் மலர்ந்தருளிய செய்யுட்களில் ஓதக்காண்டலின், அவர் தமது இளமைக் காலத்திற் கஞ்சத்தின்கண்ணதான மகேந்திரமாமலைப் பக்கத்திருந்து, தம்மனோருடன் பாண்டிநாட்டுட் புகுந்து வைகினரென்பது நன்கு தெளியப்படுமென்க.

இங்ஙனமாக மாணிக்கவாசகப்பெருமான் வடக்கிருந்து வந்த வீரசைவ மரபிற்கு உரியராய், அம் மரபினரால் தலைமையாசிரியராக வைத்துப் போற்றப்பட்டு வந்தமை கண்டே, தமிழ்நாட்டுச் சைவசமயத் தெய்வ ஆசிரியரான சுந்தரமூர்த்தி நாயனார் தாம் அருளிச் செய்த 'திருத்தொண்டத்தொகை'யில் அவர் பெயரை வெளிப்படக் கிளந்து ஓதாது 'பொய்யடிமையில்லாத புலவர்' என்று அவரைக் குறிப்பால் ஓதியதூஉம், சுந்தரமூர்த்தி நாயனார்க்குப்பின் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் றுடக்கத்தில் வந்த பட்டினத்தடிகள் காலத்திலெல்லாம் மாணிக்கவாசகப்பெருமானும் இங்குள்ள சைவநன்மக்களாற் சைவசமய ஆசிரியராக வழுத்தப்படலானமையின் இதற்குமுன் தாம் சைவசமய குரவராகக் கொண்டு வழிபாடாற்றி வந்த சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூவரொடு நாலாமவராக உடன்வைத்து அவரால் அவர் வணங்கப்படலாயினதூஉமென்க. எனவே, 'பொய்யடிமையில்லாத புலவர்' என்னுஞ் சொற்றொடர் தனியடியாரொருவரையே குறிக்கக் காண்டலின், 'திருத்தொண்டத்தொகை'யிற் போந்த தனியடியார் அறுபத்துமூவராவர், தொகையடியார் எண்மராவர்; ஆக, அடியார்தொகை எழுபத்தொன்றேயாம்; நம்பியாண்டார் நம்பிகள் சுந்தரமூர்த்தி நாயனாரையும் அவ்

வடியார் தொகையிற் சேர்த்தமையின் அடியார் தொகை மொத்தம் எழுபத்திரண்டாயிற்று. இதற்கு மாருக நம்பியாண்டார் நம்பிகள் தொகையடியார் ஒன்பதின்மராவரென உரைத்த உரைப்பொருள் பிழைபடுதலை மேற் காட்டியவாற்ருல் அறிந்துகொள்க.

உஅ. மாணிக்கவாசகர் காலத் திட்டமுடிபு

இனிப், பத்தாம் நூற்ருண்டிற்குமுன் உரை யியற்றிய உரையாசிரிய ரெவருந் தமதுரையுள் 'திருவாசகம்,' 'திருக்கோவையார்' என்னும் நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டிற்றிலரெனக் கூறுவான் புகுந்து, முதற்கண் 'இறையனுரகப் பொருளுரை'யில் திருக்கோவையார் துறைச் செய்யுட்களை அதன் உரைகாரர் எடுத்துக்காட்டாமையினையும், இரண்டாவதாகத் தொல்காப்பிய அகத்திணையியல் களவியல் கற்பியல்கட்குப் போந்த உரையில் இளம்பூரணர் அதன் செய்யுட்களை அங்ஙனமே எடுத்துக் காட்டாமையினையுந் 'தமிழ் வரலாறுடையார்' குறித்துப் பேசி, அவ்வாற்ருல் திருவாசகம் திருக்கோவையா ரென்பன கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலேதான் இயற்றப்பட்டனவாதல் வேண்டுமெனக் கூறினுர்.

'அவனி சூளாமணிமாறன்' காலத்தில் தமிழ்மொழிப் பயிற்சி மிக்கோங்கியிருந்தமையின், அப்போது பெரிது பயிலப்பட்டு வந்த 'இறையனுரகப் பொருளுரை'யில் அவ் வேந்தன் காலத்திருந்த புலவர் ஒருவர் அவனைப் பாட்டுடைத் தலைவனுக நிறுத்திப் பாடிய கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களெல்லாவற்றையும் அவ் வுரையின்கட் புகுத்திவிட்ட வரலாற்றினை மேலே எஎஅ-ஆம் பக்கம்முதல் எஅரு-ஆம் பக்கம் வரையில் வைத்து ஆராய்ந்து விளக்கிக் காட்டியிருக்கின்றேம். மற்று, அவ்வுரையினை யியற்றிய ஆசிரியர் நக்கீரனுர் கி. பி. முதல்நூற்ருண்டில் மாணிக்கவாசகப் பெருமானுக்கு முன்னே யிருந்தவராகலின் அவர் 'திருச்சிற்றம்பலக் கோவையா'ரிலிருந்து மேற்கோள்கள் காட்டுதல் யாங்ஙனங் கூடுமென மறுக்க.

அற்றேலஃதாக, கி. பி. ஆறும் நூற்றாண்டில் இயற்றப் பட்டதாகப் புலப்படும் 'புறப்பொருள் வெண்பாமாலை'யி லிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டும் இளம்பூரணர், அவ்வாற்றால் ஆறும் நூற்றாண்டிற்குப் பின்னிருந்தமை தெற்றென விளங்குதலின், 'திருச்சிற்றம்பலக் கோவை யார்' அவர்க்கு முன்னமே இயற்றப்பட்டதொன்றாயின் அவர் அதன்கணுள்ள அகப்பொருட்டுறைகளைத் தமது தொல்காப்பிய வுரையில் எடுத்துக் காட்டாமை என்னை யெனின்; 'தொல்காப்பியம்' எம் மதத்தவராலும் பயிலப் படுந் தமிழ்மொழி யிலக்கணங்களை வகுத்துக் கூறும் பொது நூலாகலின், அதன் உரையிற் சைவ சமயத்தவ ராற் பெரிது பாராட்டப்படுந் திருச்சிற்றம்பலக் கோவை யார் நூற்செய்யுட்களை எடுத்துக்காட்ட உரையாசிரியர் எவரும் ஒருப்பட்டிலர். முதல்நூல் எழுதிய ஆசிரியர் தொல்காப்பியனாருங்கூடத் தமது நூல் 'தொல்காப்பியம்' எல்லார்க்கும் பொதுவாதல் பற்றியே அதன் முகத்திற் கடவுள் வணக்கம் ஏதுமே கூறாதுவிட்டார். பிற்காலத் தார்க்கு இலக்கண நூலெழுதிய சமண்முனிவரான பவணந்தியோ இந்நுட்பம் உணராமையின், தமது 'நன் னூலின்' முகத்துத் தாம் வழிபடு கடவுளாகிய அருக தேவனை வணங்கி வாழ்த்துரைத்தார்; இது குற்றமாதல் கண்டு கொள்க. தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார், ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தை நன்கு உணர்ந்தவ ராகலின் அவரைப் பின்பற்றியே தாம் எச்சமயத்தார்க்கும் பொதுவாக இயற்றிய தெய்வத் 'திருக்குறள்' நூலின்கண் தாம் வழிபடுங் கடவுளுக்கு வாழ்த்துக் கூறாமல், எல்லாச் சமயத்தார்க்கும் ஏற்புடைத்தான பொதுநிலையில் வைத் துக் கடவுள் வாழ்த்துக் கூறினார். இப் பேராசிரியர் இரு வர் தங் கருத்தை நன்கறிந்தே, தொல்காப்பியத்துக்கு உரை வகுத்த இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முத லான உரைகாரர் எவருந் தமதுரையில் திருச்சிற்றம் பலக் கோவையாரின் அகப்பொருட்டுறைகளை எடுத்துக் காட்டிற்றிலரென்க. திருச்சிற்றம்பலக் கோவையார்க்கு விழுமிய நல்லுரை வரைந்த பேராசிரியரே, தாம் எழுதிய

தொல்காப்பிய உரையில் அதன் அகப்பொருட் செய்யுட்களை எடுத்துக் காட்டிற்றிலராயின், பிறர் அவைதம்மை எடுத்துக் காட்டாமைக்கு ஏது என்னையென்று வினுதல் வழுவன்றோ வெனக் கூறி மறுக்க. கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டிற்கு முன்னிருந்த இளம்பூரணரே யன்றி, அதற்குப் பின்னிருந்த நச்சினார்க்கினியருந் தமது தொல்காப்பிய அகப்பொருளுரையில் திருச்சிற்றம்பலக் கோவையார் செய்யுட்களை மேற்கோள்களாக எடுத்துக் காட்டாமையின், அங்ஙனம் எடுத்துக் காட்டாமை ஒன்றே கொண்டு, அவர்தங் கருத்துண்மை யுணராத 'தமிழ் வரலாறுடையார்' மாணிக்கவாசகப் பெருமானைக் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிற் படுப்பிக்க விழைந்தது பெரியதொரு பிழைபாடாய் முடிந்தமை காண்க. உரையாசிரியர் எல்லாரும் பொதுநூலாகிய தொல்காப்பியத்திற்குத் தாம் வரைந்த உரையுள், தொல்காப்பியத்தைப் போலவே பொது நூல்களாகிய 'அகநானூறு,' 'நற்றிணை,' 'குறுந்தொகை,' 'ஐங்குறுநூறு,' 'கலித்தொகை' முதலான சங்க இலக்கியங்களிலிருந்தே மேற்கோள்கள் எடுத்துக் காட்டுங் கடப்பாடு உடையராகலின், அவர் தமக்கு முன்னிருந்த பிறநூல்களை எடுத்துக் காட்டாமை கொண்டு, அவையெல்லாம் அவர்க்குப் பிற்காலத்தே எழுந்தனவாதல் வேண்டுமெனத் துணிபுரை நிகழ்த்தலினுங் குற்றமாவது பிறிதில்லையென ஓர்க. என்றிதுகாறும் விரித்து ஆராய்ந்துரைத்த உரைப் பொருளால், 'தமிழ் வரலாறுடையாரும்' பிறரும் மாணிக்கவாசகப் பெருமானைக் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின்கட் படுப்பிக்க விழைந்து காட்டிய போலியேதுக்கள் அத்தனையும் வேரற வெட்டிச் சாய்க்கப்பட்டமையும், நமது அவ்வுரைப் பொருளின் இடையிடையே ஆழ்ந்தாராய்ந்து காட்டப்பட்ட உண்மையேதுக்களால் அவரது காலங் கி. பி. மூன்ரும்நூற்றுண்டின் முற்பகுதிக்கட் படுவதாதலும் வைரத்தூண் போல் நன்கு நிறுவப்பட்டமை காண்க.

இனி, மாணிக்கவாசகப் பெருமானது காலங் கி. பி. மூன்ரும் நூற்றுண்டின்கட் படுதலைப் பின்னுஞ் சில ஏதுக்

களால் விளக்கி, அவ்வளவில் இப் பெருநூலை முற்றுவிப்பாம். கணபதி, விநாயகர், விக்கினேசுவரர், பிள்ளையார் என்னுந் திருப்பெயர்களையுடைய 'யானைமுகக் கடவுள்,' மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த 'திருவாசகம்,' 'திருச்சிற்றம்பலக் கோவையார்' என்னும் நூல்களில் ஒரு சிறிதுங் குறிக்கப்படாமையினை மேலே ௩௫௬-ஆம் பக்கத்தில் எடுத்துக் காட்டிப் போந்தாம். அதுகொண்டு, மாணிக்கவாசகர் யானைமுகக் கடவுள் வழிபாடு இத்தென்றமிழ் நாட்டின்கண் உண்டாதற்கு முற்பட்டதொரு காலத்தே இருந்தனராதல் வேண்டுமென்பதும் ஆண்டே காட்டப்பட்டது. அதனை மீண்டும் இங்கே சிறிது ஆராய்ந்து காண்பாம். வடமொழிவல்ல அறிஞரான 'பண்டாரகர்' என்பார் தாம் பெரிதாராய்ந் தெழுதிய 'வைஷ்ணவம், சைவம்' என்னும் நூலில்[1] யானைமுகக் கடவுளாகிய கணபதி வணக்கங் கி. பி. ஆறும்நூற்றாண்டிற்குமுன் காணப்படுவதன்றெனா நன்காராய்ந்து விளக்கியிருக்கின்றார். இத்தென்றமிழ் நாட்டகத்துக் கி. பி. ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்த திருநாவுக்கரசு நாயனார் திருப்புறம்பயத் திருத்தாண்டகம், ௧௦-ஆஞ்செய்யுளிற் "குமரனும் விக்கின விநாயகனும்" எனவுந், திருவீழிமிழலைத் திருத்தாண்டகப் பதிகமொன்றிற் "கைவேழமுகத்தவனைப் படைத்தார்போலும்" எனவுந், திருவாய்மூர்த் திருத்தாண்டகம் அ-ஆஞ்செய்யுளில் "மெல்லியலும் விநாயகனுந் தோன்றக் கண்டேன்" எனவும் அருளிச்செய்திருத்தலின் யானைமுகக் கடவுள் வணக்கம் ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிருந்தமை தெளியப்படும். இனி, ஐந்தாம் நூற்றாண்டின் ஈற்றிலாதல் ஆறும் நூற்றாண்டின் துவக்கத்திலாதல் இயற்றப்பட்டதொரு விழுமிய நூலாக மேலே ௧௭அ, ௧௭௬-ஆம் பக்கங்களிற் காட்டப்பட்ட கல்லாடத்தில் யானைமுகக் கடவுள் வணக்கங் கூறப்பட்டிருத்தலின், அது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் ஈற்றிலும் இத் தென்றமிழ்நாட்டகத் திருந்தமை

1. Dr. Bhandarkar's Vaishnavism, Saivism,' p. 147 fol.

தேறப்படும். இன்னும் இவ்வணக்கங் கல்லாட நூலொடு ஒருகாலத்ததாய புறப்பொருள் வெண்பாமாலையுள்ளுங் காணப்படுகின்றது.

இனிக், கி. பி. ஆரும் நூற்றாண்டின் றுவக்கத்தில் இயற்றப்பட்ட இந் நூல்கட்கு முற்பட்டுக், கி. பி. இரண்டாம் நூற்றாண்டின்கட் டோன்றினவாகிய 'சிலப்பதிகாரம்' 'மணிமேகலை' என்னும் பெருங்காப்பிய நூல்களிலோ யானைமுகக்கடவுளைப்பற்றிய குறிப்புச் சிறிதுங் காணப்படவில்லை. இந் நூல்களுக்கு முற்பட்டுக் கி. பி. முதல் நூற்றாண்டிலும் அதற்கு முன்னும் இயற்றப்பட்ட சங்கத் தமிழ் நூல்களாகிய 'நான்மணிக்கடிகை', 'இனியவைநாற்பது', 'இன்னாநாற்பது', 'கார்நாற்பது', 'ஐந்திணைஐம்பது', 'திரிகடுகம்', 'ஆசாரக்கோவை', 'இன்னிலை', 'நற்றிணை', 'குறுந்தொகை', 'ஐங்குறுநூறு', 'பரிபாடல்', 'கலித்தொகை', 'அகநானூறு', 'புறநானூறு' என்பவற்றில் வழுத்தப்பட்டிருக்குந் தெய்வங்கள் சிவபிரான், முருகவேள், காடுகிழாள், மாயவன், திருமால், வாமனன், கண்ணன், நான்முகன் என்பவரே யாவர். இச் சங்கத்தமிழ் நூல்களுக்குப் பின் இவற்றோடொப்பக் கி. பி. மூன்றும் நூற்றாண்டிலிருந்து கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் நடுவரையிற் சமண காலத்தில் இயற்றப்பட்ட 'நாலடியார்' 'பழமொழி' 'ஏலாதி' என்னும் நூல்களில் வழுத்தப்பட்டோன் சமணமதத்திற்குரிய அருகதேவனேயாவன். இவ்வாறுகக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்னர் இயற்றப்பட்ட செந்தமிழ் நூல்களில் ஓரிடத்தாயினும் யானை முகமுடைய பிள்ளையார் கூறப்படாமை என்னையென்று உற்றுக்காண்புழி, அவ்வியல்பினரான ஒருகடவுளின் உணர்ச்சியும் அவரை வணங்கும் வணக்கமுங் கி. பி. ஆரும் நூற்றாண்டின் றொடக்கம் வரையில் இத் தென்றமிழ் நாட்டகத்துத் தோன்றவில்லையென்பது துள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றதன்றோ? முதலிற் பிள்ளையார்வணக்கமின்றி எதனையுந் தொடங்காத பின்றைக் காலத் தமிழ்மக்களின் வழிபாட்டு முறையில்வைத்துப் பண்டைக்காலத் தமிழரின்

வழிபாட்டு முறையினை ஒப்பிட்டுக் காணவல்லார்க்குப், பழைய நூல்களில் யாண்டும் பிள்ளையார் வணக்கங் காணப் படாமை பெரியதோர் ஆராய்ச்சியினையும் வியப்பினையும் விளைக்கற்பாலதன்றோ? பிள்ளையாரும் அவரை வணங்கும் வணக்கமும் அஞ்ஞான்றிருந்தமை உண்மையாயின், அதனைப்பற்றிய குறிப்புப் பழைய நூல்களில் ஒருசிறிதுங் காணப்படாமை என்னை? என்று வினவுவார்க்கு இறுக்க லாகாமையின், அவ் வணக்கம் அஞ்ஞான்று உளதாயிற் றன்று என்பதே தேற்றமாம். கி. பி. ஆறும் நூற்றாண்டிற் குப் பின்வந்த சைவசமயாசிரியரும் சைவசமய நூலாசிரியரு மாகிய எல்லாரும் யானைமுகமுடைய பிள்ளையாரைத் தாம் அருளிச்செய்த திருப்பதிகங்களிற் குறிப்பிடுதலுந், தாம் இயற்றிய நூல்முகத்தே வணங்குதலும் பிறழாமற்செய்து போதரக் காண்டலானும், அவ்வாறும் நூற்றாண்டிற்கு முற்பட்ட சைவசமய நூல்களிலும் பிறவற்றிலும் யானை முகக் கடவுளைப்பற்றிய குறிப்பு ஒரு சிறிதுங் காணப் படாமையானும், வடநாட்டில் வடநூல்வல்ல சிறந்த அறி ஞராய் விளங்கிய பண்டாரகரும் ஆறும் நூற்றாண்டுக்கு முன் பிள்ளையாரும் பிள்ளையார் வணக்கமும் இருந்தமைக் குத் தினைத்தனைச் சான்றும் இல்லாமையின் அக்கடவுளும் அக்கடவுள் வணக்கமும் ஆறும் நூற்றாண்டு முதற்றான் தோன்றினமை பெறப்படுமென ஆராய்ந்து காட்டினராக லானும், தாம் அருளிச்செய்த 'திருவாசகம்' 'திருக்கோவை யார்' என்னுஞ் சைவசமய விழுமிய நூல்களில் யானைமுகக் கடவுளாகிய பிள்ளையாரைக் குறிப்பாலேனும் வெளிப்படை யாலேனுஞ் சுட்டாத சைவசமய முதலாசிரியராகிய மாணிக்கவாசகப்பெருமான் அவ்வாற்றாற் கி. பி. ஆறும் நூற்றாண்டிற்குமுன் இருந்தவரென்பது ஒருதலையாகப் பெறப்படுமென்க.

அற்றேலஃதாக, மாணிக்கவாசகப்பெருமான் மேற் காட்டியவாற்றால் ஆறும்நூற்றாண்டிற்குமுன் இருந்தா ரென்னுந்துணையே பெறப்படுமல்லது, அவர் கி. பி. மூன்றும் நூற்றாண்டின் றுெடக்கத்திலிருந்தமையும்

அதனாற் பெறப்படாதாலெனின்; அது, மேலே துவக்கம் முதற் பலதலையான் ஆராய்ந்து காட்டிய முடிபுகளாற் பெறப்படுமேனும், ஈண்டு அதற்குப்பின்னும் ஒரு வலி யுடைச் சான்று காட்டுதும்: இப்போது 'சிதம்பரம்' என வழங்கப்படுந் தில்லைமாநகர்க்குத் திருஞானசம்பந்தப் பெருமானுந் திருநாவுக்கரசு நாயனாருஞ் சென்றகாலத்தில், அந்நகர் உப்பங்கழியினாற் சூழப்பட்டிருந்ததென்பது "கழி சூழ்தில்லை" எனச் சமபந்தர் அருளிச்செய்தவாற்றானும், வயலுஞ் சோலைகளும் அந் நகர்ப்புறத்தே நிறைந்திருந் தமை "பாளையுடைக்கமு கோங்கிப் பன்மாடம் நெருங்கி யெங்கும், வாளையுடைப் புனல் வந்தெறி வாழ்வயற் றில்லை" எனவும், "நீடுஇரும் பொழில்களும் சூழ்ந்த, மதியந் தோய்தில்லை" எனவும் அப்பர் அருளிச்செய்த வாற்றானும் பெறப்படும். பண்டு ஒருகாற் கடல்நின்ற இடமாகிப் பின்னர் அக்கடல்நீர் வற்றி எட்டிச்செல்லச் செல்ல முன் கடல்நீர் நின்றஇடம் ஆழமில்லாக் கழிநீருடையதாகுமேல் அதனையே உப்பங்கழியெனக் கூறுகிற்பர். தில்லைமாநகர் மிகப் பழையநாளிற் கடலருகே நின்றதோர் இடமாகும்; திருஞானசம்பந்தர் சென்ற காலத்தில் அக்கடல்நீர் வற்றிச் சிறிது எட்டிப்போக, அக்கடல்நீரொடு தொடர்புடைய கழிநீர்மட்டுமே அந்நகரருகே நின்றமை புலனாகின்றது; அந்நகரின் கீழ்பக்கந் தவிர ஏனைமுப்பக்கங்களிலும் வயலுஞ் சோலையும் மலிந்திருந்தன. இந்நாளிலோ தில்லைமா நகர்க்குக் கிழக்கிலுள்ள கடல் அந்நகரைவிட்டுச் சிறிதேறக் குறைய ஏழுகல்வழி கடந்துபோய்விட்டது. சம்பந்தப் பெருமான் காலத்தில் தில்லையின் அருகுநின்ற கழிநீர் கடல்நீரொடு தொடர்புடையதாய் நின்றதென்பதனால், அப் போது அக்கடல் அந்நகருக்குச் சிறிதேறக்குறைய ஒருகல் தொலைவில் நின்றதாகல் வேண்டும்; இற்றைக்கு கஙௗ00 ஆண்டுகளுக்குமுன், சம்பந்தப்பெருமான் இருந்தமை மேலே தெளிவுறுத்தப் பட்டிருத்தலால், இவ் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளில் ஆறுகல்தொலைவு மேலும் பின்னிடைந்து சென்ற கடல் சிறிதேறக்குறைய உஉ௫ ஆண்டுகளுக்கு ஒருகல் விழுக்காடு பின்வாங்கிச் சென்ற

தெனக் கணக்குச் செய்வோமானுற், சிறிதேறக்குறைய கசுOO-ஆண்டுகளுக்குமுன் அது தில்லைமாநகர்க்கு மிக அணித்தாக நின்றமை தெற்றெனத் துணியப்படும். ஆகவே, திருஞானசம்பந்தப் பெருமானிருந்த காலத்தில் தில்லையைவிட்டு ஒருகல் எட்டிநின்று, தானின்ற இடத்தை ஆழமில்லா உப்பங்கழி யாக்கிய கடல்நீரானது, திருஞான சம்பந்தப் பெருமானுக்கு உஉரு-ஆண்டு முற்பட்டதாகிய காலத்தில், அஃதாவது கி. பி. நாலாம்நூற்ருண்டில் அந் நகருக்கு மிகவும் அணித்தாக நின்றமை தெளியப்படுகின்ற தன்ருே? அங்ஙனம் அது கி. பி. நாலாம் நூற்ருண்டிலும் அதற்கு முன்னும் தில்லைக்கு மிகவும் அணித்தாக நின்று உலவியதுண்மையாயிற், கி. பி. மூன்ரும் நூற்ருண்டி லிருந்த மாணிக்கவாசகப் பெருமான் தில்லையம்பதிக்குச் சென்ற ஞான்று அதனருகே உலாய கடற்காட்சியினை வியந்து, தாம் அங்கிருந்தருளிச்செய்த திருப்பாட்டுகளிற் பாடியிருப்பரல்லரோ? ஆகவே, அவர் தில்லைக்கணிருந்து அருளிச்செய்த 'திருச்சிற்றம்பலக் கோவையா'ரில், தில்லை யினருகே கடல் நின்றமை குறிப்பிட்டனரோ என்பது ஆராயற்பாற்று. இனித் திருக்கோவையார் கஉஉ-ஆஞ் செய்யுளிற் "கடற்றில்லையன்னுய்" எனவும், கஅரு-ஆஞ் செய்யுளிற் "பூண்நிகர் வாளரவன் புலியூர் சுற்றும் போர்க் கடலே" எனவும் அடிகள் தில்லைக்கட் கடல் நின்றமை அருளிச் செய்திருப்பதோடு, தில்லையினருகுநின்ற அக் கடலிற் பெரிய சங்குகள் முத்து ஈன்றமையும் பெரிய மரக் கலங்கள் பல நின்றமையுங் கடலலைகள் ஓவாது ஒலிசெய் தமையும் பிறவும் நன்கு விளங்கச்,

"சங்கந் தருமுத்தி யாம்பெற வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறுலவு
துங்க மலிகலை யேந்தலின் ஏந்திழை தொல்லைப்பன்மா
வங்க மலிகலி நீர்தில்லை வானவன் நேர்வருமே."

என அந் நூலின் அரு-ஆஞ் செய்யுளில், ஓவியம் வரைந்து காட்டினுற்போற் சிலசொல்லிற் பல கடற்காட்சிகளையும் அவர் அணிந்துரைத்தலுங் கருத்திற் பதிக்கற்பாற்று.

எனவே, மாணிக்கவாசகர் காலத்தே தில்லைநகரின் அருகே கடல் நின்றதென்பதூஉம், திருஞானசம்பந்தர் காலத்தே அக் கடல் அந்நகரைவிட்டு ஒருகல்வழி எட்டிப் பின்னிட அக்கடல் நீரொடு தொடர்புடைய ஒருகழி மட்டுமே அந் நகரின் பாங்கர் நின்றதென்பதூஉம், இஞ் ஞான்று அக்கடல் தில்லையைவிட்டு ஏழுகல்வழி விலகிப் போய்விட்டதனைக் கணக்குச்செய்ய மாணிக்கவாசகர் காலத்திருந்த கடல்நீர் வற்றி யெட்டிச் செல்லவும் அத னொடு தொடர்புடைய கழிநீர்மட்டும் ஆண்டு நிற்கவுஞ் சிறிதேறக்குறைய உஉ௫-ஆண்டுகளாவது சென்றதாகல் வேண்டுமென்பதூஉம், அவ்வாற்றால் மாணிக்கவாசகப் பெருமான் இருந்த காலங் கி. பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்படுவதாமென்பதூஉம் இனிது பெறப்படுதல் காண்க. இங்ஙனமே, மாணிக்கவாசகர் குதிரை வாங்கச்சென்று இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதோர் இடமாகிய 'திருப் பெருந்துறை' என்பதும் அடிகள் காலத்திற் கடற்றுறைப் பட்டினமாய் இருந்தமையும், அப்போது அது மிழலைக் கூற்றத்தின் உள்ளடங்கியதாய்ச் சோழநாட்டின் தென் பகுதிக்கண் இருந்தமையும், இஞ்ஞான்று அக்கடல் திருப் பெருந்துறையை விட்டுப் பதினான்குகல் விலகிச்சென்றமை யும் மேலே உஅள-ஆம் பக்கத்திருந்து உஅகூ-ஆம் பக்கம்வரையில் விளக்கிக் காட்டியிருக்கின்றேம். அடிகள் காலம் இதனானுஞ் சைவசமயாசிரியர் ஏனைமூவர்க்கும் முற்பட்டதாதல் பெறப்படாநிற்கும். அற்றேல், தில்லைக் கண் நின்ற கடல் அதனைவிட்டு ஒருகல் விலகிச்செல்லு தற்கு உஉ௫-ஆண்டுகள் கழிந்தனவாகத், திருப்பெருந் துறைக்கண் நின்றகடல் அதனைவிட்டு ஒருகல் விலகு தற்கு கoள-ஆண்டுகள் மட்டுமே கழிந்ததென்னையெனின்; அவ் வேறுபாடு ஆண்டாண்டுள்ள நிலப்பகுதிகளின் ஏற்றத் தாழ்வால் நிகழலாயிற்றென் றுணர்ந்துகொள்க. திருப்பெருந்துறையை யடுத்துக் கடல்நீர் நின்ற நிலப் பகுதி மேட்டுப்பாங்காயிருந்ததனால் அக் கடல்நீர் அதனை விட்டு விரைந்து சென்றதாகல்வேண்டும்; மற்றுத் தில்லையை யடுத்துக் கடல்நீர் நின்ற நிலப்பகுதி பள்ளத்

தாக்காயிருந்தமையால் அதனைவிட்டு அது மெல்லச் சென்றதாகல் வேண்டும் என்க.

இனி, மாணிக்கவாசகர், சைவசமயாசிரியர் ஏனைமூவர்க்கும் திருமூலநாயனார்க்கும் பின்இருந்தவராயின், தேவாரத் திருப்பதிகங்களிலுந் திருமந்திரத்திலும் உள்ள சொற்கள் சொற்றொடர்கள் பொருள்களைத் தம்முடைய திருவாசகந் திருக்கோவையார் என்பவற்றிற் சிறிதாயினும் எடுத்தாண்டு இருத்தல்வேண்டும்; அவற்றின் செய்யுளமைப்புகளைப் பின்பற்றிப் பாடியிருத்தல்வேண்டும்; அதுவேயுமன்றித், திருமந்திரத்திற் காணப்படுஞ் சைவசித்தாந்தக் குறியீடுகளையும் அவற்றின்கண் வழங்கினராகல் வேண்டும்; திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களிற் பிறருள்ளத்தை ஈர்க்குஞ் சொற்றொடர் அமைப்புகளும் இயற்கைப்பொருளழகுகளுஞ் சந்தக் குழிப்புகளும் மலிந்து கிடக்கின்றன; மாணிக்கவாசகர் சம்பந்தர்க்குப் பின்னிருந்தனராயின் இவற்றுள் ஒருசிலவற்றையாயினும் எடுத்தாளாதிரார். அங்ஙனமே திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்தவற்றில் 'தாண்டகச் செய்யுட்கள்' எத்தகையோர் உள்ளத்தையும் நீராய் உருக்குந்தகையன. சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த பலவும் அந் நீர்மையவே. இவ்வாசிரியரின் சொற்பொருள்களேனுஞ் செய்யுளமைப்புகளேனும் ஒரு சிறிதளையும் திருவாசகந் திருக்கோவையாரிற் காணப்படுகின்றில.

மேலுஞ், சைவசித்தாந்த நூல்களில் உயிர்களைக் கட்டி நிற்கும் மலங்கள் மூன்றுளவென்பதூஉம், அவை ஆணவம் மாயை கன்மம் எனப் பெயர்பெறுமென்பதூஉங் காணப்படும். திருமூலர், "பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு" (௨௪௦௬) எனவும், "ஆணவம் மாயையுங் கன்மமும் ஆம்மலம்" (௨௧௯௨) எனவுங் கூறுதலே அதற்குச் சான்றாம். இக் கோட்பாட்டை மாணிக்கவாசகப் பெருமான் தழுவி நின்றமைக்கு "மூலமாகிய மும்மலம்" (௧௧௧) என்று கீர்த்தித்திருவகவலிலும், "மயக்கமாயதொர் மும்மலப்பழ வல்வினைக்குள் அழுந்தவும்" (௭) என்று

திருக்கழுக்குன்றப் பதிகத்திலும், "ஏற்றார், அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங், கழுக்கடை" (கக) எனத் திருத்தசாங்கத்திலும், "மும்மைமலம் அறுவித்து" (கூ) என அச்சோப்பதிகத்திலும் அவர் அம் மூன்றையும் பல கால் கூறுதலே சான்றும். இம் மும்மலப் பெயர்களுள் 'மாயை,' 'கருமம்' என்பன திருவாசகத்திற் காணப்படி னும், மூலமலத்தின் பெயரான 'ஆணவம்' என்னுஞ்சொல் அதன்கண் ஓரிடத்தேனுங் காணப்படுகின்றிலது; இவ் வாணவமலத்தைக் குறிப்பிட நேர்ந்துழியெல்லாம் அடிகள் அதனை "மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி மலங் கெடுத்த பெருந்துறை"(திருக்கழுக்குன்றப்பதிகம், ௩) எனவும், "கடலின்றிரை யதுபோல்வரு கலக்கம் மலம் அறுத் தென்" (உயிருண்ணிப்பத்து, சு) எனவும், "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட" (அச்சோப் பதிகம், க) எனவும் 'மலம்' என்னுஞ் சொல்லாற் குறிப் பிட்டனரேயல்லால், ஆணவம் என்னுஞ் சொல்லாற் குறிப் பிட்டிலர். அடிகள் திருமூலநாயனார்க்குப் பின் இருந்தன ராயின், அம் மூலமலத்தைச் சுட்டுஞ் சிறப்புச்சொல்லாகிய 'ஆணவம்' என்பதனை எடுத்து ஆளாதிரார். ஆகவே, திருவாதவூரடிகள் காலத்தில் 'ஆணவம்' எனுஞ் சொல் வழக்கு உண்டாகவில்லை யென்பதூஉம், அவர்க்கு முந்நூ ருண்டு பிற்பட்டுவந்த திருமூலநாயனார் காலத்திலேதான் அச் சொல் தோன்றி வழங்கலாயிற் றென்பதூஉம் நன்கு பெறப்படுதல் காண்க.

இங்ஙனமே 'மாயை'யைச் சுத்தமாயை அசுத்தமாயை என இரண்டாகப் பிரித்துப், பழம்பிறவி நிகழ்ச்சிகள் உயிர்கட்குத் தெரியவொட்டாமல் மறைக்கும் இறைவன் றன் அருட்செயலை, மறைக்கும் ஒப்புமைபற்றி மலமெனப் படுத்து, அதனையுந் 'திரோதமலம்' என வழங்கி, அவ் வாற்றால் 'மலங்கள் ஐந்தெனவும் படும்'என்னுஞ் சைவ சித்தாந்தக் கோட்பாடு திருமூல நாயனார்,

"ஆணவம் ஆகும் அதீதமேன் மாயையும்
பூணுந் துரியஞ் சுழுத்திபொய்க் காமியம்

பேணுங் கனவும் மாமாயை திரோதாயி
காணு நனவின் மலக்கலப் பாகுமே.'' (உஉ௫க)

என்று திருமந்திரத்தில் அருளிச்செய்திருக்குமாறுபற்றி அறிந்து கொள்ளப்படும். இக் கோட்பாடு திருவாதவூரடிகட்கும் உடம்பாடாதல், அவர் 'நீத்தல் விண்ணப்பத்'தில் (உ௬) "மலங்கள் ஐந்தாற் சுழல்வன் தயிரிற்பொரு மத்துறவே" என்று அருளிச்செய்தமையாற் பெறப்படும். ஆயினும், அம்மலங்கள் ஐந்தின் பெயர்களுள் 'ஆணவம்,' 'மாயை,' 'திரோதாயி,' என்பன 'திருவாசகம்' 'திருக்கோவையா'ருள் யாண்டுங் காணப்படுகின்றில. 'ஆணவத்'தை 'மலம்' என்றே அடிகள் வழங்குமாறு முன்னரே காட்டப்பட்டது. ஆகவே, அடிகள் காலத்தில் இம் மூன்று சொற்களும் அம் மலங்களின் பெயர்களாக வழங்கப்படவில்லையென்பது மட்டுந் திண்ணம். அடிகள், திருமூலநாயனார்க்குப் பின்னிருந்தனராயின் இச் சொற்களையெடுத்தாண்டிருப்பர்; அங்ஙனமில்லாமையினாலன்றே அவர் அச் சொற்களைத் தம் நூலகத்து யாண்டும் வழங்கிற்றிலரென்க. அற்றேல், "மலங்கள் ஐந்து" என்று கூறியமட்டில் அவற்றுக்குப் பெயர்களும் அவர் காலத் திருந்தனவாதல் வேண்டுமேயெனின்; வேண்டுந்தான்; ஆயினும், அப்பெயர்கள் அவர்காலத்து நூல்களில் யாண்டுங் காணப்படாமையின், அவை இன்னவைதாமென்பது துணியப்படாதெனவிடுக்க.

இனிச், சைவசமயாசிரியர் நால்வருள் திருவாதவூரடிகள் ஏனை மூவர்க்கும் முன்னிருந்தவராகலின், அவர் அருளிச்செய்த 'திருவாசகம்' 'திருக்கோவையா'ரில், தேவாரச் சொற்பொருள்களும் பாவகைகளும் திருமந்திரத்திலுள்ள சைவசித்தாந்தக் குறியீடுகளுங் காணப்படாவாயின என்ற தொக்கும்; மற்றுத், திருவாசகம் திருக்கோவையாரென்பன, தேவாரந் திருமந்திரம் என்பனவற்றிற்கு முன்னிருந்ததுண்மையாயின், அம் முன்னூல்களிலுள்ள சொற்பொருளமைப்புகளும் பாவகைகளும் இப் பின்னூல்களிற் காணப்

படுதல் வேண்டுமாலெனின்; வேண்டும்; அவை யாவையோ வெனிற் காட்டுதும்:

திருவாசகந் திருச்சதகத்தில் (ருச) உள்ள "மலமாக் குரம்பை" என்பதனோடொத்த "மயலாய மாயக்குரம்பை" என்னுஞ் சொற்றொடர் திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருக்கழிப்பாலைத் திருத்தாண்டகத்தில் (கூ) காணப் படுகின்றது. குயிற்பத்தில் (உ) "ஆர்கலி சூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப், பேரருளின்பம் அளித்த பெருந்துறை மேய பிரானை" எனப் போந்த குறிப்பு, அப்பர் அருளிய திருவெண்காட்டுத் திருத்தாண் டகத்தில் (க0) "மாக்குன் றெடுத்தோன்றன் மைந்தனாகி" எனக் காணப்படுகின்றது. திருக்கோவையார், கக-ஆஞ் செய்யுளில் உள்ள "தேம்பலஞ்சிற்றிடை" என்னுஞ் சொற்றொடர், திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த "பந்துசேர்விரலாள்" என்னுந் திருப்பிரமபுரப் பதிகத்தின் ஈற்றுச்செய்யுளில் "தேம்பு நுண்ணிடையாள்" எனக் காணப்படுகின்றது. திருச்சதகம், ருரு-ஆஞ் செய்யு ளிற் போந்த 'பளகு' என்னுஞ்சொல், சம்பந்தரின் "பெண்ணியலுருவினர்" என்னுந் திருப்பிரமபுரப் பதிகத் தின் ஈற்றுச் செய்யுளிற் "பளகர்கள்" என்பதிற் போந் துளது. திருவுந்தியாரிற் போந்த "வெய்யவன் அங்கி விழுங்கத்திரட்டிய, கையைத்தறித்தான்", "நாமகள்நாசி சிரம்பிரமன்படச், சோமன்முகன் நெரித்து" என்பன, சம்பந்தர் அருளிய "மடன்மலி கொன்றை" என்னுந் திருப்பிரமபுரப் பதிகத்தின் ரு-ஆஞ் செய்யுளிற் "சுருதி யான் றலையும் நாமகண் மூக்குஞ் சுடரவன் கரமுமுன்னி யங்கு, பரிதியான் பல்லும் இறுத்தவன்" எனப் போந் துள்ளமை காண்க. போற்றித் திருவகவலிற் போந்த,

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி"

என்பன, அப்பர் அருளிய திருப்புள்ளிருக்கு வேளூர்த் திருத்தாண்டகத்தின் ரு-ஆஞ் செய்யுளில்,

“மின்னுருவை விண்ணகத்தில் ஒன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த் தாழ்புனலின் நான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத்தஞ்ச
மன்னுருவை”

எனப் போந்தவாறு காண்க. திருக்கோத்தும்பி, அ-ஆஞ் செய்யுளில் உள்ள “என்தாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்” என்பது, சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த “மூப்பதுமில்லை” என்னுந் திருவேள்விக்குடித் திருப்பதிகத்தின் எ-ஆஞ் செய்யுளில் “என்னைப்பெற்ற, முற்றவை தம்மனை தந்தைக்குந் தவ்வைக்குந் தம்பிரானார்” எனப் போந்திருக்கின்றது. “முத்திநெறி யறியாத மூர்க்க ரொடுமுயல்வேனை” என்னும் அச்சோப்பதிகப்பா அமைப்பு, அப்பர் அருளிய “விடகிலே னடிநாயேன் வேண்டியக்கா லியாதொன்றும்” என்னுந் திருவையாற்றுப் பதிகத்திற் காணப்படுகின்றது. திருவண்டப்பகுதியிலுள்ள “பூவி னாற்றம் போன்றுயர்ந்தெங்கும், ஒழிவற நிறைந்து மேவிய பெருமை” என்பது, அப்பர் அருளிய திருவையாற்றுத் திருத்தாண்டகம் “ஆவினிலைந்தும்” என்னுஞ் செய்யுளிற் “பூவினாற்றமாய் நின்றாய் நீயே” எனப்போந்திருக்கின்றது. திருச்சதகத்தும் (கூஅ) பிறவிடங்களிலும் வரும் “அள்ளூறு” என்னுஞ் சொற்றொடர், அப்பரது திருவாலம்பொழிற்பதிகத்தின் ௲-ஆஞ்செய்யுளில் “அள்ளூறி யெம்பெருமானென்பார்க் கென்றும்” என்பதிற் காணப்படுகின்றது. கீர்த்தித்திருவகவலில் “ஐயா றதனிற் சைவனாகி யும்” என்று சிவபிரான் சொல்லப்பட்டாற் போலவே, திருஞானசம்பந்தரது திருவேதிகுடிப்பதிகத்திலும் (க0) “அடியார் கருதுசைவன்” என்று சொல்லப்பட்டிருக்கின்றான். திருக்கோவையாரில் (க) “திருவளர்தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக், குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்கு தெய்வ, மருவளர் மாலையோர்

வல்லி" என்று வந்தாற்போலவே, அப்பரின் திருநல்லூர்த் திருவிருத்தத்தில் (க0) "திருவமர் தாமரை சீர்வளர் செங்கழு நீர்கொ ணெய்தல், குருவமர் கோங்குகு் குராமகிழ் சண்பகங் கொன்றைவன்னி, மருவமர் நீள்கொடி" என்பதும அமைந்திருத்தல் கருதற்பாலது. குலாப்பத்திற் "குமண்டையிடக் குனித்து" (க) என்பதிற்போந்த 'குமண்டை' என்னுஞ்சொல், அப்பர் அருளிய திருநாகேச்சரத் திருக்குறுந் தொகையில் (ரு) "கொண்டவேள்விக் குமண்டையதுகெட" என்னும் அடியிற் போந்திருத்தல் காண்க. யாத்திரைப்பத்து, எ-ஆஞ் செய்யுளிற் "பிற்பாளின்று பேழ்கணித்தால்" என்பதன்கட் போந்த 'பேழ் கணித்தல்' என்னும் அருஞ்சொல், சுந்தரரது திருவிடை மருதூர்த் திருப்பதிகத்தின் முதலில் "உமையாளவள் பேழ்கணிக்க" என்பதன்கட் போந்திருத்தல் நோக்குக. அருட்பத்தின் முதற்கண்ணதாகிய "சோதியே சுடரே" என்னுஞ் சொற்றொடர், அப்பர்தம் திருவாவடுதுறைத் திருக்குறுந்தொகையில் (ங) "சோதியே சுடரே யென்று சொல்லுமே" என்பதன்கட் காணப்படாநிற்கின்றது. திருத்தோணோக்கத்திற் போந்த "பாழுக்கு இறைத் தேன்" (கங) என்னுஞ் சொற்றொடர், திருநாவுக்கரசுகளின் திருக்கடவூர் வீரட்டத் திருநேரிசையில் (சு) "பழியுடையாக்கை தன்னிற் பாழுக்கே நீரிறைத்து" என்னும் அடியில் அமைந்திருக்கின்றது. திருக்கழுக்குன்றப்பதிக இரண்டாம் பாட்டிற் "சட்டநேர்பட வந்திலாத சழக்கனேன்" என்று 'சட்ட' என்னுஞ்சொல் வந்தாற்போலவே, அப்பர்தம் திருவீழிமிழலைத் திருவிருத்த முதற்பாட்டில் "நான் சட்ட உம்மை மறக்கினும்" என அச் சொல் வந்திருக்கின்றது. திருவாசகத்துக்கு முற்பட்ட தமிழ் நூல்களில் யாண்டுஞ் 'சட்ட' என்னுஞ்சொற் காணப் படாமை நினைவிற் பதிக்கற்பாற்று. இங்ஙனமே முன் நூல்களிற் காணக்கிடையாக் 'குருவன்' என்னுஞ் சொல் திருச்சதகத்தில் (சுஅ) "வானோர், குருவனே போற்றி" எனக் காணக்கிடைத்தல் போலவே, அஃது அப்பாருளிய திருவீழிமிழலைத் திருக்குறுந்தொகையில் (ரு) "குருவனே

யடியேனைக் குறிக்கொளே" எனக் காணக்கிடக்கின்றது. திருக்கோவையார், கூ-ஆஞ் செய்யுளிலுள்ள "உணர்ந் தார்க்கு உணர்வரியோன்" என்னுஞ் சொற்றொடர், அப்பர் தந் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் (ரு) "உற்றவத்தை யுணர்ந்தாரும் உணரலாகா வொருசுடரை" என அமைந்திருக்கின்றது. அங்ஙனமே திருவண்டப் பகுதியில் உள்ள "இருமுச்சமயம்" என்னுஞ் சொற்றொடர், மேலைத் திருத்தாண்டக எ-ஆஞ் செய்யுளில் "இரு மூன்று சமயமாகி" என வந்திருத்தல் காண்க. திருக்கோவை யார் உசஉ-ஆஞ் செய்யுளிற் "சுத்திய பொக்கணத் தென் பணி கட்டங்கம்" என்னும் அடியிற்போந்த 'பொக்கணம்' என்னும் அரியசொல், அப்பரின் திருச்சிவபுரத் திருத் தாண்டகத்தில் (உ) "பொக்கன்காண் பொக்கணத்த வெண்ணீற்றன் காண்" என்பதன்கட் காணப்படுதல் அறிக. அங்ஙனமே திருக்கழுக்குன்றப்பதிகத்திற் காணப் படுஞ் 'சழக்கு' என்னும் அருஞ்சொல், அப்பரின் திருக் கொண்டீச்சரப் பதிகத்தில் (எ) "சாணிரு மடங்கு நீண்ட சழக்குடைப் பதிக்கு நாதர்" என்பதிற் போந்திருத்தல் காண்க. திருச்சதகத்தில் (கூரு) வந்துள்ள "அளவறுப் பதற்கரியவன் இமையவர்க்கு அடியவர்க்கு எளியான்" என்னுங் கருத்துத், திருஞானசம்பந்தர் அருளிய திரு விற்குடி வீரட்டப்பதிகத்தில் (சு) "அன்புசெய்வாரவர்க் கெளியவர் அரியவர் அல்லார்க்கு" என்னும் அடியிற் காணப்படுகின்றது. திருப்பொற்சுண்ணத்தில் (கஉ) வந் துள்ள "பொய்யர்தம் பொய்யினை மெய்யர்மெய்யை" என் னுஞ் சொற்பொருள்கள், அப்பர் அருளிய திருப்புகலூர்த் திருப்பதிகத்துச் "செய்யர் வெண்நூலர்" என்னும் பாட்டில் "மெய்யர் மெய்ந்நின்றவர்க்கு அல்லாதவர்க்கென் றும், பொய்யர்" எனப் போந்திருக்கின்றன. கீர்த்தித் திருவகவலிற் காணப்படும் "இந்திரஞாலம்" என்னுஞ் சொற்றொடர், சம்பந்தரது திருவாரூர்ப்பதிகம் "பாடலன் நான்மறையன்" என்பதன் கo-ஆஞ்செய்யுளில் "இந்திர ஞாலமொழிந்து" எனக் காணப்படுகின்றது. திருத்தோ ணோக்கத்தில் (கூ) போந்த "பாழுக்கிறைத்தேன்" என்

பது, அப்பரின் "படுகுழிப்பவ்வத்து" என்னுந் திருவாரூர்த் திருநேரிசையில் (எ) "பயிர்தனைச் சுழியவிட்டுப் பாழ்க்குநீ ரிறைத்து" எனப் போந்துள்ளது. திருச்சதகத்திற் (௬0) போந்த "மத்திடுதயிராகி" என்னும் உவமை, மேலைத் திருநேரிசையில் (கூ) "மத்துறு தயிரேபோல" எனப் போந்திருக்கின்றது. திருப்பொற் சுண்ணத்திற் (௨0) காணப்படுவதாகிய "சோதியுமாய் இருளாயினார்க்கு" என்னுஞ் சொற்பொருள்கள், அப்பரின் "பாதித்தன் றிருவுருவில்" என்னுந் திருவாரூர்த் திருத்தாண்டகத்தில் (சு) "சோதியாய் இருளாகி" எனக் காணப்படாநிற்கின்றன. திருச்சதகத்தில் இசைக்கப்பட்டுள்ள 'உழிதரு' (எ), 'பளகு' (௩௫) என்னும் அருஞ்சொற்கள், அப்பரது "பொய்ம்மாயப் பெருங்கடலில்" என்னுந் திருவாரூர்த் திருத்தாண்டகச் செய்யுளிலும், அதன் மூன்றுஞ் செய்யுளிலும் இயைக்கப்பட்டிருக்கின்றன. திருச்சதகத்தின் செய்யுளாகிய,

"ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில்
தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே."

என்பதன் சொற்பொருள்களோடு, அப்பர்தந் திருவாரூர்த் தாண்டகச் செய்யுளாகிய,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடி."

என்பதன் சொற்பொருள்கள் பெரிதொத்து நிற்றல் காண்க; அங்ஙனமே, மேலைத் திருத்தாண்டகப் பதிகத்

தின் ஈற்றயற் செய்யுளிலுள்ள "ஏசற்று" என்னுஞ் சொல்லும், ஈற்றுச் செய்யுளிலுள்ள "புறம்புறமே திரியாதே" என்னுஞ் சொற்றொடரும், திருவாசகக் கோயின் மூத்த திருப்பதிகத்தின் ரு-ஆஞ்செய்யுளிலும், பிடித்த பத்தின் கூ-ஆஞ்செய்யுளிலும் முறையே முன்வழங்கப்பட்டிருக்கின்றன. திருத்தெள்ளேணம் ரு-ஆஞ்செய்யுளிலுள்ள "அருமந்ததேவர்" என்னுஞ் சொற்றொடர், அப்பர் தந் திருவாரூர்த் தாண்டகச் செய்யுளாகிய "பிரமன்றன் சிரமரிந்த" என்பதன்கண் "அருமந்த தேவர்க்கரசே போற்றி" எனப் போந்திருக்கின்றது. திருக்கோவையாரின் ௩சரு-ஆஞ்செய்யுளிற் கூறப்பட்ட "பேய் வயினும் அரிதாகும் பிரிவு" என்பது, சுந்தரர் அருளிய "மீளாவடிமை" என்னுந் திருவாரூர்த் திருப்பதிகத்தின் கூ-ஆஞ்செய்யுளிற் "பேயோடேனும் பிரிவொன்று இன்னாது என்பர்" என வந்திருக்கின்றது. திருவேசறவு முதற்செய்யுட்கண் உள்ள "கரும்புதரு சுவை" என்பதனோடு, அப்பரின் திருவாரூர்த்தாண்டகச் செய்யுளாகிய "பொருங்கை மதகரியுரிவை" என்பதிற் காணப்படுங் "கரும்புதரு கட்டி" என்பது ஒத்திருத்தல் ஓர்க. திருக்கோவையார், ௩கஉ-ஆஞ்செய்யுளிற் போந்த "மூப்பான் இளையவன் முன்னவன் பின்னவன்" என்னுஞ் சொற்றொடர், திருநாவுக்கரசுகளின் திருவலிவலத் தாண்டகத்தில் (அ) "முன்னவன்காண் பின்னவன்காண் மூவாமேனி முதல்வன்காண்" என்பதில் இயைந்து நிற்றல் காண்க. நீத்தல் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள "எய்ப்பில் வைப்பை" (௩கூ) என்னுஞ் சொற்றொடருஞ், 'சோத்து' (சச) என்னுஞ் சொல்லும் சுந்தரரது திருவலிவலத் திருப்பதிகத்தில் "நல்லடியார்மனத்து எய்ப்பினில் வைப்பை" (உ) என்றும், "தேவர்கள் போற்றுஞ், சோத்தானை" (ச) என்றும் முறையே தொடுக்கப்பட்டிருத்தல் கண்டுகொள்க. திருக்கோவையாரில் (உஎ) உள்ள "ஆலத்தினால் அமிர்தாக்கியகோன்" என்பதுந், திருச்சாழலில் (கூ) உள்ள "தன்பெருமை தான்அறியாத் தன்மையன்" என்பதுஞ்,

சம்பந்தரது "பொங்குவெண் மணற்கானல்" என்னுந் திருமறைக்காட்டுத் திருப்பதிகத்தில் "வேகந்தெழ வாங்கே வெருவொடும் இரிந்தெங்குமோட, ஆகந்தன்னில் வைத்து அமிர்தம் ஆக்குவித்தான்" (எ) என்பதன்கண்ணும், "தக்கன்வேள்வியைத் தகர்த்தோன் தனதொரு பெருமையை ஓரான்" என்பதன்கண்ணும் முறையே அமைந்திருத்தல் கண்டுகொள்க. திருக்கோவையார், உக-ஆஞ்செய்யுளிற் காணப்படுங் "குஞ்சரங் கோளிழைக்கும்" என்னுஞ் சொற்றொடர், சுந்தரரது "கோத்திட்டையுங் கோவலும்" என்னுந் திருப்பரங்குன்றத் திருப்பதிகத்தில் (கூ) "கோளாளிய குஞ்சரங் கோளிழைத்தீர்" எனக் காணப்படுகின்றது. குழைத்தபத்து, எ-ஆஞ் செய்யுளில் "செடிசேர் உடலைச் சிதையாதது எத்துக்கு" என்னும் அடிக்கட்போந்த "எத்துக்கு" என்னுஞ்சொல், சுந்தரர்தந் திருமுருகன்பூண்டித் திருப்பதிகத்தில் "எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானிரே" என ஒவ்வொரு பாட்டினீற்றிலும் போதரல் காண்க. கண்டபத்து, ரு-ஆஞ்செய்யுளிலும் பிறண்டுந் தொடுக்கப்பட்டுள்ள 'ஆதம்' என்னுஞ் சொல், அப்பரது திருவதிகை வீரட்டானத் திருநேரிசையாகிய "நம்பனே எங்கள்கோவே" என்னும் பதிகத்தில் (ரு) "உழிதரும் ஆதனேனை" என்பதன்கண் அமைந்திருக்கின்றது. போற்றித் திருவகவலின் கஙக-வது அடியாகிய "தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி" என்பது, அப்பரது, "எல்லாஞ் சிவனென நின்றாய் போற்றி" என்னுந் திருவதிகை வீரட்டானத் திருத்தாண்டகத்தில் (அ) "துஞ்சாப் பலிதேருந் தோன்றால் போற்றி, தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி" என்பதன்கண் முழுதும் வந்திருக்கின்றது; இது பெரிதுங் கருத்திற் பதிக்கற்பாலதாகும். குயிற்பத்தின் க௦-ஆஞ் செய்யுளின் முதற்கண்ணதாகிய "கொந்தணவும் பொழில்" என்னுஞ் சொற்றொடர், சுந்தரரது திருமுதுகுன்றத் திருப்பதிகத்தில் (எ) "கொந்தணவும் பொழில்சூழ் குளிர் மாமதின் மாளிகைமேல்" என்பதன்கண் இயைந்து நிற்கின்றது. திருக்கோவையார், கக-ஆஞ் செய்யுளின் முதற்

கண்ணிற்குங் "கூம்பலங் கைத்தலத்தன்பர்" என்னுஞ் சொற்றொடர், அப்பரது திருக்கச்சியேகம்பத் திருவிருத்த மாகிய "ஓதுவித்தாய்முன்" என்பதன் அ-ஆஞ்செய்யுளிற் "கூம்பலைச் செய்த கரதலத்தன்பர்கள்" எனப் போந்துள் ளமை காண்க. போற்றித் திருவகவலில் (ஙச) வந்துள்ள "ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்" என்பதனோடொப்பச், சம்பந்தர் தந் திருவோத்தூர்த் திருப்பதிகத்தில் (உ) "இடையீர் போகா இளமுலையாளை" என்னுஞ் சொற் றொடர் அமைந்திருத்தல் நினைவுகூரற்பாலது. திருக் கோவையார் ங-ஆஞ் செய்யுளிற் போந்த "பகல்குன்றப் பல்லுகுத்தோன்" என்னுஞ் சொற்றொடர்போற், சுந்தர ரது திருக்காளத்திப் பதிகத்தில் (ங) "பகலவன் பல்லுகுத் தவனே" என்பதமைந்திருத்தல் காண்க. திருவம்மானை, ககூ-ஆஞ் செய்யுளில் வந்துளதாகிய "வானோர் அறியா வழி" என்னுஞ் சொற்றொடர், சுந்தரர்தம் திருக்கச்சூ ராலக் கோயிற் றிருப்பதிகத்தில் (ங) "வானோர் அறியா நெறியானே" என வந்திருத்தல் அறிக. திருப்புலம்பலிற் (ங) காணப்படுங் "குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா" என்னுஞ் சொற்றொடர், அப்பர் அருளிய 'திருவங்கமாலை' யில் (க0) "குற்றாலத்துறை கூத்தன்" எனத் தொடுக்கப் பட்டிருக்கின்றது. திருப்பூவல்லியின் ங-ஆஞ் செய்யுளி லுள்ள "நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட் படுத்து" என்பதுபோல், அப்பரது "மருளவா மனத்த னாகி" என்னுந் தனித் திருநேரிசையிலுள்ள (சு) "நாயினுங் கடைப்பட்டேனை நன்னெறி காட்டி யாண்டாய்" என்பது அமைந்திருக்கின்றது. திருச்சதகம், சகூ-ஆஞ் செய்யுளி லுள்ள "எட்டினோ டிரண்டும் மறியேனையே" என்பதனோ டொப்ப, அப்பர்தம் பாவநாசத் திருக்குறுந்தொகையில் (ங) "எட்டுமொன்று மிரண்டும் அறியிலென்" என்பது பாடப்பட்டிருத்தல் கண்டுகொள்க. திருத்தோணோக்கத் தின் ரு-ஆஞ் செய்யுளாகிய,

"நிலன்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்."

என்பதன் சொற்பொருள்கள், அப்பர் அருளிய,

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
 இயமான னாய்எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
 யாகாச மாய்அட்ட மூர்த்தியாகி."

என்னும் அந்நின்றதிருத்தாண்டகத்தில் இயைக்கப்பட்டிருத்தல் காண்க. திருவெம்பாவையில் (கக) உள்ள "எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோ ரெம்பாவாய்" என்பதன்கட் போந்த முதற்சொற்றொடர், அப்பரது "அப்பன் நீ அம்மை நீ" என்னுந் தனித் திருத்தாண்டகப் பதிகத்தில் (உ) "எங்கெழிலென் ஞாயிறு எளியோமல்லோம்" என முழுதுந் தொடுக்கப்பட் டிருக்கின்றது. திருச்சதகத்தின் கூ௦-ஆஞ் செய்யுளாகிய,

"தேவர்கோ அறியாத தேவ தேவன்
 செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
 மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
 யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவன்அடியார் அடியா ரோடும்
 மேன்மேலுங் குடைந்தாடி ஆடு வோமே."

என்பதன் சொற்பொருள்கள், திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த,

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
 நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
 இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
 சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
 கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே."

என்பதன்கண்ணுஞ்,

"சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோமல்லோஞ்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்ரேம்."

என்பதன்கண்ணும்,

"மூவுருவின் முதலுருவாய் இருநான்கான மூர்த்தியே."

என்பதன்கண்ணும் புகுந்தமைந்திருத்தல் காண்க.

இங்ஙனமே திருவாசகந் திருக்கோவையாரில் முதன் முதற் காணப்படுங் 'கட்டளைக் கலித்துறை' என்னும் பாவும், தேவாரத்தில் 'திருவிருத்தம்' என்னும் பெயராற் காணப்படுகின்றது. இப்பாவானது பண்டைக் கலிப்பா வகையினின்று தோன்றிய தொன்ருயினுங், கி. பி. மூன்ரும் நூற்ருண்டிற்கு முற்பட்ட பழைய செந்தமிழ் நூல்களில் இஃது ஒருசிறிதுங் காணப்படுகின்றிலது. இது முதன்முதற் காணப்படுவதெல்லாங், கி. பி. மூன்ரும் நூற்ருண்டின் துவக்கத்தில் உண்டான திருவாசகந் திருக்கோவையாரிலேயாம். இப்பா, தேவாரத்தில் 'திருவிருத்தம்' என்னும்பெயரால் வழங்கப்பட்டிருத்தலை உற்று நோக்குமிடத்து, இக்காலத்தில் மிகுதியாய் வழங்கிவரும் விருத்தப்பாக்களெல்லாம் இதனின்றே பிறந்து பல திறமாய்ப் பெருகலாயினவென்பது புலனும். இது பண்டைக்காலக் கலிப்பாவுக்கும் பின்றைக்கால விருத்தப் பாவுக்கும் இனமாய் இடைப்பட்டதொரு காலத்தில் உண்டாயதென்பது, முன்னும் பின்னும் அதற்கு வழங்கிய பெயர்களை ஆராயுமுகத்தால் நன்கு உணரப்படும். மாணிக்க வாசகர் காலத்தே அதற்கு வழங்கிய 'கட்டளைக்கலித் துறை' என்னும்பெயர், அது கலிப்பாவோடு இனமுடைத் தாதலைக் காட்டும்; அப்பர் சம்பந்தர் காலத்தே அதற்கு வழங்கிய 'திருவிருத்தம்' என்னும்பெயர், அது விருத்தப் பாவோடு இனமுடைத்தாதலைக் காட்டும். கலிப்பா வழக்கம் பண்டைநாளில் மிக்கிருந்து பின்றைநாளில் அருகிப் போயிற்று. விருத்தப்பா வழக்கம் பண்டைநாளிற் சிறிதும் இல்லையாய்ப் பின்றைநாளிற்ருன் மிக்குப்பெருகுவதா யிற்று. இவ்விரண்டிற் கலிப்பா வழக்கம் அற்றுப்போயது கி. பி. இரண்டாம் நூற்ருண்டின் இறுதியிலேயாம்.

விருத்தப்பா வழக்கம் மிக்குப்பெருகலானது கி. பி. ஆரும் நூற்ருண்டு முதலேயாம். இவ்விரண்டு வரம்புக்கும் இடைப் பட்ட காலத்திலோ, கலிப்பாவோடு ஒட்டி அதனிற் ரோன்றிய 'கட்டளைக்கலித்துறை'யும் அக் கட்டளைக்கலித் துறையோடு ஒட்டி அதனிற்ரோன்றிய விருத்தப்பாவகை களும் ஒன்றன்பின்ஞென்ருய்த் தோன்றி உருப்பெற லாயினவென்பது ஓர்ந்துணரப்படும். கி. பி. ஆரும் நூற் ருண்டில் 'அவநிசூளாமணிமாறன்' காலத்தில் தோலா மொழித்தேவரால் இயற்றப்பட்ட சூளாமணி என்னுஞ் செந்தமிழ்க்காப்பியத்தை உற்று நோக்குதலால், அஞ் ஞான்று பெருகிய விருத்தப்பாக்களின் வகைகள் செவ் வனே புலனும். மாணிக்கவாசகர் அருளிய 'திருவாசகந்', 'திருக்கோவையார்' என்பனவற்றை உற்றுநோக்குதலாற், பண்டைக் கலிப்பாவிற்கு உறவான 'கட்டளைக்கலித் துறைப்' பாட்டுகள் மிகுதியாயும், அவற்றினின்று தோன்றிய 'விருத்தப்' பாட்டுகள் குறைவாயும் அவர் காலத்து வழங்கினமை தெளியப்படும். எனவே, மாணிக்க வாசகப் பெருமானிருந்த காலம் பண்டைத்தமிழ் வழக்கத் தொடு பெரிதுந்தொடர்புடையதாய் அதனே அணுகி நிற்றலுஞ், சூளாமணிக்காப்பியந் தோன்றிய ஆரும் நூற் ருண்டு, பின்றைத் தமிழ் வழக்கத்திற்குத் தோற்றுவாய் செய்து பழைய தமிழ் வழக்கத்தினின்று பெரிதகன்று நிற்றலுந் தெற்றென விளங்காநிற்கும். இம்முறையால் ஆராய்ந்து நோக்குமிடத்துந் திருவாதவூரடிகளது காலம், பழைய தமிழ் வழக்கிற்கு அணுக்கமாய் நிற்கும் மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதிக்கட்படுதல் துணியப்படும். அற்றேல், மூன்ரும் நூற்ருண்டிற்கும் ஆரும் நூற்ருண் டிற்கும் இடைப்பட்டதொரு காலத்தே அடிகளிருந்தா ரென உரையாமல், மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதியிலே தான் அவரிருந்தாரென அத்துணை வரையறுத்துச் சொல்லுதற்குச் சான்றென்னையெனின்; கி. பி. உஅ௦-ஆம் ஆண்டில் வடுகக்கருநாடர் வடக்கிருந்து படையெடுத்துப் போந்து, வரகுணபாண்டியற்குப் பேரனுகக் கருதப்படும் அக்காலப் பாண்டியனை வென்று, அவனது அரசை

வெளிக் கொண்டமையும், அதுமுதல் ஐந்தாம் நூற்றாண்டின் நடுவரையில் மதுரையை ஆண்டோர் அவ்வடுகக் கருநாடரேயாதலும், ஐந்தாம் நூற்றாண்டின் ஈற்றில் இயற்றப்பட்டதாகிய 'கல்லாட' நூல், இவ்வடுகக் கருநாடரது ஆட்சியினைக் கூறுதலோடு மாணிக்கவாசகப் பெருமான்பொருட்டு இறைவன் நரிகளைப் பரிகளாக்கிய திருவிளையாடலையுங் குறிப்பிடுதலின் அவ்விரு நிகழ்ச்சிகளும் ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிக்குமுன் நிகழ்ந்தனவாதலும், பழைய பாண்டியமரபு மூன்றும் நூற்றாண்டின் ஈற்றில் அற்றுப்போனமையின் மாணிக்கவாசகர் பாண்டியன்மாட்டு அமைச்சராயிருந்தது கி. பி. உஅ0-ஆம் ஆண்டுக்குப் பிற்பட்டு நிகழ்தல் செல்லாமையும் மேலே உசுச-ஆம் பக்கம் முதல் உஎசு-ஆம் பக்கம் வரையில் வைத்து விரித்து விளக்கியிருக்கின்றேம். ஆண்டுக் காட்டிய சான்றுகளே ஈண்டைக்கும் ஒக்குமாதல் கண்டுகொள்க. இவ்வாற்றால் திருவாதவூரடிகள் கி. பி. உஅ0-ஆம் ஆண்டுக்குப்பின் இருந்தாராதல் ஒருவாற்றானும் ஏலாதெனை உணர்தல் வேண்டுமென்பது.

இனிச், சிவபிரான்றிருக்கோயில்கள் பண்டைநாளில் எத்துணை இருந்தன, பின்றைநாளில் எத்துணை இருந்தன என ஆராய்ந்து பார்க்கும் முகத்தாலும் மாணிக்கவாசகப் பெருமான் வயங்கியகாலம் ஏனைமூவர்க்கும் முன்னர்த்தாதல் காட்டுதும். கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்சென்றகாலத்தில் இயற்றப்பட்ட தனித்தமிழ்நூல்களை உற்றுநோக்குவாரெவர்க்கும், அஞ்ஞான்று காவிரிப்பூம்பட்டினம், கச்சி, உறையூர், ஆலவாய், பரங்குன்று, வஞ்சி முதலான தமிழ்வேந்தர்தந் தலைநகர்களிலும் ஏனைச்சில ஊர்களிலுஞ் சிவபிராற்குச் சிற்சில திருக்கோயில்களே இருந்தமை தெற்றெனை விளங்காநிற்கும். கி. பி. முதல் நூற்றாண்டின் ஈறுவரையில் இருந்தவராக மேலே ருஎசு, ருஅ0-ஆம் பக்கங்களிற் பெறப்பட்ட 'களவழி' பாடிய 'பொய்கையார்' காலத்தவனை சோழன்செங்கணனே முதன்முதற் பல திருக்கோயில்கள் சிவபிரானுக்கு அமைத்தோனவன்.

இது, திருமங்கையாழ்வார் " இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட, திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்தகோயில்" எனப் பெரியதிருமொழி ஆறும் பத்தின் அ-ஆஞ் செய்யுளிற் கூறுமாற்றானும், இச் சோழன் 'கோச்செங்கணனே' யாவனென்பது நன்கினிது விளங்க அப் பத்தின் முதற் செய்யுளிற் "செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்த கோயில்" என அவன் பெயரை அவர் தெரித்துரைக்கு மாற்றானும் பெறப்படும். கி. பி. முதல் நூற்றாண்டின் ஈற்றிலிருந்த இக் கோச்செங்கட்சோழன் சிவபெருமானுக்கு எழுபது திருக்கோயில்கள் அமைப்பித்தமை பற்றியே அப்பர் சம்பந்தர் தேவாரத் திருப்பதிகங்களிலும் இவ் வேந்தன் உயர்த்துப் பேசப்படுகின்றான். சோழநாட்டில் நூற்றுத்தொண்ணூறு சிவபிரான் திருக்கோயில்களும், தொண்டைநாட்டில் முப்பத்திரண்டு திருக்கோயில்களும், பாண்டிநாட்டிற் பதினான்கு திருக்கோயில்களும், சேரநாடு கொங்குநாடுகளில் எட்டுத் திருக்கோயில்களும், நடுநாட்டில் இருபத்திரண்டு திருக்கோயில்களுந் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்றனவாயிருத்தலை உற்றுநோக்குமிடத்துச், சோழவேந்தர்களே சிவபிரான் திருக்கோயில்கள் எடுப்பித்தலில் முதல் நின்றவர்களென்பது புலப்படாநிற்கும். சோழவேந்தருள்ளுங் கோச்செங்கட்சோழனே முதன்முதல் எழுபது சிவபிரான் திருக்கோயில்கள் அமைப்பித்தோனென்பது திருமங்கையாழ்வார் கூறுமாற்றால் இனிது விளங்குதலின், அவனுக்குப்பின் அவன் மரபில்வந்த சோழமன்னர்களே காலங்கடோறும் புதிய புதியவாய்ச் சிவபிரான் திருக்கோயில்கள் அமைப்பித்து அவற்றின் தொகையைப் பெருக்கி வந்தனரென்பதும் நன்கு விளங்காநிற்கும். எனவே, கோச்செங்கண்ணான் இருந்த முதல் நூற்றாண்டுக்குமுன் சிவபிரான் திருக்கோயில்கள் மிகச் சிலவே இத் தமிழ்நாட்டின்கண் இருந்தமையும், அவனுக்குப்பின் அவை எழுபதுக்குமேற் பெருகினமையும், அப்பர் சம்பந்தர் இருந்த ஆறும் ஏழாம் நூற்றாண்டில் அவை நூற்றுக்கணக்காய்ப் பெருகிவிட்டமையுந்தாமே போதரும்.

இனி, மாணிக்கவாசகப்பெருமான் ஏனை மூவர்க்கும் பின்னிருந்த துண்மையாயின், அவர், தேவாரம் பெற்றன வாயிருக்கும் நூற்றுக்கணக்கான திருக்கோயில்களில் ஒரு நூற்றைம்பதாவது குறியாதுவிடார். கீர்த்தித்திருவகவலில், அவர்தங் காலத்திருந்த திருக்கோயில்களை யெல்லாஞ் சிறிதுஞ் சலியாது எடுத்துக்கூறிச் செல்லக் காண்டலின், அவர் அவை எத்துணைமிகுந்திருப்பினும் அவை தம்மை எடுத்துரைத்தற்கட் பின்னிடாரென்பது, அவர் அவையிற்றை யெடுத்துமொழியும் வேட்கைப்பெருக்கால் இனிதுணரப்படும். மற்று, அவர்தாம் அருளிச்செய்த திருவாசகந் திருக்கோவையாரென்னும் அருமைத் திருநூல்களிற் குறிப்பிட்டவையெல்லாம் ஐம்பத்துநான்கு திருக்கோயில்களேயாம். அவை யாவையோவெனில், அண்ணாமலை, அம்பலம் அல்லது தில்லை, அரிகேசரி, அவிநாசி, ஆரூர், ஆனைக்கா, இடைமருதூர், ஈங்கோய்மலை, உத்தரகோசமங்கை, ஏகம்பம், ஐயாறு, ஒற்றியூர், ஓரியூர், கச்சி, கடம்பூர், கடம்பை, கல்லாடம், கவைத்தலை, கழுக்குன்று, கழுமலம, காளத்தி, குவைப்பதி, குற்றாலம், கூடல், கோகழி, சந்திரதீபம், சாந்தம்புத்தூர், சிராப்பள்ளி, சிவநகர், சிவபுரம், சிற்றம்பலம், சுழியல், திருவாஞ்சியம், துருத்தி, தேவூர், நந்தம்பாடி, பஞ்சப்பள்ளி, பட்டமங்கை, பரங்குன்று, பராய்த்துறை, பழனம், பனையூர், பாண்டூர், பாலை, புறம்பயம், பூவணம், பூவலம், பெருந்துறை, மகேந்திரம், மதுரை, மூவல், வாதவூர், வெண்காடு, வேலம்புத்தூர் என்னும் ஐம்பத்துநான்கேயாகும். மற்று, அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் ஆசிரியர் மூவரின் தேவாரத் திருப்பதிகங்கள்பெற்ற திருக்கோயில்கள் இப்போது 'திருவிடைவாயுஞ்' சேர்த்து இருநூற்று எழுபத்தைந் தாகின்றன. இவ்வளவு திருக்கோயில்களும் உள்ள கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டில் திருவாதவூரடிகள் இருந்தனராயின், அவற்றுள் அரைப்பங்காயினுங் கூறுதுவிடுவரோ? மற்று, அவராற் குறிப்பிடப்பட்ட ருச-திருக்கோயில்களுந், தேவாரம்பெற்ற திருக்கோயிற்றொகையில் ஐந்திலொரு கூறுகவே யிருக்கக் காண்டலால், மாணிக்கவாசகர் இருந்த

காலத்திற் சிவபிரான் திருக்கோயில்கள், தேவாரகாலத்திலிருந்தனபோல் மிகுதியாயில்லையென்பதே தேற்றமாம். முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிற் கோச்செங்கட்சோழுறாற் கட்டுவிக்கப்பட்ட எழுபது திருக்கோயில்களும் வேறு சிலவுமே அடிகளிருந்த மூன்றாம் நூற்றாண்டிலிருந்தனவென்பதூஉம், அவைதம்முள் ருச-திருக்கோயில்களே அடிகளாற் குறிப்பிடப்பட்டனவென்பதூஉங் கருத்திற் பதிக்கற்பாலனவாகும். இவ்வாற்றானும் அடிகளிருந்தது மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியேயாதல் காண்க.

இனிச், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த 'திருத்தொண்டத்தொகை'யிற் சொல்லப்பட்ட தொண்டர்களுள், மாணிக்கவாசகராற் குறிப்பிடப்பட்ட தொண்டர்கள் எத்துணைபேர் அப்பர் சம்பந்தராற் குறிப்பிடப்பட்ட தொண்டர்கள் எத்துணைபேர் என ஆராயுமுகத்தானும், மாணிக்கவாசகர் ஏனைமூவர்க்கு முற்பட்டவராதல் காட்டுதும்: திருவாசகந் திருக்கோத்தும்பி, ச-ஆஞ் செய்யுளிற் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" எனவுந், திருத்தோணோக்கம் ந-ஆஞ் செய்யுளிற் "செருப்புற்ற சீரடி வாய்கலசம் ஊன் அமுதம், விருப்புற்று வேடனார்சேடறிய" எனவுங் கண்ணப்பநாயனார் திருவாதவூரடிகளால் இருகாற் குறிப்பிடப்பட்டுள்ளார். திருத்தோணோக்கம், எ-ஆஞ் செய்யுளில் மட்டுந்,

"தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதக மேசோறு பற்றினவா தோணோக்கம்."

எனச் சண்டீசநாயனார் அவரால் ஒருகாற் குறிப்பிடப்பட்டுள்ளார். இவ்விரு தொண்டர்க்குமேல் வேறெவரும் அடிகளால் வேறெங்கும் குறிக்கப்படவில்லை. இனித், திருவெம்பாவை, எ-ஆஞ் செய்யுளாகிய,

"ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர

நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்."

என்பதன்கட் காரைக்காலம்மையார் குறிக்கப்பட்டன ரெனச் சிலர் கூறுப. இத் திருப்பாட்டிற் காரைக்காலம்மையாரைப் பற்றிய குறிப்பு ஒரு சிறிதுங் காணப்படாதாகவும், இதன்கட் சொல்லப்பட்ட பெண்பாலார் காரைக்காலம்மையாராகவே யிருக்கவேண்டுமெனக் கொண்டாரது கோளுக்குச் சான்றேதுங் காணாமையின், அவருரை கொள்ளற்பாலதன்றென விடுக்க. மேலைச்செய்யுளிற் சொல்லப்பட்ட பெண்பாற்றொண்டர் மாணிக்கவாசகப் பெருமான்றன் அருமைத் திருமனைவியாராகவே யிருக்கவேண்டுமென்பதனை வரலாற்றிற் கூறிப்போந்தாம். ஆகவே, மாணிக்கவாசகராற் குறித்துச்சொல்லப்பட்ட திருத்தொண்டர் கண்ணப்பருஞ் சண்டீசரும் ஆய இருவரேயல்லாற் பிறரில்லையெனத் துணிந்துகொள்க.

இனித், திருநாவுக்கரசுநாயனாரால் தாம் அருளிச்செய்த திருப்பதிகங்களுட் குறிப்பிடப்பட்ட திருத்தொண்டர் இத்துணையரென்பது ஆராயற்பாற்று. திருக்கழிப்பாலைத் திருத்தாண்டகம், கூ-ஆஞ் செய்யுளிலுந், திருச்சாய்க்காட்டுத் திருநேரிசை அ-ஆஞ் செய்யுளிலுந், திருக்குறுக்கை வீரட்டப்பதிகம், எ-ஆஞ் செய்யுளிலுந், திருமழபாடித் திருத்தாண்டகம், கூ-ஆஞ் செய்யுளிலும், பொது, "ஆமயந்தீர்த்து" என்னுஞ் செய்யுளிலுங் கண்ணப்பநாயனார் ஐந்துமுறை குறிக்கப்பட்டிருக்கின்றார். திருச்சாய்க்காட்டுத் திருநேரிசை, ௩-ஆம் பாட்டிலுந், திருக்குறுக்கை வீரட்டத்திருப்பதிகம், ச-ஆம் பாட்டிலுந், திருநாரையூர்த்திருப்பதிகம், அ-ஆம் பாட்டிலுந், திருக்குடந்தைக் கீழ்க்கோட்டப்பதிகம், அ-ஆம் பாட்டிலுங் கோச்செங்கோட்சோழ நாயனார் நான்குமுறை குறிப்பிடப்பட்டுள்ளார்.

திருச்சாய்க்காட்டு நேரிசை, கூ-ஆஞ் செய்யுளிலும், திருக் குறுக்கை வீரட்டப்பதிகம், ௩-ஆஞ் செய்யுளிலும், திருக் குடந்தைக் கீழ்க்கோட்டப்பதிகம், கூ-ஆஞ் செய்யுளிலும், திருவாரூர், "ஒருவனு யுலகேத்த நின்றநாளோ" என்னும் திருத்தாண்டகத்தின் ௧௦-ஆஞ் செய்யுளிலும், திருச்சேறைப் பதிகத்தின் ௫-ஆஞ் செய்யுளிலுஞ் சண்டீச நாயனார் ஐந்து முறை சொல்லப்பட்டிருக்கின்றார். திருக்குறுக்கை வீரட் டத் திருப்பதிகம், கூ-ஆஞ் செய்யுளிலும், திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் மூன்றும் பத்தின், அ-ஆஞ் செய்யுளிலுஞ் சாக்கிய நாயனார் இரண்டுமுறை குறிக்கப்பட்டிருக்கின்றார். திருக்கழிப்பாலைத் திருத்தாண்டகம், எ-ஆஞ் செய்யுளிலும், திருக்குறுக்கை வீரட்டத்திருப்பதிகம், கூ-ஆஞ் செய்யுளிலுங் கணம்புல்ல நாயனார் இரண்டுமுறை சுட்டப்பட்டிருக் கின்றார். திருப்பழனத் திருப்பதிகம், ௧௦-ஆஞ் செய்யுளில் அப்பூதி நாயனார் ஒரே ஒருமுறை சொல்லப்பட்டிருக் கின்றார். திருவாரூர்த் திருவிருத்தம் "வேம்பினைப் பேசி" என்பதன்கண் நமிநந்தியடிகள் ஒரே முறை குறிப்பிடப்பட் டிருக்கின்றார். ஆக, அப்பரது தேவாரத்தின்கட் குறிக்கப் பட்ட நாயன்மார்கள்: கண்ணப்பர், கோச்செங்கட் சோழர், சண்டீசர், சாக்கியர், கணம்புல்லர், அப்பூதி, நமி நந்தியடிகள் என்னும் எழுவருந், திருஞானசம்பந்தப் பெரு மானும் என எண்மர் ஆவர்.

இனித், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத்திருப்பதிகங்களுட் குறிப்பிடப்பட்ட திருத் தொண்டர் இத்துணையரென்பதனை ஆராய்வாம். திருப் பிரமபுரம், "ஈண்டுதுயிலமர்" என்னும் திருப்பதிகத்தி லும், திருவானைக்காத் திருப்பதிகம், ௩-ஆம் பத்தின் எ-ஆஞ் செய்யுளிலும், திருக்காளத்தித் திருப்பதிகம் ௨-ஆம் பத்தின் ௪-ஆஞ் செய்யுளிலும், தென்குடித்திட்டைப் பதிகம் எ-ஆஞ் செய்யுளிலுங் கண்ணப்பர் நான்குமுறை சுட்டப்பட்டிருக்கின்றார். திருச்சேய்ஞலூர்த் திருப்பதிகம் கூ-ஆம் பாட்டிலும், திருவானைக்காத் திருப்பதிகம், முதற் பத்தின் ௫-ஆஞ் செய்யுளிலும், திருவைகன்மாடக் கோயிற்

பதிகம், உ, ச-ஆம் பாட்டுக்களிலுந், திருவம்பர்ப் பெருந் திருக்கோயிற்பதிகம், க, உ, ரு-ஆம் பாட்டுக்களிலுந், திரு வரிசிற்கரைப்புத்தூர்ப்பதிகத்தின் எ-ஆம் பாட்டிலுந்; திருத்தண்டலை நீணெறிப்பதிகம், கூ-ஆம் பாட்டிலுங் கோச் செங்கட்சோழர் ஆறுமுறை கூறப்பட்டிருக்கின்றார். திருச் சேய்ஞலூர்ப்பதிகம், எ-ஆஞ் செய்யுளிலுந், திருக்கோளிலிப் பதிகம், ச-ஆஞ் செய்யுளிலுந், திருவாலவாய் "ஆலநீழ லுகந்த" என்னும் பதிகம் ரு-ஆஞ் செய்யுளிலுந், திருக் கயிலாயப் பதிகம் உ-ஆம் பத்தின் க0-ஆஞ் செய்யுளிலுஞ் சண்டீசர் நான்குமுறை குறிப்பிடப்பட்டுள்ளார். திருக் கலிக்காமூர்ப் பதிகம், எ-ஆஞ் செய்யுளிற் குங்குலியக்கலயர் ஒருகாற் குறிக்கப்பட்டிருக்கின்றார். திருவரிசிற்கரைப் புத் தூர்ப் பதிகம் எ-ஆஞ் செய்யுளிற் புகழ்த்துணையார் ஒருகாற் சொல்லப்பட்டுளார். திருச்செங்காட்டங்குடித் திருப்பதிகத்திற் சிறுத்தொண்டர் குறித்துச் சொல்லப்பட் டிருக்கின்றார். திருச்சாத்தமங்கைத் திருப்பதிகத்தில் திருநீலநக்கர் கூறப்பட்டுள்ளார். திருக்கோளிலிப்பதிகத் தில் நமிநந்தியடிகள் சுட்டப்பட்டிருக்கின்றார். திருவால வாய் "மானி னேர்விழி மாதராய்" என்னுந் திருப்பதிகத் திலும், "மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை" என்னும் பதிகத்திலும் மங்கையர்க்கரசியார் இருகாற் சொல்லப்பட் டிருப்பதோடு, பிற்பதிகத்தின் உ-ஆஞ் செய்யுளிற் குலச் சிறையாரும் ஒருங்குவைத் துரைக்கப்பட்டிருக்கின்றார். திருவாலவாய் "மந்திரமாவது நீறு" என்னுந் திருப்பதிகத் தின் ஈற்றில் நின்றசீர் நெடுமாறர் குறித்துரைக்கப்பட் டிருக்கின்றார். ஆகத், திருஞானசம்பந்தரது தேவாரத்திற் குறிப்பிடப்பட்ட திருத்தொண்டர்: கண்ணப்பர், கோச் செங்கட்சோழர், சண்டீசர், குங்குலியக்கலயர், புகழ்த் துணையார், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், நமிநந்தி யடிகள், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், நின்றசீர் நெடுமாறர் எனப் பதினொருவர் ஆவர்.

எனவே, அப்பர் சம்பந்தர் என்னும் இருவராலுந் தம் முடைய தேவாரத்திருப்பதிகங்களில் ஆங்காங்கு எடுத்துச்

சொல்லப்பட்ட நாயன்மார்கள்: கண்ணப்பர், கோச்செங்கட் சோழர், சண்டீசர், சாக்கியர், கணம்புல்லர், அப்பூதி, நமி நந்தியடிகள், குங்குலியக்கலயர், புகழ்த்துணையார், சிறுத் தொண்டர், திருநீலநக்கர், மங்கையர்க்கரசியார், குலச்சிறை யார், நின்றசீர்நெடுமாறர் எனப் பதினல்வர் ஆவர். இந் நாயன்மார் பதினல்வரிற் பலர், சம்பந்தர் அப்பர் இருந்த கி. பி. ஏழாம் நூற்றூண்டின் முற்பகுதியிலும் ஆரும் நூற் ருண்டின் பிற்பகுதியிலும் இருந்தோராக, ஏனைச் சிலரோ ஆரும் நூற்றூண்டிற்கும் முற்பட்ட காலத்தே இருந்தோ ராவர். அப்பர் சம்பந்தராற் குறித்தருளிச் செய்யப்பட்ட இந் நாயன்மார் பதினல்வரிற் கண்ணப்பர், சண்டீசர் என்னும் இருவரைத் தவிர ஏனையோரை மாணிக்கவாசகப்பெருமான் குறிப்பிடாமை என்னையென்று ஆழ்ந்து ஆராயவல் லார்க்கு, அவர் கண்ணப்பர், சண்டீசர் என்னும் இருவர்க் குப் பின்னும், ஏனையோர்க்கு முன்னும் இருந்தாரென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் விளங்கு மன்ரே?

இனிக், கி. பி. ஆரும் நூற்றூண்டின் துவக்கத்தில் இயற்றப்பட்ட 'கல்லாட' நூலின் ஆசிரியர் சிவபிரான் மாட்டுஞ் சிவனடியார்மாட்டும் பெருகிய மெய்யன்புடைய ராகலின், அவராற் குறிக்கப்பட்ட நாயன்மார் இனையரென் பதூஉஞ் சிறிது ஆராய்வாம். கல்லாட நூலின் கரு, ருஎ, கூஅ, எஅ, க0க-ஆம் பாட்டுக்களில் முறையே கண்ணப்ப நாயனர், மூர்த்தி நாயனர், சாக்கிய நாயனர், காரைக்காற் பேயம்மையார் என்னும் நால்வர் மாட்சியினை வியந்தெடுத் துப்பாடின ஆசிரியர், ஏனை நாயன்மாரில் ஒருசிலரையேனும் எடுத்துக் கூருதுவிட்டதென்னையென ஆராயுங்கால், இந் நாயன்மார் நால்வரும் ஆரும் நூற்றூண்டிற்கு முன் னிருந்தாற்போல ஏனையோர் இல்லாமை பற்றியே யாமென்பது நன்கு விளங்கும். இந் நால்வரிற் பின் மூவர் கி. பி. ஐந்தாம் நூற்றூண்டிலிருந்தா ராகற்பாலராகலின், இம் மூவரைக் கூருத மாணிக்கவாசகர், ஐந்தாம் நூற்றூண் டிற்கும் முற்பட்டவராதல் தெளியப்படும். இதுவேயுமன்றி, இவ்வாசிரியர் சுசு-ஆஞ் செய்யுளில்,

"வெடிவாற் பைங்கட் குறுநரி யினத்தினை
ஏழிடந் தோன்றி இனனூற் கியைந்து
வீதி போகிய வாலுளைப் புரவி
ஆக்கிய விஞ்சைப் பிறைமுடி யந்தணன்."

எனவும், கூஅ-ஆஞ் செய்யுளிற்,

"கூடற் பதிவரும் ஆடற் பரியோன்"

எனவும், மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் 'நரிபரி யாக்கிய' திருவிளையாடலையும், சகூ-ஆஞ் செய்யுளில்,

"மண்ணகழ்ந் தெடுத்து வருபுனல் வையைக்
கூலஞ் சுமக்கக் கொற்று ளாகி
நரைத்தலை முதியோள் இடித்தடு கூலிகொண்டு
அடைப்பது போல உடைப்பது நோக்கிக்
கோமகன் அடிக்க அவனடி வாங்கி
எவ்வுயிர் எவ்வுலகு எத்துறைக் கெல்லாம்
அவ்வடி கொடுத்த அருள்நிறை நாயகன்."

எனப் பிட்டுவாணிச்சி பொருட்டு 'மண்சுமந்த' திருவிளையாடலையும் நன்கெடுத்து மொழிதலானும், இவ்விருவேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏதுவாய்நின்ற மாணிக்கவாசகர் ஐந்தாம் நூற்றாண்டிற்கும் முன்னே கி. பி. மூன்றும் நூற்றாண்டில் திகழ்ந்தமை இனிது விளங்காநிற்குமென்பது.

என்றித்துணைப் பலவேறு வகையாலும் உண்மைச் சான்றுகள் என்னும் மணிக்கற்கள் கொண்டு அடிப்படை கோலி, அவற்றின்மேல் எழுப்பிய மாணிக்கவாசகர் காலம் என்னும் விழுமிய மெய்ம்மணிக்கோயில் கி. பி. மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதி முதற் நிகழ்ந்து, சைவமெய்ச் சமயத் தெய்வமுஞ் செந்தமிழ்த் தெய்வத் தனிமகளும் ஒருங்குகூடி மெய்யறிவுச் செங்கோலொளியரசு நடாத்தும் மாப்பெரு நிலையமாய் நிலைபேறுற்று நிலவுவதாமென்க.

'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' என்னும் இச் செந்தமிழ்த் தனிப்பேர் ஆராய்ச்சி நூல், தொண்டை-

காட்டுப் பல்லவபுரத்துத் தமது பொதுநிலைக் கழகத் திருமாளிகையில், நாகைகிழார் மறைமலையடிகளால் இயற்றப் பட்டது. ஓம்சிவம்.

பின் இணைப்பு—க.

மாணிக்கவாசகர் காலம்

முதற் பகுதி

சைவ சமயாசிரியருள் ஒருவரான மாணிக்கவாசக சுவாமிகள் இருந்த காலம் உறுதிப்படுத்தற் பொருட்டுத் தமிழ் ஆங்கில மொழிவல்லார் ஆங்காங்கு ஆராய்ந்தெழுதி வருகின்றார். அவருள், திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஜி. யூ. போப் என்பார் அம் மொழி பெயர்ப்பின் முதலிலே சேர்த்திருக்கும் பொருட்குறிப் பொன்றில், மாணிக்கவாசக சுவாமிகள் காலம் இனிது துணியப்படவில்லை யாயினும், அவர்காலம் கிறிஸ்து பிறந்த பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயா மென்றுகோடல் உத்திக்குப் பொருத்தமாவ தொன்றென் றுரை கூறுகின்றார். இனி இவர் காலத்திற்கு ஒரு நூற் றாண்டு கழிந்து ஞானசம்பந்தர் முதலான மற்றை ஆசிரியர் தோன்றினாரென்றும் உரைப்பாராயினர்.

இனி, மாணிக்கவாசகர் காலம் உறுதிப்படுத்தற் பொருட்டு ஆங்கில மொழியில் ஒரு நூலெழுதிய திருமலைக் கொழுந்து பிள்ளையவர்கள், மாணிக்கவாசகர் கடைச்சங்கம் நிலைபெற்று விளங்கியஞான் றிருந்தாரெனவும், அக் கடைச்சங்கத்தில் ஆசிரியர் திருவள்ளுவ நாயனார் தமது நூலை அரங்கேற்றிய காலம் கிறிஸ்து பிறந்த முதனூற் றாண்டாகலான் மாணிக்கவாசகர் காலமும் அந் நூலரங் கேறிய காலத்திற்குச் சிறிது பின்னுவதாமெனவும் சில பல சான்றுகள் காட்டித் தம்முரை நிறுத்துகின்றார்.

இனி, ஆங்கில மகனை இன்ஸ் என்பார் ஏஷியாடிக் குவார்டர்லி ரிவியூ என்னும் பத்திரிகையில் சுந்தரம் பிள்ளை யவர்கள் சிறந்த வாராய்ச்சி செய்து கி. பி. ஏழாவது நூற் றாண்டின் றொடக்கத்திலே யாமென்று துணிந்துரை

நிறுத்திய ஞானசம்பந்தர் காலத்தை உடன்பட்டு, ஞான சம்பந்தப் பிள்ளையாராதல் அவரோடுடனிருந்த அப்பர் சுவாமிகளாதல் அவர்க்குப் பின்னிருந்த சுந்தரமூர்த்திக ளாதல் மாணிக்கவாசகரைத் தம திருப்பதிகங்களுட் குறிப் பிடாமையானே, மாணிக்கவாசகர் காலம் அச் சைவ சமயாசிரியர் மூவர்க்கும் பின்னதாதல் துணியப்படுமெனக் கொண்டு சில மொழிந்திட்டார்.

இனிச், சுந்தரம் பிள்ளையவர்கள் ஞானசம்பந்தப் பிள்ளையார் காலம உறுதிசெய்து ஆங்கில மொழியி லெழுதிய மிக அரியதோருரைநூலில் மாணிக்கவாசகர் காலம் பற்றிச் சிறப்பாய் ஏதுமெடுத்து மொழிந்ததில்லை யாயினும், அந் நூன் முகவுரையில் மாணிக்கவாசகர் ஞான சம்பந்தப் பிள்ளையார்க்கு முன்னிருந்தா ரென்பதன்கண் தமக்கு ஐயம் நிகழாநிற்கின்றதெனை ஓருரை குறித்துப் போயினர்.

இனிச், சரிதவாராய்ச்சியின் நுட்பமும், அதனை ஆயும் முறையும் அறியமாட்டாத தமிழ் ஒன்றே வல்லார் சிலர் ஞானசம்பந்தப் பிள்ளையார் நாலாயிர ஆண்டுகட்கு முன்னிருந்தா ரெனவும், மாணிக்கவாசகர் அப் பிள்ளை யார்க்கும் முன்னிருந்தா ரெனவுந் தமக்குத் தோன்றிய வாறே கூறி நெகிழ்ந்து போய் உண்மை காணாது ஒழிவர். இது நிற்க.

இனி மேலே காட்டிய நால்வர் கருத்துக்களும் ஒன்றோடொன்று பெரிதும் மாறுபட்டு மயங்கிக்கிடத்த லான், அவற்றைப் புடைபடவொற்றி யளந்தாய்ந்து யாம் எம்மறிவில் மெய்யெனக் கண்டவற்றை ஈண்டுத் தந்து காட்டுவாம்.

முதன் மொழிந்த போப்புத்துரை, மாணிக்கவாசகர் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் றொடக்கத்திலே யிருந்தா ரெனவும், அவர்க்குப் பின் ஒருநூற்றாண்டு கழிந்து பதி னோராவது நூற்றாண்டில் ஞானசம்பந்தப் பிள்ளையார் தோன்றினா ரெனவுஞ் சரிதவரம்பின் நில்லாது அதனியல்

வழுவத் தமக்குத் தோன்றியவாறே பெரிதும் பிழைபடக் கூறினர். சரிதவாராய்ச்சியின் மிக்குப் புலமையுடைய ஆங்கில இனத்திற் பிறந்து அவ்வாங்கில மொழிப் புலமையும் பெற்றுள்ள இத் துரைமகனர் தாமங்ஙனங் கால உறுதி செய்தற்கேற்ற ஏதுக்கள் நன்கெடுத்து மொழிந்திடாமற் சரிதவியல் பிறழத் தமக்கு வேண்டியவாறே கூறியது பற்றிப் பெரிதும் வியப்படைகின்றும். சரித வாராய்ச்சி யின்னதென் றறியமாட்டாத தமிழ்ப் புலவர் அங்ஙனங் கூறினராயின், அஃது அவர்க் கிழுக்கன்றும். அவ்வாராய்ச்சியில் முதிர்ந்த வுணர்ச்சி யுடையரான ஆங்கில மக்களே அங்ஙனம் பிறழ வுரையாடுவராயின் அது பற்றி யுலகம் அவரைப் பழியாதொழியுமோ? இதுநிற்க. டாக்டர் ஹுல்ஷ் முதலான ஆங்கிலப் புலவரால் வெளியிடப் பட்டுவருந் தென்னுட்டுக் கல்வெட்டுப் பட்டையங்களானே, தேவாரத் திருமுறை வகுப்புச் செய்த நம்பியாண்டார் நம்பியோ டொருங்கிருந்த இராசராச அபயகுல சேகர சோழன் அரியணை வீற்றிருப்புப் பெற்றுச் செங்கோலோச்சி உலகு புரந்தருளத் தொடங்கிய ஆண்டு கி. பி. கூஅச ஆகும். வெங்கையரவர்களும் சென்னைக் கிறித்தவன் கலாசாலைப் பத்திரத்தில் அவ்வரசன் காலம் அவ்வாறுதல் சான்றுகள் பல காட்டி மிக நுட்பமாக விரித்துரைத்து நிறுத்தினர். சுந்தரம் பிள்ளையவர்களும் அக் காலவளவையை நன்காராய்ந்து பார்த்து அது பொருத்தமாவதே யாமென்று ஒருப்பட்டுத் தழுவிக் கொண்டார். ஆங்கில வித்துவான்கள் பிறரும் அதன்கண் ஐயுறவுகொள்ள இடம் பெறுகின்றிலர். இங்ஙனமெல்லாரும் ஒருங்கே தழீஇக்கொண்டு நிறுத்திய இராசராச சோழன் காலம் கி. பி. பத்தாம் நூற்றுண்டின் இறுதிக்கண்ண தாதல் இனிது விளங்குதலின், அவ்வரசன் காலத்தே முறை வகுப்புச் செய்யப்பட்டுப் பெரிதும் பெருமையுற்று வழங்கிய தேவாரப்பதிகங்களும் அவற்றை உலகுய்ய மொழிந்தருளிய குரவரும் அப் பத்தாம் நூற்றுண்டிற்கு முன் நிலவியவாறு மலைவின்றித் துணியற்பாற்று.

இனி அச் சமயகுரவன்மா ருள்ளுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின்கண்ண தாமென்று கோடுமாயினும், அச் சுவாமிகளால் திருத்தொண்டத் தொகையில் நன்கெடுத்து மொழிந்திடப்பட்ட திருஞானசம்பந்த சுவாமிகள் காலம் எட்டாம நூற்றாண்டாக வாதல் ஏழாம் நூற்றாண்டாகவாதல் கொளளற்பாற்றென்பது சொல்லாமலே விளங்கும். இங்ஙனஞ் சொல்லுதற்குப் பெரிதும் வாய்ப்புடைய ஞானசம்பந்தப் பிள்ளையார் காலவளவை குறித்துரையாட மாட்டாமன் மற்று அது பதினோராம் நூற்றாண்டின்கண்ண தாமென்று கூறிய போப்புத்துரை கூற்றுப் பிழையுடைத்தாதல் தெற்றென விளங்கும். அல்லதூஉம், திருமுறை வகுத்திட்ட நம்பியாண்டார் நம்பிகளும், அத் திருமுறையினை யருளிச்செய்த சமயகுரவரும், அவருள்ளும் சுந்தரர்க்கு முன்னிருந்த பிள்ளையாரும் எல்லாம் பதினோராம் நூற்றாண்டின்கணிருந்தாரென்று கோடல் உண்மைச் சரிதவாராய்ச்சிக்கு ஒரு சிறிதும் இசையாது. ஞானசம்பந்தப் பிள்ளையார் காலம் ஏழல்லதெட்டாம் நூற்றாண்டு ஒன்றன்கட் படுவதன்றி இரண்டினும் ஒப்பச்சேறல் கூடாமையான், அக் காலவரையறைதான் யாதென்றறிய வேண்டுவார்க்கு அது காட்டுவாம்.

இனி, உண்மைச் சரிதவியல் பிறழாதுரைக்கும் பெரியபுராணஞ் சிறுத்தொண்டநாயனார் வரலாற்றில், பரஞ்சோதியா ரென்னும் பெயருடைய அச் சிறுத்தொண்டர் திருச்செங்காட்டங்குடியிற் பிறந்தவரெனவும், அவர் போர்த்தொழில் பலவுங் கற்று மிகவல்லராய்ச் சிவபெருமான் றிருவடிக்கண் மெய்யன்பு பூண்டொழுகித் தம்மரசனிடத்துத் தண்டத் தலைமை மேற்கொண்டு அவற்கு அணுக்கரா யிருந்தாரெனவும், அங்ஙனம் அமருங்காலத்து வடநாட்டில் வாதாவி என்னும் நகர்மேற் படையெடுத்துச் சென்று அதன் மன்னனை வெற்றி கண்டு வாகைசூடித் திரும்பத் தம் நாடடைந்து தம்மரசற்குப் பெரும்புகழெய்துவித்தா ரெனவுங் கிளந்துரையா நின்ற,

"ஈசனடி யார்க்கென்று மியல்பான பணிசெய்தே
யாசில்புகழ் மன்னவன்பா லணுக்கரா யவற்காகப்
பூசன்முனைக் களிறுகைத்துப் போய்வென்று பொருமரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார்."

"மன்னவற்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத்
துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையு
மின்னனவெண் ணிலகவர்ந்திங்
கியலரசன் முன்கொணர்ந்தார்."

என்னுஞ் செய்யுட்களானே அவர் மெய்வரலாறு இனிது விளங்குதலுடன், அவர் வடபுலத்து வாதாவி என்னும் நகர்மேற் படையெடுத்துச் சென்று அதனைத் தம்மரசற்கு உரிமையாக்கினா ரென்னுஞ் சரிதநுண்பொருளும் புலப் படுவதாயிற்று. இனி, வடநாட்டின்கட் டொகுக்கப்படுங் கல்வெட்டுப் பட்டையங்களானே முதல் நரசிம்மவருமன் என்னும் அரசன் மேலேயுரைத்த வாதாவிநகரை யழித் துத் தன்கீழ்ப்படுத்தினா னென்பதும், அப்போது அந் நகர் வேந்தனாயிருந்தோன் இரண்டாம் புலிகேசன் என்பதும் பெறப்படுகின்றன. இந்த நரசிம்மவருமன் அரசன் பல்லவ வேந்தர் மரபில் வந்தோனாவன். புலிகேசனென்னுமரசன் மேனாட்டுச் சாளுக்கியவேந்தர் மரபில் வந்தோனாவன். இனி, இப் பல்லவ வேந்தர்க்கும் மேனாட்டுச் சாளுக்கிய வேந்தர்க்கும் பலமுறையாலும் போர்கள் நிகழ்ந்தனவென் பதும், அப் பட்டையங்களானே பெறப்படும் உண்மையாம். மேலே மொழிந்த வாதாவிநகர்வெற்றி நரசிம்மவருமனை யொழித்து ஒழிந்த பல்லவ அரையர்மேற் செல்லாமை யான், தம்மரசற்குத் தண்டத்தலைவராய்ப் படையெடுத்து மேற்சென்ற சிறுதொண்டரை அவ்வாறுடையானை வரசன் முதல் நரசிம்மவருமனே யாமென்ப தொருதலை. பெரியபுராணத்தில் இவ்வரசன் பெயர் சொல்லப்பட்ட

இல்லையாயினும், வாதாவி நகரிற் காணப்படும் பல்லவ அரையன் கல்வெட்டுப் பட்டையமொன்று அவ் வெற்றிக் குரியோன் அவ்வரசனென் றுரைக்கும் உறுதிமொழி பற்றிச் சிறுத்தொண்டர்தம் அரசன் முதல்நரசிம்மவரும னேயா மென்பது உய்த்துணரவல்லார்க்கு நன்குபுலனும். இனி, மேலேகாட்டிய இரண்டாம் புலிகேசனுன மேனுட்டுச் சாளுக்கியவேந்தன் செங்கோலோச்சிய காலவளவை வட நாட்டுக் கல்வெட்டுகள் கொண்டு ஹூல்ஸ் என்னுங் கல் வெட்டு ஆசிரியராற் கி. பி. ௬0௯ முதல் ௬௪௨ இறுதி யாமென நன்று குறித்திடப்பட்டது. இங்ஙனம் கி. பி. ஏழாம் நூற்றுண்டின் றொடக்கமுதல் அதனிடையளவுஞ் செங்கோலோச்சிய புலிகேசவரசனைப் புறங்கண்ட நரசிம்ம வருமன் முதலாவோனும் அந் நூற்றுண்டின் றொடக்க முதல் இடையளவும் இருந்தானுகற்பாலன். இனி அந்த நரசிம்மவருமனென்னும் வேந்தற் குறுதுணைத் தண்டத் தலைவரான சிறுத்தொண்டரும் அந் நூற்றுண்டின் முற் பகுதியி லிருந்தாராகற்பாலர்.

இனி, ஞானசம்பந்தப்பிள்ளையார் திருச்செங்காட்டங் குடிக்கு எழுந்தருளிய காலையில் ஆண்டிருந்த சிறுத் தொண்டராற் றும் பெரிதும் மெய்யன்போடு ஏற்கப்பட்டு அவரோடளவளாயினு ரென்பது,

"அந்நாளிற் சண்பைநகர் ஆண்டகையார் எழுந்தருள
முன்னுகை எதிர்கொண்டு கொடுபுகுந்து முன்னூல்சேர்
பொன்மார்பிற் சிறுத்தொண்டர் புகலிகா வலனுர்தம்
நன்னுமச் சேவடிகள் போற்றிசைத்து நலஞ்சிறந்தார்."

என்பதனுனும்,

"சண்பையர்தம் பெருமானுந் தாங்கரிய பெருங்காதற்
பண்புடைய சிறுத்தொண்டர் உடன்பயின்று மற்றவரை
மண்பரவுந் திருப்பதிகத் தினில்வைத்துச் சிறப்பித்து
நண்பருளி எழுந்தருளத் தாம்இனிது நயப்பற்ருர்."

என்பதனானும் நன்குபெறப்படுகின்றது. இஃதல்லாமலும், ஞானசம்பந்தப் பிள்ளையார் தாமே சிறுத்தொண்ட நாயனரைச் சிறப்பித்துச்,

> "செடிநுகருஞ் சமணர்களுஞ்
> சீவரத்த சாக்கியரும்
> படிநுகரா தயருழப்பார்க்
> கருளாத பண்பினன்
> பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க்
> கருள்செய்யும் பொருட்டாகக்
> கடிநகராய் வீற்றிருந்தான்
> கணபதீச் சரத்தானே."

எனவும்,

> "செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
> வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்டனவன் வேண்ட
> வந்தண்பூங் கலிக்காழி யடிகளையே யடிபரவுஞ்
> சந்தங்கொள் சம்பந்தன் றமிழுரைப்போர் தக்கோரே."

எனவுந் திருப்பதிகங் கட்டளையிட் டருளியவாற்றானும் அவர் நட்பின் கிழமைத்திறந் தெற்றென உணரப்படும். இதனானே, அச் சிறுத்தொண்டரோடு ஒருகாலத்தின ரான ஞானசம்பந்தப் பிள்ளையார் காலமும் நரசிம்மவருமனென்னும் பல்லவவேந்தன் காலமும் ஒன்றேயாதல் பெற்றாம். பெறவே, ஞானசம்பந்தப்பிள்ளையார் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியிலே இருந்தருளினாரென மலைவின்றி நிறுத்தப்பட்டவாறு காண்க.

இன்னும், திரிசிரபுர மலைமுழைஞ்சிற் காணப்படுங் கல்வெட்டுக்களானே முதல்நரசிம்மவருமன் தந்தையான குணபரனென்னும் முதல்மகேந்திரவருமன் காலத்தில் திருநாவுக்கரைய ரென்னும் அப்பர் சுவாமிகள் இருந்தா ரென்பது ஹுல்ஸ் என்னுந் துரைமகனார் நிறுவிய வாற்றால் இனிது விளங்குதலின், அவ் வப்பர்சுவாமிகள் கி. பி. ஆரும் நூற்றாண்டின் பிற்பாதியினும் ஏழாம் நூற்

ருண்டின் முற்பாதியினும் இருந்தாரென்பது தேற்றமாம். இதனானே, அப்பர் சுவாமிகள் எண்பது ஆண்டளவு மிருந்தாரெனக் கூறும் தமிழ்நூல் வரலாற்றுண்மை பெரிதும் வலியுடைத்தாமாறு காண்க.

இனி, எடுத்துக்கொண்ட மாணிக்கவாசகர் காலம் உறுதி செய்தற்பொருட்டு, மேலேகாட்டிய அப்பர் ஞானசம்பந்தப்பெருமான் முதலியோர் காலம் கி. பி. ஆறும் நூற்றாண்டின் பிற்பாதிமுதல் ஏழாம் நூற்றாண்டின் முற்பாதி யீறாகவாமென்பது பெறப்படுதலின், அது கொண்டு மாணிக்கவாசகர் காலம் கி. பி. ஆறும் நூற்றாண்டின் முற்செல்லுமாறு காட்டுவாம். அப்பர்சுவாமிகள் அருளிச்செய்த "பாடிளம் பூதத்தினானும்" என்னுந் திருவாரூர்ப்பதிகத்தில்,

"நரியைக் குதிரை செய்வானும்
நரகரைத் தேவு செய்வானும்
விரதங்கொண் டாட வல்லானும்
விச்சின்றி நாறு செய்வானும்."

என்னுஞ் செய்யுளில் மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் நரியைக் குதிரையாக்கிய திருவிளையாடல் நன்கெடுத்துக் குறித்திடப்பட்டது. தம்பொருட்டே பெருமான் நரிகளையெல்லாங் குதிரைகளாகத் திரித்துக் கொண்டு போதருவானாயினனென மாணிக்கவாசக சுவாமிகள்,

"நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞாலமெல்லாம் நிகழ்வித்து."

எனவும்,

"நரிகளெல்லாம் பெருங்குதிரை யாக்கியவா
றன்றேயுன் பேரருளே."

எனவும்,

"அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்."

எனவுந் தாமே தம் அருட்டிருவாயான் மொழிந்திடு தலின், இறைவன் செய்தருளிய அத் திருவிளையாடல் மாணிக்கவாசகர் பொருட்டேயாமென்பது இனிது தேறப் படும். இப்பெற்றி தேருத ஆங்கிலமகனை இன்ஸ் என்பவர் சிலப்பதிகாரத்தானும் திருவிளையாடலானும் வன்னியுங் கிணறும் அழைத்த அற்புத நிகழ்ச்சி இரண்டாதல்போல நரியைக் குதிரையாக்கிய இவ்வற் புதமும் மாணிக்கவாசகர் பொருட்டொன்றும் அதற்கு முன்னே நிகழ்ந்த வேறொன்றுமாக இரண்டாகலா மெனவும், அங்ஙனம் அஃதிரண்டாகவே அப்பர் சுவாமி களாற் குறித்திடப்பட்ட அவ்வற்புத நிகழ்ச்சியும் மாணிக்கவாசகர் மேலதாமாறு இல்லையெனவுந் தமக்குத் தோன்றியவாறே அளவைவரம்பு பிறழ்ந்து எழுதுவாரா யினர். வன்னியுங் கிணறும் அழைத்த திருவிளையாடல் இரண்டாதல்போல நரியைக் குதிரையாக்கிய திருவிளை யாடலும் இரண்டாகல் வேண்டுமென்னும் யாப்புறவு யாங்ஙனம் பெற்றீரெனக் கடாவுவார்க்கு அத் துரைமகன் இறுக்குமா றின்றும். வன்னியுங கிணறும் அழைத்த திருவிளையாடல் இரண்டாதற்கு மேற்கோள் சிலப்பதி காரத்தினும் திருவிளையாடலினுங் கண்டாம், அல்லதூஉம, சிலப்பதிகாரத்திற் பேசப்பட்ட 'வனனியுங் கிணறும் அழைத்த திருவிளையாடலும்' திருவிளையாடற் புராணத் திற்சொல்லப்பட்ட 'வன்னியுங் கிணறும் அழைத்த திரு விளையாடலும்' வேறுவேறு என்று நாட்டுதற்குத்தான் சான்றுகள் யாவை? இருவேறு நூல்களிற் கூறபபட் டமையானே இரண்டென்றல் யாங்ஙனம்? அதுகிடக்க. நரியைக் குதிரையாக்கிய திருவிளையாடல் இரண்டாதற்கு மேற்கோள யாண்டுங் கண்டிலம். இங்ஙனம் அளவை நெறி பிழைத் தெழுதப்படும் போலிப்பொருளகளும் ஆங்கிலமொழியில் வரையப்படுதலிற் சிறந்தெடுத்துப் பாராட்டப்படுகின்றன. ஆரசியன்மொழி யல்லாத தமிழ் முதலிய சொற்களிலெழுதப்படும் அரிய பெரிய உண்மைப் பொருளகளுஞ் சிறவாதொழிகின்றன. என்னே! என்னே! இம் மயக்கவுலகின் றன்மை யிருந்தவாறு! இதுகிடக்க.

நரியைக் குதிரையாக்கிய திருவிளையாடல் மாணிக்கவாசகர் பொருட்டன்றிப் பிறிதாகவும் இயற்றப்பட்ட துண்டென்ப தற்கு மேற்கோள் யாண்டுங் காணப்படாமையானும், அத் திருவிளையாடல் தம்பொருட்டே நிகழ்த்தப்பட்டதென மாணிக்கவாசக சுவாமிகள் தாமே தம அருமைத் திரு வாயாற் கிளந்தெடுத்து மொழிந்தருளுதலானும் கல்லாடம் முதலான தொன்னூல்களும் அத் திருவிளையாடல் மாணிக்கவாசகர் பொருட்டே நிகழ்த்தப்பட்டதெனத் துணிவுதோன்றக் காட்டுதலானும் அத் திருவிளையாடல் பிறிதொன் றுளதெனக்கோடல் ஒருவாற்றானும் பொருந் துமாறில்லை. ஆகவே, மாணிக்கவாசகர் பொருட்டுச் செய்யப்பட்ட அத் திருவிளையாடல் அப்பர் சுவாமிகளான் மொழிந்தருளப்பட்டமையானே, மாணிக்கவாசகர் காலம் ஆறும் நூற்றாண்டின் முன்னதாதல் இனிது துணியப் படுதல் காண்க.

இனித், திருமலைக்கொழுந்து பிள்ளையவர்கள், மாணிக்க வாசகர் காலம் கடைச்சங்கம் நிலைபெற்று விளங்கிய கி. பி. முதனூற்றாண்டின்கட் படுவதாமெனக் கூறிய உரைப் பொருளிற் கருத்தொருப்பாடு உறுகின்றிலம். என்னை? கடைச்சங்கத்தார் காலத்துச் செய்யுளியல் வழக்கின்கட் படுவதன்றாய், அக்காலைத்தமிழில் ஒருசிறிதுங் காணப் படாத விருத்தப்பாட்டுகள் திருவாசகத்தின்கட் காணப் படுதலானென்பது. கடைச்சங்கத்தார் செந்தமிழ்ச் செய்யு ளியல் வழக்கின்கண்ணே விரவப்பெறாத விருத்தப்பாக்கள் உலகியலாறாய் மற்றுத் தமிழ்ப் புலனெறிவழக்கிற் புகப் பெறுதற்கு அச் சங்கத்தார் காலத்தின்பின் இரண்டு மூன்று நூற்றாண்டு கழிதல் வேண்டுமாகலான் மாணிக்க வாசகர் கடைச்சங்கத்தார் காலத்திருந்தாரெனக் கோடல் சரித வழுவாமென் றுணர்க. அற்றேல், விருத்தப்பாக்கள் பெருகிய செய்யுள் வழக்காய் நடைபெறுதற்குத் தொடங் கிய அப்பர் சுவாமிகளிருந்த ஆறும் நூற்றாண்டின் முற் பகுதியிலே மாணிக்கவாசக ரிருந்தாரெனக் கொள்ளாமோ வெனிற்; கொள்ளாம். திருவாசகத்தின்கண் விருத்தப்

பாக்கள் மிக்கு விரவப்பெறுது ஒரு சிலவே காணக்கிடத்த லானும், தமிழ்ச்செய்யுளியல் வழக்கிற்கே சிறப்பாவன வாகிய அகவலூலுங் கலியும் பெரிதும் விரவிக்கிடத்தலானும் தமிழ்ச்செய்யுட்கள் முறைமுறையே வழக்குவீழ்ந்து விருத் தப்பாக்கள் இடையிடையே விரவப் பெறுகின்ற காலத்தே திருவாசகம் அருளிச்செய்த மாணிக்கவாசக் ரிருந்தா ரெனல் ஒருதலையாம். அக்காலந்தான் யாதென்று நுணுகி நோக்குவார்க்கு அது கி. பி. மூன்றும் நூற்றுண்டாமென்ப தினிது விளங்கும். அல்லதூஉம், நக்கீரர் முதலான தெய்வப்புலவர் விளங்கிய காலத்தில் மாணிக்கவாசகர் இருந்தாராயின் தாம் அவரைக்குறித்து ஏதும் மொழிந் திடுவர்; அங்ஙனம் ஒன்றுஞ் சொல்லாமையானும், மதுரை யில் ஆய்ந்த தமிழைப்பற்றிப் பேசவந்தவிடத்தும் "உயர் மதிற்கூடலி னாய்ந்த வொண்டீந்தமிழின் றுறை" என்று இறந்தகாலத்தா னுரைத்துக் கடைச்சங்க காலந் தமக்கு முன்னதாதல் குறிப்பான் உணரவைத்தலானும் அவர் காலமும் வேறே கடைச்சங்க காலமும் வேறே யென்பது உணரற்பாற்று. கடைச்சங்ககாலத் திருந்தாராயின் "உயர் மதிற்கூடலி னாயுமொண்டீந் தமிழின் றுறை" என்று கூறிடுவார்; அங்ஙனங் கூறுதலாற் செய்யுள் சிதையுமாறு மின்று. இதுகிடக்க.

இனிக், கல்லாடம் சங்கச்செய்யுளாகலின் அதன்கட் குறிப்பிடப்பட்ட 'பிட்டுக்கு மண்சுமந்தன்' முதலியவற் றுனே அவ் வற்புதங்கள் நிகழ்தற்கு ஏதுவாயிருந்த மாணிக்கவாசகர் காலம் கடைச்சங்ககாலமெனத் துணியப் படுமாம் பிறவெனின்: நன்று கடாயினுய், கல்லாடம் சங்கச் செய்யுளேயாமென்று துணிதற்கு மேற்கோள் யாண்டுங் காணப்படாமையானும், அல்லது அது சங்கச் செய்யுளென்றே கோடுமாயின் அது பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க் கணக்கு முதலியவற்றின்கட் சேராமை யென்னையெனுங் கடா நிகழ்தலானும், சங்கச் செய்யுண் மேற்கோள்கொண்டு உரையெழுதுவாரான இளம் பூரணர், பேராசிரியர், சேனுவரையர், நச்சினூர்க்கினியர் முத

லான உரையாசிரியன்மார் யாரும் அதன்கண் மேற்கோள் கொண்டு தம்முரையிற் குறித்திடாமையானும், சங்கத்தார்காலத்து அகவற்செய்யுள் அமைப்பிற்கும் கல்லாடவகவற்செய்யுள் அமைப்பிற்கும் வேறுபாடு பெரிது காணக் கிடத்தலானும் பிறவாற்றானுங் கல்லாடநூல் சங்கத்தார் காலத்ததாதல் செல்லாதென்பதூஉம், அக் கல்லாட நூலையே பெரியதொரு நிலைக்களனாகக்கொண்டு மாணிக்க வாசகர் காலம் உறுதிசெய்யப் புகுந்த திருமலைக்கொழுந்து பிள்ளையவர்கள் உரை வாய்ப்புடைத்தாமா றில்லையென் பதூஉம் நுணுகி யாராயவல்லார்க்கெல்லாம் நன்றுணரக் கிடக்கும். இன்னும் அவர்கள் தாமெழுதிய அவ்வுரை நூலின்கண் மேலே காட்டிய உரையாசிரியன்மார் யாருந் தம்முரையில் தேவாரத் திருப்பாட்டுகளை மேற்கோளாக மொழிந்ததில்லையெனவும், சரிதமுறை பிறழாத பெரிய புராணமும் ஒரோவிடங்களில் அம்முறை வழுவுகின்ற தெனவும பிறவுங் கூறுநிற்பர். நச்சினார்க்கினியர்க்கு முன் னிருந்தோரான பேராசிரியர் திருச்சிற்றம்பலக்கோவையா ருரையில் அப்பர் சுவாமிக ளருளிச்செய்த,

> "அண்ட மாரிரு ளூடு கடந்தும்ப
> ருண்டு போலுமோ ரொண்சுட ரச்சுடர்
> கண்டிங் காரறி வாரறி வாரெல்லாம்
> வெண்டிங் கட்கண்ணி வேதிய னென்பரே."

என்னுந் திருப்பாட்டை எடுத்துக் காட்டுதலானே உரை யாசிரியர் யாருந் தேவாரத்திருப்பாட்டை மேற்கோளாக எடுத்து மொழிந்திலரென்னும் உரை பொருத்தமின்மை யாறுணர்க.

இனி, அக் கல்லாடநூல் 'நரியைக் குதிரையாக்கிய தனை' ௬௪-வது செய்யுளினும், "பாணபத்திரர்பொருட்டு விறகுதலையனாய்ச்சென்று இசைபாடினதனை" ௬௩-வது செய்யுளினும், 'வையையடைக்க மண்சுமந்ததனை' ௬௯-வது செய்யுளினும், 'மூர்த்தி நாயனார் முழங்கை தேய்த்த திருத் தொண்டினை' ௯௭-வது செய்யுளினும், 'சாக்கிய நாயனார்

திருத்தொண்டினை' ௬அ-வதுசெய்யுளினும்,'இடைக்காடன் பிணக்குத் தீர்த்ததனையும்' 'காரைக்காலம்மையார் திருவாலங்காட்டிற் றிருநடங் கண்டதனையும்' எஅ-வது செய்யுளினும், 'காரைக்காலம்மை மாங்கனியால் வீடுபெற்றமையினை' ௬0க-வது செய்யுளினும், இவற்றினும் பழைய திருவிளையாடல்கள் பலவற்றை இடையிடையே பல செய்யுட்களினும் அன்பால் என்பு நெக்குருக எடுத்தோதியவாறு போலச், சிவபெருமான் திருவருள் பெற்றோரிற் றலைசிறந்து நிற்கும் அப்பர் சம்பந்தர் சுந்தரர் முதலான ஏனைமூவரை ஒரு சிறிதுங் குறிப்பிடாமையால், அக் கல்லாட நூல் அம்மூவர்க்கும் முற்பட்டதென்பது நன்கு பெறப்படும். அந் நூலாசிரியர் சிவபெருமானிடத்தும், அவனடியாரிடத்தும் பேரன்புடையராகக் காணப்படுதலால், அவர் அம் மூவர்க்கும் பின்னிருந்தனராயின் அவர் நிகழ்த்திய அற்புதங்களை ஒருசிறிதாயினுங் கூறுதுவிடார். மற்று அம மூவரைப் பற்றிய குறிப்புச் சிறிதுங் கூறுமைகொண்டே அவர் அவர்க்கு முன்னிருந்தாரென்பது ஒருதலையாகத் துணியப் படும் என்க. அங்ஙனமாயின், 'திருஞானசம்பந்தப்பெருமான் வெப்புநோய் தீர்த்தமை' அறுபத்து நான்கு திருவிளையாடல்களுள் ஒன்ருய் இருத்தலானும், கல்லாடத்துள் "எட்டெட்டியற்றிய கட்டமர் சடையோன்" என அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் குறிப்பிடப்பட்டிருத்தலானும் அந் நூல் திருஞானசம்பந்தர்க்கும் பிற்பட்டதாதல் பெறப்படுமாலோ வெனின்; மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்திற் குறிப்பிட்ட பல திருவிளையாடல்கள் பெரும்பற்றப்புலியூர் நம்பியார் திருவிளையாடற் புராணத்தினும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தினுங் காணப்படாமையானும், இவ்விரு புராணங்களிற் காணப்பட்டனவும் ஒன்றிலுள்ளவாறு பிறிதொன்றிற் காணப்படாமல் ஒன்றில் ஒருவாருயும் பிறிதொன்றிற் பிறிதொருவாருயும் இருப்பக் காணடலானும், இறைவனே இயற்றிய திருவிளையாடல்களி னிடையே திருஞானசம்பந்தப் பெருமானியற்றிய அற்புதங்களையுங் கோத்தற்கு ஓரியைபு இன்மையானும் கல்லாடத்துட் குறிப்பிடப்பட்ட

பழைய திருவிளையாடல்கள் அறுபத்து நான்கனுள் திரு ஞானசம்பந்தப் பெருமான் அவற்றிற்குப் பிற்காலத்தே நிகழ்த்திய அற்புதங்கள் சேர்ந்திலவெனபது தேற்றமா மென்க.

இவ்வாற்ருல், கல்லாட நூல் அப்பர் ஞானசம்பந்தர் முதலான மூவர்காலத்திற்கு முன்னும், மாணிக்கவாசகர் காரைக்காலம்மையார் காலத்திற்குப் பின்னும் எழுதப் பட்டதொன்ருதல் நன்கு பெறப்படுதலின் கி. பி. ஐந்து அல்லது ஆரும் நூற்ருண்டின் கண்ணதான அக் கல்லாட நூலையே கருவியாகக் கொண்டு மாணிக்கவாசகர் கடைச்சங்கம் நிலைபெற்று விளங்கிய ஞான்றிருந்தாரெனக் கூறுதல் ஒரு சிறிதும் ஏலா வுரையாமென்பதும், அந்நூல் கொண்டு அவர் ஐந்தாம் நூற்ருண்டிற்கு முன்னிருந்தா ரெனல் மட்டும் இனிது விளங்குமா மென்பதும் பெறப் படும். இது கிடக்க.

இனி, ஆங்கில மகனை இன்ஸ் இன்பவர் ஞானசம்பந் தர் முதலான குரவன்மார் மூவருள் யாரும் மாணிக்கவாச கரைத் தம்பதிகத்துட் கிளந்தெடுத்துக் குறித்திடாமை யான் அவர் அம் மூவர்க்கும் பின்னிருந்தாரென்பது உய்த் துணரற்பாற்றெனமொழிந்ததூஉம் பொருந்தாது. யாம் மேலே காட்டிய "நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவு செய்வானும" என்பதும், "மணியார்வைகைத் திருக்கோட்டின் நின்றதோர் திறமுந் தோன்றும்" என்ப தும் அப்பர் சுவாமிகள் திருப்பாட்டுக்களாகலானும், மாணிக்கவாசகர்பொருட்டியற்றப்பட்ட திருவிளையாடல்கள் அவற்றிற் காணப்படுதலானும் மாணிக்கவாசகர் அக் குரவன்மார் எவரானும் மொழியப்படவில்லை என்பது யாண்டையதென் ருெழிக. அற்றன்று, முன்னைக்காலத் துச் சிவனடியார்தம்மையெல்லாந் தொகுத்தோதி வழுத்துவான் புகுந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்க வாசகரையும் அங்ஙனம் எடுத்துமொழிந்த தில்லையாலோ வெனின்; நன்றே வினயினய், 'அதெந்துவே' 'வேசறு' என்னும் வடுகுமொழிச் சொற்களும், வடுகர் நாட்டிலுள்ள

'மகேந்திர' வெற்பைப்பற்றிய குறிப்பும் திருவாசகத்தின்கட் காணப்படுதலானும், வீரசைவர் தமது திருமேனிக்கட் சிவலிங்கம் பூணுங்குறிப்பு 'என் னுடலிடங்கொண்டாய்' என்னுஞ் சொறறொடராற் பெறப்படுதலானும் மாணிக்க வாசகர் வடுகநாட்டு வீரசைவ குலத்துப் பிறந்த பெரியா ரென்பது பெறப்படுகின்றது. வீரசைவநெறி பிழையாது நின்று சிவவழிபாடியற்றிச் சிவபிரான் திருவடிப் பெரும் பேறு தலைக்கூடிய அவரைச் சித்தாந்த சைவ மரபின்கட் டோன்றிச் சித்தாந்த சைவத் துறைவழிநின்று இறைபணி பேணிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், சித்தாந்த சைவத் துறைவழி நின்று அங்ஙனமே இறைவன் றிருவருணெறி தலைக்கூடிய ஏனைச் சித்தாந்த சைவப் பெரியாரைத் தொகுத்தோதுந் தந் திருப்பதிகத்தினுட் கிளந்தெடுத்துக் கூறுதற்கு அமர்ந்திலராய்ப், "பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்" என்பதனுற் குறிப்பாற் கொள வைத்துக் கூறியருளினுர். 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பது தொகையடியாரைக் குறிப்பதெ‌ன நம்பியாண்டார் நம்பி கூறினுரேனும், அச் சொற்றொடர் தனியடியாரைக் கூறுந் திருப்பாட்டின்கட் காணப்படுதலானும், தொகை யடியாரையே ஒருங்கு தொகுத்தோதும் "பத்தராய்ப் பணி வார்கள்" என்னும பாட்டு வேறு தனியே யுண்மையா னும், சேக்கிழாரும் 'பொய்யடிமை யில்லாத புலவரைத்' தொகையடியாரெனக் கிளந்து கூருமையானும் அச் சொற் றொடர் மாணிக்கவாசகரையே குறிக்குமென்றல் இழுக் காது. மாணிக்கவாசக சுவாமிகள் வீரசைவ மரபிற்குரி யரேயாமென்பது வீரசைவ மரபினருந் துறவோரும் மாணிக்கவாசகரைத் தம் முதல்ஆசிரியராய்க் கொண்டு அவர் அருளிச் செய்த திருவாசகத்தைத் தமக்குரிய முதன் முறையாய் வைத்துப் பண்டுதொட்டு வழிபாடு ஆற்றி வருதலானும், புதுச்சேரி முதலான இடங்களிலுள்ள வீரசைவ மடாதீனங்களெல்லாம் மாணிக்கவாசகர் பெயர் கொண்டே நிலவுதலானும் இனிது துணியப்படும். இப் பெற்றி தேருத சைவசித்தாந்த நன்மக்களில் ஒரு சிலர் நடுநிலை திறம்பி மாணிக்கவாசக சுவாமிகளைத் தமிழ்

நாட்டுச் சைவசித்தாந்த மரபின்கட் டோன்றியவரேயா மெனக் கொண்டு, ஏனைச் சைவசித்தாந்த குரவன்மார் அவரைத் தந் திருப்பதிகங்களுட் கிளந்து குறிப்பிடாமை யென்னையென்று எதிர் கடாவுவார்க்குச்செவ்வனே இறுக்க லாகாமையின் ஏதேதோ தமக்குத் தோன்றியவாறெல்லாங் கூறிப் பெரிதும் இடர்ப்படுவாராயினர். சமயங் கடந்த நிலையாய் விளங்கும் மெய்கண்ட சித்தாந்த மரபுபேணும் நல்வினை பெரிதுடையோ மாயினும், நடுநிலை பிறழாது உண்மைப்பொருளை யுலகிற்குள்ளவாறு தெளித்தல் வேண்டுமென்னும் மனவுறுதிப்பாடுகொண்டு மாணிக்க வாசக சுவாமிகள் சரிதத்தை உண்மையாராய்ச்சி செய்து, அவ் வாராய்ச்சியில் யாம் மெய்யெனத் துணிந்துகண்ட பொருட்கூறுபாடு பற்றி அச் சுவாமிகள் வீரசைவ மர பினரேயாமென உலகிற்கு அறிவிக்குந் துணிபுடைய மானேம். இதனைக் காணும் சைவசித்தாந்தச் செல்வர்கள் இதுபற்றி நம்மேற் கதுமென வெகுளாது, அதனைப் பொறுமையுடன் ஆய்ந்து பார்த்துத் தம் உண்மைக் கருத்தை யுலகின்கண் வெளிப்படுப்பார்களாக!

"எப்பொருளெத் தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்னுந் திருக்குறள் உண்மை கடைப்பிடிக்க வல்லார்க்கே யாங்கூறிய உரை வாய்மை நன்கு புலப்படா நிற்கும். இனி, மாணிக்கவாசக சுவாமிகள அங்ஙனம் வீரசைவ மரபின்கட் பிறந்தாராயினுஞ் சைவசித்தாந்த முடிபொரு ளுணர்ந்து அப் பொருணெறி வழாதொழுகிச் சிவவழிபாடியற்றிச் சிவமுத்தி தலைக்கூடினரென்பது அவர் அருளிச்செய்த திருவாசகத் திருமுறையானே நன்கு பெறப்படுதலின், அவர் வீரசைவ மரபின்கட் பிறந்தாரென்பது பற்றி ஈண்டைக் காவதோ ரிழுக்கில்லை யெனவிடுக்க. அற்றேற், சுந்தரமூர்த்தி சுவாமிகள அவர்தம் மரபின்வழி கருதாமல் அவரைத் தந் திருப்பதிகத்திற் கிளந்தோதா மையுமாம் பிறவெனின்; அற்றன்று, சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தே மல்கிக்கிடந்த வீரசைவ மரபினர்

மாணிக்கவாசகரைத் தமக்குரிய குரவராகக்கொண்டு பேணிவழிபட்டு வந்தார்களாதலின் அவர் தம்மைத் தந் திருப்பதிகத்தினுட் கிளந்தோத ஒருப்பட்டிலர். வீரசைவத்தைப் பற்றிய குறிப்பு காமிகம், சுவாயம்புவம், சுப்பிரபேதம, வீரம் முதலான சிவாகமங்களிற் காணப் படலானும், வீரசைவர் கொள்கையாகிய சிவாத்து விதத்தை இனிது விளக்கலாற் சங்கரபாடியத்திற்கும் முற்பட்ட நீலகண்டபாடியம் சிவாத்துவித பாடியமென வழங்கப்படலானும், எல்லா வழிபாட்டினும் முற்பட்ட சிவலிங்க வழிபாட்டைக் கடைப்பிடியாய்ச்செய்து வருத லோடு சிவலிங்க வடிவினைத் தம துடம்பின மிசையும் அணிந்திருத்தல்பற்றி வீரசைவர் 'இலிங்கிகள்' எனப் பண்டுதொட்டே பெயர் பெறலாயின ரென்பது சங்கம் மருவிய பழைய நூலாகிய திரிகடுகத்தில் "சொல்வென்றி வேண்டும் இலிங்கியும்" எனப்போந்த குறிப்பால் நன்கு விளங்கலானும், தொன்றுதொட்டு இன்றுகாறுந் தெலுங்கு கன்னடம் முதலான நாடுகளிலுள்ளார் பலரும் வீரசைவராகவே யிருப்பக் காண்டலானும் வீரசைவம் மிகப் பழைய காலத்ததென்பது திண்ணமாமென்க. முற் காலத்தில் வீரசைவ மரபினர் பெருக்கமுற்றிருந்தாரென்ப தற்குப் பிரபுலிங்கலீலை, இலிங்கபுராணம், வசவபுராணம் முதலான நூல்களும் சான்றும். அற்றேல், நம்பியாண்டார் நம்பிகள் தாம் திருமுறை வகுப்புச் செய்தருளிய காலத்தில் திருவாசகத்தை ஏனைக் குரவன்மார் அருளிச்செய்த திரு முறைகளோடு ஒருங்கு வைத்து ஒன்பதாந் திருமுறையாக வகுத்தவாறென்னையெனின், நம்பியாண்டார் நம்பிகள் காலத்தே வீரசைவ மரபு சுருங்கி வருதலானும், திரு வாசகத்தின்கட் காணப்படுஞ் சொன்னயம் பொரு ணயங்களுஞ் சித்தாந்த சைவக் கோட்பாடுகளும் எல்லா ரானும் பெரிது போற்றப்பட்டு வருதலின் அதன்கட் காணப்படும் வீரசைவப் பொருணுட்பங்கள் உணர்வா ரின்மையால் மறைந்துபோதலானும், சித்தாந்த சைவ ரெல்லாரும அத் திருவாசகந் தமக்கு முரியதென்று போற்றுதலானும் அதனை அவ்வாறு ஒன்பதாந் திரு

முறையாகக் கோத்தாரென உரைக்க. இங்ஙனமாகலின், ஏனைக் குரவன்மார் தந் திருப்பதிகங்களுள் அவரைக் கிளந்தெடுத்து மொழிந்திடாமைகொண்டே, அவர் அக் குரவன்மார் மூவர்க்கும் பின்னிருந்தாரெனக் கூறுதல் போலியா யொழியு மென்பது. இது கிடக்க.

இனி, யாம் மேலே விளக்கிய உரையின்கட் சிலர் கருத்தொருப்பாடிலராய் 'யாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்பாரோடொத்து, ஏனைக் குரவன்மார் மூவரும் மாணிக்கவாசகரைத் தந் திருப்பதிகங்களுட் கிளந்தெடுத்துக் கூறுமையான் அவர் அம் மூவர்க்கும் பின்னிருந்தமை தேற்றமாமெனவுரைப்பர். அற்றேல், அம் மூவர்க்கும் பின்னிருந்த மாணிக்கவாசகர் தாமருளிச்செய்த திருவாசகந் திருக்கோவையாருள் அம் மூவரையுங் குறிப்பிட்டு ஏதுமுரையாமை யென்னையென எதிர்கடாவுவார்க்கு அவர் விடுக்குமா றறியாது விழிக்கு நீரராவராகலின், அங்ஙனம் அழிவழக்குப் பேசுதல் பெரியதோர் ஏதமாமென் றுணர்ந்து கொள்க. அல்லதூஉந், திருவாசகந் திருக்கோவையாரின் கட் காணப்படுந் தமிழ்ப் புலனெறி வழக்கிற்கும், தேவாரத் திருமுறையின் றமிழ்ப் புலனெறி வழக்கிற்கும வேறுபாடு பெரிதாகலானும், அவற்றுளளும் முன்னையவற்றில் தமிழ்த்தொன்மை வழக்கே பெரும்பான்மையும் பயின்று வருதலானும், அவ்விருவகை வழக்கிற்கும் இடையிட்ட காலம் சிறியதாதல் செல்லாது. தமிழ்த்தொன்மை வழக்கே தழீஇ வந்த திருவாசகந் திருக்கோவையா ரென்பன, தமிழ்ப் புதுவழக்கு இடையிடையே விராய்வந்த தேவாரத் திருமுறைக்குப் பின்னெழுந்தன வென்றல் பெரியதொரு தலைதடுமாற்றமாய் அங்ஙனங் கூறிடுவார் தமிழ்வழக்கு ஒரு சிறிது மறியாரென்பதனைப் பெறுவிக்கும். ஆகலின், அவ்வாறு கூறுதல் எவ்வாற்றானும் பொருத்தமில்லாத போலியுரையா மென்க.

மாணிக்கவாசகர் காலம்

இரண்டாம் பகுதி

நமது 'ஞானசாகரப்' பத்திரிகையின் முதற் பதுமத்தில் சைவ சமயாசிரியரான ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் காலம் இற்றைக்கு ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முற்பட்டதா மென்பதும, அவர் திருஞானசம்பந்தமூர்த்திகள், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் என்னும் ஏனைச் சைவகுரவன்மார் எல்லார்க்கும் முற்பட்டவராவரென்பதும் இஞ்ஞான்றைச் சரித்திர ஆராய்ச்சிமுறை வழுவாது ஆய்ந்து தெற்றெனை விளக்கினும். ஞானசாகரத்தில் இங்ஙனம் நிலைபெற நாட்டிய காலநிலையைப் பின்னும் ஆங்கிலமுணர்ந்தாரும் தெரிந்துகொள்ளல் வேண்டி அதனை ஆங்கில மொழியினும் எழுதி எமது கலாசாலைப் போதகாசிரியரால் நடாத்தப்படும் 'சென்னைக் கிறித்துவ கலாசாலைப் பத்திரிகை'யினும் பிரகடனஞ் செய்வித்தேம். அதன்பிற் சில வருடங்கழித்து ஸ்ரீ. து. அ. கோபிநாத ராவ் என்பவர் தாமும் மாணிக்கவாசகர் காலத்தை நிலைபெறுத்துவான் புகுந்து ஆங்கிலத்தில் ஒன்றெழுதி, அதனையும் எங்கள் சென்னைக் கிறித்துவ கலாசாலைப் பத்திரிகையில் வெளியிடுவித்தார். ராவ் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய அதனையே தஞ்சையிற் பிரசுரமான 'தமிழகம்' என்னும் பத்திரிகையில் அதன் பத்திராசிரியர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவித்தார். அது நிற்க. இனிக் கோபிநாத ராவ் அவர்கள், மாணிக்கவாசகர் காலம் நாட்டுதற்குக் காட்டிய காரணங்கள் சரித்திரமுறைக்கும், தருக்க முறைக்கும் இணங்காதனவாய்ப் பிழைபடுதலின், அவற்றின் பிழைபாடுகளை நெறியே வகுத்துக் காட்டி, அப்பெருமான் காலம் யாம் நிறுவியவாறே நிலைபெறுவதாமென்பதனை ஈண்டு வலியுறுத்துதற்குப் புகுகின்றேம்.

இனி மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் முதலான ஏனை ஆசிரியன்மார் மூவர்க்கும் பிற்பட்டவர் என்று நாட்டுதலே ராவ் அவர்களது கொள்கையாம். அஃதேனெனில், மாணிக்கவாசகர் அம் மூவர்க்கும் முற்பட்டவராயின், பின்னையோரான அம்மூவரும் தாமருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களில் முன்னையோரான மாணிக்கவாசகரைக் குறிப்பிட்டு ஏதேனும் மொழிந்திடுவராகலினென்க. அற்றேல், "நரியைக் குதிரைசெய்வானும் நரகரைத் தேவு செய்வானும்" என்று திருநாவுக்கரையர் திருவாக்கிற் போந்த குறிப்பே, மாணிக்கவாசகரைப்பற்றி அவர் கூறினமைக்குப் போதிய சான்றும் என்பாரை மறுத்தற்பொருட்டு ராவ் அவர்கள் நரியைக் குதிரையாக்கிய திருவிளையாடல் மாணிக்கவாசகரைபபற்றிய தாகாதென்று ஆசங்கிக்கின்றார். அத் திருவிளையாடல் அவர் மேற்றாக வைத்துக் கூறிய வாதவூரர் புராண உரையும் திருவிளையாடற் புராணவுரையுங் கொளளற் பாலன வல்லவென்றும், அதனைத் தம்பொருட்டாகவே சிவபெருமான் நிகழ்த்தினாரென மாணிக்கவாசகர் தாமே தமது திருவாக்கிற் கூறிற்றிலரென்றும், "நரியைக் குதிரை செய்வானும்" என்னுந் தேவாரத்தில் முதலதுமாத்திரம் மாணிக்கவாசகர் பாலதாயின் 'நரகரைத் தேவுசெய்வானும்' 'விரதங்கொண்டாட வல்லானும்' என்றற் றொடக்கத்தனவாகப் பின்வருவன வெல்லாம் வேறெவர் பொருட்டாக நிகழ்த்தப்பட்டன வென றும் மேலும் மேலும் வற்புறுத்து மொழிந்தார்.

இனித் திருவாசகத்தை ஒருமுறை உற்றுநோக்குவார்க்கும் நரிபரியான திருவிளையாடல் தம்பொருட்டாகவே சிவபெருமான் நிகழ்த்தினாரென மாணிக்கவாசகர் பலவிடத்துங் கூறுதல் வெள்ளிடை மலைபோல் விளங்கிக் கிடப்பவும், ராவ் அவர்கள் அதனை அறியமாட்டாது ஆசங்கித்தல் பெரிதும் வியபபுடைத்தாம். "ஒருங்கு திரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம், பெருங்குதிரை யாக்கியவா றன்றேஉன் பேரருளே"[1] என்பது 'சிவபெரு

1. திருவேசறவு, திருவாசகம்.

மானே, நீ எனக்குச் செய்த பேரருட்டிறமானது நரிகளை யெல்லாம் பெரிய குதிரைகளாகத் திரிபுசெய்த திருவிளையாட்டானே விளங்கிக் கிடந்ததன்றே?' என மாணிக்கவாசக சுவாமிகள் கூறினதை இனியேனும் உணர்வாராக. இதன்கண் 'என்பொருட்டு' என்னுஞ் சொற் பிரயோகம் வந்ததில்லை யாலோவெனின்; செய்யுட்பொருள் போகு முறையால் 'என்பொருட்டு' என்பது எளிதிற் பெறக் கிடத்தலால் அங்ஙனம் உசாவுதல் பொருந்தாதென்க. சிவபெருமான் நிகழ்த்திய ஏனைத் திருவிளையாடல்களைப் பற்றிப் பேசுமிடத்தெல்லாம், இறைவனை முனனிலைப் படுத்து விதந்து கூறாத மாணிக்கவாசகப் பெருமான் ஈண்டு 'உன் பேர் அருள்' என முன்னிலைப் படுத்து 'நரிக ளெல்லாம் பெருங்குதிரை யாக்கிய வாறன்றே' என்று கிளந்தெடுத்துக் கூறியவாற்றானே, 'எனக்குச் செய்த உன் பேரருள் நரிகளையெல்லாங் குதிரைகளாக்கிய வகையான் அன்றே விளங்கியது' என்பதே அதற்கு மெய்ப்பொருள் எனல் செய்யுட் பொருள்கோண் முறை அறிவார்க்கெல் லாம் தெற்றென விளங்கிக் கிடந்தது. இதற்கிதுவே மெய்ப்பொருளாவது, மாணிக்கவாசக சுவாமிகள் பிறண் டுங்கூறிய "தெரிவர நின்றுருக்கிப் பரிமேற்கொண்ட சேவகனார், ஒருவரையன்றி யுருவறியா தென்றனுள்ள மதே" "பாய்பரிமேல் கொண்டென் உள்ளங் கவர்வரால்" "பரிமேற்கொண்டு நமையாண்டான்" என்றற் றொடக் கத்து உபப்பிருங்கண வாக்கியங்களானும் இனிது துணி யப்படும். நரியைக் குதிரையாகச் செய்து அக் குதிரைமே லிவர்ந்துபோந்த பெருமானது சகளமங்கள அருட்கோலத் தினையே என்மனம் நினைவதன்றிப் பிறிதோருருவத்தினை நினையமாட்டாதென்று சுவாமிகள் வலிபெறுத்திக் கூறிய வாற்றானே அத் திருவிளையாடல் அவர்தம் பொருட்டே நிகழ்த்தப்பட்டதென்பது இனிது புலப்படவில்லையா? அற்றேலஃதாக, மேலைத் திருவாக்குகளில் 'பரிமேல்வந் தார்' எனக்கூறியதன்றி நரியையே குதிரையாகக்கொண்டு வந்தாரென்பது சொலப்பட்ட தில்லையா லோவெனின்; நன்று கடாயினாய், "நரியைக் குதிரைப் பரியாக்கி ஞால

மெல்லாம் நிகழ்வித்துப், பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையான்" என்றும்,

"அரியொடு பிரமற் களவறி யொண்ணுன் ௫௦
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டியன் றனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனக மிசையப் பெருஅது
ஆண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்."

என்றும் சுவாமிகள் பிறண்டும் ஓதிய ஏனை உபப்பிருங்கண வாக்கியங்களால், இறைவன் மதுரையிற் கொண்டுவந்த பரிகள் எல்லாம் நரிகளா லாக்கினவேயாமாவது நன்கு தெளியப்படுமென்க; அல்லதூஉம், அங்ஙனம் நரிகளை யெல்லாம் பரிகளாக்கிக் கொணர்ந்தவர் பெருந்துறையிற் குருந்தமர நீழலிற் குருவடிவாய் எழுந்தருளித் தமக்கு அனுக்கிரகித்த இறைவனே என்பது பொள்ளெனப் புலப்பட மாணிக்கவாசகர் 'பெருந்துறையான்' எனவுங் கிளந்தெடுத்துக் கூறினுராகலின், நரிபரியான திருவிளையாடல் மாணிக்கவாசக சுவாமிகள் பொருட்டே நிகழ்த்தப்பட்டதென்னும் உண்மை மலையரண்போல் நிலைபெற நிற்றல் காண்க. இத்துணை நுட்பமும் ஒருங்குணர்ந்து அத்திருவிளையாடல் மாணிக்கவாசகர் பாலதாக வைத்துக் கூறிய ஆன்றோர் தொல்வழக்குரைப் பொருளோடு, பெரிதும் மாறுகோளுற்றுக் கூறிய தன்மேலும் அமையாது, அவர் தம்மைத் "தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதமாய்ச் சாதிப்பார்" என்று இகழ்ந்து கூறிய ராவ் அவர்கள் அறியாமையை என்னென்பேம்!

இனி, "நரியைக் குதிரைசெய்வானும்" என்னும் அப்பர் திருவாக்கில் வேறுகூட்டிச் சொல்லப்பட்ட "நரகரைத் தேவு செய்வானும்" "விரதங் கொண்டாட வல்லானும்" "விச்சின்றி நாறுசெய்வானும்" என்றற்றொடக்கத்துப் பிறலீலைகள் எவர்பொருட்டுச் செய்யப்பட்டன?

என்று ராவ் அவர்கள் வினவுகின்றார். பிறவகையிற் பிறர் பொருட்டுச் செய்யப்பட்ட ஏனை லீலைகளைக் குறித்து இங்ஙனம் வினா நிகழ்த்தல் எடுத்த பொருளுக்குச் சிறிதும் இயைபுடைத் தாகாமை அவர் உணராததென்னை? மாணிக்கவாசகர் பொருட்டு நிகழ்ந்த நரிபரித் திருவிளையாடலை அப்பர் கூறியதனானே, அதனோடு உடன் தொகுத்துக் கூறப்பட்ட ஏனையவும் மாணிக்கவாசகர் பாலனவாகக் கூறவேண்டு மென்பது ராவ் அவர்கள் கருத்துப்போலும்! இத் தருக்கமுறை அழகிது! அழகிது! அன்பர்கள் பொருட்டு இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல் மாட்சியினைத் தொகுக்கப் புகுந்த திருநாவுக்கரசு சுவாமிகள், மாணிக்கவாசகர் பொருட்டும் பிறர்பொருட்டும் நிகழ்ந்தன கலந்தெடுத்துக் கூறினாரன்றி, அன்பர் ஒருவர்க்கே நிகழ்த்திய லீலையெல்லாம் கூறுவேனெனக் கருதிக் கூறப் புகுந்தாரல்லர். இது தானும் பிரித்துணரவல்ல தமிழ் மொழிப் பயிற்சி பெறாது, அரும் பெருந் தமிழ் நூல்களை ஆய்ந்து காலவளவை வரையறுப்பேமெனப் புகுவார் திறம் அறிவுடையார் கண்டு நகையாடுதற்கே ஏதுவாமென்றொழிக. எனவே அப்பர் சுவாமிகள் தமது திருவாக்கிற் குறித்துரை காட்டிய "நரியைக் குதிரை செய்வானும்" என்னுந் திருவிளையாடல் மாணிக்கவாசக சுவாமிகள் பொருட்டு நிகழ்ந்ததனையே காட்டுவதாகுமன்றிப் பிறிதாக மாட்டாதென்பது நிறுவப்பட்டது. இனி அவர் கூறிய ஏனைக் காரணங்களையும் முறையே ஆய்ந்து செல்வாம்.

இனி ராவ் அவர்கள் சிலாசாசன ஆராய்ச்சி வகையினும் மாணிக்கவாசகர் ஏனை மூவர்க்கும் பிந்தியவராய்க் காணப்படுகின்றார் எனக் காட்டப் புகுந்து இத்தேயத்தின்கட் பல விடங்களினுங் காணப்படுங் கல்வெட்டுகளில் இவரது பெயர் காணப்படாமையானும், சிறுத்தொண்டர் சேரமான்தேவர் முதலாயினாரை யெல்லாம் குறிப்புச் செய்த இராசராச சோழன் இவரை அங்ஙனங் குறிப்புச் செய்யாமையானும் சுவாமிகள் காலம் பிற்பட்டதாதல் ஒருதலை என்கின்றார்.

இனி, இவருரைக்கூற்றுப் பொருத்தமின்றென்பது காட்டுவாம். அரசாங்கத்தார் சென்ற சில வருடங்களாகவே ஆங்காங்குள்ள கல்வெட்டுகளைப் பிரதிசெய்து போதருகின்றாரென்பதும், இன்னும் இத்தென்னிந்திய நாட்டிற் பிரதி செய்யப்படாது கிடக்கின்ற கல்வெட்டுகள் பல்லாயிரக் கணக்காக இருக்கின்றனவென்பதும் எல்லாரும் அறிந்தனவேயாம். இத் தென்னிந்தியாவிலுள்ள கல்வெட்டுகள் அனைத்தும் பிரதிசெய்து வெளியிடப்பட்டிருப்பினன்றே அவை தம்மிற் சிலவற்றிலேனும் மாணிக்கவாசகர் பெயர் காணப்படவில்லையே என்று வினவலாம்? வெளிவராதவற்றில் அவர் பெயர் இருப்பினும் இருக்கலாம். ஆகையால், கல்வெட்டாராய்ச்சி அரை குறையாயிருக்கும் இந்நாளில் அங்ஙனந் துணிபுரை நாட்டுதல் போலியாமென்க.

அல்லதூஉம், கும்பகோணத்துக்கு அருகாமையிலுள்ள திருவலஞ்சுழிக் கல்வெட்டொன்றில் மாணிக்கவாசகர் பெயர் காணப்படுகின்றதென்றுரைத்த ராவ் அவர்கள், அக் கல்வெட்டின் காலவளவையும் அதன் வரலாறும் கூறாது விட்டது என்னையோ? திருவலஞ்சுழிக் கல்வெட்டு மிகப் பழையதாதல் பற்றி அதனை விரித்துரைப்பிற் றமது கொள்கை புரைபடுமெனக் கருதி விட்டார்போலுமென எமக்கு ஐயம் நிகழாநிற்கின்றது. அது நிற்க.

அல்லதூஉம், சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி, சேரலாதன், ஆலங்கானத்திற் போர்வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் என்றற்றொடக்கத்துப் பழைய தமிழ்மன்னர் பெயரும், நக்கீரர், கபிலர், பரணர், மாங்குடி மருதனார் என்றற்றொடக்கத்துத் தமிழ நல்லிசைப் புலவர் பெயரும் பொறித்த கல்வெட்டுகள் காணப்படாமைபற்றி அவரெல்லாம் பிற்காலத்திருந்தனரென ராவ் அவர்கள் கூறப்பெறுவரோ? பண்டைக் காலத்துத் தண்டமிழ் வளஞ்சிறக்க இலக்கண இலக்கிய நூல்கள் பரக்கக்கற்றும் பலப்பல புதிது புதிதா இயற்றி

யும் வந்தமையானே, அந் நூல்களால் அம் மன்னர் புலவர் முதலாயினோர் பெயர் பதிக்கப்பட்டு இன்றுகாறும் வழங்கி வரலாயின. இலக்கண இலக்கிய நூல் வழக்கின்றி நாக ரிகக்குறைவுள்ள காலத்தின் மாத்திரமே மன்னர்கள் தம் பெயரும் தம் கொடைத் திறமும் மறையாதிருத்தற் பொருட்டுக் கல்வெட்டுகள் தோற்றுவிப்பர். யாங்கூறு வதே உண்மைப்பொரு ளென்றற்குத் தமிழ் வளம் மிக்க பண்டைநாட் டமிழ்மன்னர் கல்வெட்டுகள் இதுகாறும் வெளிவராமையே உறுஞ் சான்றும். மற்று இவ்வாறன்றி, இராசராச சோழன் முதலிய பிற்காலமன்னர் காலத்தே தமிழ்க்கல்விவளஞ் சுருங்கிப்போக, மிலேச்சவரசர் பலர் அலைமேலலை புகுந்தாற்போல இடையிடையே படை யெடுத்து வந்து இந்திய மக்களை நலிந்து குழப்பமுண்டாக்கி வந்த காரணத்தானே, பிற்காலத்துத் தமிழ்வேந்தர் தங் கொடைத்திறம் முதலியன தமக்குப் பின்னும் அழியாது புலப்படுதல் வேண்டிக் கற்களிற் பொறித்து நிலைபெறு வித்தார். பண்டைநாட் டமிழ்மன்னர் காலத்து வேற் றரசர் தமிழ்நாடு புகுதாமையானும், தங்கொடைத் திறத்தை வியந்தியற்றிய தமிழ் நூல்கள் அழியாவென் றவர் கருதினமையானும் அவர் பிற்காலத்தார் போலக் கல்வெட்டுகள் தோற்றுவித்திலரென்க. இங்ஙனமாகலின் மாணிக்கவாசகர் பெயர் கல்வெட்டுகளிற் காணப்படாமை கொண்டே அவர் ஏனை மூவர்க்கும் முற்பட்ட காலத்திருந்தா ரென்பது பெறப்படும். அவர் பிற்காலத்திருந்தனராயின் கல்வெட்டுகள் மிகுதியுமுண்டான அப்போது அவர்பெயர் பெரிதும் அவற்றில் காணப்பட்டுக்கிடக்கு மென்க. அஃதேலஃதாக, இராசராச சோழன் தனக்கு முன்னிருந்த சிறுத் தொண்டர் சீராள தேவரைக் குறிப்பித்தவாறுபோல, அங்ஙனமே தனக்கு முற்பட்ட மாணிக்கவாசகரைக் குறிப் பிடாத தென்னை யெனின்; அஃதவ்வரசன் கருத்தறிவ தற்குக் கருவி வாய்ப்பி னன்றி முடிவுகட்டல் ஏலாத தொன்றும். ஒவ்வொருவர்க்கு ஒவ்வொருகாரணம்பற்றி ஒவ்வொருவர் மாட்டு அன்புநிகழும். தம் ஒரே புதல்வனை அறுத்துக் கறிசெய்து அடியார்க்கு அமுதூட்டிய

அருமைத்திறத்தை மிகவியந்து அவ்வரசன் உலகத்தார்க்கு அவரன்பின் திறத்தை நன்மாதிரியாய் நிறுத்தல் வேண்டி அங்ஙனம் அவரைக் குறித்திருக்கலாம்; இதுவேயன்றிப் பிறகாரணமும் இருக்கலாம். அல்லதூஉம், தனக்குச் சிறுகாலம் முற்பட்டிருந்த சிறுத்தொண்டரை நினைவுகூர்தற்குக் காரணம் வாய்த்தாற்போலத் தனக்குப் பெருங்காலம் முற்பட்டிருந்த மாணிக்கவாசகரை நினைவுற்றுப் பிரதிட்டை செய்தற்குக் காரணம் அம்மன்னற்கு வாயாது மிருக்கலாம். ஆகலின், அதனை ஒரு காரணமாய்க்கொண்டு மாணிக்கவாசகர் காலம் பிற்பட்டதென நிறுவப்புகுதல் பெரிதும் பிழைபடுவதொன்றாம் என்க. மேலும் ௧௧-வது நூற்றாண்டிற்கு முன்னர் மாணிக்கவாசகர் உருவம் எந்தக் கோவிலினும் பிரதிட்டிக்கப்படவில்லை என்கின்றார். இங்ஙனம் கூறும் இவர் சுவாமிகள் உருவம் அவ்வாறு எங்கும் பிரதிட்டிக்கப்படவில்லை என்பதனைக் காரணங்காட்டி நிச்சயித்தனரா? சிறிதும் இல்லை. பிரபல காரணங்கள எடுத்துக் காட்டாது 'எனக்குத் தோற்றிய வரையில்' என்று நெகிழ்ந்து உரை கூறிப் போதல் சரித்திரமுறைக்குச் சிறிதும் இணங்காததொன்றுமென்க. இவர் தமக்குத் தோன்றிய இவ்வற்புதத் தோற்றத்தைத் தம்மளவே வைத்துப் பார்த்துப் பார்த்து மகிழ்க.

இனி, மாணிக்கவாசகர் மற்றைச் சமயாசிரியன்மார்க்கு மூந்தியவராயின், அவராற் பாடப்பெற்ற திருப்பெருந்துறை, திருவுத்தரகோசமங்கை என்னுஞ் சிறந்த சிவதலங்கள் தேவாரத்துள் யாண்டுங் குறிக்கப்படாமை என்னை? என்று வினவி, அவ்விரண்டும் ஏனைமூவர்க்கும் பிற்காலத்தே புதிதே முளைத்தெழுந்தனவாகலின் அவை தம்மைப்பாடிய மாணிக்கவாசகர் அம்மூவர்க்கும் பிற்காலத்தினர் என்று ராவ் அவர்கள் தருக்கிக்கின்றனர்.

இத் தருக்கவுரை அத்தலங்களின் உண்மைநிலை தெரியாமையால் எழுந்ததாகும் என்பதனை இங்கே ஒரு சிறிது விளக்குவாம்: முதலில் திருப்பெருந் துறையைப்

பற்றி விவரிப்பாம். திருப்பெருந்துறை என்பது தெற்கே பாண்டி நாட்டின்கண் தலைமைபெற்றிருந்ததொரு கடற்றுறைப் பட்டினமாம். முற்காலத்துப் பாண்டிமா நாட்டுக்குச் சிறந்த கடற்றுறைப் பட்டினங்களாயிருந்த கொற்கை, உவரி, பெருந்துறை என்பனவற்றைப்பற்றிய குறிப்புகள் பழைய சங்க இலக்கியங்களிற் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம், இந்திர விழவூரெடுத்த காதையினுல் இவ்விந்திய தேசத்துக்கு அப்பால் மேற்கேயுள்ள பலதேயச் சாதியாரும் தமிழ் நாட்டில்வந்து வாணிகஞ் செய்தாரென்பது அறியக்கிடந்ததாகலின், பெருந்துறை என்னுங் கடற்றுறைப் பட்டினத்திலும் அவ்வாறே பல தேயத்துச் சாதியாரும் வாணிகஞ் செய்தற் பொருட்டு வந்தனரென்பது பெறப்படும். பாண்டியன் பொருட்டாகக் குதிரைவாங்கப் புறப்பட்ட மாணிக்கவாசகரும் பிறதேயத்தார் குதிரைகொண்டு வந்திறக்கும் இடமாதல் பற்றியே பெருந்துறை நாடிச்சென்ருர். மாணிக்கவாசகர் சென்ற காலத்துப் பெருந்துறை சிவாலயமுடையதாக இருந்ததில்லை. அவ்விடத்தில் மிகுதியாயிருந்தன தென்னஞ் சோலைகளும் பூம்பொழில்களுமேயென்று தமது அருமைத் திருவாக்கால் "தெங்குசோலைகள் சூழ்பெருந்துறை"[1] எனவும், "தெங்குதிரள சோலைத் தென்னன் பெருந்துறையான்"[2] எனவும், "செந்தார்ப் பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்" எனவும்,[3] சுவாமிகள் அருளிச்செய்தமையானே இனிது துணியப்படும். இவ்வுண்மை, சுவாமிகள் சரித்திரவுண்மை வழுவாது கூறிய திருவாதவூரர் புராணத்திலும் ஐயமறத்தெளித்துச் சொல்லப்பட்டது. அது,

"ஈனமில் பெருந்துறை யெனும்பதியின் ஞாங்கர்
கானமிகு புன்னைவளர் கந்தமுள சந்தம்
வானமுயர் சண்பக மரந்திகழ் நரந்தம்
தேனின முரன்றெழு செருந்திகள் பொருந்தி."

---

1. சென்னிப்பத்து. 2. திரு அம்மானை.
3. திரு அம்மானை.

"வீழ்ந்தநற வத்துளி விழிப்புன லதாகச்
சூழ்ந்துமுரல் வண்டினிசை தோத்திரம தாகத்
தாழ்ந்துமல ரேந்தியிறை தன்றிருமு னின்றே
வாழ்ந்துருகு மன்பரென மன்னுமொரு பூங்கா."

என்னும் அப்புராணச் செய்யுட்களிற் காண்க. மேலும், மாணிக்கவாசகப் பெருமானை ஆட்கொண்டருளல்வேண்டி அச்சோலையிற் குருந்தமரநீழலின்கண்ணே எழுந்தருளிய குருநாதன் பின்னர் அவர்க்கு உபதேசித்தற்பொருட்டு வேண்டுவன வெல்லாஞ் சித்தஞ்செய்ம்மினகள் என்று தன் மருங்கிருந்த சீடர் குழாத்துக்குக் கட்டளையிட்ட அளவிலே, அவர்கள் எல்லாஞ் சித்தஞ் செய்கின்றுழி 'மலர்மாலையினுலும், பொற்சரிகையின் நடுவே அழுத்தின முத்துக்களுள்ள பட்டாடையினுலும் அப் பூங்காவின் ஊடு ஒரு கோயில் செய்தனர்' என்னும் பொருளபட,

"முன்னவன் புகன்ற வாறு முயல்குவ மென்றே யந்த
மன்னுறு தவத்தின் மிக்கார் வகைமலர்த் தெரிய லாலும்
பொன்னிடை யழுத்தி முத்தம் புனைந்தபல் பட்டி னாலும்
அந்நெடுங் காவி னூடங் கானபூங் கோயில் செய்தே."

என்று திருவாதவூரர் புராணத்தின்கட் சொல்லப்பட்டதனால், திருப்பெருந்துறையின்கண் சிவாலயம் அப்போது இருந்திலது என்றல் பசுமரத்தாணிபோல் நாட்டப்பட்டமை அறிக. அன்றி அங்கே சிவாலயம் இருந்ததாயின் அச் சோலையின்கண் அவ்வாறு பட்டாடையினால் ஒரு கோயில் இயற்றல் வேண்டாமையானும், சிவாலயமிருந்ததாக அப் புராணத்தின்கண் யாண்டும் ஓதப்படாமையானும் மாணிக்கவாசகர் காலத்துச் சிவாலயம் அங்கில்லை யென்பது தெளிபொருளேயாமென்க. அற்றேல், பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலினும், வேம்பத்தூரார் திருவிளையாடலினும் அங்கே கோயிலுள்ளதாகச் சொல்லப்பட்டிருத்தல் என்னையெனின்; பின்னையோரான அவ்விருவரும் சரித்திர மாறுபாடாகத் தாமே சிருட்டித்துக் கொண்டு ஓதுவன பல உளவாகலின், அவர் கூறுவன

ஈண்டைக்குப் பிரமாணமாகாவென்க. திருவாதவூரர் புராணம் ஒன்றுமே சுவாமிகள் சரித்திரத்தைப் பிழைபடாமல் உள்ளவாறே யுரைப்பதாம்; இம்மெய்ப்புராணவுரையோடு திறம்பிக்கூறும் அப் புராணவுரைகட்கு ஆதாரம் திருவாசகத்தும் பிறுண்டும் பெறப்படாமையின் அவை கொள்ளற்பாலன வல்லவென்று மறுக்க.

இனி, மாணிக்கவாசகர் வருமிடம் நோக்கி அவரை ஆட்கொண்டருளல் வேண்டிக் குருநாதன் அப்பூங்காவிலே எழுந்தருளினன். மாணிக்கவாசகர் தாங் குதிரைகொள்ளப்போன அப் பெருந்துறையிலே அக் குருநாதனைக் கண்டு மெய்ஞ்ஞானப் பேறுடையராய் விளங்கினர். இங்ஙனமல்லது மாணிக்கவாசகர் பெருந்துறையிலே சிவாலயமிருப்பதாக உணர்ந்து அங்குச் சென்றாரல்லர். ஆகலின், இவர் அவ்விடஞ் சென்றதுகொண்டே அங்குச் சிவாலயமிருந்ததென நாட்டுவாருரையும் பொருந்தாதென்றுணர்க.

இனி, மாணிக்கவாசகர் தாம் மெய்ஞ்ஞானப் பேறு பெற்று இறைவனுக்கு ஆட்பட்ட பெருந்துறையில் உடனே கோயில் கட்டுவித்தாரென்றேனும், உபதேசம் பெற்றுப் பாண்டியனிடம்போய்ப் பின்னும் பெருந்துறை நண்ணி அவ்விடத்தைக் கடைசியாகவிட்டு மீண்ட பின்னர்த் திரும்பவும் அவ்விடத்திற்குச் சென்றாரென்றேனும் திருவாசகமாவது திருவாதவூரர் புராணமாவது கூறுகின்றில. மாணிக்கவாசகர் பின் தாம் பெருந்துறையை நினைவுகூர்ந்தபோதெல்லாம் அங்கே குருந்தமர நீழலிலே எழுந்தருளித் தம்மை யாட்கொண்ட குருநாதன் கோலத்தையே நினைந்துருகினதாகத் திருவாசகத்தினுற் பெறப்படுகிறதே யல்லாமல் அங்கே சிவாலயமிருந்ததாக நினைவுற்றுருகினரென்பது சிறிதும் புலப்படவில்லை.

அற்றேலஃதாக, மாணிக்கவாசகர் தாங் குதிரை வாங்குதற்கென்று கொண்டு சென்ற பொருட்டிரளையெல்லாம் எங்ஙனம் செலவிட்டாரெனின்; கூறுதும்: மாணிக்கவாசகர் தங்குருநாதனுக்கு உடல் பொருளாவி மூன்றனை

யும் உரிமைப்படுத்துங்கால் தாங்கொண்டுவந்த பொருட்டிரள் முழுவதூஉம் குருநாதன் றிருவடியிலே உய்த்தார். அப் பொருட்டிரளைக் குருநாதன் தன்சீடர் குழாத்தின் பால் உய்த்துத்,

> " திருந்திய பொருளி தெல்லாம்
> திருப்பணிக் களியும் மேலாம்,
> அருந்தவர்க் குதவும் இல்லா
> தலந்தவர்க் கருளு மென்றார்."

என்று கூறியதாகத் திருவாதவூரர் புராணத்தின்கட் சொல்லப்படுதலின், அங்கிருந்த அவ்வடியவர்கள் எல்லாரும் அப் பொருட்குவையைச் சிவாலயத் திருப்பணிகட்கும், அரியதவசிகட்கும், வறியவர்கட்கும் கொடுத்துச் செலவிட்டன ரென்பது பெறப்படும். நன்று சொன்னீர், 'திருப்பணிக்கு அளியும்' என்றதனானே பெருந்துறையிற் புதிதாக ஒருகோயில் கட்டுவித்தார் எனல் பெறப்படு மன்றோ வெனின்; அறியாது கூறினீர், 'திருப்பணி' எனவாளா கூறினமையானே தமிழ்நாட்டின்கண் முன்னமே யுள்ள சிவாலயங்கள் புதுப்பிக்குஞ்செலவுக்குக் கொடுத்தா ரென்பது பெறப்படுவதல்லாமல், அதுகொண்டு புதுவதாக ஒரு கோவில் கட்டுவித்தாரென்பது பெறப்படாது. அன்றி அவ்வாறு ஒன்று கட்டுதற்கென்றே கொடுத்தாரெனக் கொள்வேமெனினும், அச் செய்யுளைத் தொடர்ந்துவரும் பிற் செய்யுட்களிற் கோயில் கட்டுவித்த விஷயம் ஒரு சிறிதும் குறிக்கப்படாமையின் அவ்வாறு கோடல் போலி யுரையாமென விடுக்க. எனவே, மாணிக்கவாசகர் காலத்தில் திருப்பெருந்துறை சிவாலயமுடையதாயில்லை யென்பது நிறுவப்பட்டமை காண்க.

இனித், திருவுத்தரகோசமங்கையி னியல்பை ஒரு சிறிது ஆராய்வாம்: மாணிக்கவாசகப் பெருமானைப் பெருந்துறையிலே விட்டுக் குருநாதன் நீங்கும்போது, தன்னைப் பிரிந்திருக்கமாட்டாமையால் தாயைப் பிரிந்து வருந்தும் கன்றுபோற் கரைந்து கரைந்து உருகியழும் தம் அன்பரை நோக்கிப் பூங்காவினிடை நின்ற ஒரு மடுவைச் சுட்டிக்

காட்டி, "இம் மடுவின் நடுவிலே சோதிமயமான ஒரு தழற் பிழம்பு தோன்றும், அப்போது நம் அடியரெல்லாஞ் சென்று அதன்கண் வீழ்ந்து நம்பாற் சேர்குவர்; நீயும் அவ்வாறு அவரோடு உடன்சென்று விழாமல் 'உத்தர கோசமங்கையென்னும் நம் ஊரிற் சென்று, சித்தி யங்கு ஏவையும் எய்தி' அதன்பின் நஞ் சிவலிங்கவடிவு வைத்த சிவதலங்கடோறுஞ் சென்று வருகுவையாயின் அங்கங்கும் இத் தழற்பிழம்பு வடிவே காண்பாய். இறுதியாகச் சிதம்பரம் போந்து அங்கே புத்தரை வாதில் வென்றபின் சிவபெரும்பதம் பெறுகுவை," என்று அக் குருமூர்த்தி அருளிச்செய்ததாகத் திருவாதவூரர் புராணங் கூறுகின்றது. இங்கே, உத்தரகோசமங்கையைச் சிவலிங்கம் வைத்த தலமாகக் கூறாமல், மற்றைத் தலங்களையே அது வைத்ததாகக் கூறினமையே கவனிக்கற்பாலதாம். மாணிக்கவாசகர் தம் சிவநிட்டை கைகூடுதற்காகவே அந் நிட்டை மெய்ப்பொருள் தேற்றிய குருநாதன், திருப்பெருந் துறைப் பூங்காவோடொப்பப் பொழில்கள் நிறைந்து நிட்டை புரிதற்குப் பெரிதும் அனுகூலமுடைத்தாய் விளங்கும் திருவுத்தரகோசமங்கையூர்க்கு ஏகுகவென்று ஏவினரென்பது மேலதனுல் தெளியற்பாலதாம். அதனுல், திருவுத்தரகோசமங்கையில் அந்நாளிற் சிவாலய மிருந்த தின்றென்பதூஉம் பெறப்படுவதேயாகும். மெய்ப்பொருள் வழாதுகூறும் இத் திருவாதவூரர் புராணவுரைக்கு ஏற்பவே மாணிக்கவாசகப் பெருமானும் தன்னருமைத் திருவாக்கால்,

"அளிதேர்விளரி,
ஒலிநின்ற பூம்பொழில் உத்தரகோசமங்கை."

"அணிபொழில் உத்தர கோசமங்கை" என நீத்தல் விண்ணப்பத்தினும், "தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை" எனத் திருப்பொன்னூசலினும் கிளந்தெடுத்தருளியவாறுங் காண்க. 'திருவுத்தர கோசமங்கைக் கரசே' என விளித்துக் கூறுவதெல்லாம் ஆங்குத் தழலுருவாய்த் தோன்றிய சிவபெருமானை யல்லது

வேறில்லை யென்க. ஆகவே, உத்தரகோசமங்கை ஊரிலும் மாணிக்கவாசகர் காலத்திற் சிவாலயமிருந்ததில்லை யென்பது இனிது துணியப்படுவதாம். ராவ் அவர்களும் இவ்விரண்டு கோவில்களும் பழைய காலத்தன அல்ல என்கின்றார். அதுநிற்க.

இனி மாணிக்கவாசகர் காலத்தும் அவர்க்குச் சில நூற்றாண்டு பிற்றோன்றிய அப்ப மூர்த்திகள் முதலான ஏனைச் சமயாசிரியன்மார் மூவர்காலத்தும் திருப்பெருந்துறையும் திருவுத்தரகோச மங்கையும் சிவாலயங்கள் உடையவாயில்லாமையால், சிவாலயமுள்ள தலங்களுக்கே சென்று திருப்பதிகங் கட்டளையிடும் கடப்பாடு உடையரான சமயாசிரியர் மூவரும் அவ் வூர்களைத் தம் திருவாக்கிற் குறியாது விட்டனர். ஆகையால் அவர்கள் குறியாது விட்ட காரணம் இன்னதென்று பகுத்துணராமலும், மாணிக்கவாசகர் காலத்து அக் கோவில்கள் கட்டப்படவில்லை என்பதுணராமலும், தேவாரத்தில் அத்தலப் பெயர்கள் வராதது ஒன்றே பற்றி மாணிக்கவாசகர் அம் மூவர்க்கும் பிற்பட்டவரென்று கூறிய ராவ் அவர்கள் உரைப்பொருள் பொருத்த மின்றாமென விடுக்க.

அற்றேல், திருப்பெருந்துறை, திருவுத்தர கோச மங்கை என்னும் அத்தலங்கள உற்பத்தியாயவாறுதான் என்னையெனிற் கூறுதும்: மாணிக்கவாசகர்க்கும் ஏனைச் சமயாசிரியர்க்கும் பிற்காலத்தே திருவாசகம் மிகுதியும் ஓதப்படுவதாயிற்று. அங்ஙனம் ஓதப்படுகின்றுழி அவ்விரண்டிடங்களும் பெருமானால் சிறந்தெடுத்துச் சொல்லப் படுதலாலும், ஒன்றிற் பிறவியறுக்கும் மெய்ப்பொருளுபதேசமும மற்றொன்றில் கிட்டைகூடிப் பெற்ற மெய்யனுபவ சித்தியும் அப் பெருமானுக்கு விளைந்தமையாலும், இவை யெல்லாம் பிறர் நினைவுகூர்ந்து உய்தற்பொருட்டுப் பிற்காலத்தரசர்கள் அவ் விரண்டிடத்தும் சிவாலயங்கள் விரிவுபடக் கட்டிவைப்பாராயினர். பிற்காலத்தினரான விஜய நகரத்தரசர் சிலாசாசனங்களும் பாண்டிய அரசர் சாசனங்களும் திருப்பெருந்துறையிலும் திருவுத்தர கோசமங்கை

யிலும் காணப்படுகின்றன வென்று ராவ் அவர்கள் எடுத்துக் காட்டிய பிரமாணங்கள் அவர் கொள்கையையே வேரற அறுத்து எமது கொள்கையை வச்சிரத் தம்பம் போல் நாட்டுவவாயின.

இன்னும் பிற்காலத்தின்கண் இருந்த விஜயநகரத்து நாயக்க மன்னர் கட்டிட அமைப்புக்களே பெரும்பாலுங் காணப்படுதலால் திருப்பெருந்துறைச் சிவாலயத்தின் கர்ப்பகிருகம் ஒன்றுதவிர ஏனைய வெல்லாம் அவர்களே அமைத்தன வென்று ராவ் அவர்கள் கூறுவதனுல் எமது கொள்கை பெரிதும் வலிபெறல் காண்க. என்னே? நால்வர் காலத்திற்கும் பின் யாரோ சிறிதாகக் கர்ப்பகிருகம் ஒன்றுமே கட்டிவைத்தனராக அதனைச் சூழப் பின்னர் வந்த விஜயநகர மன்னர் கட்டிடங்களைப் பெருக்கிஞரென் பது பெறப்படுதலின் என்க.

இனி மாணிக்கவாசகர் திருவாசகம் முழுவதூஉம் தொண்டர்களையும் அடியார்களையும் பன்முறை நினைந்து நினைந்து உருகிக் கூறக் காண்டலாலும, அவ் வாக்கியங் களை உணரும்போது அப்பரையும், ஞானசம்பந்தரையும், சுந்தரரையுமே குறிக்கின்ருரென்பது புலப்படுதலாலும் மாணிக்கவாசகர் அம் மூவர்க்கும் பின்னையோர் என ராவ் அவர்கள் மொழிகின்றனர்.

இத்தருக்கம் என்நுட்ப முடையது! புராணங்களானும, திருவாசகத் திருவாக்கானும், ஏனை ஆன்ருேர் பரம்பரை உரையானும் நரிபரியானது மாணிக்கவாசகர் பொருட்டே எனக் கூறப்பட்டிருப்ப, அதனைப் பொருந்தாதென்று மறுத்த ராவ் அவர்கள் 'அடியார்' என்று பொதுப்படக் கூறும் சுவாமிகள் திருவாக்குக்கு ஏனை மூவர் என்று பொருள் கொண்டது பெரியதோர் தலைதடு மாற்றவுரையன்றிப் பிறிதென்னை? "கழுமல மதனிற் காட்சி தந்தருளியதையும்" "திருவாரூரில் ஞானந் தன்னை நல்கிய நன்மையையும்" ஞானசம்பந்தரையும் சுந்தரரையுங் குறித்தனவாக ராவ் அவர்கள் பொருள்படுத்தற்குக் கொண்ட

ஆதார மென்னையோ? அவ்வாதாரம் ராவ் அவர்கள் சுவாமிகள் காலத்தைப் பிறபடுத்த வேண்டுமென்று கொண்டு முதிர்வித்த கனவு நிலையில் உளது போலும்! ஞானசம்பந்தரைத் தவிர வேறடியார்க்குக் கழுமலத்திற் காட்சி கொடுத்திலன் நம்பெருமா னென்பதற்கும், திருவாரூரில் ஞானம் நல்கப்பட்டவர் சுந்தரமூர்த்திகளைத் தவிர வேறடியார் இலர் என்பதற்கும் பிரமாணங்காட்டினாலன்றி ராவ் அவர்கள் உரை புரை படுதல் திண்ணம் என்க.

அற்றேல், மாணிக்கவாசகர் தமது திருவாக்கில் அடியார் அடியார் எனப் பலகாலும் உரைப்பது யார்தம்மை எனிற் கூறுவாம்: திருப்பெருந்துறையில் எழுந்தருளிய குருநாதனைப் புடைசூழ்ந்திருந்த அடியார்கள், அக் குருநாதன் பிரியும்போது மிகவும் வருந்தாநிற்பப் பின் அக் குருநாதன் அவர்தம்மை நோக்கி 'இம் மடுவினிடையே சோதிமயமான தழற்பிழம்பு ஒன்று தோன்றும், அதில் நீவிர் போய்ப் படிந்து சிவபதம் பெறுகுவீர்' என்று கட்டளை யிட்டனன். இட்டவாறே அவர்களும் மாணிக்க வாசகரை விடுத்துப் போய் அத்தழற் பிழம்பிற் படிந்து மறைந்து போயினர். தாம் அவ்வடியார் குழாத்தோடு அளவளாவி வரம்பிகந்த மகழ்ச்சியுற்றிருந்ததனையே சுவாமிகள் "கலந்து நின்னடி யாரோடு அன்றுவாளா களித்திருந்தேன், புலர்ந்து போன காலங்கள்" என நினைந்து அருளிச் செய்ததும், பின் அவ்வடியார் தம்மைப் பிரிந்து சோதியில் மறைந்ததனையே,

"...புகுந்து நின்றது இடர் பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர் காண்பான்
அலந்து போனேன் அருள் செய்யாய்
ஆர்வங்கூர அடியேற்கே."

(அ. பிரார்த்தனைப் பத்து, க.)

என்றுருகி அருளிச் செய்ததுமாம். இன்னுந் தம்மோடு அங்ஙனம் அளவளாவி யிருந்த அடியார்கள் சிவபதவி பெற யான் அதனைப் பெருமற் புறம் போனேனே என

உள்ளங் கசிந்து சுவாமிகள் "சிவமாநகர் குறுகப்போனார் அடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே" என்றும், "பேரா உலகம் புக்கார் அடியார் புறமே போந்தேன் யான்" என்றும், "பழைய அடியார்க்குன் அணியார் பாதங் கொடுத்தி" என்றும், "பண்டைப் பரிசே பழஅடியார்க்கீந் தருளும்" என்றும், "நின்கழற் புணைகொண்டு, இழிகின்ற அன்பர்கள் ஏறினர்வான் யான் இடர்க்கடல் வாய்ச் சுழிசென்று" என்றும், அருளிச் செய்தனர்கள். பின்னர்ச் சுவாமிகள் சிவநிட்டைகூடி அருள் வயமாய் நின்ற காலத்து அங்ஙனம் முன்னர்ப் பிரிந்துபோன அவ்வடியரை யெல்லாம் மறித்தும் அவ் வருள்வெளியிற் கண்டு ஆனந்தமெய்தி, அப்பனான சிவபெருமான் தம்மைத் திரும்பவும் அவரோடு கூட்டிய பேரருட்டிறனை வியந்து "அப்பன் ஆண்டு தன்னடியாரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே" என்று அதிசயப் பத்து முழுவதும் அருளிச் செய்தனர்கள். இங்ஙன மெல்லாம் சுவாமிகள் திருவாக்கிற் குறித்திடப்பட்ட அடியார்கள் திருப்பெருந்துறையிற் குருநாதன் பக்கல் மேவியிருந்த அடியார் குழாமன்றி, ஞானசம்பந்தர் முதலாயினா ரல்லரென்பது இந் நுட்பம் ஆய்ந்துணர வல்லார்க் கெல்லாம் வெள்ளிடைமலைபோல் விளங்கிக்கிடந்தது. இஃது இப் பெற்றியதாக இதன் வரலாறு சிறிதுமோராது சுவாமிகள் இங்கு 'அடியார்' என்றது ஞானசம்பந்தர் முதலாயினாரையே யாமென்று கூறி, அதனாற் சுவாமிகள் ஏனை மூவர்க்கும் பிற்காலத்தினாரெனக் கூறிய ராவ் அவர்கள் திரிபுணர்ச்சி பெரிதும் இரங்கற் பாலதொன்றாம் என்க.

இனி மாணிக்கவாசக சுவாமிகள் பலவேறு திருவிளையாடல்களைக் குறித்துப் பாடா நிற்ப, ஏனைமூவரும் அவற்றிற் சிலவே கூறுதலாலும், அங்ஙனம் அவை பலவாய்ப் பெருகிய காலம் பிற்காலத்தின்கண்ணதாக வேண்டுதலாலும், அத் திருவிளையாடல்கள் பலவற்றையும் எழுதின வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணத்திற்கும் பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணத்திற்கும் சிறிது

முன்னராயினும் பின்னராயினும் மாணிக்கவாசக சுவாமிகள் காலத்தை வரையறுக்க வேண்டுமென ராவ் அவர்கள் கூறுகின்றார்கள்.

இவர்கள் கூறியது பெரிதும் பிழைபடுவதொன்றாம். மாணிக்கவாசக சுவாமிகள் தமது அருமைத் திருவாக்கில் எடுத்துக் கூறினவெல்லாம் மிகப்பழமையான திருவிளையாடல்களேயாம். ஞானசம்பந்த சுவாமிகளுக்குப் பின்னே மாணிக்கவாசக சுவாமிகள் இருந்தனராயின், மூன்று வயதிலே உமைதிருமுலைப்பாலுண்டு பேரற்புத ஞான மூர்த்தியாய்ச் சைவம் எங்கணும் விளக்கிச் சமணரை வாதில் வென்ற ஞானசம்பந்தப் பெருமானைப் பற்றிய திருவிளையாடலைக் கூறுது விடுவரோ? இஃதொன்றானே மாணிக்கவாசகர் ஞானசம்பந்தர்க்கு முன்னிருந்தாரென்பது சிறுமகார்க்கும் இனிது விளங்கிக்கிடப்பதாக, இதுதானுமுணராது ராவ் அவர்கள் காலவரையறை செய்யப் புகுந்தது நகையாடற் பாலதொன்றாம். மேலும் அப்பர் திருஞானசம்பந்தர் திருவாக்குகளில் திருவிளையாடல்கள் பலவந்திருக்கின்றனவேயல்லாமல் ராவ் அவர்கள் கூறியபடி சிலவே வந்தில. இவ்வுண்மை தெரியவேண்டுபவர் ஸ்ரீமத் வே. சாமிநாதையரவர்கள் தமிழுலகத்தைக் கடமைப்படுத்திவெளியிட்ட வேம்பத்தூரார் திருவிளையாடல் முகப்பிலே மாணிக்கவாசகர் திருவாக்கினும் மூவர் திருவாக்கினும் போந்த திருவிளையாடல்களையெல்லாம் மிக்க பிரயாசையோடு தொகுத்தெடுத்துப் பிரசுரித்திருக்கின்றார்களாதலின் ஆண்டுக் கண்டுகொள்க. அங்ஙனம் காணவல்லவர் ராவ் அவர்கள் கூறியது முழுப்பொய்யுரையேயாமென்று தேர்வர். மாணிக்கவாசக சுவாமிகள் தங் காலத்தும் காலத்திற்கு முன்னும் நடந்த திருவிளையாடல்கள் பலவற்றை விதந்தெடுத்துக் கூறுதல் போலவே, ஏனைச் சமயகுரவன்மாரும் தங்காலத்துந் தமக்கு முன்னும் நடந்த பலவற்றை எடுத்துக் கூறுகின்றனர். அது கிடக்க.

இனிக் கி. பி. ௯௦௪ ஆரசாண்ட பராந்தகச் சோழன் தில்லைச் சிற்றம்பல முகட்டைப் பொற்றகடு

வேய்ந்து சிறப்பித்த பின்னரே அவ் வம்பலத்திற்குப் பொன்னம்பலம் என்று பெயர்வந்ததென்றும், மாணிக்க வாசகசுவாமிகள் கீர்த்தித்திருவகவலில் "அம்பொற் பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம் நவில்" எனவும், திருக்கோவையாரில் "சேணிற் பொலி செம்பொன் மாளிகைத் தில்லைச்சிற் றம்பலத்து" எனவும் கூறுதலோடு கோயின் மூத்த திருப்பதிகம் முழுவதூஉம் இப்பெயரே வரப்பாடுதலாலும் அச்சுவாமிகள் பராந்தகச் சோழன் காலத்திற்கும் பின்னரேதான் இருந்திருக்க வேண்டு மென்றும் கூறிய ராவ் அவர்கள் அப பராந்தகனுக்கு முன்னிருந்த அப்பர் சுவாமிகளும் 'செம்பொனம்பலம்' எனக் கூறியிருத்தலை உணர்ந்து குன்று முட்டிய குரீஇப் போலப் பெரிதும் இடர்ப்பட்டு அதனை விலக்கி விடுவார் போல் அப்பர் திருவாக்கில் வந்த 'பொன்னம்பலத்' திற்குப் பொன்னனைய அம்பலம் என்பது பொருள்போலத் தோன்றுகின்றதென நெகிழ்ந்துரையாடிப் போனார்.

ராவ் அவர்களுக்கு இங்ஙனம் நடுநிலை வழீஇ ஓரம் பேசி இழுக்குறும் திரிவுபாடு வந்ததென்னை யெனின்; தமிழ்த்தேயத்துப் பெரியாருள் யாரும் பழைய காலத்திருந் திலர் என்று நாட்டவும், தம்மை யொத்த ஆரியப் பெரி யாரே பழைய காலந்தொட்டு நாகரிகமுடையரா யிருந்தன ரென்று காட்டவுமே புக்காராகலின் அங்ஙனந் தன்னைப் பற்றுதல் என்னுங் குற்றத்திற்பட்டுப் பொருள் உண்மை தேராது ராவ் வழுக்கினார் என்க. அது கிடக்க.

அப்பர் சுவாமிகள் திருவாக்குக்குப் பொன்போன்ற அம்பலம் என்று பொருள்பண்ணவந்த ராவ் அவ்வாறே மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்குக்கும் பொன்னனைய அம்பலம் என்று பொருள் செய்யாது விட்டதென்னை? ஒரே வகையான ஒரு சொற்றொடர்க்கு ஒருகால் ஒரு வாறும் பிறிதொருகாற் பிறிதொருவாறும் பொருள் பண்ணுதற்கு இவர்கொண்ட காரணம் யாது? காரண மின்றித் தமக்கியைந்தவாறெல்லாம் பொருள் செய்தால் இவர்போற் றிரிபடையாத நல்லறிவுடையார் இவருரைக்கு

இணங்குவரா? மேலும் அப்பர் சுவாமிகள் பொன்போன்ற அம்பலம் என்று பொருள் செய்தற்கு இடந்தராமல் 'உரையாணி மாற்றுள்ள செம்பொன்னாற் செய்த அம்பலம்' என்றும் 'கதிர்விரியும் செம்பொன் அம்பலம்' என்றும், 'பரிசுத்தமான செம்பொற்றகடு எழுதி மேல்மூடிய சிற்றம்பலம்' என்றும், 'பொன்னாற் செய்யப்பட்ட அம்பலம்' என்றும் இனிது பொருள் விளங்குமாறு "ஆணியைச் செம்பொனம்பலம்" "சுடர்ச் செம்பொனம்பலம" "தூய செம்பொன்னினல் எழுதிவேய்ந்த சிற்றம்பலம்" என்று திருக்குறுந் தொகையிலும், "பொன்னாகிய தில்லைச் சிற்றம்பலவன்" என்று திருவிருத்தத்தினும் அருளிச்செய்திருப்ப இவற்றையறிந்து பொருள்கொள்ளுமா றறியாத ராவ் அவர்கள் தமிழ் நூலாராய்ச்சியிற் புகுந்தது என்னும்! அற்றேல், பராந்தகச் சோழன் பொன்வேய்ந்த பிறகு செம்பொன்னம்பலம் என்று பெயர் வந்ததென்னுங் கூற்று எவ்வாறுமெனின்; அஃது அறிவில் கூற்றுமென்றே மறுக்க. பராந்தகன் பிற ஆலயங்களுக்குச் செம்பொன் முகடு வேயாது இத்தில்லைச் சிற்றம்பலத்திற்கு மாத்திரம் அங்ஙனம் பொனமுகடு வேய்ந்த காரணம் என்னையென்று நுணுகியாராய வல்லார்க்கு, அவ்வம்பல முகடு பண்டைக்காலந் தொட்டு அங்ஙனம் பொன் வேயப்பட்டு வந்த காரணத்தானே பராந்தக வேந்தனும் தன்காலத்து அதனைப் புதுப்பித்து அங்ஙனம் பசும்பொற்றகடு வேய்வானாயிற் றென்பது தெற்றென விளங்காநிற்கும். பராந்தகனுக்கு முன்னரிருந்த பெருந்தமிழ் வேந்தர் பொன் வேயாது விட்டிருந்தனர் என்பதனை ராவ் எந்தச் சிலாசாசனத்திற் கண்டாரோ அறியேம். ஆரிய அபிமானத்தாற் கட்டி இறுகிய தம் மனோபாவகச் சிலையிற் கண்டார் போலும்! அப்பர் சுவாமிகள் திருவாக்கால் பராந்தகனுக்கு முன்னும் தில்லைச்சிற்றம்பல முகடு பொன்வேயப் பட்டிருந்ததென்னும் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனி போலினிது பெறப்படுதலின், மாணிக்கவாசக சுவாமிகள் பொன்னம்பலம் என்று தந்திருவாக்கிற் கூறியது கொண்டே அவர் பராந்தகனுக்குப் பின்னிருந்தாரெனும்

ராவ் அவர்கள் உரை பொருளொடு புணராப் போலியுரை யாமென்க.

இனி, தக்ஷிணாமூர்த்தியுபாசனை மாணிக்கவாசக சுவாமிகளுக்குப் பின்னர்த்தான் தோன்றியதென ராவ் அவர்கள் ஊகம் செய்கின்றனர். அவ்வூகம் காரணமின்றி அவரது வெறும் பாவனைக்கட் டோன்றுதலின் அதனை அறிவுடையோர் கொள்ளாரென்பது. தக்ஷிணாமூர்த்தம் ஜனகர் முதலான முனிவர் நால்வர்க்கு அத்துவித உண்மை உணர்த்துதற்பொருட்டுக் கொண்ட பழமை அருட்கோலமென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததாகலின், அதனைப் பிறிதாகக் கூறுதல் பொருந்தாதென மறுக்க. இன்னும் முதலாம் குலோத்துங்கசோழன் தக்ஷிணாமூர்த்திக்கு மானியம் விட்டான் என்றுகூறிய திருக்கண்டேசுர ஆலய சாசனத்தைக்கொண்டு அப்போதுதான் அம்மூர்த்தி உபாசனை தொடங்கியதென்றல் பெரியதோர் குழறுபடையாம். அது மானியம் விட்டமை கூறியதே யன்றி அப்போதுதான் அவ்வுபாசனை தோன்றியதெனக் கூறிற்றிலது. அவ்வாறாக ஒரு நியதியுமின்றித் தம்மனம் போனவாறு அதற்குப் பொருள் செய்தலில் நம் ராவ் அவர்களேயன்றி வேறு ஏவர் வல்லார்!

இனிப், புத்தரோடு சுவாமிகள் தில்லைச் சிற்றம்பலத்தில் வாதுபுரிவதைப் பார்க்கப் பாண்டியனும் ஈழமன்னன் ஒருவனும் வந்து அப்போதங்குவந்த சோழனை வணங்கித் திறை தந்தனரென்பது திருவாதவூரர் புராணத்திற் குறிக்கப்பட்டிருக்கிறதென்றும், அங்ஙனம் பாண்டியர் சோழமன்னர்க்குக் கீழ்ப்பட்ட காலம் கo-ஆம் நூற்றாண்டு முதல் கங-ஆம் நூற்றாண்டிறுதி வரையுமாம் என்றும், அதனால் மாணிக்கவாசகர் காலமும் அவ் விடைப்பட்ட காலத்திலேதான் வைக்கற் பாற்றென்றும் ராவ் அவர்கள் கூறுகின்றார்கள்.

தில்லைச் சிற்றம்பலத்திற் சோழனுக்குப் பாண்டியன் திறைகொணர்ந்து செலுத்தினான் என்றது முழுப் பொய்யுரையாம். அத் திருவாதவூரர் புராணத்தை யாம் பன்

முறையும் படித்துப் பார்த்தோம். அதன்கண் ஈழமன்னன் ஒருவன் திறை கொணர்ந்துவைத்துச் சோழவேந்தனை வணங்கினதாக மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றது; அது, "ஈழவள நாடனு மெழுந்தடி பணிந்து திறையிட்ட குறைநல்கி" என்னும் அப் புராணச்செய்யுளால் அறியப் படும். இவ் விலங்கை மன்னனைத் தவிர வேறு மன்னர்கள் அங்கு வந்ததாகவேனும், பாண்டியன் வந்து சோழனைப் பணிந்ததாகவேனும் அப் புராணம் எங்கும் தேடித் தேடிப் பார்த்துக் கண்டிலேம். இவ்வாறாக இல்லாத தொன்றனை இருப்பதாக வைத்துப் பொய்யுரைகூறித் தருக்கம் நிகழ்த்த முன்வருதலில் ராவ் அவர்கள் முன்னதாக நிற்கின்றார். இஃதவர்க்கு நேர்மைதானோ வென்பதை அறிவுடையோரே கூறக்கடவர்.

இனி, வரகுணபாண்டியனொருவனை மாணிக்கவாசகர் தம் திருவாக்கிற் குறிப்பிடக் காண்டலானும், அவ் வர குணன் காலம் ௯-ஆம் நூற்றாண்டென்று துணியப்படுத லானும், சுவாமிகள் காலம் அவ்வொன்பதாம் நூற்றாண் டிற்குப் பின்னரேதான் பெறப்படுதல் வேண்டும் என்கிறார் ராவ். இன்னும் சேஷகிரி சாத்திரியார் காட்டிய பாண்டிய வமிசாவளிப் பட்டியில் ஒரே வரகுணன் காணப்படுதலால் அவனையேதான் சுவாமிகள் குறிப்பிட்டிருக்கவேண்டுமென் றும் ராவ் ஊகஞ்செய்கின்றார்.

இப்போது சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படும் சிலா சாசனங்களும் வமிசாவளிகளும் கி. பி. எட்டாம் நூற்றாண் டிற்குப் பிற்பட்ட பாண்டிய சோழ அரசர்களையே எடுத் துப் புகலுகின்றன. கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முற் பட்ட பழைய பாண்டிய சோழ சேர மன்னர்கள் பலப் பலர் உளராகப் பழைய செந்தமிழ் நூல்களால் அறியப்படவும், அவ் வரசர்களைப் பற்றிய சிலாசாசன செப்புப் பட்டயங் களுள் ஒன்றேனும் இப்போது அகப்படக் காண்கிலேம். சிவாலயங்கள் எண்ணிறந்தன கட்டுவித்த சோழன் கோச் செங்கண்ணனைப் பற்றிய சாசனமே அகப்பட்டிலதாயின் மற்றை அரசர்களைப்பற்றிக் கேட்பானேன்? இங்ஙனஞ்

சிலாசாசனங்கள் எட்டாம் நூற்றுண்டிற்குப் பின்னரே தோன்றியதற்கும் அதற்குமுன் தோன்ருமைக்கும் காரணம் முன்னரே கூறிப்போந்தாம். ஆகவே, பிற்காலத்திய சிலா சாசன ஆராய்ச்சி பண்டைநாட் டமிழ்மன்னர் காலந் தேர்தற்குச் சிறிதும் பயன்படாத தொன்ருமென விடுக்க. எனவே, பிற்காலத்து அரசர் பரம்பரையினைக் கூறும் சேஷகிரி சாத்திரியார் வமிசாவளிப்பட்டி ஈண்டைக்குச் சிறிதும் பயன்படாதென் றுணர்க. குலோத்துங்கசோழன், கரிகாற்சோழன் முதலான பெயர்கள் மன்னர்கள் பலர்க் கிருந்தவாறுபோல வரகுணபாண்டியன் எனும் பெயரும் மன்னர்கள் பலர்க்கிருந்திருக்கவேண்டும். இதுகாறுங் குறித்துவருங் காரணங்களாலும் பின்னே காட்டப்படும் காரணத்தானும் பின்னிருந்த வரகுண பாண்டியனுக்கு மூன்று நூற்ருண்டு முற்பட்டிருந்த அப்பர் சுவாமிகளுக் கும் முற்பட்டவராக மாணிக்கவாசக சுவாமிகளிருத்தலால் அவர்களாற் குறிக்கப்பட்ட வரகுணபாண்டியன் வேறென் பதே துணிபொருளாம்.

இனி, மாணிக்கவாசக சுவாமிகள் புத்தகாலத்தினரா மென்று கூறுவாருரையை மறுத்துச், சைனமதம் புத்தர் காலத்திற்குப் பிந்தியதன் றென்றும், புத்தகாலம் கூ-ஆம் நூற்ருண்டிற்குப் பின்னரும் நீண்டதென்பதற்குக் கி. பி. கூஅச முதல் கoகஉ வரையில் செங்கோலோச்சிய இராச ராசன் காலத்தில் நாகபட்டினத்தின்கண் ஒரு பௌத்தப் பள்ளியிருந்தமையே சான்ருமென்றும் ராவ் அவர்கள் கூறுகின்றனர்.

புத்தசமய மிருந்தகாலத்தே சமண மதமும் உட னிருந்ததாயினும் அது மிகவும் செழிப்புற்று ஓங்கியது ஐந்தாம் நூற்ருண்டின் பின்னரேயாம். ஐந்தாம் நூற் ருண்டிற்கு முன்னெல்லாம் புத்தமதமே மேலோங்கியிருந் தது. இதற்குச் சான்று மணிமேகலையும் சீவகசிந்தாமணியுமே யாம். மணிமேகலை பௌத்தம் மேலோங்கிய முதல்நூற் ருண்டிலும், சீவகசிந்தாமணி சமணம் மேலோங்கிய ஏழாம் நூற்ருண்டிலும் எழுதப்பட்ட நூல்களாம். ஐந்தாம்

நூற்றுண்டிற்குப் பின்னும் ஒரோவிடத்துப் பௌத்தமதம் இருந்ததென்றதனுல் ஈண்டைக்கு ஆவதோர் இழுக் கில்லை. என்னை ? அது பிற்காலத்துத் தன்பெருமை சுருங்கி ஒளிமழுங்கிக் கிடந்ததாகலின். இனி, மாணிக்க வாசக சுவாமிகளிருந்த காலத்துப் பௌத்தமதம் மிகவும் விரிந்து வலிபெற்றிருந்ததெனை அறியப்படுதலால் அக் காலமும் மாணிக்கவாசகர் காலமும் ஐந்தாம் நூற்றுண் டிற்கு முற்பட்டனவா மென்பது ஒருதலை. ஆகவே, இவ் வுண்மையொடு முரணி ராவ் அவர்கள் கூறியது பொருத்த மில் போலியுரையாமெனை மறுக்க.

இவ்வாறு இதுகாறும் கூறிய மறுப்புரைகளால், ஸ்ரீ. து. அ. கோபிநாத ராவ் அவர்கள், எம். ஏ., மாணிக்க வாசக சுவாமிகள் காலம் கி. பி. பதினேராவது நூற் ருண்டின் துவக்கம் அஃதாவது இற்றைக்கு எண் ணூற்றெட்டு வருடங்களுக்குமுன் என்று நிலையிடுதற் பொருட்டுக் காட்டிய ஆதாரங்கள் அவ்வளவும் உள்ளீ டில்லா வெறும் பதடியா மென்பதனைப் பகுத்துப் பகுத் துக்காட்டி விளக்கினேம். இனி யாம் ௧௯0௨-ஆம் ஆண்டு ஞானசாகர முதற்பதுமத்திற் பிரபல காரணங்கள் பலவற்றுல் மாணிக்கவாசக சுவாமிகள் கி. பி. மூன்ரு வது நூற்றுண்டு அஃதாவது இற்றைக்கு ஆயிரத்து அறுநூற்றெட்டு வருடங்களுக்கு முன் இருந்தார்க ளென்று நாட்டியதே பொருத்தமுறுவதாம். அதனை இங்கு மற்றுமோர் ஆதாரங் காட்டி முடிப்பாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் அப்பர் சுவாமிகளுக்கு முன்னிருந்தா ரென்பதனை நிலைபெறுத்தவே அவர் காலம் இதற்குமுன் னென்பது நாட்டப்பட்ட வாருகும். அப்பர் சுவாமிகள் "நரியைக் குதிரை செய்வானும்" என்றது மாணிக்கவாசகர் பொருட்டு நிகழ்ந்த திருவிளையாடலைக் குறித்த தென்பதனை முன்னரே காட்டினேம். திருப் பூவணத் திருப்பதிகத்தினும் அப்பர் சுவாமிகள் "மணி யார் வைகைத் திருக்கோட்டி னின்றதோர் திறமுந் தோன் றும்" என்று அருளிச்செய்து மாணிக்கவாசகர் பொருட்

டாகவும் சிவபெருமான் வையை யடைக்க மண்சுமந்து அதன்கரையில் நின்ற திறத்தை விளக்கி அருளினார். மேலும், அப்பர் சுவாமிகள் தமது அருமைத் தனித்திருத் தாண்டகச் செய்யுளொன்றில் "குடமுழ நந்தீசனை வாசகனுக் கொண்டாய்?" என்று சுவாமிகளின் பெயராகிய வாசகன் என்னுஞ் சொல்லையும் வெளிப்படையாக எடுத்துக் கூறியருளினார். இம் மூன்று அரிய குறிப்புக்களானும் மாணிக்கவாசகர் அப்பர் சுவாமிகள் காலத்திற்கும் முற்பட்டவராதல் தெற்றென விளங்குகின்றது. இனி மாணிக்க வாசகப் பெருமானிருந்த காலவரம்புதான் யாதோ வெனின்; அஃது இற்றைக்கு ஆயிரத்து அறுநூற்றெட்டு வருடங்களுக்கு முற்பட்ட மூன்றும் நூற்றாண்டிலாமென ஞானசாகர முதற்பதுமத்தின்கண் இனிது விளக்கினும்; ஆண்டுக் கண்டுகொள்க.

குறிப்பு: 'பெருந்துறை' என்னுந் தலம் அப்பர் சுவாமிகள் முதலானோரால் குறிக்கப்படவில்லை யென்பதூஉம் பொருந்தாதாம். அப்பர் சுவாமிகள் தாம் அருளிச் செய்த க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் "பேரூர் பிரமபுரம் பேராவூரும் பெருந்துறை காம்பிலி பிடவூர் பேணும்"[1] என்று அத்தலத்தை எடுத்தருளிச் செய்தனர்கள். அற்றேல், அதற்குத் தனிப்பதிகங்கள் காணப்படாதவா றென்னை யெனின்; யாம் முன்னரே காட்டியவாற்றால் அது மாணிக்கவாசக சுவாமிகள் குருநாதனைக் கண்டு உபதேசம் பெற்ற மாட்சிமையானே சிறப் பெய்திய தன்றி, அதன்கட் சிவாலயம் முன்னில்லாமை யால் அதற்குத் தனித்திருப்பதிகம் இல்லாதாயிற் றென்க.

---

1. ஆரூர். அப்பர், ௬. ௭௦-௨.

ஓம்

இவ்வாராய்ச்சிக்கு அரண்செய்யும்

அப்பர் அருட்பாடல்

திருவாதவூரடிகளின் திருவரலாற்றையும், காலத்தையும் சிறிதும் ஐயத்திற்கு இடமின்றித் துணிவுபெறுத்தும் சான்றுகள் பலவற்றுள்ளும் முதன்மை பெற்று விளங்குவன திருநாவுக்கரசு நாயனார் அருளிய "நரியைக் குதிரைசெய் வானும்" (௪ - ௪ - ௨) என்னும் திருப்பாட்டும், "குராமலரோ டராமதியஞ் சடை மேற் கொண்டார், குடமுழநந் தீசனைவா சகனுக் கொண்டார்" (௬. ௬௬ - ௧௧) என்னும் திருப்பாட்டும் ஆகிய இரண்டுமே யாகும்.

இவற்றைப்பற்றிய விளக்கம் ஆசிரியர் மறைமலையடிகளா ரால் ௧௬௭, ௨௭௭, ௬0௬, ௬௧௮, ௬௨0, ௬௪0, ௬௪௧ முதலிய பக்கங்களில் காணப்படுகின்றது. 'நரியைக் குதிரை'யாக்கிய இறையனார் திருவருட்செயல் அத் திருநாவுக்கரசு நாயனார் அருளிய திருக்குறுந்தொகைத் திருப்பாட்டின்கண்ணும் காணப் படுகின்றது. அது வருமாறு:

"எரிய னாிறை யாரிடு காட்டிடை
நரியி னார்பரி யாமகிழ் கின்றதோர்
பெரிய னார்தம் பிறப்பொடு சாதலை
விரியி னார்தொழும் வீழி மிழலையே."

—௫. ௧௧௨ - ௮.

பெரியனார் - மாதேவர். விரியினார் - நீங்கினார்.

பிழை			திருத்தம்
பக்கம்	வரி		
உரு0	உசு,	கி. மு. முதல் நூற்ருண்டின்	கி. பி. முதல் நூற்ருண்டின்
ச0ரு	ச,	கி. மு. முதல்	கி. பி. முதல்
அசரு	கஉ,	புலனுகாமை	புலனுகா
கூகரு	உரு,	ஒன்பதாங்	எட்டாங்
,,	ருச,	ஒன்பதாங்	,,

மறைமலையடிகளார்

இயற்றிய

செந்தமிழ்ச் சமய நூல்கள்

கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா	1	75
திருவொற்றிமுருகர் மும்மணிக்கோவை உரை	5	00
சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்	2	00
திருவாசக விரிவுரை	6	00
சைவசித்தாந்த ஞானபோதம்	4	00
பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்	2	00
சிவஞானபோத ஆராய்ச்சி	(அச்சில்)	
தமிழர் மதம்	5	00

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

1/140, பிராட்வே, சென்னை-1.

தலைமை நிலையம்: திருநெல்வேலி.

கழக வெளியீடு: கூகரு

பதிப்பாளர்:
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை-1.

தலைமை நிலையம்:
98, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

இரு பகுதிகளுக்கும்
விலை ரூ. 18-00.

அப்பர் அச்சகம், சென்னை-1.